

# இரவில் நான் உன் குதிரை

சில தேசங்களின் சில சிறுகதைகள்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்



# இரவில் நான் உன் குதிரை

## என்.கே. மகாலிங்கம்

என்.கே. மகாலிங்கம் நைஜீரியாவில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். அந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்தவர். சிறுகதையாசிரியர். கவிஞர். கட்டுரையாளர். ‘பூரணி’ சிற்றிதழை இலங்கையில் நடத்தியவர்களில் முக்கியமானவர். சினுவா ஆச்சிபியின் Things Fall Apart (சிதைவுகள்) நாவலை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இவரது பிற படைப்புகள்: *தியானம்* (சிறுகதைகள்), *உள்ளொலி* (கவிதைகள்).

# இரவில் நான் உன் குதிரை

சில தேசங்களின் சில சிறுகதைகள்
(ஆங்கிலத்தின் ஊடாக)

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

காலச்சுவடு பதிப்பகம்

விலை 125 ரூபாய்

இரவில் நான் உன் குதிரை • சிறுகதைகள் • தமிழில் : என்.கே. மகாலிங்கம் • © கதாசிரியர்களுக்கு • முதல் பதிப்பு : டிசம்பர் 2003 • வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி : 91–4652 – 278525, தொலைநகல் : 91–4652 – 231160, மின்னஞ்சல் : kalachuvadu@sancharnet.in • அச்சுக்கோப்பு : காலச்சுவடு பதிப்பகம் • முன் அட்டை ஓவியம் : உமாபதி • அட்டை வடிவமைப்பு : சந்தோஷ் • அட்டை அச்சாக்கம் : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

காலச்சுவடு பதிப்பக வெளியீடு : 85

**Iravil Naan Un Kuthirai** • Short Stoires • Translated by N.K. Mahalingam • ©Authors • Language : Tamil • First Edition : December 2003 • Size : Demy 1 x 8 • Paper : 18.6 kg maplitho • Pages : 256 • Copies : 1100 +100 • Published by Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India. Phone : 91-4652-278525, Fax : 91-4652 - 231160, e-mail : kalachuvadu@sancharnet.in • Typeset : Kalachuvadu Pathippagam • Cover Painting : Umapathy • Cover Design: Santhosh • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600 005 • Price : Rs.125

**Selling Rights :** Sudarsan Books, 74 East of Tower, Nagercoil 629 001, Phone : 91- 4652 - 228445, Fax : 91-4652-231160, E-mail : sudarsanbooks @yahoo.com

ISBN 81-87477-69-5

12/2003/S.No.85, kcp 101, 18.6 (1) 1200

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 9 |
| மொழிபெயர்ப்பாளர் உரை | 19 |
| கள்வன் | 21 |
| ஒரு கலைப்படைப்பு - ஓர் அன்பளிப்பின் கதை | 43 |
| எவ்லின் | 49 |
| உறைபனியில் நடப்பவன் | 55 |
| அமெரிக்காவிலிருந்த மகன் | 66 |
| இரவில் நான் உன் குதிரை | 75 |
| பலி முட்டை | 80 |
| லப்பினும் லப்பினோவும் | 86 |
| தாய்ப் பாசம் | 97 |
| மேலங்கி | 106 |
| மீண்டும் | 124 |
| மறியல் வீடு | 132 |
| திருமதி தத்தா கடிதம் எழுதுகிறாள் | 147 |
| ஔரங்கஷீப் அலம்கீர்: ஹிந்துஸ்தானின் பேரரசன் | 173 |
| திருமதி சென்னுடைய | 196 |
| குரங்குடன் ஒரு பெண் | 221 |
| குட்டித் தம்பி | 236 |
| ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள் | 249 |

# முன்னுரை

லோயிஸ் லொறி (Lois Lowry) என்பவர் பிரபல எழுத்தாளர். அவருடைய *A Summer to Die* என்ற நாவலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு நூலை மகிழ்ச்சி யோடு புரட்டிப் பார்த்தார். அவருக்கு சிறிது பிரெஞ்சு வரும். அந்த நாவலின் கடைசி வரிகளைப் படித்ததும் திடுக்கிட்டார். அந்தப் பதிப்பில் ‘அப்படியே அவர்கள் நடந்து போனார்கள்’ என்று கூடுதலான ஒரு வசனம் இறுதியில் இருந்தது. இந்த வரியை மூல ஆசிரியர் எழுதவே இல்லை.

இப்படி மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் படைப்பு மேதமையை அடிக்கடி காட்டிவிடுவதுண்டு. மொழி பெயர்ப்பாளர் தனக்கு விதித்த அலகுகளில் இருந்து விலகும்போது இப்படி தவறுகள் நேரும். மொழி பெயர்ப்பு என்பதும் ஒரு சிருஷ்டிக் கலைதான். மொழி மாற்றம் செய்பவருக்கு மொழிப் புலமை எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு மூல கர்த்தாவின் சிருஷ்டித் தளத்தில் இயங்கும் திறமையும் அவசியம். மூல நூலுக்குப் பழுது வரக்கூடாது; அதே சமயம் தன்னு டைய சிந்தனையோ கூற்றோ மொழிபெயர்ப்பு நூலைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் சிரமமான காரியம். இதில் மீண்டும் வெற்றி பெற்றிருக் கிறார் திரு என். கே. மகாலிங்கம்.

‘சிதைவுகள்’ மொழிபெயர்ப்பு நாவல் (*Things Fall Apart* by Chinua Achebe) சில வருடங்களுக்கு முன்பு வெளிவந்தபோது இவருடைய மொழிபெயர்ப்பு ஆற்றல் வெளிப்பட்டது. இப்பொழுது இன்னொரு உன்னத மான முயற்சி பூர்த்தியாகியிருக்கிறது. ஆங்கிலத்தில் வெளியான (அல்லது மொழிபெயர்க்கப்பட்ட) சிறப் பான சிறுகதைகள் சிலவற்றைத் தமிழில் தந்திருக்கிறார். இதற்காக இவர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

முதலில் அவர் படித்த பிறநாட்டுக் கதைகளைச் சேகரித்து அதில் 200 கதைகளைத் தெரிவு செய்தார். பிறகு அவற்றை நிதானமாக இன்னொரு முறை ஆழமாகப் படித்து இந்த தொகுதியில் காணப்படும் 22 கதைகளைத் தேர்ந்தெடுத்து மொழிமாற்றம் செய்திருக்கிறார்.

இந்த மொழிபெயர்ப்பில் ஒரு விசேஷம் இருக்கிறது. இந்தக் கதைகள் பலநாட்டுப் படைப்பாளிகளால் உருவாக்கப்பட்டவை. அதுபோல கதைகளின் தளமும் மாறிக்கொண்டே இருக்கும். இந்தியா, ரஸ்யா, அமெரிக்கா, கனடா, அயர்லாந்து, இங்கிலாந்து, போலந்து, ஜெர்மனி, ரினிடாட் என்று பல நாட்டுக் கதைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன. மூல மொழியும் வித்தியாசப் படும். சில ஆங்கிலத்தில் நேரடியாக எழுதப்பட்டவை; சில வேறு மொழியில் எழுதி பின்பு ஆங்கிலத்துக்கு மாற்றப்பட்டவை.

மிகவும் நுட்பமான இன்னொரு சங்கதியும் உண்டு. சிறுகதையின் உருவம் கடந்த நூற்றாண்டில் பல வடிவ மாற்றங்களை அடைந்து விட்டது. சோதனையான புது வடிவங்கள் பல வந்து போய்விட்டன. இந்த தொகுப்பில் எளிய நேரடியான கதைகளும், சிக்கலான பல உள்ளடுக்குகள் கொண்ட புதுமையான கதைகளும், நீண்ட கயிற்றின் நடுவில் ஒரு துண்டு வெட்டி எடுத்ததுபோல தொடக்கம் இல்லாமல் தொடங்கி, முடிவு இல்லாமல் முடியும் கதைகளும், திடீர்த் திருப்பங்களோ, திடீர் முடிவுகளோ, அதீதமான நெகிழ்ச் சியோ, பிரச்சார நெடியோ அணுகாமல் ஏராளமான வாசகப் பங்களிப்புக்கு இடம் தரும் கதைகளும், மையம் உள்ளவையும், மையம் இல்லாதது போன்ற சாயல் கொண்டவையும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் சிறப்பு என்னவெனில் எல்லாமே ஒரு விதத்தில் வாசக மன உணர்வுடன் தொடர்புகொள்கின்றன, அந்த மனத்தை மேம்படுத்துகின்றன. அங்கு குடியிருக்கும் ஆயிரக்கணக்கான கனவுப் பிம்பங்களை அசைக்கின்றன; அல்லது ஸ்திரப்படுத்து கின்றன; அல்லது மாற்றியமைக்கின்றன. அந்த வகையில் இந்த தொகுப்பில் இருக்கும் கதைகள் வித்தியாசமானவை என்பதில் ஐயமே இல்லை.

சிறுகதை இலக்கணம் மாறிக்கொண்டே இருப்பது. இந்தத் தொகுப்பில் காணப்படும் இன்னொரு அம்சம் சிறுகதையின் பல்வேறு வளர்ச்சிப் பரிணாமங்களைப் படம்பிடித்துக் காட்டுவது தான். அந்த வகையில் இந்தத் தொகுப்பிலடங்கிய உலகக் கதை களைக் கடந்த 75 ஆண்டு காலகட்டத்தின் பரிணாமத் தேர்வு களாகப் பார்ப்பதிலும் தவறில்லை.

இன்னொரு விதத்தில் இது சிறுகதையின் வளர்ச்சியைக்கூட மறைமுகமாகக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. முற்றிலும் கதை

சொல்லும் கருவியாக இருந்த வடிவம் இன்று இறுக்கமான கவிதை வடிவை நெருங்கியதுவரை எல்லாத் தெரிவுகளும் இருக்கின்றன. ஆசை தீராத வாசகர்களுக்கும், வளரும் எழுத்தாளர் களுக்கும் இந்த தொகுப்பு ஒரு வரப்பிரசாதம்.

நவீனச் சிறுகதைக்கும், கவிதைக்கும் இடையில் உள்ள கோட்டின் பருமன் குறைந்துகொண்டே வருகிறது. ஒரு கவிதையைப்போல சில சிறுகதைகளையும் படிக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அப்படிச் செய்யும்போது ஏதோ ஒன்றைத் தவறவிட்ட உணர்வு தோன்றும். இப்படிக் கலாபூர்வமாகப் படைக்கப்பட்டவையே காலத்தைக் கடந்த நிரந்தரத்தன்மையை அடைகின்றன.

ஒரு நாய் மலம் கழிப்பதை நேரில் பார்ப்பவர்களுக்கு அல்லது கற்பனை செய்பவர்களுக்கு அருவருப்பு உணர்வு தோன்றாமல் போகாது. அது எப்படி புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் ஒருவர் நாய் ஒன்று மலம் கழிப்பதை விவரித்து ஒரு பத்தி எழுதியபோது அருவருப்பு தோன்றவில்லை. மாறாக அந்த வரிகளில் இருந்த கலையம்சம் மட்டுமே ஓங்கி ரசிக்கும்படியாக இருந்தது.

விளாடிமிர் நபகோவ் என்பவர் பதின் பருவம் எட்டாத ஒரு சிறு பெண்ணின் அங்கங்களை வர்ணிக்கும்போது ஆபாச உணர்வு தோன்றுவதில்லை. ஓர் உன்னதமான கலைஞனின் கலாரசனைதான் வெளிப்படுகிறது. சாதாரண எழுத்துக்கும், சிறந்த கலைஞனுடைய படைப்புக்கும் உள்ள வேறுபாடு இதுதான். இந்தத் தொகுப்பில் காணப்படும் படைப்புகளில் ஒன்றுகூட இந்த அளவுகோலுக்குத் தப்பி இடம் பெறவில்லை.

உண்மையான சிறுகதை முழுமையாக ஒருவருக்கும் புரிந்து விடாது. அது ஒரு பூரணமான புரிதலுக்கு அப்பாற்பட்டு நகர்ந்து கொண்டேயிருக்கும், கோல் போடப்போகும் சமயத்தில் கோல் கம்புகளைத் தள்ளி வைத்ததுபோல. இந்தப் புரியாத தன்மைதான் அதைத் திருப்பித் திருப்பிப் படிக்கவைக்கும். வாசகருடைய முழுப் பங்களிப்பையும் கேட்கும். அப்படிச் செய்த பிறகுகூட இன்னும் புரிதலுக்குள் சிக்காத சில மிச்சங்கள் இருக்கும். இந்த மிச்சங்களைத் தேடி ஓடவைப்பதுதான் சிறுகதை. இந்த முறையில் இந்த தொகுப் பில் உள்ள சில கதைகள் இரண்டாவது, மூன்றாவது வாசிப்பு களைக்கூடக் கேட்கலாம். அப்படிப் படிக்குந்தோறும் ஒரு புதிய சாளரம் உங்களுக்குத் திறந்தபடியே இருக்கும்.

லூசன் என்ற சீன அறிஞர் பல சிறுகதைகளை எழுதியிருக்கிறார். எண்பது வருடங்களுக்கு முன்பு ஆக்கப்பட்ட அவருடைய படைப்பு களைப் பற்றி இன்றுவரை பேசுகிறார்கள். அதில் ஒன்றைச் சமீபத்தில் படித்தபோது வியப்பாக இருந்தது. சிறுகதையின் ஆரம்ப காலகட்டங்களில் எழுதப்பட்ட அது சிறந்த வடிவத்துடன் இறுக்க மாகவும் வசீகரத்துடனும் வாய்த்திருந்தது ஆச்சரியப்பட வைத்தது.

சீனாவில் ஓர் ஒதுங்கிய கிராமத்தில் விநோதமான ஒரு பழக்கம். அங்கே குழந்தைகள் பிறந்ததும் அவர்களை நிறுத்து அவர்கள் எடையையே பெயராக வைத்துவிடுவார்கள். எல்லோருடைய பெயரும் ஒன்பது ராத்தல், ஆறு ராத்தல் அப்படி இருக்கும். இந்தக் கிராமத்தில்தான் படகோட்டி ஏழு ராத்தல் வசித்தான். கிராம வழக்கத்துக்கு மாறாக அவன் தலையை மழித்திருந்தான். சுருட்டிக் கட்டிவிடும் நீண்ட தலைமுடி அவனிடம் இல்லை. ஒருநாள் வதந்தி ஒன்று பரவுகிறது புதிய அரசர் அரியணை ஏறிவிட்டார் என்று. தலை மயிரை மழித்திருந்தவர்களுக்கு ஆபத்து. இந்தப் பரபரப்பில் எதிரி தரப்பில் தலை மயிரை நீட்டாக வளர்த்த ஒருத்தன் வந்து ஏழு ராத்தலை எச்சரித்துவிட்டு போகிறான். அக்கணமே கிராமம் பயப்படுகிறது. வீடுகள் அமைதி இழந்தன. உணவு நேரம் மேசையில் சண்டைகள் நீண்டன.

கிராமத்தினர் ஏழு ராத்தலின் முகத்தை இப்போதெல்லாம் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. பொது இடங்களில் அவனை ஒதுக்கி வைத்தார்கள். வீட்டிலும் அப்படியே. அவன் தன் பாட்டில் வழக்கம்போலப் படகு ஓட்டிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் வேலையிலிருந்து திரும்பியதும் சக்கரவர்த்தி அப்படி ஒன்றும் அரியணை ஏறவில்லை என்று சொல்கிறான். கிராமத்தில் மறுபடியும் நிம்மதி உண்டாகிறது. அவனைக் கண்டு புன்னகைக்கின்றனர். வீட்டில் மீண்டும் பரிவும் மரியாதையும் கிடைக்கிறது. குழந்தை குதிபோடுகிறாள். இப்படி முடிகிறது கதை.

ஒரு சாதாரண கதை எப்படி உலகத்துச் சிறந்த கதை ஆகிறது. அரசனின் விரோதத்தை சம்பாதித்தபோது முழுக்கிராமமும் படகோட்டியை எதிர்க்கிறது. அரசன் இல்லை என்று ஆனதும் கிராமம் பழையபடி அவனிடம் நட்புப் பாராட்டுகிறது. அன்றிலிருந்து இன்றுவரை மனிதனுக்குள் இருக்கும் பொதுப் பண்பைத்தான் இங்கே பார்க்கிறோம். அதனால்தான் கதையுடன் உடனேயே ஐக்கியமாகிவிட முடிகிறது.

மானுடப் பொது இயல்பு மாறுவதில்லை அவற்றை மையமாகக் கொண்ட படைப்புகள் காலத்தைக் கடந்து நிற்கும்; தேசங்களைக் கடந்து நிற்கும்; மொழியைக் கடந்து நிற்கும். எண்பது வருடங்களுக்கு முன்பான படைப்பு இன்றும் வாழ்வதற்கு அதுதான் காரணம்.

இந்த தொகுப்பிலே இப்படி மானுடப் பொது நடப்பை வைத்து சிறப்பாகப் படைக்கப்பட்ட கதைதான் ‘தாய்ப்பாசம்’. இதை எழுதிய வி. எஸ். நைபோல், சமீபத்தில் இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்றவர். இவருடைய மென்மையான நகைச்சுவை உணர்வு மொழியாக்கத்தில் மாற்றுக் குறையாமல் இன்னும் அழகாக வந்திருக்கிறது. ரினிடாட்டில் கறுப்பு இன மக்களின் மத்தியில்

நடக்கும் கதை. முதல் இரண்டு வரிகளிலேயே ஆசிரியர் சிரமமின்றி பின்னணியின் சூழலைச் சித்தரித்துவிடுகிறார்.

லோரா ஒரு உலகச் சாதனையை வைத்திருக்கிறாள். அவளுக்கு எட்டுப் பிள்ளைகள். அதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை. ஆனால் இந்த எட்டுப்பிள்ளைகளுக்கும் ஏழு தகப்பன்மார். ஏதோ சிறு தவறினால் ஏழாவது புருசனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்துவிடுகிறார்கள். எவ்வளவு வறுமையிலும் லோரா. சுதந்திரமான பெண். சந்தோசமானவள். புருசன்மாரும், பிள்ளைகளும் அவள் சொல்லுக்கு கீழ்படிந்தவர்கள். உலகமே அவள் குடை நிழலில்.

அவளுடைய வார்த்தைப் பிரயோகங்கள் செழுமையானவை. சேக்ஸ்பியர் கண்டுபிடிக்க மறந்த சொற்கள் எல்லாம் அவளிடம் இருந்தன. 'அல்வின், வாய் பிளந்த மிருகமே, வா' என்றோ, 'லோனா, கவட்டைக்கால் கறுப்பு வேசையே' என்றோ அவளுடைய குரல் அதட்டியபடியே இருக்கும்.

லோரா இருந்த வீதியில் ஒரு அற்புதம் என்னவென்றால் அங்கே எவருமே பட்டினி கிடப்பதில்லை. அவளுடைய பிள்ளைகள் எப்படியோ வளர்ந்தனர். மூத்த மகளான லோனா ஒரு வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்தாள்; அத்துடன் தட்டச்சும் பயின்றாள். படிப்பைப்போல உயர்ந்தது உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை என்பது லோராவின் கருத்து. அவளுடைய பிள்ளைகள் எப்படியும் மேல்நிலைக்கு வருவதை அவள் பார்க்க வேண்டும்.

ஒருநாள் அவளுடைய மூத்த பெண் சொன்னாள், 'அம்மா, நான் குழந்தை பெறப்போகிறேன்.' லோரா கூக்குரலிட்டாள். முதன்முறையாக அழுதாள். அது சாதாரண அழுகை இல்லை. பிறந்த நாளிலிருந்து சேமித்து வைத்த அத்தனை துக்கமும் வழிந்து ஓடியது. அந்த ஓலம் வீதி முழுவதற்கும் கேட்டது. திடீரென்று அவள் முதியவளாகிவிட்டாள். லோனாவைக் கண்டித்து ஒரு வார்த்தைதானும் பேசவில்லை.

இந்தக் கதையில் புதுமையானது ஒன்றுமில்லை. இதைப்போல பல தமிழ்க் கதைகளைப் படித்திருக்கிறோம். ஆனால் இது சொல்லப் பட்ட முறை, இவ்வளவு சோகத்துக்குள்ளும் அதைக் கெடுக்காமல் ஓடும் மெல்லிய நகையுணர்வு, ஒரு கவிதைபோல மிகச்சில வரிகளில் கதையின் முழுத் தோற்றத்தையும் கொண்டுவந்துவிட்ட ஆசிரியரின் சிறப்பு, இவையெல்லாம் மறக்க முடியாத கதைகளில் ஒன்றாக இதை ஆக்கிவிடுகிறது.

ஐசக் பாசிவிஸ் சிங்கர் எழுதிய 'அமெரிக்காவில் மகன்' என்ற கதை இன்னொரு உதாரணம். கதைசொல்லியின் குரலில் நேர்க் கோட்டில் சொல்லப்பட்டது. மிக எளிய வசனங்கள்; இயல்பான நடை; அலங்காரம் இல்லாத சொற்கள். இந்த ஆசிரியருடைய ஆற்றல் என்னவென்றால் 'அழுகை' என்ற வார்த்தை வராமல்

துக்கத்தைக் காட்டிவிடுவார்; ‘சிரிப்பு’ என்ற சொல் வராமல் சந்தோசத்தைக் கொண்டுவந்துவிடுவார். இவருடைய வசனங்களைப் படிப்பதிலும் பார்க்க அங்கே தோன்றும் இடைவெளிகளைப் புரிவதில் கவனமெடுக்க வேண்டும்.

முதிர்ந்த யூத தம்பதிகள் போலந்தின் ஒரு மூலையில் உள்ள மிகச் சின்னக் கிராமத்தில் வசிக்கிறார்கள். அவர்களுடைய மகன் சாமுவேல் நாற்பது வருடங்களுக்குப் பிறகு பெற்றோரைப் பார்க்க அமெரிக்காவிலிருந்து வருகிறான். அவனில் பெரிய மாற்றம். ஆனால் அந்தக் கிராமத்தில் நாற்பது வருடமாக ஒரு மாற்றமும் தெரியவில்லை. பெற்றோர் கண்ணீர் மல்க மகனை அணைத்துக் கொள்கிறார்கள்.

மகனுக்குப் பெற்றோருடைய வாழ்க்கை விநோதமாகப் படுகிறது. கிழத் தம்பதியருக்கு மகனுடைய பழக்க வழக்கங்கள் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன. எவ்வளவு அன்பு இருந்தும் அவர்களால் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கே அமெரிக்காவில் மகன் ஒவ்வொரு நாளும் வெள்ளைப் பாண் சாப்பிடுவது இவர்களுக்கு நூதனமான விடயம். குருவானவர் அவர்களுக்குச் சொல்கிறார் அமெரிக்கா மறுகோடியில் இருக்கிறது, அங்கே அவர்கள் தலைகீழாக நடமாடுவார்கள் என்று. வயதான தாயார் இதைப்பற்றி யோசித்துவிட்டு ‘ஒருவர் நாளடைவில் எதையும் பழகிவிடுவர்’ என்று சமாதானமாகிவிடுகிறாள்.

இறுதியில் சாமுவேல் திரும்பிப் போக வேண்டிய கட்டம் வந்தது. அவன் மாதா மாதம் அனுப்பிய பணம் என்னவாயிற்று என்று கேட்கிறான். கிழவர் பெட்டியைத் திறந்து காட்ட ஒரு புதையலைப் போல அவர்கள் காசு கிடக்கிறது. தம்பதிகள் அந்தப் பணத்தைத் தொடவே இல்லை. அதற்குத் தேவையும் இல்லை. அவர்களிடம் எல்லாம் இருக்கிறது. பெற்றோர்களுக்கும், கிராமத்துக்கும் உதவ வேண்டும் என்ற திட்டத்தோடு வந்த மகன் ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பிப் போகிறான்.

தாய்க் கிழவி இசைப்பாடல்களை அசைந்து அசைந்து பாடத் தொடங்கினாள். இப்படி முடிகிறது கதை.

இந்தக் கதை ஓர் ஆசிரியர் எழுதியதுபோலவே இல்லை. ஒரு கட்டத்துக்குப் பிறகு இது தானாகவே எழுதப்பட்ட கதைபோல மாறிவிடுகிறது. எழுத்தாளனை மீறிய படைப்பு என்பதுதான் இதன் சிறப்பு.

அன்டன் செகோவ் சொல்கிறார் : ‘என் படைப்பு பல இடங்களில் சாதாரண வாசகனுக்கோ, விமர்சகனுக்கோ விளங்காததாக அமைந்திருக்கும். ஆனால் எங்கேயோ ஒன்றிரண்டு நுண்ணுர்வு வாசகனுக்குப் புரியக்கூடியதாக இருந்தால் அது போதுமானது.’

றிக் பாஸ் என்பவருடைய கதைகளும் அப்படித்தான். சிக்கலான பல அடுக்குகளைக் கொண்டது. இவர் ஓர் அமெரிக்க இயற்கை

எழுத்தாளர். இளமையானவர். இப்பொழுதும் எழுதிக்கொண்டிருப் பவர். இவருடைய கதைகள் உலகத்துச் சிறந்த கதைகளில் இடம் பிடித்திருக்கின்றன. 'மறியல் வீடு' என்னும் இவருடைய கதை இந்தத் தொகுப்பில் இருக்கும் கதைகளில் மிக முக்கியமான ஒன்று.

'மறியல் வீடு' என்ற சொல் இந்தக் கதையில் ஒரு தரம்தான் வருகிறது. கதை மறியல் வீட்டைப் பற்றியதே அல்ல. மையமே இல்லாமல், இன்னொரு விதமாகச் சொல்லப்போனால் மையம் நொடிக்கொரு தடவை மாறுவது போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுக்கும் கதை. இறுதி பாரா வரை வாசகனை ஏமாற்றியபடியே, கைக்குள் பிடிபடாமல் நகரும் வித்தியாசமான உத்தி. விரைவில் தன் சூட்சுமத்தை வெளிப்படுத்தாத, வாசகனிடம் நிறையப் பங்களிப்பைக் கேட்கும் படைப்பு.

கலேனா ஜிம் கவலையில்லாத மனிதன். கேளிக்கைக்காரன். வேட்டைப் பிரியன். இரண்டு சிநேகிதிகள் வைத்திருப்பவன். அவனிடம் உதவியாளனாக இருக்கும் இளைஞன்தான் கதை சொல்லி. கலேனா ஜிம்மின் தில்லுமுல்லுகளையும், விளையாட்டு களையும், வேட்டைகளையும், கள்ளத்தனத்தையும், பெண்களுட னான லீலைகளையும் சொல்லிக்கொண்டே வருகிறான். கதை கால ஓட்டத்துடன் வளராமல் நாலா திசைகளிலும் நகர்கிறது.

திடீரென்று முக்கால்வாசிக் கதை முடியும் தருவாயில் ஒரு தகவல் கிடைக்கிறது. கலேனா ஜிம்முக்குப் பத்தொன்பது வயதில் ஒரு மகன் இருக்கிறான். முன்பு எப்பொழுதோ ஒரு பெண்ணுக்குப் பிறந்தவன். அவன் மறியல் வீட்டில் இருக்கிறான், ஒருவனைக் கொன்ற குற்றத்திற்கு ஆயுள் தண்டனைக் கைதியாக. இந்தச் செய்தி சர்வசாதாரணமாக வெளிப்படுகிறது. கலேனா ஜிம்முக்கு அந்த மகனில் ஆழமான பாசம் இருப்பதும், அவன் மனத்தின் பின்னணியில் சிறையில் இருக்கும் தன் மகனையே எந்த நேரமும் நினைத்துக்கொண்டிருப்பான் என்பதும், ஒரு வரியிலேயே வெளிப் பட்டுவிடுகிறது. அதற்கு பிறகு மகனைப் பற்றிய குறிப்பு கதையில் எங்கேயும் இடம்பெறவில்லை.

கதை மேலே நகர்கிறது. ஒரு வேட்டையிலே கலேனா ஜிம் மிக மோசமாக நடந்துகொள்கிறான். ஜீப்பின் முன்னால் ஒரு மூஸ் மான் திடீரென்று தோன்றி ஓடத் தொடங்குகிறது. கலேனா ஜிம் ஜீப்பை வேகமாக அதன் பின்னால் விடுகிறான். பாதியில் கதை சொல்லியை ஓட்டச் சொல்லிவிட்டு அவன் திடீரென்று ஜீப்பின் கூரையில் ஏறிவிட்டான். ஓர் இளம் பையனுடைய லாவகத்துடனும், துணிச்சலுடனும், அசட்டுத்தனத்துடனும் இப்படி அவன் நடந்து கொண்டான்.

அத்துடன் நின்றால் பரவாயில்லை. ஓடும் ஜீப்பில் இருந்து ஒரு ஸ்டண்ட் வீரன்போலப் பாய்ந்து அந்த மானின் முதுகில் தொற்றினான். அவன் ஏன் அப்படிச் செய்தான் என்பது கதை

சொல்லிக்குத் தெரியாது. நிச்சயமாகத் தன் பெருமைகளைக் காட்டுவதற்காக இல்லை. மூஸ் பயங்கர வேகத்தில் பாய்ந்து போனது. இவன் அதில் தொற்றியபடியே உயிருக்காகப் போராடி னான். ஒரு கட்டத்தில் மூஸ் அவனை உதறித் தள்ளி கீழே போட்டு மிதிக்கப் பார்த்தது. அருந்தப்பு. துப்பாக்கி சூடு சத்தத்திற்கு பயந்து ஓடியது. நொறுங்கிய விலா எலும்புகளுடன், கன்னம் கிழிந்து ரத்தம் ஒழுக கலேனா ஜிம் கிடந்தான்.

அவனைத் தூக்கி ஜீப்பில் போட்டுக்கொண்டு கதைசொல்லி ஓட்டினான். நீண்ட தூரம் இருந்தது. உயிரைப் பிடித்துக்கொண்டு கலேனா ஜிம் முனகியபடி இருந்தான். ஜீப்பை எங்கே ஓட்டுவது? அந்த இரண்டு சினேகிதிகளில் யாரிடம் போவது? கலேனா ஜிம் முன்பு வேலைபார்த்த ரோட்டில் ஜீப் வேகமாகப் போனது என்று கதை முடிகிறது.

கதையின் உயிர் கலேனா ஜிம்முக்கும் அவன் மகனுக்கும் இடையில் இருக்கும் பாசம்தான். ஆனாலும் போக்குக்காட்டும் தன்மை கதையில் நிறைய வருகிறது. ஐம்பது வயதுக்கு மேலான கலேனா ஜிம் எதற்காக இப்படி இருபது வயது இளைஞன்போல அசட்டுத்தனம் காட்டினான்? சிறையில் இருக்கும் இளம் மகனுக்காக, அவன் வீணாக்கும் இளமையை இவன் திரும்பி வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்பது மிகவும் ஆறுதலாக வாசகனுக்குப் புரியத் தொடங்குகிறது.

'திருமதி சென்னுடைய' என்னும் கதை இந்தத் தொகுப்பில் இருக்கும் உன்னதமான படைப்புகளில் மற்றும் ஒன்று. தொடக்கம், முடிவு, இயல்பான நடை எல்லாம் இறுக்கமான சிறுகதை வடிவத்துக்குள் கலைத்தன்மையோடு கூடிவந்திருக்கின்றன.

இதை எழுதியவர் ஜும்பா லாகிரி. புலிஸ்டர் பரிசு பெற்ற 28 வயது எழுத்தாளர். வங்காளி அமெரிக்கர். சிறுகதை சொல்லும் முறையில் புதுமையையும், கவர்ச்சியையும் கொண்டுவந்தவர்.

அமெரிக்காவில் வசிக்கும் ஒரு வங்காளிக் குடும்பம். திரு சென் பல்கலைக் கழகத்தில் கணிதவியல் கற்பிக்கிறார். திருமதி சென் வீட்டிலேயே இருப்பவர். எலியற் என்ற பையனை பிள்ளை பார்க்கும் வேலை செய்கிறார். அந்தப் பையனுடைய பள்ளிக்கூட பஸ் வரும்போது போய் அவனைக் கூட்டி வந்து வீட்டிலேயே வைத்துப் பார்க்க வேண்டும். மாலை எலியற்றின் தாய் அவனை அழைத்துப் போவாள்.

திருமதி சென் கார் பழக வேண்டும் என்பது திரு சென்னின் ஆசை. அமெரிக்காவில் கார் ஓட்டத் தெரிந்திருப்பது அவசியம் என்பது அவர் கருத்து. திருமதி சென்னுக்கு இதில் விருப்பமே இல்லை. அது தவிர காரோட்டும் சாமர்த்தியமோ, கற்க வேண்டும் என்ற ஆவலோ சிறிதும் இல்லாதவர். கணவனுடைய வற்புறுத்தலால்

வெறுப்புடன் பழகினார். பெற்றோரையும், சுற்றத்தையும் விட்டு வந்து வாழும் வாழ்க்கை அவருக்கு உற்சாகம் ஊட்டுவதல்ல. தனிமையில் தன் முந்திய வாழ்க்கையை நினைத்துச் சலனமாகிவிடுவார்.

திருமதி சென்னுக்குப் பிடித்தது மீன். வங்காளத்தில் மூன்று நேரமும் மீன் சாப்பிடுவார்கள். அமெரிக்காவில் மீன் வாங்குவது கஷ்டம். அதைச் சமைப்பது அதனிலும் கஷ்டம். அருமையாக மீன் கிடைக்கும் சமயங்களில் நடு அறையில் வைத்து வெட்டி சமையல் செய்வார்.

ஒருநாள் மீன் கடையில் வந்துவிட்டது. கணவரைத் தொடர்பு கொள்ள முடியாததால் தானாகவே காரை எடுத்து, எலியற்றையும் கூட்டிக்கொண்டு போகிறார். கார் விபத்தில் மாட்டிவிடுகிறது. சிறுகாயம். பொலீஸ் வந்து கேள்வி கேட்டபோது பதில்களை உருவாக்க முடியாமல் புலம்பியபடியே இருக்கிறார்.

அன்றிலிருந்து திருமதி சென் குழந்தை பார்ப்பதில்லை. எலியற்றும் தாய் வேலையிலிருந்து திரும்பும்வரை வீட்டில் தனியாக இருப்பதற்குப் பழகிக்கொண்டுவிடுகிறான்.

இதுவும் சாதாரண கதையே. ஏன் மனதைத் தொடுகிறது என்று ஆழ்ந்து யோசித்தால் சில காரணங்கள் புரிகின்றன. இதற்கு தொடக்கம் இல்லை; அதுபோல முடிவும் இல்லை. நடை இயல்பாக மெல்லிய நகைச்சுவையுடன் இருக்கிறது. அந்நிய நாட்டிலே கணவன் வேலைக்குப் போனபின் தனிமையில் இருக்கும் ஒரு பெண்ணின் மன நிலையை யோக்கியமாகச் சித்தரிக்கிறது.

இதே உணர்வுகள் ஓர் ஆப்பிரிக்கப் பழங்குடியினரின் மத்தியில் வசிக்கும் அமெரிக்கக் குடும்பத்துக்கும் ஏற்படலாம். இவை பொது வானவை. கால, தேச, மொழி எல்லைகளைக் கடந்தவை.

ஆசிரியரின் கூரிய அவதானிப்புகள் இன்னொரு காரணம். திருமதி சென் மீனை வாங்கிக்கொண்டு பஸ்ஸில் வரும்போது சுருட்டிய பேப்பரையும் ரத்தக் கறையையும் பார்த்துவிட்டு பஸ் சாரதி சந்தேகிப்பது; விபத்தின்போது முகத்தில் வழிந்த குங்குமத்தை பொலீஸ்காரன் ரத்தம் என்று எண்ணியது; நடுக்கூடத்தில் பேப்பர் விரித்து அரிவாள்மணையில் மீன் வெட்டுவது; பொலீஸ்காரன் விசாரிக்கும்போது திருமதி சென் தடுமாறிப்போய் திருப்பித் திருப்பி 'என் கணவர் கணிதவியல் படிப்பிக்கிறார்' என்று மட்டுமே பதில் கூறியது என்று எல்லாவற்றையும் சொல்லலாம்.

கதையின் முடிவில் திருமதி சென் களைப்பாறுகிறார். உண்மை யில் அவர் விக்கிக்கொண்டிருக்கிறார். அவருடைய மனநிலை வாசகனுடைய பெரும் ஊகிப்புக்கு விடப்படுகிறது.

மாக்ஸிம் கோர்க்கியால் ரஸ்யாவின் மிக உயர்ந்த படைப்பாளி என்று புகழப்பட்டவர் ஐசாக் பேபல். படைப்புகளில் இருக்கவேண்

*டிய கவிதைத்தன்மை, இறுக்கம் பற்றி அவர் கூறுகிறார் : 'உன்னுடைய எழுத்து துல்லியமாகவும், வலிமையாகவும் இருக்கும். எப்போது என்றால் நீ ஒரு வார்த்தையை மேலதிகமாக சேர்க்க முடியாது போகும்போது அல்ல; ஒரு வாத்தையைக்கூட நீக்க முடியாது போகும்போது.'*

*ஜீன் ஜெனே சிறையில் இருந்த சமயத்தில் அவர் கையில் மற்ற எல்லாக் கைதிகளும் நிராகரித்த புத்தகம் ஒன்று வந்து சேர்ந்தது. அது* Marcel Proust *எழுதிய The Guermantes Way என்ற நாவல். அதைத் திறந்து முதல் நாலு வரிகளைப் படித்த ஜீன் ஜெனே அந்தப் புத்தகத்தைப் படீரென்று மூடி வைத்து விட்டார். அதிலிருக்கும் வசனங்கள் ஒவ்வொன்றாக எழுந்து போய்விடும் என்று பயந்தது போல. காரணம் அந்த நாலே நாலு வரிகளில் அவர் அந்த புத்தகத்தில் மயங்கிவிட்டதுதான்.*

*பின்னர் சிறை அறையில் தனிமையில் அதைத் திறந்து எங்கே அது சீக்கிரம் முடிந்துவிடுமோ என்று பயந்தபடி அதன் படிக்காத பக்கங்களின் தடிப்புத் தன்மையை அடிக்கடி தொட்டுப் பார்த்தபடி படித்து முடித்தாராம். அப்போது அவருக்கு வயது 31. அதற்குப் பிறகுதான் அவருக்கு எழுத வேண்டும் என்ற இலக்கிய ஆர்வம் துளிர்த்தது. ஒரு பெரும் இலக்கியப் படைப்பாளியை உருவாக்க உதவியது அந்தப் புத்தகம்தான்.*

*இலக்கியம் என்றால் அந்தப் புத்தகம்போல இருக்கவேண்டும். வாசகர் என்றால் அதைப் படித்தவர்போல இருக்கவேண்டும்.*

*இந்தத் தொகுப்பும் அதுபோலவே வாசகர்களுடைய ஆர்வத்தைத் தூண்டிவிடும் என்று நம்புகிறேன். திரு என். கே. மகாலிங்கம் இன்னும் பல சிறப்பான முயற்சிகளைத் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.*

றொறொன்ரோ
8 டிசம்பர் 2001

அ. முத்துலிங்கம்

# மொழிபெயர்ப்பாளர் உரை

*மொழிபெயர்ப்புகள் எம் மொழியை வளம்படுத்தும் என்பதில் நம்பிக்கையுள்ளவன் நான். ஓர் அரசு அல்லது பெரும் வெளியீட்டு ஸ்தாபனங்கள் தனித் திணைக்களம் வைத்து, பல நிபுணர்களையும் கலைஞர் களையும் அமர்த்திச் செய்ய வேண்டிய பொறுப்பைத் தனிப்பட்டவர்கள், எந்தவித இலாப நோக்குமற்று செய்யும் துரதிர்ஷ்டத்தைத்தான் எம்மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பல நூல்களையும் பார்க்கும்போது நாம் அறிகிறோம். இருந்தாலும் தனிப்பட்டவர்களின் தன்னலமற்ற சேவைகளால் நம் தமிழ் வளம் பெற்றிருக் கிறது என்பது மட்டும் உண்மை. தன்னலமற்ற செயல் கள் பலவேளைகளில் காரணமற்றே நடக்கின்றன. பல நல்ல சிருஷ்டியாளர்கள் மொழிபெயர்ப்பும் செய்திருக் கிறார்கள். ஏன்? அந்த நேரத்தைத் தங்கள் சிருஷ்டி களில் செலவிட்டிருக்கலாமே? என்றும் கேட்கலாம்.*

*மூலமொழியில் எழுதப்பட்ட ஒரு படைப்பில் ஈடுபட்டு, சிருஷ்டி மனவெளியில் மானசீகமாகக் கலந்து, அதனுள் சென்று, உணர்ந்து, அதை இலக்கு மொழிக்குக் கொண்டுவருவதில் உண்மையான மொழி பெயர்ப்பாளன் ஈடுபடுகிறான். சிருஷ்டியைப் பின் தொடரும் செயற்பாடு ஒரு மறுபடைப்புக்குரிய செயல். மூலத்தை மறுவாசிப்புச் செய்கிறான் மொழிபெயர்ப் பாளன். அதையே அவன் வாசகர்களுக்குத் தரவும் முயற்சிக்கிறான்.*

*ஆங்கில மொழியில் உள்ள பல நல்ல சிறுகதை களைத் தமிழில் தர முயற்சித்திருக்கிறேன். இக்கதை களில், செவ்வியல் சிறுகதைகளை நான் தெரிந்தெடுத் தேன். சில செவ்வியல் கதைகள் பல பாடநெறிகளில் அவற்றின் சிறப்புக்காகவும், சிறுகதைகளுக்கான மர பார்ந்த உதாரணங்களுக்காகவும், அடிக்கடி எடுத்தாளப்*

பட்டவை. அக்காரணங்களுக்காகவே நானும் அவற்றை மொழி பெயர்த்திருக்கிறேன்.

நவீன கதைகளின் தெரிவில் நல்ல சிறுகதை எழுத்தாளரான திரு அ. முத்துலிங்கம் உதவினார். அவர் நல்ல சிறுகதை எழுத்தாளர் மட்டுமல்ல. பன்னாட்டுச் சிறுகதைகளை வாசிக்கும் தீவிர வாசகருங் கூட. சமகாலச் சிறுகதைகளை, அவற்றின் உத்திகள், கதை சொல்லும் முறைமை, ஆகியவற்றுக்காக உடனேயே தேடிக் கண்டுபிடித்து, வாசிக்கும் வாசகர் அவர். பிற மொழிக் கதைகளில் கண்டுபிடிக்கும் உத்திகளைத் தன் கதைகளிலும் உபயோகிக்கிறார். ஒரு சிருஷ்டி கர்த்தா மற்றவர்களின் சிருஷ்டிகளையும் வாசிக்கும் வாசகராக இருக்க வேண்டும் என்பதை அவரது எழுத்தும் வாசிப்பும் நிரூபிக் கின்றன (அப்படி அனைவரும் இல்லை என்பதும் உண்மை). இத்தனைக்கும் அவர் விமர்சனம் எழுதுவதில்லை. இந்தத் தொகுதி யிலுள்ள பல கதைகளை அவரே தெரிவு செய்ததால் அவரையே முன்னுரை எழுதவும் கேட்டுக்கொண்டேன். முன்னுரைக்காகவும், கதைகளைத் தெரிவு செய்தமைக்காகவும், மூலக்கதைகளை மொழி பெயர்ப்புக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, திருத்தங்கள் செய்து உதவியமைக்காகவும் நான் அவருக்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

கவிஞர் செழியன் இக்கதைகளை வாசித்து, தன் கருத்துக்களைச் சொல்லியதற்காகவும் அவருக்கும் என் நன்றி.

என் நன்பரும், ‘காலம்’ ஆசிரியருமான செல்வம் அருளானந்தம், இக்கதைகள் வெளிவர வேண்டும் என்று விரும்பி பல உதவிகளைச் செய்தார். அவரின் ஊக்குதலும், தூண்டுதலும் இல்லாவிட்டால் இச்சிறுகதைகள் நூலாக வெளிவந்திருக்காது. அத்துடன், அவரது தூண்டுதல் இல்லாவிட்டால், என் நூல்களோ எழுத்துக்களோ வெளிவந்திருக்காது என்றுகூடச் சொல்லலாம். அவருக்கும் என் நன்றி என்றென்றும் உரியது.

இந்நூலை வெளியிட முன்வந்த ‘காலச்சுவடு’ வெளியீட்டாளர் திரு. கண்ணன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

இக்கதைகளை வெளியிட அனுமதி அளித்த மூல ஆசிரியர் களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் எனது நன்றி.

**என். கே. மகாலிங்கம்**

# கள்வன்

ஃபியடோர் டோஸ்ரோவெஸ்கி

*ஒருநாள் காலை வேலைத்தலத்திற்கு நான் வெளிக் கிட்டுக் கொண்டிருந்தபோது அக்ரஃபேனா – என் சமையல்காரி, உடுப்புத் துவைப்பவள், வீட்டு வேலை செய்பவள் என்ற எல்லாமானவள் – என் அறைக்குள் நுழைந்தாள். அவள் உரையாட ஆரம்பித்ததைக் கண்ட தும் எனக்கு வியப்பாக இருந்தது.*

*அவள் அமைதியானவள். எளிமையான மனம் படைத்தவள். அவள் என்னுடன் இருந்த முழுதான ஆறு ஆண்டுகளிலும் தினம் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளுக்கு மேல் என்னுடன் பேசியே இருக்க மாட்டாள். அதுவும் என் உணவு சம்பந்தமானதாய்த் தான் இருக்கும். வேறு எப்பொழுதும் அவள் பேசியதை நான் கேட்டதே இல்லை. நான் வந்ததும், சேர் என்று அவள் சடுதியாக ஆரம்பித்தாள். சும்மா கிடக்கிற அறையை வாடகைக்குக் கொடுப்பது பற்றித்தான் பேச வந்தேன்.*

*சும்மா கிடக்கிற எந்த அறை?*

*குசினிக்குப் பக்கத்தில் இருக்கிறதுதான். அதைவிட வேறு எது?*

*ஏன்?*

*வாடகைக்கு எடுப்பவர்கள் பொதுவில் ஏன் எடுப்பார்கள்?*

*ஆனால் யார் அதை எடுப்பார்கள்?*

*யார் அதை எடுப்பார்கள்! வாடகை கொடுத்துத் தங்குபவன் தான். யார் அதை எடுக்க வேணும்?*

*என் தாயே! அதில் ஒரு கட்டில் கூடுதலாகப் போடக்கூட இடம் போதாதே! அது இட நெருக்கமாய் இருக்குமே. அதில் ஒருவன் எப்படி வாழ முடியும்?*

ஏன் அதில் வாழ வேணும்? அவனுக்குப் படுக்க மட்டும்தான் இடம் வேணும். அவன் ஜன்னல் விளிம்பில் வாழுவான்.

அது எப்படி? எந்த ஜன்னல் விளிம்பு?

அது உங்களுக்குத் தெரியாத மாதிரி! கூடத்தில் இருக்கும் ஜன்னல் விளிம்புதான். அதில் இருந்துகொண்டு தைப்பான் அல்லது வேறேதாவது செய்வான். சிலவேளை கதிரையிலும் இருக்கலாம். அவனிடம் ஒரு கதிரையும் இருக்கிறது. ஒரு மேசையும். எல்லாம்.

ஆனால் யார் அவன்?

நல்ல உலக அனுபவம் நிறைந்த மனிதன். அவனுக்கு நான் சமைத்துப்போடுவன். அவனிடம் மூன்று வெள்ளி ரூபிள் வாங்குவேன். அறைக்கும் சாப்பாட்டுக்கும் சேர்த்து.

அக்ரஃபேனாவிடம் முதியவன் ஒருவன் குசினிக்குள் தங்குவதற்கு இடம் கேட்டு வெற்றி பெற்றிருக்கிறான் என்பதை நீண்ட பிரயாசைக்குப் பிறகு, கடைசியாகக் கண்டுபிடித்தேன். அக்ரஃபேனாவின் தலைக்குள் ஏதாவது ஒரு விசயம் அகப்பட்டுக் கொண்டால் அது நிறைவேறியே தீரவேண்டும். அன்றேல் எனக்கு அமைதி கிடைத்து விடாது என்பது எனக்குத் தெரியும். அவள் விருப்பங்களுக்கு ஏற்றது போல விசயங்கள் நிறைவேறாவிட்டால் உடனடியாக ஒருவகை யோசனையில் விழுந்து விடுவாள். பெரிய சோகத்திலும் ஆழ்ந்து விடுவாள். அந்த நிலையில் இரண்டு அல்லது மூன்று கிழமைகள் தொடர்ந்து இருப்பாள். இந்தக் காலத்தில் உணவு நிச்சயமாகப் பழுதாகி இருக்கும். சில உடுப்புகள் தொலைந்து போய் இருக்கும். ஒரே வார்த்தையில் சொன்னால், பல அசம்பாவிதங்கள் நடந்திருக்கும். ஒரு சில வார்த்தைகளே பேசும் இந்தப் பெண், தன் சுய சிந்தனை அடியாக ஒரு முடிவுக்கும் வர முடியாத அல்லது ஒரு முடிவுக்கும் வராதவள் என்பதைப் பல காலத்துக்கு முன்னரே உணர்ந்திருந்தேன். இருந்தும் ஏதோ ஒரு காரணத்தால் அவளுடைய பலகீனமான மூளையில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று ஏதோ ஒரு எண்ணமோ விருப்பமோ வந்துவிட்டால், அதைச் செய்வதற்கு எவராவது அனுமதி கொடுக்க மறுத்துவிட்டால், அது அவளின் திட சித்தத்தைக் கொல்வது போலாகி விடும். அதனால் முழுக்க முழுக்க என் மன அமைதிக்காகவே அவளுடைய இந்த வேண்டுகோளுக்கு இணங்கினேன்.

அவனிடம் குறைந்தபட்சம் பாஸ்போர்ட் அல்லது தேவையான பத்திரங்களாவது இருக்கா?

வேறெப்படி? அவனிடம் எல்லாம் இருக்கவே இருக்கிறது. அவனைப் போன்ற நல்ல மனிதனிடம் இல்லாமலா? அவன் உலகத்தைக் கண்டவன். ஒரு மாசம் மூன்று ரூபிள் தருவதாக வாக்களித்திருக்கிறான்.

மறுநாளே புதிய விருந்தாளி என் எளிய தனிக்கட்டை இருப்பிடத்தில் தோன்றினான். அவனைக் கண்டவுடன் நான் எந்த வகையிலும் எரிச்சல்கொள்ளவில்லை. மாறாக, ஒரு வகையில் சந்தோசமே எய்தினேன். நான் மிகத் தனியனாக, சந்நியாசியைப் போலவே வாழுகிறேன். எனக்குத் தெரிந்தவர் ஏறக்குறைய எவருமே இல்லை. வெளியே போவதும் குறைவு. பத்தாண்டுகளாக, காட்டுச் சேவலைப் போன்ற இருப்பை ஒட்டிய எனக்குத் தனிமை இயல்பாகவே பழக்கப்பட்டு இருந்தது. ஆனால் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவோ அதற்கு மேலோ அக்ரஃபேனா போன்ற ஒருவருடன் சேர்ந்து, ஒதுங்கி தனிக்கட்டை வாழ்விடத்தில் கிடப்பது, அப்படி ஒன்றும் மகிழ்ச்சியாக எதிர்பார்த்திருக்கும் ஒன்றல்ல. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இன்னுமொரு அமைதியான இடைஞ்சல் இல்லாத மனிதன் இந்த வீட்டில் பிரசன்னமாய் இருப்பது உண்மையில் ஒரு வரப்பிரசாதமே.

அக்ரஃபேனா உண்மையைச் சொல்லி இருந்தாள். இந்த விருந்தாளி தன் வாழ்க்கையில் உலகத்தை அதிகம் பார்த்திருக்கிறான். அவன் இளைப்பாறிய இராவணுத்தினன் என்பதை அவனுடைய பாஸ்போட்டைப் பார்க்கு முன்பே கவனித்து விட்டேன். அவன் என் பார்வையில் பட்ட உடனேயே அது தெரிந்துவிட்டது. என்னுடன் தங்குபவன் பெயர் அஸ்ராஃபி இவானிச். இராணுவத்தவர்களில் சிறந்த வகையைச் சேர்ந்தவன் என்பது அவனைக் கண்டவுடனே நான் அறிந்த இன்னொன்று. முதலில் இருந்தே நாம் ஒருவரை ஒருவர் விரும்பினோம். எங்கள் வாழ்க்கை அமைதியாவும் வசதியாகவும் கழிந்தது. அஸ்ராஃபி இவானிச் சிலவேளை தன் சொந்த வாழ்க்கையில் இருந்து நல்ல கதைகளைச் சொல்வான். அதுவே உயர்ந்த விசயம். என் பொதுவான உப்புச் சப்பற்ற, மனச்சோர்வைத் தரும், சலிப்பூட்டுகிற இருப்பில், அப்படிக் கதை சொல்பவன் உண்மையில் ஒரு பொக்கிஷமே.

ஒருமுறை என் வீட்டில் தனியாக இருந்தேன். அஸ்ராஃபியும் அக்ராஃபேனாவும் ஏதோ விசயமாக வெளியே போயிருந்தனர். சடுதியாக எவரோ ஒருவர் வீட்டுள் நுழைவது கேட்டது. அது ஓர் அந்நியனாகத்தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்தேன். விறாந்தைக்குச் சென்று பார்த்தேன். உயரமற்ற ஒரு மனிதன் அந்தக் குளிரான காலநிலையிலும், குறைந்த ஆடை அணிந்து, மேலங்கி போடாமல் நிற்பதைக் கண்டேன்.

உனக்கு என்ன வேணும்?

அரசாங்க லிகிதர் அலெக்சாண்ட்ரோவ்? அவர் இங்கு வசிக்கிறாரா?

அப்படியான பெயருள்ளவர் இங்கு இல்லை, சகோதரனே. போய் வா என்றேன். வாயில் காப்போன் சொன்னான் அவர்

இங்கு வசிப்பதாக. கவனமாகத் கதவண்டை போய்க் கொண்டே சொன்னேன்.

போ, போ, போ. சிறிய சகோதரனே போய்விடு!

அடுத்த நாள் இரவுச் சாப்பாடு முடிந்தது. அஸ்ராஃபி என் கோர்ட்டின் கிழிசலைத் தைத்துக்கொண்டு வந்து தந்தார். அதன் பிறகு விறாந்தையில் அந்நியன் ஒருவனின் காலடி திரும்பவும் கேட்டது. நான் கதவைத் திறந்தேன். முதல் நாள் வந்தவனே என் கண் முன்னால், அமைதியாக, வளையில் கிடந்த என் சிறிய கோர்ட்டை எடுத்துத் தன் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு வெளியே ஓடினான்.

அக்ராஃபேனா இவ்வளவு நேரமும் சமையலறைக் கதவூடாக, வாயைத் திறந்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள். கோர்ட்டைக் காப்பாற்ற, அவளால் தன் இடத்திலிருந்து அசையக்கூட முடியாமல் போய்விட்டது போலத் தெரிந்தது. ஆனால் அஸ்ராஃபி இவானிச் அந்த றாஸ்கலைத் துரத்திக்கொண்டு போய், வெறுங்கையுடன் மூச்சிளைக்க, நெஞ்சு விம்மத் திரும்பி வந்தான். கோர்ட்டை எடுத்தவன், நிலம் பிளந்து விழுங்கிக்கொண்டது போல மறைந்து விட்டான்.

உண்மையில் இது மிகக் கெட்ட விசயம், அஸ்ராஃபி இவானிச் என்றேன். என்னிடம் வேறு துணி இருக்கிறது. அல்லாவிட்டால் அந்தப் போக்கிரி என்னை முழுசாக நடமாடாமல் செய்திருப்பான்.

ஆனால் அஸ்ராஃபானோ நடந்த சம்பவத்தால் அதிகம் தாக்கப் பட்டவன்போல் இருந்தான். அதனால் அவனைப் பார்த்தபோது, போன களவைப் பற்றியே மறந்துபோய்விட்டேன். திரும்பவும் தன் பழைய நிலைக்கு அவனால் திரும்ப முடியவில்லை. தான் செய்து கொண்டிருந்த வேலையை அடிக்கொரு தரம் கீழே போட்டுவிட்டு, நடந்தது எல்லாவற்றையும் திரும்பவும் நினைவுபடுத்திப் பார்த்தான். தான் எங்கே நின்றேன் என்றும், தன் கண்ணெதிரே இரண்டு அடிகளுக்குப் பக்கத்தில் களவு போயிருக்கிறது என்றும், தன்னால் எப்படி அந்தக் கள்ளனைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது என்றும் சொல்லிக் கொண்டான். மறுபடியும் தன் வேலையை ஆரம்பித்தான். திரும்பவும் வீசி எறிந்து விட்டு வாசல்காப்பவனிடம் போவதையும், நடந்ததைச் சொல்வதையும், வீட்டைப் போதியளவு கவனிக்கவில்லை, அதனால்தான் அப்படியான களவு நடந்தது என்று கண்டிப்பதையும் கண்டேன். அவன் திரும்ப வந்தபோது அக்ராஃபேனாவைக் கண்டிக்க ஆரம்பித்தான். பின் தன் வேலையை ஆரம்பித்தான். நெடுநேரம் தன்னுள் தானே முணுமுணுத்தான். எல்லாம் இப்படித் தான் நடந்தது. எப்படி அவன் இங்கே நின்றான். நான் எங்கே நின்றேன். எப்படி எங்கள் கண்ணுக்கு முன்னாலேயே, இரண்டு அடி கூட இடைவெளி இல்லை, வளையில் இருந்து

கோர்ட் எடுக்கப்பட்டது என்று எல்லாம் சொல்லிக்கொண்டான். ஒரே வார்த்தையில் சொன்னால், பெரிய விசயங்களை எப்படிச் செய்யலாம் என்று தெரிந்த அஸ்ராஃபி இவானிச், சின்ன விசயங் களுக்கு எல்லாம் அதிகம் கவலைப்பட்டான்.

அன்று மாலை வேறெதுவுமே பேச இல்லாததாலும், தொலைந்த கோர்ட்டைப் பற்றிய கதையில் அதிக நகைச்சுவை தெரிந்ததாலும், அதை எடுத்தால் சலிப்பு நீங்கும் என்ற நம்பிக்கையிலும், ஒரு கிளாஸ் ரீயை அவனிடம் நீட்டிக்கொண்டே, நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம், அஸ்ராஃபி இவானிச் என்றேன்.

ஓம்... நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம். தொலைந்தது என்னு டையது இல்லை. இருந்தாலும் அது எனக்கு அதிக கோபத்தை உண்டாக்குகிறது. இந்த உலகத்தில் களவைப் போல மிக இழிவான விசயம் வேறொன்றும் இல்லை. நாங்கள் வியர்வை சிந்தி உழைத்து வாங்கிய பொருளை அவர்கள் களவெடுக்கிறார்கள். எங்கள் நேரம், உழைப்பு! வெறுக்கத் தக்க உயிர்கள்! அவர்களைப் பற்றிக் கதைப் பதே எனக்கு நோயைத் தருகிறது. சீ! அதைப் பற்றிச் சிந்திப்பதே எனக்குக் கோபத்தை உண்டாக்குகிறது. உங்களால் மட்டும் எப்படி அதைப் பற்றியே கவலைப்படாத மாதிரி இருக்க முடிகிறது!

உண்மையில் அஸ்ராஃபி இவானிச், கள்ளன் ஒருவனுடைய பொருட்களைக் களவெடுப்பதைப் பார்ப்பதிலும் பார்க்க அவனு டைய பொருட்கள் எரிந்து போவதைப் பார்ப்பது மேலானது. அது எனக்கு சினத்தை ஊட்டுகிறது!

ஓம். எது களவு போனலும் அது எரிச்சலைத்தான் தரும். உண்மையில் எல்லா இடமும் கள்ளர் கள்ளர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு எதிர்பாராத நிகழ்வாக, ஒருமுறை நேர்மையான ஒரு கள்ளனைச் சந்தித்தேன்.

அது எப்படி? அவன் நேர்மையான கள்ளன்? எப்படி ஒரு கள்ளன் நேர்மையானவனாக இருக்க முடியும் அஸ்ராஃபி இவானிச்?

நீங்கள் உண்மையைத்தான் சொல்கிறீர்கள். ஒரு கள்ளன் நேர்மை யானவனாக இருக்க முடியாது. அப்படி ஒருவன் இருந்ததும் இல்லை. அவன் நேர்மையானவன் என்று சொல்ல மட்டுமே வந்தேன். அவன் களவெடுத்தபோதும். அப்படி எனக்குத் தெரிந்தது. அவனுக்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

அது எப்படி நடந்தது, அஸ்ராஃபி இவானிச்?

இது நடந்தது, சரியாக இரண்டு வருசத்துக்கு முன்பு. அந்த நேரம் ஒரு வீட்டு மேற்பார்வையாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் வேலைக்கு அமர்ந்திருந்த பண்ணை முதலாளி தன் பண்ணைக்குப் போவதற்கு வெளிக்கிட்டுக் கொண்டி

ருந்தார். அதனால் நானும் வேலையை இழந்துவிடுவேன் என்பது எனக்குத் தெரிந்தது. கடவுளுக்கு மட்டுமே தெரியும், நான் எப்படி வாழப்போகிறேன் என்று. அந்த நேரம்தான் ஒரு தவறணையில் நாதியற்ற ஏழை ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. அவன் பெயர் எமிலியன். முன்பு அவன் எங்கோ இராணுவத்தில் வேலை செய்திருக்கிறான். ஆனால் அவன் நிறைய மது அருந்துபவன் என்ற படியால் சேவையில் இருந்து அவனைக் கலைத்துவிட்டார்கள். அப்படியான உதவாத ஒருவன் அவன்! அவனுக்குக் கிடைத்த எதை யாவது உடுப்பான். அலங்கோலமான மேலங்கிக்குக் கீழ் சேர்ட்டுப் போட்டிருக்கிறானா என்பதில் கூட சில வேளை எனக்குச் சந்தேகம் வரும். அவனுக்குக் கிடைத்தது எல்லாவற்றையும் விற்றுக் குடித்துவிடுவான். ஆனால் முரடனல்ல. ஓ, இல்லவே இல்லை. அவன் இனிமையானவன். மென் பண்புள்ளவன். அனைவருக்கும் மிக இரக்கமும் கருணையும் காட்டும் ஒருவன். ஒருவரிடமும் எதுவுமே கேட்க மாட்டான். அதுவும் இல்லாமல் அவன் உயர்ந்த மனச்சாட்சி உள்ளவன். அந்த ஏழை, மதுவுக்காக செத்துக் கொண்டி ருக்கிறான் என்பதை அவனைப் பார்த்த உடனேயே தெரியவரும். உடனே நீங்கள் நிச்சயமாக வாங்கிக் கொடுப்பீர்கள். நாங்கள் இருவரும் நண்பர்களானோம். அதாவது, அவன் சின்னஞ் சிறு நாய் மாதிரி என்னுடன் ஒட்டிக்கொண்டான். நான் இந்தப் பக்கத்தால் போனால் அந்தப் பக்கத்தால் அவனும் தொடர்ந்து வருவான். இது எல்லாம் எங்கள் முதலாவது சந்திப்பிலேயே நடந்துவிட்டது.

உண்மையில் அன்றிரவு என்னுடன் தங்கினான். அவனுடைய பாஸ்போர்ட் ஒழுங்கானது. அவனும் நல்லவன்போலத் தெரிந்தான். அப்படியே இரண்டாவது இரவும் நடந்தது. மூன்றாவது இரவும் அவன் வீட்டை விட்டுப் போகவில்லை. நாள் முழுதும் விறாந்தை யில் இருந்த ஜன்னல் விளிம்பில் இருந்தான். உண்மையில் அன்றிர வும் அங்கேயே தங்கினான். எப்படி அவன் தன்னைத் தானே அங்கு கட்டாயமாக இருத்திக்கொண்டான் என்று சிந்தித்தேன் அவனுக்குச் சாப்பாடும் மதுவும் தங்குமிடமும் கொடுக்க வேணும். அந்த ஏழைக்குத் தேவைப்பட்டதெல்லாம் உறிஞ்ச ஒரு மனிதன். இதைப் போலவே, என்னுடன் ஒட்டிக் கொண்டது போலவே, முன்பும் அவன் ஒருவனுடன் ஒட்டிக் கொண்டிருந்தான் என்று பின்பு அறிந்தேன். அவர்களும் ஒன்றாகக் குடித்தார்கள். ஆனால் மற்றவன் ஏதோ ஆழ்ந்த கவலையால் கெதியில் இறந்துவிட்டான். நான் சிந்தித்தேன். சிந்தித்தேன். இவனை என்ன செய்வது? கலைத்துவிடுவதா? அதை என் மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளாது. அவனுக்காக மிகப் பச்சாதாபப்பட்டேன். துணை அற்ற, இரக்கத்துக் குரிய உயிர். பரிதாபம்! ஊமை. எவரிடமும் எதையுமே கேட்காத ஒன்று. அவன் செய்வதெல்லாம் அமைதியாக ஒரு இடத்தில் இருந்துகொண்டு என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பது மட்டும் தான். நன்றி உள்ள சிறிய நாய் போல.

அப்படித்தான் ஒருவனை மது பழுதாக்கிவிடுகிறது. எப்படி அவனை அனுப்புவது என்று எனக்குள் சிந்தித்துக்கொண்டேன். இந்த இடத்தை விட்டுப் போய்விடு, எமிலியன். இங்கே உனக்கு வேலை இல்லை. நீ பிழையான ஆளிடம் வந்திருக்கிறாய். நான் சாப்பிடு வதற்கே என்னிடம் ஒன்றும் இல்லாமல் போகப் போகிறது. உனக்கும் எப்படி என்னால் சாப்பாடு போட முடியும் என்று நீ எதிர்பார்க்கலாம்? இதை எல்லாம் எனது மனதிற்குள் சொன்ன பிறகு அவன் என்ன செய்வான் என்று கற்பனை செய்ய முயற்சித் தேன். இவற்றைச் சொன்ன பின் ஒரு வார்த்தை கூட புரியாமல் எப்படி அவன் என்னை நெடுநேரம் உற்றுப் பார்ப்பான் என்பதை மனக்கண்ணில் கண்டேன். கடைசியில் என்ன சொல்ல வருகிறேன் என்பதை அவன் புரிந்து கொள்வான். அதன் பின் ஜன்னல் இருக்கையில் இருந்து எழும்பி, சிகப்புச் சதுரங்கள் போட்ட, ஓட்டைகள் நிறைந்த, தன் சிறிய பொதியைத் தூக்குவான் – அது இப்போது என் கண் முன்னால் தெரிகிறது; அந்தப் பொதியில் என்னதான் இருக்கிறது என்று கடவுளுக்குத்தான் தெரியும் – அதை அவன் போகும் இடங்களுக்கெல்லாம் கொண்டு திரிவான். ஓரளவு நாகரிகமாகத் தெரியும்படி எப்படித் தன் கிழிந்த உடுப்பை ஒரு தரம் சிறிது துடைத்துச் சரிப்படுத்திக்கொள்வான் – அவன் நுண்ணிய உணர்வுகள் கொண்ட மனிதன்! பின் எப்படிக் கதவைத் திறந்து கண்களில் கண்ணீர் வர வெளியே போவான். என் கற்பனை சுழன்றது. சரி. ஒரு மனிதனை அப்படியே ஒரே அடியாக அழிந்து போக விட்டுவிடுவதா? நான் மனமார வருந்தினேன். நான் மட்டும் எப்படி? அவனிலும் பார்க்க உயர்ந்த நிலையிலா இருக்கிறேன்? ஆனால் அதேவேளை நான் நினைத்தேன். சரி, எமிலியன். என் செலவில் நீ கனகாலம் இங்கு விருந்தாளியாக இருக்க முடியாது. கெதியில் நானே இந்த இடத்தை விட்டுப் போக இருக்கிறேன். அதன் பிறகு நீ என்னைக் காண மாட்டாய். தன் வீட்டுச் சாமான் களுடன் பண்ணை முதலாளி தன் தோட்டத்துக்குப் போய்விட்டார். போகு முன் என் வேலை தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகவும் தலைநகருக்குத் தான் திரும்பும் போது அங்கு என்னை அழைத்து வேலை தருவதாகவும் சொல்லிப் போனார். என் பண்ணை முதலாளி நல்ல மனிதர். ஆனால் அவர் அந்த ஆண்டே இறந்து போனார்.

என் பண்ணை முதலாளியையும் மனைவியையும் கொஞ்ச தூரம் கூட்டிச் சென்றுவிட்ட பின்பு, நான் சேமித்து வைத்திருந்த கொஞ்சக் காசையும் என் சாமான்களையும் எடுத்துக்கொண்டு, எனக்குத் தெரிந்த ஒரு கிழவியுடன் வசிக்கப் போய்விட்டேன். அவள் தான் வாழ்ந்து வந்த ஒரு அறை மூலையில் வாடகைக்கு எனக்கு இடம் தந்தாள். அவள் பணக்காரக் குடும்பம் ஒன்றில் தாதியாக முன்பு வேலை பார்த்தவள். இப்போது அவளின் முதிர்ந்த வயதில் அவளுக்குப் பென்சன் கொடுத்து விட்டார்கள்.

*எமிலியன், உனக்கு விடுதலை கூறுகிறேன். என் அருமையானவனே! நீ என்னை இனிமேல் காண மாட்டாய் என்று என் மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.*

*என்ன நினைக்கிறீர்கள், சேர். அன்று மாலை எனக்குத் தெரிந்த ஒருவரை நான் சந்தித்துவிட்டு வந்தபோது யாரைப் பார்த்தேன் தெரியுமா? வேறெவரையும் அல்ல. எமிலியனைத்தான். அவன் என் பெட்டியில் அமைதியாகக் குந்திக்கொண்டிருந்தான். அவனு டைய சிகப்புச் சதுரப் பொதி பக்கத்தில் இருந்தது. என் வரவை எதிர்பார்த்து, கசங்கிய துணியால் தன்னைச் சுற்றிக் கொண்டு காத்திருந்தான். அவன் மிகத் தனிமைப்பட்டுப் போய் இருக்க வேண்டும். ஏனென்றால் முதியவளிடம் பிரார்த்தனைப் புத்தகம் ஒன்றைக் கடனாக வாங்கித் தலைகீழாகப் பிடித்துக் கொண்டிருந் தான். இறுதியாக அவன் என்னைக் கண்டுபிடித்து விட்டான்! என் கைகள் சோர்ந்து போய்ப் பக்கவாட்டில் விழுந்துவிட்டன. சரி. நான் நினைத்தேன். வேறொன்றும் செய்வதற்கில்லை. நான் ஆரம்பத்திலேயே அவனை ஏன் கலைத்து விடவில்லை? அவனை நான் கேட்டது இது மட்டுமே: எமிலியன், உன் பாஸ்போர்டை உன்னுடன் வைத்திருக்கிறாயா? அதன் பிறகு நடந்த விசயங்களை என் மனதில் அசை போட்டுப் பார்த்தேன். சரி. சதா அலைந்து கொண்டிருப்பவன் என் வழியில் இடைஞ்சலாக இருப்பானா? அதைப் பற்றி முன்பு பல தடவை சிந்தித்திருக்கிறேன். அப்படி இருக்க மாட்டான் என்று முடிவெடுத்தேன். அதைவிட அவன் அதிகம் எனக்குச் செலவேற்பட வைப்பதும் இல்லை. அவனுக்கு உணவு கொடுக்க வேணும். உண்மை. அது அத்தனை அதிகம் இல்லை. காலையில் கொஞ்ச பாண். அது கொஞ்சம் ருசியாக இருக்க, கொஞ்ச வெங்காயமோ என்னமோ. மத்தியானச் சாப்பாட் டுக்கு திரும்பவும் கொஞ்சப் பாணும் வெங்காயமும். பின்னேரமும் திரும்பவும் பாணும் வெங்காயமும். கொஞ்ச க்வாஸ் மது. எங்க ளுக்குக் கிடைத்தால் கொஞ்ச முட்டைக்கோஸ் சூப்பு. அவை போதும் எங்கள் இருவருக்கும் தொண்டைவரை நிரப்ப. நான் சாப்பிடுவது கொஞ்சம். எமிலியன் ஒரு குடிகாரன். அவன் சாப்பிடுவதோ மிகக் கொஞ்சம். அவனுக்குத் தேவைப்படுவதெல் லாம் வொட்கா மட்டுமே. அவன் தன் குடிப்பழக்கத்தால் என்னைப் பாழாக்கி விடுவான். அதேவேளை என்னை ஒரு விநோதமான உணர்ச்சி ஆட்படுத்துவதுபோல் உணர்ந்தேன். எமிலியன் போய்விட் டால் என் வாழ்க்கை பாரமாகிவிடும் போலத் தெரிந்தது. அதனால் அவனின் தந்தையைப் போல் இருப்பதற்கு அப்போதே தீர்மானித் தேன். அவனைத் திருத்தி அவனைத் தன் காலிலேயே நிற்க வைப்பதன் மூலம் அழிவிலிருந்து அவனைக் காப்பாற்ற நினைத் தேன். படிப்படியாகக் குடியை மறக்கவைக்க நினைத்தேன். சற்றுப் பொறு, எமிலியன். என்னுடன் இரு. எங்கும் போகாமல் இரு. என் கட்டளைக்கு அடிபணி என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.*

அவனுக்கு ஒரு தொழில் பழக்க ஆரம்பிக்க வேணும். உடனடியாக அல்ல. இப்போது கொஞ்சம் அனுபவிக்கட்டும். இடைவேளையில், அவனுக்கு எது இலகுவாகக் கைவரும். எதில் அவனுக்கு ஆர்வம் இருக்கிறது என்று கண்டுபிடிப்பேன். ஏனென்றால் சேர், ஒரு மனிதன் ஒரு வேலையைச் ஒழுங்காகச் செய்வதற்கு அவனால் முடிய வேணும். அத்துடன் அவனுக்கு உண்மையான ஆர்வமும் தேவை. இரகசியமாக அவனை உற்று நோக்க ஆரம்பித்தேன். எமிலியன் இலகுவாக மசியத்தக்க ஆய்வுப் பொருளல்ல. முதலில் அன்பு வார்த்தைகளால் அவனை வளைக்கப் பார்த்தேன். இப்படி அப்படிக் கதைப்பேன். எமிலியன் நீ உன்னில் கூடிய கவனம் எடுக்க வேணும். உன்னைக் கொஞ்சம் திருத்த வேணும் என எண்ணினேன்.

குடியை விடு. உன்னைப் பார். நீ ஒரே கந்தல். உன்னுடைய உடுப்பு வேறெதையும் விட பன்னாடை போல இருக்கிறது. அது சரி இல்லை. நீ உன்னை உணர்ந்து கொள்ளக் காலம் வந்துவிட்டது, நீ குடித்தது போதும் என்று உனக்குத் தெரியும். அவன் சொன்னவற்றைக் கேட்டான். என் எமிலியன் தலையைக் குனிந்து கொண்டு கேட்டான். அந்த ஏழை அந்த நிலைக்கு ஏற்கெனவே வந்துவிட்டான். மது நாக்கைத் தாக்கிவிட்டது. அவனால் எந்தவிதமான அர்த்தமுள்ள, நல்லறிவுள்ள வார்த்தையையும் பதிலாகச் சொல்ல முடியவில்லை. பூசனிக்காயைப் பற்றிக் கதையுங்கள். அவரையைப் பற்றிக் கதைப்பான். நான் பேசுவதை நீண்ட நேரம் கேட்டுக் கொண்டே இருந்தான். பின் ஆழமான பெருமூச்சொன்று விட்டான்.

எதற்காகப் பெருமூச்சு விடுகிறாய், எமிலியன்?

ஓ! ஒன்றும் இல்லை, அஸ்ராஃபி இவானிச். கவலைப் படாதீர்கள். நான் இன்று பார்த்ததை மட்டும் நினைத்துக் கொண்டிருந்தேன். ஒருத்தியின் பழக்கூடையை இன்னொருத்தி தற்செயலாக விழுத்திவிட்டாள். அதற்காக இரண்டு பெண்கள் சண்டை பிடிப்பதைப் பார்த்தேன்.

சரி அதற்கென்ன?

பழங்கள் விழுந்த கூடைக்காரி மற்றவளின் கையில் இருந்த கூடைப் பழத்தையும் விழுத்தியது மட்டும் அல்லாமல் விழுந்த பழங்களையும் ஏறி உழக்கினாள்.

சரி எமிலியன். அதற்கென்ன?

அச். எனக்குள்ளே அதை நினைத்துக்கொண்டேன்.

எமிலியன், சாபப்பட்ட இந்தக் குடியினால் உன் ஏழை அறிவையும் இழந்து விட்டாய். பண்ணை முதலாளி ஒருவன் காசுத்தாள் ஒன்றை கொரகோவாத் தெருவில் தொலைத்துவிட்டான். இல்லை அது சடோவோ தெருவோ என்னமோ? ஒரு விவசாயி அது விழுவதைக் கண்டு என் அதிஷ்ரம் என்றான். அதே வேளை

இன்னொருவன் இடைமறித்து இல்லை, அது என் அதிஷ்ரம். நான்தான் அதை முதலில் பார்த்தேன் என்றான்.

சரி எமிலியன்.

அந்த இரண்டு விவசாயிகளும் சண்டை பிடிக்க ஆரம்பித்தார்கள். அதில் உச்சக்கட்டம் என்னவென்றால் அந்த நேரம் ஒரு பொலிஸ்காரன் வந்து அந்தத் தாளைப் புறக்கி எடுத்துப் பண்ணை முதலாளியிடம் கொடுத்தது மட்டுமல்லாமல் இரண்டு விவசாயிகளையும் குழப்பம் செய்ததற்காக கைது செய்யப் போவதாகவும் வெருட்டினான்.

சரி அதற்கென்ன? அதில் என்ன வியப்பு அல்லது அறிவுறுத்தல் இருக்கிறது, எமிலியன்.

ஒன்றும் இல்லை. ஆனால் மக்கள் சிரித்தார்கள், அஸ்ராஃபி இவானிச்.

அச். எமிலியன். அதில் மக்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது? ஒரு செப்புக் காசுக்காக அழிக்க முடியாத ஆன்மாவையே விற்றுப் போட்டாய். ஆனால் உனக்குத் தெரியுமா நான் என்ன சொல்வேன் என்று எமிலியன்?

என்ன அஸ்ராஃபி இவானிச்?

நீ ஏதாவது வேலை எடு. உண்மை. நீ கட்டாயம் எடுக்கவேண்டும். நூறாவது முறையாக உனக்குச் சொல்கிறேன். நீ உன்னில் இரக்கம் கொள்ள வேண்டும்.

நான் என்ன செய்ய அஸ்ராஃபி இவானிச்? எங்கே ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியாது, என்னை எவருமே வேலைக்கு எடுக்க மாட்டார்கள், அஸ்ராஃபி இவானிச்.

அதற்காகத் தான் உன்னைச் சேவையில் இருந்து கலைத்து விட்டார்கள். எல்லாம் உன் குடியினால் தான்.

இன்று பரிசாரகன் விளாசைக் அலுவலுகத்துள் கூப்பிட்டார்கள், என்றான் எமிலியன்.

அவனை ஏன் கூப்பிட்டார்கள்?

ஏன் என்று எனக்குத் தெரியாது. அவனைத் தேவைப்பட்டது. அதனால்தான் அவனைக் கூப்பிட்டிருக்க வேணும் என்று நினைக்கிறேன்.

நாங்கள் இருவரும் பேசி எதுவித பலனும் இல்லை எமிலியன் என்று நான் எனக்குள் நினைத்தேன். நாங்கள் செய்த பாவத்திற்கு எங்களுக்குக் கடவுள் தண்டனை தருகிறார். அப்படியான மனிதனுடன் ஒருவர் என்ன செய்ய முடியும், சேர்.

அவன் ஒரு சூழ்ச்சிக்காரன். கரவுடன் பழகினான். நான் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தான். கடைசியில்

அவன் களைத்துப்போனது போலப்பட்டது. எனக்கும் கோபம் வருகிறது என்று அவன் கவனித்தவுடன் தன் மேலங்கியை எடுத்துக் கொண்டு நழுவிவிட்டான். அதுதான் அவனைக் கண்டது கடைசி யாக இருக்கும். அன்று பகல் முழுதும் வரமாட்டான். பின்னேரம் தான் வருவான். பிரபு மாதிரிக் குடித்திருப்பான். யார் அவனுக்கு மது வாங்கிக் கொடுத்தார்கள்? எங்கிருந்து அதற்குப் பணம் கிடைத்தது? கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் என்னிடம் இருந்து மட்டும் பணம் எடுக்கவில்லை. அது நிச்சயம்.

சரி. எமிலியன். நீ குடியை விட வேணும். கேட்கிறதா? அடுத்த முறை நீ குடித்துப் போட்டு இங்கே வந்தால் படிக்கட்டுகளில் படுக்க வேணும். உன்னை உள்ளுக்கு விட மாட்டேன்!

அதன் பிறகு இரண்டு நாள் வீட்டுக்குள் அடைந்து கிடப்பான். மூன்றாம் நாள் திரும்பவும் மெல்லமாக நழுவிவிடுவான். நானும் அவன் வரும்வரை காத்துக்கொண்டே இருப்பேன். அவன் வர மாட்டான். ஒரு மாதிரி பயந்துவிடுவேன் என்பதை நான் ஒத்துக் கொள்ளத்தான் வேணும். அதைவிட அவனுக்காக நான் மிக மிக வருந்தவும் செய்தேன். அந்த ஏழைப் பிசாசுக்கு நான் என்ன செய்தேன் என்று நினைத்தேன். நான் அவனைப் பயப்படுத்திப் போட்டேன் போலும்! அவன் இப்போது எங்கே போயிருப்பான்?

இரக்கத்துக்குரிய உயிர்! கடவுளே! அவன் இறந்தும் போகலாம்! இரவு வந்து போயிற்று. அவன் வரவில்லை. அடுத்த நாள் காலை கூடத்துக்குப் போனபோது அங்கே கடைசிப் படியில் தலையை வைத்துக்கொண்டு குளிரால் விறைத்துக் கட்டையாய்ப் போனது போல் படுத்திருந்தான்.

உனக்கு என்ன நடந்தது. எமிலியன்? ஆண்டவன் உன்னைக் காப்பாற்றட்டும்! ஏன் இங்கே கிடக்கிறாய்?

உங்களுக்குத் தெரியும் அஸ்ராஃபி இவானிச். அன்று என்னில் கோபித்துவிட்டீர்கள். நானும் உங்களுக்குக் கோபத்தை மூட்டி விட்டேன். என்னைக் கூடத்தில் படுக்க வைப்பதாய்ச் சொன்னீர் கள். அதனால் நான் உள்ளே வரத் துணியவில்லை. இங்கே படுத்துவிட்டேன்.

எமிலியன், தேவை இல்லாமல் படிக்கட்டுக்களை கவனிப்பதை விட்டு வேறு தொழில் பார்ப்பது நல்லது. கோபத்தாலும் இரக்கத்தா லும் நிரப்பப்பட்டுச் சொன்னேன்.

வேறு என்ன தொழில், அஸ்ராஃபி இவானிச்?

நீ ஒரு பாவப்பட்ட உயிர். இங்கே கோபம் தீயைப் போல என்னுள் பற்றிக்கொண்டது. நீ தையல் கலையைக் கற்க முயற்சிக் கலாம். நீ போட்டிருக்கும் உடுப்பைப் பார். அதில் ஓட்டைகள் நிரம்பிக் காணப்படுவது மட்டுமல்ல. அதனால் படிக்கட்டுகளையும் கூட்டுகிறாய்! ஒரு ஊசியாலாவது அந்தக் கிழிசலைத் தைக்கலாம்

தானே! தைத்தால் கொஞ்சம் நாகரிகமாய் இருக்குமே. அச்! நீ ஒரு கேவலமான குடிகாரன். அதைவிட வேறொன்றும் இல்லை.

சரி சேர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவன் ஊசியை எடுத்தான் – நான் சொன்னது பகடியாகவே – ஆனால் உண்மையில் அவன் பயந்து போய் ஊசியை எடுத்தான். தான் உடுத்திருந்த உடுப்பைக் கீழே போட்டுவிட்டு ஊசியில் நூலைக் கோர்க்க ஆரம்பித்தான்.

என்ன நடக்கும் என்பது எனக்கு இலகுவாகப் புரிந்தது, அவன் கண்களில் நீர் நிரம்பி கண்கள் சிவந்தன. கைகள் நடுங்கின. நூலைத் தள்ளித் தள்ளிப் பார்த்தான். அது துவாரத்தில் போவதாய் இல்லை. நூலை எச்சிலால் நனைத்தான். விரல்களுக்கு இடையில் வைத்து உருட்டினான். கூர்மையாய் ஆக்கினான். ஆனால் அது போகவே இல்லை.

போக! அதை எறிந்துவிட்டு என்னைப் பார்த்தான்.

சரி எமிலியன். நீ எனக்கு நல்ல பாடம் படிப்பித்தாய். யாராவது இதைப் பார்த்திருந்தால் நான் அவமானத்தால் செத்திருப்பேன்! நான் இதைச் சொன்னது பகடியாகத்தான். என்னில் உனக்குக் கோபம். தைக்கிறதை விடு. பாவத்திலிருந்து ஆண்டவன் உன்னைக் காப்பாற்றட்டும்! நீ ஒன்றும் செய்ய வேண்டாம். ஆனால் குழப்படி செய்வதை விடு. படிக்கட்டில் தூங்கி என்னை அவமானத்துக்குள் ளாக்கிவிடாதே!

நான் என்ன செய்ய, அஸ்ராஃபி இவானிச். என்னை எனக்குத் தெரியும். நான் சதா குடிவெறியில்தான் இருப்பேன். எதற்கும் உதவாதவன். என்னைப் பாதுகாத்து, அபயமளிக்கும் புரவலர் நீங்கள். உங்களைத் தேவை இல்லாமல் கோபத்துக்குள்ளாக்குகிறேன்.

சடுதியாக அவனுடைய நீலம் பெயர்ந்த உதடுகள் நடுங்க ஆரம்பித்தன. சவரம் எடுக்காத, வெளிறிய கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருள ஆரம்பித்தன. ஒன்று, இரண்டு என்று. பின் வெள்ளம் போலப் பாயத் தொடங்கியது. என் எமிலியன். சொர்க்கத்தில் இருக் கும் பிதாவே! என் இதயத்தை யாரோ கத்தியால் வெட்டியது போல் உணர்ந்தேன். அச்! உன்னைத் தான். கூருணர்வுள்ள மனிதனே! ஏன், நான் நினைக்கவே இல்லையே! அப்படி யாரால் நினைத்திருக்க முடியும்? இல்லை. எமிலியன். உன்னை ஒரே அடியாகக் கைவிட்டு விட வேண்டியது தான். நீ விரும்பிய மாதிரியே நட.

சரி சேர். எனக்குச் சொல்ல வேறு எது இருக்கிறது! முழு விசயமுமே முக்கியமற்றது. குறிப்பிடத்தக்கதல்ல. அதைப் பற்றிச் சொல்லி வார்த்தைகளை வீணடிப்பதில் உண்மையில் எந்த விதப் பயனும் இல்லை. உதாரணமாக, நீங்கள் சேர் அதற்காக இரண்டு துட்டுக்கூடக் கொடுக்க மாட்டீர்கள். ஆனால் அந்த விசயம் ஒருபோதுமே நடந்திருக்கா விட்டால் அதற்காக நான் எவ்வளவும்

கொடுத்திருப்பேன். என்னிடம் ஒரு களிசான் இருந்தது. நீல நிறம். சதுரமானது, அருமையான முதல் தரமான சாமான். ஒரு பணக்காரக் காணிச் சொந்தக்காரன் ஏதோ வியாபாரமாக இங்கே வந்தபோது என்னிடம் அதைச் சொல்லிச் செய்வித்தான். அது அவனுக்கு இறுக்கமாய் இருக்கிறதென்று சொல்லி வாங்க மறுத்து என்னிடமே விட்டுவிட்டான். அந்தத் துணி முதல் தரமானது. பழைய துணிச் சந்தையில் அதைக் கொடுத்தால் ஐந்து ரூபிள் வாங்கலாம். இல்லை என்றால் சென்ற் பீற்றர்ஸ்பேர்க் கனவானுக்கு ஒரு நல்ல சோடி இறுக்கமான காற்சட்டைக்கு வெட்டிக் கொடுத்துவிட்டு மிச்சத் துணியில் எனக்கும் ஒரு பனியன் தைத்திருக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஒரு ஏழை மனிதனுக்கு எல்லாமே பிரயோசனப்படும். அந்த நேரம் எமிலியன் மிக முட்டுப்பட்டுப்போய் இருந்தான். குடிப்பதைக்கூட விட்டிருப்பதைப் பார்த்தேன். முதல் நாள். பின் இரண்டாவது நாள். மூன்றாவது நாள். சோகத்துடனும் மனம் சோர்ந்தும் போயிருந்தான்.

சரி. இந்த ஏழை மனிதனிடம் தேவையான சில்லறை இல்லை. அல்லது சரியான வழியில் போக, அல்லது நல்ல அறிவு சொல்வதைக் கேட்க வெளிக்கிட்டுவிட்டான் என்று நினைத்தேன்.

நல்லது. சுருக்கிச் சொல்வதானால், முக்கியமான விடுதலை நாள் அப்போது வந்தது. நான் மாலை நேர வழிபாட்டுக்குக் கோயிலுக்குப் போய்விட்டேன். திரும்பி வந்தபோது எமிலியன் ஜன்னல் இருக்கையில் அமர்ந்திருந்தான். பிரபுபோல் நன்றாகக் குடித்துவிட்டு. ஓ இதுதானா நீ செய்கிறாய் என்று நினைத்துக் கொண்டு ஏதோ தேவைக்காக என் றங்குப் பெட்டியில் ஏதோ எடுக்கப் போனேன். களிசானை அங்கு காணவில்லை. இங்கே அங்கே எல்லா இடமும் கிளறினேன். போய்விட்டது! எல்லா இடமும் நல்லாகத் தேடி அது தொலைந்தே விட்டதென்று சரியாக அறிந்த பிறகு என்னுள் ஏதோ ஒன்று போவதை உணர்ந்தேன்! அந்த முதியவளைத் தேடிச் சென்றேன். எமிலியனைப் பற்றி நான் எப்படியோ நினைக்கவே இல்லை. அவன் நிறைவெறியில் இருக்கிறான் என்ற ஆதாரம் இருந்தும் கூட.

இல்லை. முதியவள் சொன்னாள். கனவானே! ஆண்டவன் உன்னைக் காப்பாற்றட்டும். களிசான் எனக்கேன்? நான் அதை உடுக்க முடியுமா? என்னிடம் இருந்தும் அன்றொரு நாள் ஒரு பாவாடை காணாமல் போய்விட்டது, அதைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.

சரி, எவராவது இங்கே வந்தார்களா?

ஒருவரும் வரவில்லை. நாள் முழுதும் இங்கேதான் இருந்தேன். உன் இந்தச் சிநேகிதன்தான் சற்று நேரம் வெளியே போய் வந்தான். அவன் இந்தா இங்கே இருக்கிறான்.

அவனை நீ ஏன் கேட்கக்கூடாது?

எமிலியன் றங்குப் பெட்டியில் இருந்து எதற்காகவாவது களிசானை எடுத்தாயா? உனக்கு ஞாபகம் இருக்கா அது அந்தக் காணிச் சொந்தக்காரனுக்குத் தைத்தது?

இல்லை. அதை நான் எடுக்கவே இல்லை, அஸ்ராஃபி இவானிச்.

அதற்கு என்ன நடந்திருக்கலாம்? திரும்பவும் தேடத் தொடங்கினேன். ஆனால் அதனால் ஏதும் பலன் ஏற்படவில்லை. ஜன்னல் இருக்கையில் இருந்து எமிலியன் முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு முன்னிலையில் திறந்த றங்கின் முன் முழங்காலில் இருந்தேன். அப்போது பக்கவாட்டில் சடுதியாக அவனைப் பார்த்தேன். அச். இதயத்தின் நடுவில் கடும் சூட்டை உணர்வதாகவும் என் முகம் மிகச் சோகமாகவும் இருப்பதாகவும் உணர்ந்தேன். சடுதியாக என் கண்கள் எமிலியனின் கண்களைச் சந்தித்தன.

இல்லை. அஸ்ராஃபி இவானிச். நீங்கள் சிலவேளை நினைக்கலாம் – நான் என்ன சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும் – ஆனால் அதை நான் எடுக்கவே இல்லை.

அது எங்கே போய்விட்டது, எமிலியன்?

இல்லை. அதை நான் காணவே இல்லை.

நல்லது. அப்படி என்றால் அதுதானே நடந்து போய்த் தொலைந்துவிட்டதா எமிலியன்?

சிலவேளை இருக்கலாம், அஸ்ராஃபி இவானிச்.

அதன்பின் அவனுடன் ஒரு வார்த்தையைக் கூட விரயமாக்கவில்லை. முழங்காலில் இருந்து எழும்பி றங்கைப் பூட்டினேன். விளக்கைக் கொளுத்தி வேலை செய்வதற்குக் குந்தினேன். கீழ் மாடியில் வசித்த ஓர் அரச லிகிதருக்கு பனியன் ஒன்றைத் திரும்பித் தைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அதேவேளை கலவரப்பட்டிருந்தேன். என் ஆடை அலமாரி அப்படியே எரிந்து சாம்பலாகிப் போயிருந்தால் கூட அதை இலேசாகத் தாங்கி இருப்பேன் என்று நினைத்தேன். நான் கடுமையான கோபத்தில் இருக்கிறேன் என்று எமிலியன் உணர்ந்தது போலத் தெரிந்தது. ஒரு மனிதன் குற்றவாளியாக இருக்கும்போது அப்படித்தான், சேர். வரப்போகிற புயலை ஏற்கெனவே பறவை உணர்ந்துவிடுவதுபோல. பிரச்சினை அணுகுகிறது என்று அவன் எப்போதுமே முன்கூட்டியே உணர்ந்துவிடுவான்.

அஸ்ராஃபி இவானிச், உங்களுக்குத் தெரியுமா? அவன் சடுதியாக ஆரம்பித்தான். இன்று அந்தத் தோட்டி, வண்டிக்காரனின் விதவையை மணந்தான்.

அவனை நான் ஒரு மாதிரி பார்த்தேன். ஆனால் அவனை மிகுந்த கோபத்துடன் நான் பார்ப்பதாக அவன் புரிந்துகொண்டது போல இருந்தது. தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து கட்டில் அடிக்குப் போய் அதைத் துருவிப் பார்க்க வெளிக்கிட்டான். அது எங்கே போயிருக்கும் மாயமாய் மறைந்து போச்சே. பேய் கொண்டு போன மாதிரி என்று சொல்லிக் கொண்டே துருவித் துருவித் தேடினான்.

என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு காத்திருந்தேன். என் எமிலியன் கட்டில் அடிக்குத் தவழ்ந்து போவதைப் பார்த்தேன். அதன் மேலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இங்கே பார். கட்டில் அடிக்கு ஏன் தவழ்கிறாய்?

நான் களிசானைத் தேடிக்கொண்டிருக்கிறேன், அஸ்ராஃபி இவானிச் என்று கட்டிலின் கீழ் இருந்து சொன்னான். ஏதோ மாதிரி அது இங்கே சிலவேளை போய் இருக்கலாம். சாதாரணமான என்னைப் போன்ற எளிய மனிதனுக்காக ஏன் உங்கள் முழந்தாளை அசுத்தமாக்குகிறீர்கள் சேர் (சேர் என்று என் கோபத்தில் அவனைப் பெரிய மனிதனாக விளிப்பதற்காக) என்றேன்.

ஆனால் அஸ்ராஃபி இவானிச். – பிழையாக எதையும் நினைக்க வில்லை – சிலவேளை இங்கே பார்த்தால் கிடைக்கலாம் என்பதற் காகத்தான்.

ம்ம்... ஒரு நிமிசம் நான் சொல்வதைக் கேள். எமிலியன்.

என்ன அஸ்ராஃபி இவானிச்?

நீ என்னிடம் படு போக்கிரியைப் போல் களவெடுக்கவில் லையா? நான் போட்ட உப்புக்கும் உணவுக்கும் – அவன் கட்டி லுக்குக் கீழ் தவழ்ந்து போவதைக் கண்டு – அது அங்கே இல்லை என்பது அவனுக்குத் தெரிந்தும் – என்னையே இழந்த கடும் கோபத்தில் கூறினேன்.

இல்லை. அஸ்ராஃபி இவானிச். கனநேரம் கட்டில் அடியில் கிடந்தான். சடுதியாக தவழ்ந்து வெளியே வந்து என் முன் நின்றான். இப்போதும் அவனை என் முன் பார்ப்பதுபோல் உணர்கிறேன். பாவத்தைப் பார்ப்பது போன்ற கொடுமையான காட்சியாகவே இருந்தது அது.

இல்லை. நடுங்கிய குரலில் சொன்னான். அவன் உடம்பு முழுவதும் நடுங்கி ஆடிக்கொண்டிருந்தது. நெஞ்சை ஒரு விரலால் சுட்டிக் காட்டினான். அதைக் கண்டு பயந்துவிட்டேன். என்னால் ஜன்னல் இருக்கையில் இருந்து எழும்ப முடியவில்லை. உங்கள் களிசானை எடுக்கவில்லை, அஸ்ராஃபி இவானிச்.

*சரி, எமிலியன். என் மடத்தனத்தால் பிழையாகக் குற்றம் சாட்டி இருந்தால் என்னை மன்னித்துக்கொள். களிசான் அது என்னவாகப் போனாலும் போகட்டும். அது இல்லாமலும் நாங்கள் வாழலாம். எங்களுக்குக் கைகள் இருக்கின்றன. கடவுளுக்கு நன்றி. நாங்கள் களவெடுக்கத் தேவை இல்லை. நாங்கள் இன்னொரு ஏழையை உறிஞ்சி வாழத் தேவை இல்லை. நாங்கள் வாழுவதற்கு உழைப்போம்.*

நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நின்றான் எமிலியன். சிலநேரம் நின்றுவிட்டு பின் இருந்தான். அன்று பின்னேரம் பூராவும் அசையாமல் அப்படியே இருந்தான். நான் நித்திரை கொள்ளப் போகும்போதும் அதே இடத்தில் அப்படியே இருந்து கொண்டிருந்தான். காலையில் நான் எழுந்தபோது, வெறும் நிலத்தில், தான் போட்டிருந்த உடுப்பாலேயே போர்த்திக்கொண்டு நித்திரைகொள்வதைக் கண்டேன். அவமானத்தை அவன் பலமாக உணர்ந்ததால், கட்டிலில் போய்ப் படுப்பதற்குக் கூட அவனிடம் இதயம் இருக்கவில்லை.

சரி சேர், அந்த நாளிலிருந்து அந்த மனிதனில் எனக்குக் கடும் வெறுப்பு வளர்ந்தது. அதாவது, முதல் சில நாட்கள் அவனை நான் வெறுத்தேன். உதாரணமாக, என் சொந்த மகனே என்னிடம் களவெடுத்துவிட்டதாகவும் எனக்குக் கடும் குற்றம் செய்து விட்டதாகவும் உணர்ந்தேன்.

அச். எமிலியன், எமிலியன், எமிலியனே! இரண்டு கிழமை இரவும் பகலும் குடித்தான். காலையில் இருந்து இரவு வரை மிருகம்போலக் குடித்தான். அந்த இரண்டு கிழமைகளுமே ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. முழு நேரமுமே ஆழமாகப் போயி ருந்த துயரத்தால் மூழ்கிப்போயிருந்தான். இப்படியாகத் தன்னை அழித்துக்கொள்ள முயற்சிக்கிறானோ என்று நினைத்தேன். இறுதி யாக அவன் குடியைக் கைவிட்டான். அவனிடம் குடிப்பதற்கு வழி இல்லை என்று நினைத்தேன். ஒவ்வொரு கோபெக்கையும் குடித்து விட்டான். திரும்பவும் அவனின் ஜன்னல் இருக்கையைப் பிடித்துக் கொண்டான். ஒரு சொல்லுமே பேசாமல் மூன்று முழு நாட்கள் அந்த இடத்திலேயே அவன் இருந்தது எனக்கு ஞாபகம். சடுதியாக அவன் அழுவதைக் கண்டேன். அங்கிருந்தே அழுதான். என்ன அழுகை! மழைபோல கண்களில் இருந்து சொட்டுச் சொட்டாக விழுந்தன. அவை விழுவது அவனுக்குத் தெரியாதது போல! அதைப் பார்ப்பது எனக்கு வருத்தமாக இருந்தது, சேர். வளர்ந்த மனிதன் ஒருவன் அழுவது இன்னும் வருத்தமாக இருந்தது. வயது முதிர்ந்த எமிலியனைப் போன்ற ஒருவன் துயரத்தால் சோகமுள்ள இதயத் துடன் அழுவது!

*எமிலியன் உனக்கு என்ன வருத்தம்?*

*அவன் ஏதோ சொல்ல வெளிக்கிட்டு நடுங்கினான். அந்த நிகழ்ச்சி நடந்த நாளிலிருந்து அன்றுதான் அவனுடன் நான் கதைத்தேன்.*

*ஒன்றும் இல்லை, அஸ்ராஃபி இவானிச்.*

*கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும், எமிலியன். எதைப் பற்றியும் கவலைப்படாதே. போனவை எல்லாம் போனதாக இருக்கட்டும். அவற்றை மனதுக்குள் எடுக்காதே.*

*அவனுக்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன்.*

*ஏதோ ஒரு வேலை செய்ய வேணும். அது தான் அஸ்ராஃபி இவானிச்.*

*எப்படிப்பட்ட வேலை, எமிலியன்?*

*ஓ ஏதாவது. சிலவேளை முன்பைப் போல ஏதாவது ஒருவகை இராணுவ சேவையில் சேரலாம். ஏற்கெனவே என் பழைய முதலாளி என்னைக் கேட்டார். அது எனக்குச் சரி வராது. மேலும் உங்களை உபயோகிப்பது சரியில்லை. அது சரியில்லை. அஸ்ராஃபி இவானிச். நான் சிலவேளை ஏதாவது வேலை எடுப்பேன். பின் எல்லாவற்றுக்கும் உங்களுக்குப் பணம் கொடுப்பேன். உணவு எல்லாவற்றுக்கும்.*

*அப்படிச் செய்யாதே. அப்படிச் செய்யாதே, எமிலியன். சரி நீ ஒரு பாவத்தைச் செய்து விட்டாய் என்று வைத்துக் கொள்வோம். அது முடிந்து விட்டது. பிசாசு எல்லாவற்றையும் எடுக்கட்டும். அது போகட்டும். பழையபடி நாங்கள் வாழுவோம். ஒன்றுமே நடக்காதது போல!*

*அஸ்ராஃபி இவானிச். நீங்கள் அதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவது போலத் தெரிகிறது. ஆனால் நான் உங்கள் களிசானை எடுக்கவில்லை.*

*நீ விரும்பிய மாதிரிச் செய், எமிலியன்.*

*இல்லை, அஸ்ராஃபி இவானிச்.*

*இனிமேலும் உங்களுடன் வாழ முடியாதென்று தெளிவாகத் தெரிகிறது. என்னை மன்னிக்க வேண்டும், அஸ்ராஃபி இவானிச்.*

*கடவுள் உன்னுடன் இருக்கட்டும் எமிலியன். உன்னை யார் புண்படுத்துவது அல்லது போகச் சொல்லிச் சொன்னது? நானா அதைச் செய்வது?*

*இல்லை. ஆனால் உங்கள் விருந்தோம்பலை இன்னும் நான் பிழையாக உபயோகிப்பது எனக்குப் பண்பில்லை. நான் போய் விடுவதே நல்லது.*

*உண்மையில் இருந்த இடத்தில் இருந்து அவன் எழும்புவதையும் கிழிந்த துணியை அணிவதையும் நான் பார்த்தேன். அவன் உண்மை*

யிலேயே புண்பட்டுவிட்டான். அவ்விடத்தை விட்டுப் போக வேண்டும் என்பது அவன் தலைக்குள் புகுந்துவிட்டது. ஆனால் எங்கே போகிறாய், எமிலியன்? நினைத்துப் பார். நீ என்ன? எங்கே போவாய்?

போவதுதான் சிறந்தது அஸ்ராஃபி இவானிச். போவதைத் தடுக்க முயற்சிக்காதீர்கள். அவன் திரும்பவும் அழ வெளிக்கிட்டான்.

என்னை விடுங்கள் அஸ்ராஃபி இவானிச். நீங்கள் முன்பிருந்த ஆளில்லை இப்போது. ஏன் இல்லை? நான் முன்பு இருந்ததைப் போலவே இப்போதும் இருக்கிறேன். மடத்தனமாக, குழந்தையைப் போல நீ தன்னந்தனியாக அழிந்து விடுவாய், எமிலியன். இல்லை அஸ்ராஃபி இவானிச். இப்போது நீங்கள் வீட்டை விட்டு வெளியே போகும்போது றங்குப் பெட்டியைப் பூட்டிப் போட்டுப் போகின்றீர் கள். அஸ்ராஃபி இவானிச் அதைப் பார்த்து அழுவேன். இல்லை. நீங்கள் என்னைப் போக விடுவதே நல்லது. நாங்கள் இரண்டு பேரும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் ஏதாவது விதத்தில் நான் உங்களைப் புண்படுத்தி இருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

சரி சேர் அவன் போய்விட்டான். ஒரு நாள் காத்திருந்து விட்டு ஓ, பின்னேரம் மட்டில் திரும்பி வருவான் என்று நினைத்தேன். ஒரு நாள் போனது. இரண்டு நாள் போனது. அவன் வரவில்லை. மூன்றாம் நாளும் வரவில்லை. நான் பயந்து விட்டேன். என் இதயத்தைக் கடுமையான சோகம் கவ்வியது, சாப்பிடுவதையும் குடிப்பதையும் விட்டுவிட்டேன். இரவு பூராவும் கண்களை மூடா மல் படுத்திருந்தேன். அந்த மனிதன் என்னை முழுவதாக ஆட் கொண்டுவிட்டான். நாலாம் நாள் அவனைத் தேடிப் புறப்பட்டேன். அயலில் உள்ள தவறணைகள், போதைப் பொருள் விற்பனை செய்யும் இடங்கள் அனைத்திலும் தேடினேன். அவனை யாராவது கண்டார்களா என்று கேட்டேன். இல்லை.

எமிலியன் பூரணமாக மறைந்துவிட்டான்! சிலவேளை அவன் தன் இழிந்த இருப்பை அழித்துக்கொண்டிருக்கலாம் என்று நினைத் தேன். சிலவேளை குடிவெறியில் எங்கோ ஒரு வேலிக்கு அடியில் நாயைப் போல அழிந்துபோய் இருக்கலாம். களைத்துப் போய், அவநம்பிக்கையுடன், அரை உயிருடன் வீடு திரும்பினேன். அடுத்த நாளும் அவனைத் தேடிப் போகத் தீர்மானித்தேன். மடத்தனமான, ஆதரவில்லாத அந்த மனிதனை, என்னை விட்டு வெளியே விட்ட தற்காக, என்னையே நான் திட்டிக்கொண்டேன். ஐந்தாம் நாள் அதிகாலை – அது ஒரு விடுதலை நாள் – கதவு கிரீச்சிடும் சத்தம் கேட்டது. யாரைப் பார்த்தேன்? எமிலியனைத் தான்! ஆனால் என்ன நிலையில்! அவனுடைய முகம் நிலம் பேர்ந்து, தலைமயிர் நிறைய சேற்றுடன், வீதியில் படுத்திருந்தவன் போல மெலிந்து, சலாகைபோல ஒட்டிப்போய். தன் கிழிந்த உடையைக் கழற்றிவிட்டு, என் றங்குப் பெட்டியில் இருந்து என்னைப் பார்க்க ஆரம்பித்தான்.

சேர்! எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அதேவேளை என் இதய இழைகளைப் பிடுங்குவதிலும் பார்க்கக் கூடுதலான சோகத்தையும் உணர்ந்தேன். அதைப் போல ஒன்று எனக்கு நடந்திருந்தால் கெதியில் ஒரு நாயைப் போல இறந்திருப்பேனே ஒழிய திரும்பி வந்திருக்கவே மாட்டேன் என்று உணர்ந்தேன். சேர், ஆனால் எமிலியன் திரும்பி வந்தான். இயற்கையாகவே ஒரு மனிதனை அந்த நிலையில் பார்ப்பது கஷ்ரம். நான் அவனை எல்லா வழியிலும் ஆறுதல் கூறித் தேற்ற ஆரம்பித்தேன்.

சரி, எமிலியன், நீ திரும்பி வந்தது எனக்கு மிகுந்த சந்தோசம். நீ இவ்வளவு கெதியில் திரும்பி வந்திருக்காவிட்டால் என்னை இங்கு கண்டிருக்க மாட்டாய். உன்னைத் தேடிப் போவதற்கு இருந்தேன். ஏதாவது சாப்பிட்டாயா?

சாப்பிட்டுவிட்டேன், அஸ்ராஃபி இவானிச்.

நான் நம்பவில்லை. சரி, இந்தா இங்கே முட்டைக் கோசு சூப். கொஞ்ச இறைச்சியும் அதற்குள் கிடக்கிறது. சாதாரண வகையை சேர்ந்ததல்ல. இங்கே கொஞ்ச பாணும் கொஞ்ச வெங்காயமும். சாப்பிடு, அது உனக்கு நல்லது.

நான் அவனுக்குப் பரிமாறினேன். அவன் கடந்த மூன்று நாளாகப் பட்டினியாகக் கிடந்திருக்கிறான் என்பது விளங்கிற்று. அத்தனை பசி அவனிடம் தெரிந்தது. ஆகவே பசிதான் அவனை என்னிடம் விரட்டி வந்திருக்கிறது. அந்த ஏழையைப் பார்த்தபோது நான் ஆழமாகப் பாதிக்கப்பட்டுவிட்டேன். பக்கத்தில் உள்ள மதுக் கடைக்குப் போய்வரத் தீர்மானித்தேன். அவனை ஓரளவு உயிர்ப்பிப்பதற்கும் அவனுடன் சமாதானம் ஆகுவதற்கும் கொஞ்சம் வொட்கா வாங்கி வர நினைத்தேன். அது போதும். அந்த ஏழைக்கு எதிராக எனக்கொன்றும் இல்லை. வொட்காவைக் கொண்டு வந்து அவனுக்குச் சொன்னேன்: இங்கே பார் எமிலியன். நாங்கள் இருவரும் எங்கள் தேக நலனுக்கும், விடுதலை நாளைக் கௌரவிக்க வும் இதை அருந்துவோம். வா, வந்து குடி! இது உனக்கு நல்லது.

அவன் தன் கையை அவாவுடன் நீட்டினான். பின் கொண்டு வந்த கையை நிறுத்திவிட்டான். சற்று நேரத்தின் பின் கிளாசை உயர்த்தி மதுவைச் சட்டைக் கைகளில் ஊற்றிக்கொண்டே வாய் வரை கொண்டுபோனான். கடைசியாக அதை வாய்க்குக் கொண்டு போய்விட்டு, உடனே மேசையில் வைத்தான்.

ஏன் எமிலியன், நீ குடிக்கவில்லை?

இல்லை. நான் குடிக்க மாட்டேன், அஸ்ராஃபி இவானிச்.

நீ இதைக் குடிக்க மாட்டாய்?

நான், அஸ்ராஃபி இவானிச், நான் நினைக்கிறேன், இனிமேல் நான் குடிக்க மாட்டேன்.

ஒரே அடியாக இனிமேல் குடிக்க மாட்டாயா? அல்லது இன்று மட்டும்தானா, எமிலியன்?

அவன் பதில் சொல்லவில்லை. சற்று நேரத்திற்குப் பின் அவன் தன் கையில் தலையைத் தாங்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

உனக்குச் சுகமில்லையா எமிலியன்?

ஓம். சரியாகச் சுகமில்லை, அஸ்ராஃபி இவானிச்.

அவனைப் படுக்கைக்குப் போகச் செய்தேன். அவன் உண்மையில் ஒரு நோயாளியைப் போலத்தான் காணப்பட்டான். அவன் உடம்பு சூடாகக் கொதித்தது. குளிர் காய்ச்சலால் நடுங்கிக்கொண்டிருந்தான். அன்று நாள் முழுதும் அவனுக்குப் பக்கத்தில் குந்திக் கொண்டிருந்தேன். மாலையாக, அவன் நிலைமை மோசமாகியது, க்வாஸ் மது, பட்டர், கொஞ்சம் வெங்காயம் போட்டு உணவு தயாரித்தேன். அதற்குள் கொஞ்ச பாண் பருக்கைகளும் தூவினேன்.

போ. போய்க் கொஞ்சம் சாப்பிடு. சிலவேளை கொஞ்சம் தேறலாம்.

அவன் தலையை ஆட்டினான்.

இல்லை. அஸ்ராஃபி இவானிச். இன்றிரவு நான் ஒன்றுமே சாப்பிடப்போவதில்லை.

அவனுக்காகக் கொஞ்சத் தேநீர் தயாரித்தேன். வாடகைக்கு அறை எடுத்திருந்த அந்த ஏழை மனிஷிக்கு இவனுக்காக அதிகம் கரைச்சல் கொடுத்திருந்தேன். ஆனால் அவனோ கொஞ்சத் தேனீர்கூடக் குடிப்பதாக இல்லை.

சரி. இது ஒரு சங்கடமான நிலைமை என்று எனக்குள் நினைத்தேன். மூன்றாம் நாள் காலை டொக்ரரைப் பார்க்கப் போனேன். டொக்ரர் கொஸ்ராபிராவோவ் எனக்குத் தெரிந்தவர். பழைய இடத்தில் வசித்தபோது எனக்கு வைத்தியமும் பார்த்தவர். டொக்ரர் வந்தார். அவனைப் பரிசோதித்தார். என்னைக் கூப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அவன் ஏற்கெனவே நெடுந்தூரம் போய்விட்டான். இருந்தாலும் நான் கொடுக்கும் இந்தத் தூளைக் கொடு என்று சொல்லிவிட்டுப் போனார். டொக்ரர் கடமைக்காகச் சொன்னது என்று புரிந்துகொண்டபடியால் அவனுக்கு அந்தத் தூளை நான் கொடுக்கவில்லை. ஐந்தாம் நாளும் வந்தது.

அவன் எனக்கு முன்னால் செத்துக்கொண்டிருந்தான். சேர். என் மடியில் செய்துகொண்டிருந்த வேலை கிடக்க ஜன்னல் இருக்கையில் குந்தி இருந்தேன். முதியவள் அடுப்புக் கரியைக் கிளறிக்கொண்டிருந்தாள். நாங்கள் எல்லோரும் அமைதியாக இருந்தோம். அவன் என் சொந்த மகனாகவும் அவனை நான் இழப்பதுபோலவும் என் இதயம் இந்த ஏழை உயிருக்காக உடைந்து நொறுங்கிக்கொண்டிருந்தது. எமிலியன் என்னைப் பார்த்துக்கொண்

டிருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். காலையில் இருந்தே ஏதோ எனக்குச் சொல்ல எத்தனிக்கிறான் என்பதும் அதைச் சொல்ல அவனுக்குத் துணிவு போதவில்லை என்பதையும் நான் அவதானித் தேன். கடைசியில் நான் அவனைப் பார்த்தேன். அவன் கண்கள் என் கண்களைச் சந்தித்தபோது உடனே அவன் தன் கண்களை கீழே தாழ்த்தினான்.

அஸ்ராஃபி இவானிச்!

என்ன எமிலியன்?

என்னுடைய உடுப்பைப் பழைய துணிச் சந்தைக்கு எடுத்துக் கொண்டு போனால் எவ்வளவு பணம் கொடுப்பார்கள், அஸ்ராஃபி இவானிச்?

எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் அதற்கு ஒரு மூன்று ரூபிளாவது கொடுப்பார்கள், எமிலியன்.

எளிய மனதுள்ள அந்த உயிரின் ஆறுதலுக்காக மட்டுமே அதைச் சொன்னேன். அதைப் போன்ற தாழ்வான கந்தலை விற்க நினைத் தாலே யதார்த்தத்தில் என் முகத்தின் முன்னிலையிலேயே சிரித்திருப் பார்கள்.

அதற்கு இன்னும கொஞ்சம் கூடுதலாகவே தருவார்கள் என்று நினைத்தேன் அஸ்ராஃபி இவானிச். அது துணியால் செய்யப்பட் டது, அதற்கு எப்படி மூன்று ரூபிளுக்கு மேல் கொடுக்க விருப்பம் இல்லாமல் இருக்கலாம்?

நல்லது, எமிலியன். உனக்கு அதை விற்க விருப்பம் இருந்தால் முதலில் கூடுதலாகக் கேட்கலாம்.

எமிலியன் ஒரு கணம் இருந்துவிட்டு திரும்பவும் என்னை அழைத்தான்.

அஸ்ராஃபி இவானிச்?

என்ன எமிலியன்?

நான் இல்லாமல் போன பிறகு நீங்கள் அதை விற்கலாம். அதில் என்னைப் புதைக்கத் தேவை இல்லை. அது இல்லாமலே என்னால் இருக்க முடியும. அது கொஞ்சம் பெறுமதி உள்ளது. அது உங்களுக்கு உதவலாம்.

இவ்விடத்தில் என் இதயம் வலியால் முறுக்கப்பட்டதுபோல் உணர்ந்தேன். என்னால் அதை வெளிப்படுத்தவே முடியாது, சேர். சாவு அணுகும்போது வருகிற சோகம் அந்த மனிதனில் ஏற்கெனவே வந்துவிட்டதைப் பார்த்தேன். திரும்பவும் சில நேரம் நாம் அமைதியானோம். இப்படியாக ஒரு மணி நேரம் போய்விட்டது. அவனைப் பார்த்தபோது அவன் இன்னும் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் என் கண்களைச் சந்தித்த உடனே தன் கண்களைக் கீழே தாழ்த்தினான்.

*உனக்குக் கொஞ்சம் குளிர் தண்ணீர் வேணுமா? அவனை நான் கேட்டேன்.*

*எனக்குக் கொஞ்சம் தாருங்கள். கடவுள் உங்களுக்குத் திருப்பித் தருவார், அஸ்ராஃபி இவானிச்.*

*உனக்கு வேறு ஏதாவது தேவையா, எமிலியன்?*

*இல்லை, அஸ்ராஃபி இவானிச். எனக்கு வேறொன்றும் தேவை இல்லை. ஆனால் –*

*என்ன?*

*உங்களுக்கு அது தெரியும் –*

*உனக்கு என்ன தேவை, எமிலியன்?*

*அந்தக் களிசான். உங்களுக்குத் தெரியும் – அதை நான்தான் எடுத்தேன், அஸ்ராஃபி இவானிச்.*

*நல்லது. பெரிய கடவுள் உன்னை மன்னிப்பார், என் எமிலியன். நீ அதிஷ்ரமற்ற பிறவி. அமைதியாய்ப் போய்வா!*

*என் முகத்தை ஒரு கணம் மறுபக்கம் திருப்ப வேண்டியதாயிற்று. ஏனென்றால் அந்த ஏழைக்காக, துயர் என் மூச்சை அடைத்தது. என் கண்களிலிருந்து கண்ணீர் சரமாரியாகப் பாய்ந்தது.*

*அஸ்ராஃபி இவானிச்?*

*நான் உற்றுப் பார்த்தேன். இன்னும் அவன் ஏதோ சொல்ல விரும்புவதும் எழுந்திருக்க முயற்சிப்பதும் தெரிந்தது. அவன் இதழ்கள் அசைந்தன. அவன் சிவந்துபோய் என்னைப் பார்த்தான். சடுதியாக அவன் வெளிறி வெளிறிப் போவதைப் பார்த்தேன். ஒரு கணத்தில் தலை பின் சரிய விழுந்தான். ஒருமுறை மூச்சு எடுத்தான். அத்துடன் அவன் தன் ஆத்மாவை ஆண்டவனிடம் அடைக்கலம் கொடுத்துவிட்டான்.*

‘Thief’ - Fyodor Dostoevsky

# ஒரு கலைப்படைப்பு – ஓர் அன்பளிப்பின் கதை

## அன்ரன் செக்கோவ்

*டொக்ரர் கொசெல்கோஃவின் நோயாளரைப் பார்க்கும் அறைக்குள் அலெக்சாண்டர் ஸ்மிர் ணோஃவ் கையில் பத்திரிகையால் கவனமாகச் சுற்றப்பட்ட ஒரு பொருளுடன் நுழைந்தான். அவனு டைய வாலிப முகத்தில் தேவதையின் அழகிய புன் முறுவல் தவழ்ந்தது. தாய்க்கு ஒரே பிள்ளை.*

*“அருமையான என் இளைஞனே! எப்படிச் சுகம்? என்ன நல்ல புதினம் கொண்டுவந்திருக்கிறாய்?” என்றார் டொக்ரர்.*

*பரபரப்பாயும் குழம்பிப்போயும் இருந்த இளைஞன் பதில் கூறினான்: “டொக்ரரே, என் தாயார் உங்க ளுக்குத் தன் நல்லாசிகளை அனுப்பி உள்ளார் – உங்களுக்குத் தெரியும் நான் அவரின் ஒரே மகன் – என் உயிரைக் காப்பாற்றி உள்ளீர்கள். அது உங்கள் திறமை. உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று எங்களுக்குத் தெரியவில்லை.”*

*“அருமையான பையனே! வேறொன்றும் சொல் லாதே.” மகிழ்ச்சியால் ஒளி பெற்று டொக்ரர் கூறினார். “நான் என் கடமையை மட்டும்தான் செய்தேன். என்னைப் போல்தான் வேறெவரும் செய்திருப் பார்கள்.”*

*“என் தாய்க்கு நான்தான் ஒரே மகன். நாங்கள் ஏழைகள். உங்கள் உழைப்புக்குத் தகுந்த அளவு எங்க ளால் எதையும் தர இயலாது. அதை நான் ஆழமாக உணர்கிறேன். அதேவேளை என் தாயார் – நான்தான் அவரது ஒரே பிள்ளை, டொக்ரர் – மிகவும் தாழ்மை யாக எங்கள் நன்றிக்கு அடையாளமாக இந்தச் சின்னஞ் சிறிய சிலையை – அவர் இந்தச் சிலையை மிகவும் உயர்வாக மதிப்பவர் – ஏற்றுக்கொள்ளுமாறு*

*வேண்டுகிறார். இது ஒரு வெண்கல தொல்பொருள். அரியதொரு கலைப் படைப்பு.”*

*“என் நல்ல நண்பனே!” டொக்ரர் ஆரம்பித்தார்.*

*“இல்லை டொக்ரரே! நீங்கள் இதை மறுக்கக்கூடாது,” அலெக் சாண்டர் கூறிக்கொண்டே பார்சலை அவிழ்த்தான். “மறுத்தால் என்னையும் என் தாயையும் ஆழமாகப் புண்படுத்துவீர்கள். இச்சிலை சின்னஞ் சிறிய அழகு. ஓர் அரிய பொருள். இதை நாங்கள் எங்கள் தந்தையாரின் நினைவாக வைத்திருந்தோம். அவர் அரிய பொருட்களை வாங்கி விற்பவர். நானும் என் தாயாரும் அவர் இறந்த பின் அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துகிறோம்.”*

*இறுதியாக அந்த வாலிபன் அன்பளிப்புப் பொருளைச் சுற்றி இருந்த பத்திரிகையில் இருந்து அதைக் கழற்றி எடுத்து பயபக்தி யுடன் பவித்திரமாக டொக்ரரின் மேசையில் வைத்தான். அந்தச் சிலை ஓரளவே உயரமான அழகிய மெழுகுவர்த்திக் கொத்து. வெண்கலத் தொல்பொருள். அத்துடன் கலைத்துவமான வேலைத் திறன். ஓரளவே ஆடை அணிந்த இரு பெண் உருவங்கள். அவற்றில் ஒருவகைக் குறும்புத்தனம் தெரிந்தது. அதை வர்ணிக்க வேண்டிய துணிவோ இயல்பான உளப்பாங்கோ என்னிடம் இல்லை.*

*அந்த உருவங்கள், தூண்டி இழுக்கும் கவர்ச்சியான புன்சிரிப்பை உதிர்த்தன. அவற்றை மெழுகுவர்த்திப் பிடி இறுக்கிப் பிடித்திருக்கா விட்டால் நிலத்தில் பாய்ந்து விழுந்து கட்டுப்பாடில்லாமல் குதியாட் டம் போடத் தயார்போல இருந்தன.*

*டொக்ரர் தனக்குக் கிடைத்த அன்பளிப்புப் பொருளைச் சில கணங்கள் அமைதியாகப் பார்த்தார். பின் தலையைச் சொறிந் தார். திட சித்தமில்லாது இருமினார்.*

*“நிச்சயமாக இது அழகான பொருள்.” கடைசியாக அவர் சொன்னார். “ஆனால் உனக்குத் தெரியும் – நான் எதைச் சொல்ல? ஏன் உனக்குத் தெரியும். இது அப்படியான பொருள் இல்லை. இது அரை நிர்வாணம். இது ஒழுக்க வரம்புக்கு அப்பாற்பட்டது. இது பிசாசு.”*

*“ஏ. . . ஏன்?”*

*“இப்போது இதைப் போன்ற ஒன்றை என் மேசையில் வைக்க முடியுமா? என் வீட்டை இது பாழாக்கி விடும்.”*

*“டொக்ரர். நீங்கள் என்னை ஆச்சரியத்துக்கு உள்ளாக்குகிறீர்கள்” என்றான்.*

*அலெக்சாண்டர், புண்பட்ட தொனியில், “கலையைப் பற்றிய விசித்திரமான பார்வைகள்! இது ஒரு கலைப் படைப்பு. இதைப் பாருங்கள். என்ன அழகு. என்ன வேலைத்திறன். என்ன கலை. இதைப் பார்ப்பதாலேயே ஆன்மா மகிழ்ச்சியால் நிரம்பிவிடும்.*

கண்களில் கண்ணீரைக் கொணர்ந்துவிடும். அதன் இயக்கத்தை, சூழலை, வெளிப்பாட்டைக் கவனியுங்கள்."

"என் பையனே! அதை முழுவதாக ரசிக்கிறேன்." வைத்தியர் அவனை இடைமறித்தார். ஆனால் உனக்குத் தெரியும். நான் ஒரு குடும்பகாரன். எனக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள். மாமியார் இருக்கிறார். பெண்கள் இங்கு வருவார்கள்."

"உண்மை. சராசரி மனிதர்களுக்கு இது வித்தியாசமான வெளிச் சத்தில்தான் தெரியும். நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். கும்பலில் இருந்து வெளிக்கிடுங்கள். நீங்கள் மறுத்தால் எனதும் என் தாயாரினதும் உணர்ச்சிகளைப் புண்படுத்துவீர்கள். நான் அவரின் ஒரே மகன். நீங்கள் என் உயிரைக் காப்பாற்றினீர்கள். அதற்காக நாங்கள் மிகவும் அருமையாகப் பேணும் ஒன்றை உங்களை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறோம். இந்தச் சிலைக்குத் துணையாக இணை கிடைக்கவில்லையே. அதுதான் எங்களுக்கு வருத்தம்."

"அருமையானவனே! நன்றி. உன் தாயாருக்கும் நன்றி. என்னால் உன்னுடன் வாதாட முடியவில்லை. ஆனால் எனக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள், பெண்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் யோசித்திருக்க வேண்டும். ஆனால் வாதங்களை நீர் கவனிக்க மாட்டீர் என்பது எனக்குத் தெரியும்."

"வாதிப்பதில் பயனில்லை. டொக்ரர்" என்றான் நன்றியுள்ள நோயாளி. தன் அன்பளிப்புப் பொருளை ஏற்றுக் கொள்கிறார் என்பதை அறிந்த சந்தோசம். "இந்த யப்பானியக் குவளைக்குப் பக்கத்தில் இந்த இடத்தில் வையுங்கள். என்ன பரிதாபம்! இதற்கொரு சோடி எனக்குக் கிடைக்கவில்லையே!"

வந்தவன் போனவுடன் வேண்டாத அந்த அன்பளிப்புப் பொருளை நினைத்துக்கொண்டார் டொக்ரர். தலையைச் சொறிந்தார். சிந்தித்தார்.

சந்தேகம் இல்லாமல் இது ஓர் எழில் நலமிக்க பொருள் தான். இதைத் தெருவில் வீசுவது பரிதாபம். ஆனால் இங்கே வைப்பதும் இயலாத காரியம். என்ன இக்கட்டான நிலை இது. யாரிடம் இதைக் கொடுப்பது? இதை எப்படி அகற்றுவது?

கடைசியாக அவன் பள்ளித் தோழன் உக்கோஃவ் நினைவுக்கு வந்தான். அவன் வளர்ந்து வரும் சட்டத்தரணி. இவரின் சில்லறை வழக்குகளில் அண்மையில் வெற்றி ஈட்டிக் கொடுத்தவன்.

"நல்லது" என்றார் டொக்ரர். நண்பன் என்ற முறையில் என்னிடம் கூலி வாங்க மறுத்துவிட்டான். அவனுக்கு ஏதாவது அன்பளிப்புச் செய்வது நியாயமானது. அதைவிட அவன் தனிக்கட்டை. கேளிக்கைப் பிரியன்.

*காலத்தை வீணாக்காமல் சிலையை எடுத்துக்கொண்டு உக்கோஃவிடம் சென்றார், டொக்ரர்.*

*"அங்கே பார் என் பழைய நண்பனை!" என்று சட்டத் தரணியைப் பார்த்துச் சொன்னார், அவரின் நெருங்கிய நண்பர் சட்டத்தரணி. அவன் தோழமையுடன் நெருங்கிப் பழகுபவன்.*

*"நீ எனக்குச் செய்த சின்னஞ் சிறிய சேவைக்கு நன்றி செய்ய வந்திருக்கிறேன். நீ என்னிடம் கூலி வாங்க மறுத்துவிட்டாய். என் நன்றிக்கு அடையாளமாக இதை என்னிடம் வாங்க வேண்டும். இதைப் பார். எத்தனை அழகு!"*

*அதைப் பார்த்த சட்டத்தரணி பரவசமடைந்தார்.*

*"இது அனைத்தையும் வென்றுவிட்டது." குரலை ஓரளவு உயர்த்தியே கூறிவிட்டார் சட்டத்தரணி. "அனைத்தையும் மிஞ்சிய கற்பனைத்திறன் படைத்த மேதைமை. இந்தச் சின்னஞ் சிறிய இரத்தினம் உனக்கு எப்படிக் கிடைத்தது?"*

*தன் மகிழ்ச்சியைத் தெரிவித்த பின் தன் நண்பனைப் பார்த்துப் பரபரப்புடன் சொன்னார் சட்டத்தரணி: "உனக்குத் தெரியும். இதை இங்கு வைக்கக்கூடாது என்று. என்னால் இதை ஏற்றுக் கொள்ள முடியாது."*

*"ஏன்?" டொக்ரர் மூச்சுத் திணறினார்.*

*"உனக்குத் தெரியும். என் தாயார் இங்கு வருவார். என் வாடிக்கையாளரும் இங்கு வருவார்கள். ஏன் என் வேலைக்காரர் களின் முகத்தைக் கூட நான் துணிந்து பார்க்க முடியாது. இதைக் கொண்டுபோய்விடு."*

*"முடியவே முடியாது! இதை நீ மறுக்கக் கூடாது." நம்பிக்கை அற்ற சக்தியுடன் டொக்ரர் விளித்தார். "இந்தப் படைப்பாற்றலைப் பார்! வெளிப்பாட்டுத் திறனைப் பார்! எந்த மறுப்பையும் நான் ஏற்க மாட்டேன். அது என்னை அவமதித்ததாகவே உணர்வேன்."*

*இதைச் சொல்லி விட்டு சட்டத்தரணியின் வீட்டை விட்டு வைத்தியர் விரைந்து சென்று விட்டார்.*

*"பெரும் பிரச்சினை தரும் பொருள்." துயரத்துடன் சட்டத்தரணி முணுமுணுத்தார். சந்தோசத்துடன் தன் கைகளை உரசிக் கொண்டே அப்பாடா என்ற வெளிப்பாட்டுடன் டொக்ரர் தன் வீடு சென்றார்.*

*சட்டத்தரணி தனக்குக் கிடைத்த அன்பளிப்பை நெடுநேரம் கூர்ந்து கவனித்தார். அதை என்ன செய்யலாம் என்று யோசித்தார்.*

*இது உண்மையில் சுவையானது. இதைத் தெருவில் வீசுவது ஒரு கலை அழிப்பு. ஆனால் என்னால் இதை இங்கு வைத்திருக்க முடியாது. என்னால் செய்யக் கூடியது ஒன்றே ஒன்றுதான்.*

இதை எவருக்காவது கொடுத்து விடுவதுதான். ஆனால் யாருக்குக் கொடுப்பது?

"என்னிடம் இருக்கிறது அது" என்று ஓரளவு உரத்துக் கத்தியே விட்டார். அதே பொருள். எத்தனை பொருத்தம். அந்த ஹாஸ்ய நடிகன் சாஷ்கனிடம் இப்போதே கொண்டுபோவேன். அந்த றாஸ்கல் இந்தப் பொருட்களில் ஒரு ரசிகன். இன்று இரவு தான் அவனுடைய வெள்ளி விழா.

அன்று மாலையே அந்தச் சிலையைக் கவனமாகச் சுற்றி, சாஷ் கனின் உடுப்பறைக்கு, ஓர் ஏவல் பையனிடம் கொடுத்து அனுப்பி விட்டார். அன்று மாலை முழுதுமே அந்தப் பரிசுப் பொருளைப் பார்ப்பதற்கு பல ஆண்கள் அவன் அறைக்குப் படை எடுத்துக் கொண்டிருந்தார்கள். மகிழ்ச்சி ஆரவாரம், பல குதிரைகள் ஒரே நேரத்தில் கனைப்பதுபோல, அவன் அறையில் இருந்து சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. யாராவது நடிகைகள் அந்த அறைக் கதவை அண்மித்து அதைத் தட்டினால், சாஷ்கினின் கரடுமுரடான குரல்தான் பதிலாகக் கேட்கும்: என் அன்புக்குரியவளே! நீ இங்கு வர முடியாது. நான் இன்னும் ஒழுங்காக உடுத்தி முடியவில்லை.

விழா முடிந்த பிறகு தன் தோள்களை உலுக்கிக்கொண்டு சொன்னான்: இந்த அவமானமான பொருளை நான் என்ன செய்வது? என் வீட்டுச் சொந்தக்காரி இதை இங்கே வைத்திருப் பதைச் சகிக்க மாட்டாள். இங்கே பல நடிகைகள் என்னைப் பார்க்க வருவார்கள். இது ஒரு புகைப்படம் அல்ல. லாச்சியில் வைத்து மறைப்பதற்கு. ஹாஸ்ய நடிகனின் சிகை அலங்காரத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்த சிகை அலங்காரிப்பவன் அதை அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். "அதை ஏன் விற்கக்கூடாது?" அவன் அந்த நடிகனிடம் கேட்டான். "என் பக்கத்து வீட்டு முதியவள் இதைப் போன்ற பொருட்களை வாங்கி விற்பவள். அவள் இதற்கு நல்ல விலை தருவாள். அவளை இந்த நகரத்தவர் அனைவரும் அறிவார்கள். அவள் பெயர் ஸ்மிர்ணோஃவ்." சாஷ்கின் அதற்கு இணங்கினான்.

இரண்டு நாட்களின் பின் டொக்ரர் கொசல்கோஃவ் சுக்கானில் புகைபிடித்துக்கொண்டு அதை அனுபவித்துக்கொண்டு வைத்திய விசயங்களைச் சிந்தித்துக்கொண்டு தன் படிப்பறையில் அமைதியாக அமர்ந்திருந்தார். அப்போது சடுதியாக அவருடைய அறைக் கதவு திறந்தது. அலெக்சாண்டர் ஸ்மிர்ணோஃவ் அவர் பார்வை படும்படி நின்றான். அவனுடைய முகம் மகிழ்ச்சியால் ஒளிர்ந்தது. அவனும் ஓரளவு மினுங்கினான். அவன் உடம்பும் திருப்தியால் மூச்சு விட்டுக்கொண்டிருந்தது.

அவன் கையில் பத்திரிகையால் சுற்றப்பட்ட ஒரு பொருள்.

"டொக்ரர்," மூச்சு விடாமல் ஆரம்பித்தான். "என் மகிழ்ச்சியை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? எத்தனை அதிஷ்ரம்!

உங்களின் அந்தச் சிலைக்குச் சோடியாக ஒரு துணை என் தாயாருக்குக் கிடைத்துவிட்டது. என் தாய்க்கு இதில் பரம சந்தோசம். நான்தான் அவருக்கு ஒரே பிள்ளை. என்னை நீங்கள் காப்பாற்றினீர்கள்.”

மகிழ்ச்சியால் நடுங்கிக்கொண்டும் அதிக நன்றி உணர்ச்சியுடனும் டொக்ரருக்கு முன் அந்தச் சிலையை வைத்தான் இளம் ஸ்மிர்ணோவ்.

ஏதோ சொல்வதற்கு தன் வாயைத் திறந்தார் வைத்தியர். ஆனால் பேசும் சக்தி அவரைக் கைவிட்டுவிட்டது. அவர் ஒன்றுமே சொல்லவில்லை.

# எவ்லின்

ஜேம்ஸ் ஜொய்ஸ்

*வீதியை மாலை ஆக்கிரமிப்பதை யன்னலில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவளின் தலை ஜன்னல் திரைகளில் சாய்ந்துகொண்டிருந்தது. அவளின் மூக்குத் துவாரங்களில் தூசி படிந்த கடினமான திரைச் சீலை யின் மணம் படிந்திருந்தது. அவள் களைத்துப்போயிருந் தாள்.*

*மிகச் சிலரே அவ்வழியாய் போனார்கள். கடைசி வீட்டின் மனிதனும் தன் வீடு நோக்கிப் போய்க்கொண் டிருந்தான். அவனுடைய காலடிகள் கொங்கிறீற் நடை பாதையில் க்ளக் க்ளக்கென்று சத்தம் இடுவது அவ ளுக்குக் கேட்டது. புதிதாகக் கட்டிய சிவத்த வீடுகளின் முன்னாலுள்ள நிலக்கரிச் சாம்பர் வழியில் காலடிகள் நொறுங்குவது கேட்டது. முன்னொரு காலத்தில் அங்கே ஒரு வயல்வெளி இருந்தது. அங்கே ஒவ்வொரு மாலையும் மற்றவர்களின் பிள்ளைகளுடன் விளையாடு வது அவள் வழக்கம். பிறகு பெல்ஃபாஸ்ரில் இருந்து ஒருவன் அவ்வயலை வாங்கி அதில் வீடுகள் கட்டி னான். அவர்களுடைய சிறிய பிறவுண் வீடுகளைப் போலன்றி அவை பிரகாசிக்கும் கூரைகள் போட்ட ஒளி மிக்க கல்வீடுகள். வீதியிலுள்ள பிள்ளைகள் அவ்வயல்வெளியில் ஒன்றாக விளையாடுவது வழக்கம். டெவின்கள், வோற்றர்கள், டன்கள், சிறிய நொண்டிப் பிள்ளை கியோ எல்லோரும். இருந்தும் ஏணெஸ்ற் மட்டும் விளையாடுவதில்லை. அவன் பெரிதாக வளர்ந்துவிட்டவன். அவளுடைய தகப்பன் அவரு டைய பிளாக்தோண் தடியால் அவர்களை வயல்வெளி யில் இருந்து கலைப்பது வழக்கம். வழக்கமாக சிறியவன் கியோதான் தகப்பன் வருகிறாரா என்று பார்த்துச் சொல்லுபவன். அப்படி இருந்தும் அந்தக் காலத்தில் அவர்கள் சந்தோசமாகவே இருந்தார்கள் என்றே*

நினைத்தாள். அவளுடைய தந்தை அப்போது அவ்வளவு மோசமாக இல்லை. அதைவிட, அப்போது அவளின் தாயாரும் அப்போது உயிருடன் இருந்தாள். அது நீண்ட காலத்துக்கு முன். அவளுடைய சகோதரர்களும், சகோதரிகளும் வளர்ந்து பெரியவர்களாகிவிட்டனர். தாயார் இறந்துவிட்டார். ரிஷ்ஷி டன்னும் இறந்துவிட்டார். வோற்றர்கள் இங்கிலண்டுக்குத் திரும்பிப் போய்விட்டனர். எல்லாமே மாறிவிட்டன. இப்போது அவளும் மற்றவர்களைப் போல வீட்டை விட்டுப் போகப்போகின்றாள்.

வீடு! அறையைச் சுற்றி நோட்டம்விட்டாள். பல வருசங்களாக ஒவ்வொரு கிழமையும் தூசி தட்டிய பழக்கமான பொருட்களை எல்லாம் திரும்பவும் பார்த்தாள். அந்தத் தூசி எங்கிருந்துதான் வந்ததோ என்ற வியப்புடன் அப்படிப் பார்த்தாள். பழக்கமான, அவள் விட்டுப் பிரிவாளோ என்று கனவிலும் நினைத்திருக்காத அந்தப் பொருட்களை, இனிமேல் சிலவேளை அவளால் பார்க்க முடியாமலே போகலாம். இருந்தும் அங்கிருந்த அத்தனை ஆண்டுகளிலும் ஹார்மோனியத்துக்கு மேலே உள்ள சுவரில் புனித மார்க்றெற் மேரி அலகோக்குவின் படத்திற்குப் பக்கத்தில் தொங்குகிற மஞ்சளாகி மங்கிப்போகும் உருவப் படத்திலுள்ள அந்தக் குருவானவரின் பெயரை அவளுக்குத் தெரியாது. அவர் அவளுடைய தந்தையின் பாடசாலை நண்பராக இருந்திருக்கிறார். எவராவது விருந்தாளிக்கு அந்தப் படத்தைக் காட்டும்போது, அவருடைய சாதரணமான வார்த்தைகளில் “இப்போது அவன் மெல்போணில் இருக்கிறான்” என்று சொல்லிவிட்டு அப்பால் செல்வார்.

தன் வீட்டைக் காப்பாற்றுவதற்காக அவள் போவதற்குச் சம்மதித்துவிட்டாள். அது விவேகமானதா? கேள்வியின் ஒவ்வொரு பக்கத்தையும் நிறுத்துப் பார்க்க முயற்சித்தாள். எப்படி இருந்த போதிலும் தன் வீட்டில் தங்குமிடமும் உணவும் இருந்தன. அவளின் வாழ்க்கை முழுவதும் தெரிந்தவர்கள் அவளைச் சுற்றி இருந்தார்கள். வீட்டிலும் வியாபாரத்திலும் கஷ்ரப்பட்டு உழைக்க வேண்டி இருந்தது உண்மைதான். கடையில் என்ன சொல்வார்கள்? ஒருவனுடன் ஓடிப் போய் விட்டாள் என்றுதான் சொல்வார்கள். அவள் மடச்சி என்றும் சொல்வார்கள். அவளின் இடத்துக்கு விளம்பரம் செய்து எவரையாவது போட்டு நிரப்பியும் விடலாம். மிஸ் கவண் சந்தோசப்படுவாள். எப்போதுமே எதையாவது சொல்லி அவளை மிஞ்சிவிட வேண்டும் என்ற விருப்பம் அவளுக்கு. விசேசமாக ஆட்கள் யாராவது அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு இருக்கும்போது.

“மிஸ் ஹில், இவர்கள் காத்துக்கொண்டு நிற்கிறார்கள் என்று உனக்குத் தெரியவில்லையா?”

“தயவுசெய்து உற்சாகமாக இரு, மிஸ் ஹில்.”

கடையை விட்டுப் போவதற்காக அவள் கண்ணீர் விடப் போவதில்லை.

ஆனால் தொலைவிலே இருக்கும் தெரியாத நாட்டில் உள்ள அவளின் புதிய வீட்டில் அப்படி இருக்காது. அப்போது அவள் மணம் முடித்துவிடுவாள் – அவள் எவ்லின். அப்போது அவளை ஆட்கள் மரியாதையாக நடத்துவார்கள். அவள் தாயை நடத்தியது மாதிரி அவளை நடத்த மாட்டார்கள். இப்போது கூட அவள் பத்தொன்பது வயதுக்கு மேலாகியும் சிலவேளை தந்தையின் வன்முறைக்கு ஆளாகும் அபாயத்தில் இருப்பதாக உணர்ந்தாள். அதுதான் சிலவேளை நெஞ்சுப் படபடப்பைக் கொடுக்கிறது என்பது அவளுக்குத் தெரியும். அவர்கள் வளர்கையில் அவள் பெண்பிள்ளை ஆகையால் அவள் தகப்பன் ஹரியையும் ஏணெஸ்ரையும் அடித்தது மாதிரி அவளை அடிக்கப் போனதில்லை. ஆனால் பின்னாளில் அவளைப் பயமுறுத்த வெளிக்கிட்டார். அவளின் தாய்க்காக அவளை விட்டுவிடுவதாகச் சொல்வார். இப்போது அவளைப் பாதுகாக்க எவருமே இல்லை. ஏணெஸ்ற் இறந்துவிட்டான். ஹரி தேவாலயத்தில் அலங்கரிக்கும் வேலையில் இருக்கிறான். ஏறக்குறைய எல்லாக் காலத்திலும் நாட்டின் தெற்குப் பிரதேசங்களில் எங்காவது அவன் இருப்பான். அதைவிடச் சனிக்கிழமை இரவுகளில் சதா பணத்திற்காக நடக்கும் சச்சரவுகள் சொல்ல முடியாதளவு அவளைச் சோரவைக்க ஆரம்பித்துவிட்டன. அவள் தன் முழுச் சம்பளமான ஏழு சிலிங்கையும் தகப்பனிடம் கொடுத்து விடுவாள். ஹரியும் தன்னால் இயன்றதை அனுப்புவான். ஆனால் தகப்பனிட மிருந்து எந்தக் காசையுமே வாங்க முடியாது. அதுதான் பிரச்சினை. அவள் பணத்தை விரயமாக்கிவிடுவாள். அவளுக்கு மூளையில்லை. கஷ்ரப்பட்டு உழைத்த பணத்தைத் தெருவில் வீசுவதற்கு நான் தரமாட்டேன் என்று அவர் சொல்லுவார். பொதுவாக சனிக்கிழமை இரவுகளில் மிக மோசமாக நடந்துகொள்வார். இறுதியில் அவளுக்குக் காசு கொடுத்துவிட்டு ஞாயிற்றுக் கிழமை இரவுச் சாப்பாட்டை வாங்குவதற்கு ஏதாவது எண்ணம் இருக்கிறதா என்று கேட்பார். பிறகு சந்தையில் சாமான் வாங்குவதற்கு எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்வாள். கூட்டத்திற்குள்ளால் முழங்கையால் இடித்துக்கொண்டு போவாள். அவளுடைய கறுத்த தோல் பையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு சாமான் வாங்கிக்கொண்டு அப்பாரத்துடன் வீடு வந்து சேர நேரம் பிந்திவிடும். வீட்டைப் பார்ப்பதற்கு, அவளின் பொறுப்பில் விடப்பட்ட இரு சிறு பிள்ளைகளை ஒழுங்காகப் பள்ளிக்கூடம் அனுப்புவதற்கு, அவர்களுக்கு ஒழுங்காக உணவு கொடுப்பதற்கு, அவள் கஷ்ரப்பட வேண்டி இருந்தது. அது கஷ்ரமான வேலை – கஷ்ரமான வாழ்க்கை. ஆனால் அவள் இப்போது அதை விட்டுப் போகும்போது அந்த வாழ்க்கை பூரணமாக விரும்பத்தகாத வாழ்க்கை அல்ல என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அவள் ஃப்றாங்குடன் இன்னொரு வாழ்க்கையைத் தொடங்கி அது எப்படி இருக்கும் என்று அறியும் தறுவாயில் இருக்கிறாள்.

ஃப்றாங் மிக அன்பானவன். ஆண்மை உள்ளவன். திறந்த இதயம் உள்ளவன். இரவுப் படகில், அவள் அவனின் மனைவியாகப் போகப் போகிறாள். போணஸ் அயர்சில் அவளுக்காக ஒரு வீடு காத்திருக்கிறது. அங்கு வாழ வேண்டும். முதல் முறை அவனை அவள் சந்தித்தது அவளுக்கு எவ்வளவு நன்றாக நினைவிருக்கிறது. பிரதான வீதியிலுள்ள ஒரு வீட்டில் அவன் அப்போது தங்கி இருந்தான். அவ்வீட்டிற்கு அவள் போவது வழக்கம். அது சில கிழமைகளுக்கு முன்பு போலத் தெரிந்தது. அவன் கேற்றடியில் நின்றுகொண்டிருந்தான். அவனின் கூம்பிய தொப்பி அவன் தலையின் பின்புறமாக தள்ளப்பட்டுக் கிடந்தது. அவன் தலைமயிர் அவனின் வெண்கல நிற முகத்தில் சரிந்து கிடந்தது. அப்போது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டனர். கடைக்கு வெளியில் அவன் அவளை ஒவ்வொரு மாலையும் சந்திப்பது வழக்கம். பின் அவள் வீடுவரை கொண்டுவந்து விட்டுச் செல்வான். "பொகிமியன் பெண்" என்ற சினிமாப் படத்துக்கும் அழைத்துச் சென்றான். தியேட்டரில் பழக்கமற்ற ஓரிடத்தில் அவனுடன் அவள் இருந்தபோது அவள் பெருமிதம் அடைந்தாள். இசையில் அவளுக்குக் கொள்ளை ஆசை. கொஞ்சம் பாடவும் செய்தாள். அவர்கள் இருவரும் காதல் வசப்பட்டுள்ளனர் என்று அங்குள்ளவர்களுக்குத் தெரியும். மாலுமியைப் பற்றி பெதும்பை பாடிய பாட்டை அவன் பாடியபோது அவள் எப்போதுமே மகிழ்ச்சியால் குழம்பியதாக உணர்ந்தாள். அவன் அவளைக் கேலியாக "பொப்பின்ஸ்" என்று அழைப்பான். முதலில் அவளுக்கு ஒருத்தன் கிடைத்தது பரபரப்பான ஒரு விசயமாக இருந்தது. பின் அவனை விரும்ப ஆரம்பித்தாள். தொலைவிலே உள்ள நாடுகளைப் பற்றிய கதைகள் அவனிடம் இருந்தன. கனடாவுக்குப் போகும் அலன் லைன் என்ற கப்பலில் அவன் ஒரு தளப் பொடி யனாகவே ஒரு பவுண் மாசச் சம்பளத்திற்கே தன் வாழ்க்கையை ஆரம்பித்தான். தான் சென்ற கப்பல்களின் பெயர்களையும் அவளுக்குச் சொன்னான். மகெலன் நீரிணைக்கூடாக அவன் கப்பலில் பயணம் போயுள்ளான். பயங்கர பற்றகொணியன் பற்றிய கதைகளைச் சொல்லி இருக்கிறான். போணஸ் அயர்சில் அவர்களின் கால்களில் விழுந்து மன்றாடித் தன் பழைய நாட்டிற்கு விடுதலைக்கு மட்டும் வந்ததாகச் சொன்னான். அவளுடைய தந்தை இவர்களுடைய தொடர்பை அறிந்து அவனுக்கு எதுவும் சொல்ல வேண்டாம் என்று தடை செய்தார்.

"எனக்கு இந்த மாலுமிகளைத் தெரியும்" அவர் சொன்னார்.

ஒருநாள் அவர் ஃப்றாங்குடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டார். அதன் பிறகு அவள் காதலனை இரகசியமாகவே சந்தித்தாள்.

வீதியில் மாலை ஆழமாகியது. அவள் மடியில் கிடந்த கடிதங் களின் வெள்ளை நிறம் மங்கியது. ஒன்று ஹரிக்கு எழுதியது. அடுத்

*தது தகப்பனுக்கு எழுதியது. ஏணெஸ்ற் தான் அவளுக்குப் பிடித்த மானவன். ஆனால் ஹரியையும் நேசித்தாள். பின்னாளில் அவள் தந்தையும் வயது முதிர்ந்து வருகின்றார் என்பதை அவள் பார்த்திருக் கிறாள். அவரை அவள் பார்க்காவிட்டால் கவலைப்படுவாள். சில காலத்துக்கு முன்னர், ஒருநாள் சுகவீனமாகப் படுக்கையில் கிடந்தபோது அவர் அவளுக்கு ஆவிக் கதைகள் வாசித்துக் காட்டி னார். அடுப்பில் ரோஸ்ற் செய்து கொடுத்தார். இன்னுமொரு நாள் அவள் தாய் உயிருடன் இருக்கும்போது ஹவுத் மலைக்கு எல்லோ ரும் உல்லாசப் பயணம் போனார்கள். அப்போது பிள்ளைகளுக்குச் சிரிப்பை வரவழைப்பதற்காகத் தாயின் தலையில் போட்டிருந்த துண்டை எடுத்துப் போட்டு விளையாட்டுக் காட்டினார்.*

*அவளுடைய நேரம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் தலையை திரையில் சரித்துக்கொண்டு, தூசி படிந்த கரடு முரடான திரைச் சேலையை மணந்துகொண்டு அவள் ஜன்னலடியில் தொடர்ந்து குந்தியிருந்தாள். வீதியின் கீழ்ப் பகுதியில் யாரோ வாத்தியம் வாசிப்பது கேட்டது. அவளுக்கு அதன் உணர்ச்சி தெரியும். அவளுடைய தாய்க்கு அவள் கொடுத்த வாக்குறுதி அந்த இரவில் திரும்ப நினைவு வந்தது விசித்திரமாக இருந்தது. இயன்றளவு அந்த வீட்டை ஒற்றுமையாக வைத்திருப்பேன் என்று கொடுத்த வாக்குறுதி. தாயார் நோயால் கிடந்த கடைசி இரவு நினைவு இருக்கிறது. வீட்டுக் கூடத்தின் மறுபக்கத்தில் இருந்த இருண்ட மூடியிருந்த அறையில் இருந்தாள். வெளியே இத்தாலிய சோக இசை கேட்டது. ஆறு பென்ஸ் பணத்தைக் கொடுத்து அந்த வாத்தியக்காரனை அனுப்பினார்கள். நோயாளியின் அறைக்குத் தகப்பன் வீறாப்பாக நடந்து வந்து சொன்னது அவளுக்கு நினைவிருக்கிறது :*

*“துலைஞ்சு போன இத்தாலியர்! இங்க வந்து!”*

*அவளுடைய தாயாருடைய வாழ்க்கையின் பரிதாபமான காட்சியில் ஆழ்ந்து போயிருந்தாள். வாழ்க்கையின் பொருளற்ற தியாகங்கள் இறுதியான பைத்தியக்காரத்தனத்துக்கு அண்மித்துவிட் டன. அவள் இருப்பின் தளத்தையே அது வசியப்படுத்திவிட்டது. அவற்றைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தும் தாயாரின் குரலைக் கேட்டதுமே அவள் நடுங்கினாள்: டெவாரோன், செரவோன்! டெரவோன், செரவோன்!*

*சடுதியான, பயங்கரமான தூண்டும் ஒரு விசைச் சக்தியால் எழுந்தாள். தப்ப வேணும்! அவள் தப்ப வேணும்! ஃப்றாங் அவளைக் காப்பாற்றுவான். அவளுக்கு அவன் வாழ்வு கொடுப் பான். சிலவேளை அன்பும் அளிப்பான். அவள் வாழ விரும்பினாள். அவள் ஏன் மகிழ்ச்சியற்று இருக்க வேண்டும்? மகிழ்ச்சியாக இருக்க அவளுக்கு உரிமை இருக்கிறது. ஃப்றாங் அவளைத் தூக்கிக் கட்டிப் பிணைப்பான். அவளை அவன் காப்பாற்றுவான்.*

நோத் வோல் ஸ்ரேசனில் அலையாடும் கூட்டத்துள் நின்றாள். அவன் அவளின் கையைப் பற்றி இருந்தாள். அவன் திரும்பத் திரும்பப் பயணத்தைப் பற்றி ஏதோ பேசுவது அவளுக்குத் தெரியும். ஸ்ரேசன் முழுவதும் பிறவுண் பைகளுடன் படைவீரர் நிறைந்து போயிருந்தனர். கப்பற் துறைச் சுவருக்குப் பக்கத்தில் நிற்கும் வெளிச்சமூட்டப்பட்ட கொட்டகையின் அகன்ற கதவுகளூடாகப் படகின் கருமையான பெரும்பகுதியை ஒரு கணம் கண்டாள். அவள் எந்தப் பதிலுமே கூறவில்லை. அவள் கன்னங்கள் வெளிறிக் குளிர்ந்ததை உணர்ந்தாள். கடுந்துன்பத்திலும் சிக்கலிலும் தன்னை வழி நடத்தும்படியும் அவளின் கடமை எதுவெனக் காட்டும்படியும் கடவுளைப் பிரார்த்தித்தாள். மூடுபனியில் துயரமான ஊதுகுழலைப் படகு ஒலித்தது. அவள் போனால் நாளை ஃப்றாங்குடன் போணஸ் அயர்ஸை நோக்கிச் செல்லும் கடலில் செல்வாள். அவர்களுடைய பயணமும் பதிந்தாயிற்று. இவை எல்லாம் அவளுக்காக அவன் செய்த பிறகும் அவளால் போகாமல் நிற்க முடியுமா? அவளின் துன்பம் அவளின் உடலில் அருவருப்பை உண்டாக்கியது. உதடுகளை அமைதியான தீவிர பிரார்த்தனையில் அசைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் இதயத்தில் ஒரு மணி அடித்தது. அவளுடைய கையை அவன் பற்றி இருப்பதை அவள் உணர்ந்தாள்:

"வா!"

உலகத்திலுள்ள அனைத்துக் கடல்களும் அவளின் இருதயத்தில் விழுந்தெழுத்தன. அவற்றுள் அவளை அவன் இழுத்தான். அவன் அவளை மூழ்கடித்தான். இரண்டு கைகளாலும் இரும்புக் கம்பியை இறுக்கிப் பிடித்தாள்.

"வா!"

இல்லை! இல்லை! இல்லை! அது முடியாது. அவள் கைகள் இரும்பை வெறியுடன் பற்றிப் பிடித்தன. கடல்களின் நடுவே கடுந்துயரால் கீச்சிட்டாள்.

"எவ்லின். எவ்வி!"

தடை வேலிக்கப்பால் வேகமாகப் போய்க்கொண்டு அவளைப் பின் தொடர்ந்து வரச் சொல்லி அழைத்தான். அவனைப் போகச் சொல்லிச் சத்தம் போட்டாள். ஆனால் அவன் இன்னும் அழைத்துக்கொண்டே இருந்தான். அவளுடைய வெண்முகம் உயிர்ப்பற்று ஆதரவற்ற மிருகம் மாதிரி அவனைப் பார்த்தது. அவளுடைய கண்கள் காதலின் அடையாளத்தையோ அவனைத் தெரிந்த மாதிரியான அடையாளத்தையோ பிரியாவிடையின் அடையாளத்தையோ அவனுக்குக் காட்டவில்லை.

'Evelin' - James Joyce

# உறைபனியில் நடப்பவன்

ஃபாளி மொவாற்

நான் ஒரு ஓற்றெக். எனது மக்கள் ஆற்று மனிதரின் மக்கள். முன்னொரு காலத்தில் அவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர். நிலமும் அவர்களிடம் அன்பாக இருந்தது. ஆனால் இன்று எனது காலம். துந்தரா வெளிகளில் மான்கள் நிறைந்திருந்ததையும் எங்களுக்கு அவை வாழ்வளித்ததையும் நாங்கள் ஓரளவு மறந்து விட்டோம். பசி அடிக்கடி வருகிறது. மான்களும் அருமை. பெரும் வாவிகளுக்கு வடக்கே ஒருவரும் வாழ்வதில்லை. ஆனால் எனது தந்தை இளைஞனாக இருந்த காலத்தில் அவ்வாவிக்கரைகள் நீளம் மக்களின் கூடாரங்கள் நிறைந்திருந்தன. அவற்றை அடைந்து வெற்று நிலங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டேன்.

அவ்விடங்களில் வாழும் ஆவிகள் மட்டுந்தான் அக்காலத்தை நினைவில் வைத்துள்ளன. அக்காலத்தில் ஒரு குன்றின் மீது நின்று ஒரு மனிதன் கிழக்கேயும் மேற்கேயும் வடக்கேயும் தெற்கேயும் பார்த்தால் மான்கள் சென்று கொண்டிருப்பதைத் தான் பார்ப்பான். அவற்றின் நரைநிற முதுகுகளைப் பார்க்கலாம். ஆண் மான்களின் கொம்புகள் உரசுவதையும் அவற்றின் வயிறுகள் உருளுவதையும் கேட்கலாம்.

அந்தப் பெரிய மந்தைக் கூட்டங்கள் போய்விட்டன. அதேபோல மான்களை நம்பி வாழ்ந்த நாமும் அந்த ஆண்டு இளவேனிற் காலத்தில் எனது தந்தையார் செய்ததுபோல உறைபனியில் நடப்பவனைத்தான் பின்பற்ற வேண்டும்.

கடந்த பனிக் காலத்தில் வாவியில் உறைபனி கட்டியாகிக் கிடந்தது. அதன் பின் நாங்களும் பல நாட்கள் எங்கள் இக்ளூ வீடுகளுக்குள் அடைந்து கிடந்தோம். பிள்ளைகள் அமைதியாகி விட்டனர். விளையாட

வில்லை. சிலவேளை முதியவர்கள் கண்களை சுருக்கிக்கொண்டு குழிக்கதவுகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். வில்லோ மரச்சுள்ளிகளை எடுத்து எரிப்பதற்காக நான் வெளியில் சென்று எடுத்துவரும்போது உறைபனி இக்ளூக்களின் மேல் மலை போலக் குவிந்து கிடந்தது. இக்ளூக்களுக்குள் கடுங்குளிரும் இருட்டும். விளக்குகளை எரிப்பதற்குப் பாவிக்கும் மான் கொழுப்புக்களை நாங்கள் ஏற்கெனவே சாப்பிட்டு முடித்துவிட்டோம். இலையுதிர் காலத்தில் தெற்கே சென்ற மான்களைக் கொன்று கிடைத்த கொஞ்ச உணவு கூட முடிந்துவிட்டது. நாய்களும் பட்டினி கிடக்க ஆரம்பித்து விட்டன. நாங்களும் அவற்றை விட உயர்ந்த நிலையில் இல்லை.

ஏழு குடும்பங்கள் வாழும் அந்தக் குடிமனையில் எனக்கு அருகில் வாழும் பெலிகாரி ஒருநாள் என்னிடம் வந்தான். ஒரு விசர் நரி தன் உறைபனி வீட்டின் குகை வாசலுக்கு ஓடி வந்து அங்கே படுத்துக் கிடந்த அவனின் நாய்களில் மூன்றைக் கடித்துவிட்டதாம். மற்ற நாய்கள் அதைக் கடித்துக் கொல்வதற்கு முன் அந்த மூன்று நாய்களும் வாயில் நுரை தள்ளிக்கொண்டு இறந்துவிட்டனவாம். இது ஒரு துக்குறி. நரிகளுக்கு விசர் பிடித்தால் அவற்றின் தோல்கள் உதவாமல் போய்விடும். ஆதலால் மோசமான மழைக்காற்று எங்கள் பயணத்தைத் தடை செய்யாவிட்டாலும் நாங்கள் வைத்த பொறி களைப் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை.

நீண்ட காலத்துக்குப் பின் பனிப்புயல் காற்று நின்றது. காலநிலை அமைதியாகியது. எல்லா மனிதர்களும் பிழைத்துவிட்டார்கள். ஆனால் ஒருசில முதியவர்களால் தாங்கள் நித்திரை கொண்ட விளிம்புகளிலிருந்து அசைய முடியவில்லை. இளம் ஆண்களாகிய நாங்கள் மிஞ்சி இருந்த நாய்களை அழைத்துக்கொண்டு தட்டை யான தேசத்தில் புதைத்து வைத்த இறைச்சியைத் தேடிப் போனோம். நாங்கள் கொஞ்சத்தைத்தான் கண்டோம். கடுமையாக வீசிய உறைபனிக் காற்றால் உறைபனி குவிந்து நாங்கள் வைத்த அடையா ளங்கள் மறைந்துவிட்டன.

இக்ளூக்களின் அருகில் வீசிக் குவித்த உறைபனியின் அடியில் தோண்டி எடுத்த மீன் முள்ளுகளையும் தோல் துண்டுகளையும் கண்டுபிடித்து சொதி வைத்து பெண்களும் பிள்ளைகளும் பஞ் சத்தை ஓரளவு கலைத்திருந்தார்கள். தெற்கே இருந்த இடங்களி லுள்ள காடுகளிலிருந்து மான்களைச் சூடான காற்றும் நீண்ட பகல்களும் எங்கள் தேசத்துக்குக் கொண்டு சேர்க்கும் வரை அந்த வழிவகைகளால் உயிரைப் பிடித்துக்கொண்டிருந்தோம்.

பனிக்கட்டிகள் கரைந்துபோய்விடுகிற காலமுமாகிப் பல காலம் போய்விட்டது. இருந்தும் ஆறுகளிலும் வாவிகளிலும் உறைபனி அப்படியே உறைந்து கெட்டியாகிக் கிடந்தன. நாட்களும் திரும்பவும் குளிர ஆரம்பித்தன. பனிக்காலம் என்றுமே முடியப் போவதில் லையா என நினைத்துக்கொண்டோம். எங்களிடம் இருந்த

அனைத்தையுமே சாப்பிட்டுவிட்டோம். மான்கள் இன்னும் வரவே இல்லை.

ஒருநாள் ஆண்கள் எல்லோரும் ஒவ்லிக்குற்றுக்கின் உறைபனி வீட்டில் கூடினோம். அவனுடைய மனைவி குனி குந்தில் தன் குழந்தையை ஏந்தியபடி இருந்தாள். குழந்தை இறந்துவிட்டது. பல பெண்கள் இப்படியான துக்கத்துக்கு ஆளாவதற்கு நீண்ட காலம் செல்லப்போவதில்லை என்பது எங்களுக்குத் தெரியும். எனது மச்சான் ஒகொற்றோ தான் நினைத்ததை வார்த்தைகளில் சொன்னான் :

'மனிதர்கள் இந்த இடத்தை விட்டு இப்போது செல்ல வேண்டும். வெள்ளைக்காரன் வசிப்பதற்குத் தங்கி இருக்கும் தெற்குப் பக்கம் போகலாம். அவன் வைத்திருக்கும் உணவில் எங்களுக்கும் தரலாம்.'

வெள்ளைக்காரன் அப்போதுதான் எங்கள் நாட்டின் ஓரத்தில் வாழ வந்திருந்தான். எங்களிடம் நரிகளை வாங்குவதற்காக. அவர்கள் இருந்த இடம் அதிக தூரத்தில் இருந்தது. ஒகொற்றோ மட்டுந்தான் அவ்விடத்துக்கு முன்பு சென்றிருக்கிறான். எங்களிடம் நாய்கள் இல்லாதபடியால் எங்கள் தோள்களில்தான் எல்லாப் பொதிகளையும் சுமக்க வேண்டும். குழந்தைகளும் முதியவர்களும் நாய் இழுக்கும் வண்டிகளில் போக வேண்டும். இப்போது அப்படிப் போக முடியாது. சிலர் வெள்ளைக்காரனின் இடத்தை அடைய முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஒவ்லிகுற்றிக்கிளதும் குளீயினதும் குழந்தை இறந்துவிட்டது. நாங்கள் போவதற்குத் தீர்மானித்து விட்டோம்.

சில தோல்களைக் கூடாரங்கள் அமைப்பதற்கும் படுக்கைக்கும் என்று பெண்கள் சுருட்டி வைத்தனர். பிள்ளைகள் தங்களால் இயன்றதைத் தூக்கி வந்தனர். ஆண்களாகிய நாங்கள் எங்கள் பொதிகளைத் தோளில் சுமந்தோம். ஆற்றின் அருகிருந்த எமது குடிமனையை விட்டுத் தெற்கு நோக்கி நடந்தோம்.

நாங்கள் நடக்க ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே சூரியன் சூடாகினான். ஐந்து நாட்கள் முழங்கால் வரையுள்ள கரைகின்ற உறைபனியில் நடந்தோம். எனது மனைவியின் தாயார் தான் வாழ்ந்த வருஷங்கள் எத்தனை என்பதை மறந்து விட்டவர். அவரும் எங்களுடன் வந்துகொண்டிருந்தார். ஒவ்வொரு நாள் இறுதியிலும் எங்கள் கூடாரங்களை அமைப்பதில் உதவி செய்தார். ஐந்தாம் நாள் இரவு அவர் எங்களுக்கு உதவ முன்வரவில்லை. பாறை ஒன்றுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு தனியாக இருந்தார். எனது மகளான இலுப்பாலீயைத் தவிர வேறெவருடனும் கதைக்கவில்லை. அவளை மட்டும்தான் தன்னிடம் அழைத்தார்.

அம்முதிய மாது தனது எலும்புக் கைகளை என் மகளின் தலையில் வைக்கும்போது தூர இருந்து பார்த்துக்கொண்டும்

கேட்டுக்கொண்டும் இருந்தேன். தன் பாட்டியிடம் இருந்து தான் கற்ற இரகசியமான அந்த ஆவிப் பாட்டை – அதன் மூலம் உதவி செய்யும் ஆவியை அழைக்கலாம் – மெதுவாக அந்தக் குழந்தைக்குப் பாடிக்கொண்டிருந்தார். தான் என்ன செய்யப் போகின்றேன் என்பதை அவர் மனம் திடப்படுத்திக்கொண்டதை அப்போது நான் அறிந்துகொண்டேன்.

அது அவளுடைய தெரிவு. நானோ என் மனைவியோ அதைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் எவ்வளவு துக்கப்படுகின் றோம் என்பதை அவருக்குச் சொல்லவும் முடியாது. அன்றிரவு அவர் எங்கள் குடிமனையை விட்டுப் போய்விட்டார். அவர் போவதை ஒருவருமே பார்க்கவில்லை. அவருடைய பெயரை எவருமே உச்சரிக்கவில்லை. புதிதாகப் பிறந்த ஒரு பிள்ளைக்கு அந்தப் பெயரையும் அதற்குரிய ஆவியையும் கொடுக்கும்வரை உறைபனியில் நடப்பவனைத் தேடிப் போன ஒருவரின் பெயரை எவரும் சொல்வதில்லை.

அடுத்த நாள் சிறுதடி என்னும் தேசத்தை அடைந்தோம். அது காட்டை அண்டி இருக்கிறது. அங்கே அதிக விறகு இருக்கிறது. அந்த நெருப்பிலாவது குறைந்தது எம்மைச் சூடாக்கிக்கொள்ளலாம். அன்று மாலை ஒகொற்றோவின் குடும்பம் நெருப்பின் அருகில் குந்தி இருந்து தண்ணீரைக் குடிப்பதற்காகப் பனிக்கட்டியை உருக்கிக்கொண்டிருப்பதைக் கண்டோம். அங்கு சாப்பிட உணவில் லாதபடியால் தனது மகள் விழுந்து எழும்பவில்லை. அந்த நிலையில் அங்கு தங்க வேண்டிவந்துவிட்டது என்று ஒகொற்றோ எனக்குக் கூறினான். எங்களுடன் மற்றவர்களும் வந்து சேர்ந்தனர். பெரியவர் களும் சரி சிறியவர்களும் சரி அதற்கு மேல் நடக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தது. வெள்ளைக்காரனின் இருப்பிடத்தி லிருந்து இரண்டோ மூன்றோ நாள் தொலைவில்தான் நாம் இருக்கிறோம் என்று ஒகொற்றோ நினைத்தான்.

இலுப்பாலியை என் முதுகில் அன்று முழுதும் சுமந்தபடியால் நான் களைத்துப்போயிருந்தேன். அதனால் என்னால் சிந்திக்க முடியவில்லை. நெருப்புக்குப் பக்கத்தில் படுத்துக் கண்களை மூடினேன். இலுப்பாலி என் பக்கத்தில் படுத்திருந்து எனது காதுக்குள் குசுகுசுத்தாள் : 'ஒரு வெள்ளை முயல் அந்தாத் தெரியுது. சின்ன மரத்துக்குப் பின்னால ஒழிஞ்சிருக்கு.'

பசியால் ஏற்பட்ட கனவு என்று நான் நினைத்தேன். அதனால் நான் என் கண்களைத் திறக்கவில்லை. ஆனால் அவள் திரும்பவும் குசுகுசுத்தாள்: 'அது பெரிசு. மொத்தம். நடந்து போன அவர் அங்கே இருக்கென்று சொன்னவர்.'

இம்முறை எனது கண்களைத் திறந்தேன். எழும்பி இருந்தேன். அவள் காட்டிய இடத்தைப் பார்த்தேன். குட்டையான ஸ்ப்ரூஸ்

மரத்தைத் தவிர நான் எதையும் காணவில்லை. இருந்தும் எனது பொதியிலிருந்த துவக்கை எடுத்துக்கொண்டு மரத்தடிக்கு நடந்தேன்.

உண்மையில் அது அங்கே நின்றது!

ஆனால் ஒரு முயல் இருபத்தைந்து மனிதருக்கு ஒருவாய் கூடக் காணாது. ஆகவே அதை என்ன செய்யலாம் என்று கவனமாக யோசிக்க வேண்டி இருந்தது. மூன்று பலசாலிகளான அலெக்காவ் ஒகொற்றோ நான் அதைச் சாப்பிட்டுப் பலத்தைப் பெற்றுக் கொண்டு வெள்ளைக்காரனின் இடத்துக்குப் போவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனது மனைவி குடிமனைக்குத் தூரத்திலே ஒரு நெருப்பை மூட்டினாள். இறைச்சிச் சமையலின் மணத்தை மற்றவர்கள் தாங்கத் தேவையில்லை என்பதற்காகவே அந்த ஏற்பாடு. அவள் முயலை அவித்தாள். நாங்கள் மூவரும் பங்குபோட்டு உண்டோம். குடல், எலும்பு, தோல், தலையைப் போட்டு பிள்ளைகளுக்கு சூப்புப் போடுவதற்கு விட்டோம்.

குடிமனையிலிருந்து தூரச் சென்று உறைந்த நீரோடையில் நடந்தோம். ஆதலால் மென்மையான உறைபனியில் இழுத்து இழுத்து நடக்கத் தேவை இருக்கவில்லை. எனது முழுச் சப்பாத்தின் தோல் மெல்லியது. அது கிழிந்து விட்டது விரல்கள் விரைவாக விறைத்துவிட்டன. அதற்குக் காரணம் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் கரையும் தண்ணீருக்கு மேலிருந்த மெல்லிய பொருக்குகளை உடைத்துக்கொண்டு நடக்க வேண்டி இருந்தது. எனது வயிறு சூடாக இருந்தபடியால் அதை நான் பொருட்படுத்தவில்லை.

இரண்டாம் நாள். இருட்டிக்கொண்டுவந்தது. ஸ்ப்ரூஸ் மரக் காட்டை வெட்டி அமைந்த இடம். அது ஒரு வாவியின் கரையோரம். அங்குதான் அந்த வெள்ளை மனிதன் தன் வீட்டைக் கட்டி இருந்தான். அவனின் நாய்களுக்கு எங்கள் அசுமாத்தம் கேட்டுவிட்டது. ஊளையிட்டன. நாங்கள் கிட்ட வந்தபோது தன் கதவைத் திறந்துகொண்டு காத்திருந்தான். அவன் பின்னால் ஒரு விளக்கு பிரகாசித்துக்கொண்டிருந்தது. நாங்கள் நின்றோம். நின்ற இடத்திலேயே நின்றோம். அவன் அந்நியன். அதுவரை ஒரு சில வெள்ளையர்களையே கண்டிருந்தோம். அவன் எங்களுடன் கதைத்தான். எங்கள் மொழியில் அல்ல. அதனால் நாங்கள் பதில் சொல்லவில்லை. திரும்பவும் கதைத்தான். மிக உரத்து. இருந்தும் நாங்கள் பதில் சொல்லவில்லை. அவன் வீட்டுக்குள் திரும்பிப் போனான்.

எங்களைச் சுற்றி இருளவும் குளிர் கூடியது. எங்களின் நனைந்த சப்பாத்துக்கள் கெட்டியாகி விறைத்தன. இலுப்பாலியை நினைத்தேன். ஏதோ செய்ய வேண்டும்போலத் தோன்றியது. ஆனால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.

நீண்ட நேரத்துக்குப் பிறகு கதவு திரும்பவும் திறந்தது. வெள்ளை யன் வெளியே வந்தான். தனது தாடியைத் தடவிக் கொண்டான். அவன் வீட்டினுள்ளிருந்து சூடான கொழுப்பின் மணம் வந்தது. அவன் கதவைச் சாத்திவிட்டு எங்களைத் தன் பின்னால் இன்னு மொரு சிறிய அறைக்கு வரும்படி அழைத்தான்.

அவன் கதவைத் திறக்க நாம் உள்ளே சென்றோம். ஒரு விளக்கைப் பற்றி ஒரு வளையில் கொளுவினான். சுவர்களின் உயரத்துக்குப் பெட்டிகள் அடுக்கி இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் நாங்கள் மேசைக்கு முன்னால் அட்டியாக அடுக்கி இருந்த பல மாப்பைகளையே உறுத்துப் பார்த்தோம். வெள்ளைக்காரன் எங்கள் தேவையை உணர்ந்து எங்களுக்கு உதவி செய்யப்போகிறான் என்று நம்பினோம். அதனால் நாங்கள் புன்முறுவல் செய்ய ஆரம்பித் தோம். நாங்கள் விளக்கின் கீழ் நின்று சுடரை அவதானித்தோம். அச்சுடர் வெள்ளைக்காரனின் தாடியில் ஒட்டியிருந்த குளிர்ந்த கொழுப்பின் குறுணிகளில் பட்டுப் பிரதிபலித்தன. எங்களுக்குள் இன்பப் பூரிப்பு வளருவதில் திளைத்தோம்.

அந்த வெள்ளைக்காரன் மேசையின் லாச்சி ஒன்றைத் திறந்து ஒரு கை நிறைந்த சிறிய தடிகளை எடுத்தான். அத்தடிகளைக் கொண்டுதான் பறவைகள், நரிகளைப் பிடிப்பவனுக்கு நரிகளின் மயிர்த்தோல்களுக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்பதை அளப்பது. அத்தடிகளைக் கையில் வைத்துக்கொண்டு தனது மொழியில் ஏதோ கடுமையாகச் சொன்னான். நாங்கள் பதில் சொல்லாததைக் கண்டு அறைச்சுவரடிக்குச் சென்றான். அங்கே இருந்த நரித்தோலை எடுத்து எங்கள் முன் வைத்தான். பின் நாங்கள் முதுகில் போட்டிருந்த பைகளைக் காட்டினான்.

அப்போது எங்களிடமிருந்து மகிழ்ச்சி அகன்றுவிட்டது. எங்களி டம் நரித்தோல் இல்லை என்று நான் சமிக்ஞை மூலம் காட்டினேன். அலெக்காவும் தன் பைகளைத் திறந்து அவை வெற்றுப் பைகள் என்பதைக் காட்டினான். வெள்ளைக்காரனின் கண்கள் வித்தியாச மான பச்சை நிறமுடையவை. அவற்றை என்னால் பார்க்க முடிய வில்லை. அதற்குப் பதிலாக அவனுடைய நெற்றியைப் பார்த்தேன். ஏதாவது நடக்கும்வரை காத்திருக்கும்போது மெதுவாகக் கோபத் தால் அவன் கண்கள் சிவந்தன. கையிலிருந்த தடிகளை லாச்சிக்குள் போட்டுவிட்டு எங்களைப் பார்த்துச் சத்தம் போட்டான்.

நாங்கள் கோபத்துக்கு அதிகம் பயந்தவர்கள். கோபக்காரன் மடத்தனமான ஆபத்தான விசயங்களைச் செய்துவிடக்கூடியவன். அவன் முகத்தில் கோபத்தைக் கண்டவுடன் நான் கதவடிக்குப் பின்வாங்கிவிட்டேன். அந்த இடத்தை விட்டுப் போக விரும்பினேன். அலெக்காவ் என்னிலும் பார்க்கத் துணிந்தவன். அவன் நின்ற இடத்திலேயே நின்று குடிமனையில் மற்ற மனிதர்கள் எப்படிப் பட்டினி கிடக்கிறார்கள் என்பதை விளங்கப்படுத்த முயன்றான்.

தன்னுடைய உடம்பிலிருந்த மார்பு எலும்புகள் துருத்திக் கொண்டு வெளியே தெரிவதைக் காட்டுவதற்கு தனது சட்டையை மேலே தூக்கினான். எப்படி அவனது தோல் எலும்புகளை மூடுவதற்கு இறுக்கி இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பதைக் காட்டுவதற்கு அலெக்காவ் தனது முகத்தைத் தொட்டுக் காட்டினான்.

வெள்ளைக்காரன்தன் தோள்களைக் குலுக்கினான். ஒருவேளை அவனுக்கு இவை விளங்கவில்லை போலும். விளக்கிலிருந்த சுடரைக் குறைக்கத் தொடங்கினான். அவன் வீட்டுக்குள் போய் விடுவான் என்பது எங்களுக்குத் தெரிந்தது. பிறகு மக்கள் தேவைக்கு எதிராகக் கதவு அடைபட்டுவிடும். ஒகொற்றோ தனது பைக்குள்ளிருந்து இரண்டு பெட்டி ரவைகளை அவசரமாக எடுத்தான். அவைதான் அவனிடமிருந்த கடைசித் துப்பாக்கி ரவைகள். மான்கள் வரும்வரை பார்த்துக்கொண்டு அவற்றைப் பாதுகாத்து வைத்திருந்தான். இப்போ அவற்றை மேசை மேல் போட்டுவிட்டு மாவை விரல் களால் சுட்டிக் காட்டினான்.

வெள்ளைக்காரன் தலையை ஆட்டினான். அவன் இன்னும் கோபத்துடன் இருந்தான். விளக்கை எடுத்தான். கதவை நோக்கி நடக்கத் தொடங்கினான். அலெக்காவும் ஒகொற்றோவும் அவன் வழியில் குறுக்கே நில்லாமல் இடம் விட்டனர். ஆனால் எனக்குள் ஏதோ நடந்தது. நான் பயந்தபோதும் என்னை அவன் தாண்டிப் போவதை விடவில்லை. அவன் என்னிலேயே கண்களைப் பதித் திருந்தான். அதேவேளை தன் கையொன்றைப் பின்னால் கொண்டு சென்று சுவரில் மாட்டியிருந்த துவக்கில் கைவைத்தான். அவன் தன் கையைத் துவக்கில் வைத்திருந்தபடியால் நான் பயத்தினால் அவன் வழியிலிருந்து விலகி வழிவிட முடியாமல் நின்றேன்.

நாங்கள் எல்லோரும் நிலைகுத்தி அப்படியே நின்றோம். கடைசி யாக ஒரு சிறிய சாக்கு மாவை எடுத்து மேசைக்கு மேலாக ஒகொற் றோவின் காலடியில் எறிந்தான். பின் தனது கைத்துப்பாக்கியை எடுத்துப் பிடியினால் என்னைத் தள்ளிவிட்டு கதவைத் திறந்து எங்களைப் போகும்படி ஏவினான். நாங்கள் வெளியே சென்று அவன் கதவைப் பூட்டுவதைப் பார்த்துக் கொண்டு நின்றோம். அவன் தன் வீட்டுக்குள் போவதை நாங்கள் கவனித்தோம்.

ஒரு சிறிது நேரத்தின் பின்னர் அவன் ஜன்னல் வழியாகப் பார்ப்பதைப் பார்த்தோம். அவனிடம் இன்னும் கைத்துப்பாக்கி இருந்தது. அதன் பிறகும் அங்கு நிற்பதில் பயனில்லை என்று எங்களுக்குத் தெரிந்தது. இருட்டில் நாங்கள் நடந்தோம்.

குடிமனைக்கு வந்து சேர்ந்தபோது காலை புலர்ந்து கொண்டி ருந்தது. இன்னும் எழுந்து நடமாடக்கூடியவர்கள் ஒவ்லிக்ருக்கின் கூடாரத்துக்கு முன் கூடினார்கள். நாங்கள் சொல்ல வேண்டியதைக் கூறினோம். எங்களுக்குக் கிடைத்த அந்தச் சிறிய சாக்கு மாவைக் காட்டினோம். அதை ஒரு சிறிய குழந்தை இலேசாகத் தூக்கிவிடும்.

ஒவ்லிக்ருக் எங்களுக்கு எதிராகப் பேசினான். எங்களுக்குத் தேவையான உணவை நாங்கள் எடுக்கவில்லை என்று எங்களைக் குறை கூறினான். அடுத்த மாரிக் காலத்தில் திரும்பவும் நரிகள் அதிகம் கிடைக்கிற காலத்தில் அந்த வெள்ளைக்காரனின் கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கலாம் என்றான். ஆனால் வெள்ளைக்கார னிடம் இருந்து உணவை எடுக்க முயற்சித்திருந்தால் கொலைதான் விழுந்திருக்கும். ஒவ்லிக்ருக் அப்படிக் கதைத்ததுக்கு நியாயம் இருப் பது போலிருந்தது. அவனுடைய குழந்தையும் அவனை விட்டுப் போய்க் கொண்டிருந்தது. மற்றவர்கள் எதுவும் பேசாமல் தங்க ளுக்குக் கிடைத்த சிறிய பங்கு மாவை எடுத்துக்கொண்டு தங்கள் குடும்பங்களிடம் சென்றனர்.

எனது தந்தையின் பங்கைக் கொண்டு அவரது கூடாரத்துக்குச் சென்றேன். அவர் எங்களில் மிகச் சிறந்த வேட்டைக்காரனாக முன்பு இருந்தவர். போன வருசம்தான் மூன்றாவது மனைவி மூலம் ஒரு பிள்ளைக்குத் தகப்பனாகியவர். ஆனால் கடந்த பனிக்காலத்தில் அதிகம் வயசாளியாகிவிட்டார். அவருடைய கால்கள் பலம் குன்றி விட்டன. இப்போது அவரால் அதிகம் நடமாட முடியாது. அவருக்கு நடந்தவைகளைக் கூறினேன். அவருக்கும் என் சிறிய தாயாருக்கும் சிறிய குழந்தைக்குமான மாவைக் கொடுத்தேன். அவர் சிரித்துவிட்டு 'எதைச் செய்ய வேணும் எதைச் செய்யக் கூடாது என்று தெரிந்த மகன் இருக்கிறான். இரத்தம் சிந்தவில்லை என்று அவனுக்குச் சந்தோசம். காரியங்கள் இனிமேல் சிறப்படையலாம்' என்றார்.

அவர் சொன்னபடி நடக்கவில்லை. வெள்ளைக்காரன் இருந்த இடத்துக்குப் பயணம் செய்தோம். ஆனால் கிடைத்த பயனோ மிகக் குறைவு. இப்போ எங்களுடைய நிலத்துக்குத் திரும்பிப் போவதற்கு நாங்கள் மிகவும் தளர்ச்சியாக இருந்தோம். நாங்கள் வெள்ளைக் காரனிடமிருந்து திரும்பி வந்த இரண்டாம் நாள் உறைபனியில் நடப்பவன் அல்யுத், உக்ரிலோக் என்ற இரு பிள்ளைகளிடம் வந்தார். அங்கே அவர்களுக்காக ஒருவரும் துக்கம் கொண்டாடவில்லை. இறந்தவர்களுக்காகத் துக்கப்படுவதற்கு இருப்பவர்களிடம் துயரம் இருக்கவில்லை.

அதன்பிறகு தினமும் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினான். வசந்தம் வந்தது. ஆனால் மான்கள் இன்னும் திரும்பவில்லை. ஒரு நாள் எனது தந்தையைப் பார்த்துச் சுகம் விசாரிக்கச் சென்றேன். ஆனால் என்னால் அந்தச் சிறிய தூரத்துக்குக்கூட நடக்க முடிய வில்லை. அதனால் எனது மனைவி வாயைத் திறந்து கொண்டு மூச்செடுக்க முடியாமல் பிள்ளையை ஆட்டிக்கொண்டிருந்த கூடாரத்துக்கே திரும்பி நுழைந்துவிட்டேன். அவளுக்குப் பக்கத்தில் எனது மகள் கிழவியின் மெலிந்த வரண்ட குரலில் இடைக்கிடை விம்மி அழுதுகொண்டிருந்தாள். நானும் தட்டிக்குள் படுத்தேன். எல்லோருடனும் நாங்கள் காத்திருந்தோம்.

*யாரோ சத்தம் போடுவதைக் கேட்டு நான் விழித்தது அடுத்த நாளாகத்தான் இருக்க வேண்டும். சத்தம் திரும்பவும் கேட்டது. குரல் எனக்குப் பழக்கப்பட்டதாகவே இருந்தது. வார்த்தைகள் எனது இதயத்தை விரட்டின.*

இங்கே ஒரு மான்!

*எனது கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு காலைச் சூரிய ஒளியில் தவழ்ந்தேன். முதலில் என் கண் கூசியது. சில கணங்களுக்குப் பின் ஆண் மான் ஒன்று குடிமனையைப் பார்த்துக் கொண்டு தலையை நிமிர்த்திக்கொண்டு தள்ளி நிற்பதைக் கண்டேன்.*

*கைத்துப்பாக்கியை உயர்த்தினேன். கைகள் அதை வைத்திருக்க முடியாமல் நடுங்கின. பார்வை தெரியவில்லை. துப்பாக்கிக் குழாய் நீளம் மேலும் கீழும் மான் நழுவியது மாதிரி இருந்தது. இறுக்கிப் பிடித்துக்கொண்டு குறி வைத்துச் சுட்டேன். மான் முன்னங்கால்களில் துள்ளி மரங்களை நோக்கிப் பாய்ந்தது. திரும்பவும் திரும்பவும் ரவைகள் முடியும்வரை சுட்டேன். எல்லாச் சூடுகளும் உறைபனித் துகள்களைத்தான் சிறிது மேலெழுப்பிய தல்லாது வேடனுக்குக் குறியில் பட்டால் கேட்குமே தடார் சத்தம் அது கேட்கவில்லை.*

*மான் ஓடிவிட்டது... மரங்களுக்கிடையில் மறையப் போகும் வேளைதான் அது தடுமாறி விழுந்தது. எனது முழுப்பலத்துடன் அது எழும்பக்கூடாது என்று விரும்பினேன். மானின் ஆவி என் ஆவியுடன் திணறியது. இறுதியில் மான் ஒரு பக்கம் சரிந்து சாய்ந்தது. வெளியே சிலர் வந்து சுடுவது யார் என்று தங்கள் நலிந்த குரலில் கேட்டனர்.*

*'உங்கள் கத்திகளை எடுங்கள்' என்று என்னால் முடிந்த மட்டும் பலமாகக் கத்தினேன். 'கொழுத்த மானொன்றை ஒருவன் கொன்று விட்டான்.'*

*நடக்கப் பலமில்லாதவர்கள் கூட எனது வார்த்தைகளால் போதியளவு பலம் பெற்றனர். விழுந்து புரண்டு மானின் உடலை அண்மித்தவுடன் மக்கள் அழுது விம்மினர். முதலில் சென்றவர்கள் இலையான்கள் போல அதில் விழுந்து காயத்திலிருந்து வரும் இரத்தத்தை உறிஞ்சினர். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மற்றவர்களுக்கு இடம் விட்டனர். இரத்தம் குடித்தவர்கள் வயிற்றைக் கைகளால் பிடித்துக்கொண்டு வலியால் தேம்பினர்.*

*பெண்கள் தங்கள் வட்டக் கத்திகளால் மானை அரிந்து உள் உறுப்புக்களை வெளியில் எடுத்தனர். குடல்களில் ஒட்டிய வெள்ளைக் கொழுப்பின் சிறிய துண்டுகளைப் பிடுங்கினர். கால்களில் கீழ் மூட்டுக்களை ஆண்கள் வெட்டினர். எலும்புகளுக்குள் இருக்கும் கொழுப்பை எடுப்பதற்கு அவற்றை உடைத்தனர்.*

ஒரு கொஞ்ச நேரத்தில் மான் ஒரு குவியல் எலும்பும் ஆவி பறக்கிற இறைச்சியாகவும் சிவந்த உறைபனியாகவும் ஆகிவிட்டது.

அவ்விடம் சூரியனால் வெப்பம் அடைந்தது. நடக்க முடியாமல் கூடாரத்துக்குள் கிடந்தவர்களுக்குரிய இறைச்சியுடன் சிலர் திரும்பத் தொடங்கினர். எனது தந்தையின் கூடாரத்திலிருந்து ஒருவரும் வரவில்லை என்பது அப்போது தான் என் நினைவுக்கு வந்தது. முன்பக்க இறைச்சிப் பகுதி ஒன்றை இழுத்துக்கொண்டு அங்கு சென்றேன். கதவின் முன் தட்டி போடப்பட்டிருந்தது. அதைத் தள்ளிக்கொண்டு உள் நுழைந்தேன். எனது சிறிய தாயார் மயிரில்லாத தோலின் அடியில் படுத்திருந்தார். குழந்தையைத் தன் காய்ந்த முலைகளுடன் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அதிகம் மூச்சுவிடாவிட்டாலும் உயிருடன் இருந்தார்கள். எனது தகப்பனாரின் அசுமாத்தத்தைக் காணவில்லை.

ஒரு சிறிய இறைச்சித் துண்டை வெட்டி வாய்க்குள் வைத்துச் சப்பி மென்மையாக்கி என் சிறிய தாயாரின் வாய்க்குள் திணித்தேன். அதை விழுங்கும்வரை அவள் கழுத்தைத் தடவிவிட்டேன். பிறகு எனது ஒன்றுவிட்ட சிறிய தம்பியைத் தூக்கிக்கொண்டு அருகிருந்த ஒகொற்றோவின் வீட்டுக்குச் சென்றேன். ஒகொற்றோவின் மனைவி இரத்தத்தில் சூப்பு வைத்துத் தம்பிக்குக் கொடுத்தாள். திரும்பவும் என் தகப்பனாரின் இடத்துக்குச் சென்று இன்னும் கொஞ்சம் இறைச்சியைச் சப்பி சிறிய தாய்க்குக் கொடுத்தேன். நான் திரும்பிப் போகுமுன்பு தானாகவே சாப்பிடக்கூடியதாகிவிட்டாள். ஆனால் பேசுவதற்கு அவளுக்குத் தென்பு வரவில்லை. அதனால் என் தந்தை எங்கு போய்விட்டார் என்பது எனக்குத் தெரியவில்லை.

எனது இருப்பிடத்துக்குத் திரும்பி வந்தபோது எனது மனைவி மானின் நெஞ்சுப்பகுதியைப் பொரித்தும் நாக்கைக் கொதிக்க வைத்தும் வைத்திருந்தார். இலுப்பாலி மான் தோலால் போர்த்தப் பட்டுக் கிடந்தாள். அவளுடைய நிறைந்த வயிறு வலியால் அவஸ் தைப்படுவதைக் கேட்கும்போது எனக்குச் சந்தோஷமாக இருந்தது. அன்றிரவு முழுவதையும் சாப்பிடுவதிலேயே கழித்தோம். அடுத்த நாள் நரிகளுக்கோ காகங்களுக்கோ எதுவுமே மிஞ்சி இருக்கவில்லை. எலும்புகள் அதன் கொழுப்புக்காக நொறுக்கிக் கொதிக்கவைக்கப் பட்டன. மண்டை ஓட்டை உடைத்துத் துப்பரவாக்கிவிட்டனர். கால்கள் குளம்புகள் கூட சூப்பாக வைத்தாயிற்று. மானின் பலத்தை மக்களுக்குக் கொடுத்தாயிற்று. நாங்கள் எங்கள் தேசத்துக்குத் திரும்பத் தயாரானோம்.

அடுத்த நாள் நான் என் தந்தையாரின் கூடாரத்துக்குச் சென்ற போது எனது சிறிய தாயார் எழுந்து நிற்கக் கூடியவளாகி விட்டாள். அவளும் பிள்ளையும் என்னுடைய கூடாரத்துக்கு வந்து வசிக்கலாம் என்று கூறினேன். அத்துடன் 'ஒருவர் எல்லா இடத்திலும் சுற்றிப் பார்த்தபோதும் அவரின் தந்தையைக் காணவில்லையே' என்றேன்.

*‘ஈ ஈ ஈ...’ என்று பதிலளித்தாள்.*

*‘அவர் நீ கொண்டு வந்த மாவைச் சாப்பிடவில்லை. அதை எனக்கும் பிள்ளைக்கும் தந்துவிட்டு உறைபனியில் நடப்பவனைச் சந்திப்பதற்குப் போய்விட்டார்’ என்றாள்.*

*பிறகு நான் கேட்ட குரலைப் பற்றி ஒகொற்றோவுக்குக் கூறினேன். வேறெருவரும் அக்குரலைக் கேட்கவில்லை. அந்தக் குடிமனையிலிருந்த எவருக்கும் என்னைத் தவிர அந்தப் பகுதியில் ஒரு மான் இருந்தது தெரியாது. நானும் ஒகொற்றோவும் ஆற்றுப்பக்கம் சென்ற தந்தையின் காலடியைப் பின்பற்றி நடந்தோம். அது வடக்கே பனிக்கட்டி வழியே சென்றது, அவருடைய தடம் நீர்ச்சுனை குழி பறித்த வளைவில் மறைந்தது. ஆனால் அதன் அருகாமையில் நாங்கள் ஒரு மானின் தடத்தைக் கண்டோம். அந்தத் தடத்தைப் பின்பற்றிச் சென்றபோது அது குடிமனையைச் சுற்றி வந்து நான் மான் சுட்ட இடத்தில் நின்றது. நானோ ஒகொற்றோவோ ஒன்றும் பேசவில்லை. ஆனால் அந்தக் குரல் யாருடையது என்பது எங்கள் இருவருக்கும் தெரியும்.*

*இலையுதிர் காலத்தில் எனது மனைவி இன்னொரு குழந்தை பெறுவாள். அப்போது உறைபனியில் நடப்பவனைப் பார்க்கச் சென்றவனின் பெயர் ஆற்றின் மக்களால் நிச்சயம் பேசப்படும்.*

‘The Snow Walker’ - Farley Mowat

# அமெரிக்காவிலிருந்த மகன்

ஐசக் பாசவில் சிங்கர்

லென்ற்ஷ் கிராமம் மிகச் சிறியது. மணற் பாங்கான சந்தை இடம். அங்கு விவசாயிகள் ஒவ்வொரு கிழமையும் கூடுவார்கள். அந்த இடத்தைச் சுற்றி வைக்கோலால் வேய்ந்த அல்லது பச்சைப் பாசித் தட்டுக்களால் கூரை போட்ட சிறிய குடிசைகள் இருந்தன. புகைப் போக்கிகள் பானைகள் போலத் தெரிந்தன. குடிசைகளுக்கு இடையில் வயல்கள். அங்கே உரிமையாளர் மரக்கறி வளர்த்தார்கள். அல்லது தங்கள் ஆடுகளை மேயவிட்டார்கள்.

இந்தக் குடிசைகளில் ஆகச் சிறியதொன்றில் கிழவன் பேளாவும் அவன் மனைவி பேளாச்சியும் வசித்தனர். அவர்களுக்கு வயது எண்பதுக்கு மேல் இருக்கும். கிழவன் பேள் ரஷ்யாவிலுள்ள கிராமத்திலிருந்து கலைக்கப்பட்டு இப்போது போலந்தில் வசிக்கும் யூதர்களில் ஒருவன். லென்ற்ஷில் அவன் உரத்துப் பிராத்தனை செய்யும்போது அவன் விடும் பிழைகளை மற்றவர்கள் நையாண்டியாக இடித்துக் காட்டினர். அவன் “ற” வை அறுத்துறுத்துச் சொல்வான். அவன் குள்ளமானவன். பரந்த தோள்களை உடையவன். அவனுக்குச் சிறிய வெண்தாடி இருந்தது. கோடைக் காலத்திலும் பனிக்காலத்திலும் செம்மறித் தோல் தொப்பியையும் தடித்த பருத்தி ஆடையையும் உறுதியான சப்பாத்துக்களையும் அணிந்திருப்பான். மெதுவாகக் காலை அரைத்துக்கொண்டு நடப்பான். அவனிடம் ஓர் அரை ஏக்கர் நிலமும், ஒரு பசு மாடும், ஒரு ஆடும், சில கோழிகளும் இருந்தன.

அவர்களுக்கு சாமுவெல் என்றொரு மகன் இருந்தான். அவன் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவுக்குப் போய்விட்டான். அமெரிக்காவில் அவன் ஒரு கோடீஸ்வரனாகிவிட்டான் என்று லென்ற்ஷில்

பேசிக்கொள்வார்கள். ஒவ்வொரு மாசமும் லென்ற்ஷிலுள்ள தபால்காரன் ஒரு காசுக் கட்டளையும் கடிதமும் கொண்டுவந்து பேளிடம் கொடுப்பான். அந்தக் கடிதத்திலுள்ள பல வார்த்தைகள் ஆங்கிலத்தில் இருந்ததால் அந்தக் கடிதத்தை ஒருவராலும் வாசிக்க இயலவில்லை. சாமுவெல் எவ்வளவு பணம் அனுப்பினான் என்பதும் இரகசியமாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் மூன்று தடவை பேளும் அவன் மனைவியும் ஷக்ரோஷிக்கு நடந்து போய் காசுக் கட்டளைகளைக் காசாக மாற்றுவார்கள். ஆனால் அதைச் செலவழித்ததாகத் தெரியவில்லை. எதை வாங்குவது? தோட்டம், மாடு, ஆடு ஆகியவை அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்தன. அவற்றைவிட பேளாச்சி கோழிகளையும் முட்டைகளையும் விற்று அவற்றிலிருந்து வரும் காசில் தங்களுக்குத் தேவையான பாணைச் செய்வதற்குரிய மாவை வாங்குவாள்.

தன் மகன் அனுப்பிய காசை பேள் எங்கு வைத்திருக்கிறான் என்று எவருக்குமே அக்கறை இல்லை. லென்ற்ஷில் கள்வர்களும் இல்லை. அவர்களுடைய குடிசையில் ஓர் அறை மட்டும் தான் இருந்தது. அங்குதான் அவர்களுடைய சொத்துக்கள் அத்தனையும் இருந்தன. ஒரு மேசை, இறைச்சி வைக்கும் தட்டு, பால் உணவுகள் வைக்கும் தட்டு, இரண்டு கட்டில்கள், களி மண் அடுப்பு அத்தனையும் அங்குதான் இருந்தன. சிலவேளை கோழிகள் மர அடுக்கிலும், குளிராக இருந்தால் அடுப்புக்குப் பக்கத்தில் உள்ள கோழிக் கூண்டிலும் படுக்கும். காலநிலை பாதகமாக இருந்தால் ஆடுகளும் குடிசைக்குள்ளே இடம்பிடித்துவிடும். வளமுள்ள சில கிராமங்களில் மண்ணெண்ணெய் விளக்குகளை உபயோகிப்பார்கள். ஆனால் பேளாவும் மனைவியும் அப்படியான புதுப் பாணிக் கருவிகளில் நம்பிக்கை அற்றவர்கள். ஒரு சட்டி எண்ணெயில் ஒரு திரி போட்டு எரிப்பதில் என்ன பிழை? ஸப்பாத் – யூதரின் ஏழாம் நாள் ஓய்வுச் சனிக்கிழமை – நாட்களில் மட்டும் மூன்று கொழுப்பு மெழுகுதிரியைக் கடையில் வாங்குவாள் பேளாச்சி. கோடைக் காலத்தில் சூரியன் உதிக்கும்போது இருவரும் எழுந்து விடுவர். கோழிகள் படுக்கைக்குப் போகும்போது அவர்களும் படுக்கைக்குப் போய்விடுவர். நீண்ட பனிக்கால மாலை நேரங்களில் பேளாச்சி நெய்யும் சணல் துணி சுற்றுவாள். அவளின் பக்கத்தில் பேள் அமைதியாக இருந்து கொண்டிருப்பான். ஆறுதலை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களைப் போல.

மாலைப் பிரார்த்தனை முடிந்து கோயிலில் இருந்து வரும்போது சிலவேளைகளில் தன் மனைவிக்கு செய்திகள் கொண்டு வருவான் பேள். வோர்ஷோவில் ஷாரை முடிதுறக்கும்படி வேலை நிறுத்தம் செய்ய வற்புறுத்துகிறார்கள். டொக்ரர் ஹேர்ஷல் என்ற சமயக் கலகக்காரர் (ஷியனிசத்தை உருவாக்கியவர். 1806 – 1904 ல் வாழ்ந்தவர்) பலஸ்தீனத்தில் யூதர் மீளவும் குடி அமர வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளார். பேளாச்சி இவற்றைக் கேட்டு

விட்டு துண்டுபோட்ட தலையை ஆட்டினாள். அவளுடைய முகம் மஞ்சள் நிறத்தது. முட்டைக் கோஸ் இலையைப் போல அது சுருங்கிப்போயிருந்தது. அவளுடைய கண்களின் அடியில் நீல நிறத்தில் பைகள் வீங்கி இருந்தன. அவள் அரைச் செவிடு. பேளா அவளுக்குச் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் திருப்பிச் சொல்ல வேண்டும். அவள் சொல்லுவாள் : "பெரிய நகரங்களில் நடப்பவை அவை!"

லென்ற்ஷில் வழமையாக நடைபெறும் விசயங்களை விட வேறொன்றும் நடப்பதில்லை : ஒரு மாடு கன்று ஈன்றது. ஒரு இளம் தம்பதிகள் சுன்னத்து விருந்து நடத்தினார்கள். அல்லது பெண் குழந்தை பிறந்தது. அங்கு விருந்து நடைபெறவில்லை. இடைக்கிடை யாராவது இறந்தார்கள். லென்றிஷில் மயானம் இல்லை. ஷக்ரோ ஷிக்குத் தான் சவத்தைக் கொண்டுபோக வேண்டும். உண்மையில் லென்ற்ஷ் சில இளையவர்களையும் பல முதியவர்களையும் கொண்ட கிராமமாகிவிட்டது. இளையவர்கள் ஷக்ரோஷிம், நோவி டொவார், வோர்ஷோ, சிலவேளை ஐக்கிய அமெரிக்கா போன்ற இடங்களுக்குப் போய் விட்டார்கள். சாமுவெலினுடையதைப் போல அவர்களுடைய கடிதங்களும் வாசிக்க முடியாதவை. யிட்டி ஷும் அவர்கள் வாழும் நாட்டின் மொழியும் கலந்தவை. அவர்கள் தங்கள் புகைப்படங்களை அனுப்பினார்கள். அதில் ஆண்கள் உயர்தரமான தொப்பிகளும், பெண்கள் மேல்குடிப் பெண்களின் ஆடைகள்போலப் புதிய ஆடைகளும் அணிந்திருந்தனர்.

பேளாவுக்கும் பேளாச்சிக்கும் கூட அப்படியான படங்கள் வந்தன. ஆனால் அவர்களுடைய கண்கள் மங்கிக்கொண்டு வந்தன. இருவரும் கண்ணாடி அணிவதில்லை. அவர்களால் அப்படங் களைப் பார்க்க முடிவதில்லை. சாமுவெலின் ஆண் பிள்ளைகளுக் கும், பெண் பிள்ளைகளுக்கும் யூதப் பெயர்களை வைத்திருந்தார்கள். பேரப் பிள்ளைகளும் திருமணம் முடித்து அவர்களுக்கும் பிள்ளை கள் இருந்தனர். அவர்களுடைய பெயர்கள் மிக வித்தியாசமானவை. பேளாவாலும் பேளாச்சியாலும் அப்பெயர்களை நினைவில் வைத்திருக்க முடியாது. ஆனால் பெயர்களால் என்ன வித்தியாசம் வந்து விடப்போகிறது? அமெரிக்கா ஆகப் பெரும் தூரத்தில் சமுத்திரத்துக்கு அப்பால் உலகத்தின் விளிம்பில் இருக்கிறது. தால்முட் குரு ஒருவர் (மரபு ரீதியான யூத சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை அடக்கிய புராதன ராபன்ய நூல்களின் தொகுதி, தால்முட்) லென்றிஷிற்கு வந்தபோது சொன்னார் : அமெரிக்கர்கள் தலையைக் கீழாகவும் கால்களை மேலாகவும் வைத்துக்கொண்டு நடக்கிறார்கள். பேளாவும் பேளாச்சியும் இதைப் புரிந்துகொள்ள வில்லை. அது எப்படி முடியும்? குருவானவர் சொன்னபடியால் அது உண்மையாகத் தான் இருக்க வேண்டும். பேளாச்சி கொஞ்ச நேரம் யோசித்து விட்டுச் சொன்னாள் : "ஒருவன் நாளடைவில் எதையும் பழகிவிடுவான்."

அது அப்படியே இருந்தது. பலவற்றையும் சிந்தித்தால் – கடவுள் காப்பாற்றட்டும் – ஒருத்தன் தன் புத்தியையே இழந்துவிடுவான்.

ஒரு வெள்ளிக்கிழமை காலை. பேளாச்சி ஸப்பாத் விரதத்துக்கு பாண் சுடுவதற்கு மாக் குழைத்துக்கொண்டிருந்தாள். கதவு திறந்தது. ஒரு பிரபு உள்ளே நுழைந்தான். அவன் உயரமானவன். அதனால் கதவால் வருவதற்கு அவன் குனிய வேண்டி இருந்தது. அவன் ஒரு கம்பளித் துணித் தொப்பியும் மயிர்த் தோலால் ஓரம் வைத்துத் தைக்கப்பட்ட மேலங்கியும் அணிந்திருந்தான். அவனைத் தொடர்ந்து ஷக்ரோஷிம்மிலிருந்து வந்த வண்டிக்காரன் சாஷ்கேலும் வந்தான். அவன் பித்தளைப் பூட்டுக்கள் போட்ட இரண்டு தோல் பைகளைச் சுமந்து கொண்டு வந்தான். வியப்பினால் பேளாச்சி கண்களை உயர்த்திப் பார்த்தாள்.

பிரபு எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு, வண்டிக்காரனிடம் "இந்தா இதைப் பிடி" என்று பிரிட்டிஷ் மொழியில் கூறி ஒரு வெள்ளி ரூபிள் ஒன்றை அவனிடம் கொடுத்தான். வண்டிக்காரன் மீதிச் சில்லறையைக் கொடுக்க எத்தனித்தான். பிரபு சொன்னான்: "தேவையில்லை. நீ போகலாம்."

வண்டிக்காரன் கதவைச் சாத்திய பின் பிரபு சொன்னான்: "அம்மா, நான்தான் உன் மகன் சாமுவெல் – சாம்"

பேளாச்சிக்கு அச்சொற்கள் கேட்டன. அவளுடைய கால்கள் விறைத்துவிட்டன. மாத்துண்டுகள் ஒட்டிக்கொண்டிருந்த அவளுடைய கைகள் தங்கள் வலுவை இழந்துவிட்டன. பிரபு அவளைக் கட்டி அணைத்து நெற்றியிலும் கன்னங்களிலும் கொஞ்சினான். பேளாச்சி கோழி மாதிரி "என் மகனே" என்று கேரினாள். அந்த நேரத்தில் பேளா மரக்கொட்டிலில் இருந்து கைநிறைய மரக் குத்திகளுடன் வந்தான். ஆடொன்று அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. அவனது மனைவி பேளாச்சியை ஒரு பிரபு கொஞ்சுவதைப் பார்த்த பேளா, தான் கொண்டு வந்த மரக் குத்திகளை அப்படியே போட்டுவிட்டு, "இது என்ன?" என்று ஆச்சரியத்தால் விளித்தான். பிரபு பேளாச்சியை விட்டு பேளாவைக் கட்டி அணைத்து "அப்பா" என்றான்.

நீண்ட நேரம் பேளாவால் ஒரு வார்த்தையைக்கூட உச்சரிக்க முடியவில்லை. யிட்டிஷ் விவிலியத்தில் அவன் வாசித்த புனித வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென அவன் நினைத்தான். ஆனால் அவன் நினைவில் ஒன்றுமே வரவில்லை. அதன் பிறகு அவன் கேட்டான்: "நீ சாமுவெலா?"

"ஓம் அப்பா. நான் தான் சாமுவெல்"

"நல்லது. உனக்கு அமைதி உண்டாகட்டும்" என்று பதில் சொல்லி மகனின் கையைப் பற்றினான். அவன் ஏமாந்து விட்டானா, இல்லையா என்பதில் அவனுக்கு இன்னும் சந்தேகம் தெளிய

வில்லை. சாமுவெல் இத்தனை உயரமும் மொத்தமும் இல்லை. ஆனால் சாமுவெல் வீட்டை விட்டுப் போகும்போது அவனுக்குப் பதினைந்து வயதுதான் என்று அவனுக்கு நினைவில் வந்தது. அந்தத் தூர தேசத்தில் அவன் வளர்ந்திருக்க வேண்டும். "நீ வருவதாக ஏன் எங்களுக்கு அறிவிக்கவில்லை?" என்று பேளா கேட்டான். "என்னுடைய தந்தி உங்களுக்குக் கிடைக்கவில்லையா?" என்று சாமுவெல் கேட்டான். பேளாவுக்குத் தந்தி என்றால் என்னவென்று விளங்கவில்லை.

பேளாச்சி தன் கைகளில் இருந்த குழைத்த மாவைச் சுரண்டி எடுத்துவிட்டுத் தன் மகனைக் கட்டி அணைத்தாள். அவன் திரும்ப வும் அவளைக் கொஞ்சி விட்டு "அம்மா. என்னுடைய தந்தி உனக்குக் கிடைக்கவில்லையா?" என்று கேட்டான். "என்ன? இதைப் பார்ப்பதற்கு நான் வாழ்ந்திருக்கிறேன் என்றால் நான் சாவதற்குக் கூட இப்போது சந்தோசம்தான்" என்று பேளாச்சி சொன்னாள். தன் வார்த்தைகளையே அவள் வியந்துகொண்டாள். பேளாவுக்குக்கூட அது வியப்பாக இருந்தது. இந்த வார்த்தைகள் முன்பே ஞாபகத்துக்கு வந்திருந்தால் அவனும் அதே வார்த்தைகளைச் சொல்லி இருப்பான். சிறிது நேரத்துக்குப் பின் பேளா தன் உணர்வுகளைப் பெற்றுக் கொண்ட பின் "பேச்ஷா, கஞ்சியுடன் இரண்டு மடங்கு புடிங் செய்ய வேணும். திருநாள் புடிங்" என்றாள் பேளாச்சி.

பேளாச்சியின் சொந்தப் பெயரைச் சொல்லி பேளா கூப்பிட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. அவளை அவன் அழைக்கும்போது "இங்க பார். கேள்" என்றுதான் சொல்லுவான். இளைஞர்கள் அல்லது நகரத்தில் உள்ளவர்கள்தான் மனைவிமாரை அவர்களின் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். இப்போது தான் பேளாச்சி அழ ஆரம்பித்தாள். அவள் கண்களில் இருந்து மஞ்சளாகக் கண்ணீர் ஓடியது. அனைத்தும் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தது. பின்பு சொன்னாள்: "இன்று வெள்ளிக்கிழமை. திருநாளைக்குச் சாப்பாடு தயாரிக்க வேணும்."

ஆம். மாவைக் குழைத்துப் பாண் செய்ய வேண்டி இருந்தது. அப்படியான ஒரு விருந்தாளியுடன் திருநாள் கஞ்சியை அவள் பெரிதாகச் செய்ய வேணும். பனிக்காலப் பகல் குறைந்த நேரமாகை யால் அவள் துரிதமாகச் செயற்பட வேண்டி இருந்தது.

அவளுடைய ஆவல் மகனுக்குப் புரிந்தது. அவன் சொன்னான்: "அம்மா. நான் உதவி செய்கிறேன்."

பேளாசிக்குச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால் அடங்கிய விம்மல்தான் வந்தது. " என்ன சொல்கிறாய்? கடவுள் உன்னைப் காப்பாற்றட்டும்" என்றாள்.

பிரபு தன் மேலாடையையும் கோற்றையும் களற்றிவிட்டு உள்ளாடையில் மட்டும் நின்றான். அப்போது அவன் அணிந்திருந்த

தங்கத்தால் செய்த மணிக்கூட்டுச் சங்கிலி தெரிந்தது. தன் கைச் சட்டையை மேலே மடித்து விட்டு மாக்குழைக்கும் பாத்திரத்தடிக்கு வந்தான். "அம்மா, நான் நியூ யோர்க்கில் பல வருசங்கள் பாண் சுடுபவனாக வேலை பார்த்திருக்கிறேன்" என்றான். சொல்லி விட்டு மாவைக் குழைக்க ஆரம்பித்தான். "என்ன? நீ என் செல்ல மகன். எனக்கு நீ தான் கடீஸ் (இறந்தவனுக்குச் சொல்லும் பிரார்த்தனை) சொல்ல வேண்டியவன்" என்று சொல்லி விட்டு விக்கி விக்கி அழுதாள். அவளுடைய பலம் குறைந்து விடவே அவள் கட்டிலில் அப்படியே இருந்து விட்டாள்.

பேள் சொன்னாள்: "பெண்கள் எப்பவுமே பெண்கள்தான்" பிறகு, விறகு எடுப்பதற்கு விறகு அடுக்கி இருந்த இடத்துக்குச் சென்றான். அடுப்புக்குப் பக்கத்தில் ஆடு குந்தி இருந்தது. அந்த அந்நியனை ஆச்சரியத்துடன் அது கூர்ந்து பார்த்தது – அவனுடைய உயரத்தையும், அவனுடைய விசித்திரமான உடுப்புக்களையும்.

பேளின் மகன் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறான் என்ற நல்ல செய்தியைக் கேள்விப்பட்ட அயலவர்கள் அவனைக் குசலம் விசாரிக்க வந்தனர். பெண்கள் திருநாளுக்குத் தயாரிப்பதற்கான வேலையில் பேளாச்சிக்கு உதவ ஆரம்பித்தார்கள். சிலர் சிரித்தனர். சிலர் அழுதனர். திருமண வீட்டில் நிற்பவர்கள் மாதிரி அறை முழுவதும் ஆட்களால் நிறைந்தது. பேளின் மகனைப் பார்த்து "அமெரிக்காவில் என்ன புதினம்? என்றனர். "அப்படி ஒன்றும் இல்லை" என்றான் அவன்.

"யூதர்கள் ஏதாவது சம்பாதிக்கிறார்களா?"

"ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் வெள்ளைப் பாண் சாப்பாடுகிறார்கள். (வெள்ளைப் பாண் ஐரோப்பாவிலுள்ள ஏழைச் சமுதாயங்களில் ஆடம்பரச் சாப்பாடு. விடுதலை நாட்களிலும் யூதத் திருநாட்களிலும் அதைச் சாப்பிடுவர்)

"அவர்கள் யூதர்களாகவே இருக்கிறார்களா?"

"நான் சமயத்தை விட்டு மாறவில்லை."

பேளாச்சி மெழுகுத்திரிகளை ஆசிர்வதித்த பிறகு எதிர்த் தெருவிலிருந்த சிறிய யூதக் கோவிலுக்கு தகப்பனும் மகனும் சென்றார்கள். புது உறைபனி விழுந்திருந்தது. மகன் பெருத்த அடி வைத்து நடந்தான். "ஆறுதலாக நட" என்று பேள் அவனை எச்சரித்தான்.

கோயிலில் யூதர்கள் "எல்லோரும் மகிழ்ச்சியாய் இருங்கள்" என்றும் "வாருங்கள் மணமகனே" என்றும் பாடினார்கள். வெளியில் அத்தனை நேரமும் உறைபனி விழுந்துகொண்டே இருந்தது. பிரார்த்தனை முடிந்து பேளும் சாமுவெலும் புனித ஸ்தலத்தை விட்டு வெளியேறிய பின் கிராமத்தைக் கண்டுபிடிக்க முடியாதளவு

அனைத்தையும் உறைபனி மூடிவிட்டது. கூரைகளின் உருவரையையும் யன்னல்களிலிருந்த மெழுகுவர்த்திகளையும்தான் ஒருவனால் காணமுடியும். சாமுவெல் சொன்னான்: "இங்கு ஒன்றுமே மாறவில்லை."

பேளாச்சி மீனும், அரிசி போட்ட கோழிச் சூப்பும், இறைச்சியும், கறற்றில் கஞ்சியும் தயாரித்தருந்தாள். பேள் சடங்கில் வைக்கும் வைன் கிளாசுக்கு வாழ்த்துப் பாடினான். குடும்பத்தவர்கள் குடித்தும் சாப்பிட்டும் பின் அமைதியாகியபோது வீட்டு வெட்டுக்கிளி பாடுவதைக் கேட்க முடியும். மகன் பலதையும் பத்தையும் கதைத்தான். ஆனால் பேளுக்கும் பேளாச்சிக்கும் புரிந்ததோ கொஞ்சம். அவனுடைய யிட்டிஷ் வித்தியாசமானது. அதில் பல வேற்றுச் சொற்கள் கலந்திருந்தன.

இறுதி ஆசிர்வாதம் முடிந்த பின் சாமுவெல் கேட்டான்: "அப்பா, உங்களுக்கு சான் அனுப்பி காசு முழுவதையும் என்ன செய்தீர்கள்?"

பேள் வெள்ளைப் புருவத்தை உயர்த்தி "அது அங்கே இருக்கிறது" என்றான்.

"அதை வங்கியில் போடவில்லையா?"

"லென்ற்ஷில் வங்கி இல்லை."

"எங்கே வைத்திருக்கிறீர்கள்?"

பேள் தயங்கினான். "திருநாளில் காசைக் கையால் தொட அனுமதி இல்லை. ஆனால் நான் உனக்குக் காட்டுகிறேன்" என்றான். கட்டிலுக்குப் பக்கத்தில் குனிந்து ஏதோ பாரமான ஒன்றைத் தள்ளினான். ஒரு பெட்டி தெரிந்தது. அதன் மேலே வைக்கோல் வைக்கப்பட்டிருந்தது. பேள் வைக்கோலை நீக்கினான். பெட்டி நிறைய தங்க நாணயங்கள் இருப்பதை மகன் கண்டான். அதை அவன் தூக்கினான். "அப்பா, இது புதையல்" என்று கத்தினான்.

"நல்லது"

"இதை நீங்கள் ஏன் செலவழிக்கவில்லை?"

"எதில் செலவழிப்பது? கடவுளுக்கு நன்றி. எங்களிடம் எல்லாம் இருக்கிறது."

"எங்காவது பிரயாணம் செய்திருக்கலாமே?"

"எங்கே போவது? இதுதான் எங்கள் வீடு."

மகன் பல கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டு கொண்டே இருந்தான். ஆனால் பேளின் பதில் ஒன்றாகத்தான் இருந்தது. அவர்களுக்கு ஒன்றுக்குமே பணம் தேவை இல்லை. தோட்டம், பசு, ஆடு, கோழிகள், அனைத்தும் அவர்களுக்குத் தேவையான அத்தனையையும் கொடுத்தன. மகன் சொன்னான்:

"இது கள்ளர்களுக்குத் தெரிந்திருந்தால் உங்கள் உயிருக்கே ஆபத்தாகி இருக்குமே?"

"இங்கே எந்தக் கள்ளர்களும் இல்லை."

"இந்தக் காசு எதற்கு?"

"நீ எடுத்துக்கொள்"

மெதுவாக பேளுக்கும் பேளாச்சிக்கும் அவர்களுடைய மகனின் பழக்கங்களும் அமெரிக்க யிட்டிஷும் புரிய ஆரம்பித்தன. பேளாச்சிக்கு அவன் சொல்வது கேட்டது. அவனுடைய குரலைக் கூட மட்டுக் கட்டினாள். அவன் சொன்னான்: "பெரிய கோயிலாக நாங்கள் கட்டலாம்."

"அது அனைவருக்கும் போதக் கூடியளவுக்கு ஏற்கனவே பெரிது தான்." பேள் பதிலளித்தான்.

"முதியோர் இல்லம் கட்டலாம்."

"ஒருவரும் இங்கே வீதியில் படுக்கவில்லை."

அடுத்த நாள் திருநாள் சாப்பாடு முடிந்த பின், ஷக்றோஷிம்மிலிருந்து புறச் சமயத்தவன் ஒருவன் ஒரு பேப்பர் தாளைக் கொண்டு வந்தான். அதுதான் தந்தி. பேளும் பேளாச்சியும் சிறிது கண்ணயர்ந்தார்கள். அவர்கள் சிறிது நேரத்திலேயே குறட்டை விடத் துவங்கினார்கள். ஆடும் தூங்கியது. மகன் மேலங்கியையும் தொப்பியையும் போட்டுக்கொண்டு நடக்கச் சென்றான். சந்தை இடத்தால் தன் நீண்ட கால்களால் எட்டி நடந்தான். கையை நீட்டிக் கூரையைத் தொட்டான். சுருட்டுக் குடிக்க அவனுக்கு விருப்பமாக இருந்தது. ஓய்வுத் திருநாளில் சுருட்டுக் குடிக்கக் கூடாது என்பது நினைவுக்கு வந்தது. யாருடனாவது பேச வேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால் லென்ற்ஷ் முழுவதுமே ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததுபோலத் தோன்றியது. கோயிலுள் நுழைந்தான். ஒரு முதியவர் தோத்திரப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார். சாமுவெல் கேட்டான்: "நீங்கள் பிரார்த்திக்கிறீர்களா?"

"ஒருவன் கிழவனாகிவிட்டால் வேறென்ன செய்ய இருக்கிறது?"

"நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்?"

முதியருக்கு அவ்வார்த்தைகளின் அர்த்தம் புரியவில்லை. தனது பற்களற்ற வாய் தெரியச் சிரித்தார். பிறகு சொன்னார்: "ஆண்டவன் ஆரோக்கியத்தைத் தந்தால் ஒருவன் வாழ்ந்துகொண்டே இருப்பான்."

சாமுவெல் வீட்டுக்குத் திரும்பினான். இருள ஆரம்பித்துவிட்டது. பேள் தன் மாலைப் பிரார்த்தனைக்குக் கோயிலுக்குப் போய்விட்டான். மகன் தாயுடன் தங்கி இருந்தான். அறை முழுவதும் நிழல்கள் நிரம்பி இருந்தன.

பேளாச்சி அமைதியான பாடல் ஒன்றை இழுத்து இழுத்துப் பாடினாள்: "ஏப்ரகாம், ஐசக், யேக்கொப்பின் ஆண்டவனே!

*இஸ்ரேலின் ஏழைகளையும் உன் பெயரையும் பாதுகாருங்கள். புனித ஓய்வுத் திருநாள் கழிகின்றது. வரவேற்புக் கிழமை எங்களுக்கு வருகின்றது. அது ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் நற்காரியங்களையும் தருவதாக இருக்க வேண்டும்."*

*"அம்மா, நீங்கள் செல்வத்தை வேண்டிப் பிரார்த்திக்கத் தேவையில்லை. நீங்கள் ஏற்கெனவே செல்வத்தை உடையவர்கள்" என்றான் சாமுவெல்.*

*பேளாச்சிக்கு அது கேட்கவில்லை. அல்லது கேட்காதது மாதிரி இருந்தாள். அவளுடைய முகம் ஒரு கூட்டம் முகில்கள்போல மாறியது.*

*மங்கிய மாலை நேரத்தில் சாமுவெல் தன் ஜக்கற் பைகளுக்குள் கையை விட்டான். அதற்குள் கடவுப் புத்தகம், காசோலைப் புத்தகம், போன்றவை இருந்தன. இங்கு வரும்போது பெரும் திட்டங்களுடன் வந்தான். ஒரு பை நிறைய பெற்றோருக்குப் பரிசுப் பொருட்கள் கொண்டு வந்திருந்தான். கிராமத்தவர்களுக்கும் பரிசுகள் கொடுக்க நிறைய வைத்திருந்தான். தனது பணத்தை மட்டும் அவன் கொண்டு வரவில்லை. நியூயோர்க் லென்ற்ஷின் கழகம் சேர்த்த நிதியையும் கொண்டு வந்திருந்தான். கிராமம் பயன்பெறுவதற்காக நிதி திரட்டுவதற்காக ஒரு நடன நிகழ்ச்சியைத் தயாரித்து அந்தப் பணத்தைத் திரட்டினார்கள். ஆனால் நாட்டுப் புறத்தில் எங்கோ இருக்கும் இந்தக் கிராமத்துக்கு எதுவுமே தேவைப் படவில்லை. கோயிலில் இருந்து வரும் கரகரப்பான பண்ணிசை கேட்டது. பகல் முழுவதும் அமைதியாக இருந்த வெட்டுக்கிளி, இரையைத் தொடங்கியது. பேளாச்சி தன் தாய்மாரிடமும் பேத்திமாரிடமும் சொத்தாகப் பெற்ற புனித இசைப் பாடல்களை அசைந்து அசைந்து பாடத் தொடங்கினாள் :*

*"இரக்கமுள்ள*
*புனிதச் செம்மறியே !*
*ரோறாவில் உள்ள*
*நல்ல காரியங்களே !*
*அவசியமானதை அனைவருக்கும் அளி*
*காலணி, ஆடை, பாண்*
*மீட்பாளர் அடியிணையே !*

*(ரோறா : யூத உபதேசங்கள். விசேசமாக ஹீப்றூ விவிலியத்தின் முதல் 5 புத்தகங்கள்)*

'The Son From America' - Isaac Bashevis Singer

# இரவில் நான் உன் குதிரை

லூயிசா வலென்சுவெலா

கதவுமணி அடித்தது. மூன்று சிறிய ஒலிகளும், ஒரு நீண்ட ஒலியும். அது தான் சமிக்ஞை. எரிச்சலுடனும், சிறிது பயத்துடனும் நான் எழுந்தேன். அது அவர்களாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இந்தப் பயங்கர இரவு நேரத்தில் இது ஒரு வலைப்பொறியாக இருக்க லாம். கடைசியாக, நேருக்கு நேராக சந்திக்காமல் அவன் இல்லாமல் வேறொருவனாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு கதவைத் திறந்தேன்.

அவன் விரைவாக உள்ளே வந்து என்னை அணைக்கு முன்பு கதவைப் பூட்டினான். அது அவன் குணம். மிகக் கவனமானவன். முக்கியமாக அவனை – எங்களுடைய – என்னை பாதுகாப்பதில் கவனமாக இருந்தான். பிறகு, ஒரு சொல் கூடப் பேசாமல், என்னை இறுக்கி அணைக்காமல், தன் கைகளால் அணைத்து, ஆனால் எல்லா உணர்ச்சிகளும் மீதூறிப் பாய, என்னைத் தன் கைகளால் அணைப்பதாலேயே அனைத்தையும் உணர்த்தி, என்னை மெதுவாகக் கொஞ்சினான். அவனுக்கு சொற்களில் அதிக நம்பிக்கை இருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். எப்போதும் போல் அமைதியாக, வருடல்களால் தன் செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தான்.

எங்களைத் தலையிலிருந்து கால்வரை பார்ப்பதற் காக – அதுவும் உன்னிப்பாகவல்ல – கண்களும் கண் களும் பார்ப்பதற்காகவல்ல, இறுதியில் நாங்கள் பின்ன கர்ந்தோம். பல மாதங்கள் அவன் எங்கே இருந்தான் என்று தெரியாதபோதிலும் அவனைப் பார்த்து ஹெல்லோ என்று எந்த ஆச்சரியமும் இல்லாமல் என்னால் சொல்ல முடிந்தது. அத்துடன் என்னால்

நீ வடக்கே சண்டை பிடித்துக் கொண்டிருந் திருப்பாய் என்று நினைத்தேன்

*நீ பிடிபட்டிருப்பாய் என்று நினைத்தேன்*

*நீ ஒளித்திருப்பாய் என்று நினைத்தேன்*

*நீ சித்திரவதைப்பட்டிருப்பாய், கொல்லப்பட்டிருப்பாய் என்று நினைத்தேன்*

*நீ இன்னொரு நாட்டில் நடைபெற்ற புரட்சி பற்றிய கோட்பாடு களை ஆக்கிப் பேசிக்கொண்டிருப்பாய் என்று நினைத்தேன்*

*சொல்ல முடிந்தது.*

*அவனைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன், அவனை நினைக் காமல் நிறுத்தியதே இல்லை, அவன் துரோகம் இழைத்து விட்டான் என்று உணர்ந்ததே இல்லை என்ற பலவழிகளில் ஒரு வழியைச் சொல்லிக்கொண்டிருந்தேன். அங்கே இருக்கிறான், எப்பொழுதுமே மிக, மிகக் கவனமானவன். தன் செயல்களுக்கு அவனே எசமானன்.*

*"சத்தம் போடாதே, சிக்கிவுற்றா. நான் என்ன செய்தேன் என்பது உனக்குத் தெரியாமல் இருந்தால் அது உனக்கு மிகவும் நல்லதாக இருக்கும்."*

*அதன் பிறகு அவன் தன் புதையல்களை வெளியே எடுத்தான். பின் நிகழவிருக்கும் செயல்களின் தடையங்கள் அவை என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது : ஒரு போத்தல் கச்சாகாவும் கல் கோஸ்ரா இசைத்தட்டும். பிறேசிலில் என்ன செய்துகொண்டிருந் தான்? அடுத்து என்ன செய்ய நினைத்துக்கொண்டிருக்கிறான்? அவனைப் பிடிப்பதற்கு அவர்கள் காத்துக்கொண்டிருந்தபோதிலும், உயிர்ப் பாதுகாப்பற்ற நிலையிலும் அவனை இங்கே திரும்பிவரச் செய்தது எது? பிறகு என்னை நான் கேள்விகள் கேட்பதை நிறுத்திவிட்டேன். (அமைதி சிக்குவிற்றா என்று அவன் சொல்வான்) இங்கே வா, சிக்குவிற்றா, என்று அவன் சொல்வான். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவன் திரும்பி வந்ததின் மகிழ்ச்சியில் மிதக்க விரும்பினேன். நாளை எமக்கு என்ன நடக்கும்? அதன் பிறகு வரும் நாட்களில் என்ன நடக்கும்?*

*கச்சாகா நல்லதொரு மது. அது சரியான பாதைகளில் போய் வந்து பிறகு உண்மையாகத் தேவையான மூலைகளைச் சூடாக்கா மல் விட்டுவிடும். கல் கோஸ்ராவின் குரல் சூடாக இருந்தது. அவள் தன் இசையால் எங்களை ஆட்கொண்டாள். பாதி ஆட்டத்தி லும் பாதி மயக்கத்திலும் நாங்கள் கட்டிலை அடைந்தோம். கட்டிலில் கிடந்து ஒருவரின் கண்களை மற்றவர் ஆழமாக உற்றுப் பார்த்துக் கொண்டும், ஒருவரை ஒருவர் வருடிக்கொண்டும் இருந்தோம். தூய பால் உணர்ச்சிகளுக்கு இன்னும் இடம் கொடுக் காமல் இருந்தோம். ஒருவரை ஒருவர் தொடர்ந்து இனங்கண்டு கொண்டும் கண்டுபிடித்துக்கொண்டும் இருந்தோம்.*

*அவனைப் பார்த்து, பெற்றோ என்றேன். அது அவனுடைய உண்மையான பெயர் இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனால்*

அதை மட்டும்தான் என்னால் உரத்துச் சொல்ல முடியும். அவன் பதிலளித்தான்:

“ஒருநாள் நாம் அதைச் செய்ய முடியும். இப்போது அதைச் சொல்லாமல் இருப்போம், சிக்குவிற்றா.”

அப்படி இருப்பதுதான் நல்லது. அதை எப்படிச் செய்ய முடியும் என்று அவன் பேசத் தொடங்காமல் இருப்பதுதான் நல்லது. அப் படித் தொடங்கி தற்போது நாங்கள் இருவரும், தனிமையில், அனுப விக்க இருக்கும் இந்த அதிசயத்தைப் பாழ்படுத்த விரும்பவில்லை.

“எ நொயிற் எ ர கவாலோ,” இசைத்தட்டில் கல் கோஸ்ரா சடுதியாகப் பாட ஆரம்பித்தாள்.

“இரவில் நான் உன்னுடைய குதிரை,” வேறெதையும் சிந்திக் காமல் இருக்கச் செய்வதற்காகவும் அந்த வசியத்துடன் அவனைப் பிணைக்கச் செய்வதற்காகவும் மெதுவாக அதை மொழி பெயர்த்தேன்.

“அது ஒரு புனிதரின் பாடல், மக்கும்பாவில் இருப்பது போல். மெய்மறந்த நிலையில் ஒருத்தி பாடுகின்றாள். சவாரி செய்யும் ஓர் ஆவியின் குதிரை தான் என்றும் அவனின் ஊர்தி என்றும் மெய்மறந்து பாடுகின்றாள்.”

“சிக்குவிற்றா, நீ எப்பொழுதுமே உன்னை மறந்து, மறைபொருள் கருத்துக்களாலும் பில்லி சூனியங்களாலும் கவரப்பட்டு எங்கோ போய்விடுகிறாய். அவள் ஆவிகளைப் பற்றிப் பேசவில்லை என்று நன்றாகத் தெரியும். இரவில் நீ என் குதிரை என்றால் அது நான் உன்னில் சவாரி செய்கிறேன் என்பதுதான். இப்படி பார் . . . இப்படி . . . அவ்வளவுதான்.”

அது மிக நீண்ட நேரம். மிக ஆழம். மிக அழுத்தம். அன்பினால் மின் ஏற்றப்பட்டது. முடிவில் களைத்து முடித்தோம். அவன் என் மேலிருக்க நான் நித்திரையாகி விட்டேன். இரவில் நான் உன் குதிரை.

ஆழமான கிணற்றில் இருந்து என்னை இந்தச் சனியன் பிடித்த தொலைபேசி அலை அலையாக மேலிழுத்தது. படு பிரயத்தனபட்டு எழுந்து, தொலைபேசி இருக்கும் இடத்துக்கு நடந்தேன். பெற்றோ என் பக்கத்தில் இப்போது இல்லை. அது அவனாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். நிச்சயமாக அவனாகத்தான் இருக்கும். ஏனென்றால் நான் நித்திரையாகக் கிடக்கையில் அவன் எங்கே போகிறான் என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் ஓடிப்போய் விடுவது அவனுடைய மாறாத நீண்டகாலப் பழக்கம். கேட்டால் உன்னைக் காப்பாற்றுவதற்காக என்று சொல்வான்.

தொலைபேசியின் அடுத்த பக்கத்தில் இருந்து அந்திரேயின் – அந்திரே என்று நாம் அழைப்பவன் – குரல் என்று நினைத்தேன், அது சொல்ல ஆரம்பித்தது:

“பெற்றோ ஆற்றின் அடுத்த கரையில் மிதந்துகொண்டு இறந்து கிடந்தபோது கண்டு பிடிக்கப்பட்டான். உலங்கு வானூர்தியில் இருந்து அவனை உயிருடன் வீசியதுபோல் தோன்றுகின்றது. அவன் உடல் ஆறு நாட்கள் தண்ணீரில் கிடந்து ஊதியும் அழுகியும் காணப் பட்டது. ஆனால் அவன் தான் என எனக்கு ஏறக்குறைய நிச்சயம்.”

“இல்லை, அது பெற்றோவாக இருக்காது.” நான் கவனயீனமாகச் சத்தம் போட்டேன். சடுதியாக அந்தக் குரல் அந்திரேயேனுடை யதைப் போல இல்லைப் போல் ஒலித்தது. அது அந்நியமானதாக, வேறெவருடையது போன்று இருந்தது.

“அப்படி நீ நினைக்கிறாயா?”

“யாரது?” அதன் பிறகுதான் அப்படிக் கேட்பதற்கு நினைத்தேன். அந்தக் கணத்திலேயே அவர்கள் தொலைபேசியை வைத்து விட்டார்கள்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள்? தொலைபேசியை மடச்சி மாதிரி வெறித்துப் பார்த்துக்கொண்டு, பொலிஸ்காரர் வரும்வரை அங்கே எவ்வளவு நேரம் நின்றிருப்பேன்? அவர்களை நான் எதிர்பார்க்க வில்லை. ஆனால் திரும்பவும் அதன் பிறகு, எப்படி என்னால் அப்படிச் சொல்ல முடியாதிருக்கும். அவர்களின் கைகள் என்னில் பட்டதை உணர்ந்தேன். அவர்களின் குரல்கள் என்னைத் திட்டிய போது, பயமுறுத்தியபோது, என் வீட்டைச் சோதனையிட்டபோது, அதைத் தலைகீழாக்கியபோது எப்படி என்னால் அதை அப்படி இல்லை என்று சொல்லாமல் இருக்க முடியும்? ஆனால் எனக்கு அது ஏற்கெனவே தெரியும். எனவே, அவர்கள் உடையக்கூடிய எல்லாப் பொருட்களையும் உடைத்தார்கள் என்பதைப் பற்றியோ என் உடுப்பு அலமாரியைத் தலைகீழாகக் கிழித்தார்கள் என்பதைப் பற்றியோ நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

அவர்களால் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. என்னிடம் உண்மையாக இருந்தது ஒரு கனவு. அப்படிச் சுலபமாக அவர்களால் அக்கனவுகளை என்னிடம் இருந்து இல்லாமல் செய்ய முடியாது. முதல் நாளிரவு, பெற்றோ என்னுடன் இருந்தபோது நாங்கள் இருவ ரும் காதலித்தோம். நான் கனவு கண்டேன். ஒவ்வொரு துளியையும் கண்டேன். கனவுதான் என்று நான் ஆழமாக நம்பினேன். கனவை அதன் பெருவளமான விபரங்களுடன், முழு வர்ணத்தில் கூட, கண்டேன். என் கனவுகள் பொலிஸ்காரருக்குத் தேவையில்லை.

அவர்களுக்குத் தேவை யதார்த்தம், ஐயமற்ற மெய்கள். அப்படி யானவற்றை என்னால் அவர்களுக்குக் கொடுக்க ஆரம்பிக்கக்கூட முடியாது.

அவன் எங்கே? அவனை நீ கண்டிருக்கிறாய். உன்னுடன் அவன் இருந்திருக்கிறான். அவன் எங்கே போனான்? சொல், சொல்லாவிட் டால் நீ பிறகு கவலைப்படுவாய், நீ பாடுவதைக் கேட்போம்.

*வேசை. உன்னை அவன் பார்க்க வந்தான் என்று எங்களுக்குத் தெரியும். அவன் எங்கே? அவன் எங்கே ஒளித்திருக்கிறான்? அவன் இந்த நகரத்தில்தான் இருக்கிறான். உன்னை அவன் கொண்டுபோக வந்திருக்கிறான் என்று எங்களுக்குத் தெரியும்.*

*அவனிடம் இருந்து மாசக்கணக்கில் எனக்கு எந்த செய்தியும் வரவில்லை. அவன் என்னைக் கைவிட்டு விட்டான். மாசக்கணக்கில் அவனிடம் இருந்து எனக்கு எந்தச் செய்தியுமே வரவில்லை. அவன் ஓடிப்போய் விட்டான். அவன் தலைமறைவாகிவிட்டான். எனக்கென்ன தெரியும். அவன் வேறு யாருடனோ ஓடிவிட்டான். வேறொரு நாட்டில் இருக்கிறான். எனக்கென்ன தெரியும், அவன் என்னைக் கைவிட்டுவிட்டான். அவனை நான் வெறுக்கிறேன். எனக்கொன்றுமே தெரியாது.*

*(சிகரெட்டுக்களால் சுடுங்கள். நீங்கள் விரும்பிய மாதிரி உதையுங்கள். பயமுறுத்துங்கள், இன்னும் செய்யுங்கள். எனக்குள் சுண்டெலியை விடுங்கள். அது என்னுள்ளே இருப்பவற்றைச் சாப்பிடட்டும். என் நகங்களைப் பிடுங்குங்கள். நீங்கள் விரும்பிய மாதிரி செய்யுங்கள். அதற்காக நான் இல்லாததை உண்மையென்று கற்பனையாகச் சொல்லவா? என்னை ஒரேயடியாகக் கைவிட்டு ஆயிரம் வருசங்களுக்கு முன் போனவனை, நேற்று இங்கே இருந்தான் என்று சொல்லவா?)*

*என்னுடைய கனவுகளை அவர்களிடம் சொல்லப் போவதில்லை. அவற்றைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை? பெற்றோ என்று அழைக்கும் அவனைக் கண்டு ஆறு மாசங்களுக்கு மேல் இருக்கும். அவனை நான் காதலித்தேன். அந்த மனிதன் வெறுமனே மறைந்துவிட்டான். அவனை நான் என் கனவுகளில்தான் காண்கிறேன். அந்தக் கனவுகள் கெட்டவை. அவை அடிக்கடி பயங்கரக் கனவுகளாக மாறிவிடுகின்றன.*

*பெற்றோ, இப்போது உனக்கு தெரிந்ததுபோல, உன்னை அவர்கள் கொன்றது உண்மையானால் அல்லது நீ எங்கிருந்தாலும், இரவில் நான் உனது குதிரைதான். நீ விரும்பியபோது என்னை உனதாக்கலாம், நான் சிறையில் இருந்தால்கூட. பெற்றோ, நான் இப்போது சிறையில் இருக்கிறேன். அந்த இரவு நான் உன்னைக் கனவில் கண்டேன். அது ஒரு கனவுதான். ஏதாவது அரிதான சந்தர்ப்பத்தில் கல் கோஸ்ரா இசைத்தட்டும் அரைவாசி குடித்த ககச்சா போத்தலும் என் வீட்டில் இருந்தால், அவை என்னை மன்னிக்கும் என்று நம்புகிறேன்: அவை இருக்காதென்று நம்புகிறேன்.*

‘I’m Your Horse in the Night’ - Luisa Valenzuela

# பலி முட்டை

## சினுவா ஆச்செபி

*யூலியஸ் ஒபி தட்டச்சுப் பொறியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மேலதிகாரியான தலைமை எழுத்தன் – ஒரு தடியன் – தன் மேசையில் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். வெளியே, வாயில் காப்போன் பச்சைச் சீருடையில் தன் காவலிடத்தில் தூங்கிக்கொண்டிருந்தான். அவனைப் பிழை சொல்ல முடியாது. ஏறக்குறைய ஒரு கிழமையாக வாடிக்கையாளர் ஒருவரும் அக்கதவால் போகவில்லை. மிகப்பெரிய தராசில் ஒரு வெறும் கூடை இருந்தது. தராசைச் சுற்றியுள்ள அழுக்கடைந்த நிலத்தில் ஒரு சில பாக்குப் பருப்புகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. ஈக்கள் மட்டும்தான் அங்கு கூட்டமாக அதிகம் இருந்தன.*

*யூலியஸ் யன்னலடிக்குப் போனான். அந்த யன்னல் நைஜர் ஆற்றங்கரையிலுள்ள பெரிய சந்தையைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அந்தச் சந்தையை நுக்வோ என்றே இன்னும் அழைத்தனர். நாகரீகம் அதிகரித்து, அந்நகரம் தெங்கெண்ணை கிடைக்கும் பெரும் துறைமுகமாக வளர்ச்சியடைந்தபோது, எக்கே, ஒயே, அஃபோ என்ற இடங்களுக்கும் அது பரவிவிட்டது. அப்படிப் பரவியபோதும் ஆரம்ப நுக்வோதான் இன்னும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்த இடம். ஏனெனில் அவ்விடத்தில் தொன்றுதொட்டே மேலாண்மை செலுத்திவந்த அத்தெய்வம் இன்னும் தன் வசியப் பார்வையை அவ்விடத்தில் வீசிக் கொண்டிருக்கின்றது. பேராசை கொண்ட மனிதர்கள் மற்ற இடங்களுக்குச் செல்லட்டும். சந்தை மத்தியில் காலையில் சேவல் கூவுவதற்குக் கொஞ்சம் முன்பு அவள் ஒரு கிழவியாகத் தோன்றி நான்கு திசைகளையும் நோக்கித் தன் மாய விசிறியை அசைப்பாள் – முன்,*

பின், வலப்பக்கம், இடப்பக்கம் – என்றும், தொலைதூரங்களிலிருந்து ஆண்களையும் பெண்களையும் அவ்விடத்திற்கு அழைப்பாள் என்றும் சொல்வார்கள். அவர்கள் தாங்கள் விளைவித்த பொருட் களை அங்கு கொண்டுவருவார்கள். தெங்கெண்ணை, தெங்குப் பாக்குப் பருப்பு, கோலாப் பாக்கு, மரவெள்ளி, பாய்கள், கூடைகள், மட்பாண்டங்கள், குடங்கள் அனைத்தையும் கொண்டுவருவார்கள். போகும்போது பல வர்ணத் துணிமணிகள், பதனப்படுத்திய மீன்கள், இரும்புப் பானைகள், கோப்பைகள் ஆகியவற்றைக் கொண்டு செல்வார்கள். அவர்கள்தான் காட்டுவாசிகள். ஆறுகளின் மற்ற கரைகளில் இருந்த அடுத்த உலகத்திலிருந்த மற்ற அரைவாசிப் பேர் வள்ளங்களில், கிழங்குகள், மீன்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்தார் கள். சிலவேளைகளில் பெரிய வள்ளத்தில் ஒரு டசின் ஆட்கள் அல்லது அதற்கும் மேலாகவும் வந்தார்கள். சிலவேளைகளில் தனியே ஒரு மீனவனும் மனைவியும் மட்டும் ஒரு சிறிய வள்ளத்தில் பாய்ந் தோடும் அன்அம்ரா நதியில் வந்தார்கள். வள்ளத்தைக் கரையில் கட்டிவிட்டு அவர்கள் தங்கள் மீன்களைக் கடும் பேரம் பேசி விற் பார்கள். அதன் பிறகு மனைவி ஆற்றின் செங்குத்தான கரைநீளம் நடந்து போய் சந்தையின் மத்திக்குச் சென்று உப்பும், எண்ணெயும் வாங்குவாள். விற்பனை நன்றாக நடந்திருந்தால் ஒரு துணித்துண்டு கூட வாங்குவாள். வீட்டிலுள்ள தன் பிள்ளைகளுக்கு பயற்றம் பணியாரமும் இகாரப் பெண்கள் சமைக்கும் மைமையும்கூட வாங்கு வாள். மாலை நெருங்கியபோது தங்கள் வள்ளம் வலிக்கும் துடுப்புகளை எடுத்து வலித்துக்கொண்டு வீடு போவார்கள். ஆற்று நீர் மாலையொளியில் மினுமினுக்கும். அவர்களின் வள்ளம் தொலைவில் சிறிது சிறிதாக வந்து இறுதியில் நீரின் மேற்பரப்பில் பாதி நிலவாகும். இரண்டு உடல்கள் பின்புறமாகத் துடுப்பு வலிப்பது போல் அதில் முன்னேறிக் கொண்டு செல்லும். அக்காலத்தில் காட்டுவாசிகளின் சந்திப்பு இடம் உமரு. அக்காட்டுவாசிகளை ஈபோ என்று அழைப்பர். ஆற்றங்கரையில் வாழ்பவர்களான அந்நியர்களை ஒலு என்று ஈபோ மக்கள் அழைப்பர். அவர்களுக்கும் அப்பால் உலகம் பரந்திருந்தது.

யூலியஸ் ஒபி உமறுவில் பிறக்கவில்லை. எண்ணிறந்த மற்றவர்கள் போல இவனும் ஒரு கிராமப்புற உள்ளிடத்திலிருந்து வந்தவன்தான். மிஷன் பாடசாலையில் ஆறாந் தரம் சித்தி எய்திய பின், உமறுவில் இருந்த அனைத்துச் சக்தியும் வாய்ந்த ஐரோப்பிய வர்த்தகக் கொம்பனி ஒன்றின் பணிமனையில் எழுத்தனாக வேலை பார்க்க வந்தவன் தான் அவன். அக்கொம்பனி, தான் வைத்த விலையில் தெங்குப் பருப்பு வாங்கியும் அதேபோலத் தான் வைத்த விலையில் துணிகளும் உலோகப் பொருட்களும் விற்றது. புகழ்பெற்ற அந்தச் சந்தைக்கு அருகாமையில் அந்தப் பணிமனையும் இருந்ததால் யூலியஸ் அந்தப் பிரமாண்டமான இரைச்சலுக்குள் வேலைசெய்யப் பழகிக்கொள்ள வேண்டியிருந்தது. சிலவேளைகளில் பெரிய

எழுத்தன் இல்லாத நேரம் இவன் யன்னலுக்கு அருகில் சென்று அப்பெரிய எறும்புப் புற்றுப் போன்ற செயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பான். அங்குள்ளவர்களில் அநேகம் பேர் அங்கு நேற்று இருக்கவில்லை என்று அவன் நினைப்பான். இருந்தும் சந்தை ஒரேமாதிரி நிறைந்துதான் இருக்கிறது. இப்படி இச்சந்தையை ஒவ்வொரு நாளும் நிரப்புவதற்கு இந்த உலகத்தில் எத்தனையோ மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்தச் சந்தையை நிரப்பு வதற்கு வந்தவர்கள் அத்தனை பேருமே உண்மையான மனிதர்கள் அல்ல என்றும் சொல்வார்கள். ஜனெற்றின் தாய் மா அப்படித்தான் சொன்னாள்.

“நீ பார்க்கும் அந்தக் கூட்டத்துக்குள் நசிபட்டுக்கொண்டு செல்லும் அழகான பெண்களில் சிலர் உன்னை, என்னைப் போன்ற மனிதர்கள் அல்ல. அவர்களின் நகரம் ஆற்றின் ஆழத்தில் உள்ளது” – அவள் சொன்னாள். “அதை உன்னால் எப்பொழுதும் சொல்ல முடியும். ஏனென்றால் அவர்கள் அழகானவர்கள். அழகின் பூரணம் நிறைந்தவர்கள். கடும் குளிர்ச்சியுள்ளவர்கள். கண்ணின் ஓரத்தால் நீ பார். பிறகு கண்ணை வெட்டி சரியாகப் பார். அப்போது அவள் கூட்டத்திலிருந்து மறைந்திருப்பாள்.”

அந்த யன்னலில் நின்று அமைதியாக, வெறுமையாகக் கிடந்த சந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தபோது யூலியஸ் இவற்றை நினைத்துப்பார்த்தான். பெரிய, பேரிரைச்சலான சந்தை இப்படியாக ஒடுங்கிக் கிடக்க முடியும் என்று யார் தான் நம்பி இருப்பார்கள்? அதுதான் கிற்றிக்பாவின் பலம். பெரிய அம்மை நோயாக உருவெடுத்த அவதார சக்தி. அவனால் மட்டும்தான் அம்மக்கள் அனைவரையும் கலைத்துவிட்டுச் சந்தையை ஈக்கள் மொய்க்க விட முடியும்.

உமறு சிறிய கிராமமாக இருக்கும்போது ஒவ்வொரு நுகோவா தினமும் முதுமைப் பருவத்தினர் மட்டும்தான் இங்கு வந்துசென்றனர். ஆனால் காலம் செல்லச் செல்ல, சுறுசுறுப்பானதாக, பரந்தும் மக்கள் கூட்டம் அதிகரித்ததாக, ஆற்றங்கரைத் துறைமுகமாக இது மாறியது. இது எவருக்கும் உரிமையற்ற இடம். இங்கு அந்நியர்கள் மண்ணின் மைந்தர்களிலும் பார்க்க எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்தனர். மண்ணின் மைந்தர்களால் அவர்களின் கீழ்த்தரமான முரணான வழிபாடுகளைப் பார்த்துத் தலையை ஆட்டுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் நகரம் வளர்ச்சியடைந்து செழிப்படைய வேண்டும் என்று உண்மையில் வழிபட்டனர் – யார் அவர்களை அதற்காகக் குற்றம் சொல்ல முடியும். அத்துடன் அது வளர்ச்சியும் அடைந்தது. ஆனால் அதில் நல்ல வளர்ச்சியும் இருந்தது. கூடாத வளர்ச்சியும் இருந்தது. உணவுடனும் குடியுடனும்தான் வயிறு புடைக்கும் என்றில்லை. அருவருக்கத்தக்க நோயாலும் வயிறு

புடைக்கும். அந்நோயால் பாதிக்கப்பட்டவர் முழுவதாகச் சாவதற்கு முன் கூட, வீட்டை விட்டுக் கலைத்துவிடக்கூடிய அளவு அது புடைத்திருக்கலாம்.

அந்நியர்கள் வர்த்தகத்துக்காகவும் பணத்துக்காகவும் உமறுக்கு வந்தார்கள், கடமைகளைச் செய்வதற்காக வரவில்லை. அப்படிப் பட்ட கடமைகள் அவர்களின் உண்மையான கிராமங்களில் அதிகம் இருந்தன.

அது போதாது என்ற மாதிரி உமறு மண்ணின், இளம் புத்திரர் களும் புத்திரிகளும் அவர்களின் பாடசாலைகளாலும் தேவாலயங் களாலும் ஊக்குவிக்கப்பட்டு அந்நியர்களிலும் பார்க்க வித்தியாச மானவர்களைப் போல நடக்கவில்லை. அவர்களும் தங்கள் பழைய வேலைகளைக் கைவிட்டு களியாட்டங்களைக் கைக்கொண்டார்கள். கிற்றிக்பா வந்து பார்த்து அந்த மண்ணின் கடவுளர்களுக்கு அந்நகரில் வாழ்ந்தவர்களைக் காணிக்கை கொடுக்கக் கோரியபோது அப்படித்தான் அந்நகரம் இருந்தது. அம்மக்கள் தன் மேல் வைத் திருந்த பயத்தில் நம்பிக்கை வைத்துத்தான் அது அங்கு வந்தது. அது ஒரு கெட்ட தெய்வம். அதைப் பற்றி அது தற்புகழ்ச்சியுடன் கூறியும்கொண்டது. அது ஆட்களைக் கொன்றது என்று சொல்லி, அதைச் சினமூட்டாமல், ஆட்களை அது கௌரவித்தது என்று சொல்லி, இறந்தவர்களுக்காக அவர்கள் அழத் துணியாமல் இருந் தார்கள். அயலாரோ அடுத்த கிராமத்தவர்களோ வந்துபோவதை அது நிறுத்தியது. "கிற்றிக்பா அந்தக் கிராமத்தில் நிற்கிறது" என்று அவர்கள் சொல்லியவுடன் அயலவர்கள் அங்கு வரமாட்டார்கள்.

யூலியஸுக்கு அது துக்கத்தையும் கவலையையும் கொடுத்தது. ஏனெனில் அவன் ஜனெற்றைப் பார்த்து ஒரு கிழமையாகி விட்டது. அந்தப் பெண்ணைத்தான் அவன் திருமணம் செய்ய இருக்கிறான். "ஜெகோவாவின் சக்தியால் அந்த விசயம் முடியும்வரை" அவர்களை இனிமேல் அவன் போய்ப் பார்க்கக் கூடாது என்று மா மிகவும் கனிவாக அவனுக்குக் கூறி இருந்தாள். (அண்மையில் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய, மிகுந்த கடவுற் பற்றுள்ளவள் மா. சிஎம்எஸ் திருக்கோயில் பாடகர் குழுவில் யூலியஸ் பாடுகின்றவன் என்பதால் தான் தன் ஒரே மகளை அவனுக்குக் கொடுக்க அனுமதித்தாள்.) "நீ உன் அறைகளுக்குள் இருக்க வேணும்." அவள் அடங்கிய குரலில் கூறியிருந்தாள். ஏனென்றால் கிற்றிக்பா எந்தவிதச் சத்தத்தையோ பேரிரைச்சலையோ அனுமதிப்பதில்லை. "வீதிகளில் யார் யாரைச் சந்திப்பீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. அந்தக் குடும்பத்திற்கு அது வந்திருக்கிறது." அவள் தன் குரலை மேலும் தாழ்த்தி தெருவின் அடுத்த பக்கத்திலிருந்த ஒரு வீட்டை இரகசியமாகக் காட்டினாள். அந்த வீட்டின் வாசல் தெங்கு ஓலையால் அடைக்கப்பட்டிருந்தது. "அவன் ஒருவனை ஏற்கெனவே அலங்கரித்துவிட்டான். மற்றவர் களைப் பெரிய அரச லொறியில் இன்று ஏற்றி அனுப்பிவிட்டார்கள்."

ஜனெற் யூலியஸுடன் கொஞ்சத் தூரம் நடந்து சென்று நின்றாள். அதனால் அவனும் நின்றான். ஒருவருக்கொருவர் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை என்பது போல் இருந்தது. இருந்தும் அவர்கள் தயங்கி நின்றார்கள். பிறகு அவள் நல்லிரவு கூறினாள். அவனும் நல்லிரவு கூறினான். அத்துடன் கைகளைக் குலுக்கினார்கள். அது மிக விசித்திரம். ஏனெனில் இரவில் பிரிவது ஏதோ புதியதும் அச்சந்தரும் விசயம்போலவும் இருந்தது.

அவன் நேரே வீட்டுக்குப் போகவில்லை. ஏனெனில் நம்பிக்கை இழந்த நிலையிலும் இந்த விசித்திரமான பிரிவைப் பிடித்துக்கொண்டிருக்க விரும்பினான். படித்தவன் ஆனபடியால் அவன் யாரைச் சந்திப்பான் என்பதைப் பற்றி பயப்படவில்லை. அதனால் அவன் ஆற்றின் கரைக்குச் சென்று அதன் கரையோரம் மேலும் கீழும் நடந்தான். அவன் பல நேரம் அங்கிருந்திருக்க வேணும். ஏனெனில் இரவு முகமூடியின் மரச் சங்கின் ஒலி கேட்டபோது அவன் அங்கிருந்தான். உடனடியாக வீட்டை நோக்கி அரைவாசித் தூரம் ஓடியும் அரைவாசித் தூரம் நடந்தும் சென்றான். ஏனெனில் இரவு முகமூடி மூட நம்பிக்கையான விசயமல்ல. அவை உண்மை. அவை இரவைத்தான் தங்கள் கேளிக்கைகளுக்கான நேரமாகத் தெரிவு செய்துகொள்ளும். ஏனெனில் வௌவால்களைப் போல அவற்றின் அருவருப்பும் பெரிது.

அவசரத்தில் அவன் ஏதோவொன்றில் மிதித்துவிட்டான். அது சிறிய திரவமாக வெடித்தது. அவன் நின்று அந்த ஒற்றையடிப் பாதையைப் பார்த்தான். சந்திரன் இன்னும் மேலெழவில்லை. ஆனால் மங்கலான வெளிச்சம் பரவி சந்திரன் வெளிவருவதற்கு அதிக நேரமில்லை என்பதைக் காட்டியது. அந்த அரை வெளிச்சத்தில் பலியிட்ட முட்டையை மிதித்துவிட்டதை உணர்ந்தான். இன்னல்களுக்கு ஆளான ஒருத்தன், தான் படைத்த முட்டையை அந்திப்பொழுதில் அச்சந்தியில் கொண்டு வைத்திருக்கிறான். அதை இவன் மிதித்துவிட்டான். அந்தப் படைப்பைச் சுற்றி வழக்கமாக வைக்கப்பட்டிருக்கும் இளம் தெங்கோலை இருந்தது. ஆனால் யூலியஸ் அதை வித்தியாசமாகப் பார்த்தான். அதாவது ஒரு வீட்டில் கொடுமையான கலைஞன் தன் வேலையைச் செய்திருக்கிறான் என்று. பாதையிலுள்ள மணலில் தன் பாதத்தைத் துடைத்துவிட்டு அவசரமாகப் போய்விட்டான். தெளிவற்ற இன்னுமொரு கவலையையும் அவன் மனதில் சேர்ந்துகொண்டது. ஆனால் அவசரப்படுவதில் இப்போது பிரயோசனமில்லை. விரைந்து செல்லும் கால்களை உடைய முகமூடி ஏற்கெனவே தொலைதூரம் சென்றுவிட்டது. சிலவேளை அது நிலவு வெளிச்சம் வரப் போகிறதென்று தெரிந்து அதற்கு முன் அவசரமாகப் போய்விட வேண்டுமென்று போயிருக்கலாம். அந்த அமைதியான இரவின் காற்றில் அதன் குரல் அதிக உயரத்துக்கு, தெளிவாக மேலெழுந்தது ஒளி

வீசும் வாளைப் போல. இன்னும் அது அதிக தூரத்தில் இருந்தது. ஆனால் அதன் முன் தூரங்கள் மறைந்து விடும் என்பது யூலியஸுக்குத் தெரியும். அதனால் அவன் தெருவின் பக்கத்திலுள்ள கொக்கோக் கிழங்குத் தோட்டத்திற்கு ஓடி, அங்கிருந்த பெரிய இலைகளின் பாதுகாப்பில் வயிறு குப்புற விழுந்தான். அதை அவன் செய்திருக்கக்கூட மாட்டான். அவ்வேளை ஆவியின் கிலுகிலுப்பைப் பொல்லின் சத்தமும், இடிபோல் முழங்கும் அந்நியப் பேச்சின் பிரவாகமும் அவனுக்குக் கேட்டன. அவன் தேகம் முழுவதும் நடுங்கியது. அவனின் முகத்தை அந்த ஈர மண்ணுடன் அமத்துவது போலச் சத்தங்கள் அவனைத் தாக்கின. இப்போது அவனால் காலடிச் சத்தங்களைக் கேட்க முடிந்தது. இருபது கெட்ட மனிதர்கள் ஒரே நேரத்தில் ஓடி வருவதுபோலக் கேட்டது. கிலியால் உடல் முழுவதும் வியர்த்தது. திரும்பவும் எழுந்து ஓடுவோமா என்று அவனை அது உந்தியது. அதிஷ்டவசமாக அவன் தன்னைக் கட்டுப்படுத்திவிட்டான் ... இடி முழக்கம், கடும் மழை, பூமி நடுக்கம், வெள்ளப் பெருக்கு ஆகிய அத்தனை அநர்த்தங்களும் விரைவாகத் தொலைதூரம் சென்று அடுத்த தெருவுக்கு அப்பால் மறைந்துவிட்டன.

அடுத்த நாட்காலை தலைமை எழுத்தனின் பணிமனையில் மண்ணின் மைந்தன் ஒருவன், முதல் நாளிரவு சில தலைக்கனம் பிடித்த இளைஞர்கள் பெரியவர்களை மதிக்காமல், சத்தமிடும் விரைந்து செல்லும் முகமூடி கிற்றிக்பாவை சினமூட்டிவிட்டார்கள் என்றும், அதைக் கடும் கோபத்துக்குள்ளாக்கிவிட்டார்கள் என்றும் ... கசப்பாகப் பேசிக்கொண்டிருந்தான்.

கீழ்ப்படியாத அந்த இளைஞர்கள் உண்மையில் கிற்றிக்பாவின் சக்தியை இதுவரை அனுபவிக்கவில்லை. அவர்கள் அதைப்பற்றிக் கேள்விப்பட்டு மட்டுமே உள்ளார்கள். விரைவில் அவர்கள் பாடம் படிப்பார்கள்.

வெறுமையான அந்தச் சந்தையை யன்னலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த யூலியஸ் திரும்பவும் அந்த இரவின் பயங்கரத்தை அனுபவித்தான். அது நடந்து ஒரு கிழமை தானும் செல்லவில்லை. இருந்தும், அது பிரமாண்டமான வெறுமையால் நிகழ்காலத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஏற்கெனவே மற்றொரு பிறப்பில் நடந்ததுபோல ஆகி இருந்தது. நாட் செல்லச் செல்ல அந்த வெறுமை ஆழமாகிக் கொண்டிருந்தது. அதன் இந்தப் பக்கத்தில் யூலியஸ் நின்று கொண்டிருந்தான். அதன் அடுத்த பக்கத்தில் மாவும் ஜனெற்றும் அந்தப் பயங்கரக் கலைஞனால் ஒப்பனை செய்யப்பட்டு நின்றுகொண்டிருந்தார்கள்.

'The Sacrificial Egg' - Chinua Achebe

# லப்பினும் லப்பினோவும்

## வேர்ஜினியா வுல்ஃப்

*அவர்கள் திருமணம் முடித்துவிட்டனர். திருமண ஊர்வலம் கிளம்பியது. புறாக்கள் சிறகடித்தன. ஈற்றன் ஐக்கற்றுக்களில் நின்ற சின்னப் பையன்கள் அரிசி வீசினர். ஃபொக்ஸ் ரெறியர் நாய் வழியில் குறுக்காக நடந்தது. துளைத்துப் பார்க்கும் படு அந்நியர்களின் அச்சிறு கூட்டத்துக்கூடாக தன் மணப்பெண்ணைக் காருக்கு அழைத்துச் சென்றான் ஏர்ணெஸ்ற் தோபேண். மற்றவர்களின் மகிழ்ச்சியையோ கவலையையோ ரசிப்பதற்கு லண்டனில் எப்போதுமே அப்படியான கூட்டம் சேர்ந்துவிடும். உண்மையாகவே, அவன் அழகானவனாகவும் அவள் நாணத்துடனும் காணப்பட்டனர். மேலும் அதிகம் அரிசி வீசப்பட்டது, கார் வெளிக்கிட்டுப்போனது.*

*அது ஒரு செவ்வாய்க்கிழமை. இப்போது இது சனிக்கிழமை. றோசலின்ட் இன்னும் திருமதி ஏர்ணெஸ்ற் தோபேண் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டி இருந்தது. காலைச் சாப்பாட்டுக்காகக் கணவன் இறங்கி வரும்வரை காத்துக்கொண்டு, ஹோட்டலின் குழிந்த ஜன்னலில், வாவிகளுக்கப்பால் உள்ள மலைகளைப் பார்த்துக்கொண்டிருந்த அவள், திருமதி ஏணெஸ்ற் என்ற உண்மையை ஒருவேளை பழகாமலே போய்விடுமோ என்று யோசித்தாள். ஏணெஸ்ற் என்ற பெயர் பழகுவதற்குச் சிரமமான பெயர். அவளாக இருந்தால் அந்தப் பெயரைத் தெரிவு செய்திருக்க மாட்டாள். திமொதி, அன்ரனி அல்லது பீற்றர் என்ற பெயர்களையே விரும்பி இருப்பாள். அத்துடன் அவன் ஏணெஸ்றைப் போலவும் இல்லை. அந்தப் பெயர் அல்பேற் ஞாபகார்த்த மண்டபத்தை ஞாபகப்படுத்தியது. மஹோகனி பக்கப் பலகையையும் அரசன் அல்பேற்றும் அவன் குடும்பத்துடன் எஃகு வேலைப்*

பாட்டு அச்சுக்களையும் போச்செஸ்ரர் ரெறசில் இருக்கும் மாமி வீட்டு உணவு மேசையையும் சுருக்கமாக ஞாபகப்படுத்தியது (விக்ரோறியன் கலாச்சாரத்தைப் பிரதிபலித்த இந்த ஞாபகார்த்த மண்டபத்தை வுல்ஃபின் காலத்தில் கேலி செய்வார்கள்).

இதோ அவன் வந்துவிட்டான். நல்ல காலம். அவன் ஏணெஸ்ரைப் போல் தோற்றமளிக்கவில்லை. இல்லை. அப்படி என்றால் யாரைப் போல் தோன்றுகிறான்? பக்கவாட்டிற்கு அவனைப் பார்த்தாள். சரி. முறுகல் பாணைச் சாப்பிடும் போது ஒரு முயல்போலத் தெரிகிறான். வேறு எவராக இருந்திருந்தாலும் அந்தச் சிறிய, பயந்த சுபாவமுள்ள மிருகத்துக்கும் இந்த நாகரிகமான, திரண்ட சதைப்பிடிப்பான, நேரான மூக்கையும், நீலக் கண்களையும், பலமான வாயையும் உடைய இந்த வாலிபனுக்கும் ஒற்றுமையைக் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அதுதான் எல்லாவற்றிலும் மேலான வேடிக்கையாக இருக்கிறது. சாப்பிடும்போது அவனுடைய மூக்கு சாடையாகச் சுளித்தது. அதுபோலத்தான் அவளுடைய செல்லப்பிராணியான முயலும். அவனுடைய மூக்கு இழுப்பதை அவள் கவனித்துக்கொண்டிருந்தாள். தான் ஏன் சிரிக்கிறேன் என்று அவனுக்கு அவள் விளங்கப்படுத்த வேண்டி இருந்தது.

“ஏணெஸ்ற், நீ ஒரு முயலைப் போல இருக்கிறாய்,” என்றாள் அவள். “காட்டு முயலைப் போல.” அவனைப் பார்த்து இன்னும் சேர்த்துச் சொன்னாள். “வேட்டையாடும் முயல். அரச முயல். மற்ற எல்லா முயல்களுக்கும் சட்டங்கள் உருவாக்கும் முயல்.”

அப்படிப்பட்ட முயலாய் இருப்பதற்கு ஏணெஸ்ற்றுக்கு ஆட்சே பணை எதுவும் இல்லை. அவனுடைய மூக்கு சுளித்துக் கொள்வது அவளுக்கு வேடிக்கை ஊட்டுகிறதாக இருக்கிறபடியால் –அவனு டைய மூக்கு இப்படி இழுப்பது அவளுக்கு முன்பு தெரியவே தெரியாது. – அவன் இப்போது வேண்டுமென்றே இழுத்தான். அவள் சிரி சிரி என்று தொடர்ந்து சிரித்தாள். அவனும் சேர்ந்து சிரித்தான். அதனால் அங்கிருந்த இளம் பெண்களும் மீன் பிடிப்பவ னும், எண்ணெய்க் கறை படிந்த கறுத்த ஜாக்கெற்றிலிருந்த சுவிஸ் பரிசாரகனும் எல்லோருமே மகிழ்ச்சி அடைந்தனர். அந்த மகிழ்ச்சி எவ்வளவு நேரம் நின்று பிடிக்கும்? அவர்கள் தங்களையே கேட்டுக் கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சூழ்நிலைக்கேற்ப பதிலளித்துக்கொண்டனர். மதிய உணவு நேரம் வாவிக்குப் பக்கத்தி லிருந்த செடிக்கும்பியில் இருந்து கொண்டு றோசலிண்ட் “முயலே, உனக்குக் கீரை வேணுமா?” என்று நன்றாக அவித்த முட்டையுடன் சாப்பிடக் கொடுத்த கீரையை நீட்டினாள். “வந்து என் கையிலிருந்து எடு” என்று சேர்த்துச் சொன்னாள். அவன் முகத்தை நீட்டிக் கீரையைக் கொறித்துவிட்டு மூக்கைச் சுளித்தான்.

“நல்ல முயல். நைஸான முயல்.” தன் செல்ல முயலைத் தட்டுவது போல அவனைச் செல்லமாகத் தட்டிக் கொண்டு சொன்னாள்.

ஆனால் அது அபத்தமானது. அவன் எதுவாக இருந்தாலும் அவன் அவள் வளர்த்த முயல் அல்ல. முயலின் பெயரைப் பிரெஞ்சு மொழிக்கு மாற்றி “லப்பின்” என்று அழைத்தாள். அவன் எதுவாக இருந்தாலும் அவன் ஃப்ரெஞ் முயல் அல்ல. அவன் கலப்பற்ற, உண்மையான ஆங்கிலேயன். – போச்செஸ்ரர் றெறசில் வளர்ந்தவன். றக்பியில் கல்வி கற்றவன். இப்போது அரச சிவில் சேவிசில் லிகிதர். அதனால் அடுத்ததாக “ப்பன்னி” என்ற பெயரைக் கொடுத்துப் பார்த்தாள். அது மிக மோசமாக இருந்தது. ப்பன்னி என்றால் கொழுத்த, மிருதுவான ஆனால் கோமாளித்தனமானதாக இருக்கும். இவனோ மெலிந்தவன். கடினமானவன். காரியார்த்தன். நகைச்சுவை அற்றவன். இருந்தும் அவனுடைய மூக்குச் சுளிக்கிறது. “லாப்பின்” என்று சடுதியாக கூவினாள். தான் விரும்பித் தேடிய வார்த்தை கிடைத்து விட்டது போல ஒரு சிறிய கீச்சொலி எழுப்பினாள்.

“லாப்பின், லாப்பின், லாப்பின் அரசன்” என்று திரும்பத் திரும்பச் சொன்னாள். அவனுக்கு அது சரியாகப் பொருந்துவதாகத் தோன்றியது. அவன் ஏணெஸ்ற் அல்ல. லாப்பின் அரசன். ஏனென்று அவளுக்குத் தெரியாது.

தனியாக நீண்ட நேரம் நடந்து உலவப் போகையில், அவர் களுக்குப் புதிதாகப் பேசுவதற்கு ஒரு விஷயமுமே இருக்கவில்லை. மழை பெய்யும் என்று அனைவரும் எச்சரித்தது மாதிரியே அங்கு மழையும் பெய்தது. குளிராக இருந்து மாலை நேரத்தில் நெருப்படி யில் இருவரும் அமர்ந்திருக்கும்போதும், இளம் பெண்களும், மீன் பிடிகாரனும் போன பின்பு – மணி அடிக்கும் போது மட்டும் பரிசாரகன் வருவான் – அவள் தன்னுடைய லாப்பின் அரசன் சம்பந்தமான கற்பனையுடன் விளையாட ஆரம்பிப்பாள். அப்போது அவள் பின்னிக்கொண்டும், அவன் வாசித்துக்கொண்டும் இருப்பார் கள். அவளுக்கு லாப்பின் பாத்திரங்கள் மிக யதார்த்தமாக, மிகப் பளிச்சென, மிக வேடிக்கை ஊட்டுவதாக இருக்கும். ஏணெஸ்ற் பத்திரிகையைப் போட்டுவிட்டு அவளுக்கு உதவி செய்வான். அங்கு கறுப்பு முயல்களும் சிவப்பு முயல்களும் இருக்கும். சிநேகித முயல்களும், எதிரி முயல்களும் இருக்கும். அவை வாழ்ந்த காடிருக் கும். அதைச் சுற்றி புல்வெளிகளும் சதுப்பு நிலங்களும் இருக்கும். அனைத்திற்கும் மேலாக அங்கு லாப்பின் அரசன் இருப்பான். மூக்குச் சுளிக்கும். ஒரு விளையாட்டைத் தவிர நாள் போகப் போக அவனிடம் மிருகத்துக்கான அதி உயர்ந்த பண்பும் இருந்தது. றோசலின்ட் அவனிடம் புதிய புதிய குணங்கள் இருப்பதைக் கண்டாள். எல்லாவற்றிலும் பார்க்க அவன் பெரியதொரு வேட்டைக்காரன்.

தேனிலவின் கடைசி நாளில் றோசலின்ட் கேட்டாள்: “அரசன் இன்று என்ன செய்தான்?”

உண்மையில் அன்று முழுவதும் மலையேறிக்கொண்டிருந்தார் கள். அவளின் குதிகாலில் ஒரு கொப்புளம் வந்திருந்தது. அந்தக் கேள்வியைக் கேட்டபோது அதைக் குறித்து அவள் கேட்கவில்லை.

“இன்று ... அவன் ஒரு முயலைத் துரத்தினான்.” தனது சுருட்டின் நுனியைக் கடித்துக்கொண்டிருக்கும்போது மூக்கைச் சுளித்துக் கொண்டே ஏணெஸ்ற் சொன்னான். பின் அதை நிறுத்திவிட்டு ஒரு நெருப்புக் குச்சியைத் தட்டிவிட்டு, திரும்பவும் மூக்கைச் சுளித்தான். “ஒரு பெண் முயல்” என்று திரும்பவும் சேர்த்துச் சொன்னான்.

“ஒரு வெள்ளை முயல்” அதை எதிர்பார்த்தது போலவே றோசலின்ட் வியந்து கூவினாள். “ஒரு சிறிய முயல். வெள்ளிப் பழுப்பு நிறம். பிரகாசமான பெரிய கண்கள். இல்லையா?”

அவள் அவனைப் பார்க்கும்போது அவளைப் பார்த்துக் கொண்டே “ஆம், அது சிறிய மிருகம். அதன் தலையிலிருந்த கண்கள் கிளம்பி ... இரண்டு சிறிய முன்னங்கால்கள் ஆடிக் கொண்டு ...” கைகளில் அவள் தைத்துக்கொண்டிருந்த ஆடைகள் ஆட, கண்கள் பெரிதாக, பிரகாசமாக சிறிது தூக்கலாக இருக்க சரியாக அப்படித்தான் அவள் இருந்தாள்.

“ஆ ... லப்பினோவா” றோசலின்ட் முணுமுணுத்தாள்.

“அவளை அப்படித்தானா அழைப்பார்கள்? என் உண்மையான றோசலின்ட்” ஏணெஸ்ற் கேட்டுவிட்டு அவளைப் பார்த்தான். அவளை அவன் அதிகம் நேசிப்பது போல உணர்ந்தான்.

“ஆம். அவளை அப்படித்தான் அழைப்பார்கள். லப்பினோவா” என்றாள் றோசலின்ட். அன்று அவர்கள் படுக்கைக்குப் போகுமுன் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டன. அவன் லாப்பின் அரசன். அவள் அரசி லப்பினோவா. அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் எதிர் எதிரானவர்கள். அவன் துணிந்தவன். தீர்மானவன். அவள் முன்னெச்சரிக்கையுள்ளவள். நம்பத்தகாதவள். அவன் முயல்களின் சுறுசுறுப்பான உலகத்தை ஆளுபவன். அவளுடைய உலகம் தனிமையானது. புதிரானது. நிலவொளியில் எல்லை வகுப்பாள். இருந்தும் அவர்கள் பிரதேசங்கள் ஒன்றை ஒன்று தொட்டன. அவர்கள் இருவரும் அரசனும் அரசியும்.

அங்ஙனம் அவர்கள் தங்கள் தேனிலவிலிருந்து திரும்பி வரும் போது அவர்கள் தங்கள் பிரத்தியேகமான உலகங்களை வைத்திருந் தனர். அவ்வுலகத்தில் ஒரு வெள்ளை முயலைத் தவிர மற்றவை எல்லாம் குழிமுயல்களே வாழ்ந்தன. அப்படி ஒரு உலகம் இருக்கிற தென்று வேறெவருமே நினைக்கவில்லை. அதனால் அவ்வுலகம் மேலும் வேடிக்கையானது. அது இந்த உலகத்தின் மற்ற இளம் தம்பதியர்களுக்கு எதிராக இவர்களை நினைக்க வைத்தது. மனிதர் கள் குழிமுயல்கள், காடுகள், பொறிகள், சுடுதல் பற்றியெல்லாம் கதைக்கும் போது இருவரும் தங்களை அடிக்கடி களவாகப்

பார்த்துக் கொள்வார்கள். அல்லது மேரி அன்ரி சாப்பிடுவதற்கு முயலை – அது ஒரு குழந்தை மாதிரி – வைத்திருப்பதைத் தன்னால் பொறுக்க முடியாது என்று கூறும்போது ஒருவரை ஒருவர் சாடை மாடையாகப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக் கொள்வர். வேட்டை யாடும் ஏணெஸ்ற்றின் சகோதரன் ஜோன் வில்ற்ஷயரில் இலையுதிர் காலத்தில் முயலும் தோலும் பிறவும் என்ன விலை போகின்றன என்று சொல்லும்போதும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக்கொள்வர். சிலவேளை அவர்களுக்கு வேட்டைக்காட்டுக் காவலர், களவாக வேட்டையாடுபவன் அல்லது பண்ணைப் பிரபு தேவையாக இருந்தால் அவர்களின் பாத்திரங் களை இவர்கள் தங்களுக்குள் பகிர்ந்து தங்களுக்குள்ளேயே சந்தோசப்பட்டுக்கொள்வர். உதாரணமாக, ஏணெஸற்றின் தாயார் திருமதி றெஜினொல்ட் தோபேண் பிரபுவின் பாத்திரத்துக்குப் பூரணமாகப் பொருந்தினாள். ஆனால் அவை அனைத்தும் மிக இரக சியமானவை. அதுவே அதில் முக்கியமானது. அவர்களைத் தவிர வேறெவருக்கும் அப்படியானதொரு உலகம் இருப்பது தெரியாது.

அந்த உலகம் இன்றி அந்தப் பனிக்காலத்தை எப்படி அவளால் கழித்திருக்க முடியும் என்றே றோசலின்ட் வியந்தாள். உதாரணமாக, போச்செஸ்ரர் ரெறசில் தோபேண் தம்பதியர் ஐம்பதாம் ஆண்டு திருமண விழாவைக் கொண்டாடக் கூடினார்கள். அது எத்தனை பேரின்பமான விசயம். அவர்கள் திருமணம் செய்ததனால்தானே ஏணெஸ்ற் தோபேண் பிறந்தான். அத்திருமணம் எவ்வளவு பயனு டையது. அதனால் தானே வேறு ஒன்பது ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் எந்த நிபந்தனைகளும் அற்றுப் பிறந்தார்கள். அவர்களில் பலர் திருமணம் ஆகிக் குழந்தைகளும் பெற்றுள்ளனர். அவர்களை அவள் வெறுத்தாள். ஆனால் அவர்களை அவளால் தவிர்க்க முடியவில்லை. அவள் மேல்மாடிக்கு ஏறிப் போகும்போது மட்டுந்தான் தான் ஒரே குழந்தை என்றும் அநாதையாகவும் கசப் புடன் உணர்ந்தாள். தோபேண் குடும்பத்தவர்களில் பளபளக்கும் சற்றின் சுவர்க் கடதாசியும் பகட்டான குடும்பப் படங்களையும் கொண்ட வீட்டின் பெரும் வரவேற்பறையில் கூடி இருந்தவர்களில் அவள் ஒரு சிறு துளியாக தன்னை உணர்ந்தாள். வாழ்ந்துகொண் டிருந்த தோபேண் குடும்பத்தவர்கள் படத்தில் தீட்டியிருந்தவர்களை உருவத்தில் ஒத்திருந்தார்கள். தீட்டியிருந்த இதழ்கள் இல்லாமல் இவர்களுக்கு உண்மையான இதழ்கள் இருந்ததைத் தவிர. அவர் களின் இதழ்களிலிருந்து பகிடிகள் வந்தன. வகுப்பறைகளைப் பற்றி. பராமரிப்பவளின் கதிரையை இழுத்து அவளை எப்படி விழுத்தி னார்கள் என்பது பற்றி. தவளைகளைப் பற்றி. அவற்றை எப்படி இளம் பெண்களின் படுக்கை விரிப்பின் கீழ் போட்டார்கள் என்பது பற்றி. ஆனால் அவளிடமோ சாதாரண எளிய கட்டில் கூட இருந்ததில்லை. பெருமதிப்புள்ள மஞ்சள் சற்றின் அணிந்துகொண்டி ருந்தார் அவள் கணவனின் தாய். அவள் கணவனின் தந்தை

மஞ்சள் கார்னேஷன் பூவுடனிருந்தார். அவர்களிடம் தனது பரிசைக் கையில் எடுத்துக்கொண்டு மெதுவாகச் சென்றாள். அவர்களைச் சுற்றி மேசைகளிலும் கதிரைகளிலும் ஐம்பதாண்டு – தங்க விழா – தங்க அன்பளிப்புக்கள் கிடந்தன. சில பருத்திக் கம்பளிகளால் அணைக்கப்பட்டு வழுவழுத்தன. சில ஒளி பொருந்திய மெழுகு வர்த்தி தட்டுக்கள். சுருட்டுப் பெட்டிகள். சங்கிலிகள். ஒவ்வொன்றும் பொற்கொல்லனின் முத்திரையுடன். அவை உண்மையான மாற்றுக் குறையாத தங்கம் என்று முத்திரை குத்தப்பட்டவை. ஆனால் அவள் கொடுத்த பரிசுப் பொருளோ போலித் தங்கத்தால் செய்யப்பட்ட பெட்டி. ஓட்டை விழுந்தது. பழைய மண் வார்ப்பு. 18 ஆம் நூற்றாண்டு தொல் பொருள். ஈர மையை உலர்த்துவதற்கு, மண்ணைத் தூவுவதற்குப் பயன்படும் மண் தூவி. அது பயனற்ற ஒரு பொருள் என்று அவள் நினைத்தாள். மை ஒற்றும் தாள் உள்ள யுகத்தில் ஒன்றைக் கொடுப்பதற்காக அதைக் கொடுக்கும்போது அப்படி நினைத்தாள். அவர்களின் நிச்சயதார்த்தம் நடந்த போது அவளின் மாமியார் “எனது மகன் உன்னைச் சந்தோசமாக வைத்திருப்பான்” என்று தான் நம்புவதாகக் கறுத்த மையினால் எழுதி வெளிப்படுத்திய வாசகம் அவள் முன் தோன்றியது. இல்லை. அவள் சந்தோசமாகவே இல்லை. ஏணெஸ்றைப் பார்த்தான். நேர்க் கோலைப் போல நேராகப் பார்த்தாள். குடும்பப் படங்களில் உள்ள மற்ற எல்லா மூக்குகளைப் போலத் தான் அவனுடையதும் இருந்தது. அது எக்காலமுமே சுளிக்கவே சுளிக்காத ஒரு மூக்கு.

அதன் பிறகு அவர்கள் இரவுச் சாப்பாடு சாப்பிடப் போனார்கள். பெரிய க்ரிசாந்தமம் பூ அவளை அரைவாசிக்கு மேல் மூடிவிட்டது. அது தன் சிவந்த தங்க நிறமான இதழ்களைப் பெரிய இறுகிய பந்துகளாகச் சுருட்டி இருந்தது. ஒவ்வொன்றும் தங்கம். தங்கத்தால் ஓரம் போடப்பட்ட பலகை. தங்கத்தால் போடப்பட்ட பெயரின் முதல் எழுத்துக்கள். அதற்குள் வைத்திருந்த பட்டியலில் அவர்களுடைய மேசையில் வைக்கப்படும் உணவு வகைகளின் பெயர்கள். அவள் தனது கறண்டியைத் தெளிந்த தங்க நிறமான திரவத்துள் வைத்தாள். தனி வெள்ளிப் பனி மூட்ட விளக்கு வெளிச்சத்தால் தங்க நிறக் கலவையாகி உணவுத் தட்டுக்களின் ஓரங்களை மங்கலாக்கியது. அன்னாசிப் பழத்துக்குக் கரடு முரடான தங்க நிறமுள்ள தோலை அளித்தது. அவள் மட்டுந்தான் அவளின் வெள்ளை நிறத் திருமண ஆடையில் தன் எடுப்பான கண்களால் கூர்ந்து முன்னே பார்த்தாள். அது மின்னும் பனித்துளிக் கூர் போலக் கரையாமல் இருந்தது.

இரவு விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அறை வெப்பத்தால் புகையாகியது. ஆண்களின் நெற்றிகளில் வியர்வை முத்துக்களாகித் தெரிந்தன. அவள் தன் பனித்துளிக் கூர் நீராகிவிட்டதாக உணர்ந்தாள். கரைந்துவிட்டாள். கலைந்துவிட்டாள். வெறுமைக்குள் கரைந்துவிட்டாள். விரைவில் மயங்கியும் விடுவாள். தலை வீக்கத்துக்

கூடாக, காதில் கேட்கும் சத்தத்துக்கூடாக ஒரு பெண்ணின் குரல் உயர்ந்து சத்தம் செய்வதைக் கேட்டாள்: "அவர்கள் அப்படி உற்பத்தி செய்கிறார்களே"

தோபேண் குடும்பத்தவர்கள் – ஆம். அப்படித்தான் உற்பத்தி செய்கிறார்கள் – அவள் எதிரொலித்தாள். அவள் தலை சுற்றியதால், அவளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தவர்களின் வட்டமான சிவந்த முகங்கள் இருட்டாகி விட்டன. அத்துடன் அவை சுற்றியிருந்த தங்க நிறப் புகையால் பெரிதாகத் தெரிந்தன. "அவர்கள் அப்படி உற்பத்தி செய்கிறார்கள்." பிறகு ஜோன் சத்தமிட்டான்:

"சின்னப் பிசாசுகள் . . . அவற்றைச் சுடுங்கள். உங்கள் பூட்ஸ் கால்களால் அவற்றை மிதியுங்கள்! அவற்றை அழிப்பதாக இருந்தால் அது தான் ஒரே வழி . . . குழி முயல்கள்!"

அந்த வார்த்தையில், அந்த மந்திர வார்த்தையில் அவள் உயிர் பெற்றாள். பூங்கொத்தின் வழியாக ஏணெஸ்ற்றின் மூக்குச் சுளிப்பைப் பார்த்தாள். அது அலை எழுப்பியது. அது அடுத்தடுத்த சுளிப்புடன் அலை ஆடியது. அத்துடன் தோபேண் குடும்பத்தில் ஒரு மறை புதிரான பெருங்கேடு விழுந்தது. தங்க மேசை மலர்ந்த மஞ்சட் பூக்கள் நிறைந்த பொட்டல் வெளிபோலக் காட்சி தந்தது. குரல்களின் இரைச்சல் வானத்திலிருந்து அசைந்து வரும் வானம் பாடியின் சிரிப்பின் ஓர் ஓசையாக மாறியது. நீல வானத்தில் மேகங்கள் மெதுவாக அசைந்தன. அவர்கள் அனைவருமே மாறி விட்டனர். தோபேணின் குடும்பம் அனைத்தும். தன் கணவனின் தகப்பனைப் பார்த்தாள். மை பூசிய மீசையுடனுள்ள கள்ளத்தன மான சிறிய மனிதன். அவருடைய பலவீனம் பொருட்கள் சேகரிப் பது – முத்திரைச் சின்னங்கள், எனாமல் பூச்சுப் பூசிய பெட்டிகள், 18 ஆம் நூற்றாண்டு மேசைகளிலுள்ள சிறிய பொருட்கள் –அவற்றைத் தன் மனைவிக்குத் தெரியாமல் களவாகத் தன் படிப் பறையில் உள்ள லாச்சிகளில் ஒளித்துவைத்திருக்கிறார். இப்போது அவரை அப்படியே பார்த்தாள். களவாக மற்றவர்களின் பறவைகளைத் திருடுபவர். அவருடைய மேலங்கிகள் நெடுவால் கோழி, கௌதாரி முதலியவற்றால் தள்ளிக் கொண்டு நிற்கக் கொண்டு வந்து தன் புகை மண்டிய குடிசைக்குள் உள்ள மூன்று கால் பானைக்குள் களவாகப் போடுவார். அதுதான் அவளின் உண்மையான மாமன். கணவனின் தகப்பன். களவாக வேட்டையாடுபவன். அத்துடன் சீலியா. அவர்களின் திருமணமாகாத மகள். சிறிய விசயங்களை மறைத்து வைக்க விரும்பிய மற்றவர்களின் இரகசியங்களை மணந்து பிடிப்பவள். அவள், செந்நிறக் கண்களை உடைய வெள்ளை மரநாய். மூக்கால் மண்ணுக்கடியில் முகர்ந்தும், துளைத்தும் பார்ப்பதால் வந்த மண் பிடித்த மூக்கு. ஆண்களின் தோள்களில் விழுந்து வலையில் வீசப்பட்டது. சீலியாவின் பரிதாபகரமான வாழ்க்கை அது. அது அவளின் பிழை இல்லை. அப்படிச்

*சீலியாவைப் பார்த்தாள். அதன் பிறகு மாமியை – கணவனின் தாய் – பார்த்தாள். அவளைத்தான் அவள் நிலக்கிழத்தியாகத் தன் கற்பனையில் எண்ணினாள். இறுமாப்புள்ளவள். நாகரிகமற்றவள். எளியவரைக் கொடுமைப்படுத்துவள். அவள் தன் நன்றியைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதுதான் றோசலின்ட் – அதாவது லாப்பினோவா – அவளைப் பார்த்தாள். அவளுக்குப் பின்னாலுள்ள பாழாய்ப் போய்க்கொண்டிருக்கும் குடும்பத்தின் பெரிய வீட்டைப் பார்த்தாள். சுவரிலிருந்த சுண்ணாம்பு கழன்று கொண்டிருந்தது. மாமியார் விக்கிய குரலில் தன் மக்களுக்கு இல்லாததொரு உலகத்துக்காக நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள். மக்கள் அவளை வெறுத்தனர். சடுதியான ஓர் அமைதி நிலவியது. அவர்கள் அனைவரும் தங்கள் கிளாசுகளை உயர்த்தியபடியே நின்றனர். அவர்கள் அனைவரும் குடித்தனர். பின் அனைத்தும் முடிந்தன.*

*“ஓ! லாப்பின் அரசனே!” பனிப்புகார் மூட்டத்துள் அனைவரும் வீட்டுக்குப் போகும்போது அவள் கத்தினாள். “உன்னுடைய மூக்கு அந்தக் கணத்தில் சுளிக்காமல் விட்டிருந்தால் நான் பொறியில் பிடிபட்டிருப்பேன்!”*

*“ஆனால் நீ தப்பிவிட்டாய்” அவளுடைய முன்னங்கால்களை அழுத்திக் கொண்டு சொன்னான் லாப்பின் அரசன்.*

*“ஒரு மாதிரித் தப்பிவிட்டேன்” என்று பதிலளித்தாள்.*

*சேற்றின் பனிப்புகாரின் மஞ்சட் பூக்களின் நறுமணத்தில், பொட்டல் வெளியில், அரசனும் அரசியும் பூங்காவூடாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.*

*அப்படி நேரம் போனது. ஓராண்டு. ஈராண்டு. பனிக்கால இரவொன்று. சந்தர்ப்ப வசத்தால் அது பொன் விழா. திருமண விழா ஆண்டின் அடுத்த ஆண்டு நடந்தது. ஆனால் அப்போது திருமதி றெஜினோல்ட் தோபேண் இறந்து விட்டாள். அவர்களுடைய வீட்டை வாடகைக்குப் போட்டிருந்தார்கள். அங்கு வீட்டைப் பார்த்துக்கொண்டிருப்பவன் மட்டும் தான் தங்கி இருந்தான். ஏணெஸ்ற் தனது காரியாலத்திலிருந்து வீட்டுக்கு வந்தான். அவர்களிடம் சிறிய நல்ல வீடு இருந்தது. கென்சிங்கின் தெற்கில் குதிரைத் தளவாட வணிகர் கடைக்கு மேலுள்ள இடம். பாதாள ரயில்வேக்கு அவ்வளவு தூரம் இல்லை. குளிர். காற்றில் பனிப்புகார். றோசலின்ட் சூட்டடுப்பின் பக்கத்தில் தைத்துக் கொண்டிருந்தாள்.*

*“எனக்கு இன்று என்ன நடந்தது என்று நீ நினைக்கிறாய்?” அவன் தன் கால்களை நெருப்புக்கு நேரே நீட்டிக்கொண்டிருந்தான். அப்போதுதான் அவள் அப்படிக் கேட்டாள்:*

*“நான் சிற்றாற்றைக் கடந்துகொண்டிருக்கும்போது ...”*

*“எந்தச் சிற்றாறு” என்று கேட்டு ஏணெஸ்ற் அவளை இடைமறித்தான்.*

“எங்கள் காடு. கறுத்த காட்டைச் சந்திக்கும் இடத்திலுள்ள சிற்றாற்றின் அடிப்பகுதி.” அவள் விளங்கப்படுத்தினாள். ஏணெஸ்ற்றுக்கு ஒன்றுமே புரியவில்லை. புரியாமல் ஒரு கணம் அவளைப் பார்த்தான்.

“என்ன விசயத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்?” அவன் கேட்டான்.

“என் அருமை ஏணெஸ்ரே!” அவள் அச்சமடைந்து கத்தினாள், நெருப்பு வெளிச்சத்தில் அவள் தன் சிறிய முன்னங்கால்களை தொங்கவிட்டுக்கொண்டு. “லாப்பின் அரசன்” என்று சேர்த்துச் சொன்னாள். ஆனால் அவன் மூக்குச் சுளிக்கவில்லை. அவள் கைகள் – அவை கைகளாக மாறின – அவள் பிடித்திருந்த பொருளைப் பற்றின. அவளுடைய தலையிலிருந்து அவள் கண்கள் பாதி பிதுங்கின. ஏணெஸ்ற் தோபேணிலிருந்து லாப்பின் அரசனாக அவன் மாறுவதற்குக் குறைந்தது ஐந்து நிமிடங்களாவது அவனுக்குப் பிடித்தன. அவள் பொறுத்துக்கொண்டிருக்கையில் அவளுடைய கழுத்தின் பின்பக்கத்தில் பெரும் பாரம் ஒன்றை உணர்ந்தாள். யாரோ அவள் கழுத்தைத் திருகப் போவது மாதிரி. இறுதியில் அவன் லாப்பின் அரசனாக மாறினான். அவனுடைய மூக்குச் சுளித்தது. அவர்கள் இருவரும் காட்டில் வழமைபோல அலைந்து தங்கள் மாலை நேரத்தைக் களித்தனர்.

அவள் அன்று நன்றாக நித்திரை கொள்ளவில்லை. நள்ளிரவில் விழித்தாள். ஏதோ விசித்திரமானதொன்று நடந்துவிட்டது போல உணர்ந்தாள். குளிர்ந்து விறைத்துப்போனாள். கடைசியில் விளக்கைப் போட்டுத் தன் பக்கத்தில் படுத்திருக்கும் ஏணெஸ்றைப் பார்த்தாள். அவன் நன்றாகத் துயின்றுகொண்டிருந்தான். குறட்டை விட்டான். அவன் குறட்டைவிட்ட போதும் அவனுடைய மூக்குச் சுளிக்காமல் படுநேராக இருந்தது. எந்தக் காலமுமே சுளிக்காத மூக்குப் போலத் தோன்றியது. அது உண்மையாகவே ஏணெஸ்ற் என்பது சாத்தியம் தானா? அவள் ஏணெஸ்றை உண்மையாகவே மணம் முடித்தாளா? மாமியின் உணவறை அவளுக்கு முன்னால் காட்சி அளித்தது. அவள் அங்கே இருந்தாள். அவளும் ஏணெஸ்ற்றும் வயது போய் படங்களுக்குக் கீழ் பக்கப் பலகையின் முன் . . . அது அவர்களுடைய பொன் விழா. அதை அவளால் தாங்க முடியவில்லை.

“லாப்பின், லாப்பின் அரசன்!” அவள் குசுகுசுத்தாள். ஒரு கணநேரம் அவனின் மூக்கு தானாகவே சுளித்தது போலிருந்தது. ஆனால் அவன் இன்னும் துயின்றுகொண்டிருந்தான். “எழும்பு லாப்பின், எழும்பு” என்று அவள் கத்தினாள்.

ஏணெஸ்ற் எழுந்தான். அவள் அவனுக்குப் பக்கத்தில் நிமிர்ந்து இருப்பதைக் கண்ட அவன் கேட்டான்: “என்ன விசயம்?”

"என் குழி முயல் இறந்து விட்டது என்று நான் நினைத்தேன்." அவள் விம்மினாள். ஏணெஸ்ற்றுக்குக் கோபம் வந்தது.

"அப்படி விசர்க்கதை கதையாதே றொசலின்ட்" என்றான் அவன். "படுத்து நித்திரை கொள்."

அவன் திரும்பிப் படுத்தான். இன்னுமொரு கணத்தில் அவன் படுநித்திரையாகிப் போய்க் குறட்டை விட்டான்.

ஆனால் அவளால் நித்திரைகொள்ள முடியவில்லை. அவள் குறண்டிக்கொண்டு கட்டிலின் ஓரத்தில் படுத்திருந்தாள். ஒரு முயல் தன்னிடத்தில் படுத்திருப்பதைப் போல. அவள் விளக்கை அணைத் தாள். ஆனால் தெரு விளக்கு சீலிங்கைச் சாடையாக வெளிச்சப் படுத்தியது. வெளியில் நின்ற மரங்கள் வலைப்பின்னல் மாதிரி சீலிங்கில் நிழல் சோலையாகியது. அவள் அதில் அலைந்தாள். புரண் டாள். முறுகினாள். உள்ளேயும் வெளியேயும். சுழன்று சுழன்று. வேட்டையாடி. வேட்டையாடப்பட்டு. வேட்டை நாய்களின் குரைப்பும் ஒலியும். பறந்தாள். தப்பினாள்... தாதி திரையை விலக்கித் தேனீரைக் கொண்டு வந்தாள். அப்படியே கிடந்தாள்.

அடுத்த நாள் அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. எதையோ இழந்தவள்போல் உணர்ந்தாள். அவளுடைய உடம்பு சுருங்கிவிட்டதுபோல அவள் உணர்ந்தாள். அது சிறியதாக, கறுப்பாக, மென்மையற்றுப் போனதாக உணர்ந்தாள். அவளுடைய மூட்டுக்கள் விறைத்ததுபோலவும் உணர்ந்தாள். கண்ணாடியில் பார்த்தபோது தனது மாடி வீட்டில் பலமுறை அலைந்தபோது கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். தலையில் இருந்து அவள் கண்கள் வெடித்து விடுவன போல் உணர்ந்தாள். பணிசில் காய்ந்த முந்திரிப் பழங்கள் இருப்பன போன்ற கண்கள். அறைகளும் சுருங்கி விட்டன போல. பெரிய மேசை கதிரைகள் வெவ்வேறு கோணங்களில் நீட்டிக்கொண்டிருந்தன. அவற்றில் அவள் முட்டி மோதிக்கொண்டிருந்தாள். கடைசியாக அவள் தன் தொப்பியைப் போட்டுக்கொண்டு வெளியே போனாள். குறொம்வெல் றோட்டில் நடந்தாள். அவள் நடந்து கடந்து சென்ற ஒவ்வொரு அறையும் உணவு அறையாகத் தோன்றியது. தடித்த மஞ்சள் லேஸ் யன்னல் களும் மகோகனியில் செய்த அருகுச் சட்டங்களும் உள்ள உணவறை கள். அங்கே ஆட்கள் எஃகினால் செய்யப்பட்ட அச்சுப் படங்களின் கீழ் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். கடைசியாக, இயற்கை வரலாற்றுத் தொல்பொருள் களஞ்சியத்தை அடைந்தாள். அவள் சிறுமியாக இருந்தபோது அவளுக்குப் பிடித்த இடம் அது. ஆனால் முதன்முதல் அங்கே உள்ளே நுழைந்தபோது பார்த்தது தும்பு அடைசிய முயல். அது பொய் உறைபனியில் நின்றது. அதன் கண்கள் இளஞ்சிவப்பு கிளாசால் செய்யப்பட்டவை. எப்படியோ அது அவளைத் திரும்பவும் நடுங்கவைத்தது. அது பொழுது மயங்கும் வேளையாய் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கலாம்.

வீட்டுக்குப் போய் விளக்கைப் போடாமல் நெருப்படியில் குந்தினாள். பொட்டல் வெளியில் தான் தன்னந்தனியாக நிற்பதாகக் கற்பனை செய்ய முயற்சித்தாள். அங்கு சிற்றாறு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. சிற்றாற்றுக்கு அப்பால் ஓர் இருண்ட காடு. அவளால் அந்தச் சிற்றாற்றுக்கு அப்பால் போக முடியவில்லை. கடைசியில் அதன் கரையிலுள்ள ஈரப்புல்லில் குந்தினாள். தன் கதிரையில் குறுகிக்கொண்டிருந்தாள். அவள் கைகள் வெறுமையாக ஆடிக்கொண்டிருந்தன. கண்கள் கண்ணாடிக் கண்களைப் போல் நெருப்பு வெளிச்சத்தில் மினுங்கின. அதன் பிறகு ஒரு துவக்கு வெடிச் சத்தம் கேட்டது ... தான் சுடுபட்டது போல திடுக்கிட்டாள். அது ஏணெஸ்ற் தான். வேறெவருமில்லை. கதவில் திறப்பால் திருகிக் கொண்டிருந்தான். அவள் நடுங்கிக்கொண்டு காத்திருந்தாள். உள்ளே வந்து விளக்கின் சுவிச்சைப் போட்டான். உயர்ந்து. அழகாக. குளிரால் சிவந்த தன் கைகளை தடவிக்கொண்டு நின்றான்.

“ஏன் இருட்டில் இருக்கிறாய்?” அவன் கேட்டான்.

“ஓ ஏணெஸ்ற்!” கதிரையில் இருந்து எழுந்துகொண்டு அவள் கத்தினாள்.

“சரி. இப்போ என்ன நடந்தது?” நெருப்பில் தன் கைகளைச் சூடாக்கிக்கொண்டு வேகமாகக் கேட்டான்.

“அது லாப்பினோவா ...” அவளுடைய வெருண்ட கண்களால் அவனைப் பார்த்துக்கொண்டு அவள் தடுமாறினாள். “அது போய் விட்டது ஏணெஸ்ற். நான் அதைத் தொலைத்து விட்டேன்.” என்றாள்.

ஏணெஸ்ற் முகத்தைச் சுளித்தான். தன் இதழ்கள் இரண்டையும் ஒருசேர இறுக்கினான்.

“ஓ ... அதுதான் சங்கதியா?” விறைப்பாகத் தன் மனைவியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு அவன் சொன்னான். ஒரு பத்து விநாடிகள் நின்றான். நிசப்தமாக அவளுடைய கழுத்தின் பின்புறம் கைகள் நெரிபடுவதை உணர்ந்து கொண்டு அவளும் காத்துக்கொண்டு நின்றாள்.

“ஓம்.” கடைசியில் அவன் சொன்னான். “பாவம் லாப்பினோவா..." குசினிப் பலகையில் இருந்த கண்ணாடியில் பார்த்துத் தன் ரையை நேர்ப்படுத்திக் கொடுத்துக்கொண்டான். “பொறியில் அகப்பட்டுக் கொண்டதா? செத்துப் போச்சுதா” அவன் சொன்னான். சொல்லிவிட்டு இருந்து புதினப் பத்திரிகை வாசித்தான்.

அதுவே அவர்கள் திருமணத்தின் முடிவு.

‘Lappin and Lapinova’ - Virginia Woolf

# தாய்ப் பாசம்

## வி.எஸ். நைபோல்

லோரா ஓர் உலகச் சாதனையை வைத்திருக்கிறாள் என்று நான் நினைக்கிறேன். லோராவுக்கு எட்டுப் பிள்ளைகள்.

அதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

இந்த எட்டுப் பிள்ளைகளுக்கும் ஏழு தகப்பன்மார்.

அந்தச் சாதனையை யாரால் உடைக்க முடியும்?

இந்த லோரா தான் எனக்கு உயிரியலில் முதல் பாடத்தைப் படிப்பித்தவள். அவள் எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசித்தாள். அவளைக் கூர்ந்து அவதானித்ததால்தான் நான் என்னைக் கண்டு பிடித்தேன். அவளுடைய வயிறு மாசக் கணக்காகப் பெருத்து வருவதை அவதானிப்பேன். பிறகு ஒரு சிறிது காலம் அவளைக் காண மாட்டேன். அடுத்த முறை அவளைப் பார்க்கும்போது அவள் தட்டையாக இருப்பாள். திரும்பவும் மாவைப் புளிப்பாக்கும் செயற்பாங்கு சில மாசங்களில் ஆரம்பித்துவிடும். நான் வசித்த இடத்தில் உள்ள உலக அதிசயங்களில் எனக்கு இது ஒன்று. நான் லோராவை எப்பொழுதும் அவதானிப்பேன். அவளுக்கு நடப்பதைப் பற்றி அவளுக்கே மிக்க சந்தோசம். அதைச் சுட்டிக் காட்டிச் சொல்வாள்: “திரும்பவும் இது நிகழ்கிறது. ஆனால் அது முதல் மூன்று நாலு மாசத்திற்குப் பிறகு பழக்கமாகிவிடும். என்றாலும் அது கரைச்சல்தான்.” கடவுளைக் குறை சொல்லுவாள். ஆண்களின் கொடுமையைப் பற்றிக் கதைப்பாள்.

அவளின் முதல் ஆறு பிள்ளைகளுக்கும் வெவ்வேறு தகப்பன்மார். “சிலரைச் சந்தோசப்படுத்துவது கஷ்ரம்” என்று ஹற் சொல்லுவான். ஆனால் லோரா எல்லா நேரமும் குழந்தைகளை உருவாக்கிக்கொண்டும்

ஆண்களைப் பற்றிக் குறைகூறிக்கொண்டும் இருக்கிறாள் என்றும் தன்னை நொந்துகொண்டும் இருக்கிறாள் என்றும் ஒரு எண்ணப் பதிவை உங்களுக்குத் தர நான் விரும்பவில்லை.

அந்த வீதியில் பொகாற்தான் அதிகம் சலிப்படைந்தவன் என்றால் லோரா தான் அதிகம் உயிர்ப்புள்ளவள். அவள் எந்த வேளையும் சந்தோசமாகவே இருப்பாள். அத்துடன் என்னில் அவள் விருப்பம் உள்ளவள்.

அவளிடம் இருக்கும்போது எனக்கு மாம்பழமும் வேறு பழங்களும் தருவாள். சீனிக் கேக் செய்யும்போது எனக்கும் கொஞ்சம் தருவாள்.

என் தாய் கூட – அவளுக்குச் சிரிப்பு என்றால் பிடிக்கவே பிடிக்காது. அதிலும் விசேசமாக என் சிரிப்பு – லோராவைப் பார்த்துச் சிரிப்பாள். என் தாய் அடிக்கடி எனக்குச் சொல்லுவாள்: “அவள் உன்னை ஏன் விரும்புகிறாள். கவனிக்க அவளுக்குப் பிள்ளைகள் இல்லாத மாதிரி.”

என் தாய் சொன்னது சரி என்று தான் நான் நினைக்கிறேன். லோராவைப் போன்ற ஒருத்தி தொகையான பிள்ளைகளைப் பெறக் கூடாது என்று தான் நானும் நினைக்கிறேன். அவள் தன் எல்லாப் பிள்ளைகளையும் நேசித்தாள். ஆனால் அவள் தன் பிள்ளைகளை ஏசும் வார்த்தைகளைக் கேட்டால் நீங்கள் அப்படி நம்ப மாட்டீர்கள். அவளுடைய சத்தங்களும் வசைகளும் தான் நான் இதுநாள் வரை கேட்ட அனைத்திலுமே மிகச் செழுமையானவை. அவற்றை நான் என்றுமே மறக்க மாட்டேன்.

ஹற் ஒருநாள் சொன்னான்: “மனுஷா. வார்த்தைகளைப் பாவிப்பதில் அவள் சேக்ஸ்பியரைப் போல.”

“அல்வின், வாய் பிளந்த மிருகமே. இங்க வா!” என்று லோரா கத்துவாள்.

“கவின், இந்த நிமிஷமே நீ இங்க வராட்டி உனக்கு நெருப்புக் குசு வரச் செய்வன். கேட்டுதா” என்பாள்.

“லோனா, கவட்டைக் கால் கறுப்பு வேசை. நீ செய்வதை நீ ஏன் கவனிக்கேலாது.”

இப்போது எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயான லோராவை ஒப்புமைப்படுத்துவதற்கு எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயான சீனப் பெண்ணான மேரியை எடுப்பது அவ்வளவு நியாயம் இல்லை. ஏனென்றால் மேரி தன் பிள்ளைகளை நன்றாகப் பராமரித்தாள். பிள்ளைகளை எப்பவுமே கடிந்து பேச மாட்டாள். ஆனால் மேரியின் கணவன் கடைச் சொந்தக்காரன். அவர்களுக்கு சொப் – சூ, சௌமின், சௌஃப்பான், – அப்படிப்பட்ட பெயர்களைக் கொண்ட – போன்றவற்றைக் கொடுத்தால் அவளால் பிள்ளைகளை

பண்பாகவும் நன்றாகவும் நடத்த முடிந்தது. ஆனால் லோரா தன் பிள்ளைகளைக் கவனிப்பதற்கு எவரிடம் அப்படிப்பட்ட பணத்தை எதிர்பார்ப்பது?

லோராவின் வீட்டடியால் விசில் அடித்துக்கொண்டு சைக்கிளில் போகும் ஆண்கள் லோராவுக்காக விசில் அடிக்கிறார்களே ஒழிய லோராவின் பிள்ளைகளுக்கு எந்தக் காசையுமே கொடுக்கப்போவதில்லை. அவர்களுக்குத் தேவை லோரா மட்டுமே. லோரசுவுக்கு என்ன வருமானம் என்று என் தாயை ஒருமுறை கேட்டேன். என் தாய் என் கன்னத்தில் அறைந்துவிட்டுச் சொன்னாள்: "சின்னப் பொடியனுக்குப் பெரிய சங்கதி எல்லாம் தெரிந்துகொண்டும் என்னைக் கேக்கிறியா?" நான் எல்லாவற்றிலும் பார்க்க மோசமானதாகத்தான் நினைத்துச் சந்தேகப்பட்டேன்.

ஆனால் அவை உண்மையாக இருக்க வேண்டும் என்றும் நான் விரும்பவில்லை. ஆகவே நான் ஹற்றைக் கேட்டேன். ஹற் சொன்னான்: "சந்தையில் சாமான்கள் விற்கும் பலர் அவளுக்குச் சிநேகிதர்கள். அவளுக்குத் தேவையான பொருட்களை அவர்கள் இலவசமாகக் கொடுப்பார்கள். அதோட அவளுடைய இரண்டு மூண்டு புருஷன்மாரும் சிலவேளை சில சாமான்கள் கொடுப்பினம். ஆனால் அவை அவ்வளவு கனக்க இல்லை."

அந்த முழுப் பிரச்சினையிலுமே விசித்திரமான விசயம் என்னவென்றால் லோராதான். லோரா அழகானவள் அல்ல. போயி ஒரு நாள் சொன்னான்: "அவளுடைய முகம் மோட்டார் கார் பற்றறியின் மேற்புறம் மாதிரி." அத்துடன் அவள் பருத்தவள். நான் இப்போது சொல்வது அவளுக்கு ஆறு பிள்ளைகள் இருக்கிறபோது மட்டுமே.

ஒருநாள் ஹற் சொன்னான்: "லோராவுக்கு புதிசா ஒரு மனுசன் கிடைச்சிட்டான்." எல்லோரும் சிரித்தோம். "அது பழஞ் செய்தி. லோரா விரும்புவது ஒரு புருசனை ஒரு தரம் மட்டும்தான்."

ஆனால் ஹற் சொன்னான்: "இல்லை. இது சீரியஸ். அவன் அவளோட நிரந்தரமாக இருக்க வந்திட்டான். இண்டைக்குக் காலையில் நான் பசுக்களைக் கூட்டிக் கொண்டு போகேக்க அவனைப் பாத்தன்."

நாங்கள் அந்த மனிதனைப் பார்ப்பதற்குக் காத்திருந்தோம்.

அவனும் எங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருந்ததாகப் பின்னர் அறிந்தோம். வெகு நாட்கள் செல்ல முன்னரே நாதானியல் என்ற இந்த மனிதன் மிக்கேல் வீதிக் குழுவுக்குள் ஒருவனாகிவிட்டான். ஆனால் உண்மையில் அவன் எங்களில் ஒருவனாகவில்லை என்பது தெளிவு. அவன் போட் ஒஃவ் ஸ்பெயினின் கிழக்கில் இருந்து வந்தவன். கிழக்குப் பக்கத்தை ஊத்தையான பக்கம் என்று நாம் கருதுவது வழக்கம். அவன் பாஷை உண்மையாகவே பச்சையானது தான்.

*கிழக்குப் பகுதியில் உள்ள பிக்காடெலித் தெருவில் தான் ஒரு பயங்கரமானவன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டான். குழுச் சண்டைக் கதைகள் பலவற்றைச் சொன்னான். இரண்டு, மூன்று ஆட்களின் உருவங்களைத் தான் உருக்குலைத்திருப்பதாக எங்கள் எல்லோருக்கும் அவன் தெரிவித்திருந்தான்.*

*"இவன் அண்டப் புழுகு புழுகிறான்" என்றான் ஹற். நானும் அவனை நம்பவில்லை. அவன் உருவத்தில் சிறியவன். உருவத்தில் சிறியவர்கள் மற்றவர்களிலும் பார்க்க கொடுமையானவர்கள், வன்முறையாளர் என்று நெடுகவே எனக்கு ஓர் எண்ணம். ஆனால் நாங்கள் அவனை வெறுத்ததிற்குக் காரணம் பெண்களைப் பற்றிய அவன் மனப்பாங்கு தான். எங்களில் எவருமே வீரர் அல்ல. ஆனால் நாதனியல் பெண்களில் அவமரியாதை வைத்திருந்தான். அது எங்களுக்குப் பிடிக்கவில்லை. பெண்கள் போகும்போது அவர்களைப் பற்றி அசிங்கமாக ஏதாவது நக்கல் அடிப்பான். "பெண்கள் பசுக்களைப் போல. பசுக்களும் பெண்களும் ஒரு மாதிரித்தான்" என்று நாதனியல் சொல்வான்.*

*மிஸ் றிக்கொட் என்ற ஏழைப் பெண் போகும்போது "அந்தப் பெரிய பசுவைப் பார்" என்பான். அது நல்ல ரசனையைச் சாராதது என்பது எங்கள் எல்லோரினதும் எண்ணம். ஏனென்றால் மிஸ் றிக்கொட் மிகப் பருத்தவள். அவளைப் பார்த்துச் சிரிப்பதிலும் பார்க்க அவளைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும் என்பது எங்கள் எண்ணம்.*

*நாதனியல் ஆரம்ப கட்டங்களில் லோராவை எந்த இடத்தில் எப்படி வைக்க வேண்டும் என்று தனக்குத் தெரியும் என்று எங்களை நம்ப வைக்க முயற்சி செய்தான். தான் அவளை அடிப்பதாகவும் சாடைமாடையாகச் சொல்லியும் இருந்தான். "பெண்களும் அவையளைப் போன்றவையும் அடி வாங்க விருப்பம். உங்களுக்கு இந்த நாட்டுப்புறப் பாட்டுத் தெரியுமா?*

*அடிக்கடி அவர்களை விழுத்திப் போடு*
*அடிக்கடி அவர்களை வீசிப் போடு*
*அவர்களின் கண்களைக் கறுப்பாக்கு அப்போ*
*அவர்கள் எப்பவும் உன்னைக் காதலிப்பர்*

*அது சுவிஷேஷ உண்மை."*

*ஹற் சொன்னான் : "உண்மையில் இந்தப் பெண்களே வேடிக்கை யானவர்கள்தான். லோராவைப் போன்ற பெண்கள் நாதனியலில் எதைக் காண்கிறார்களோ?"*

*எடோஸ் சொன்னான்: "எனக்குப் பெண்களைப் பற்றிக் கனக்கத் தெரியும். நான் நினைக்கிறன். நாதனியல் கனக்கப் பொய் சொல் றான். அவன் லோராவோட இருக்கேக்க தன்ர வால மடக்கிக் காலுக்குள்ள வைச்சண்டு இருக்க வேணும்."*

அங்கே இருந்து சண்டையும் பிள்ளைகளின் கூக்குரலும் தான் வரும். ஆனால் நாதனியலைப் பார்க்கும்போது அவன் சும்மா சொல்லுவான்: "அவளுக்குக் கொஞ்ச அறிவு வர சும்மா அடிச்சன்."

ஹற் சொன்னான்: "வேடிக்கையான விசயம் என்னண்டா லோராவைப் பாத்தா கொஞ்சமும் கவலைப்படுறவளாத் தெரியேல்ல."

நாதனியல் சொன்னான்: "உண்மையில் அவளைச் சந்தோசமா வைச்சிருக்கிறதெண்டா அவளைக் கொஞ்சம் மொந்த வேணும்."

நாதனியல் உண்மையில் பொய் சொன்னான். அவனில்லை அவளை அடிப்பது லோராதான் அவனை அடித்தாள். நாதனியல் ஒரு நாள் அடிவாங்கி வீங்கிய கண்ணை மறைப்பதற்காக தொப்பி ஒன்றை அணிந்திருந்த போது அந்தக் குட்டு வெளிப்பட்டது.

எடோஸ் சொன்னான்: "அந்தக் கலிப்சோ பாட்டை ஆண்களுக்காகத்தான் பாடி இருக்கிறார்கள் போல. பெண்களுக்காக இல்ல."

நாதனியல் உருவத்தில் சிறியவனும் மெலிந்தவனுமான எடோசை அடிக்க முயற்சித்தான். ஆனால் ஹற் சொன்னான்: "அதைக் கொண்டுபோய் லோராவில் காட்டு. எனக்கு லோரவைத் தெரியும். உன்னை அவளோட வச்சிருக்கிறதக்காக உன்னப் பெரிதா அடிக்கிறதில்ல. ஆனா எப்ப அவளுக்கு உன்னப் பிடிக்கேல்லையோ அண்டைக்கு பெடியா நீ ஓட்டம்தான் பிடிக்க வேணும்."

ஏதாவது நடந்து நாதனியல் மிக்கேல் வீதியை விட்டுப் போய்விட வேணும் என்று நாங்கள் பிரார்த்தித்தோம்.

ஹற் சொன்னான்: "நாங்க கனகாலம் காத்திருக்கத் தேவ இல்ல. லோராவுக்கு எட்டு மாசம். இன்னம் ஒரு மாசம் நாதனியல் போயிருவான்."

எடோஸ் சொன்னான்: "அது உண்மையில் சாதனை தான். ஏழு பிள்ளைகள் ஏழு வெவ்வேறான ஆண்களுக்கு."

குழந்தை பிறந்தது.

அது ஒரு சனிக்கிழமை. முதல் நாள் மாலை லோரா அவளுடைய முற்றத்தில் வேலியில் சாய்ந்துகொண்டு நின்றதைக் கண்டேன்.

அடுத்த நாள் காலை எட்டு மணிக்குக் குழந்தை பிறந்தது. அற்புதத்தைப் போல இரண்டு மணித்தியாலத்துக்குப் பிறகு லோரா என் தாயை வேலிக்கு அப்பால் இருந்து கூப்பிட்டாள்.

"இண்டைக்குக் காலையில் பிள்ளை பிறந்திண்டது" என்றாள் லோரா என் தாய்க்கு.

"ஆணா பெண்ணா?" என்று மட்டுமே என் தாய் கேட்டாள்.

லோரா சொன்னாள்: "எனக்கு எப்பிடியான அதிஷ்ரம் இருக்குது எண்டு நினக்கிறாய்? எனக்கு ஏதோ சாபம் தான் விழுந்திருக்கு

போல. என்னுமொரு பெட்டை. நான் சும்மா கூப்பிட்டன் உனக்குச் சொல்லுவம் எண்டு. அவ்வளவு தான். சரி. நான் இப்ப போய் கொஞ்சம் தைக்க வேணும்."

அந்த நாள் பின்னேரமே ஹற் நடக்கும் என்று சொன்ன விசயம் உண்மையாகிவிடும் போலத் தெரிந்தது. அன்று மாலை லோரா வெளியே தெருவோரம் வந்து நாதனியலைக் கூப்பிட்டாள். "ஹேய், நாதனியல், இங்க வா."

ஹற் சொன்னான்: "இதென்ன நாசமாப் போன விசயம். இண்டைக்குக் காலயில இல்லயா இவள் பிள்ளை பெத்தாள்."

நாதனியல் தான் பெரிய ஆள் என்று எங்களுக்குக் காட்ட வெளிக்கிட்டான். அவன் லோராவுக்குச் சொன்னான்: "நான் வரேலாது. வேலயா இருக்கிறன்."

லோரா அவனை நோக்கி வந்தாள். சண்டை வரப்போகின்றது என்பதை அவளின் நடையில் உணர்ந்தேன். அவள் சொன்னாள்: "நீ வர மாட்டாய். நீ வர மாட்டாய். என்ர காது கேக்கிறது பொய் இல்லையே?"

நாதனியலுக்குப் பயம் பிடித்துவிட்டது. அவன் எங்களுடன் கதைக்க முயற்சித்தான். ஆனால் புரியும்படி தெளிவாக எதையும் அவனால் கதைக்க முடியவில்லை.

லோரா சொன்னாள்: "நீ நினைக்கிற நீயும் ஒரு ஆம்பிள எண்டு. உன்ர ஆம்பிளத்தனத்த என்னோட காட்டாத. கேட்டுதா? ஓ நாதனியல் உன்னோடதான் நான் கதைக்கிறன். களிசானுக்குள்ள ரெண்டு பழய பாண அடைசின குண்டிய வச்சிருக்கிறவனே உன்னத்தான் சொல்றன்."

இது லோராவின் சிறந்த கணங்களில் ஒன்று. நாங்கள் அனைவரும் சிரித்தோம். நாங்கள் சிரிப்பதைப் பார்த்த அவளும் பொறுக்க முடியாமல் வெடித்துச் சிரித்தாள்.

ஹற் சொன்னான்: "இவள் உண்மையான ஒரு கேஸ்."

குழந்தை பிறந்த பிறகும் மிக்கேல் வீதியை விட்டு நாதனியல் போக வில்லை. அது எங்கள் எல்லோருக்கும் கொஞ்சம் கவலையைத் தந்தது.

ஹற் சொன்னான்: "அவள் கொஞ்சம் கவனம் இல்லாம இருந்தா ஒரு ஆம்பிளக்கு ரெண்டு பிள்ள பெத்து விடுவா தெரிஞ்சுதோ?"

நாதனியல் போகாதது லோராவின் குற்றம் அல்ல. அவனை அவள் எவ்வளவோ ஆட்டிப் படைத்தாள். இப்போது வெளிப்படை யாகவும் செய்தாள். சிலவேளை அவனை வெளியே விட்டுக் கதவையும் அடைத்தாள். அப்போதெல்லாம் நாதனியல் வெளியே நின்று அழுவான். அவளைக் கெஞ்சுவான்: "லோரா என் கண்ணே லோரா, கனியே, கனியே. இண்டைக்கு ஒரு இரவைக்கு மட்டும் உள்ள விடு. லோரா கண்ணே. என்னை உள்ள விடு."

*லோராவை அவளிடத்தில் வைத்திருப்பதாக நடிப்பதை இப்போது அவன் அறவே விட்டுவிட்டான். எங்கள் கூட்டத்தை நாடுவதையும் விட்டுவிட்டான். அது எங்களுக்குச் சந்தோசமே.*

*ஹற் சொல்லுவான்: "டிரை ஆற்றிலிருந்து வந்த அவன் ஏன் அங்க திரும்பிப் போகிறானில்ல எண்டு எனக்குத் தெரியேல்ல. அங்க ஒரு பண்பாடும் இல்ல. அதனால அங்க சந்தோசமா இருப்பான்."*

*அவன் ஏன் இங்கு தங்கிவிட்டான் என்று எனக்குத் தெரிய வில்லை.*

*ஹற் சொன்னான்: "இப்படித்தான் சில ஆம்பிளயள். பொம்பி ளையள் அவங்களை உதைப்பதில் அவளுக்குச் சந்தோசம்."*

*லோராவுக்கு நாதனியலில் கோபம் கூடிக் கொண்டேபோனது.*

*ஒருநாள் லோரா அவனுக்குச் சொன்னது எங்களுக்குக் கேட்டது: "எனக்கொரு பிள்ளையை தந்தாப்போல நான் உன்ர சொத்தெண்டு நினைக்கிறாப் போல. அந்தப் பிள்ள சந்தர்ப்பவசமாச் சனிச்சது. உனக்குக் கேட்டதா?"*

*அவள் பொலிசைக் கூப்பிடப் போவதாகப் பயமுறுத்தினாள்.*

*நாதனியல் சொன்னான்: "உன்ர பிள்ளயளப் பராமரிப்பது ஆரு?"*

*லோரா சொன்னாள்: "அது என்னைப் பொறுத்தது. உன்ன இங்க தேவை இல்ல. உனக்கும் என்னால சாப்பாடு போடேலாது. நீ இந்த நிமிஷமே வெளியே போகாட்டி நான் போய் சாஜன் சாள்சைக் கூப்பிட்டுவன்."*

*பொலிசைக் கூப்பிடுவதாகச் சொன்ன பயமுறுத்தல் தான் நதனியலை வெளியேறச் செய்தது. அவன் கண்ணீர் விட்டு அழுதான்.*

*திரும்பவும் லோராவின் உடல் பெருத்துக்கொண்டு வந்தது.*

*ஹற் சொன்னான்: "ஓ கடவுளே. ஒரே ஆம்பிளைக்கு ரெண்டு குழந்தைகள்."*

*மிக்கேல் வீதியில் ஒரு அற்புதம் என்னவென்றால் எவருமே பட்டினியாய்க் கிடப்பதில்லை. ஒரு பேனையுடனும் பேப்பருடனும் ஒரு மேசையில் இருந்து கணக்குப் பார்த்தாலும் அப்படி ஒருவரைக் கண்டுபிடிக்கவே முடியாது. நான் மிக்கேல் வீதியில் வாழ்ந்தவன். நான் நிச்சயம் கூறுவேன் அப்படி ஒருவரும் பட்டினியாய்க் கிடந்தாலும் அதை எவருமே கேள்விப்பட்டதில்லை.*

*லோராவின் பிள்ளைகள் வளர்ந்தனர். அவளின் மூத்த மகளான லோணா சென்ற் கிளையர் வீதியிலுள்ள ஒரு வீட்டில் வேலைக்காரி யாக வேலை செய்ய ஆரம்பித்தாள். அத்துடன் சாக்வில் வீதியி லுள்ள ஒருவனிடம் தட்டச்சுப் பாடமும் படிக்க ஆரம்பித்தாள்.*

லோரா சொல்லுவாள்: "இந்த லோகத்தில படிப்பைப் போல வேறொண்டுமே இல்ல. என்ர பிள்ளயளும் என்னப் போல வளர வேண்டாம்."

வழக்கம்போல எந்த விதப் பிரயத்தனமும் இல்லாமலேயே எட்டாவது குழந்தையையும் லோரா பெற்றெடுத்தாள்.

அந்தக் குழந்தைதான் அவளுடைய கடைசிக் குழந்தை.

அவள் களைத்துவிட்டாள் என்றோ மனித இனத்தில் அவள் தன் காதலைத் துறந்துவிட்டாள் என்றோ அல்லது அவ்வினத்துக்கு ஆள் சேர்ப்பதில் அவளின் உணர்ச்சி இல்லாமல் போய்விட்ட தென்றோ அர்த்தம் இல்லை. உண்மையில் அவள் வயதில் முதிர்ந்த வளாகிப் போபவள் போலக்கூட இல்லை. அல்லது கலகலப்புக் குறைந்தவளாகியும் விடவில்லை. அவள் இன்னும் குழந்தைகளைப் பெற்றுக் கூட்டிக்கொண்டேபோவாள் என்றே நான் எப்பொழுதும் உணர்ந்தேன்.

அவளுடைய மூத்த பெண் ஒருநாள் இரவு தட்டச்சு வகுப்பிலிருந்து வந்து சொன்னாள்:

"அம்மா, நான் குழந்தை பெறப்போகிறேன்."

லோரா போட்ட கூக்குரலை நான் கேட்டேன்.

அதுதான் முதன் முறை லோரா அழுததை நான் கேட்டது. அது சாதாரண அழுகை அல்ல. அவள் பிறந்த நாளிலிருந்து சேமித்து வைத்திருந்த அத்தனை அழுகையையும் அவள் அழுதது போல் இருந்தது அது. அவள் சிரிப்பால் இதுநாள்வரை முயற்சித்து மறைத்து வைத்த அழுகையைப் போல இருந்தது அது. சாவீடுகளில் ஆட்கள் அழுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அவற்றில் எவ்வளவோ போலித்தனம் இருந்தது. அந்த இரவில் லோராவின் அழுகை ஒலிதான் நான் கேட்டவற்றிலேயே மிகப் பயங்கரமான தொன்று. இந்த உலகமே மடத்தனமானது, சோகமானது என்று என்னை உணர வைத்தது அந்த அழுகை ஒலி. நானும் லோராவுடன் சேர்ந்து அழ வெளிக்கிட்டேன்.

லோரா அழுவதை அந்த வீதியே கேட்டது.

அடுத்த நாள் போயி சொன்னான்: "ஏன் அவளுக்கு அவ்வளவு கோபமோ எனக்குத் தெரியேல்ல. அவளும் அதத்தானே செய்யிறாள்."

ஹற்றுக்கு கடும் ஆத்திரம் வந்து தன் தோல் பட்டியைக் களற்றி போயியை அடித்தான். லோராவிலா அல்லது அவள் மகளிலா நான் கூடுதலாக அனுதாபப்பட்டேன் என்று எனக்குத் தெரியாது.

வீதியில் வெளியே வருவதற்குக் கூட லோராவுக்கு அவமானமாக இருந்தது என்று நான் உணர்ந்தேன். நான் அவளைக் கடைசியில்

கண்டபோது என்னுடன் முன்பு சிரிக்கும், எனக்குச் சீனிக் கேக் தரும் அதே லோராவா இவள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

அவள் இப்போது முதியவளாகிவிட்டாள். அவள் இப்போது அவளின் பிள்ளைகளை நோக்கிச் சத்தம் போடுவதில்லை. அவர்களை அடிப்பதில்லை. அவள் அவர்களில் விசேச கவனம் செலுத்துகிறாளா அல்லது அவர்களைக் கவனிப்பதில் ஆர்வம் இல்லாமல் போய் விட்டாளா என்று எனக்குத் தெரியாது.

ஆனால் அவள் லோணாவைப் பார்த்து கண்டிக்கும் ஒரு வார்த்தைகூடச் சொல்வதில்லை.

அது பயங்கரம்.

லோணா தன் குழந்தையைத் தன் வீட்டுக்குக் கொண்டு வந்தாள். வீதியில் அதைப் பற்றி எந்த நையாண்டியும் எவரும் செய்யவில்லை. லோராவின் வீடு சாவீடு போல அமைதியான வீடாகவே இருந்தது.

ஹற் சொன்னான்: "வாழ்க்கை மிகப் பயங்கரமானது. பிரச்சினை வருகிறது என்று தெரிஞ்சும் அதைத் தடுப்பதற்கு ஒண்டும் செய்ய முடியேல்ல. சும்மா இருந்து பார்த்துக்கொண்டு காத்திருக்க வேண்டி இருக்கிறது."

பத்திரிகையின்படி அது ஒரு வார இறுதியில் நடந்த சோக நிகழ்ச்சி. பலவற்றில் அதுவும் ஒன்று.

காணகியில் லோணா தண்ணீருள் மூழ்கி இறந்துவிட்டாள்.

ஹற் சொன்னான்: "இதைத்தான் அவை செய்வினம். களைக்கும் வரை நீந்திக்கொண்டு போவினம். இனிமேல் நீந்த முடியாமப் போனவுடன் தாண்டு போவினம்."

பொலிஸ் வந்து லோராவுக்கு அதைச் சொன்னபோது அவள் அதிகம் ஒன்றும் சொல்லவில்லை.

"அது நல்லது. அது நல்லது. அப்பிடி நடந்ததுதான் நல்லது" என்று மட்டுமே லோரா சொன்னாள்.

# மேலங்கி

ஐசக் டினேசென்

லியோனிடஷ் அலோறி என்பவர் பழம் பெரும் குரு. சிற்பி. மலைகளின் சிங்கம் என்று அழைக்கப்பட்டவர். கலகம் செய்ததற்காகவும் பெரும் இராசத் துரோகத்துக் காவும் அவரைக் கைது செய்து, கொலைத் தண்டனை தீர்க்கப்பட்டபோது, அவருடைய மாணவர்கள் சத்த மிட்டு, மூர்க்கமாகக் கிளர்ந்து எழுந்தார்கள். ஏனென் றால் அவர்களுக்கு அவர் ஆன்மீகத் தந்தை, தலைமைத் தேவதூதர், இறவாதவர். நகரத்தின் புறப்பகுதியில் இருந்த பியறினோவின் விடுதிக் கலையகத்தில் அல்லது மாடியறையில் அவர்கள் கூடி, ஒருவர் தோளில் மற்றவர் விழுந்து அழுதனர். அல்லது – ஒரு பெரிய மரம் புயலில் அகப்பட்டு மேல் நோக்கி தன் கிளைகளை விரிப்பதைப் போல் – கூட்டமாகக் கூடி தங்கள் ஐந்து சோடிக் கைவிரல்களை மடக்கி, வானத்தை நோக்கி அசைத்து, தங்கள் அன்புக்குரியவரை மீட்டுத் தருமாறும், சர்வாதி காரத்தைப் பழிவாங்குமாறும் கத்தினார்கள்.

அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களில் பத்துப் பேரில் ஒருத்தன் மட்டும்தான் அந்தக் கொடிய செய்தியைக் கேட்காததுபோல அல்லது புரியாததுபோலத் தொடர்ந்து வாழந்தான். ஒரு சிஷ்யனை மட்டும் குரு மற்றவர்களிலும் பார்க்க நேசித்தார். அவனையே அவர் மகன் என்று அழைத்தார். அந்த இளைஞனும் அவரைத் தந்தை என்றே அழைத்தான். அஞ்சலோவின் பாடசாலை நண்பர்கள் அவனுடைய மௌனத்தை, எல்லையற்ற சோகத்தின் வெளிப்பாடு என்றே நினைத் தனர். அவனுடைய துயரத்தை மதித்து, அவனைத் தனியே விட்டனர். ஆனால் அஞ்சலோவின் மனம் இங்கில்லாமைக்கு உண்மையான காரணம் குருவின் இளம் மனைவியான லுக்றேசியா அவன் இதயத்தை அடங்காத காமத்தால் நிரப்பியிருந்ததுதான். அவனுக்

கும் அவளுக்குமிடையே இருந்த காதலும், புரிதலும் இந்தச் சமயத்தில் மிகத் தூரத்திற்குப் போய் விட்டிருந்தன. அவள் தன் பூரண சரணாகதியை அவனுக்குத் தருவேன் என்று வாக்குறுதி அளித்திருந்தாள்.

அந்த மனைவியின் நம்பிக்கைத் துரோகத்தைச் சரியெனக் காட்டுவதற்கு, பல காலமாக அவளைத் தன் கைகளில் வைத்து ஆட்டிப்படைத்த, இரக்கமற்ற தெய்வ சக்தியை அவள் ஆழமான குழப்பத்துடனும் ஜாக்கிரதையுடனும் எதிர்த்ததைக் காட்டி வாதிடலாம். மிகப் புனிதமான பெயர்களில் சத்தியம் செய்து, அவளும் அவளுடைய காதலனும் இந்தச் சபதத்தை எடுத்துக் கொண்டனர்: தங்கள் இருவருக்குமிடையே இனிமேல் ஒருபோதும் குருவுக்கு மகிழ்ச்சியைத் தராத ஒரு வார்த்தையோ பார்வையோ இருக்கக் கூடாது. இருவராலுமே அச்சபதத்தைக் காப்பாற்ற முடியாது என்று அவள் உணர்ந்தபோது, அஞ்சலோவைப் பாரிசுக்குப் படிக்கப் போகச் சொல்லிக் கெஞ்சினாள். அவனுடைய பிரயாணத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. அப்போதுதான் அவள் அந்த முடிவையும் நடைமுறைப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து தன் விதிப்படியே அது நடக்கட்டும் என்று விட்டு விட்டாள்.

எந்த நீதிபதியாலோ யூரிகளாலோ அவை ஏற்கப்பட்டிருக்காவிட்டாலும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் அப்படி நடந்தன என்று விசுவாசமற்ற அந்தச் சிஷ்யனும் வாதிட்டிருப்பான். அஞ்சலோ தன் இளம் வயதிலே பலப்பல காதல் விசயங்களில் ஈடுபட்டவன். ஒவ்வொரு காதலிலும் தன் காமத்திற்கு முழுமையாகச் சரணடைந்தவன். ஆனால் எந்த ஒரு சாகசமும் ஆழமான பதிவை நீண்டகாலம் அவனில் ஏற்படுத்தியதில்லை. ஒருநாள் ஒருத்தி மற்றவர்களிலும் பார்க்கத் தவிர்க்க முடியாத வகையில் முக்கியமானவளாகி விட்டிருந்தாள். ஒருநாள் அனைவரிலும் பார்க்க, ஒருத்தன் முக்கியவனாகி விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். நியாயமான முறையிலும், மனைவியாக இருந்து விட்டாள். லியோனிடஸ் அலொறியைப் போல வேறெந்த மனிதனையும் அவன் நேசித்ததில்லை. வேறெவரையும் முழுமனதுடன் ரசித்ததும் கிடையாது. ஆதாம் ஆண்டவனின் கையால் உருவாக்கப்பட்டதுபோல் அவனும் தன் குருவின் கையால் சிருட்டிக்கப்பட்டவன் என்றும் உணர்ந்தான். அதே கைகளிடமிருந்துதான் தன் துணைவியையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உணர்ந்தான். ஸ்பெயினிலுள்ள அல்பாவின் கோமகன் அழகானவன், புகழ் வாய்ந்தவன். அவன் அரசவையிலிருந்து எளிய மனமுள்ள, சாதாரண ஒருத்தியைத் திருமணம் செய்து அவளுக்கு அவன் விசுவாசமாகவும் இருந்தான். அவனுடைய நண்பர்கள் அதைப் பார்த்து அதிசயித்து, அவனைப் பகடியாக அதைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். அல்பாவின் கோமாட்டி அவளுக்கேயுரிய முறையில், சொந்தக் குணநலன்களைப் பார்க்காமல், உலகிலேயே

அனைவரும் விரும்பக்கூடியவளாக இருக்க வேண்டும் என்று அவன் பதில் அளித்தான். அதேபோலத்தான் விசுவாசமற்ற சிஷ்யனும். மோக உந்துதலுடன், அனைத்து இலட்சியங்களிலும் உயர்ந்ததாக அவன் மதிக்கும் பெரும் கலையும் சேர்ந்தது. அவற்று டன் ஆழமான, தனிப்பட்ட ஈடுபாடும் சேர்ந்து, அவனுள் ஒரு தீ பற்றியது. பின்னர் அதை அவனால் கூட நிறுத்த முடியவில்லை.

இந்த இரண்டு இளம் வயதினர் விசயத்தில் லியோனிடஷில் கூடக் குற்றம் செய்யாமல் இல்லை. நாளாக ஆக, அவர் விரும்பிய மாணவனுடன் நடத்திய உரையாடல்களில் லுக்றேசியாவின் அழகை அவர் புகழ்ந்தார். அழகிய, இறவாத, விளக்கேந்திய ஆன்மாவுக்காக, தன் இளம் மனைவியை அழகுச் சிலையாகச் நிற்கச் செய்தார். அவ்வேளைகளில் அஞ்சலோவையும் அங்கு அழைத்து அவனையும் தன் பக்கத்தில் வைத்திருந்தார். தன்னைப் போலவே அவனையும் அவ்வேலைகளில் ஈடுபடச் செய்தார். அத்துடன், தன் வேலைகளை இடையில் நிறுத்திவிட்டு, உயிர் வாழும், மூச்சுவிடும், நாணுகின்ற, அந்த உடலை முன்னிறுத்தி, அதன் அழகுகளைச் சுட்டிக் காட்டினார். அது செவ்வியல் கலைப் படைப்பொன்றினைக் களிப்புடன், அகத்தூண்டல் பெற்று, பார்த்துக் கொண்டு நிற்பதுபோல இருக்கும். வயோதிபக் கலைஞ னுக்கும் இளம் கலைஞனுக்கும் இடையே இருந்த இந்த விசித்திர மான புரிதலை இருவருமே உண்மையில் உணர்ந்து கொள்ள வில்லை. மூன்றாவது ஒருத்தன் அதைப்பற்றி அவர்களுடன் பேசி யிருந்தால், அவனை அவர்கள் அலட்சியத்துடன் அவமதித்திருப் பார்கள். சிலவேளை, பொறுமையில்லாமல் கூட நடந்திருப்பார்கள். அப்படிச் சந்தேகித்த ஒருத்தி லுக்றேசியா. ஒருவித மனக்குழப்பத் துடனும், மயக்கத்துடனும் அவள் சந்தேகித்தாள். ஆண்களிடமும், கலைஞர்களிடமும் வன் குணமும், விறைத்த தன்மையும் இருப்ப தாகச் சந்தேகித்தாள். ஆழமான மென்மைக் குணங்கள் இருப்பவர் களிடம்கூட இவை இருப்பதாகச் சந்தேகித்தாள். இடையனால் இறைச்சிக் கடைக்கு அழைத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டி புலம்பி அழுவதுபோல, அவளுடைய இதயமும் முழுத் தனிமையில் வருந்தி அழுதது.

இப்போது, தினமும் அவருடைய வாழ்வில் நடைபெறும் பல அசாதரண நிகழ்வுகளின் ஊடாக, லியோனிடஷ் தன்னை யாரோ கண்காணிப்பதாகவும், பின்தொடர்வதாகவும் எண்ணினார். அதனால், தான் ஏதோ பெரும் ஆபத்தில் இருப்பதுபோன்ற முடிவுக்கும் வந்தார். தன் சொந்த மரணம் பற்றிய எண்ணத்தினால் ஆழமாகப் பீடிக்கப்பட்டு, தன் கலை வாழ்வு முடிவுக்கு வருவது போலவும் எண்ணினார். தன்னை ஏதோவொன்று மூடிக்கொள்வது போலவும் உணர்ந்தார். தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு அந்த ஆபத்தைப் பற்றி அவர் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

ஏனெனில் இவர்களே ஒரு சில வாரங்களில் எல்லையற்ற தொலைவில் இருப்பதுபோல அவர் உணர்ந்தார். அதனால், இயற்கைத் தோற்றப் பார்வை விதியின்படி இவர்கள் மிக நுண்ணிய குறுணிபோலத் தெரிந்தார்கள். தான் ஈடுபட்டிருந்த வேலையை முடித்துவிட அவர் விரும்பியிருக்கலாம். ஆனால் விரைவில் அவரின் வேலை கூட உண்மையில் மனது முழுவதையும் தன்னை ஆட்படுத்தியிருக்கும் விசயத்திற்கு வேண்டாத, அசௌகரியமான இடையூறு என்றே நினைத்தார். அவரைக் கைது செய்ததிற்குச் சில நாட்களுக்கு முன், தன் தனிமையிலிருந்து வெளியேறி, வழக்கத்திற்கு மாறாக, கனிவாகவும், அன்பாதரவுடனும் தன்னைச் சுற்றி இருந்த அனைவர்களுடன் பழகினார். நகரத்திலிருந்து சில மைல்களுக்கு அப்பால், மலைகளிலிருந்த திராட்சைப் பழத்தோட்ட உரிமையாளர் ஒருவரான அவருடைய நண்பரின் வீட்டுக்கு லுக்றேசியாவை அனுப்பினார். இந்த ஏற்பாட்டை அவர் செய்ததற்குக் காரணம் – உண்மையான நிலவரம் பற்றி அவளுக்கு எந்தச் சந்தேகமும் வரக்கூடாது என்பது அவர் விருப்பம் – அவள் காய்ச்சல் அறிகுறிகளுடன் வெளிறி இருக்கிறாள் என்பதே. அவளை அனுப்புவதற்குச் சாதாரண, போலியான காரணத்தைப் பாவிக்கிறேன் என்று அவரே நம்பினார். தன் ஆணையை அவள் ஆழமான அக்கறையுடன் ஏற்றுக் கொண்டபோது அவர் புன்னகைத்தார்.

தன் கணவனின் தீர்மானத்தை உடனடியாக அஞ்சலேவுக்குச் சொல்லி அனுப்பினாள். மனத் துயருடன், சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தங்கள் காதலை நிறைவேற்றக் காத்திருந்த காதலர்கள், தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று கருதி, ஒருவரை ஒருவர் கண்களால் நோக்கினர். இப்போது, இன்றிலிருந்து, அனைத்து உயிரின் சக்திகளும் ஒன்று சேர்ந்து அவர்களுக்குச் சேவை புரிய வெளிக்கிட்டுள்ளன. அத்துடன் காமம்தான் அவர்களின் காந்தக்கல். அது தன் விருப்பாற்றலால் அவர்களைச் சுற்றி அனைத்தையும் கவர்ந்து அணிவகுத்தது. லுக்றேசியா இதற்கு முன்பே அப்பண்ணைக்குச் சென்றிருக்கிறாள். மலைகளின் பாதையால் யாருக்கும் தெரியாமல் வந்து எப்படித் தனது யன்னலுக்கு வரலாம் என்பதை அஞ்சலோவுக்கு அவள் அறிவித்தாள். யன்னல் மேற்குப் பக்கம் பார்த்திருந்தது. சந்திரன் தன் முதற் பருவத்தில் இருக்கும். அது, தன் காதலனின் உருவத்தைத் திராட்சை மரங்களுக்கிடையில் கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். அவன் ஒரு சிறு கல்லை புறக்கி யன்னற் கண்ணாடியில் எறிந்தால் அவள் அதைத் திறப்பாள். இந்தப் பேச்சைக் கலந்தாராய்கையில், இருவரின் குரல்களும் தளதளத்தன. திரும்பவும் தன் சமநிலையைப் பெறுவதற்காக, அஞ்சலோ அவளுக்குச் சொன்னான்: இந்த இரவுப் பயணத்துக்காக, பெரியதொரு ஆட்டுத் தோல் ஊதா நிறக் கம்பளியில் மண்ணிறம் கொண்ட, பூத்தையல் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட மேலங்கி ஒன்றை, பணத்துக்குச் சிரமப்பட்ட

ஒரு நண்பன் தனக்குத் தந்தான் எனவும், தான் அதை வாங்கி வைத்திருப்பதாகவும் சொன்னான். இவை அனைத்தையும் கலைக்கூடத்திற்குப் பக்கத்தில் இருந்த லுக்ரேசியாவின் அறையில் இருந்துதான் அவர்கள் கலந்தாலோசித்தார்கள். அப்பொழுது கலைக்கூடக் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு குரு தன் வேலையைச் செய்துகொண்டிருந்தார். இரண்டாவது சனிக்கிழமை மாலையில் அவர்களுடைய சந்திப்பு நடைபெற வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதன்பின் அவர்கள் பிரிந்து சென்றனர். அடுத்து வந்த கிழமை முழுவதும், மரணம், நிலைபேறு ஆகிய இரு எண்ணங்களே குருவின் மனதில் நிறைந்திருந்தன. அப்போது இளம் சிஷ்யனின் மனம், லுக்ரேசியாவின் உடல் தன்னுடலுடன் சேர்வது பற்றிய எண்ணத்திலேயே இருந்தது. இந்த எண்ணம் உண்மையில் சதா அவனை விட்டுச் செல்லாமல் இருந்தது மட்டுமல்லாமல், மறந்துபோன, ஆச்சரியமான, மகிழ்ச்சியான ஒரு செய்தி திரும்பவும் புதிதாகத் திரும்பி வருவது போல் இருந்தது : "என் சகோதரியே, என் காதலியே, என் புறாவே, என் தூய்மையே, எனக்காகக் கதவைத் திற. என் தலை பனியால் நனைந்துள்ளது. நீ என் அழகு, என் அன்பு. நீ ஒரு துளிக்கற்றையும் அற்றவள். நான் உன் உடைமை. நீ எனது உடைமை."

ஞாயிற்றுக்கிழமை காலையில் லியோனிடஸ் அலோறி கைது செய்யப்பட்டு மறியற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அந்தக் கிழமை முழுவதும் அவரிடம் பல விசாரணைகள் நடந்தன. பழைய தேபக்தன் அவர். அவருக்கு எதிராகக் கொண்டு வந்த ஒரு சில குற்றச்சாட்டுகளுக்கு அவரை அது நியாயப்படுத்தி இருக்கச் சாத்தியம் இருக்கிறது. ஆனால் முதலாவதாக இப்படிப்பட்ட ஆபத்தான எதிரிக்கு ஒரு முடிவு கட்டிவிட இம்முறை அரசு சங்கல்பம் செய்து கொண்டிருந்தது. இரண்டாவதாக, குற்றம் சாட்டப்பட்டு வரும், தான் அடைந்திருக்கும் தூய்மையான மனச் சமநிலையை, எந்த விதத் தளும்பல்களுக்கும் இடம்கொடுத்து, நிலை தளராமல் இருக்க அவரே சங்கல்பம் எடுத்திருந்தார். ஆரம்பத்திலிருந்தே இந்த வழக்கின் முடிவு என்ன என்பது சந்தேகத்திடமில்லாமல் தெரிந்திருந்தது. நீதி வழங்கப்பட்டது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் மக்களின் மிகப் புகழ் வாய்ந்த மகன், சிறைக்கூடத்தின் சுவருக்கு எதிராக நிறுத்தப்படுவான். மார்பில் ஆறு குண்டுகளுடன், அவன் உடல் சிறிய உருளைக் கற்களில் விழும்.

கிழமை முடிவுறுகையில், முதிய கலைஞர், தன் மனைவி இருக்கும் இடத்துக்குச் சென்று அவளிடம் கடைசியாக விடை பெற்று வருவதற்காகப் பன்னிரெண்டு மணி நேரம் தன்னை நன்னம்பிக்கைப் பிணையில் விடுமாறு அனுமதி கேட்டார்.

மனு நிராகரிக்கப்பட்டது. அந்த மனிதரிடம் இன்னும் உள்ள பெரும் பலமும், அந்த மனிதரின் புகழையும் நேர்மையையும்

சுற்றி இன்னும் உள்ள ஒளிவட்டமும், யாருக்காகப் பேசப்பட்டனவோ அவர்களின் காதுகளில், அவரின் வார்த்தைகள் விரைவில் இறந்துவிட முடியாது. அவரே நம்பிக்கையைக் கைவிட்டு இருந்த போது, தண்டனை அளிக்கப்பட்டவரின் இறுதி வேண்டுகோள் திரும்பவும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, அதன் நியாயங்களை நீதிபதிகள் சீர்தூக்கிப் பார்த்தார்கள்.

கர்தினால் சல்வியற்றி சமூகம் அளித்திருந்த ஒரு வீட்டில் அந்த விவாதப் பொருள் எடுக்கப்பட்டது வெறும் சந்தர்ப்பவசமானது தான்.

“சந்தேகம் இல்லை. மன்னிப்பு வழங்குவது ஆபத்தான, புதிய முன்னுதாரணத்தைக் கொண்டுவந்துவிடும்” கர்தினால் சொன்னார். “ஆனால் இந்த நாடு – அதுவும் அரண்மனையில்கூட அவரின் சித்திரங்கள் உள்ளன – அலோறிக்குக் கடமைப்பட்டுள்ளது. இந்த மனிதன் தன் கலைகளால் மனிதர்கள் தங்களில் வைத்திருந்த நம்பிக்கையைத் திரும்பப் பெறச் செய்திருக்கிறான். ஆகவே, இப்போது மனிதர்கள் அவனில் நம்பிக்கை வைக்க வேண்டும்.”

அந்த விசயத்தைத் திரும்பவும் சிந்தித்துவிட்டுத் தொடர்ந்தார். “குருவை – அவரை மலைகளின் சிங்கம் என்று அழைப்பார்கள் இல்லையா – அவருடைய சிஷ்யர்கள் ஆழமாக நேசிக்கிறார்கள் என்று கேள்வி. உண்மையில் அவர் மக்களில் கடவுட் பற்றை விழித்தெழச் செய்து மரணத்துக்கு உண்மையாக அறைகூவல் விடுத்தவரா என்பதை நாம் கண்டுபிடிக்கலாம். அவருடைய வழக்கைப் பொறுத்த அளவில், ஒரு கைதியை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வெளியே விட்டு அவர் அக்குறிப்பிட்ட தவணைக்குள் திரும்பி வராவிட்டால் அவருக்குப் பதிலாக, பிணையாக நிறுத்தப்பட்டவரைக் கொல்லலாம் என்ற பழைய விதியை நாம் உபயோகிக்கலாம்.

“அலோறி, கடந்த கோடையில் அஸ்கோலியில் இருந்த என் மாளிகையில் உபசாந்தியைச் செய்து என்னைக் கௌரவித்தார். அப்போது அவருடன் அவர் மனைவியும் அவர் மகன் என்றழைக்கும் அஞ்சலோ என்ற பெயருடைய மிக அழகான ஒரு இளம் சிஷ்யனும் இருந்தனர். அவர் விரும்பியதுபோல அவருக்குப் பன்னிரண்டு மணிநேரம் சுதந்திரம் கொடுக்கலாம். அந்த நேரத்தில் அவர் தன் மனைவியிடம் கடைசியாக விடை பெற்றுக்கொண்டு வரலாம் என்று அவருக்குச் சொல்வோம். ஆனால் அவருக்காக அவருடைய அந்த இளம் அஞ்சலோ அவர் சிறைச்சாலையை விட்டுப் போகும்போது சிறைச்சாலையில் இருக்க வேண்டும். பன்னிரெண்டு மணித்தியாலங்கள் முடிந்தவுடன் கொலைத் தண்டனை சிறைச்சாலை முற்றத்தில் நிறைவேற்றப்படும் என்பது அவர்கள் இருவருக்கும் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும்.

அந்தச் சூழ்நிலையில், பாரம்பரியக் கருத்தில்லாத கர்தினாலின் சொல்லிய யோசனையை ஏற்றுக்கொள்வது சரி என்ற உணர்ச்சி

அந்த விசயத்தைத் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்த அந்தக் கனவானை ஏற்றுக் கொள்ளச் செய்தது. குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட வருக்கு அவர் கேட்ட அனுமதி எந்த நியமங்களின் கீழ் கொடுக்கப் பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. லியோனிடஸ் அஞ்சலோ வுக்கு அதைச் சொல்லி அனுப்பினார்.

அவனுடைய பள்ளித் தோழர்கள் இளம் கலைஞனுக்கு அந்தச் செய்தியைச் சொல்லி அவனைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல வந்தபோது அவன் தன் அறையில் இருக்கவில்லை. தோழர் களின் துக்கத்தில் அவன் கவனம் செலுத்தாதபோதிலும் அது அவனுக்கு மன அமைதியின்மையையும் கடுந்துயரத்தையும் கொடுத்திருந்தது. ஏனெனில் பிரபஞ்சம் அழகின் பூரணத்துவமும் இசைவும் உடையது என்றும் வாழ்க்கை அதனளவில் எல்லையற்ற அருளுடையது என்றும் அந்தக் கணத்தில் அவன் நம்பினான். மற்ற மாணவர்கள் அவனில் வைத்திருந்த மரியாதையாலும் பரிவிரக்கத் தாலும் அவனிடமிருந்து விலகி இருந்தார்கள். அதேபோல அவனும் ஒருவகை எதிர்ப்புணர்ச்சியால் அவர்களிடமிருந்து விலகி இருந்தான். கிரேக்கக் கடவுளான டயோனிசஸின் சிலை ஒன்றை அண்மைக் காலத்தில் தோண்டி எடுத்திருந்தார்கள். அதைப் பார்ப்பதற்காக அவன் கால் நடையாக மிறாண்டா கோமகனின் மாளிகைகக்கு நெடுந்தூரம் பயணம் செய்திருந்தான். தெய்வீக சக்தி வாய்ந்த ஒரு கலைப்படைப்பைப் படைக்க வேண்டும் என்ற சங்கற்பமும் விருப்பமும் தன்னிடம் இருந்தது பற்றி அவனுக்கு இன்னும் உண்மையில் தெரியாது.

அவனுடைய தோழர்கள் ஒடுங்கிய வீதியின் மேல் பகுதியில் இருந்த அவனுடைய அறையில் அவனுக்காகக் காத்திருந்தார்கள். இறுதியாக, தெரிவு செய்யப்பட்டவன் வந்தபோது அவர்கள் எல்லாப் பக்கத்திலிருந்தும் அவனில் பாய்ந்து அவனுக்காகக் காத்திருக்கும் சோகமான கௌரவத்தை அறிவித்தார்கள்.

குருவிற்குப் பிடித்தமானவன் தன்னில் விழுந்திருக்கும் இன்னலின் தன்மையையும் அளவையும் புரிந்துகொள்ளாததால் செய்தி கொண்டுவந்தவர்கள் அச்செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டி இருந்தது. கடைசியில் அதை அவன் புரிந்து கொண்ட போது அவன் ஒரு சில கணங்கள் ஆழமான துக்கத்தால் கல்லாகச் சமைந்து நின்றான். நித்திரையில் நடப்பவன்போல் தண்டனையை யும் அதை நிறைவேற்றுவதைப் பற்றியும் விசாரித்தான். அவனுடைய தோழர்கள் கண்களில் நீர் மல்க தங்களின் பதிலைக் கூறினார்கள். ஆனால் லியோனிடஸுக்குக் கொடுக்க முன்வந்த சலுகையையும் அதற்குக் கைதி, அஞ்சலோவை அழைத்ததையும் சொன்னபோது அந்த இளைஞனின் கண்களில் ஒளியும் கன்னங்களில் நிறமும் திரும்பியது. உடனடியாக அதை ஏன் சொல்லவில்லை என்று அவன் அவர்களிடம் கோபத்துடன் கேட்டான். பிறகு அவர்களின்

*பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சிறைச்சாலையை நோக்கி விரைந்தான்.*

*அக்கணத்தின் பயபக்தி உணர்ச்சியால் அவன் பீடிக்கப்பட்டு, கதவுப் படிகளில் அப்படியே நின்றான். அவன் நெடுந்தூரம் நடந்திருந்தான். புற்களில் படுத்திருந்தான், உடுப்புகள் தூசியால் மூடப்பட்டிருந்தன. சட்டைக் கைகளில் ஒன்று கிழிந்திருந்தது. அதனால் தன் குருவின் முன் இப்படியே தோன்ற அவன் விரும்பவில்லை. கொளுவி இருந்த பெரிய புதிய மேலங்கியை எடுத்து அணிந்து கொண்டான்.*

*அவன் வருகிறான் என்பதைச் சிறைக் காவலாளிகள் முதலிலேயே அறிந்திருந்தார்கள். கொலைத் தண்டனை பெற்றவர்களின் அறையில் அவனைக் கொண்டு போனார்கள். குருவின் நீட்டிய கைகளுக்குள் அவன் விழுந்தான்.*

*லியோனிடஸ் அலோறி அவனைச் சாந்தப்படுத்தினார். நிகழ்காலத்தை அவனை மறக்கச் செய்வதற்காக, அவனுடன் அடிக்கடி பேசும் விண்மீன்கள் நிறைந்த தேவ இராச்சியத்தைப் பற்றியும், அதுபற்றி முன்னர் அவனுக்குக் கற்பித்த அறிவு பற்றிய உரையாடலிலும் அவனைத் திசை திருப்பினார். விரைவில் அவருடைய கருத்தூன்றிய பார்வையும் ஆழமான, தெளிவான குரலும் சிஷ்யனை அவருடன் உயரத்திற்குக் கொண்டுசென்றன. அவர்கள் இருவரும் இணைந்து, பல்லாண்டுகள் பின் நழுவிக் கடந்து, உயர்ந்த, கவலையற்ற உலகத்தில் தனியாக இப்போது பேசிக்கொண்டிருப்பது போன்று இருந்தார்கள். அந்த வெளிறிய இளம் முகத்தில் கண்ணீர் காய்ந்திருந்ததைப் பார்த்தபோதுதான் குரு இவ்வுலகத்துக்கு வந்தார். உண்மையில் அவருக்காக அந்தச் சிறைச்சாலையில் அன்றிரவு தங்குவதற்குத் தயாரா என்று தன் சிஷ்யனை அவர் கேட்டார். அஞ்சலோ தான் தங்குவது தனக்குத் தெரியும் என்று மறுமொழி கூறினான்.*

*“எனக்கு எல்லையற்ற முக்கியத்துவத்தைக் கொடுக்கும் பன்னிரெண்டு மணிநேரத்தைத் தருவதற்கு நான் நன்றி சொல்கிறேன், என் மகனே,” என்றார் லியோனிடஸ்.*

*“எப்பொழுதுமே ஆன்மா அழியாதது என்பதில் நான் நம்பிக்கையுள்ளவன்,” அவர் தொடர்ந்தார். “ஆவியின் சாசுவதமான வாழ்வு ஒன்று மட்டும்தான் சிலவேளை உண்மையான யதார்த்தமாக இருக்கலாம். அது இன்னும் எனக்குத் தெரியாது. ஆனால் அது நாளை தெரியவரலாம். எங்களைச் சுற்றியுள்ள பௌதீக உலகம், இந்த நான்கு பெரும் பூதங்கள் – நிலம், நீர், தீ காற்று – ஆகியவை சாசுவதமானதா என்பதும் தெரியவரும். அத்துடன் எனது உடம்பு – என் மச்சை நிறைந்திருக்கும் எலும்புகள், நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும் குருதி, புகழ்பெற்ற என் ஐந்து புலன்கள் – புனிதமான உண்மையா? நான் முதியவன் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள்.*

ஆனால் நான் விவசாயி. விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். எங்கள் மண் எங்களுக்குக் கண்டிப்பான, தாராள குணமிக்க தாதி. நான் இளைஞனாக இருந்தபோதிலும் பார்க்க இப்போது என் தசைகளும், தசை நார்களும் இறுக்கமாக, கடினமாக இருக்கின்றன. முன்பு இருந்ததுபோலவே என் தலை மயிர் ஒய்யாரமாக இருக்கின்றது. என் கண்கள் இன்னும் பார்வை குன்றாமல் இருக்கின்றன. இந்தப் புலன்கள் அத்தனையையும் இங்கே விட்டுச் செல்கின்றேன். ஏனெனில் என் ஆவி புதிய திசைகளில் செல்கின்றது. நிலம் – என் மிக்க அன்புக்குரிய கம்பானியா – நேர்மையான என் உடம்பை நேர்மையான தன் கைகளில் ஏந்தி தன்னுடன் இணைத்துக்கொள்வாள். ஆனால் நான் இயற்கை அன்னையை நேருக்கு நேர் இன்னொரு தரம் சந்திக்க விரும்புகிறேன். இரண்டு நண்பர்கள் பண்புடன், பயபக்தி யுடன் உரையாடலை நடத்துவதுபோல, பூரண பிரக்ஞையுடன், என்னை அவளுக்குக் கொடுக்க விரும்புகிறேன். நாளை எதிர் காலத்தை நோக்க விரும்புகிறேன். அறியாததை அறிய என்னை ஒருநிலைப்படுத்தித் தயாரிப்பேன். ஆனால் இன்றிரவு வெளியே போய், சுதந்திரமான உலகத்தில், என்னைத் தெரிந்தவைகளிடையில் நான் சுதந்திரமாக இருப்பேன். சூரிய அஸ்தமனத்தின் செழுமை யான ஒளியின் விளையாட்டுக்களைப் பார்ப்பேன். சந்திரனின் தெய்வீகத் தெளிவைப் பார்ப்பேன். அதனைச் சுற்றியுள்ள புராதன விண்மீன் குழுக்களைப் பார்ப்பேன். ஓடும் நீரின் பாடலைக் கேட்பேன். அதன் தூய்மையைச் சுவைப்பேன். இரவில் மரங்கள், புற்கள் ஆகியவற்றின் இனிமையையும் கசப்பையும் உள்ளிழுப்பேன். என் காலடியில் உள்ள மண், கல் ஆகியவற்றை உணர்வேன். என்னே இரவு எனக்காகக் காத்திருக்கிறது! எனக்குத் தரப்படும் எல்லாப் பரிசுகளையும் அணைத்துவிட்டுப் பின் ஆழ்ந்த புரிதலுடன் அவர்களிடமே நன்றியுடன் திருப்பிக் கொடுப்பேன்."

"தந்தையே, நிலம், நீர், காற்று, தீ உங்களை நேசிக்கின்றன. அவற்றின் கொடைகள் என்றுமே வீணாகாதவை," என்றான் அஞ்சலோ.

"அதை நான் நம்புகிறேன், மகனே. எப்பொழுதுமே, என்னுடைய தேசத்தில் நான் சிறு குழந்தையாக இருந்த காலந்தொட்டு ஆண்ட வன் என்னை நேசிக்கிறார் என்பதை நம்பினேன்," என்றார் லியோனிடஸ்.

"எப்படி அல்லது என்ன பாதையால் கடவுளில் எல்லையற்ற, பூரணமான விசுவாசத்தை அவர் என்னிடம் காட்டினார் என்பதை நான் புரிந்துகொண்டேன் என்று என்னால் இப்போது விளங்கப் படுத்த முடியாது. அதற்கு இப்போது எனக்கு நேரமில்லை. பிரபஞ்சத்தை ஆளுவது விசுவாசம்தான் என்ற உயர்ந்த தெய்வ காரணம் என்ற மெய்ம்மையை நான் எப்படி உணர்ந்தேன்.

இந்த நிலத்தையும் வாழ்வையும் நான் எப்பொழுதுமே என் நெஞ்சில் நேசித்தேன் என்பது எனக்குத் தெரியும். எங்கள் பிரிவு கூட ஓர் உடன்படிக்கை என்பதை அவர்களுக்குத் தெரியச் செய்வதற்கு இன்றிரவு எனக்கு விடுதலை தர வேண்டும் என்று அவர்களிடம் கோரினேன்.

"நாளை ஏற்படும் என் பெரு மரணத்துடனும் அதனுடன் வரும் மற்ற விசயங்களுடனும் நான் எனது ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியும்." அவர் மெதுவாகப் பேசினார். பின் நிறுத்தி விட்டு புன்னகைத்தார். "நான் அதிகம் பேசுவதை மன்னித்துக் கொள். நான் நேசித்த ஒருவனுடன் பேசி ஒரு கிழமையாகி விட்டது" என்றார்.

ஆனால் திரும்பவும் அவர் பேசியபோது அவருடைய குரலும் முகபாவமும் ஆழமாகக் காத்திரமாக இருந்தது.

"என் மகன், நீ. எங்கள் நீண்ட மகிழ்ச்சிகரமான ஆண்டுகளில் என்னில் நீ விசுவாசம் உடையவனாக இருந்திருக்கிறாய். அதற்காக நான் உனக்கு நன்றி சொல்கிறேன்.

இன்றிரவும் எப்பொழுதும் போல் நீ எனக்கு விசுவாசமாக இருப்பாய். இந்த அறையில் உன்னை நான் நினைத்திருக்கிறேன். திரும்பவும் உன்னை நான் ஆர்வத்துடன் சந்திக்க விரும்பினேன். என் பொருட்டல்ல. உனக்கு ஒன்றைச் சொல்லுவதற்காக. உண்மை. உனக்கு நான் சொல்ல நிறைய இருந்தது. ஆனால் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இதை மட்டுந்தான் நான் வற்புறுத்தி, மன்றாடிக் கேட்கிறேன்: தங்கமான பகுதி தெய்வ விதியான விகிதாசாரம். அதை உன் நெஞ்சில் வைத்திரு."

"மகிழ்ச்சியுடன் இன்றிரவு இங்கு தங்குவேன். ஆனால் அதற்கு மேலாக இன்றிரவு உங்களுடன் மகிழ்ச்சியுடன் போவதற்கும் விரும்புகிறேன். இன்றிரவு மட்டுமல்ல, பல பல இரவுகள் நாங்கள் ஒன்றாகத் திரிந்தோம்," என்றான் அஞ்சலோ.

லியோனிடஸ் திரும்பவும் புன்னகைத்தார். "இன்றிரவு, நட்சத்தி ரங்களின் கீழ், புற்கள் முளைத்த, பனிபடர்ந்த மலைப் பாதைகளில் என் தெரு என்னை ஓரிடத்துக்கு இட்டுச் செல்லும். ஓரிடத்துக்கு மட்டும். என் மனைவி லுக்றேசியாவுடன் கடைசி இரவொன்றைக் கழிப்பேன். அஞ்சலோ, உனக்கொன்று சொல்கிறேன். மனிதன் – வாழ்வின் மூச்சை மூக்குத் துவாரத்துக்குள் ஊதிவிட்டது ஆண்டவ னின் முக்கியமான செயல் – நிலம், கடல், காற்று, தீ ஆகியவற்றுடன் அவன் ஒன்றாக இணைந்து போகலாம். இவற்றுடன் நான் செய்த ஒப்பந்தங்களையும், லுக்றேசியாவிடம் விடைபெற்றுக்கொள்ளும் அதே இரவு அவள் கைகளுள் மூடி வைத்துவிடுகிறேன்." அதன் பின்னர் ஒரு சில கணங்கள் அவர் மௌனமாக, சலனமற்று இருந்தார்.

அதன் பிறகு, "லுக்றேசியா இங்கிருந்து சில மைல்களுக்கப்பால் இருக்கிறாள். நல்ல நண்பர்களின் பாதுகாப்பில். அவர்கள் மூலம், என் சிறைவாசமோ, தண்டனையோ, அவளுக்குத் தெரியக்கூடாது என்பதை நிச்சயப்படுத்தி இருக்கிறேன். என் நண்பர்களை ஆபத்தில் மாட்டி வைக்க எனக்கு விருப்பமில்லை. இன்றிரவு அவர்கள் வீட்டிற்கு வருவேன் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. மரண தண்டனை பெற்ற ஒரு மனிதன், சவக்குழியின் மூச்சு என்னில் மணக்க, அவளிடம் போகவும் நான் விரும்பவில்லை. ஆனால் எங்கள் சந்திப்பு முதலிரவுச் சந்திப்புப் போல இருக்க வேண்டும். அவளுக்கு அந்த இரகசியம் ஓர் இளைஞனின் தற்புனைவு போல, இளம் காதலர்களின் மடச்செயல் போல இருக்க வேண்டும்."

"இன்று என்ன நாள்?" அஞ்சலோ சடுதியாகக் கேட்டான்.

"என்ன நாள்?" லியோனிடஸ் திரும்பச் சொன்னார். "என்னிடம் கேட்கிறாயா? காலத்தில் வாழாத, பேரூழிக் காலத்தில் வாழும் என்னிடமா கேட்கிறாய்? எனக்கு இன்றைய நாள் இறுதிநாள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் கொஞ்சம் நில். என்னை நினைக்க விடு. என் குழந்தையே, உனக்கும் உன்னைச் சுற்றி உள்ளவர்களுக்கும் இன்று சனிக்கிழமை. நாளை ஞாயிற்றுக்கிழமை.

"எனக்கு அந்தத் தெரு நன்றாகத் தெரியும்." கொஞ்ச நேரத்தின் பின் சிந்தனையில் ஆழ்ந்துபோய்ச் சொன்னார். தன் பிரயாணத்தில் ஏற்கெனவே ஈடுபட்டிருப்பவர் போல.

"மலைப்பாதைகளின் ஊடாக, பண்ணையின் பின்புறமாக அவளின் யன்னலை அடைவேன். ஒரு குறுணிக் கல்லைப் புறக்கி அவளின் யன்னல் கண்ணாடியில் எறிவேன். எழுந்து வியப்புற்று, அவள் தன் யன்னலடிக்குப் போய், திராட்சை மரங்களுக்கிடையில் என்னைக் கண்டு யன்னலைத் திறப்பாள்."

அவருடைய பெரிய நெஞ்சை அசைத்து மூச்செடுத்தார்.

"ஓ, என் குழந்தையே, என் நண்பனே" அவர் விழித்தார். "அவளுடைய அழகு உனக்குத் தெரியும். நீ எங்கள் வீட்டில் வாழ்ந்திருக்கிறாய். எங்கள் மேசையில் இருந்து உண்டிருக்கிறாய். அவளுடைய உள்ளத்தின் பண்பு, மகிழ்ச்சி, குழந்தைபோன்ற சாந்தம், தனிச் சிறப்புடைய வஞ்சகமின்மை எல்லாம் உனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியாத ஒன்று, என்னைத் தவிர இந்த உலகத்தில் வேறொருவருக்கும் தெரியாத ஒன்று, அவள் உடலையும் ஆன்மாவையும் அர்ப்பணிக்கும் அவளுடைய எல்லை யற்ற திறன். உறைபனியையும் எரிக்கும் தன்மை அது! எனது உலகப் புகழ்வாய்ந்த கலைப் படைப்புக்கள் அவள். அவை அனைத்தும் சேர்ந்தவள் அவள். ஒரு பெண்ணின் உடல் அவளுக் குரியது. இரவில் அவளின் அணைப்பின் உள்ளே, பகலில் படைக் கும் எனது பலம் மீளப் பெறப்படுகிறது. அவளைப் பற்றி உன்னிடம்

*பேசும்போதே, என் குருதி ஒரு அலை போல எழுகிறது." சில நொடிகளின் பின் அவர் கண்களை மூடினார். "நாளை நான் இங்கு வரும்போது என் கண்களை மூடிக்கொண்டு வருவேன். முன் வாசலில் இருந்து என்னை அவர்கள் உள்ளே அழைத்து வந்து, சுவரடியில் என் கண்களை ஒரு துணியால் கட்டுவார்கள். எனது கண்கள் எனக்குத் தேவையில்லை. கறுத்த கற்களோ, துப்பாக்கிக் குழாய்களோ அல்ல நான் விட்டுச் செல்வது. நான் போகும்போது விட்டுச் செல்வது தெளிவான கண்களை." திரும்பவும் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார். பிறகு, மென்மையான குரலில் சொன்னார் : "இந்தக் கிழமை, சில நேரங்களில் காதிலிருந்து கன்னத்திற்குச் செல்லும் அவள் தாடை ரேகையை என்னால் மீள ஞாபகப் படுத்த முடியவில்லை. நாளை காலை விடியும்போது அதை நான் பார்ப்பேன். ஆகவே, அதைத் திரும்பவும் ஒருபோதுமே மறக்க மாட்டேன்."*

*திரும்பவும் அவர் கண்களைத் திறந்தபோது, அவருடைய ஒளி வீசும் கண்கள் இளைஞனின் ஒளி வீசும் பார்வையைச் சந்தித்தன. "அப்படிப்பட்ட நோவுடனும் பயத்துடனும் என்னைப் பார்க்காதே. என்னைப் பார்த்து இரக்கப்படாதே. உன்னிடமிருந்து அதைப் பெறுவதற்கு நான் தகுதியானவன் அல்லன். அதை நீ அறிவாய். இன்றிரவு நான் இரக்கத்திற்குரியவனும் அல்லன். என் மகனே, நான் பிழையாகச் சொல்லிவிட்டேன். நாளை நான் திரும்பி வரும்போது உன் முகத்தைப் பார்ப்பதற்காக ஒரு தரம் கண்களைத் திறப்பேன். அந்த முகம் எனக்கு அருமையானது. நாங்கள் ஒன்றாக வேலை செய்தபோது இருந்தது போல அது சந்தோசத்துடனும் அமைதியுடனும் இருப்பதை நான் பார்க்க வேண்டும்."*

*சிறை அதிகாரி அப்பொழுது தன் கனத்த திறப்பால் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். சிறைச்சாலை மணிக்கூட்டுக் கோபுரத்தில் மணி ஐந்தே முக்காலைக் காட்டுகிறது என்று கைதிகளுக்கு அவன் சொன்னான். இருவரில் ஒருவர் சிறைச் சாலையை விட்டுப் போக வேண்டும் என்றும் கூறினான். தான் தயார் என்று அலோறி சொல்லி விட்டு ஒரு கணம் தாமதித்தார்.*

*"என்னை என் கலைக்கூடத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்த உடுப்பிலேயே கைது செய்தார்கள். மலைகளில் நான் ஏறும் போது காற்றுக் குளிராக இருக்கும். உனது மேலங்கியை எனக்குத் தருகிறாயா?" என்று அஞ்சலோவிடம் கேட்டார்.*

*தோள்களிலிருந்து தன் ஊதா நிற மேலங்கியைக் கழற்றி அவன் குருவிடம் கொடுத்தான் அஞ்சலோ. மேலங்கியைத் தன் கழுத்தில் கொளுவ முடியாமல் தடுமாறியபோது அதைக் கொளுவுவதற்கு இளைஞன் தன் கையால் உதவி செய்தான். உதவி செய்த அந்தக் கையை குரு பிடித்தார்.*

"அஞ்சலோ எவ்வளவு பேரழகு வாய்ந்தவன் நீ. உன்னுடைய இந்த மேலங்கி புதியது. விலை கூடியது. நான் பிறந்த வட்டாரத்தில் கல்யாண மாப்பிள்ளைதான் தன் திருமண நாளில் இப்படிப்பட்ட மேலங்கியை அணிவான்."

மேலங்கியை அணிந்துகொண்டு போவதற்கு நின்றுகொண்டு சொன்னார்: "உனக்கு ஞாபகமிருக்கிறதா? ஒருநாள் இரவு நாங்கள் இருவரும் மலைகளில் நடந்துகொண்டிருக்கும்போது எங்கள் பாதையைத் தவற விட்டுவிட்டோம். களைத்துப்போய், குளிரால், இனிமேல் உன்னால் நடக்க முடியாது என்று சொல்லி, நீ திடீரென்று விழுந்துவிட்டாய். அந்த நேரம் என் மேலங்கியைக் கழற்றி – நீ இப்போது செய்த மாதிரியே – எங்கள் இருவரையும் சுற்றிப் போர்த்தேன். ஒருவர் கையில் ஒருவராக அன்றிரவு முழுவதும் ஒன்றாகக் கிடந்தோம். குழந்தையைப் போல, என்னுடைய மேலங்கிக்குள் நீ உடனடியாக நித்திரையாகி விட்டாய். நீ இன்றும் அப்படி நித்திரைகொள்."

அஞ்சலோ தன் நினைவுகளை மீட்டான். குரு சொல்லும் அந்த இரவு நினைவுக்கு வந்தது. லியோனிடஸ் எப்பொழுதுமே அவனை விட அனுபவம் வாய்ந்த மலையேறி. அவருடைய பலம் அவனுடையதிலும் பார்க்க அதிகம். அவருடைய பெரும் உடம்பின் சூட்டை நினைத்தான். அவனுடைய விறைத்த அங்கங்கள் ஒரு சிநேகிதமான மிருகத்தின் உடலுடன் கிடந்ததை நினைத்தான். அவன் எழுந்தபோது சூரியன் ஏற்கனவே எழுந்து விட்டது. மலைச் சரிவுகள் வெளிச்சத்தில் அக்கதிர்களால் ஒளிர்ந்தன. அவன் எழுந்து நிமிர்ந்துகொண்டு சத்தம் போட்டு அழுதான் : "தந்தையே, இன்றிரவு என் உயிரைக் காப்பாற்றி விட்டீர்கள்." அவருடைய நெஞ்சிலிருந்து சொற்களற்ற ஓர் அனுங்கல் ஒலி மட்டும் வந்தது.

"இன்றிரவு நாங்கள் விடைபெற வேண்டியதில்லை. நாளைக் காலையில் நான் உனக்கு முத்தம் தருவேன்," லியோனிடஸ் சொன்னார்.

உயர்ந்து நெடுத்த அந்த உருவம் முற்றத்தில் கால் வைக்கும்வரை, சிறை அதிகாரி கதவைத் திறந்து பிடித்துக்கொண்டிருந்தான். கதவு இன்னொரு தரம் சாத்தப்பட்டு, கதவில் திறப்புத் திரும்பியது. அஞ்சலோ தனியாக இருந்தான்.

முதல் விநாடிகளுள் கதவு பூட்டப்பட்ட உண்மையையும், அவனைப் பார்ப்பதற்கு, ஒப்பற்ற நல்லெண்ணத்துடன் அங்கு ஒருவரும் வர மாட்டார்கள் என்பதையும் அவன் உணர்ந்தான். விழுந்துகொண்டிருக்கும் ஒரு பாறையின் கீழ் நசுக்கப்பட்டது போல, அதற்குப் பிறகு சடுதியாக அவன் நிலத்தில் விழுந்தான்.

குருவின் குரல் அவனுடைய காதுகளில் எதிரொலித்தது. உயர்ந்த உலகத்தின், கலையின் எல்லையில்லாப் பிரபஞ்சத்தின்

சுடரொளியால் ஒளியேற்றி, அவன் கண்களின் முன்னால் குருவின் உருவம் நின்றது. இந்த வெளிச்சத்தின் உலகத்திலிருந்து – முன்னொரு நாள் அவன் தந்தை திறந்து காட்டியது – இப்போது இருட்டில் அவன் வீசப்பட்டுக் கிடக்கிறான். அவனால் துரோகம் இழைக்கப் பட்டவன் அவனிடமிருந்து போனபின்பு அவன் முழுதும் தனிமையில் கிடந்தான். விண்மீன்கள் சூழ்ந்த சொர்க்கத்தையோ, பூமியையோ, கடலையோ, ஆறுகளையோ, அவன் நேசித்த பளிங்குச் சிலைகளையோ அவன் நினைக்கத் துணியவில்லை. இந்தக் கணத் தில் அவனைக் காப்பாற்ற லியோனிடஸ் அலோறி நினைத்தால் கூட அது சாத்தியப்பட்டிருக்காது. நம்பிக்கைத் துரோகம் செய்தவன் அழிக்கப்படுவான்.

“நம்பிக்கைத் துரோகம்” என்ற வார்த்தை எல்லாக் கோணங்களி லிருந்தும் அவனில் இப்போது வீசப்பட்டது. கல்லால் எறியப்பட்ட வன் மேல் சிறு கற்களைப் பொழிவது போல. அவற்றை முழங்கால் களில் நின்று, கைகள் துவன்று விழ, அவன் சந்தித்தான்.

கடைசியாக, கற்கள் பொழிவது குறைந்தபோது, ஒரு சிறிய மௌனத்தின் பின், “பொன் பகுதி” எழுந்து, எதிரொலித்தது. அடங்கிய ஆனால் துல்லியமாக. அவன் கைகளை உயர்த்தி தன் காதுகளைப் பொத்தினான்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் அவன் யோசித்தான். *நம்பிக்கைத் துரோகம் ஒரு பெண்ணுக்காக. பெண் என்றால் என்ன? நாங்கள் அவளைப் படைக்கும்வரை அவள் இருப்பு இருக்கவில்லை. எங்களூடாகத்தான் அவளுக்கு உயிர் இருக்கிறது. அவளுக்கு உடம்பு இல்லாவிட்டால் அவள் இல்லை. அவளை நாம் பார்க்கா விட்டால் அவள் உடம்பு கூட இல்லை. அவளை உயிராக்க வேண்டுமென்றும், எங்கள் ஆன்மாவை அவளின் கண்ணாடியாக்க வேண்டும் என்றும் அதில் அவள் தான் அழகாக இருப்பதைப் பார்க்க வேண்டும். தனது இருப்பதையும் தான் அழகாக இருப்பதையும் அவள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஆண்கள் எரிய வேண்டும், நடுங்க வேண்டும், உயிரைவிட வேண் டும். நாங்கள் அழும்போது, அவளும் அழுகிறாள். ஆனால் சந்தோசத்துடன் – ஏனென்றால் இப்போது தான் அழகாக இருக் கிறோம் என்பதற்கு அவளிடம் நிரூபணம் இருக்கிறது. எங்கள் மனவேதனையை ஒவ்வொரு மணித்தியாலமும் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும். அன்றேல் அவள் உயிருடன் இல்லை.*

*அவள் விரும்பியது போல அனைத்தும் நடந்து, என் சிருஷ்டிச் சக்தி முழுவதும் அவளைச் சிருஷ்டிப்பதிலும், அவளை உயிர் வாழ வைப்பதிலும் உபயோகிக்கப்பட்டு முடிந்துவிடும். அதன் பின்னர் என்னால் ஒரு மாபெரும் கலைப் படைப்பைப் படைக்க முடியவே முடியாது. என் அவப்பேறு பற்றி நான் கவலை அடையும்போது அவள் அதைப் புரிந்துகொள்ள மாட்டாள். மாறாக, “ஏன், நான்*

*உன்னிடம் இருக்கிறேன்தானே!" என்பாள். அவருடன் இருந்த போது, நான் பெரும் கலைஞனாக இருந்திருக்கிறேன்!*

இருந்தும் லுக்றெசியாவைப் பற்றி உண்மையில் அவன் நினைக்க வில்லை. அவனைப் பொறுத்தவரையில் தான் துரோகம் இழைத்த தன் தந்தையைத் தவிர அவனுக்கு உலகில் வேறொவருமே இல்லை.

*ஒரு பெரும் கலைஞன் என்றோ, புகழ்வாய்ந்த சிலைகளைச் சிருஷ்டிக்கிறவன் என்றோ சிருஷ்டிப்பேன் என்றோ என்னை எப்போதாவது நம்பினேனா? நான் ஒரு கலைஞன் இல்லை. நான் ஒருபோதுமே புகழ்பெற்றதொரு சிலையைச் சிருஷ்டிக்க மாட்டேன். ஏனெனில் இப்பொழுது நான் என் கண்களை இழந்துவிட்டேன் என்று எனக்குத் தெரியும். நான் குருடன்!*

கொஞ்ச நேரம் கழிந்தபின் அவனுடைய எண்ணங்கள் நிலை பேறு ஆகியவற்றைப் பற்றி மெதுவாகக் கைவிட்டு, நிகழ்காலத்திற்குத் திரும்பின.

*அவன் நினைத்தான். குரு பாதையில் நடந்து போய் திராட்சை களினூடாக வீட்டை நெருங்குவார். ஒரு சிறு கல்லை நிலத்திலிருந்து எடுத்து, யன்னல் கண்ணாடியில் எறிவார். அதன் பிறகு அவள் யன்னலைத் திறப்பாள். ஒவ்வொரு சந்திப்பிலும் அவள் அவனை அழைப்பதுபோல ஊதா நிற அங்கியிலுள்ள அந்த மனிதனை "அஞ்சலோ" என்று அழைப்பாள். என்றுமே தவறாத நண்பர். அழியாப் புகழுடைய மனிதர், மரண தண்டனை பெற்றவர், பெரும் குரு தன் சிஷ்யன் தனக்குத் துரோகம் செய்து விட்டான் என்று புரிந்துகொள்ளப்போகிறார்.*

*முதல் நாள் இரவும் பகலும் அஞ்சலோ பெருந்தூரம் நடந்திருந் தான். ஆனால் சிறிதே நித்திரை செய்திருந்தான். நேற்று முழுவதும் சாப்பிடவில்லை. செத்ததுபோலக் களைத்துவிட்டதாக இப்போது அவன் உணர்ந்தான். அவனுடைய குருவின் ஆணை – "இன்று நீ துயில்வாய்" – திரும்பவும் கேட்டது. லியோனிடஸின் ஆணை களைக்கு அவன் கீழ்ப்பணிந்தபோது அவை எப்போதுமே அவனை சரியான பாதையிலேயே கொண்டுசென்றன. மெதுவாக எழுந்து, தடுமாறிக்கொண்டு போய், குரு படுத்திருந்த மரத் தட்டில் படுத் தான். ஏறக்குறைய உடனே அவன் நித்திரையில் ஆழ்ந்து விட்டான்.*

*நித்திரை கொண்டவுடனே கனவும் கண்டான்.*

*திரும்பவும் ஒருதரம், முன்பு கண்டதைவிடத் தெளிவாக, பெரிய உருவம் மேலங்கியில் மலைப்பாதையில் நடந்து, நின்று, கல்லை எடுப்பதற்காகக், குனிந்து, யன்னலில் அதை எறிந்தது. கனவில் மேலும் தொடர்ந்தான். அந்த மனிதனின் கைகளில் அவள் இருந்தாள் – லுக்றேசியா! அவன் விழித்து விட்டான்.*

*கட்டிலில் குந்தி இருந்தான். புனிதமானதோ, மாண்போ, இந்த உலகத்தில் இனிமேல் காணக் கிடைக்காது. பயங்கரமான*

உடல்ரீதியான பொறாமை அவனுடைய மூச்சை நிறுத்தி அவனுள் நெருப்பு மாதிரி ஓடியது. பெரும் கலைஞனான குருவின் மேலிருந்த சிஷ்யனின் பயபக்தி போய் விட்டது. இருட்டில் மகன் தந்தையிடம் தன் பற்களை நறும்பினான். பழைய காலம் மறைந்துவிட்டது. எதிர்காலம் வரப் போவதில்லை. இளைஞனின் எண்ணங்கள் முழுவதும் ஒரு புள்ளியை நோக்கியே ஓடின – ஒரு சில மைல்களுக்கு அப்பாலுள்ள அவளைத் தழுவுவது.

ஒருவித பிரக்ஞைக்கு வந்தான். இனித் திரும்பவும் நித்திரை கொள்வதில்லை என்று தீர்மானித்தான்.

ஆனால் அவன் திரும்பவும் நித்திரைகொண்டான். அதே கனவையும் கண்டான். இப்போது அவனுடைய கற்பனை பல விபரங்களையும் சேர்த்திருந்தது. அத்துடன் மிகத் துல்லியமாகத் தெரிந்தது. விபரங்களை அவன் மறுதலித்தான். அவை அவனுடைய கற்பனையை மட்டும்தான் வெளிப்படுத்தி இருக்க முடியும். அவை நித்திரையில் வந்தபடியால் அவனுடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லை.

இந்தக் கனவுக்குப் பின்னும் திரும்பவும் அவன் நன்றாக விழித்திருந்தான். அவனுடைய உடலெங்கும் குளிர்ந்த வியர்வை வெளிப்பட்டிருந்தது. அவன் படுத்திருந்த பலகையில் இருந்து சூட்டடுப்பில் ஒளிரும் தணல்களைப் பார்த்தான். இப்பொழுது அவன் எழுந்து, தன் வெறும் பாதத்தை அத்தணல்களில் வைத்தான். தணல்கள் நூர்ந்து போனதால் அவன் காலடியில் அவை அணைந்துவிட்டன.

அடுத்த கனவில், அவனே சத்தமிடாமல் பதுங்கிக்கொண்டு, மலைப்பாதையில் நடப்பவரைத் தொடர்ந்து யன்னலுக்கூடாகவும் சென்றான். அவன் கையில் அவள் இருந்தாள். அவன் பாய்ந்து அவர்கள் இருவரும் அணைத்துக்கொண்டு ஒருவர் கையில் மற்றவர் கிடக்கையில், முதலில் அவரது நெஞ்சிலும் பின் அவளது மார்பிலும் கத்தியை ஏற்றினான். ஆனால் அவர்களின் இரத்தம் இரண்டும் கலந்து, படுக்கைத் துணியை, பழுக்கக் காய்ச்சிய இரும்புபோல நனைத்திருந்த காட்சி அவன் கண்களை எரித்தன. அரை முழிப்பில், திரும்பவும் விழித்துக்கொண்டு, அவன் நினைத்தான், *கத்தியை பாவிக்கத் தேவையில்லை. என்னுடைய கைகளாலேயே அவர்களின் கழுத்தைத் திருக முடியும்.*

அப்படியாக அந்த இரவு கழிந்தது.

சிறையின் கதவைத் திறப்பவர் அவனை எழுப்பியபோது வெளிச்சம் வந்திருந்தது. “எப்படி உன்னால் நித்திரைகொள்ள முடியுது?” திறப்பவன் சொன்னான். “நீ உண்மையாக அந்தக் கிழட்டு நரியை நம்புகிறாய்? என்னைக் கேட்டால், அவன் உன்னைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டான் என்று தான் சொல்லு

வேன். மணிக்கூடு ஆறடிக்க கால் மணிநேரம் இருக்கிறது என்று காட்டுகிறது. அது ஆறடிக்கிறபோது, சிறை அதிகாரியும் கேணலும் வந்து, எந்தப் பறவை கூட்டுக்குள் இருக்கிறதோ அதைப் பிடித்துக் கொண்டு போவார்கள். பாதிரியார் பிறகு வருவார். ஆனால் உன்னுடைய கிழச் சிங்கம் வரவே வராது. உண்மையாக, அவனுடைய இடத்தில் நீ அல்லது நான் இருந்தால் வருவோமா?”

கதவு திறக்கிறவனின் வார்த்தைகள் அஞ்சலோவுக்குப் புரிந்த போது அவனுடைய இதயம் விவரிக்க முடியாத ஆனந்தத்தால் நிரம்பியது. பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. கடவுள் இதிலிருந்து மீளுவதற்கு வழி தந்திருக்கிறார் : மரணம். மகிழ்ச்சியான, சுலபமான மீளுதல். அவனுடைய வலிக்கும் தலையில் தெளிவில்லாமல் ஒரு எண்ணம் ஓடியது : *அவருக்காக நான் மரணமடைகிறேன்.* அந்த எண்ணம் திரும்பவும் அமிழ்ந்துவிட்டது. ஏனென்றால் லியோனிடஸ்ஸை அவன் உண்மையில் நினைக்கவில்லை. அல்லது அவனைச் சுற்றியுள்ள எவரையுமே அவன் நினைக்கவில்லை. அவன் ஒன்றை மட்டுமே உணர்ந்தான்: கடந்த கணத்துள் அவன் மன்னிக்கப்பட்டுவிட்டான்.

அவன் எழும்பி, சிறைக் காவலனால் கொண்டுவரப்பட்டிருந்த பேசினில் முகத்தைக் கழுவிவிட்டு, தலையைப் பின்னால் வாரி னான். இப்போது அவன் பாதத்தில் சூட்டால் ஏற்பட்ட வலியை உணர்ந்தான். திரும்பவும் நன்றியால் அவன் இதயம் நிரம்பியது. இப்போது கடவுளின் விசுவாசம் பற்றிய குருவின் வார்த்தைகளும் அவன் நினைவுக்கு வந்தன.

கதவு திறக்கிறவன் அவனைப் பார்த்துச் சொன்னான்: “நேற்று உன்னை ஓர் இளைஞன் என்றல்லவா நினைத்தேன்.”

அதற்குக் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, கற்கள் பதித்த பாதையில் காலடிச் சத்தங்கள் கேட்டன. அத்துடன் மெல்லிய கல கல சத்தமும் கேட்டது. அஞ்சலோ நினைத்தான், *படையினர் துப்பாக்கி களுடன் வருகிறார்கள்.* கனத்த கதவு அகலத் திறந்தது. இரண்டு காவல் படையினர் அவரைக் கைகளில் பிடித்திருக்க, அவர்களுக் கிடையில் அலோறி உள்ளே வந்தார். முதல் நாள் மாலை அவர் சொன்னதுபோல, அவர் கண்கள் கட்டப்பட்டு, சிறைக் காவலர் களால் அழைத்து வரப்பட்டார். ஆனால் அஞ்சலோ எங்கே நிற்கிறான் அல்லது நிற்பான் என்பதை உணர்ந்து அவனுக்கு முன்னால் ஓரடி வைத்தார். அவனுக்கு முன்னால் மௌனமாக நின்று, மேலங்கிப் பொத்தான்களைக் கழற்றி, தோளுக்கு மேலால் உயர்த்தி, இளைஞனின் தோள்களைச் சுற்றிப் போட்டார். அந்த அசைவுகள் அவர்கள் இருவரையும் உடலுடன் உடல் நெருங்கச் செய்தன. அஞ்சலோ தனக்குச் சொல்லிக் கொண்டான் : *எப்படி இருந்தாலும், சிலவேளை அவர் தன் கண்களைத் திறந்து என்னைப் பார்ப்பார்.* ஆனால், எப்போது அவர் தன் வார்த்தைகளைக்

*காப்பாற்றவில்லை? மேலங்கியை அவன் தோளில் போட்ட கை அஞ்சலோவின் கழுத்தில் இருக்க, அவர் தலை ஒரு சிறிது முன் வர, பெரிய கண் இமைகள் நடுங்கி உயர, குரு சிஷ்யனின் கண்களுக்குள் பார்த்தார். ஆனால் சிஷ்யனால் அந்தப் பார்வையை அதன் பின் நினைவுக்குக் கொண்டுவரவோ ஞாபகப்படுத்தவோ முடியவில்லை. ஒரு கணத்தின் பின் அலோறியின் இதழ்கள் அவனுடைய கன்னத்தில் பட்டதை உணர்ந்தான்.*

*"சரி, இப்போ!" கதவு திறப்போன் குரலில் ஆச்சரியம் இருக்கக் கத்தினான். "மீண்டதற்கு நல்வரவு! நாங்கள் உங்களை எதிர்பார்க்க வில்லை. இப்போது நீங்கள் உங்களுக்குரியதை எடுங்கள்!" அஞ்சலோவின் பக்கம் பார்த்துச் சொன்னான்: "நீ உன் வழியைப் பார்த்துப் போ. ஆறு மணியாவதற்கு இன்னும் சில விநாடிகள் இருக்கின்றன. எனது பிரபுக்கள் ஆறடிக்கிறதுக்கு முன் வர மாட்டார்கள். பாதிரியார் அதன் பின்புதான் வருவார். இங்கு எல்லாம் குறிப்பிட்ட மாதிரி ஒழுங்காக நடக்கும். உனக்குத் தெரியும், ஒழுங்கு ஒழுங்குதான்."*

'The Cloak' - Issak Dinesen

# மீண்டும்

ஃபிரான்ஸிஸ்கோ ஹிமினேஸ்

ஆண்டில் திரும்பவும் வரும் அப்படிப்பட்ட காலம் அது. பழம் பறிக்கும் தொழிலாளியான இற்றோ முறுவலிக்கவில்லை. அது இயற்கை, அதிகம் கிடைக்கும் ஸ்றொபெரி பழம் பறிக்கும் காலம் போய்விட்டது. கடந்த சில நாட்களாகத் தொழிலாளர்களில் பலர், யூன், யூலை மாசங்களில் பறித்ததுபோலப் பல பெட்டி கள் நிறையப் பழங்கள் பிடுங்கவில்லை. ஓகஸ்ரின் கடைசி நாட்கள் மறையத் தொடங்க, தொழிலாளரின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது. ஞாயிற்றுக் கிழமை திறமையாகப் பிடுங்கும் ஒரே ஒரு பிடுங்கி மட்டும் வேலைக்கு வந்தான். சிலவேளைகளில் மதிய உணவு இடைவேளை நேரம் நாங்கள் இருவரும் கதைப்போம். மெக்சிக்கோவில் என் குடும்பமும் அவனும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தேன். அந்த ஞாயிற்றுக்கிழமை தான் நான் அவனைக் கண்ட கடைசி முறை.

சூரியன் களைத்துப்போய் மலைகளுக்குப் பின்புறம் அமிழ்ந்த பிறகு வீட்டுக்குப் போகிற நேரம் ஆகிவிட்டது என்று இற்றோ சமிக்ஞை செய்தான். "யா ஏசோரா" என்று தன் அரைகுறை ஸ்பானிஷில் சத்தமிட்டான். அந்த வார்த்தைகளுக்காகத்தான் பன்னிரண்டு மணித் தியாலங்கள் ஒவ்வொரு நாளும் கிழமையில் ஏழு நாட்களும் காத்திருந்தேன். அவற்றைத் திரும்பவும் கேட்காமல் இருக்கும் நினைப்பு என்னைச் சோகத்துக் குள்ளாக்கும்.

வீட்டுக்கு நாம் காரில் போய்க்கொண்டிருக்கையில் பப்பா ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. இரண்டு கைகளும் ஓட்டும் வளையத்தில் இருக்க, புழுதி றோட்டை விறைத்துப் பார்த்துக்கொண்டு ஓட்டினார். என் அண்ணன் றொபேட்டோ அமைதியாக இருந்

தான். அவன் தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு கண்ணை மூடி இருந்தான். வெளியில் இருந்து வீசித் தொண்டைக்குள் போன தூசியைச் சில தரம் காறித் துப்பினான்.

ஓம். ஆண்டில் அப்படிப்பட்ட காலம் அது. குடிசையின் முன் கதவைத் திறந்தவுடன் திடீரென நின்றேன். எங்களுக்குச் சொந்த மான அத்தனை பொருட்களும் கடதாசிப் பெட்டிகளில் ஒழுங்காக அடைக்கப்பட்டிருந்தன. சடுதியாக மணித்தியாலங்களின், நாட் களின், மாசங்களின், வேலைப்பளுவை நான் மேலும் உணர்ந்தேன். ஒரு பெட்டியில் குந்தினேன். ஃப்றெஸ்நோவுக்குப் போகப்போகும் நினைவும் அங்கு எனக்கு என்ன நடக்கப் போகிறது என்பதையும் நினைத்தபோது எனக்குக் கண்ணீர் வந்தது. அந்த இரவு நான் தூங்கவில்லை. இந்தப் பயணத்தை நான் எவ்வளவு வெறுத்தேன் என்பதை நினைத்துக்கொண்டு படுக்கையில் கிடந்தேன்.

காலையில் ஐந்து மணிக்குக் கொஞ்சம் முந்தி பப்பா எல்லாரை யும் எழுப்பினார். ஒரு சில நிமிடங்களின் பின் புலரியின் அமை தியை என் சிறிய தம்பி, தங்கைகளின் கூச்சல்களும் சத்தமும் குலைத்தன. அவர்களுக்குப் பயணம் பெரியதொரு சாகசம் கொண் டது. சிறிது நேரத்தில் நாய்களின் குரைப்பும் சேர்ந்து கொண்டது.

காலை உணவுச் சட்டிகளை அடுக்கிக் கட்டியவுடன் பப்பா "கார்சன்சிற்றா"வை இயக்க வெளியே சென்றார். அந்தப் பெயரைத் தான் 38ஆம் ஆண்டு பழைய காருக்கு பப்பா வைத்தார். 1949 மாரி காலத்தில் சன்ராறோசாவில் பழைய கார் விற்குமிடத்தில் வாங்கினார். இந்தச் சிறிய ஓட்டைக்காரில் மிகப் பெருமை அவருக்கு. அதில் பெருமைப்பட அவருக்கு உரிமையும் இருக்கிறது. இந்தக் காரை வாங்குவதற்கு முன் வேறு பல கார்களைப் பார்த்தார். கார்களில் இறுதியாக இதைத் தெரிவு செய்யு முன்பு, கார் இருந்த இடத்தை விட்டு ஓட்டிச் செல்ல முன்பு முழுவதாக நன்கு ஆராய்ந்தார். ஒவ்வொரு அங்குலமாகக் காரைப் பரிசோதித்தார். கிளியைப் போலத் தலையைப் பக்கம் பக்கமாகத் திருப்பிக் காரில் ஏதாவது பிழையான சத்தம் வருகிறதா என்று காதைக் கொடுத்துக் கேட்டார். காரின் தோற்றத்திலும் சத்தத்திலும் திருப்தி ஏற்பட்ட பிறகு இந்தக் காருக்கு யார் மூல உரிமையாளர் என்பதை அறிய வேண்டும் என்று ஒரே பிடியாக நின்றார். கார் விற்பனை யாளரிடமிருந்து அதை அறியவே முடியவில்லை. இருந்தாலும் அந்தக் காரை வாங்கினார். மூல உரிமையாளர் முக்கியமான மனிதராகத்தான் இருக்க வேண்டும் என்பதைக் காரின் பின் இருக்கையில் ஒரு நீலக் கழுத்துப் பட்டி கிடந்ததைக் கண்டு அனுமானித்தார்.

பப்பா எஞ்சினை ஓடவிட்டு காரை முன்னால் நிறுத்தி இருந் தார். "லிஸ்ரோ" என்று சத்தமிட்டார். ஒரு வார்த்தையும் சொல்லாது றொபெட்டோவும் நானும் காருக்குப் பெட்டிகளைத் தூக்கிச்

சென்றோம். றொபெட்டோ இரண்டு பெரிய பெட்டிகளையும் நான் சிறிய இரண்டு பெட்டிகளையும் தூக்கிச் சென்றோம். பப்பா மெத்தையை காரின் கூரையில் எறிந்து காரின் முன் பின் பம்பர் களில் கயிற்றால் கட்டினார்.

மம்மாவின் பானையைத் தவிர எல்லாவற்றையும் ஏற்றியாயிற்று. அது ஒரு பழைய பானை. துத்தநாகம் பூசப்பட்ட இரும்புப் பானை. அதை நான் பிறந்த ஆண்டு சன்ராமரியாவிலுள்ள இராணுவ உபரிக் கடையில் அம்மா வாங்கினார். பானையில் நெளிவுகளும், வடுக்களும் இருந்தன. நெளிவுகளும் வடுக்களும் அதில் கூடக்கூட மம்மா அதை மேலும் விரும்பினார். "மி ஒல்லா" என்று பெருமை யாக அதைச் சொல்வாள். மம்மா சமைத்த பயற்றைக் கவனமாக இரண்டு கைப்பிடிகளிலும் பிடித்துக்கொண்டு பானையைத் தூக்கி வரும்போது அவளுக்காக கார் முன் கதவைப் பிடித்துக்கொண் டேன். அவர் காருக்கு அருகே வந்தபோது பப்பா பானையைத் தூக்கி வைப்பதற்கு உதவினார். றொபேட்டோ பின் கதவைத் திறந் தான். பப்பா முன் இருக்கைக்குப் பின் கார் தளத்தில் மெதுவாக வைத்தார். நாங்கள் எல்லோரும் பாய்ந்து குந்தினோம். பப்பா பெருமூச்செறிந்தார். நெற்றியிலிருந்த வியர்வையை முன் சட்டைக் கையால் துடைத்தார். களைப்புடன் "எல்ரோடா" என்றார்.

நாங்கள் வெளிக்கிட்டபோது என் தொண்டையில் ஒரு கட்டி அடைப்பதுபோல உணர்ந்தேன். கடைசி முறையாக எங்கள் சிறிய கொட்டிலைத் திரும்பிப் பார்த்தேன். சூரியன் மறையும்போது ஃப்றெஸ்நோவிலிருந்த தொழிலாளர் கூடாரத்தை அடைந்தோம். பப்பாவால் ஆங்கிலம் பேச முடியாதாகையால் இன்னும் வேலை யாட்கள் தேவையா என்று மம்மா கூடார முகாமையாளனைக் கேட்டாள். அவன் தலையைச் சொறிந்து கொண்டு "எங்களுக்கு இனித் தேவையில்லை" என்றான். "றோட்டின் கோடியில் இருக்கும் சலைவனிடம் போய் ஆட்கள் தேவையா என்று கேளுங்கள். நீங்கள் அவன் இருக்கிற இடத்தைத் தவறவிட முடியாது. வேலி போட்ட பெரிய வெள்ளை வீட்டில் அவன் வசிக்கிறான்."

நாங்கள் அதை அடைந்தபோது மம்மா அந்த வீட்டுக்கு நடந்து சென்றாள். வெள்ளைக் கேற் ஊடாக வரிசையான றோசாப் பற்றைகளைத் தாண்டி படிகளில் ஏறி முன் கதவை அடைந்தாள். கதவு மணியை அடித்தாள். முன் மண்டப மின்விளக்குப் போடப் பட்டது. நெடிய, திடகாத்திரமான ஒரு மனிதன் வெளியே வந்தான். இருவரும் சில வார்த்தைகள் பரிமாறிக் கொண்டனர். அந்த மனிதன் போன பிறகு மம்மா கைகளை மடக்கிக் கொண்டு காருக்குத் திரும்பி வேகமாக வந்தாள். "எங்களுக்கு வேலை இருக்கிறது! திரு சலைவன் சொன்னார். இந்தப் பருவம் முழுக்க இங்கே தங்கலாம் என்று." குதிரை லாயத்துக்கு அருகிலுள்ள கார் கராஜைக் காட்டி மூச்சு வாங்கச் சொன்னாள்.

அன்றிரவு மண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் எங்கள் பெட்டிகளைத் திறந்து சாமான்களை அடுக்கினோம். எங்கள் புதிய வீட்டைத் துப்புரவாக்கினோம். றொபெட்டோ கடினமான தரையைத் தவிர்த்துவிட்டு சிதறிக் கிடந்த குப்பைகளைக் கூட்டித் தள்ளினான். பழைய புதினத் தாள்களாலும் பேணி மூடிகளாலும் பப்பா சுவர்களில் இருந்த ஓட்டைகளை அடைத்தார். மம்மா, என் சிறிய தம்பி, தங்கைகளுக்கு உணவு கொடுத்தாள். பிறகு பப்பாவும் றொபெட்டோவும் மெத்தையைக் கொண்டுவந்து கராஜின் தொங்கல் மூலையில் போட்டனர். "மம்மா நீயும் சின்னன்களும் மெத்தையில் படுங்கள். றொபெட்டோவும் பஞ்சிற்றோவும் நானும் மரங்களின் கீழ் படுக்கின்றோம்" என்று பப்பா சொன்னார்.

அடுத்த நாள் காலையில் திரு சலைவன் தன் தோட்டம் எங்கே உள்ளது என்று காட்டினார் காலை ஆகாரத்துக்குப் பின் பப்பாவும் றொபெட்டோவும் நானும் தோட்டத்துக்குப் பழம் பிடுங்கப் போனோம்.

ஒன்பது மணியளவில் வெப்பம் ஏறக்குறைய நூறு பாகைக்கு ஏறிவிட்டது. நான் முழுவதாக வியர்வையில் தோய்ந்துவிட்டேன். துணித் துண்டொன்றைக் கடித்துக்கொண்டிருப்பது மாதிரி என் வாய் உணர்ந்தது. மரங்களின் வரிசைக் கடைசிக்குச் சென்று நாங்கள் கொண்டுவந்த சாடித் தண்ணீரை எடுத்துக் குடிக்க வெளிக்கிட்டேன். "கனக்கக் குடிக்காதே. உனக்கு வருத்தம் வரும்" என்று றொபெட்டோ சத்தமிட்டான். அவன் சொல்லி முடிக்க முன்பே வயிற்றில் நோவை உணர்ந்தேன். முழங்காலில் விழுந்தேன். சாடியை என் கையிலிருந்து உருள விட்டுவிட்டேன். வெப்பமான மணற்தரையில் என் கண்கள் அழுந்த நான் அசையாமல் கிடந்தேன். சிறிய பூச்சிகளின் இரைச்சல் மட்டும்தான் எனக்குக் கேட்டது. சிறிது சிறிதாக திரும்பவும் நான் நினைவுக்கு வரத் தொடங்கினேன். என் முகத்திலும் கழுத்திலும் தண்ணீரை ஊற்றினேன். அந்த ஊத்தைத் தண்ணீர் என் கைகள் நீளமாகக் கீழே ஓடுவதைக் கவனித்தேன்.

மதிய உணவுக்கு இடைவேளை வந்தபோது இன்னும் தலை சுற்றுவதை உணர்ந்தேன். இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. தெருவின் பக்கத்திலிருந்த பெரிய வாதுமை மரத்தின் கீழ் இருந்தோம். நாங்கள் சாப்பிட்டபோது எத்தனை பெட்டிகள் பொறுக்கி இருக்கிறோம் என்று பப்பா குறித்துக்கொண்டிருந்தார். றொபெட்டோ ஒரு தடியால் நிலத்தில் படங்கள் வரைந்து கொண்டிருந்தான். கீழ்த் தெருவைப் பார்த்த பப்பாவின் முகம் வெளிறியதை நான் சடுதியாகக் கவனித்தேன். "இங்கே பார். பள்ளிக்கூட பஸ் வருகிறது." கலவரமடைந்து உரத்து முணுமுணுத்தார். இயற்கையாக உந்தப்பட்டு றொபெட்டோவும் நானும் ஓடிப்போய் பழமரங்களுக்கிடையே பதுங்கிக்கொண்டோம். பள்ளிக்கூடம் போகவில்லை என்பதற்காகப்

பிரச்சினையில் மாட்டுப்பட நாம் விரும்பவில்லை. நேர்த்தியாக உடுத்த என் வயதொத்த பையன்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினார்கள். அவர்கள் கைகளில் புத்தகங்களைத் தூக்கிச் சென்றார்கள். அவர்கள் வீதியைக் கடந்தபிறகு பஸ் போனது. றொபெட்டோவும் நானும் மறைவிலிருந்து வெளியே வந்து பப்பாவுடன் சேர்ந்துகொண்டோம். "ரியனென் கியூ ரெனர் கியூடாடோ" அவர் எங்களை எச்சரித்தார். மதிய உணவின் பின் திரும்பவும் வேலைக்குப் போனோம். சூரியன் இன்னும் எரிந்துகொண்டிருந்தான். இரையும் பூச்சிகள், வியர்வை ஈரம், சூடான, காய்ந்த தூசி ஆகியவை நினைவுந்த பின் மதியம் முழுவதும் தொடரும்போல இருந்தது. இறுதியில் பள்ளத்தாக்கைச் சுற்றியிருந்த மலைகள் வெளிவந்து சூரியனை விழுங்கின. ஒரு மணிநேரத்துக்குள் தொடர்ந்து பிடுங்க முடியாத அளவுக்கு இருட்டாய்ப் போயிற்று. குலைகளைப் பார்க்க முடியா மல் கொடிகள் திராட்சைகளை மூடிவிட்டன. "வாமொனாஸ்" என்று பப்பா சொன்னார். வேலையை முடிக்கும் நேரமாகிவிட்டது என்று குறிக்கிற சமிக்ஞை எங்களுக்குத் தரப்பட்டது. பப்பா ஒரு பென்சிலை எடுத்து முதல் நாள் நாங்கள் எவ்வளவு பணம் உழைத்திருக்கிறோம் என்று கணக்குப் பார்த்தார். சில எண்களை எழுதினார். சிலதை வெட்டினார். இன்னும் சிலவற்றை எழுதினார். "குயின்சி" என்று முணுமுணுத்தார்.

நாங்கள் வீடு அடைந்ததும் தண்ணீர்க் குழாயினடியில் நின்று குளிர்ந்த நீரில் குளித்தோம். அதன் பிறகு சில பலகைப் பெட்டிகளை மேசையாகப் போட்டு அதைச் சுற்றி இருந்து இரவுணவு சாப்பிட் டோம். மம்மா எங்களுக்கு விசேச உணவு தயாரித்திருந்தார். சோறும் சோளக்கட்டியும் போட்டு "கார்னெ கொன் சில்லி" உடன் சமைத்திருந்தாள். அது எனக்கு விசேசமாகப் பிடித்த உணவு.

அடுத்த நாட்காலை என்னால் அசையவே முடியாமல் இருந்தது. என் உடம்பு முழுவதும் உளைந்தது. என் கால்களையும் கைகளையும் என்னால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை. என் தசைநார்கள் இறுதியாகப் பழக்கப்படும்வரை ஒவ்வொரு காலையும் இந்த உணர்வு பல நாட்கள் தொடர்ந்துகொண்டிருந்தது.

அது திங்கட்கிழமை. நவம்பர் மாதம். முதல் கிழமை. திராட்சைப் பழப் பருவம் முடிவுற்றது. இப்போது என்னால் பாடசாலை போக முடியும். அன்று காலையில் நேரத்திற்கே விழித்துவிட்டேன். நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டு, வேலைக்குப் போகத் தேவையில்லை என்ற நினைவில் திளைத்துக் கொண்டு, அந்த ஆண்டு முதன் முதலாக ஆறாம் வகுப்புக்குப் போகப்போகிறேன் என்ற நினைவில் படுத்துக் கிடந்தேன். என்னால் நித்திரைகொள்ள முடியாமல் போய்விட்டதால் எழுந்து பப்பாவுடனும் றொபெட் டோவுடனும் காலை ஆகாரத்துக்குச் சேர்ந்துகொள்ளத் தீர்மானித் தேன். றொபெட்டோவின் முகத்தைப் பார்க்க விரும்பாமல்

மேலே பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் சோகமாய் இருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். அவன் இன்று பள்ளிக்குப் போகப் போவதில்லை. நாளைக்கோ, வருகிற கிழமையோ, வருகிற மாதமோ, போகப் போவதில்லை. என் கைகளிரண்டையும் உரசினேன். காய்ந்த, அமிலக் கறைபட்ட உள்ளங்கைத்தோல் உரிந்து சின்னச் சின்ன சுருள்களாய் நிலத்தில் விழுவதைப் பார்த்தேன்.

பப்பாவும் றொபெட்டோவும் வேலைக்குப் போன பிறகு சுமை தணிந்ததாக உணர்ந்தேன். குடிசைக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறிய படிச்சரிவின் மேலிருந்து தூரத்தே கார்கன்சித்தா தூசி மேகத்துள் மறைவதைப் பார்த்தேன்.

இரண்டு மணித்தியாலத்துக்குப் பின் எட்டு மணியளவில் இருபதாம் இலக்க பள்ளிக்கூட பஸ்ஸுக்குத் தெருவின் ஓரத்தில் காத்திருந்தேன். அது வந்தவுடன் ஏறினேன். உள்ளே ஒவ்வொருவரும் பேசிக் கொண்டோ சத்தம் போட்டுக்கொண்டோ பரபரப்பாக இருந்தார்கள். நான் பின்னால் வெறுமையான ஓர் ஆசனத்தில் போய் இருந்தேன்.

பள்ளிக்கூடத்திற்கு முன் பஸ்ஸை நிற்பாட்டியபோது நான் நடுங்குவதை உணர்ந்தேன். பஸ்ஸிற்கு வெளியால் பார்த்தபோது மாணவர்களும் மாணவிகளும் தங்கள் கைகளில் புத்தகங்களைச் சுமந்துகொண்டு சென்றனர். என் கைகளை பைக்குள் வைத்துக் கொண்டு அதிபரின் அலுவலகத்துக்கு நடந்தேன். உள்ளே போன போது ஒரு பெண்ணின் குரல் கேட்டது. "நான் உமக்கு உதவி செய்யேலுமா?" நான் திடுக்கிட்டு நின்றுவிட்டேன். பல மாதங்களாக நான் ஆங்கிலத்தைக் கேட்கவே இல்லை. ஒரு சில நிமிடங்கள் நான் பேச முடியாமல் நின்றேன். என் பதிலுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தேன். என் முதல் இயல்புணர்ச்சி ஸ்பானிஷ் மொழியில் பதில் சொல்வது. ஆனால் அதை நான் செய்யவில்லை. இறுதியாக ஆங்கில வார்த்தைகளுக்குப் போராடிக்கொண்டு ஆறாம் வகுப்பில் சேர வந்திருக்கிறேன் என்று அவளிடம் சொன்னேன். பல கேள்விகளுக்குப் பதில் சொன்ன பின் என் வகுப்பறைக்கு அழைத்துச்செல்லப்பட்டேன்.

என் ஆறாம் வகுப்பாசிரியரான திரு லேமா எனக்கு வணக்கம் சொல்லி, இருப்பதற்கு ஒரு மேசையைத் தந்தார். பிறகு வகுப்புக்கு என்னை அறிமுகப்படுத்தினார். அனைவருடைய கண்களும் என்னில் இருந்தபோது நான் மிகவும் பரபரப்படைந்தேன். பயப்பட் டேன். பப்பாவுடனும் றொபெட்டோவுடனும் பருத்தி பிடுங்கிக் கொண்டு இருந்திருக்கலாம் என்று விரும்பினேன். இடாப்புக் கூப்பிட்ட பிறகு வகுப்புப் பாடத்தை முதல் மணித் தியாலத்துக்கான வேலையை திரு லேமா எல்லோருக்கும் கொடுத்தார். "நேற்று நாங்கள் வாசிக்க ஆரம்பித்த கதையை இன்று காலையில் முதலாவ தாகச் செய்யப்போகிறோம்." அவர் உற்சாகமாகச் சொன்னார்.

என்னிடம் நடந்து வந்து ஒரு ஆங்கிலப் புத்தகத்தைத் தந்து வாசிக்கச் சொன்னார். "நாங்கள் 125ஆம் பக்கத்தில் நிற்கிறோம்." என்று பண்பாகச் சொன்னார். இதைக் கேட்டபொழுது என் இரத்தம் தலைக்குச் சடுதியாக ஏறுவதை உணர்ந்தேன். என் தலை சுற்றுவதை உணர்ந்தேன். "உமக்கு வாசிக்க விருப்பமா?" என்னைத் தயக்கத்துடன் கேட்டார். நான் 125 ஆம் பக்கத்தைத் திறந்தேன். என் வாய் வரண்டுவிட்டது. என் கண்களில் இருந்து நீர் வழிந்தது. என்னால் வாசிக்க ஆரம்பிக்க முடியவில்லை. "நீர் பிறகு வாசிக்கலாம்." திரு லேமா புரிந்துணர்வுடன் சொன்னார்.

வாசிப்புப் பாடத்தின் மிச்ச நேரமெல்லாம் என்னிலேயே எனக்குக் கோபம் கோபமாக வந்துகொண்டிருந்தது. நான் வாசித் திருக்க வேண்டும் என்று எனக்குள் நினைத்தேன். இடைவேளையின் போது தங்குமறைக்குப் போய் ஆங்கிலப் புத்தகத்தில் 125 ஆம் பக்கத்தைத் திறந்து வகுப்பில் இருக்கிற மாதிரி பாவனை செய்து கொண்டு தணிந்த குரலில் வாசிக்க ஆரம்பித்தேன். அதில் பல சொற்கள் எனக்குத் தெரியாது. புத்தகத்தை மூடிவிட்டு வகுப்புக்குச் சென்றேன்.

திரு லேமா தன் மேசையிலிருந்து தாள்களைத் திருத்திக் கொண் டிருந்தார். நான் உள்ளே நுழைந்தபோது என்னைப் பார்த்து முறுவலித்தார். நான் நல்லுணர்வு அடைந்தேன். அவரிடம் சென்று புதிய சொற்களை வாசிக்க எனக்கு உதவ முடியுமா என்று கேட்டேன். "சந்தோசமாக" என்றார்.

பாடசாலையில் என் உற்ற நண்பரான திரு லேமாவிடம் அந்த மாதத்தில் மிச்சமாக இருந்த நாட்களில் பாடசாலையில் ஆங்கிலம் படித்தேன்.

ஒரு வெள்ளிக்கிழமை மதிய உணவு இடைவேளை சங்கீத அறைக்குத் தன்னுடன் வருகிறாயா என்று என்னை வினாவினார். "உமக்குச் சங்கீதம் பிடிக்குமா?" அந்த அறைக்குள் நுழையும்போது கேட்டார்.

"ஓம். எனக்கு கொறிடோஸ் பிடிக்கும்." என்று நான் பதிலளித் தேன். பிறகு ஒரு ற்றம்பெற்றை எடுத்து ஊதிவிட்டு என்னிடம் தந்தார். அந்தச் சத்தம் எனக்குப் புல்லரிப்பைக் கொடுத்தது. எனக்கு அந்தச் சத்தம் தெரியும். பல கொறிடோக்களில் அதைக் கேட்டிருக்கிறேன். "இதை வாசிக்க எப்படிப் பழகப் போகிறாய்?" என்னைக் கேட்டார். அவர் என்னைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் நான் பதில் சொல்ல முன்பே "மதிய உணவு இடைவேளைகளில் நான் உனக்குக் கற்பிக்கிறேன்" என்று சேர்த்துச் சொன்னார்.

அந்த நாள் வீட்டுக்கு ஓடிப்போய் இந்த மகத்தான செய்தியை பப்பா, மம்மாவிடம் தெரிவிக்க பள்ளிக்கூடத்தில் இருக்க முடியா

*மல் துடித்தேன். நான் பஸ்ஸில் இருந்து இறங்கியபோது என் இளைய தம்பி, தங்கைகள் என்னைச் சந்திக்க என்னிடம் ஓடோடி வந்தார்கள். அவர்கள் கூக்குரலிட்டுச் சத்தமிட்டார்கள். அவர்கள் என்னைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்று நினைத்தேன். ஆனால் நான் எங்கள் குடிசைக் கதவைத் திறந்த போது எங்களுக்குச் சொந்தமான சாமான்கள் அத்தனையும் கடதாசிப் பெட்டிகளில் வடிவாக அடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டேன்.*

'The Circuit' - Francisco Jimenez

# மறியல் வீடு

## றிக் ப்பாஸ்

கலேனா ஜிம்மிடம் இரு பெண் சிநேகிதிகள் இருந்தார் கள். கனடாவுக்குப் போவதற்கு ஒரு கேற்றுத் திறப்பும் இருந்தது. தெருவின் மேற்புறத்தில், கனடாவின் மறுபக்கத்தில் இருந்த இடமே வட அமெரிக்காவில் வேட்டைக்கான மிகச் சிறந்த இடம். அங்கு போவ தற்குத்தான் அவனிடம் திறப்பு இருந்தது. கனடாவுக்குப் போகும் சிறிய புழுதித் தெரு ஒருபுறம் மலை முகத்தை யும், மறுபுறம் மலையுச்சிச் சாய்வேற்றத்தையும் கொண்டிருந்தது. வண்டியை ஓட்டிக்கொண்டிருக்கை யில் துணிவிருந்தால் வயிற்றைக் குமட்ட வைக்கும் மோயீ ஆற்றின் வெண்மையான நீர்ச் சொரிவைப் பார்க்கலாம். பாதை முடியப்போவதாக அறிவிக்கும் எச்சரிக்கைகள் தெருவில் இல்லை. நேராக மலையில் ஏறவேண்டியதுதான். சில வளைவுகளின் பின் – முகில் களில் ஏறுவதுபோல் – எப்போதுமே போய்க்கொண்டே இருக்க வேண்டும். ஆனால் இந்தத் தெருவில் பயணம் செய்ய வந்தவர்கள், தங்களுக்கு முன்னால் என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்புகிறவர்கள், புத்திசாலி களாக இருந்தால், தெருவிலேயே காரை நிறுத்திவிட்டு, இறங்கி நடக்கத் துவங்கிவிடுவர். – காரணம் வண்டி யைத் திருப்புவதற்கு ஒரு இடமும் அங்கே இல்லை என்பதுதான். மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு, சில வேளை வாந்தி எடுப்பதற்கு நிறுத்த வேண்டும். – ஜீப், லொறி, ஆகியவற்றின் பிறேக்கை அமத்தினால் அவை புரண்டுவிடும். இறுக்கமற்ற சரளைக் கற்களின் விளிம்புக்கப்பால், வெளிகளுக்குமப்பால் அவை புரண்டுவிடும். சிலவேளை அப்படி நடந்தது. பாறை களில் கிடக்கும் சிதிலங்களைப் பார்த்தால் தெரியும். ஆனால் கலேனா ஜிம் தனது பழைய கறுத்த லொறியை எந்தக் கவலையும் இல்லாமல் மேலே

ஓட்டிச் செல்வான். ஆமைப் பூட்டுப் போட்டுப் போடப்பட்ட கனமான குறுக்குப் பலகை வந்தவுடன் இறங்கிப் பூட்டைத் திறப்பான். அந்தக் குறுக்குப் பலகை ஐக்கிய அமெரிக்காவையும் கனடாவையும் பிரிக்கிற எல்லை என்பதை வித்தியாசப்படுத்த எந்த அடையாளமுமே இல்லை. தனிய ஒரு கேற்தான் இருந்தது. நாங்கள் அதனூடாக ஓட்டிச் சென்று மறுபக்கத்தை அடைந்தவுடன் அவன் மறுபடி இறங்கி பூட்டைத் திரும்பவும் பூட்டுவான். இப்போது நாங்கள் வட ஐடைஹோவைக் கடந்து, புதிய நாட்டுக்குள் வந்துவிட்டோம். அங்குதான் ஓர் இடத்தில் முன்னோடிகள் வேட்டையாடியதாகச் சொல்லப்படுகிறது.

"ஒய்," என்று முறுவலித்துக் கொண்டு ஜிம் சொன்னான். அவன் தலைமயிர் கறுப்பு. பல ரேகைகள் ஓடிய முகம். இள நீலக் கண்கள். குழந்தையின் முறுவலிப்பு. வயது நாற்பது. "ஒய், ஒய், ஒய்," அவனுக்குத் தெரிந்த ஃப்றெஞ் மொழி அவ்வளவுந்தான்.

வேட்டையாடுவதில் அவனுக்குத் தனி விருப்பம். அவனுக்குத் திறப்பு எப்படிக் கிடைத்தது என்று எனக்குத் தெரியாது. அவனிடம் ஒரு மாயக் கவர்ச்சி, அல்லது சூழ்ச்சித்திறம் இருந்தது. அது நிச்சயம். அந்தப் பக்கத்தை மட்டும்தான் அவனில் அனைவரும் கண்டனர். அவனுடைய பெண் சிநேகிதி பற்ஸி ஒக்ளஹோமாவை விட்டு அவனுடன் வெளிக்கிட்டு வந்த நாள் தொடக்கம் அவனுடன் இருக்கிறாள். அவளுக்கும், நிச்சயமாக எனக்கும்தான், அவனுடைய மற்ற பக்கம் தெரியும். அவன் இன்னும் சிறுவனே. மனிதனாக வர இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறான். அவன் வாழ்க்கையில் இது நாற்பதாவது ஆண்டு. எப்பொழுதும் சரியான தெரிவுகளைத் தான் செய்கிறான் என்றில்லை. ஆனால் இன்னும் முயற்சிக்கிறான். குறைந்தது இன்னும் தெரிவுகள் செய்வதற்கு இடமிருக்கிறது. விசித்திரமான, பிடிவாதமான ஒருவித புனிதம் அது. பற்ஸியில் எனக்கு விருப்பம். அவளுக்கும் நாற்பது வயது. லிபியில் இருக்கும் ஜிம்மின் அடுத்த பெண் சிநேகிதியில் எனக்கு அத்தனை விருப்பில்லை. அவளுக்கு வயது பதினாறு. மஞ்சள் நிறத் தலைமுடியுடையவள். கடுமையாகக் கதைப்பாள். கிராமத்திலிருந்து வெளிக்கிட அவள் எந்நேரமும் தயார். வெளிக்கிட்டு அவனுடன் தெருவில் போக எந்நேரமும் ஆயத்தமானவள். அவள் பயப்பட்டிருக்காவிட்டால் ஜிம்முடன் போகவே விரும்பியிருப்பாள் என்றே நினைக்கிறேன். உண்மையில் ஜிம் அதைச் செய்ய மாட்டான். ஆனால் அவனுக்கு அந்தத் தெரிவும் உள்ளது. அவனிடம் பல தெரிவுகள் இருக்கின்றன. கலேனா ஜிம்மை எவர்தாம் தம்முடன் வைத்திருக்க விரும்ப மாட்டார்கள்? அதுவும் முதல்முறை?

அனைவரும் அவனில் அந்தக் குழந்தைத் தன்மையை, மாயக் கவர்ச்சியைத்தான் பார்ப்பார்கள். "அந்த ஜிம்மா?" அவனுடைய புன்னகைக்காக அவனுக்கு மதுவல்ல எதுவுமே வாங்கிக் கொடுப்

பார்கள். அவன் அப்படித்தான் என்று நினைக்கிறார்கள். அவன் கட்டுப்பாடற்றவன். யக் பள்ளத்தாக்கைச் சேர்ந்த கட்டுப்பாடற்ற மனிதன் என்று நினைக்கிறார்கள். அவன் தங்களுடன் இருப்பதில் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அவன் பழமரபுக் கதாநாயகன் போல் அவர்களிடையே வாழ்கிறான். மேற்கோள் வாசகம்போல, மாநிலக் கொடிபோல, அல்லது ஏதாவது ஒன்றுபோல அவர் களிடையே வாழுகின்றான்.

அவன் வளர்ந்துகொண்டிருக்கிறான் என்று இன்னும் அவர் களுக்குத் தெரியவில்லை. சிலவற்றைக் கழித்து விடுகிறான். சிலவற்றை வெளியே வைத்திருக்க விரும்புகிறான். அப்படி இன்னும் வளர்ந்துகொண்டிருக்கிறான்.

முதன்முதல் அவன் வந்தபோது இங்கு தெருவில் செய்த காரியத்துக்காக அவனைக் 'கலேனா' என்று அழைப்பர். அந்த நேரம்தான் அவனும் பற்ஸியும் திருமணம் செய்வதற்கு இருந்தார்கள் (அவர்கள் திருமணம் செய்யவே இல்லை) அது பத்து வருடங்களுக்கு முன். அந்த வேளையில்தான் தொம்சன் அருவிக்கு அருகாமையில் ஒரு பெரும் கனிப்பொருள் சுரங்கத்தைக் கண்டுபிடித்திருந்தனர். கலேனா என்ற கனிப்பொருள் நாட்டுப் பாறையுடன் கலந்து காணப்படும். அதை வேறாக்க பதனம் செய்து, தகர்த்து, தூய்மைப் படுத்தி பின் பதனம் செய்ய வேண்டி இருக்கும். ஆனால் இடைக் கிடை தூய்மையான ஈயத்தைப் போல மினுங்கும் கலேனா அகப்படுவதுண்டு. அதைப் புல்டோசரைக் கொண்டு நேரடியாகவே மலையிலிருந்து கொழுவி எடுக்கலாம்.

கால்நடை வளைப்பிடத்தை விட்டு வடக்கே வந்தவன் ஜிம். யக்கில் வாழும் பலரும் முன்னர் போலவே இப்போதும் ரெக்சாஸ் ஸிருந்துதான் வந்தவர்கள். ஆனால் ஜிம் இன்னும் கொஞ்சம் வடக்கே இருக்கிற ஒக்ளோஹோமாவிலிருந்து வந்தவன். அவ்விடம் முன்புபோல இன்றும் கடுமையானது தான். பள்ளத்தாக்கின் ஊடாக உண்மையான தெரு போடும் போது இருந்த நிலை – அந்தப் பள்ளத்தாக்குத்தான் கனடாவுக்கு வருமுன்பு உள்ள றொக்கி மலையின் கடைசிப் பள்ளத்தாக்கு – அத்துடன் மொன் ரானாவிலுள்ள அந்தப் பள்ளத்தாக்குத்தான் இன்றும் மின்சாரம் இல்லாத ஓரிடம். பெரும்பாலும் இனிமேலும் இல்லாமலிருக்கக் கூடிய இடம். ஜிம் தெருப் போடுகிறவர்களோடு வேலை செய்தான். மேற்கேயுள்ள கூற்றெனாய் ஆற்றுக்குள் போய் விழும் யக் ஆற்றைப் பின்தொடரும் சிறிய ஒற்றை ஒழுங்கைத் தெருவைப் போடுவதற் காகப் பாறைகளையும், காட்டையும், வெட்டுவதற்கு உதவினான்.

ஒரு வெள்ளிக்கிழமை பின் மதியத்தில் எல்லோரும் வீட்டுக்குப் போன பின்னர் ஜிம் என்ன செய்தானென்றால் தெருப் போடு வதற்கு சீமேந்து கலக்க மெஷினைத் திருடிக்கொண்டான். தெருப் போடுபவர்களில் ஜிம் மட்டும்தான் உண்மையில் அந்தப் பள்ளத்

தாக்கில் வாழ்ந்தவன். மற்றவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். என்னையும் பற்ஸியையும் கூட்டிக் கொண்டு தொம்சன் அருவிக்கருகிலுள்ள சுரங்கம் வெட்டும் இடத்துக்குச் சென்றான். அங்குதான் கலேனாவைக் கிண்டி எடுத்தனர். மலையுச்சிக்கு எதிராக நிற்கக்கூடியதாக, சீமெந்து மெஷினில் கலக்கும் பாகத்தில் ஏறி நின்றான். ஒரு சுத்தியலுடனும், தெரு வெட்டும் இரும்பாணியுடனும், சுரங்க வரியுள் செதுக்கினான். அப்போது கூழாங்கற்களும், உருளைக்கற்களும், கை முட்டு அளவி லான கலேனாக்களும், சீமெந்துக் கலவையின் பெரிய கொள்கலத் துக்குள் விழுந்தன. நாங்கள் இருவரும் அவன் சுரங்கத்தைப் பார்ப்பதற்காக ஃப்ளாஷ் விளக்கைப் பிடித்துக்கொண்டிருந்தோம். தெருவில் ஒற்றைக் கார் அல்லது ற்றக் வரும்போது ஃப்ளாஷ் லயிற்றை அணைத்துவிட்டு மூச்சைப் பிடித்துக்கொண்டிருந்தோம். மலையின் பக்கப் பகுதியை ஜிம் வெறித்தனமாகக் கொத்திக் கொண்டும், தொடர்ச்சியாக ஒரே கதிவீச்சில் அடித்துக் கொண்டும் இருந்தான்.

சந்திரன் இன்னும் மேலெழாத ஓர் இருண்ட இரவு அது. ஆனால் கலேனா மிகவும் பிரகாசித்துக்கொண்டிருந்ததால் அது நட்சித்திர ஒளியையும் பற்றிக்கொண்டது. இருட்டில் மூர்க்க வெறியுடன் தோன்றினான் ஜிம். அவனுடைய பருத்த கைகளும் புயங்களும் வெறியுடன் செயற்பட்டன.

கடைசியாக அவன் விரும்பியதுபோல கலவைக் கொள்கலத்துள் கனிப்பொருள் அரைவாசியாக நிரம்பியபோது, ஏறக்குறைய நள்ளிரவாகிவிட்டது. இறங்கினான். லொறியை ஓட்ட முடியாத அளவு களைத்திருந்தான். அதனால் பற்ஸி எங்களை புளுதித் தெருக்கள் ஊடாக யக்குக்கு ஓட்டிச் சென்றாள். இடுங்கிய செங்குத் தான பள்ளத்தாக்குகளுக்கூடாகவும் புல்வெளிக்களுக்கூடாகவும், பல குறுக்குவழிகளுக்கூடாகவும், தொம்சன் அருவிக்கும் யக்குக்கும் இடையேயுள்ள சில சிறு நகரங்களைத் தவிர்த்துக்கொண்டும் ஓட்டி னாள். கடைசிப் பள்ளத்தாக்குக்கு வெளியே, வரண்ட, சிறிய நீர்நாய் – அணைச் சமவெளியில் வந்துகொண்டிருக்கையில் லொறி புதைந்து விட்டது. அதனால் பாரத்தைக் குறைப்பதற்காகக் கொஞ்ச கலேனா – சீமெந்தை அவ்விடத்தில் கழித்து விட வேண்டிவந்தது.

மலைகளின்மேல் சந்திரன் ஏறி வந்த நேரத்தில் அது மிக ஒளியுடன் பிரகாசித்தது. அது எங்களின் ஒவ்வொரு அசைவையும் வெளிச்சமாக்கியது. அது இயற்கையற்றதாகவும், பிழை மிகுந்த பிரகாசமாகவும் இருந்தது. கலேனா ஆழமற்ற சமவெளியில் விசிறி யடித்துச் சிறியதோர் அணையைக் கட்டியது. இன்னதென்றறியா நீல ஒளியால் சுடர்ப்பொறிகளை வீசியது. அது ஏறக்குறைய உள்ளிருந்து அழகான, புதிய, மின்னியக்க உருவ உயிர்போலப் பிரகாசித்தது.

அந்தப் பெரிய லொறியைத் திரும்பவும் ஓடச் செய்தோம். சறுக்கிக்கொண்டும் முனகிக்கொண்டும் பசும்புல் நிலங்களூடாக அது ஓடியது. ஓடியபோது கலேனா அகன்ற தடத்தை உண்டாக்கிக் கொண்டே சென்றது. மிருகம் ஒன்று காயத்துக்குள்ளாகி ஒளிமய மான நீல மோப்பத்தடம் ஒன்றை ஏற்படுத்திச் செல்வதுபோல அது அழகாக இருந்தது.

திரும்பவும் தெருவுக்கு லொறி வந்தபோது, ஜிம் லொறியிலிருந்து வெளியே பாய்ந்து வடியும் குழாயைப் பூட்டினான். அதன்பின் கலேனா எதுவும் வீணாகவில்லை. ஆனால் ஒரு நூறு யார் நீளத்துக்கு கலேனா ஊற்றியிருந்தது. அதை வேட்டைக்காரர், கலேனா புல்வெளி என்றழைப்பர். இப்போது அதைப் பழைய பெயரால் அழைப்பதில்லை. அதை மறந்தும்விட்டார்கள். இப்போது வரையுருவப்படங்களில் இந்தப் பெயரே உள்ளது. இரவில் சந்திர ஒளியில் மின்சார நீல ஒளியைப் போல அழகாக, அது கொழுந்து விட்டெரிகிறது. உலங்கு வானூர்திகள் அவசரகால மருத்துவ சிகிச்சைக்கு நோயாளிகளை தூக்கிச் செல்வதற்கு, அப்பள்ளத்தாக் கில் தரையிறங்க வேண்டுமானால் அவ்விடத்தில்தான் இறங்குகின் றன. ஏனெனில் கூடாத காலநிலையிலும், அவ்விடத்தை அவர் களால் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியும். அப்புல்வெளிதான் தரையிறங்கப் பாதுகாப்பான இடம். வெண்பனியைக் காற்றுக் குறுக்கே தள்ளும்போது, தரையிறங்கும் ஒளி வெளிச்சமாகி மினு மினுங்க, ஏறக்குறைய அலைபாயும் கலேனாவைப் பார்த்துத் தரை இறங்குவார்கள்.

ஜிம் செய்த அடுத்த வேலை தன்னையே குற்றவாளியாக்கிக் கொள்ளும் செயலாகும். யக் நகரத்தின் ஓரப்பாதையில் அவன் சீமெந்து லொறியை ஓட்டினான். ஒரு பக்கத்தில் கடைகளும், மற்றப் பக்கத்தில் ஒரு சலூனும், ஒரு சில வீடுகளும் இருந்தன. சீமெந்துக் கலவை உறுமிக்கொண்டும், உருண்டு கொண்டும், கலவைப் பொருட்கள் உள்ளே தளும்பிக் கொண்டுமிருக்க, தெருவிலிருந்த சிறு அறைகளிலிருந்து வெளிச்சங்கள் வந்துகொண்டிருக்க, அவன் கலேனாவைப் புதிய தெருவின் இரு மருங்கிலும் ஊற்றினான். அது முடிந்த பிறகு நகரத்தின் மத்தியில் சுற்றிச் சுற்றி லொறியை ஓட்டினான். நகரத்திலிருந்த கடையணி ஒன்றிலும் தெரு வரப் போகிற பாதையின் மத்தியிலும் போட்டான். அது இந்த மெருகான நீல வட்டத்தைச் சுற்றி இடது, வலது புறமாகத் தெருவைப் பிரித்தது. சலூனின் உரிமையாளரான டிக்கி மக்கிரைன்ரையின் வெளியே வந்து தன் லொறியில் உறைபனி தள்ளும் எந்திரத்தைக் கொண்டு வந்து ஓரப்பாதைகளையும் சிறிய கடையணி வட்டத்தையும் சரிசெய்து சமன்படுத்தினான். சூரியன் மேலெழுந்தபோது யக்கின் மனிதர்கள் அகன்ற நீல வட்டத்தின் மத்தியில் தங்குமடக் கம்பிகளைக் கொண்டு ஒரு மண்டபம் கட்டிக்கொண்டிருக்கையில், ஜிம்மும் பற்சியும் நானும்,

சீமெந்துக் கலவையைப் பழைய இடத்தில் திருப்பிக் கொண்டுபோய் வைத்துவிட்டு, வீட்டுக்குப் போய் நன்றாக நித்திரை செய்துகொண்டிருந்தோம். அந்தப் பள்ளத்தாக்கில் ஏறக்குறைய இருபது பேர் மட்டில் வாழ்ந்தார்கள். நாங்கள் எல்லோரும் அந்தப் புதிய ஓர நடைபாதையையும் புதிய கடையணியையும் விரும்பினோம். தெருப் போடுவோர் புதிய தெருவைப் போடுவதால் அது கொண்டுவரப் போகும் மக்களால், எங்களுக்கேற்படும் அசௌகரியங்களுக்கு, அவர்கள் எங்களுக்குத் தர வேண்டிய குறைந்தபட்ச வசதி அது தான் என்று உணர்ந்தோம். – அதனால்தான் ஜிம் தன் அறைவரை கலேனாக் கலவையை நீளத்துக்கு ஊற்றி இருந்தும், ஒருவருமே அவனை ஒன்றும் சொல்லவில்லை. – தெருப் போடுவோர் திரும்பவும் தெருப் போடத் தொடங்கிப் பல கிழமைகள் ஆன பின்பும், கலவையிலிருந்து இன்னும் சில கலேனாத் துண்டுகள் புதிய தெருவில் விழுந்துகொண்டிருந்தன. இப்போது இரவில் யக் ஆற்றுத் தெரு நீளத்துக்கு கார், லொறி முதலியவற்றிலிருந்து வரும் தலை வெளிச்சங்களில் சடுதியாக நீலத் துள்ளற் பாளங்கள், கட்டிகள், துண்டுகள் தெருவினடியில் புதையுண்டு கிடந்து நீலக் கண்களைப் போல மினுங்குவதைப் பார்க்கலாம். – காரை வேகமாக ஓட்டும் போது தெரு முழுவதுமே விசித்திரமான, நீல கலேனா ஒளியில் மினுங்கும். துள்ளும்.

இங்கே அனைத்திலும் இவ்விரண்டு தேவை என்று ஜிம் சொல்கிறான். குளிர் காலத்தில் நாற்பது, சிலவேளை ஐம்பது பாகைக்குக் கீழ் குளிர் சென்று விடும். காற்றும் நித்திரையைப் போல ஒடுங்கிவிடும். இரண்டு லொறிகள், இரண்டு சங்கிலி வாள்கள், இரண்டு பெண்கள் என்பான் ஜிம். இரண்டு கோடரிகள், இரண்டு திருகு ஏற்றும் பொறி இரண்டு உறைபனிச் சங்கிலி, இரண்டு சம்மட்டிகள், இரண்டு மின்சார யந்திரம், இரண்டு மலைகளில் ஏறும் பனிச் சறுக்கிக் கருவிகள். எல்லாம் இவ்விரண்டு. எதிலுமே தங்கி இருக்கக் கூடாது. அவன் சொல்வது உண்மையில் சரிதான். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஃபோட் வேத் என்ற இடத்திலிருந்து நான் இங்கு குடிபெயர்ந்தேன். பெண் சிநேகிதியுடனோ மனைவியுடனோ வாழும் முயற்சியை விட்டு விட்டேன். மூன்று பேரை அப்படி வைத்திருந்தேன். அவர்களிடமிருந்து பிரிந்தது கடினமானதாகவும், கசப்பானதாகவும், எப்போதும் அழகற்றதாகவுமே இருந்தது. அது முடிந்த பிறகு இரு பக்கத்தாருக்கும் எப்போதும் அது பெரும் நிம்மதியாகவே இருந்தது. இது ஒரு கடினமான தேசம். நிரந்தரமானவையான மலைகள், ஆறுகள், பெருங்காடுகள் கூட நூற்றாண்டு பழைமையான ஊசியிலை மரங்கள், தேவதாரு வகை மரங்கள் போன்றவற்றைத் தவிர்ந்த மற்றவை அழகானதாக இல்லை. ஜிம்மும் பற்சியும் இங்குள்ள மற்றவர்களைப் போன்றே சிலகாலம் ஒன்றாக வாழ்கிறார்கள். இருந்தாலும் சிலவேளை அவன் சொல்வதும் உண்மையே.

*கெட்ட வார்த்தைகள் பேசும் அப்பெண், நகரத்துக்குச் சில வேளை டேட்டி ஷேமில் குடிக்க வரும்போது, பற்சி அவ்விடத்தை விட்டு எழுந்து சென்றுவிடுவாள். லிபியில் இருந்து வரும் அப்பெண்ணுக்குப் பெயர் வில்மர். ஆனால் ஜிம்மும் மற்றவர்களும் அவளைப் புலி என்றே அழைப்பர். இந்த இளவேனில் காலத்தில்தான் அவளுக்கு வயது பதினாறு. அவள் இங்கு வர ஆரம்பித்தபோது அவளுக்குப் பதினைந்து வயது. இது வித்தியாசமான தேசம்.*

*புலி வரும்பொழுது பற்ஸி லொறிக்கு, வீறாப்புடன், திரும்பிப் பாராமல் நடந்து போவதை நான் பார்ப்பேன். பற்சியை உண்மையில் நான் விரும்புகிறேன். இந்தப் பள்ளத்தாக்கில் அவள்தான் மிகச் சிறந்ததொரு பொருள். ஜிம் கொண்டு வரும் விலங்கின் தோல்களையும், எறிபடை விசைகளையும், வலைப் பொறியையும் காய வைப்பாள். அவளுக்கு நீண்ட தவிட்டு நிறத் தலைமயிர். அது ஏறக்குறைய பிருட்டம்வரை நீளமானது. நல்ல பலமான முகம். அவள் இல்லிநொயிசைச் சேர்ந்தவள். ஆனால் அவள் அலாஸ்காவைச் சேர்ந்தவள் என்றுதான் அனைவரும் சொல்வார்கள். பள்ளத்தாக்கிலுள்ள அனைவருக்குமே “கனவு வளையங்கள்” என்று அவள் சொல்லும் வளையங்களைச் செய்து கொடுப்பாள். பறவை இறகுகளிலிருந்து செய்த அழகான வளையங்கள் அவை. அந்த இறகுகள் அவள் கண்டெடுத்தவை. பறவைகளைக் கொன்று எடுத்தவை அல்ல. சதுப்பு நிலக்கோழி, பருந்து, காகம், ஜே வண்ணப்பறவை, ஆந்தை ஆகியவற்றின் இறகுகள் அவை. வளையங்கள் தடித்தவை. ஒன்றை ஒன்று திருகிச் சுருளாகியவை. எல்லாம் இறகுகள். நடுவிலே மட்டும் ஒரு விரலளவு மொத்தத் துவாரம் இருக்கும்.*

*படுக்கைக்கு மேல், சரியாகத் தலைக்கு மேல், அதைத் தூக்க வேண்டும் என்று அவள் சொல்கிறாள். அப்போது, அடுத்த நாள் உன்னைக் கவலைக்குள்ளாக்கி, விறைப்பைத்தரும் கெட்ட கனவுகள் அனைத்தும் சிறகுகளில் சிக்கி விடும். நல்ல கனவுகள் சிறிய துவாரங்களூடாக வருவதற்கு இயலும். விசித்திரமாக அது உண்மையுமாகி விடுகிறது. அது வேலை செய்கிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். அதில் மாயம் இருந்தது.*

*பூரணமான குளிர் காலத்தில் அதாவது, ஜனவரியில் ஓநாய்ச் சந்திர காலத்தில் – மரங்கள் பிளவுபட்டு பள்ளத்தாக்கில் முழுவதும் பட்டாசுகள் மாதிரி வெடிக்கும். மான்களும் மரைகளும் நிமிர்ந்து நின்றபடியே உறைந்துபோகும். பிரகாசமான வெள்ளைப் புல்வெளிகளில் வேறெங்கும் போக முடியாமல் இறுதியில் பெரும் குளிரில் உறைந்துபோகும். – அவனும் பற்சியும் அறைக்குள் அடைபட்டிருப்பதால் சூடாகிவிடுவர். தங்கள் மனதை இழந்து கடும்கோபத்துக்குள்ளாகி, தேவையானால் வாளினால் ஒருவரை ஒருவர் கொல்வதற்குக் கூட அவர்களால் முடியும். அந்தக் குமுறல் வரப்போவதை*

*அவர்கள் உணர்ந்தவுடன் அந்த முனைப்பற்ற, பரபரப்பற்ற உதை அவர்களின் பிடரியில் காதுகளுக்கிடையில் விழுந்தவுடன், அந்த அரிப்பு ஆரம்பித்தவுடன் இருவரில் ஒருவர் அறையில் இருக்கும் துவக்கைப் பூட்டிவிட்டுத் திறப்பைப் பனித்திரளில் வீசுவிடுவர். அந்தத் திறப்பை இளவேனில் வந்து பனி கரைந்து போகும்வரை கண்டு பிடிக்க முடியாது. அப்போது ஒருவர் மேல் மற்றவருக்கு இருக்கும் வெறுப்புப் போய், அறைக்குள் அடைபட்டுக் கிடந்ததால் ஏற்பட்ட வெறுப்பு மாறிவிடும். வெளியே இறங்கினால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும். எழுபது பாகைக்குக் கீழ் குளிர் காற்று நுரையீரலைக் கிழிக்கும் குழந்தைகளின் பெரிய சிவத்த காற்றடைக் கக்கூடிய குத்துச் சண்டைக் கையுறைகளை அணிந்துகொண்டு – இந்தப் பூதமளவு பெரிய பலூனைப் போன்ற கையுறைகளுடன், நெருப்புக்கு முன்னால் நின்றுகொண்டு, இருவரும் மாறி மாறித் தாக்கிக்கொள்வார்கள். மாறி மாறிக் குத்து, மேல் குத்து, சரிவான குத்து, இணைக் குத்து என்று சிலவேளை ஒருமணி நேரத்துக்கும் அதிகமாகச் சண்டை நடக்கும். எழும்பி நிற்க முடியாத நிலை வரும்வரை மோதுவார்கள். களைத்துப்போய்க் கீழே விழுவார்கள். குடிகாரரைப் போல. நெருப்புக்கு முன்னால் விழுந்து நித்திரை கொள்வார்கள். மிக ஆழ்ந்த நித்திரை. அடுப்பின் மேற்பலகையில் கனவு வளையம் இருக்க, நெருப்பு அணைந்து போகும்வரை. அதன்பின் ஜிம் எழும்பிக் கையுறைகளைக் கழற்றிவிட்டு வெளியே சென்று, நெருப்புக்கு இன்னொரு கட்டையை கொண்டு வருவான்.*

*ஜிம் ஒரு பலமான மனிதன். உயரம் குறைந்தவன். ஆனால் மொத்தம். 170, 175 இறாத்தல் நிறை இருப்பான். இருந்தும் பற்ஸிக்குக் கோபம் வரும்போது நான் அவள் பக்கத்தில் நிற்க விரும்ப மாட்டேன். (அதை என்னால் கற்பனை செய்யவும் முடியாது. ஜிம் சொல்வதை மட்டும் வைத்துத்தான் சொல்கிறேன்.) ஏனென் றால் அவள் அவனிலும் பார்க்க உயரங்கூட. எட்டிப் பிடிக்கவும் அவளால் முடியும். அத்துடன் நல்ல வலுவுடன் இருக்கிறாள். ஜிம் அப்படி இல்லை என்றுதான் என்னால் சொல்லமுடியும்.*

*காடு அமைதியாகவும், வெண்பனி புதிய மென்மையுடனும் இருக்கும் டிசம்பரில், பனி சறுக்கிக்கொண்டு பற்ஸியுடன் அவளு டைய வளையத்துக்கு இறகுகள் தேடிக்கொண்டிருந்தேன். என்னை விட்டுவிட்டுப் போய்விடாதிருப்பதற்காக அவள் ஆறுதலாகச் சறுக்கிச் சென்றாள் என்று என்னால் சொல்ல முடியும். அந்தப் பள்ளத்தாக்கிலேயே அவள் தான் பனிச் சறுக்கில் கெட்டிக்காரி. சிலவேளை நான் காலை உணவறை யன்னலால் பார்க்கும்போது, நல்ல பெரிய வெண்பனி விழுந்துகொண்டிருக்கும் நேரத்தில், வோக்மனை இடுப்பில் கட்டிக்கொண்டு தீர்மானமான கட்டுப்பாடற்ற முகத்தில் சந்தோசம் தோன்ற சறுக்கிக் கொண்டு போவாள். பனிச் சறுக்குகளை உயர்த்தி முன்னுக்கு வளைந்து,*

பனித்தடிகளால் ஊன்றிக்கொண்டு, அறுபதாம் எழுபதாம் ஆண்டு றொக் அன்றோல் சங்கீதத்தைக் காதுகளுள் பாய்ச்சியபடி, சவாரி செய்வாள். குளிர் காலத்தில் ஜிம்மின் காதலில் இருந்தும், வேறு அனைத்திலும் இருந்தும், தப்பித்துக்கொண்டு சறுக்குவாள்.

வெண்பனி விழும்வரை காத்திருந்து வலைக்கயிற்றை மாட்டி ஜிம்மும் நானும் இலையுதிர் காலத்தில் வேட்டையாடுவோம். அவன் எதுக்கும், எல்லாவற்றுக்கும் பொறி வைப்பான். மிங் கீரி, நீர்நாய், வளைக்கரடி, கொயெற் ஓநாய், சிறுத்தை, கரடி எல்லாவற்றுக்கும். ஆனால் இலையுதிர் காலத்தில் நாங்கள் வேட்டையாடுவது மான்களையும், சதுப்பு நிலக் கோழிகளையும்.

நாங்கள் இப்போது மரையைத் தேடிப் போவதில்லை. அவை மலையின் மேல் இருந்தன. அத்துடன் அவற்றின் இடத்துக்குப் போவதும் சிரமம். ஜிம் தனக்குப் பலவீனமான இதயம் என்பான். சிலவேளை இருக்கலாம். ஏனென்றால் அவன் அடிக்கடி சிற்றாறு பக்கம் தட்டையான காடுகளில் மான் வேட்டையாடும்போது கூட நின்று இளைப்பாறுவான். மேடொன்றில் தரித்திருந்து கீழே போகும் மிருகங்களை வேட்டையாடுவதையும் அதிகம் செய்வோம்.

ஜிம்மிடம் குதிரை இல்லை. அதை வைத்திருக்கும் காலம் எல்லாம் கடந்துவிட்டதென்று சொல்வான். வேட்டைக் கயிற்றைப் பனிக்காரிலிருந்து ஓடவிடுவான். குளிரின் அமைதியில் அது சத்தமாகவும் வெறுக்கத்தக்கதாவும் இருக்கும். ஆனால் அவன் சொல்வான், அது மற்றவற்றிலும் வேகமானது என்று. (இருந்தும் அதை நம்பமுடியாது. ஏனெனில் பனியின் கீழ் எங்கு பனிக்கட்டி மிக மெல்லியதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. குதிரைக்குத் தெரிந்தது போல. அவன் பலமுறை உறைந்த சிற்றோடைகளில் விழுந்திருக்கிறான். வீட்டிலிருந்து பல மைல்களுக்கு அப்பால், இருபது பாகைக்குக் கீழ், இருட்டாகிற நேரத்தில், தெப்பமாக நனைந்துகொண்டு. அதிலிருந்து உயிருடன் மயிரிழையில் தப்பிப் பிழைத்திருக்கிறான்.) கலேனா ஜிம்தான் அங்கிருந்த உரமான கடைசி மனிதன். ஏனெனில் அவனுள் இன்னும் அந்த இளைஞன் இருந்தான். அதைக் கடைசிவரையும் விட்டுவிட அவன் விரும்ப வில்லை . . . அதனால் இலையுதிர்காலத்தில் மான்களை நாங்கள் சுடும்போது, நான்தான் அவற்றைச் சுமக்க வேண்டும். ஏனெனில் அவன் பலவீனமான இதயம் உள்ளவன். அத்துடன் அவனிடம் குதிரையும் இல்லை. உலங்கு வானூர்தி தூக்கியைக்* கொண்டு மான்களைத் தூக்க முடியாத, தெருவிலிருந்து மிக ஒதுக்குப்புறமான இடங்களில்தான் அவன் ஆகப்பெரிய மான்களைச் சுடுவான். அத்துடன் வாரால் கட்டிய ராவொய்ஸ் பனிச்சரக்குக் கலத்துள் துப்புரவு செய்த மானை நான் இழுக்க, அவன் எனக்குப் பக்கத்தில் அல்லது பின்னால், விசில் அடித்துக்கொண்டு, சுங்கானைப்

* A Helicopter with a winch-cable

புகைத்துக்கொண்டு, துவக்கை முதுகில் கட்டிக்கொண்டு, கையில், நடக்கும் கம்புடன் சாவதானமாக நடந்து வருவான். சிலவேளை இரண்டு மூன்று நாட்களுக்கு மான்களைத் தூக்கிச் செல்வோம்.

குன்றுகளில் முன்னோக்கி இழுத்துக்கொண்டு செல்வேன். – எனக்கென்று கட்டிய சேணத்தில், வயதான ஜிம்மின் பெரிய மானை காட்டுள்ளிருந்து இழுத்துக்கொண்டிருப்பேன். அவன் தன் குறிவைத்துச் சுடும் தந்திரங்களை, நாம் போகும் தடங்களில் சதுப்புநிலக் கோழிகளைச் சந்தித்தால், அவற்றின் தலைகளைச் சுட்டு விழுத்துவதில் காட்டினான். தலையை இழந்த அக்கோழிகள் மரங்களின் ஊசியிலைகளில் சுழன்றுகொண்டிருக்கும். அக்கோழி கள் எம் இரவுணவுக்கு நிறையக் கொழுப்புள்ள, சுவையான இறைச்சியாக மாறும். அப்படித்தான் நாம் கனடாக் காட்டுக்குள்ளி ருந்து வெளிவருவோம். அங்கே மான்கள் பெரியவை. அத்துடன் வேட்டையாடுபவர்களும் இல்லை. தெருக்களும் இல்லை. – மறைந்து போய் விடுவதற்கு நல்ல அருமையான இடம் – கடைசியாக மோயி ஆற்றுக்கு மேலே ஆமைப் பூட்டுப் போட்ட கேற்றுள்ள அந்த ஒடுங்கிய தெருவுக்கு வந்து சேருவோம்.

எல்லாவற்றையும் லொறியில் ஏற்றி, தெருவின் முடிவில் திருப்பிக் கொண்டு, (கனடாவுக்குள் பத்து மைல்வரை) பூட்டைப் பூட்டிவிட்டு கனடாவை விட்டுத் திரும்பி ஓட்டி வருவோம். கலேனா ஜிம்முக்கு மான் இன்னொரு வெற்றிச் சின்னம். சிலவேளை எனக்கு ஒன்று கிடைக்கும். எனக்கு வயதேறி வரும்போது இரண்டுக்குப் பதிலாக ஒரு மானைச் சுட்டிருக்கிறேன்.

ஒரு வருடம், எனக்கு வயது இருபத்தொன்றாக இருக்கையில் – அதுதான் என் மிகப் பலமான வருடம் – ஒரு மூஸ் மானையும் இரண்டு மான்களையும் சுட்டிருக்கிறோம். ஆனால் ஒரு மூஸ் மான் எங்கள் முன் எதிர்ப்பட்டவுடன் ஜிம் அதைச் சுடுமுன்பு நான் சத்தம் போட்டு, கல்லெறிந்து, அதைக் கலைத்துவிட்டிருக்கிறேன். எனக்கு இருபது வயதாக இருக்கும்போதுகூட ஒரு மூஸ் மானையும் (இரு மான்களையும்) அங்கிருந்து வெளியே கொண்டுவருவதற்கு இரண்டு கிழமை எனக்கு எடுத்திருக்கிறது. இருந்தும் அவற்றை நாம் வெளியே கொண்டுவந்திருக்கிறோம்.

“பெரிய ஆம்பிளைதான் நீ, பரவாயில்லை.” பனிச்சரக்குக் கலத்தை இழுத்துக்கொண்டு வந்த ஒவ்வொரு நாள் முடிவிலும் ஜிம் எனக்கு அப்படிச் சொல்வான். அவன் நல்ல சமையல்காரன். மிகக் கெட்டிக்காரன்: தடியில் வாட்டிய சதுப்புக் கோழி. அடுப்பு கரியில் வேகும் உருளைக் கிழங்கு. அதனை நசுக்கி அதன் மேல் ஊற்றும் மானிறைச்சிக் குழம்பு. ஜிம்முக்கு எல்லா நட்சத்திரங்களை யும் அக்கூட்டங்களின் பெயர்களையும் தெரியும். அவை ஒவ்வொன் றிலிருந்து நாம் சரியாக எவ்வளவு தூரத்திலிருக்கிறோம் என்றும் தெரியும். (அதை அவன் இயற்றிச் சொல்கிறான் என்று நான்

நினைக்கவில்லை) நட்சத்திரங்களைக் காட்டுவான். அவை நிறைந் திருக்கும். அவற்றுள் பல கிளைவிட்டபடி இருக்கும். எத்தனை ஒளி வருடங்களுக்கப்பால் இருக்கின்றன என்று சொல்வான். குறிப்பிட்ட ஒரு நட்சத்திரத்தை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு இருப்பான். அவ்விடத்திற்கு எப்படிப் போவது என்று வியந்துகொண்டிருப்பது போல. மிருகங்களுக்குக் கண்ணி வைக்கும் பருவம்தான் எல்லாப் பருவங்களிலும் அவனுக்கு மிகப் பிடித்த பருவம். அக்காலத்தில்தான் மற்றவர்கள் எல்லாரும் – பற்சியைத் தவிர – உறைபனியால் உள்ளே அடைபட்டுக் கிடக்கையில், அவன் தனியாக வெளியே செல்வான்.

கனேடிய றொக்கியில் உயர நாம் இருந்துகொண்டு, சந்திரனுக்கு மேலாக முகில்கள் போவதைப் பார்த்துக் கொண்டு, முடிவிலி விளிம்புகளின் அற்புதத்தை உணர்ந்து கொண்டிருந்தோம். இந்த முடிவிலித்தன்மைதான் – அப்படித் தான் இந்தத் தேசத்தில் உள்ளவை இருக்கும் – குளிரால் அடைபட்டு உறைந்திருக்கும். வேனிற்காலமும், மஞ்சள் பூக்கள் நிறைந்த கோடையும் ஒரு விபத்து மாதிரி. அது வருங்காலமொன்றில் நிகழாமலேகூடப் போய்விடலாம் . . .

நாங்கள் வேட்டையாடும்போது, மாலைகளில் விஸ்கி குடித்துக் கொண்டு அந்த நட்சத்திரங்களைப் பற்றிச் சொல்வான். வேறெவருக் கும் தெரியாத – பற்சிக்குக் கூட தெரியாத – பல விசயங்களையும் சொல்வான். ஜிம்முக்கு ப்பக் என்ற ஒரு மகன் இருக்கிறான். வயது பத்தொன்பது. சோற்றோ மாநில மறியல் வீட்டில். ஒருத் தனைக் கொன்றதற்காக ஆயுள் தண்டனை. கடுங்காவல். முன்பு எப்போதோ நடந்த திருமணத்தில் பிறந்தவன். ஒரே மகன். அவன் வயது என் வயதுக்குக் கிட்ட. ஜிம்முக்கும் எனக்கும் உள்ள வயது இடைவெளியிலும் பார்க்கக் குறைந்தது. பற்சிக்குத் தெரியுமோ எனக்குத் தெரியாது. அவளுக்கு அது தெரியாதென்பதே என் எண்ணம். இது பற்றி ஜிம் அதிகம் கதைப்பதில்லை. பொதுவாக சுற்றிச் சுற்றி விளிம்புகளில் நின் இப்படிக் கதைப்பான்: “ப்பக் இந்த இரவு என்ன செய்து கொண்டிருக்கிறானோ?” அப்படி ஏதாவது. அல்லது தான் பத்தொன்பது, இருபது வயதில் என்ன செய்து கொண்டிருந்தான். அதன் பிறகு என்ன செய்தான்? என்று சொல்வான். நான் என்ன செய்தேன் அல்லது என்ன பார்த்தேன் என்று என்னைக் கேட்பான்.

நான் அப்படிப் பெரிசாக ஒன்றும் செய்யவில்லை என்று எனக்குச் சொல்லத் தோன்றும். ஏனென்றால் இதுவரை நான் எதுவும் சொல்லும்படியாக செய்ததாக உணரவில்லை. ஜிம்முடன் நான் திரிந்துகொண்டிருப்பதற்கு ஓரளவு காரணமும் அதுதான். ஆனால் அதை அவனுக்குச் சொல்ல முடியாது. அப்படிச் சொன் னால் அது அவனை ஏமாற்றமடையச் செய்துவிடும் என்று எனக்குத் தெரியும்.

அதற்குப் பதிலாக ஐடஹோவில் தவிட்டு நிற மீன் பிடித்ததைச் சொல்வேன். அதன் நீளத்தையும் கரைக்குக் கொண்டுவர எடுத்த நேரத்தையும் இரண்டு மடங்கு கூட்டிச் சொல்வேன். நான் காதலித்த அழகான பெண்கள், திருமணமான பெண்கள், நம்ப முடியாத பல விசயங்களைச் செய்த பெண்கள் ஆகியோரைப் பற்றிப் பல பொய்களைச் சொல்வேன். அவற்றைத்தான் நாம் கதைக்க வேண்டும். அப்படிப்பட்ட காட்டில் கலேனா ஜிம்மை சந்தோசமாகவும் கவலையாகவும் வைத்திருந்தது போலிருந்தது. ஒருவழியாக, நன்றாகவுங்கூட அவன் சிரிப்பான். என்னைப் பார்ப்பான். திரும்பவும் சிரிப்பான். அவனை நித்திரைகொள்ளச் செய்வதற்கும் இது உதவியது என்று நான் நினைக்கிறேன்.

மற்றவர்கள் எவரும் போக முடியாத ஒரு தேசத்தில் வேட்டை யாடுவது, ஆழமான செங்குத்துப் பள்ளத்தாக்குகள், மலை இடுக்கு கள் ஆகியவற்றிலிருந்து வெளியே கொண்டுவர முடியாத மான் களைக் கொண்டுவருவது எல்லாம் நான் தான். என் கால்கள், என் இடுப்பு என்னிடம் இருந்தன. அந்த ஒக்ரோபர்களும், நவம்பர்களின் ஆரம்பங்களும் நாம் எதையும் செய்யலாம். சிறையை உடைத்து மகனை வெளியே எடுக்க வேண்டும் என்று கலேனா ஜிம் ஒருமுறை சொன்னான். அந்த ஒருமுறை மட்டும் அப்படிக் கூறினான். திரும்ப ஒருபோதுமே சொல்லவில்லை. எனக்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. அதற்கு நான் ஒத்துழைக்கவில்லை என்றால் அவனைக் கைவிட்டதாகப் போய்விடுமே. அந்த விசயத்தைத் திரும்பவும் கொண்டு வந்து என் உதவியைக் கேட்டால் என்னால் என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்றே நினைக்கிறேன்.

நான் நம்புவது இதுதான்: ஜிம் இளமைக் காலத்தில் சுற்றித் திரிந்தான். வீட்டிலிருப்பதற்கு அதிக நேரமிருக்கவில்லை. அந்த நேரத்திலதான் போதிய அளவு குதிரைகளில் சுற்றியிருக்க வேண்டும். அதனால் தான் திரும்பவும் குதிரைகளில் ஏறுவதில்லை என்று தனக்குத் தானே சபதம் எடுத்திருக்க வேண்டும். அதனால்தான் குளிர் காலத்தில் மற்றவர்கள் எல்லோரும் வீடுகளுக்குள் அடை பட்டுக் கிடக்கும்போது, அந்தக் கடுங்காற்றிலும், காடுகளுக்குள் தூரப்போய், தான் எங்கே இருக்கிறான் என்பதையும், தான் யார் என்பதையும் மறந்துவிடுகிறான்.

இருபது வயது மகன் என்றே அவன் தன்னைக் கற்பனை செய்துள்ளான் என்று நான் நினைக்கிறேன். பனிச்சறுக்கு வண்டியை, உறைந்த ஆற்றின் நீளம் ஓட்டி நிறுத்திவிட்டு, அதிலிருந்து இறங்கி, பொறிவரை அல்லது தான் வைத்த வலைச் சங்கிலிவரை செல்வான். சங்கிலியை உறைந்த தண்ணீலிருந்து, கண்களிலிருந்து குளிரால் கண்ணீர் வர, கண்கள் மங்க, இழுப்பான். மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாத அளவு தூரம் சங்கிலியைத் தூக்குவான்.

அவனுடைய அதிஸ்ரம் நேற்றை விட வித்தியாசமானதா என்று பார்ப்பதற்கும், அடுத்த பொறியில் என்ன, அடுத்ததில் என்ன என்று சோதிப்பதற்குமாக அது இருக்கும்.

மூஸ் மானில் கலேனா ஜிம் சவாரி செய்ததை முன்பு நான் பார்த்திருக்கிறேன். எவருக்கும் பகட்டாகக் காட்ட வேண்டுமென்ற எண்ணமில்லாமல், அப்படி இருந்தால் எனக்காக மட்டுந்தான் – அவனுடன் இருந்தது நான் மட்டுந்தான் – சவாரி செய்தான். நாங்கள் ஹெல்றோறிங் தெருவில் வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந் தோம். இரண்டாவது உலக யுத்த காலத்தில் மரம் வெட்டுவதற்காகப் போட்ட தார்த் தெரு முடிந்து பற்றையும் புழுதியுமாக சென்ற இடம் அது. பீற் கிறீக் தெருவுக்கும், இன்னும் எல்லாவற்றிலும் மேலாகவும் சென்று, ஏறக்குறைய கனடாவுக்குள் செல்லுகிறது. மொன்ரானாவிலிருந்து ஐடஹோவுக்கு மேலாக உள்ள கணவாய்க்கு அண்மையான இடம் அது. ஜிம் வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந் தான். நாங்கள் சதுப்புக் கோழிகளைத் தேடிக்கொண்டிருந்தோம். அப்போது தெரு நடுவில் இந்தப் பெரிய ஆண் மூஸ் நின்றது. லொறியிலும் பார்க்க உயரம். நான் பார்த்தவற்றிலே ஆகப் பெரியது. காலை யுணவு மேசையிலும் பார்க்க அகலமான சடைத்த கொம்புகள்.

ஜிம் சாப்பாடு பற்றிக் கதைத்துக்கொண்டு வந்தான். தனக்குப் பிடித்த கோழி, மீன் எல்லாம் தயாரிக்கும் முறைகள் பற்றிச் சொன்னான். லிபிக்குப் போய் புலிக்கு இரவுணவு சமைக்க இருப்பதைப் பற்றியும் அதன் உணவுப் பட்டியலைப் பற்றியும் உணவுடன் எப்படியான வைனைக் குடிப்பது என்பது பற்றியும், கதைத்துக்கொண்டு வருகையில், இந்த மூஸ் சடுதியாக எங்கள் முன் நின்றது. எங்களைக் குத்துவதுபோல் நின்றது. ஆனால் திரும்பி தெரு நீளம் எங்களுக்கு முன்னால் ஓடியது. எங்களுக்கு வழி உண்டாக்கித் தருவது மாதிரி ஓடிக்கொண்டே இருந்தது. தெருவிலிருந்து இறங்கவுமில்லை. எந்தப் பக்கமும் போகவுமில்லை. ஜிம் லொறியை வேகமாக ஓட்டிக்கொண்டிருந்தான். நாங்கள் முப்பத்தைந்து அல்லது நாற்பது மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந் தோம். சரியாக அதற்குப் பின்னால். என்னைக் கைவளையத்தைப் பிடித்து, கால்மிதியை அமத்தச் சொல்லிவிட்டு, நான் ஒன்றுமே சொல்ல முந்தி கூரையில் ஏறிவிட்டான். இதைப் பார்ப்பதற்கு அவ்விடத்தில் ஒருவருமே இல்லை. அவன் ஏன் அப்படிச் செய்கி றான் என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

எனக்குப் பெருவிரலை உயர்த்திக் காட்டினான். பெரிய மூசின் பக்கத்தில் சரிசமனாக ஓடிக்கொண்டிருந்தோம். மணிக்கு நாற்பது மைல் வேகத்தில், அலங்கோலமான மிதப்புக் குளம்புப் பாய்ச்சலில் அது ஓடிக் கொண்டிருந்தது. அது மூர்க்கமாக, கோபத்துடன் வெறி பிடித்தது மாதிரித் தோன்றியது. ஜிம் ஆகாயத்திலிருந்து

ஏதோ விழுவதுபோலப் பாய்ந்து அதன் முதுகில் குதித்தான். அப்படித்தான் எனக்குத் தெரிந்தது.

அந்தப் பெரிய மூஸ் மானில் ஒரு சிறு குள்ளன் போல அவன் தொங்கினான். மூஸ் தெருவிலிருந்து இறங்கித் தாழ்ந்த மரங்களூடாக ஓடியது. ஜிம்மை விழுத்தியது. மாடு வளைப்பில் உள்ள உதவாத மாடுபோல, குன்று நீளம் மேலே வந்து அவனைக் குத்திக் குடையப் பார்த்தது. மிதிக்கப் பார்த்தது. நான் 30–30ஐ வெளியே எடுத்து காற்றில் சுட்டேன். ஹோணை அடித்தேன். ஜிம் இடையில் இருந்ததால் மூஸைச் சுட முடியவில்லை. தன் நெஞ்சைப் பிடித்தபடி அவன் ஓடினான். இறாஞ்சினான். பாறாங் கற்கள் மேலாகப் பாய்ந்தான். மரக்குத்திகளின் கீழே உருண்டான்.

எப்படியோ மூஸ் ஜிம்மை விட்டு லொறியை நோக்கி வந்தது. அப்போது அதைச்சுட எனக்கு வழி கிடைத்தது. ஆனால் பருவமற்ற காலத்தில் ஒரு மூஸைச் சுட எனக்கு மனம் வரவில்லை. விசேசமாக, இதுபோன்ற நல்ல அழகானதொன்றைச் சுட மனம் வரவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியாது. – அவன் என்ன செய்திருப்பான் – நான் சுடவில்லை. மூஸ் லொறியின் பக்கத்தில் மோதியது. ஆட்டியது. மாடு மாதிரி கத்திக் கொண்டும் உறுமிக் கொண்டும் விசைச்சுருள்களைப் பிடித்து ஆட்டியது. பிறகு காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டது.

ஜிம்முக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தேன். தலையை நிமிர்த்தி பாறாங்கற்களுடன் பிடித்தேன். அவன் முகத்தின் இடது பக்கம் கீழே லேசாகத் தொங்கி இழுத்துக் கொண்டிருந்தது. எந்த நிறத்தையும் அவனில் காணவில்லை. ஒரு கணம் அப்படி மனம் உடைந்து, காயப்பட்டு, அநாதரவாக இருந்தபோது, அவன் என் குரு மாதிரி இல்லாமல், நண்பனைப் போலிருந்தான். இளைஞன்போல வும், அவன் எவரைப் போலவும் இருக்கலாம். மூஸால் தூக்கி வீசப் பட்ட கலேனா ஜிம்மாக இல்லாமல் யாராகவும் இருக்கலாம். பின் மதியம் முழுவதும் அங்கே குந்தியிருந்தோம். அவன் தன் கண்களை மூடி இளைப்பாறிக்கொண்டு, சிரமப்படாமல், நொறுங்கிய விலா எலும்புகளுடன் இலேசாக மூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

அது பின்கோடை மட்டுமே. பத்து மணிவரை இருட்டாக வில்லை. இறுதியாக நான் ஜிம்மைத் தூக்கி லொறிக்குள் ஏற்று வதைத் தாங்கக் கூடிய பலம் அவனுக்கு வந்தபோது, தாழ்ந்த பூரண சந்திரன் மேலே எழுந்தான். ஹெல்றோறிங் தெருவில் திரும்பிக் கீழே லொறியை ஓட்டுவது என்பது அத்தனை சுலபமல்ல. இருந்தும் கூடியவரை மெல்லமாக ஓட்டினேன். அவனால் அதை எப்படித் தாங்க முடிகிறது என்றும் பார்த்துக்கொண்டேன்.

அவன் நோவை அதிகம் அனுபவிப்பனாகத் தெரியவில்லை. ஆனால் அவன் தான் ஏதோ பிழை செய்து விட்டதிற்கு வருந்துவது போலவே காணப்பட்டான்.

*“நீ ஒரு நல்ல பிள்ளை.” கடைசியாகத் தெருவை விட்டிறங்கிப் பள்ளத்தாக்கிற்குத் திரும்பவும் வந்தபோது அப்படி அவன் உறுமினான். லிபியில் புலி அவனைச் சபிப்பாள். அவன் இன்னும் வரவில்லை என்பதற்காகப் பொருட்களை வீசுவாள். அது எனக்குத் தெரியும். வீட்டு கார்ப்பாதையில் லொறியை நிறுத்தும்போது அது நொறுக்கப்பட்டிருப்பதையும், நான் முதலில் இறங்குவதையும் பார்க்கும் பற்ஸி பயப்படுவாள். அவள் காணாத கனவுகளில் மிக மோசமானதாக அது இருக்கும். அவன் இதய பலவீனத்தை அறிந்த, அத்துடன் ஜிம்மையும் அறிந்த அவள் மிக மோசமானதை எதிர்பார்ப்பாள். லொறியின் யன்னலைக் கீழே போட்டுக்கொண்டு, குளிர்ந்த இளங்காற்று முகத்தில் வீச, பிரகாசமான வெள்ளி நிறச் சந்திரன் பசும்புற்கள் அனைத்தையும் நீராட்ட, பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள மலைகள் சுவர்போல எங்களை மூடிக்கொள்ள, நாங்கள் ற்றக்கை ஓட்டினோம்.*

*தெரு எங்கள் முன்னால் மின்னிச் சுடர்ந்தது. முன்னர் ஜிம் சென்றது அங்குதான். அத்தெருவை ஒருவன் கனவில் மட்டுந்தான் சந்திக்கலாம். அந்தத் தெருவைப் போடுவதற்குத் தான் ஜிம் உதவி செய்தான். அத்தெருவை ஊடறுத்து வீட்டை அடைய ஓடிக் கொண்டிருந்தோம்.*

‘Choteau’ - Rick Bass

# திருமதி தத்தா கடிதம் எழுதுகிறாள்

சித்ரா திவகருணி

*அடைபட்ட குளவியின் இரைச்சலைப்போல அலாரம் காலை 5.00 மணிக்கு அடித்தபோது திருமதி தத்தா கணிசமான நேரம் விழித்துக்கொண்டுதான் கிடந்தாள். சாகரும் ஷியாமொழியும் வாங்கித் தந்த பேமா றெஸ்ற் மெத்தையில் நித்திரைகொள்வது இன்னும் சிரமமாகத்தான் இருக்கிறது. சாகர் மகன். ஷியாமொழி மருமகள். இருவரும் விசேடமாக இவளுக்காகவே அதை வாங்கினார்கள். இப்பொழுது அதை வாங்கி இரண்டு மாதமாகி விட்டது. அது மிக அமெரிக்கத்தன்மையானது – மென்மையானது. தன் வீட்டில் பாவித்த நம்பிக்கையூட்டுகிற, கொப்பரைத் தேங்காய் படுக்கை மெத்தையைப் போல அது இல்லை.* ***இப்போது இதுதான் வீடு.*** *அவள் தனக்கே ஞாபகமூட்டிக் கொள்கிறாள். அலாரத்தை நிறுத்துவதற்காக அவசரமாக மணிக்கூட்டைத் தடவினாள். ஆனால் அந்த இருட்டில் விரல்கள் குமிழ்களிடையில் தடுமாறின. மின் மணிக்கூடு தடாரென நிலத்தில் விழுந்தது. அதன் கோபமான உலோகக் குரல் அவளுடைய அறையின் சுவர்களூடாக அதிர்ந்தது. அது அனைவரையும் எழுப்பிவிடுமென்று அவளுக்கு நிச்சயம் தெரியும். கம்பியைப் பிடித்து வெறித்தனமாக அதைப் பிடுங்கினாள். வெளிவந்துவிட்டது என்று உணரும்வரை இழுத்தாள். அதன்பின் ஏற்பட்ட சடுதியான அமைதியில் தன் மூச்சை அவளே கேட்கக் கூடியதாக இருந்தது. அச்சப்தம் இனிமையற்று, சீராகவில்லாது, குற்றவுணர்வு நிறைந்ததாக இருந்தது.*

*திருமதி தத்தாவுக்கு இந்தக் குழப்பம் தன்னுடைய பிழையென நிச்சயமாகத் தெரியும். அவள் அலாரத்தை வைத்திருக்கவே கூடாது. இங்கே கலிஃபோணியாவில் அவளுடைய மகனின் வீட்டில் நேரத்திற்கு அவளுக்குத் எழும்பத் தேவை இருக்கவில்லை. ஆனால் பதினேழு*

வயதுப் புதுமணப் பெண்ணாக இருந்தபோது அவளின் மாமியார் கற்பித்துக்கொடுத்த பழக்கம் அது. மற்றவர்கள் எழும்ப முந்தி எழும்புவது தான் ஒரு நல்ல மனைவிக்குரிய குணம். அப்பழக்கத்தை அவளால் கைவிட முடியாதிருக்கின்றது. அப்பொழுதுதான் நேசிக்க வெளிக்கிட்ட அவள் கணவனின் – சாகருடைய தந்தை – சுகமான உறக்கப் பிடியிலிருந்து விருப்பமில்லாமல் விடுவித்துக்கொண்டு எழுவது என்பது எத்துணை சிரமமான விசயம். சலிப்பூட்டும் காரம் மசாலா மணக்கும் குசினிக்குள் தட்டுத் தடுமாறிப் போய் கரி அடுப்பை மூட்டி அந்த வீட்டிலுள்ள அத்தனை பேருக்கும் தேநீர் போட வேண்டும். மாமன், மாமி, கணவன், அவரின் இரண்டு தம்பிமார், அவர்களுடன் வாழ்ந்த தாரமிழந்த அத்தை – அத்தனை பேருக்கும்.

இரவுணவுக்குப் பின் ரிவிக்கு முன் குடும்பத்தினர் இருந்தபோது அந்த நாட்களைப் பற்றித் தன் பேரப்பிள்ளைகளுக்குச் சொன்னாள். "அடுப்பு மூட்டுவதில் எனக்கு எப்போதுமே திறமையில்லை. புகை என் கண்களை எரிக்கும். இரும வைத்துக்கொண்டே இருக்கும். காலைச் சாப்பாடு எப்போதுமே நேரத்துக்கு முடியாது. எனக்கு அழுகை வரும்வரை மாமி என்னை எப்படியெல்லாமோ வைவாள். தயவுசெய்து சும்மா ஒரு காலையாவது நேரம்பிந்தி எழும்ப எனக்கு உதவி செய் என்று ஒவ்வொரு இரவும் நான் துர்க்கை அம்மனை வணங்குவேன்."

"ம்ம்ம்ம்ம்" பிரதீப் சொன்னான், தன் விளையாட்டு விமானத்தைக் குனிந்து பார்த்துக்கொண்டே.

"ஓஓஓ, எத்தனை மோசம்." பண்பாக மூக்கைச் சுழித்துக் கொண்டு மிரிணாளினி சொல்லிவிட்டு பகடிகள் நிறைந்த படத்தைப் பார்க்கத் திரும்பினாள். திருமதி தத்தாவுக்கு அந்தப் பகடிகள் புரிவதில்லை.

"அதுக்காகத்தான் நீங்கள் இப்போது நித்திரை கொள்ளுங்கள், அம்மா." வோல் ஸ்றீற் ஜேணலை வாசித்துக் கொண்டு சாய்மனைக் கதிரையில் இருந்த ஷியாமொழி சொன்னாள். வேலையால் வந்து மினுமினுக்கான நீலப் பாவாடை அணிந்துகொண்டு நயநாகரீகமாகத் தன் கால்களை குறுக்கே போட்டுக்கொண்டிருந்தாள் அவள். அவளுடைய வழக்கத்துக்கு மாறான வெள்ளை நிறத்தைப் பார்த்தால் ஓர் அமெரிக்கன் என்று கூட அவளைச் சொல்லலாம் என்று திருமதி தத்தா நினைத்தாள். தன்னுடைய தோல் வறுத்த சீரகம் போல காவி நிறமாக இருந்தது. அந்த நினைவு அசௌகரியமான பெருமையால் அவளை நிரப்பியது.

நிலத்தில் இருந்து ஷியாமொழியின் முழங்காலில் சாய்ந்து கொண்டிருந்த சாகரும் சொன்னான்: "அம்மா நீங்க சௌகரியமாக இருக்க வேண்டும். ஓய்வாக இருக்க வேண்டும் என்று தான் விரும்புகிறோம். அதற்காகத்தான் அமெரிக்காவுக்கு உங்களை அழைத்தோம்."

*சாகருக்கு வழுக்கை விழுந்துகொண்டிருந்தது. அண்மையில் தங்கச் சட்டகம் போட்ட கண்ணாடிகள் அணிய ஆரம்பித்திருந் தான். ஆரம்பப் பள்ளிக்கு உலோக உணவுப் பெட்டியுடன் அனுப் பிய சாகருடைய முகம் இப்போதும் அப்படியே இருப்பதாகவே நினைத்தாள். புயல்மழை பெய்யும் மன்சூன் காற்று இரவுகளில் எப்படித் தனது படுக்கைக்குள் வந்து புகுந்துகொள்வான் என்பதும் சுகமில்லாத நாட்களில் பார்ளித் தண்ணீரை வேறெவராலும் அவனுக்குக் கொடுக்கமுடியாது என்பதும் அவளுக்கு ஞாபகம் வந்தன. அமெரிக்காவில் சாகருடனும் அவனுடைய குழந்தைகளுட னும் அவள் உண்மையில் இருப்பதால் ஏற்படும் சடுதியான மகிழ்ச்சியால் அவள் இதயம் இலேசாகியது. "ஓ, சாகர்" இப்போது இப்படிச் சொல்கிறாய்! ஆனால் நீ வளர்ந்துகொண்டிருக்கையில் எனக்கு ஒரு நிமிடமாவது ஓய்வு தந்திருக்கிறாயா?" என்று புன்சிரிப்பு டன் சொன்னாள். அவன் இளம்பிள்ளையாக இருந்தபோது செய்த குறும்புகளை விவரிக்க ஆரம்பித்தாள். அதைக் கேட்ட அவன் தலையைத் திருப்தியுடன் ஆட்டிக் கொண்டான். அந்தவேளை ரிவியிலிருந்து பிரிந்து வந்த சிரிப்பு அறை முழுவதும் எதிரொலித்தது.*

*பிறகு தாயின் படுக்கையறைக்கு வந்து சிறிது கூச்சமான முகத்துடன் சொன்னான்: "அம்மா, தயவுசெய்து காலையில் அத்தனை நேரத்துடன் எழும்பாதேங்க. குளியலறையில் இருந்து வரும் சத்தம் எங்கள் எல்லாரையும் எழுப்பி விடுகிறது. மொழி பல மணி நேரம் வேலை செய்கிறாள்..."*

*அவளுடைய மடத்தனமான கண்கள் கண்ணீரால் நிரம்பியதை அவன் பார்க்காமல் இருப்பதற்காகக் கொஞ்சம் மறுபக்கம் திரும்பி தன் தலையை ஆம் ஆம் என்று ஆட்டினாள். அறுபது வயதைத் தாண்டிய பெண் என்பதைப் போலல்லாது குமரிப் பெண்போல நாணினாள்.*

*பேர்மா றெஸ்ற் மெத்தையின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வீட்டிலுள்ளவர்கள் எழுந்துவிட்ட சப்தங்கள் வருவதற்காகக் காத்துக்கொண்டு திருமதி தத்தா இறைவனின் 108 புனிதப் பெயர்களையும் சொல்லிக்கொண்டிருந்தாள். ஓம் கேசவாய நம, ஓம் நாராயணாய நம, ஓம் மகாதேவாய நம. ஆனால் அதனடியில் திருமதி ப்பாசுவிடமிருந்து வந்த வெளிறிய நீல நிற விமானத் தபாலைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தாள். அதில் ஊரிலுள்ள புதினங்கள் நிரம்பி இருந்தன. பதில் எழுதாமல் அது அவளின் கட்டிலுக்குப் பக்கத்திலுள்ள அவளுடைய மேசை யில் காத்துக்கொண்டிருந்தது. சந்தியாவின் நகைக்கடையில் யாரோ களவெடுத்துள்ளார்கள். கள்ளரிடம் துவக்குகள் இருந்துள்ளன. அதிஸ்டவசமாக எவருக்கும் காயமில்லை. திரு ஜோசியின் இனிமை யான முகமுடைய மகள் அவளுடைய பாட்டு வாத்தியாருடன் ஓடிவிட்டாள். அப்படி நடக்கும் என்று யார் எண்ணியிருப்பார்கள்?*

திருமதி பாருச்சாவின் மகளுக்கு இன்னுமொரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆம். அது நாலாவது. இன்னும் ஆண் குழந்தைக்கு முயற்சிக்காமல் இருப்பது நல்லது என்பது அவர்களுக்குத் தெரிய வேணும். கடந்த செவ்வாய்க்கிழமை இன்னுமொரு தொழிலாளர் வேலைநிறுத்தம். பங்ளா பந். எல்லாம் மூடப்பட்டிருந்தது. பேருந்து கள் கூட ஓடவில்லை. அவர்களை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. முடியுமா? தொழிற்சாலைக் கூலியாட்களும் சாப்பிடத் தானே வேணும்.

பலகாலமாக எழும்ப மறுத்துக்கொண்டிருந்த திருமதி ப்பாசுவின் வாடகைக்காரர்கள் வீட்டை விட்டு எழும்பி விட்டார்கள். நல்ல தாய்ப் போச்சு. ஆனால் மாடித் தொடரின் நிலையைப் பார்க்க முடியாது.

கடிதத்தில் இறுதியாக திருமதி ப்பாசு எழுதியிருந்தாள்: *அமெரிக் காவில் சந்தோசமாக இருக்கிறாயா?*

திருமதி ப்பாசுவைத் திருமதி தத்தாவுக்கு கோஷ்புர ஒழுங்கைக்கு இளம் மனைவிகளாக இருவரும் வந்த காலத்திலிருந்தே தெரியும். அன்றிலிருந்து அவர்கள் இருவரும் நெருங்கிய சிநேகிதிகள். அவளுக்கு மீனவர் துறை பற்றியும் தங்கக் கடவுப் பாலம் பற்றியும் அல்லது பேரப்பிள்ளைகளைப் பற்றிய செய்தித் துணுக்குகளையும் விவரித்து எழுதி ஏமாற்றி விட முடியாது. அதனால் பதில் எழுது வதை ஒத்திப்போட்டுக் கொண்டு வருகிறாள். அதேவேளை அவளு டைய இதயத்தில் குடும்பப் பற்றுடன் தீய உணர்ச்சியுடன் போராடி னாள். அவ்வுணர்ச்சிகளிலிருந்து உடனடியாக விலகினாள். அவை என்னவென்று தனக்குள் சொல்லிக்கொள்ளக்கூட மாட்டாள்.

இப்பொழுது சாகர் பிள்ளைகளின் கதவுகளில் தட்டுகிறான். அது ஒரு விநோதமான வழக்கம். பெற்றோர்களுக்குக் கூடத் திறக்காமல் கதவைச் சாத்தி வைக்கப் பிள்ளைகளை அனுமதிப்பது. மன ஆறுதலுடன் திருமதி தத்தா தனக்கு வேண்டிய குளியலறைச் சாமான்களை எடுத்துக்கொண்டாள். அவளுக்கு அதிக நேரம் இருந்தது. பிள்ளைகளின் கதவில் தாய் திரும்பவும் தட்டி, பிரதீப்பும் மிருணாளினியும் கதவைத் திறந்துகொண்டு தட்டுத்தடுமாறி வருவார் கள். இருந்தும் திருமதி தத்தா அருமையான காலையை வீணாக்கு பவள் அல்ல. குளிர் தண்ணீரை முகத்திலும் கழுத்திலும் எற்றி நாக்கிலுள்ள அழுக்கை உலோக நாக்கு வழிப்பானால் வழித்தாள். பற்களை உறுதியாக பிறஷால் தீட்டினாள். இருந்தும் வாழ்க்கை முழுதும் பாவித்த கசப்பான வேப்பமரக் குச்சிபோல நறுமணம் கலந்த பற்பசை அவள் நாக்கில் விட்டுச் செல்லும் மணம் சுத்தமாக இருப்பதில்லை. தலைமயிரில் இருந்த சிக்குகளை சீப்பால் எடுத் தாள். மருமகளின் செயற்கையாகச் சுருட்டிய தலைமயிரைப் போலல்லாது இவளின் மயிர் இந்த வயதிலும் அடர்த்தியாகவும் மிருதுவாகவும் இருந்தது. *வீண்பெருமை, உன்னைப் போன்ற*

பாட்டிக்கு, அதைவிட விதவைக்கு தன் பிம்பத்தைப் பார்த்து ஏசினாள். இருந்தும் சாமர்த்தியமாகத் தன் தலைமயிரை அழகான கொண்டையாகக் கட்டியபோது அவளுடைய கணவன் தன் தலைமயிரை எப்பொழுதும் மன்சூன் முகிலுக்கு ஒப்புமைப்படுத்தியது ஞாபகம் வந்தது.

அந்தவேளை வெளியே சடுதியாகக் குழப்பம் நடப்பது கேட்டது.

"உடனே! மின்னி! இன்னும் கழுவேல்லை என்று என்ன சொல்கிறாய்? உங்களால் நான் எந்த நாளும் காலையில் வேலைக்குப் பிந்திப் போறன்."

"ஆனால் அம்மா. அவள் அதற்குள் நிற்கிறாள். அங்கு நெடுநேரம் நிற்கிறாள்...." மிருணாளினி சொன்னாள்.

அமைதி. பிறகு, "கீழே உள்ள குளியலறைக்குப் போ"

"எங்கள் பொருட்கள் எல்லாம் இங்கேதான் இருக்கு." பிரதீப் சொன்னான். மிருணாளினியும் சேர்ந்துகொண்டு "அது முறையில்லை. அவள் கீழை போகலாம்தானே?" என்றாள். நீண்ட அமைதி. பெண் குழந்தையுடன் ஷியாமொழி அதிகம் கடுமையாக நடக்கக் கூடாது என்று திருமதி தத்தா விரும்பினாள். ஆனால் ஒரு குழந்தை பெரியவர்களை அத்துணை மரியாதையில்லாமல் பேசினால் தண்டிக்க வேண்டும். எத்தனை முறை சாகரை இதிலும் பார்க்கச் சிறிய விசயங்களுக்கெல்லாம் அடித்திருக்கிறாள். ஒரே ஒரு பையனாக இருந்தும். அவள் கண்ணின் மணியாக இருந்தும். திருமணம் முடித்து ஏழு ஆண்டுகள் குழந்தைகள் இல்லாமல் பிறந்தவன் என்றபோதும். இனிக் குழந்தைகள் இல்லை என்று மற்றவர்கள் கைவிட்டிருந்தபோதும். ஒவ்வொரு முறை அவனுக்குக் கையுயர்த்திய போதும் அவளின் இதயம் திரும்பத் திரும்பக் குத்தி ஊடுருவி இருக்கிறது. அப்படிப்பட்டதுதான் ஒரு தாயின் கடமை.

ஆனால் ஷியாமொழி சொல்கிறாள்: "அது போதும். போய் உடுத்துக்கொண்டு வா. கெதியாக!"

முணுமுணுப்புக்கள் மறைந்தன. காலடிகள் மாடிப்படிகளில் இறங்குகின்றன. குளியலறைக்குள் தொட்டிக்குள் திருமதி தத்தா குனிந்தாள். சேலையை ஒரு கையால் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அப்பிள்ளைகளின் அவமதிப்புக்களால் கோபமுற்றதாலோ அல்லது ஷியாமொழி அதைக் கண்டிக்காமல் விட்டதாலோ அவள் தலை கடுமையாக இடித்தது. காடித்தன்மையைப் போல, ஜீரணிக்காமல் எரிந்து அவள் தொண்டையை உருக்கி வார்க்கப் பட்ட உலோகத்தைப் போல படர்ந்திருப்பது அவள் உணரும் அவமானமா? ஏன்?

இப்போது 9.00 மணி. "என்னுடைய கால்மேசைக் காணவில்லை." "அம்மா, என் பகலுணவுக் காசை எடுத்திற்றான்." "இன்னும் சரியாக ஒரு நிமிஷத்தில் காருக்குள் இருக்காவிட்டால் உங்களை

விட்டிற்றுப் போயிருவன்" என்ற அவசரப் பேச்சுக்கள் எல்லாம் முடிந்து ஆட்கள் போய்விட்ட பின்னர் பகல் நேர தாள லயத்தினை அடைந்து வீடு அமைதியானது.

திருமதி தத்தா அவளின் உள்ளுயிரைத் திரும்பப் பெற்றாள். குசினியில் மும்முரமாக வேலையில் ஈடுபட்டாள். வன்மத்தைத் தொடர்ந்து வைத்திருப்பது பெரும் இளைப்பைத் தரும். அதைவிட, குசினிதான் அவளுக்கு விருப்பமான இடம். சூரிய ஒளி மேசைமேல் குறுக்காக விழும். பின்னணியில் குளிர்ப்பெட்டி நம்பிக்கையளித்துக் கொண்டு இரைந்துகொண்டிருக்கும்.

அளு தும்முக்கு உருளைக்கிழங்கைப் பொரித்துக் கொண்டிருக்கும்போது திருமதி தத்தாவும் தாழ்ந்த குரலில் பாடுவாள். அவளுடைய குரல் கரடுமுரடாகவும் சிறிது மெதுவாகவும் இருந்தது. இந்தியாவில் பாட முனைந்தே இருக்கமாட்டாள். ஆனால் இங்கே எல்லாரும் போனபின் வீடு மிக அமைதியாக இருந்தது. அந்த அமைதி அவளை ஏதோ பெரியதொரு இராட்சசக் கை ஒன்று அமத்துவது போல இருந்தது. ரிவி சப்தங்கள். அதன் அந்நிய உச்சரிப்புக்களுடன். அவளுக்கு அது உதவவில்லை. உருளைக் கிழங்கு தங்கப் பழுப்பாக மாறிக்கொண்டிருக்க தன் கல்கத்தாக் குசினி பற்றிய பழைய நினைவுகள் வந்தன. சாகர் அவளின் பிறந்த நாளுக்கு அனுப்பிய பணத்தில் வாங்கிய புதிய காஸ் அடுப்பு. இறைச்சி பாதுகாக்கும் இடத்தில் பளபளக்கத் தேய்த்து அடுக்கி வைத்திருந்த பித்தளைப் பானைகள். பள்ளிக்கூடம் முடிந்த பின்னர் கிறிக்கற் விளையாடும் வெள்ளைச் சீருடை அணிந்த பிள்ளைகளை தாமரை வடிவ கம்பிப் பின்னல் போட்ட யன்னலால் பார்ப்பது. வேலைக்காரி றேபாவால் மிளகாயும் இஞ்சியும் சேர்த்து அரைக்கப் பட்ட பசை. மாலையில் திருமதி ப்பாசு வந்த போது அவளுடன் குடிக்கும் கேத்தலில் ஊறிய அஸ்ஸாம் தேயிலையில் தயாரிக்கப் பட்ட தேநீர். அவளுடைய மனதில் திருமதி ப்பாசுவுக்கு எழுதும் கடிதத்தில்: *ஓ, றோமா, அவற்றை எல்லாம் பெரிதும் இழந்துவிட்டேன். யாரோ என்னுள் புகுந்து எனது நெஞ்சில் ஒரு கையளவு தசையைப் பிடுங்கி விட்டதுபோல உணர்கிறேன்.*

ஆனால் மடையர்கள்தான் பழைய நினைவுகளில் வாழ்வார்கள். ஆகவே, திருமதி தத்தா அப்பிம்பங்களைத் தன் தலைகளை அசைத்துக் கலைத்துவிட்டாள். குசினியைத் துப்புரவாக்கினாள். ஷியாமொழி குளிர்பெட்டியில் பாதுகாத்து வைக்கச் சொல்லியிருந்தும் குடித்து வைத்திருந்த அரைக்கிளாஸ் பாலைக் கழுவும் தொட்டியில் ஊற்றினாள். உண்மையில் ஒரு நல்ல இந்துக் குடும்பத்தில் பிறந்த ஷியாமொழி மற்ற உணவுடன் அசுத்தமாக்கிய உண்ட உணவையும் வைக்க விரும்ப மாட்டாள் என்று நினைத்தாள் திருமதி தத்தா. இரவுவரை கோப்பை கழுவிக்குள் கிடக்க விட்டு கிருமிகளை உற்பத்தி பண்ணாமல் காலை உணவுப் பாத்திரங்களைக்

கையால் கழுவினாள். கொத்தமல்லி, சீரகம், கிராம்பு, கடுகு, ஆற்றலுக்காக ஒரு சில சிகப்பு மிளகாய்களையும் அரைப்பியில் பழகிய விரல்களால் கிள்ளிக் கிள்ளிப் போட்டாள். போத்தலில் அடைக்கப்பட்ட பழைய கறித் தூள்கள் அவளுக்குப் பிடிக்காது. குறைந்தது இப்போது நான் வந்ததிலிருந்து எல்லோரும் நன்றாகச் சாப்பிடுகின்றனர். அவள் தன் மனதில் எழுதினாள். உண்மையான இந்தியச் சாப்பாடு. பொங்கிய சப்பாத்தி, கடுகுக் குழம்பில் மீன் கறி. முந்திரிய வற்றல், கசுக் கொட்டை, நெய் போட்ட புலாவோ. றோமா, நீ சொல்லித்தந்த மாதிரிச் செய்தது. அரிசியில் செய்யாமல். அத்துடன் இன்னுமொன்றையும் சேர்க்க நினைத்தாள். அவர்கள் அதை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் ஷியாமொழியை நினைத்து விட்டு அவள் அதை எழுதுவதற்குத் தயங்கினாள்.

முதலில் அவளுடைய சமையலை மற்றவர் பொறுப்பெடுத்துச் செய்வதில் மகிழ்ச்சியே அடைந்தாள் ஷியாமொழி. "உறைப்பான உணவுக்கு வீட்டுக்கு வருவது மிகவும் நல்லது." அல்லது "அம்மா, என்ன மொறுமொறுவென்ற பப்படம். உங்கள் மீன் கறி இந்த உலகத்தில் இல்லாத ஒன்று." இப்போது கொஞ்ச காலமாக அவளுடைய உணவில் பிழைபிடிக்க ஆரம்பித்து விட்டாள். இரண்டொரு முறை திருமதி தத்தா குசினியிலிருந்தபோது சில சில சொற்கள் அழுத்தமாக குசுகுசுத்துக் கேட்டன.

"கொளொஸ்றோல்", "எல்லாருக்கும் உடம்பு வைக்கிறது." உங்களைப் பழுதாக்கிறார். "உறைகுளிர்ப்பெட்டியிலிருந்த புரிற்றோக் களைப் பிள்ளைகள் கேட்கும்போது ஷியாமொழி எப்பொழுதும் இல்லை என்றே சொல்வாள். திருமதி தத்தாவோ அப்படியில்லாமல் அவள் உண்மையில் ஆம் என்று சொல்வாள் என்றுதான் நினைத்தாள்.

பிள்ளைகள். அவர்களைப் பற்றி தத்தா நினைத்தபோது அவளின் முழு உடம்பையுமே பாரமொன்று இழுக்கிறதுபோல இருந்தது. இந்த நாட்டிலுள்ள எத்தனையோ விசயங்கள் போல அவர்கள் படு ஏமாற்றமாகவே மாறியுள்ளார்கள். ஆம், அதை அவள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதுக்கு அவள் ஓலான் மில்ஸ் உருவப்படத்தைத் தான் குற்றம் சொல்வாள். சிலவேளை ஒரு படத்தில் அவள் இத்தனை குற்றம் காண்பது மடத்தனமாகக் கூட இருக்கலாம். விசேடமாக எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் எடுத்த படம் ஒன்றில். ஆனால் அது கவர்ச்சியானதொரு காட்சி. மிருணாளினி ஓரக்குஞ்சங்கள் போட்ட சட்டை அணிந்து தன் தமையனை ஒரு கையால் அணைத்திருந் தாள். பிரதீப் மொழுமொழுவென கன்னத்தில் விழும் குழியுடன் காற்சட்டை, சட்டை, கழுத்தில் சிறுமுடிச்சுப் பட்டி அணிந்திருந் தான். அது ஒரு சீர்த்திமிக்க இலையுதிர்கால காட்டில் எடுத்தது. பின்னணியில் சிகப்பும் மஞ்சளும் ஒளிரும். (பின்பு, கலிஃபோணியா

*விலுள்ள ஒரு ஸ்ரூடியோவில் எடுத்த படம் என்றும் அப்படத்தின் பின்னணி செயற்கை என்றும் அப்படிப்பட்ட உண்மையான நிறமுள்ள மரங்கள் அங்கில்லை என்றும் திருமதி தத்தாவுக்குத் தெரிந்தபோது அவள் கவலைப் பட்டாள்.)*

*வெள்ளிச் சட்டகம் போடப்பட்டு, குமிழிகள் உள்ள பிளாஸ்ரிக் துணியில் சுற்றப்பட்டு, தாயார் தினத்தன்று கொடுக்கப்பட்ட பரிசு என்று ஷியாமொழி எழுதிய துண்டுடன் அப்படம் அவளுக்கு வந்து சேர்ந்தது. (அது என்ன தாயார் தினம். விநோதமான கருத்து. தாயாரைக் கௌரவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒரு தினம். அப்படி யென்றால் பிள்ளைகள் தங்கள் தாய்மாரை மற்ற நாட்களில் கௌரவிப்பதில்லையா?) அந்தப் படத்தை எங்கே தூக்குவது என்று திருமதி தத்தாவால் ஒரு கிழமை தீர்மானிக்க முடியவில்லை. முன் கூடத்தில் தூக்கினால் விருந்தாளிகள் தன் பேரப்பிள்ளை களைக் கண்டு களிக்கலாம். தன் படுக்கையறையில் தூக்கினால் தான் படுக்கு முன்னர் கடைசியாக அதைப் பார்த்துவிட்டுப் படுக்க லாம். இறுதியில் அவள் படுக்கையறையையே தேர்ந்தெடுத்தாள். பிறகு சன்னி வந்து ஒரு மாதமாய் படுக்கையை விட்டுப் போகாமல் கிடந்தபோது தான் அப்படிச் செய்ததிற்காக சந்தோசப்பட்டாள்.*

*திருமதி தத்தா தனியாக வாழ்வதற்குப் பழகிக் கொண்டாள். சாகருடைய தந்தை இறந்து மூன்று வருடங்கள் அப்படி வாழ்ந்திருக் கிறாள். சில உறவினர் நல்ல நோக்கத்துடனும் சிலர் அப்படியில்லாம லும் அவளின் பலவித உறவினர் தங்களுடன் வந்து இருக்கும்படி கேட்ட வேண்டுகோள்களையும் பணிவாகவும் அதேவேளை பிடி வாதமாகவும் அவள் மறுத்திருக்கிறாள். அந்த வகையில் அவள் தன்னையும் மற்றவர்களையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கி இருக்கிறாள். ஏனெனில் அவள் கூச்சமுள்ளவள், கணவன் இல்லாமல் தன் காரியங்களைச் செய்ய முடியாமல் அவள் குலைந்து போவாள் என்று அவளைப் பற்றி அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் அவள் தன் காரியங்களை நன்றாகவே சமாளித்தாள். சாகருடைய தந்தையை இழந்தது அவளுக்குக் கவலைத்தான். விசேடமாக மாலையில் அவள் சப்பாத்தி உருட்டும்போது அவர் புதினப் பத்திரிகைகளில் இருந்த சுவாரசியமான பகுதிகளை அவளுக்கு வாசித்துக் காட்டுவார். ஆனால் அவர் இறந்த துக்கம் மறைந்து போனபின், திருமதி ப்பாசுவுக்கு அவள் இரகசியமாகச் சொன்ன மாதிரி, தன் வாழ்க்கைக்குத் தானே எஜமானியாக இருப்பதில் சந்தோசப்பட்டாள். தன் வாழ்க்கையில் முதன்முதல் மாலை முழு வதும் தன் படுக்கையில் கிடந்து கொண்டு வேண்டுமானால் சங்கருடைய நாவல் முழுவதையும் வாசித்து முடிக்கலாம். அல்லது ஒரு மழைநாளில் கத்தரிக்காயில் போட்ட பகோராவுக்குச் சொல்லி அனுப்பி அதைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாம். அது உடம்புக்குக் கெடுதி என்ற குற்றவுணர்வு இல்லாமல்.*

*சன்னி பிடித்தபோது எல்லாம் மாறிவிட்டது.*

*முன்பும் திருமதி தத்தாவுக்கு நோய் வந்திருக்கிறது. ஆனால் அந்த நோய்கள் வித்தியாசமானவை. படுக்கையில் கூட அவள்தான் அவ்வீட்டின் மையம். என்ன சமையல் செய்யவேண்டும் என்று றேபா வந்து கேட்பாள். சாகருடைய தந்தை தன் சேட்டின் அறுந்து போன பொத்தான்களைத் தைத்துத் தரும்படி கேட்பார். கிழமாகிப் போன அவளுடைய மாமியார் சமையல்காரி தேநீரை நன்றாகப் போடவில்லை என்று முறையிடுவார். அடுத்த வீட்டுப் பையனுடன் சண்டை பிடித்துக் கொண்டு சாகர் உள்ளே ஓடிவருவான். எத்தனை காலத்துக்குத் தான் இப்படிச் சுகமில்லாமல் படுத்திருப்பதற்குத் திட்டம் போட்டிருக்கிறாய்* என்று இப்போது குறைபட்டுக்கொள் வதற்கு யாருமில்லை. அவளுடைய பொறுப்புக்களைத் திரும்பவும் ஏற்பதற்குப் பொறுமையில்லாமல் சினத்துடன் காத்துக்கொண்டி ருப்பதற்கு யாருமில்லை. அவளுடைய நோயினால் எவருடைய வாழ்வும் கொஞ்சம் கூட அசௌகரியத்துக்கு ஆளாகவில்லை.

ஆனபடியால் அவள் சுகமாவதற்கு அவளுக்குக் காரணமே இல்லை.

இந்த எண்ணம் வந்தபோது அவள் பயந்துவிட்டாள். அதனால் அவளுடைய உடம்பு விறைத்துவிட்டது. அறைச் சுவர்கள் கருமை யாக மாறிவிட்டன. திருமணம் முடித்ததிலிருந்து சாகருடைய தந்தையுடன் படுத்த, நாலு பெரிய கால்களையுடைய கட்டில் கடும் புயலில் அகப்பட்ட தோணிபோல ஆடியது. அவளுடைய தலையிலுள்ள ஒரு பெரும் அகழியுள் இரைச்சல் எதிரொலிப்பது போல இருந்தது. ஒரு கணம் பார்க்கவோ அசையவோ முடியாமல் *நான் இறந்துபோனேன்* என்று நினைத்தாள். பிறகு அவளுடைய நம்பிக்கையற்ற, தெளிவற்ற பார்வையில் அவ்வுருவப்படம் தென்பட்டது. *என் பேரப்பிள்ளைகள்.* கொஞ்சம் சிரமப்பட்டு அவர்களுடைய ஒளிவீசும், மினுக்கமான முகத்தில் தன் கவனத்தைக் குவித்தாள். கண்கள் சாகருடையவை போன்றிருந்ததால் ஒரு கணம் அவளுடைய மனவருத்தம் உயிருள்ளது போன்று அவளை உள்ளே முறுக்கியது. அவளுடைய வலிக்கும் நுரையீரலுக்குள் அதிர்வுறும் மூச்சொன்றை இழுத்தாள். இரைச்சல் மறைந்தது போலாகியது. பின்மதியத்தில் சாகரிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. *அம்மா, நீங்கள் வந்து எங்களுடன் இருக்க வேண்டும். நீங்கள் தனியாக இந்தியாவில் இருப்பது எங்களுக்குக் கவலை. விசேசமாக நீங்கள் இப்படிச் சுகமில்லாமல்.* அவளுடைய விரல்கள் சிறிது இப்போதும் நடுங்கிய போதிலும், அன்றே ஒரு பதில் எழுதினாள். *என் இடம் அங்கேதான். என் பேரப்பிள்ளைகளுடன்.*

ஆனால் இப்போது உலகத்தின் அடுத்த பக்கத்தில் அவள் இருக்கிறாள். சந்தேகத்தால் அவள் பிடுங்கப்படுகிறாள். பேரப் பிள்ளைகள் அவளை நேசிக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

ஒரு குடும்பத்தில் அப்படி நேசிக்காமல் எப்படி? அவளும் நேசிக்கிறாள். தன்னுடைய கைப்பையுள் வைத்து இந்தியாவிலிருந்து காவிக்கொண்டு வந்த தோலால் மட்டைபோட்ட *இளம் வாசகர்களுக்கான இராமயணம்* என்ற நூல் இப்போது குளோசெற்றுக்குள் எங்கோ ஒரு மூலையில் கிடக்கிறது. அதைத் தனக்குத் தானே நினைவூட்டிக் கொள்கிறாள். தன்னுடைய இளமைக் காலத்துக் கதைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லும்போது அவர்களுடைய உடம்புகள் பொறுமையின்றி முறுகிக்கொண்டாலும், அவள் மாலைநேரத்தில் பிரார்த்தனை சொல்லும்போது அவர்களையும் இருக்கச் சொன்னால் எளிதில் புரிந்துவிடக்கூடிய சாக்குப்போக்குகளைச் சொன்னாலும், *அவர்கள் என் சதையின் சதை. இரத்தத்தின் இரத்தம்* என்று தனக்குத் தானே நினைவுறுத்திக்கொள்கிறாள். ஆனால் சிலவேளை அவர்கள் தொலைபேசியில் பேசுவதை அடுத்த அறையிலிருந்து கேட்டால் பேசுவதை நம்பவே முடியாது. மறு உலக பவர் றேஞ்சர்ஸ், மெற்றலிக்கா, பள்ளிக்கூடத்தில் நடந்த ஆன்மக் கிழமை பற்றித் தங்கள் அமெரிக்கக் குரல்கள் கிளர்ச்சியால் மேலோங்கக் கதைப்பார்கள்.

வீட்டின் பின் தோட்டத்திற்குப் புதிதாகத் துவைத்த துணி வாளியுடன் போன திருமதி தத்தா வானத்தைக் கொஞ்சம் பதற்றத்துடன் பார்த்தாள். தங்க மஞ்சள் நிறச் சூரிய ஒளி மறைந்து தொடுவானத்தைக் கறுத்த வயிறுள்ள முகில்கள் பிடித்து விட்டன. வங்காளப் புயல் வருவதற்கு முன் வருவதைப் போன்று காற்று அமைதியாகவும் கனமாகவும் இருப்பதை உணர்ந்தாள். மற்றவர்கள் வருவதற்கு முன் தன் துணிகள் காயாமல் இருந்துவிட்டால் என்ன செய்வது?

கலிஃபோணியாவிற்கு வந்தநாள் தொடக்கம் உடுப்புக்களைத் தோய்ப்பது திருமதி தத்தாவுக்கு ஒரு பிரச்சினை.

“நாங்கள் அப்படிச் செய்யக்கூடாது, அம்மா.” வீட்டுக்குப் பின்புறம் தனக்கு ஒரு கொடி கட்டத் தரச் சொல்லி திருமதி தத்தா சாகரைக் கேட்டபோது ஷியாமொழி ஒரு பெருமூச்சுடன் அப்படிச் சொன்னாள். (ஷியாமொழி இப்போது அடிக்கடி ஒரேவேளை பொறுமையுடன் சினத்துடன் பெருமூச்சு விடுகிறாள். சிலவேளை இது அமெரிக்கன் பழக்கமாக இருக்கலாம். தன்னுடன் தாயைப் போல ஒரு மாதம் பாதுவைத்து பழக்கிப் பின் *பான் அம்* விமானத்தில் தன் மகனிடம் அனுப்பியவள். தன்னுடன் இருந்த பணிவுள்ள, மணப்பெண்ணான இந்தியன் ஷியாமொழி அப்போது இதழ்களைப் பிளந்து இப்படியான பெருமூச்சை விட்டதில்லை.) “*அப்படிச் செய்ய முடியாது.* இப்படியான நல்ல அயல்களில் அப்படிச் செய்ய முடியாது. இந்த வீதியில் நாம் மட்டும்தான் ஒரே இந்தியக் குடும்பமாக இருப்பதால் மேலும் கவனமாக இருக்க வேண்டும். இங்குள்ளவர்கள் சிலவேளை...” தலையாட்டிக்

கொண்டு சொல்ல வந்ததை நிறுத்தினாள். "உங்கள் அறையில் நான் வைத்துள்ள கூடையில் ஊத்தைத் துணிகளைப் போடுங் களேன். மற்றவர்களின் துணிகளுடன் சேர்த்து உங்களுடையதையும் ஞாயிற்றுக்கிழமை துவைக்கிறேன்."

இன்னொரு பெருமூச்சை அவளுக்கு ஏற்படுத்துவதற்குப் பயந்து விருப்பமில்லாமல் ஒத்துக்கொண்டாள். கடவுள் படங்களுள்ள அறையில் அசுத்தமான துணிகளை வைத்திருக்கக் கூடாது என்பது அவளுக்குத் தெரியும். அது துரதிஸ்ரத்தைக் கொண்டுவரும். அத்துடன் மணம். காற்றுப் புகாத கூடை என்று ஷியாமொழி சொல்லியபோதும் இரவில் படுத்திருக்கும்போது அம்மணம் துல்லிய மாக அவளுக்கு மணக்கும். முதியவளின் புளிப்பான, ஒட்டும் மணம் அவளுக்கு அவமானமாக இருக்கும்.

ஞாயிற்றுக் கிழமை பின்மதியங்களில் ஷியாமொழி தோய்த்த உடுப்புக்களை முன்கூடத்திற்குக் கொண்டுவந்து மடிக்கும்போது திருமதி தத்தாவுக்கு இன்னும் அவமானமாக இருக்கும். மருமகள் அசட்டையாக அவளுடைய லேஸ், சிகப்புநிற, கடற்பச்சை நிற, கருப்பு நிற கச்சைகளை எடுத்து சாகருடைய கச்சைகளுடன் மடித்து வைத்தபோது, முகம் அவமானத்தால் கூச்சப்பட்டுக்கொண்டு தான் பின்னிக் கொண்டிருந்த பின்னலுக்குள் கருத்தூன்றி தன் தலையைப் புகுத்திக் கொள்வாள். எல்லோருக்கும் முன்னிலையில் ஷியாமொழி திருமதி தத்தாவின் கசங்கிய, பெரிய மார்புக்கச்சை களைத் தோய்த்த துணி மூட்டைகளிலிருந்து எடுக்கும்போது நிலம் பிளந்து புராண காலத்துச் சீதையை விழுங்கிவிட்டது மாதிரி தன்னையும் விழுங்கிவிடாதா என்று விரும்புவாள்.

பிறகு ஒருநாள் ஷியாமொழி சாகருக்கு முன் தோய்த்த துணி களை வைத்து விட்டுச் சொன்னாள்: "சாகர், இன்றைக்கு இதை மடிக்கிறாயா?" (திருமதி தத்தா தன் நாற்பத்திரண்டு ஆண்டு தாம்பத் திய வாழ்வில் சாகருடைய தந்தையைப் பெயர் சொல்லி அழைத் ததே கிடையாது. அதைக் கேட்டுப் பதைபதைக்காமல் இருக்க அவள் முயற்சித்தாள்.) "இன்றிரவுக்கு முன் விற்பனை அறிக்கையைக் கொம்யூற்றரில் போட்டுவிட வேண்டி இருக்கிறது."

சாகர் அதற்கு பதில் கூறுமுன் அவளுடைய பின்னும் ஊசி நிலத் தில் விழ, திருமதி தத்தா தன் கதிரையிலிருந்து எழுந்துவிட்டாள்.

"இல்லை. இல்லை. துணிமடிப்பது வீட்டு ஆண்பிள்ளையின் வேலையில்லை. நான் செய்கிறன்." தன் மகன் துணிகளுக்கிடையில் தன் மனைவியின், தாயின் உள்ளாடைகளைத் தேடி வெளியே எடுப்பதை நினைப்பதே அவளுக்குப் பயங்கரமாக இருந்தது.

"அம்மா!" ஷியாமொழி சொன்னாள். "அதுதான் இந்தியா ஆண்கள் வீட்டில் எந்தவிதப் பயனுமற்றவர்கள். அமெரிக்காவில் இது ஆணின் வேலை, இது பெண்ணின் வேலை என்று சொல்வதில்

எங்களுக்கு நம்பிக்கையில்லை. சாகரைப் போல நானும் நாள் முழுக்க வெளியே வேலை செய்யவில்லையா? சாகர் எனக்கு வீட்டில் உதவி செய்யாவிட்டால் நான் எப்படிச் சமாளிப்பது?"

"நான் உனக்கு உதவி செய்கிறேன்." திருமதி தத்தா முன்வந்தாள்.

"உங்களுக்கு விளங்கவில்லை. இல்லையா, அம்மா?" ஷியாமொழி தடுமாற்றமான புன்சிரிப்புடன் சொன்னாள். பின் தன் அறைக்குள் போய்விட்டாள்.

திருமதி தத்தா தன் கதிரையில் இருந்து அதைப் புரிந்துகொள்ள முயற்சித்தாள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அதைக் கைவிட்டு, வோஷரையும் டிரையரையரும் இயக்குவது எப்படி என்று காட்டித்தா என்று சாகரை இரகசியமாகக் கேட்டாள்.

"ஏன் அம்மா? மொழி சந்தோசமாகத்தானே செய்கிறாள்..."

"நான் அதை இயக்கப் படிக்க வேணும்..." அந்த மூட்டைக்குள் சிக்கிக் கிடந்த தன் துணிகளைத் தேடிக் கொண்டே அவள் குரலைத் தாழ்த்தி, ஆற்றாமையால் கேட்டாள். அவள் மகன் அந்த வேண்டுகோளை மறுக்க வெளிக்கிட்டான். இறுதியில் தோளைக் குலுக்கி, "ஓ சரி. உங்களை அது சந்தோசப்படுத்துமென்றால்..."

பிறகு அவள் மெஷினுக்கு முன்னால் தனியச் சென்றபோது புதிரான குறியீடுகள், மங்கலாக மினுமினுக்கும் குமிழ்கள் அவளைப் பயமுறுத்தின. பிழையான பொத்தானை அமத்தி சவுக்காரத் தண்ணீரால் முழு நிலத்தையும் வெள்ளமாக்கிவிட்டால்? மெஷினை நிறுத்தத் தெரியாமல் அது வெடிக்கும்வரை பைத்தியம் மாதிரி சுற்றிக்கொண்டேயிருந்தால்? (அது ரிவி படத்தில் அன்றொரு நாள் நடந்தது. அப்பெண்ணைப் பார்த்து எல்லோரும் விழுந்து விழுந்து பேய் கத்திய மாதிரி கத்திக்கொண்டு சிரித்தார்கள். திருமதி தத்தா முதுகெலும்பு விறைக்க கதிரையின் கைகளைப் பிடித்துக் கொண்டு உறைந்துபோயிருந்தாள்.) ஆதலால் தன் துணிகளைக் குளியலறைத் தொட்டியில் தனியாக இருக்கையில் தோய்ப்பது தவிர்க்க முடியாததாயிற்று. அப்படியானதொன்றை அவள் முன்னெப்போதுமே செய்தது கிடையாது. கிராமத்து வண்ணாரப் பெண்கள் துணிகளை ஆற்றங்கரையிலுள்ள கற்களில் அடித்துத் தோய்த்துக் கழுவுவதை அவளின் சின்ன வயதில் பார்த்திருப்பதை நினைத்தாள். ஈரமான உடுப்புக்கள் தொட்டியின் பீங்கான் போன்ற உலோகத்தில் தட் தட் என்று அடித்து வரும் சத்தத்தைக் கேட்கும் போது ஒரு விநோதமான திருப்தி அவளை நிரப்பியது.

என் சிறிய வெற்றி. அது என் இரகசியம்.

அதனால்தான் ஷியாமொழி வருவதற்கு முன் இவற்றைக் காய வைத்து பத்திரமாக எடுத்துவிட வேண்டும். அறியாமை இசைவாக்கத்தைப் பெரிதும் ஊக்குவிக்கும். பல்லாண்டுகள் ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்தியதால் திருமதி தத்தாவுக்கு அது

நல்லாகத் தெரியும். தன் உள்ளாடைகளையும் சட்டைகளையும் தூக்கும்போது, குசினியிலிருந்த அடி லாச்சியிலிருந்து இரகசியமாக எடுத்து வந்த கோப்பைகள் துடைக்கும் துணியால் தன் மகனின் பின் வளவையும் அயல் வீட்டுக்காரரின் வளவையும் பிரிக்கும் வேலியை முதலில் நன்றாகத் துடைத்துவிட்டு அதன் நீளம் தன் சேலையைக் கட்டியபோது, மழை வருவதுபோல் பயமுறுத்தும் முகில்களில் ஒரு கண்ணை வைத்திருந்தாள். ஆனால் அதற்காக அவள் கவலைப்படவில்லை. ஒவ்வொரு முறையும் சமாளிக்கவில்லையா? போனமாதம் திடுதிப்பென வந்த ஆலங்கட்டி மழையைச் சமாளிக்கவில்லையா? எல்லாத் துணிகளையும் துணிக் குளோசெற்றிலிருந்த சலவைப் பெட்டியை எடுத்து அமத்தி உலர வைக்கவில்லையா? அந்த நினைவு அவளைச் சந்தோசப்படுத்தியது. அவளுடைய மனதில் திருமதி ப்பாசுவுக்கு எழுதுகிறாள். இங்கே நான் நன்றாக பழக்கப்பட்டு வருகிறேன். இரண்டு மாதத்திற்கு முந்தித்தான் நான் இங்கு வந்தேன் என்று நீ நம்பமாட்டாய். பல விசயங்களைப் புதிய வழிகளில் செய்கிறேன். பிரச்சினைகளுக்கான தீர்வைச் சிருஷ்டிகரமான வழிகளில் தீர்க்கிறேன். என்னைப் பார்த்தால் நீ பெருமைப்படுவாய்.

திருமதி தத்தா நாற்பத்தைந்து வருட வீட்டை விடும்போது அவளுடைய உறவினர் அவள் நினைத்ததிலும் பார்க்கக் குறைவாகவே ஆச்சரியத்தைக் காட்டினர். "ஓ, நீ கடைசியில் அமெரிக்காவிற்குத்தான் போய்ச் சேருவாய் என்று எங்களுக்குத் தெரியும்" அவர்கள் சொன்னார்கள். சாகருடைய தந்தை – அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும் – இறந்தபின் தனியாக இத்தனை காலம் இருந்ததே அவளைப் பொறுத்தவரை மடத்தனமானதே. அவளுடைய பையன் தன் சுயநிலைக்கு வந்து தன்னுடன் இருக்க இவளைக் கூப்பிடுவது நல்லதாகப்போய்விட்டது. ஒரு மனைவியின் இடம் கணவன் இருக்கும் இடம் என்பதும், விதவையின் இடம் மகன் இருக்கும் இடம் என்பதும் அனைவருக்கும் தெரியும்.

திருமதி தத்தா அது சரிதான் என்று எதிர்ப்பற்று ஒப்புக் கொண்டாள். அதற்கு முதல் நாள் இரவு அழுதுகொண்டு எழும்பினாள் என்று எவருக்குச் சொல்வதற்கும் அவள் வெட்கப்பட்டாள்.

"நல்லது. இப்போ நீ போகப்போகிறாய். அப்ப உன் சாமான்களை என்ன செய்யப்போகிறாய்?" அவர்கள் கேட்டார்கள்.

துரோகத்தனமான அழுகையைப் பார்த்துக் கவலைப்பட்ட போதும் திருமதி தத்தா தனது வீட்டுச் சாமான்களை இரக்கப்பட்டுப் பலருக்கும் கொடுத்தாள். "திதி, இந்தா வேலைப்பாடு செய்த படுக்கை விரிப்பு. மஷீமா, இந்தக் கோணிங் வெயர் பீங்கான் கோப்பைகளை உனக்குத் தான் கொடுக்க வேணும் என்று நினைத்திருந்தன். அவற்றை நீ எவ்வளவு விரும்பினாய் என்று எனக்குத் தெரியும், இந்தா. பௌதி, ஒரு வருடத்துக்கு முந்தி சாகர் அனுப்பிய

ஒலிப்பதிவுக் கருவி. இந்தா அது உனக்குத் தான். ஆம். ஆம். எனக்கு நிச்சயம் தெரியும். நான் அங்கே போனபின் சாகரிடம் சொல்லி இன்னுமொன்று வாங்குவன்.”

தேநீர் ஊற்றும் சீனப் பீங்கான் செற்றை ஒரு மச்சாள் வெற்றி கரமாகத் தட்டிக்கொண்டுபோகும்போது திருமதி ப்பாசு அதற்கு மறுப்புத் தெரிவித்தாள். “பிரமீளா, உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? தேநீர் செற் உன்னுடைய மாமியாருக்குச் சொந்த மானவை.”

“அமெரிக்காவில் இவற்றை நான் என்ன செய்யப் போகிறேன். ஷியாமொழியிடம் அவளுடைய செற் இருக்கின்றது.”

திருமதி ப்பாசுவின் முகத்தில் தோன்றிச் சென்ற பார்வையை திருமதி தத்தாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. “உன் மீதி வாழ்நாள் முழுவதும் அவளுடைய கோப்பைகளிலிருந்தா குடிக்கப் போகிறாய்?”

“நீ என்ன சொல்கிறாய்?”

திருமதி ப்பாசு தயங்கினாள். பிறகு சொன்னாள்: “உனக்கு அங்கிருக்க விருப்பமில்லை என்றால்.”

“றோமா, எப்படி அங்கிருக்க விருப்பமில்லாமல்போகும்?” திருமதி தத்தாவின் குரல் அவளுடைய காதுகளுக்கே கரகரத்தது. ஒரு சிறிது முயற்சி பண்ணி அதை அடக்கிக் கொண்டு தொடர்ந் தாள். “என்னுடைய சிநேகிதிகள் இல்லாக் குறையை உணர்வேன். அது எனக்குத் தெரியும். முக்கியமாக உங்கள் எல்லாரையும். நாங்கள் ஒன்றாகச் செய்யும் வேலைகளை. பின்னேரத் தேநீர், இரவீந்திர சரோபார் வாவியைச் சுற்றி நடப்பது, வியாழக்கிழமை களில் நடக்கும் பகவத் கீதை வகுப்புக்கள். ஆனால் சாகரின் குடும்பம் தான் எனக்கு இருக்கும் ஒரே குடும்பம். இரத்தம் இரத்தம் தான். என்ன சொன்னாலும்.”

“எனக்குச் சந்தேகம்” திருமதி ப்பாசு வரட்சியாகச் சொன்னாள். திருமதி ப்பாசுவின் இரண்டு பிள்ளைகளும் ஒரு நாள் பயண தூரத்தில் இருந்தபோதிலும் முடிந்தால் தான் அவர்கள் நல்ல தினங்களுக்குத் தாயை வந்து பார்ப்பார்கள். பணத்தைப் பொறுத்த வரை அவர்கள் இறுக்கமானவர்களாக இருக்கலாம். வாடகைக்கு வீட்டை எடுத்தவர்கள் கொடுக்கும் வாடகையிலும் பார்க்க அவர்கள் கொடுக்கும் கரைச்சல் அதிகம் என்று தெரிந்தும் ஒரு சில வருடங்களுக்கு முன் திருமதி ப்பாசு தன் வீட்டின் கீழ்ப் பகுதியை வாடகைக்குக் கொடுக்கத் தொடங்கினாள். அப்படியாக சொந்த மக்கள் கவனியாமல் விடுவதைத் தாங்குவது சிரமம்தான். இருந்தும் திருமதி ப்பாசு பிள்ளைகளின் மேலுள்ள பாசத்தால் ஒரு நல்ல தாயைப் போல எப்போதுமே அதைப்பற்றி முறையிட வில்லை. இவை எல்லாம் திருமதி தத்தாவுக்குத் தெரியும். ஆனால்

திருமதி தத்தா சாகரின் மேலுள்ள தனது அன்பைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அவன் மிகமிகத் தூரத்தே இருந்தான்.

“குறைந்தது வீட்டை விட்டு விடாதே.” திருமதி ப்பாசு சொன்னாள். “சிலவேளை இப்படியான ஒரு வீட்டைத் திரும்பவும் எடுப்பது . . .”

“சிலவேளை என்ன . . .” திருமதி தத்தா கேட்டாள், அவளுடைய வார்த்தைகள் குறுணிக் கற்கள்போல விழுந்தன. திருமதி ப்பாசுவில் முன்னெப்போதையும்விடக் கோபப்பட்டதைக் கண்டபோது அவளுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. அல்லது அவள் பயப்படுகிறாளா? *என் மகன் உன் மக்களைப் போலல்ல.* என்று கக்கிவிட்டு விடுவாள் போலிருந்தது. ஆழ்ந்த மூச்சொன்றை இழுத்து ஒரு சிரிப்பை வரவழைத்தாள். அவளுடைய சிநேகிதியை இனிமேல் திரும்பவும் பார்க்க முடியாமற்போகலாம் என்பதை நினைத்துக் கொண்டாள்.

“ஆ, றோமா,” திருமதி ப்பாசுவைக் கையால் அணைத்துக் கொண்டு அவள் சொன்னாள். “நான் அப்படியான கிழச் சூனியக்காரியா. என் சாகரும் என் ஷியாமொழியும் என்னுடன் வாழ முடியாமல் போவதற்கு?

திருமதி தத்தா தாகூரின் பிரபல்யமான பாட்டொன்றை முணுமுணுத்துக் கொண்டு வேலியில் கிடந்த சேலையை இழுத்தாள். அது ஒரு நல்ல நாள். அன்று யன்னலில் நின்று பலமணி நேரம் வெளியால் பார்த்துக்கொண்டு நின்றாலும் ஒரு ஆளைக் கூடப் பார்க்க முடியாத ஒரு நல்ல நாள். மரக்கறி விற்பனையாளர்கள் பெரிய பிரம்புக் கூடைகளைத் தலையில் வைத்துக்கொண்டு வர மாட்டார்கள். *கத்தரிக்கோல், கத்தி, கொடுவாக் கத்தி* என்று கூவிக் கொண்டு கத்தி தீட்டுபவர்கள் வரமாட்டார்கள். அவர்களைப் பார்க்கப் பிள்ளைகள் வெளியே வர மாட்டார்கள். தங்கள் கைகளில் நிறம் நிறமான பச்சை குத்திய கமக்காரிச்சிகள் பழைய பட்டுச் சேலைகளுக்கு உணவுப் பாத்திரங்களை பண்டமாற்றாகப் பெற்றுக்கொள்ள வரமாட்டார்கள். ஏன் கோஷ்பாரா ஒழுங்கையில் அடிக்கடி வந்து செல்லும் மிருகங்களுக்குக் கூட ஆளுமை இருந்தது – எஞ்சும் சாப்பாட்டைக் கொட்டுவதற்குக் குசினி வாசலில் நிற்கும்போது அதைத் தெரிந்து, அதற்காகக் காத்துக்கொண்டு நிற்கும் தெரு நாய்கள். டாலியாப் பூச்செடியைக் கடிப்பதற்காகத் தோட்டத்து வேலிகளுக்கூடாகத் தங்கள் தலைகளை நுழைக்கும் ஆடுகள். வாகனங்களின் எச்சரிக்கை ஒலிகள் ஒலித்தபோதும் அவற்றை அலட்சியப்படுத்திக் கொண்டு தெருவின் நடுவில் வீறுடன் படுத்திருக்கும் பசுக்கள். தெருவின் அக்கரையில் திருமதி ப்பாசுவின் இரண்டு மாடி வீடு. திருமதி தத்தாவுக்கு தன் வீட்டைப் போலவே அவளின் வீட்டையும் தெரியும். மேல்மாடியிலுள்ள, கடற் பச்சை நிறச் சாயம் பூசப்பட்ட, காற்றோட்டமான அறையில்

திருமதி ப்பாசு அவளுக்காகக் காத்துக்கொண்டிருக்க அவளைப் பார்ப்பதற்கு எத்தனை முறை திருமதி தத்தா மாடிப்படிகளில் ஏறிப் போயிருக்கிறாள்?

*இன்று ஏன் இவ்வளவு நேரம், பரமீளா? உன் தேநீர் ஏற்கெனவே குளிர்ந்துபோய் விட்டது.*

*என்ன நடந்தது என்று கேட்கும்வரை பொறு, றோமா, பிறகு நான் ஏன் பிந்தி வந்தேன் என்பதற்காகப் பேச மாட்டாய்...*

*நிறுத்து. மடச்சி.* திருமதி தத்தா கடுமையாகத் தனக்குத் தானே சொன்னாள். *உனது ஒவ்வொரு உறவினரும் உன் இடத்தில் இருப்பதற்குக் காலையும் கையையும்கூட கொடுப்பார்கள். அது உனக்குத் தெரியும். இங்கிருப்பதற்கு எத்தனை சந்தோசம் அடைகிறாய் என்று பகலுணவுக்குப் பின் றோமாவுக்கு நல்லதொரு கடிதம் எழுதப்போகிறாய்.*

தன் மேலாடைகளையும் சட்டைகளையும் எடுத்துக் கொண்டிருந்த திருமதி தத்தா நிற்குமிடத்தில் இருந்து அடுத்த வளவை அவளால் பார்க்கலாம். அங்கு பார்ப்பதற்கு என்னவோ அதிகம் இருக்கவில்லை. நன்கு கத்தரிக்கப்பட்ட புல். சில நீலப் பூக்கள். அவற்றின் பெயர் அவளுக்குத் தெரியாது. இரண்டு மரக்கதிரைகள் மரத்தின் கீழ் போடப்பட்டிருந்தன. ஆனால் அதில் எவரும் இருந்ததை திருமதி தத்தா பார்க்கவில்லை. *இத்தனை பெரிய பின் வளவு இருந்தும் அதை எவரும் உபயோகிக்காவிட்டால் அதில் என்ன பிரயோசனம்?* அவள் நினைத்தாள். கல்கத்தா இவள் மனதில் திரும்பவும் வந்தது. அங்குள்ள ஒடுங்கிய, கருமை படர்ந்த தொடர்மாடிவீடுகள். அதற்குள் இருக்கும் இரண்டு சிறிய அறை களில் தங்களை ஒடுக்கிக்கொள்ளும் ஆறு, எட்டு, பத்து என்று பல ஜீவன்களைக் கொண்ட குடும்பங்கள். அவள் நெஞ்சம் எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்வால் நிரம்பி விட்டது. அது அறிவற்ற செயல் என்று அவளுக்குத் தெரியும். சாகருடைய வீட்டிற்கு அவள் முதன் முதல் வந்தபோது திருமதி தத்தா அண்டை வீட்டுக்காரரிடம் சென்று அவர்களைச் சந்திக்க விரும்பினாள். திருமதி ப்பாசுவிற்கு அடிக்கடி கொண்டு செல்வது மாதிரி அவள் செய்த இனிப்பான ரஸகொல்லாவையும் கொண்டு செல்ல நினைத்தாள். ஆனால் ஷியாமொழி அப்படிச் செய்யக் கூடாது என்று மறித்துவிட்டாள். கலிஃபோணியாவில் அப்படிப் பட்ட பழக்கமில்லை என்று சொல்லிவிட்டாள். ஏற்கெனவே அழைத்து நியம நேரம் வைக்காமல் ஒருவர் வீட்டிற்கும் இங்கு செல்வதில்லை. இங்கு ஒவ்வொரும் அலுவலாக இருப்பார்கள். ஒன்றாகக் கூடி இருந்து இடைவிடாது சீனி போட்ட தேநீர் குடித்துக் கொண்டு கதைத்துக்கொண்டிருப்பதில்லை. ஏன் சில வேளை அவர்கள் வெறுப்பான வார்த்தைகளைக் கூட அவளுக்குச் சொல்லி விடலாம்.

“எதுக்காக?” திருமதி தத்தா நம்பாமல் கேட்டாள். ஷியாமொழி சொன்னாள். “அமெரிக்கர்கள் தங்கள் அயலவர்கள்” – இவ்விடத்தில் அவள் ஓர் ஆங்கிலச் சொற்றொடரைப் பாவித்தாள்

– “அவர்களின் அந்தரங்கங்களில் தலையிட ஒருவரையும் அனுமதிப்பதில்லை.” திருமதி தத்தாவுக்கு *அந்தரங்கம்* என்ற வார்த்தை முழுவதாகப் புரியவில்லை. ஏனெனில் வங்காள மொழியில் அந்த வார்த்தை இல்லாததால் மருமகளை ஒருவிதப் புதிருடன் கருத்தூன்றிப் பார்த்தாள். இருந்தும் திரும்பவும் அதைக் கேட்காத அளவு அவளுக்கு அது புரிந்தது. இருந்தும் பின்வந்த மாதங்களில் வேலிக்கு மேலால் அடிக்கடி பார்த்தாள், எவருட னாவது தொடர்புகொள்வதற்கு. அமெரிக்காவாக இருந்தாலென்ன இந்தியாவாக இருந்தாலென்ன மக்கள் மக்கள்தானே. சிநேக பாவமான முகத்தை எவரும் விரும்புவார்கள். திருமதி தத்தாவைப் போன்ற வயதில் ஷியாமொழிக்கும் அது புரியும்.

இன்று, அவள் வீட்டுக்குள் திரும்பிப் போக நினைக்கையில் அவளின் கடைக்கண் பார்வையில் எதுவோ ஒரு சலனம் தென் பட்டது. யன்னல் ஒன்றில் ஒரு பெண் நின்றாள். பின்மதியங்களில் ரிவியைப் போட்டால் அதில் கதாநாயகிகளுக்குள்ளதுபோல – திருமதி தத்தாவுக்கு அக்கதாநாயகிகளின் செயல்கள் விளங்குவ தில்லை – இவளுடைய தலைமயிரும் வழவழப்பாகத் தங்கம் போல இருந்தது. இவள் சிகரெற் குடித்துக்கொண்டிருக்கிறாள். அதன் சாம்பல் நிறப் புகை சுருள் சுருளாக சோம்பலுடன், நயநாகரீகமாக அவளின் விரல்களிலிருந்து மேலெழுந்தது. புகைப்பதை, அதுவும் விசேடமாகப் பெண்கள் புகைப்பதை, திருமதி தத்தா அத்தனை தூரம் அங்கீகரிக்கவில்லை என்பதை மறந்து, அவள் இன்னுமொரு மனித உயிரை தனிமையான அந்த நாளின் பகற்பொழுதில் பார்த்தபொழுது மிகவும் சந்தோசப்பட்டாள். தன் பேரப்பிள்ளைகள் ஆவலுடன் ஹல்லோ சொல்வதற்குத் தங்கள் கைகளை அசைப் பதைப்போல அவளும் தன் கைகளைத் தூக்கி அசைத்தாள். திருமதி தத்தாவை அப்பெண் உற்றுப் பார்த்தாள். அவளுடைய இதழ்கள் கலப்பற்ற சிகப்புச் சாயம் தீட்டப்பட்டிருந்தன. அவள் சிகரெற்றை வாய்க்குத் தூக்கியபோது அதன் நுனி மிருகத்தின் கண்ணைப்போல ஒளி வீசியது. அவள் கையசைக்கவோ முறுவலிக் கவோ இல்லை. சிலவேளை அவளுக்குச் சுகமில்லையோ? திருமதி தத்தா அவளுக்காக வருத்தப்பட்டாள். தனிமையில் அமைதியான அந்த வீட்டில், சிகரெற் மட்டுமே ஆறுதலுக்கு இருக்க. இந்த அமெரிக்கரின் ஆசாரங்கள் தடுக்காமல் இருந்தால் தான் புதிதாகக் காய்ச்சிய அளுதும்மைக் கோப்பையில் கொண்டு சென்று அவ ளுக்குக் கொடுத்து நல்ல ஆறுதலான வார்த்தை கூற விரும்பினாள்.

திருமதி தத்தாவுக்கு அவளுடைய மகனுடன் தனிய இருக்கும் சந்தர்ப்பம் வருவது மிகக் குறைவு. அவள் போட்டுத் தருகிறேன்

என்று முன்வந்தும் காலையில் அவன் விரும்பிக் குடிக்கும் வாசமான ஏலக்காய்த் தேநீரைக் குடிக்கக் கூட நேரமில்லாமல் மிக அவசரமாக இருப்பான். சின்ன வயதில் அவளின் கோப்பையிலிருந்து அத்தேநீரில் ஒரு வாய் தரும்படி எப்படிக் கெஞ்சுவான் என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. இரவுணவு நேரம்வரை அவன் வீடு திரும்புவதில்லை. பிறகு பிள்ளைகளின் வீட்டுப்பாடங்கள் செய்ய உதவி செய்வான். பத்திரிகை வாசிப்பான். அவனுக்கு விருப்பமான, ஆறுதலுக்காக, ரிவியில் வரும் குற்றப் படங்கள் பார்த்துக்கொண்டு ஷியாமொழி விவரிக்கும் அவளின் பகல்நேர வேலைகளைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருப்பான். பின் குப்பைகளைக் கட்டி வெளியே வைப்பான். தாயில் அக்கறையுள்ள மகன் என்பதால் அதற்கிடையில் திருமதி தத்தாவுடனும் உரையாடுவான். அவனுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தன் மூட்டுவீக்கங்கள் இப்பொழுது பரவாயில்லை என்று அவனுக்கு உறுதியளிப்பாள். இல்லை. இல்லை. வீட்டுக்குள் எந்நேரமும் இருப்பது சலிக்கவில்லை. அவளுக்குத் தேவையானவை அத்தனையும் அவளுக்கு இருக்கிறது – ஷியாமொழி மிக அன்பானவள். முடியுமானால் சில விமானத் தபால் கடதாசிகளை நாளைக்கு வரும்போது வாங்கினால் போதும். அவள் அன்று செய்த வேலைகளில் சிலவற்றைக் கத்தரித்துவிட்டு அடுக்கினாள். அவளுடைய சமையலை அவன் புகழ்ந்தபோது அவள் முறுவலித்தாள். ஆனால் கடைசியாக, "ஓ, நேரமாச்சு படுக்கப்போக. நாளைக்கு இன்னுமொரு வேலை நாள்." என்று அவன் சொல்லியபோது அவள் பசியைப் போன்றதொரு தெளிவற்ற ஒரு நோவை இருதயமுள்ள இடத்தில் உணர்ந்தாள்.

எதிர்பாராதவிதமாக பரிசு கிடைத்த ஒரு குழந்தை மகிழ்ச்சியுடன் இருப்பது போல அவள் எழுதிய கடிதத்தை அரைவாசியில் வைத்துவிட்டு இன்று சாகரை வரவேற்க வாசலில் நின்றாள். ஷியாமொழி வருவதற்கு இன்னும் சரியாக ஒரு மணி நேரம் இருக்கிறது. பிள்ளைகள் முன் கூடத்தில் தங்கள் வீட்டுப் பாடங்களைச் செய்துகொண்டு ரிவியில் கேலிப்படம் பார்த்துக்கொண்டு இருந்தனர். கேலிப்படம் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள் என்று திருமதி தத்தாவுக்குச் சந்தேகம். ஒருமுறை அவர்கள் அப்படிச் செய்வதை அவள் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் அவர்கள் ஓடிவந்து தகப்பனைக் கட்டிப்பிடித்து அவசரமாகக் கொஞ்சிவிட்டு திரும்பவும் ஓடிப்போய் படம் பார்ப்பார்கள். அவளுக்குத் தன் மகன் கிடைப்பான். அவளுக்குத் தனியாகக் கிடைப்பான். பழக்கமான புளி மணத்துடனும் வெட்டிய மல்லி இலை மணத்துடனுமுள்ள குசினியில் தனியாகக் கிடைப்பான்.

"கோகா" பல வருடங்களாக உபயோகிக்காத குழந்தையில் அழைத்த செல்லப்பெயரில் அழைத்தாள். "உனக்கு விருப்பமென்றால் இரண்டு மூன்று லுச்சி பொரிக்கவா?" அவனுடைய பதி

லுக்குக் காத்துக்கொண்டிருக்கையில், அவளுடைய நெஞ்சு வேகமாக அடிப்பதை அவள் தொண்டையின் ஆழத்தில் உணர்ந்தாள். அவன் ஆம் என்று சொல்லும்போது – அது நல்லது – அவள் தன் கண்களை இறுக மூடி, ஆழ மூச்சிழுத்தாள். இரக்கமுள்ள காலம் அவளுக்குத் திரும்பவும் இளமையைக் கொடுத்ததுபோல இருந்தது அது. இனிமை யான அந்தத் தேவையின் அவசியத்தைத் திரும்பவும் அவளுக்கு அளித்தது மாதிரி இருந்தது அது.

திருமதி தத்தா சாகருக்கு ஒரு கதை சொன்னாள்:

"நீ சிறு குழந்தையாக இருந்தபோது ஊசி போடுவதற்கு எவ்வளவு பயப்படுவாய்! ஒரு முறை அரசாங்க வைத்தியர் நெருப்புக் காய்ச்ச லுக்கு கட்டாய ஊசி போட வந்தபோது நீ குளியலறைக்குள் போய் ஒளிந்துகொண்டு வெளியே வர மறுத்துவிட்டாய். உன் அப்பா கடைசியில் என்ன செய்தார் என்று உனக்குத் தெரியுமா? தோட்டத் துக்குள் போய் ஒரு ஓணானைப் பிடித்து குளியலறை யன்னலில் வீசினார். நீ ஊசிக்குப் பயப்படுவதிலும் பார்க்க ஓணானுக்குப் பயம். சரியாக ஒரு நிமிடத்தில் குளியலறையிலிருந்து குளறிக்கொண்டு ஓடிப் போய் காத்துக்கொண்டிருந்த வைத்தியரின் கைக்குள் விழுந்தாய்."

சாகர் சிரி சிரி என்று பெரிதாகச் சிரித்ததால் அவன் முன்னால் இருந்த தேநீர் கோப்பையை ஏறக்குறைய தட்டியே விட்டான். (அத்தேநீரில் ஷியாமொழி போடுகிற இரசாயன மாவில்லாமல் உண்மையான சீனியையே தன் மகனுக்குப் போட்டிருந்தாள் திருமதி தத்தா. அது நல்லது என்று நினைத்தாள் அவள்.) அவன் கண்களில் இருந்து கண்ணீர் வந்திருந்தது. தன் கதை அவனை இத்தனை மகிழ்ச்சியூட்டும் என்று தெரியாத திருமதி தத்தா திருப்தி அடைந் தாள். அவன் தான் போட்டிருந்த கண்ணாடியைத் துடைப்பதற்குக் கழற்றியபோது அவனுடைய முகம் அவன் தந்தையின் முகத்தைப் போலல்லாது இயல்புக்கு மாறாக இளமையாக இருந்தது. கண்ணாடி போட்டிருந்ததால் மூக்கில் ஏற்பட்டிருந்த பள்ளத்தைத் துடைத்து விட வேண்டும் என்று அவளுக்கு வந்த உணர்ச்சியை அடக்கினாள்.

"நான் துண்டாக மறந்திற்றன்" சாகர் சொன்னான். "எப்படி உங்களால் இந்தப் பழைய விசயங்களை எல்லாம் ஞாபகம் வைச்சிருக்கக் கூடியதாக இருக்கிறது?"

*ஏனென்றால் மற்றவர் எவரும் நினைவில் வைத்திருக்க விரும்பாத வற்றை தாய்மார் பலரும் நினைவில் வைத்திருப்பர். அதுதான். திருமதி தத்தா நினைத்தாள். அந்தக் கதைகளைக் குடும்பத்தின் மரபுச் செல்வத்தில் ஒன்றாகச் சேரும்வரை திரும்பத் திரும்பச் சொல்வர். நாங்கள்தான் நெஞ்சின் கறைபடிந்த மூலைகளைப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள்.*

இதைச் சொல்ல ஆரம்பித்தபோது முன்கதவு திறக்கும் சத்தம் கேட்டது. ஷியாமொழியின் உயர்ந்த சப்பாத்துக்களின் மெதுவான

சத்தம் கேட்டது. திருமதி தத்தா பாவித்த கோப்பைகளைத் தூக்கிக்கொண்டு எழுந்தாள்.

"நீங்கள் சாப்பிடுவதற்கு பதினைஞ்சு நிமிடத்திற்கு முன் என்னைக் கூப்பிடுங்க. உங்களெல்லாருக்கும் புதிசா லுச்சி பொரிச்சுத் தாறன்." சாகருக்குச் சொன்னாள்.

"நீங்க போக வேணாம், அம்மா." அவன் சொன்னான். திருமதி தத்தா சந்தோசத்தால் முறுவலித்தாள். ஆனால் நிற்கவில்லை. ஷியாமொழி தன் கணவனுடன் இந்த நேரம் தனியாக இருக்க விரும்புவாள் என்று அவளுக்குத் தெரியும். இன்று தன் மகிழ்ச்சியில் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

"உன்னுடன் இருந்து வம்பளக்கிறதுதான் எனக்கு வேலையா. எனக்கு வேறொரு வேலையும் இல்லையா?" அவள் அவனைச் செல்லமாகக் கடிந்தாள். "எனக்கு முக்கியமான கடிதம் ஒன்று எழுதவேண்டும் என்று உனக்குத் தெரிய வேணும்."

அவளுக்குப் பின்புறம் ஒரு கைப்பெட்டி தடாரென விழும் சத்தம் அவளுக்குக் கேட்டது. அது அவளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஷியாமொழி அதில் எப்போதும் கவனமாக இருப்பவள். ஏனெனில் அவளுடைய கொம்பனியில் இறுதியாக மனேஜராக வந்தபோது சாகர் அப்பெட்டியைப் பரிசாகக் கொடுத்தான்.

"ஹை" சாகர் அழைத்தான். பதில் வராது விடவே, "ஹே மொழி, உனக்கு ஒன்றுமில்லையே" என்று கேட்டான்.

"என்ன நடந்தது, மொழி." சாகர் அவளுக்கு ஒரு முத்தம் கொடுக்கச் சென்றான்.

"வேலையில் ஏதாவது பிரச்சினையா?" கணவன் மனைவியரின் இந்த வெளிப்படையான அன்பு திருமதி தத்தாவுக்கு எப்பொழுதுமே ஒரு மாதிரியாக இருக்கும். அதனால் திருமதி தத்தா தன் முகத்தை யன்னல் பக்கம் திருப்பினாள். ஆனால் அதற்கிடையில் ஷியாமொழி முகத்தைத் திருப்புவதைக் கவனித்துவிட்டாள் திருமதி தத்தா.

"என்னை விடுங்கள்" அவளுடைய குரல் மெதுவாகவும் தடுமாறுவதாகவும் இருந்தது.

"என்னைச் சும்மா தனியாக இருக்கவிடுங்கள்."

"என்ன நடந்தது?" சாகர் கவலையுடன் கேட்டான்.

"அதைப் பற்றி இப்போது நான் கதைக்க விரும்பவில்லை." ஷியாமொழி குசினியில் ஒரு கதிரையில் இருந்து தன் முகத்தைக் கைகளில் ஏந்தினாள். சாகர் அறையின் மத்தியில் எதுவுமே செய்ய முடியாது நின்றான். தன் கையை உயர்த்தி அவளை ஆசுவாசப் படுத்த நினைத்துவிட்டு அவள் அதை எப்படி எடுப்பாள் என்று பயந்து கையை திரும்பக் கீழே போட்டான்.

அவளுடைய மகனைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோபம் திருமதி தத்தாவின் நெஞ்சுள் எழுந்தது. இருந்தும் அவள் அமைதியாகத் தூர விலகிச் சென்றாள். அவளுடைய மனதிலுள்ள கடிதத்தில் அவள் எழுதினாள்: *பெண்கள் வலிமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சின்ன விசயத்துக்கெல்லாம் இப்படி சினக்கக் கூடாது. றோமா, உனக்கும் எனக்கும் இதைவிட பல விசயங்கள் அழுவதற்கு இருந்தன. ஆனால் எங்கள் கண்ணீரை ஒருவரும் அறியாமல் உகுத்தோம். நாங்கள் நல்ல மனைவிமார், நல்ல மருமகள்மார், நல்ல தாய்மார். கடமையுணர்ச்சியுள்ளவர்கள். முறையிடாதவர்கள். எங்களை எக்காலத்திலும் முன்னிலைப் படுத்தாதவர்கள்.*

பல வருடங்களாக நினைக்காத சடுதியான நினைவொன்று அவளுக்கு வந்தது. ஒருநாள் கீரைக்கறியை கரியாக்கி விட்டாள். அதற்காக அவளுடைய மாமியார் சத்தம் போட்டாள். "உன் அம்மா உனக்கு எதையுமே பழக்கவில்லையா? உபயோகமற்ற பெண்." அதற்குத் தண்டனையாக திருமதி தத்தாவை சினிமாப் படம் பார்க்க அனுப்ப மறுத்துவிட்டாள். அந்தப் படத்தின் பெயர், *ஸாஹிப், பீபி, ஔர் குலாம்.* அதில் கல்கத்தாவிலுள்ள அத்தனை பேருக்கும் பைத்தியம். அதற்கான ரிக்கெற்றும் ஏற்கெனவே வாங்கி யாயிற்று. திருமதி தத்தா அன்று பின்மதியம் முழுக்க அழுது கொண்டிருந்தாள். ஆனால் சாகரின் தந்தை வீட்டிற்கு வருமுன்னர், அவருக்குத் தெரியாதிருப்பதற்காக, தன் முகத்தைக் குளிர் தண்ணீ ரில் கவனமாகக் கழுவி, கண்ணுக்கு மைபூசி இருந்தாள்.

ஆனால் எல்லாம் குழம்பிவிட்டது. தன் இளமையில் அழுவதைக் காட்ட விரும்பாத முகம் இன்று வேறொன்றுக்குள் மங்கி விடுகிறது – ஏன், அது ஷியாமொழியினதா – ஒரு எண்ணம் அவள் நெஞ்சை வலி மையாகத் தாக்கியதால் அவள் விழாமல் இருப்பதற்காகப் படுக்கை யறைக் கதவைப் பிடிக்க வேண்டி இருந்தது. *அது என்ன நன்மையை எங்களுக்கு அளித்தது? நாங்கள் இன்னும் குனியக் குனிய பலர் எங்களைத் தள்ளுகின்றனர். இறுதியில் ஒருநாள் எங்களால் எழுந்து நிற்க முடியுமா என்று கூடத் தெரியவில்லை. சிலவேளை ஷியா மொழியினுடையதுதான் சரியான எண்ணமாக இருக்கலாம்...*

திருமதி தத்தா கட்டிலில் கனத்துடன் இருந்தாள். அப்படியான தீய எண்ணங்களைத் தன் மனதிலிருந்து அழிக்க முயற்சித்தாள். ஓ இந்தப் புதிய நாடு. இங்கு எல்லாச் சட்டதிட்டங்களும் தலைகீழா னவை. அது அவளைக் குழப்பியது. பல நீர் எருமைகள் குளத்தைக் கலக்குவது போல அவளுடைய மண்டைக்குள் உள்ள வெளி கலங்கியது. றோமாவுக்குக் கடிதம் எழுதுவதில் மனதைக் குவித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தாள்.

அதன் பிறகுதான் நினைவு வந்தது, தான் எழுதி அரைவாசியில் விட்ட விமானத்தபால் குசினி மேசையில் இருந்தது. மகனும்

மருமகளும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளட்டும். அதற்கு இரவுணவு முடியும்வரை தான் பொறுத்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அவளை ஒரு படபடப்பு – அது எதிர்ப்பா – ஆட்கொண்டது. ஷியாமொழி மனவமைதி இன்றி இருக்கிறாள் என்பதைக் கண்டபோது திருமதி தத்தாவுக்குக் கவலை யாகத் தான் இருந்தது. ஆனால் அதற்காக ஒரு மாலைப்பொழுதை ஏன் விரயமாக்குவான்? தன் விமானத்தபாலைப் போய் எடுக்கத் தீர்மானித்தாள். அது குற்றமல்லவே. குற்றமா? அங்கு போய் எடுத்துக்கொண்டு வந்து விடுவதுதானே. ஷியாமொழி நடுவசனத் தில் நிறுத்தி அந்தப் பெருமூச்சுகளில் ஒன்றை விட்டாலும் தான் அதற்காக வருந்தப்போவதில்லை. அதைவிட, இந்நேரம் அவர்கள் முன்கூடத்திலிருந்து ரிவி பார்த்துக் கொண்டிருக்கலாம்.

*உண்மையில் றோமா,* வெளிச்சமில்லாத நடைகூடத்தால் போய்க் கொண்டிருக்கும்போது அவள் தலைக்குள் எழுதுகிறாள், *இங்கு அவர்கள் பார்க்கும் ரிவி நேர அளவு எமக்கு அதிர்ச்சியூட்டுகிறது. பிள்ளைகள் கூட அந்தப் பெட்டிக்கு முன்னால் பல மணிநேரம் இருக்கிறார்கள். நிறம்தீட்டிய பொம்மைகளைப் போல. அதை நிற்பாட்டச் சொன்னால் திருப்பிக் கதைக்கிறார்கள்.* உண்மையில் அப்படியான நிந்தனையை உண்மையான கடிதத்தில் எழுத மாட் டாள். இருந்தும் அதைத் தனக்குள்ளே சொல்லிக்கொள்வதிலாவது அவளுக்கு நன்மை கிடைப்பதாக உணர்கிறாள்.

முன்கூடத்தில் ரிவி போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் அதில் எவரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஷியாமொழியும் சாகரும் உரையாடிக்கொண்டு சோஃபாவில் அமர்ந்திருக்கின்றனர். திருமதி தத்தா நடைகூடத்தில் நின்ற இடத்திலிருந்து அவர்களைப் பார்க்க முடியாது. அவர்களுடைய மேசை விளக்கால் ஏற்பட்ட பெரிய நிழல்கள் சுவரில் விழுந்தன. அவை அவளில் ஊசலாடித் துள்ளின.

குசினிக்குள் மறைவாகப் போய்க்கொண்டிருக்கையில் ஷியா மொழியின் குரல் அவளுக்குக் கேட்டது. அது மருமகளின் உறுதி யான குரலின் தொனியல்ல. அது பச்சைப்புண். அதில் நடுங்கும் துயரம் தெரிந்தது. அங்கிருந்து திருமதி தத்தாவால் அசைய முடியவில்லை. இறந்தவர்களின் தொலைந்த ஆவிகளின் – நிசி – குரல்களைக் கேட்டது போல இருந்தது. அப்படியான பல கதை களைக் கேட்டுத்தான் அவள் வளர்ந்தவள்.

“அமைதியாய் இரு என்று உன்னால் சொல்ல முடியும். அவள் உன்னிடம் வந்து, ‘எங்கள் வளவு வேலியில் துணிகளைக் காயப் போட வேண்டாம் என்று தயவுசெய்து அந்த முதியவளிடம் சொல்’ என்று உனக்குச் சொல்லியிருந்தால் நீ எவ்வளவு தூரம் அமைதியாய் இருப்பாய்? அவள் இருதரம் எனக்குச் சொன்னாள். எனக்கு ஆங்கிலம் புரியாத மாதிரி. நான் ஒரு காட்டுமிராண்டி

மாதிரி. இத்தனை வருடங்கள் இந்த அமெரிக்கர்கள் இப்படிச் சொல்லச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்பதற்காக நான் எவ்வளவு கவனமாக இருந்தன். இப்ப . . .”

“ஷ்ஷ்ஷ்ஷ் ஷியாமொழி, அம்மாவிடம் இதைப் பற்றிக் கதைக் கிறன் என்று சொல்றன்.”

“நீ எப்போதும் சொல்றாய். ஆனால் நீ ஒருநாளும் ஒன்றும் செய்வதில்லை. நல்ல மகனாக இருப்பதில் மிகக் கவனமாக இருக்கிறாய். அவருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தாமல் இருக்க கவனமாக நடக்கிறாய். அப்படியானால் என்னுடைய உணர்ச்சிகள்? நான் ஆளில்லையா?”

“சத்தம் போடாதே மொழி. பிள்ளைகள் . . .”

“அவர்களுக்குக் கேட்கட்டும். இனிமேல் நான் கவலைப்படப் போவதில்லை. அதைவிட, அவர்கள் மடையர்களல்ல. எனக்கு அவரால் எவ்வளவு கஸ்ரம் என்று அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும். நீ மட்டும்தான் அதைப் பார்க்க மறுக்கிறாய்.”

நடைகூடத்தில் திருமதி தத்தா சுவர் எதிரில் சுருங்கிப் போனாள். அதிலிருந்து அவள் போக நினைத்தாள். மேலும் எதையும் கேட்க விரும்பவில்லை. ஆனால் அவளுடைய பாதங்கள் சீமெந்தால் உருவாக்கியன போல தூக்க முடியவில்லை. ஷியாமொழியின் வார்த்தைகள் நெருப்பைப் போல அவள் காதுகளில் விழுந்தன.

“நான் எத்தனையோ முறை திரும்பத் திரும்ப விளங்கப்படுத்தி விட்டேன். ஆனால் அவர் நான் என்ன செய்ய வேண்டாம் என்று சொன்னேனோ அவற்றைச் செய்கிறார். நல்ல உணவுகளை வீசு கிறார். குசினி மேசையில் தண்ணீர் ஓட கோப்பைகளை வைக்கிறார். என்னுடைய பிள்ளைகளுக்கு நான் செய்வதற்கு அனுமதி கொடுத்த வற்றை செய்ய வேண்டாம் என்று அவர்களுக்குக் கட்டளை இடுகிறார். அவர் முழுக் குசினியையுமே பாரம் எடுத்து விட்டார் என்பது போல தான் விரும்பியதெல்லாம் சமைக்கிறார். வீட்டுக்கு வந்தவுடன் எல்லாவிடமும் எண்ணெய் மணக்குது. எங்கள் உடுப்புக் களில் கூட. இப்ப இது என் வீடல்ல போல நான் உணருகிறன்.”

“பொறுமையாய் இரு, மொழி. எப்படியோ அவர் ஒரு முதியவர்.”

“எனக்குத் தெரியும். அதுதான் நான் இத்தனை முயற்சிக்கிறன். அவரை இங்கு வைத்திருக்கிறது உனக்கு முக்கியம். ஆனால் இனிமேல் என்னால் முடியாது. உண்மையில் முடியாது. என் பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு போய் விடக் கூட சிலவேளை நான் நினைக்கிறன்.” ஷியாமொழியின் குரல் தேம்பலாக மாறுகிறது. சுவரின் குறுக்கே ஒரு நிழல் துள்ளுகிறது. பிறகு இன்னுமொன்று. காலநிலை அறிவிப்பாளர் இன்னுமொரு கிழமை சூரியன் ஒளிர் வான் என்று தன் மூக்கால் அறிவித்தார். அதன் பின்னால்

பெரிய, பயந்த பெருமூச்சொன்று திருமதி தத்தாவுக்குக் கேட்டது. பிள்ளைகள் பற்றி அவள் நினைத்தாள். தங்கள் தாய் அழுவதைக் கண்டது அவர்களுக்கு இதுதான் முதல் முறை.

“அப்படிக் கதைக்காதே, இனியவளே.” சாகர் அவளை நோக்கிக் குனிந்தான். அவன் குரலிலும் வேதனை தெரிந்தது. சுவரில் விழுந்த அத்தனை நிழல்களும் நடுங்கி, இறுதியில் ஒன்றாகிக் கருமையான பக்க உருவரையானது.

திருமதி தத்தா அந்த திண்மமான பக்க உருவரையை உற்றுப் பார்த்தாள். சாகரினதும் ஷியாமொழியினதும் முணுமுணுப்புக்கள் அவள் தலைக்குள் நடைபெறும் வரண்ட முணுமுணுப்பான இரைச்சலுக்குள் மறைந்துவிட்டன. அந்த இரைச்சல்கள் தாகத்தால் துடிக்கும் பறவைகள் போன்றிருந்தன என்று வியப்புடன் அவள் நினைத்தாள். தன்னறைக்குத் தான் வந்துவிட்டதைக் கொஞ்ச நேரத்தின் பின்தான் அவள் உணர்ந்தாள். இருட்டில், தன் கட்டிலில் தன்னை மிகமிக மெதுவாக இருத்திக்கொண்டாள், அவளுடைய உடல் ஒரு மெல்லிய கண்ணாடியால் செய்யப்பட்டதுபோல அல்லது பனிக்கட்டியால் செய்தது போல. அவள் அப்படிக் குளிர்ந் திருந்தாள். கண்களை மூடிக்கொண்டு அப்படியே பல மணிநேரம் இருந்தாள். அவள் தலையுள் எண்ணங்கள் சாம்பல் நிற தூசிப் புயலாக மாறும்வரை மிக வேகமாக, சுழன்றுகொண்டே இருந்தன.

இரவுணவுக்கு வரச் சொல்லி பிரதீப் வந்து கூப்பிட்டபோது, திருமதி தத்தா அவனைத் தொடர்ந்து குசினிக்குள் சென்றாள். அங்கு எல்லாருக்கும் லுச்சி செய்தாள். மாக்குழைத்துச் செய்த லுச்சி எப்பொழுதும்போல நன்றாகப் பெருத்து முறுகி ஊதின. சாகரும் ஷியாமொழியும் ஒரு மாதிரியான ஒப்பந்தத்துக்கு வந்திருந்தார்கள்: அவள் அவனைப் பார்த்து சிறிதாக முறுவலித்தாள். அவன் தன் கையைச் சாதாரணமாக அவளின் பிடரியில் வைத்து அழுத்திக் கொடுத்தான். திருமதி தத்தா அதைப்பற்றி மலைப்புக் காட்டவில்லை. அவள் தன் உணவைச் சாப்பிட்டாள். தன்னிடம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னாள். மற்றவர் சொன்ன பகடிக்குச் சிரித்தாள். நொவோக்கெயின் ஊசி போட்டது மாதிரி அவள் முகம் விறைத்திருந்தால் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. மேசையிலிருந்து பொருட்கள் அகற்றப்பட்டவுடன் கடிதத்தை எழுதி முடிக்கவேண்டுமென்று சொல்லி அவ்விடத்திலிருந்து சென் றாள். இப்போது திருமதி தத்தா தன் கட்டிலில் இருந்து வஞ்சகமற்ற பின்மதியத்தில் எழுதிய கடிதத்தைத் திரும்பவும் வாசித்தாள்.

என்னருமை றோமா,

உன்னைப் பிரிந்த ஆற்றாமை எனக்கிருந்தபோதிலும், அமெரிக்கா வில் எப்படிச் சந்தோசமாக இருக்கிறேன் என்பதை அறியும்போது நீ மகிழ்ச்சியடையவாய். இங்கு பல விசயங்களுக்கு நாம் பழகிக்

கொள்ள வேண்டும். ஆனால் இசைந்துபோவதற்கு நாம் அந்நிய மானவர்கள் அல்லவே. நாம் முதிர்ந்த பெண்கள். எங்கள் வாழ்க்கை முழுவதும் அதைத்தானே செய்து கொண்டு வந்திருக்கிறோம்? இன்று சாகருக்குப் பிடித்த அளுதும் செய்துகொண்டிருக்கிறேன். எல்லோரும் ஒன்றாக இருந்து நான் செய்த உணவைச் சாப்பிடு வதைப் பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சியை எனக்குக் கொடுக்கிறது. பிள்ளைகள் என்னுடன் சேருவதற்கு இன்னும் கூச்சப்படுகிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் நாங்கள் சேர்ந்துவிடுவோம் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஷியாமொழி இப்போது தன்னம்பிக் கையுள்ளவளாகவும் வெற்றிபெற்றவளாகவும் மாறிவிட்டாள். உடுத்துக் கொண்டு அவள் வேலைக்குப் போவதை நீ பார்க்க வேணும். கொஞ்ச வருடங்களுக்கு முன் நான் அமெரிக்காவுக்கு அனுப்பிய பயந்த சுபாவமுள்ள மணப் பெண்ணா அவள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. எல்லாவற்றிலும் பார்க்க, சாகர்தான் எனது முதிர்ந்த பருவத்தில் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவன் . . .

திருமதி தத்தா சேலைத்தலைப்பால் கடிதத்தில் விழுந்த கண்ணீர்த் துளியைக் கவனமாக ஒற்றினாள். அவ்விடம் தன் கதையைக் காட்டிக்கொடுக்காதிருப்பதற்காக நனைந்த இடம் காயும்வரை அவ்விடத்தை அவள் ஊதினாள். றோமா எவருக்கும் சொல்லமாட்டாள். என்றாலும் அந்த இடரைச் செய்ய அவள் விரும்பவில்லை. இப்படியானது நடக்கும் என்று பேராவலுடன் எதிர்பார்த்திருக்கும் அவளுடைய உறவினரைப் பற்றி அவள் ஏற்கெனவே கேள்விப் பட்டிருக்கிறாள். அந்த துட்ட பெண். தன் பழைய கொள்கைகளில் ஊறியவள். அவள் தன் மருமகளுடன் ஒருபோதுமே ஒத்துப்போக மாட்டாள் என்பது எங்களுக்கு ஏற்கெனவே தெரியும். இன்னும் மோசமாக, பாவம் அந்தப் பரிமீளாவைப் பற்றிக் கேள்விப்பட்டாயா? அந்தக் குடும்பம் அவளை எப்படி கொடுமைப்படுத்தியது? அவளுடைய சொந்த மகன் கூட. உன்னால் கற்பனை செய்ய முடியுமா?

அந்த மகிழ்ச்சியைத் தந்ததிற்காக சாகருக்கு நிச்சயம் கடமைப் பட்டிருக்கிறாள். தனக்கு அவள் என்ன கடமைப்பட்டிருக்கிறாள். உள்ளே வெடித்து விழும் நட்சத்திரங்கள்போல கருமையான இரவில் அவள் பூரணமாக நம்பிய நித்தியங்கள் நொறுங்கி விழுகின் றன. கண்ணிமைகளுள் ஒரே ஒரு பிம்பம் மட்டும் தனக்குத் துணை யாக உள்ளது. பக்க உருவரை – ஓர் ஆண், மனைவி, பிள்ளைகள் எல்லாரும் ஒரு சுவரில் இணைந்துள்ளார்கள் – இளையவர்கள் வாழும் இந்நாட்டில் எப்படி அவள் தனியாக இருக்கிறாள் என் பதைக் காட்டுகிறது. அது எவ்வளவு தேவையற்றதொன்று. மேலே இருந்த விளக்கின் ஒளியில் கைகளை இறுக்கிப் பிடித்துத் தன் மடியில் மடித்து வைத்துக்கொண்டு எவ்வளவு நேரம் இருந்தாள்

*என்பதை அவளால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் அவள் கைகளை விரித்தபோது அவளின் உள்ளங்கைகளிலுள்ள சதைகளில் நக அடையாளங்கள் சிவந்த மறைபொருள் எழுத்துக் களைப் போலக் காணப்பட்டன. அவை அவளின் உடல் மொழி, அவள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கின்றன.*

*அன்புள்ள றோமா, திருமதி தத்தா எழுதுகிறாள்.*

*நான் இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறேனா என்று நீ கேட்ட கேள்விக்கு என்னால் பதில் கூற முடியாதிருக்கின்றது. ஏனெனில் மகிழ்ச்சி என்றால் என்ன என்பது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தது என்னவென்றால் நான் இதுவரை நம்பி வந்ததல்ல அது என்பதே. அப்படி ஒன்று தேவையா என்பது பற்றியும் அல்ல. குடும்பத்தினருடன் இருப்பதும் என்பது பற்றியுமல்ல. அது அன்பைப் பொறுத்தது. அதைத்தான் இன்னும் நான் நினைக்கிறேன். ஆனால் அது முந்தி நினைத்ததுபோல அல்ல. இன்னும் வித்தியாசமானது. அதை விளங்கப்படுத்த என்னி டம் வார்த்தைகள் இல்லை. சிலவேளை இரண்டு முதியவர்களான நாம் இருவரும் உன் மாடியின் கீழ் வீட்டில் ஒன்றாக இருந்து தேநீர் குடித்துக்கொண்டு அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். (நான் திரும்பி வரும்போது நீ அவ்வீட்டை எனக்கு வாடகைக்குத் தருவாய் என்று நம்புகிறேன்.) கோடை மழை சிறிதாக விழுவதுபோல எங்களைப் பற்றி வம்புகள் பேசப்படும், பரவாயில்லை. – சிலவேளை நாங்கள் அனுமதிப்போம். நான் அதிஸ்ரக்காரியாக இருந்தால் – சிலவேளை இத்தனை நடந்தபிறகும் – அதைத் தெரிந்து கொள்வதில் தான் மகிழ்ச்சி தங்கியிருக்கும்.*

*எழுதியதைத் திரும்பி வாசிப்பதற்கு நிறுத்தினாள். அவளுடைய கடிதத்தைக் கண்ணீர்த் துளிகள் விழுந்து பழுதாக்குவதையோ, அழத் தேவையில்லை என்பதையோ அவள் நினைக்காததைக் கண்டு அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.*

‘Mrs. Dutta Writes a Letter’ - Chitra Divakaruni

# ஔரங்கஷீப் அலம்கீர்: ஹிந்துஸ்தானின் பேரரசன்

குஷ்வந்த் சிங்

*அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாவின் பெயராலும் உலகத்திற்கு அடைக் கலம் தந்த தூதுவர் பெயராலும் அல்லாவின் அனுக் கிரகத்தால் ஹிந்துஸ்தான் பேரரசின் இறைமையைப் பெற்ற அப்துல் முஷாஃபர் மொகதீர் மொகமட் ஆகிய நான் எனது தொண்ணூறு வயது வாழ்க்கையையும் நாற்பத்தெட்டு ஆண்டு ஆட்சியையும் சுருக்கமாக எழுதப்போகிறேன். நீதியான அல்லா என்னைப் பற்றி உண்மைக்குப் புறம்பாக எழுதுபவர்களைத் தண்டிப்பான் என்பதற்காகவே அப்படிச் செய்கிறேன். அத்துடன் அல்லா தன் பணிவான ஊழியன் தன் வார்த்தைகளிலேயே தன் பக்கக்கதையைச் சொல்வதை யும் மன்னிக்க வேண்டுகிறேன்.*

*இந்தப் பாவி, பல கொடுமைகளுடன், குஜராத் மாகாணத்தில் டெஹாட் என்ற சிறிய நகரத்தில் பிறந் தான். ஒரு கவிஞன் அஃராப்–எ–அலம்ராப் என்ற சிறப்புப் பட்டத்தை எங்களுக்காக யாத்தான். அதன் பொருள் சூரியன் தன் பிரகாசத்தால் இவ்வுலகத்தை அரவணைப்பான் என்பது. இன்னொரு கவிஞன் காலக்குறிப்பு வாய்ப்பாட்டை யாத்தான். அது கொஹார்–எ–தாஜ்–முலுக்–ஔரங்கஷீப். அதன் பொருள் பேரரசனின் மணிமுடியில் ஔரங்கஷீப் ஒரு முத்து என்பது. இந்த இரண்டு சிறப்புப் பட்ட எழுத்துக்களையும் சேர்த்தால் எங்கள் பிறப்பு வருடம் 1027 ஹிஜ்ரி என்று தெரியவரும். அது கிறிஸ்தவக் கலண்டரின்படி 1618ஆம் ஆண்டாகும். நாங்கள் ஸிகாட் டின் 15ஆம் நாள் (நவம்பர் 3ஆம் திகதி) பிறந்தோம். துலாமும் விருச்சிகமும் கூடிய கிரகங்களில். அவை இரண்டின் குணங்களும் எம் ஆளுமையில் இருக்கும் என்று சோதிடர்கள் வருவதுரைத்தனர். அதாவது,*

துலா ராசியிலிருந்து நீதியும் இரக்கமும் உள்ளவர்களாக இருப்போம். விருச்சிகமாகிய நட்டுவக்காலி தன் வாலில் நஞ்சையுடையது. அது எம் நோக்கத்தை விட்டுக்கொடுக்காமையும், எம் உரிமைகளை மிதிக்கத் துணிந்தவர்களை அழிப்பதற்குச் சக்தியையும் கொடுக்கிறது. நாங்கள் பிறந்தபோது எமது தந்தை – அப்போது அவர் இளவரசர் குர்ராம் என்று அறியப்பட்டவர் – டெக்கானின் அதிபதியாக இருந்தார். அவருடைய தந்தை இந்துஸ்தான் பேரரசர், ஜஹங்கீர். எங்கள் ராணி மாதா ஆக்ராவில், அவர் பெயரில் அமைந்துள்ள தாஜ்மஹால் பளிங்குக் கல்லறையின் அமைதியில் உறங்குகிறார். அவர் தன் பதினாலு வருடக் குடும்ப வாழ்வில் பதினாலு பிள்ளை களைப் பெற்றவர். அதில் ஏழு பிள்ளைகளை அல்லா தன் சொர்க்கத்திற்குத் திரும்ப அழைத்துக்கொண்டார். சிறிது காலம் இவ்வுலகில் நடமாட விட்ட மீதமிருந்த எழுவரில் மூத்தவன் டாரா ஷிக்கோஹ். அவனைத் தொடர்ந்து ஷுஜாவும், ப்பேகமும் உள்ள னர். புழுதியின் பிராணியான இவன்தான் உயிர்தப்பியவர்களில் ஐந்தாவதும், எங்கள் பெற்றோருக்கு மூன்றாவது மகனுமாவான். எங்களுக்குப் பிறகு வந்தவன் முறாட். கொஹார் ஆரா பிறந்த அதேநாளில் தான் எங்கள் மதிப்பிற்குரிய தாய் இவ்வுலகிலிருந்து விடைபெற்றாள். அது 1631, யூன் 7ஆந் திகதி.

மனிதர்களின் ஞாபகசக்தி ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் தன் ஞாபகச் சேகரிப்பை ஆரம்பிப்பதால், நாங்கள் எங்கள் குழந்தைப் பருவத்தைப் பற்றி அரிதாகத் தான் நினைவில் வைத்துள்ளோம். எமது பாட்டன், பேரரசன் ஜஹங்கீர், எமது தகப்பனுடன், ஏதோ காரணத்துக்காக மனஸ்தாபம் கொண்டு எம் மூத்த சகோதரன் டாரா ஷிகோஹ்வையும் எங்களையும் லாகூரில் தன்னுடன் வாழ்வதற்குப் பிணையாக வைத்து விட்டதாக எமக்குப் பின்னர் சொல்லப்பட்டது. அப்போது எமக்கு வயது எட்டு.

எங்களின் ஆசிரியர்களாக, அறிவும் கடவுட்பற்றும் உள்ளவர் களைப் பேரரசன் நியமித்தார். மீர் முகமட் ஹஷீம் கிலானியும், அயிற்மட் கானும் எங்களுக்கு அல்லாவின் புனித வார்த்தைகளை யும் இறைதூதரின் மரபுகளையும் கற்பித்தார்கள். அத்துடன் எங்களுக்கு பாரசீகம், துருக்கி, ஹிந்தி மொழிகளும், சித்திரக் கையெழுத்துக் கலையும் கற்பிக்கப்பட்டன. கற்கத் தகுதியானவை என்று கருதியவற்றை நாம் கற்பதில் திருப்தியும் அடைந்தோம். உண்மையில் இறைவனின் வார்த்தைகளையும், அவரால் தெரிவு செய்யப்பட்ட தூதரின் முன்னிகழ்வுகளையும் விட, வேறென்ன கற்பதற்கு இருக்கிறது! இருப்பினும் டாரா ஷிக்கோ புறச்சமயிகளின் நூல்களை வாசிப்பதையும் மாற்றுக் கருத்தாளர்களுடன் உரையாடு வதையும் அதிகம் விரும்பினான். பிரார்த்தனை செய்வதையும் றம்ழான் காலத்தில் நோன்பிருப்பதையும் விட்டுவிட்டான். தேவ நாகரி வரிவடிவில் பிரபு என்ற சொல் எழுதிய மோதிரத்தைத் தன் விரல்களில் ஒன்றில் அணிந்திருந்தான். உயிருடனுள்ளவற்றின்

பிம்பங்களைக் கடதாசியில் கீறுபவர்களுக்கும், கல்லில் செதுக்குபவர்களுக்கும், பாடகர்களுக்கும், குழல் வாசிப்பவர்களுக்கும், நாட்டியக்காரருக்கும், அவர்களைப் போன்றவர்களுக்கும் புரவலனாக இருந்தான். கடவுள் அவனுக்களித்த அறிவுக்கொடையை அவன் மேலும் பெரிதாக்கினான். அவன் மனப்பாங்கில் செருக்கும், பேச்சில் சொற்பகட்டும், *ஓமாறாவைப்* பொறுத்தவரை தன்முனைப்பும் இருந்தன. அப்படியானதைத்தான் சரியாகச் சொல்லியிருக்கிறார்கள்: "ஒரு மனிதனின் தலைவிதிப் போர்வை கறுப்பாகப் பின்னப்பட்டிருந்தால் ஷாம் – ஷாமினதும், கொசார் ஆற்றின் தண்ணீரும் கூட அதை வெள்ளையாகக் கழுவ முடியாது."

குடும்பங்களில் அடிக்கடி நிகழ்வதுபோல சில குடும்ப அங்கத்தினர் மற்றவர்களிலும் பார்க்கச் சிலருடன் நெருக்கமாக இருப்பர். எங்கள் தந்தையாருக்குப் பிடித்த பிள்ளைகள் மூத்த இருவரான ஜகனாரா ப்பேகமும், டாரா ஷிகோஹ்வும் தான். அதனால் அவர்கள் இருவரும் மற்றச் சகோதர, சகோதரிகளிலும் பார்க்க நெருக்கமாக இருந்தனர். நாம் அனைவரிலும் சமமாகவே அன்பை வைத்திருந்தபோதும் றொஷனாரா மற்றச் சகோதரர்களிலும் பார்க்க எம்முடைய தோழமையையே நாடினாள். அதைப் போலவே இளையவளான கௌஹரா, முராட்டுடன் தன்னை இணைத்துக் கொண்டாள்.

எம் தந்தை, ஷாஜஹான் 1627 இல் ஹிந்துஸ்தானுக்குப் பேரரசனாக வந்தபோது தன் நான்கு ஆண்பிள்ளைகளைப் பற்றிப் பின்வரும் வார்த்தைகளில் சொன்னார்: "டாரா ஷிக்கோ நல்ல மனிதர்களை எதிரிகளாக்கிக்கொண்டான். முராட் மதுவருந்துவதில் தன் மனதைக் கொடுத்துவிட்டான். ஷுஜாவுக்குப் போதுமென்ற மனதைத் தவிர வேறு நல்ல பண்பில்லை. உறுதியும் விவேகமும் உள்ள ஔரங்கஷீப் மட்டுமே இந்தியாவை ஆளும் பாரத்தைத் தாங்கக்கூடியவன் என்று நிருபித்துள்ளவன். ஆனால் அவன் உடல்ரீதியாகப் பலவீனமானவன்."

மனது மட்டுமல்ல; எம் கைகளும் உறுதியானவை என்று உலகத்துக்கு நிரூபிக்க எமக்குப் பதினைந்து கோடைகளே எடுத்தன. ஒருநாள் அதிகாலையில் அரச பள்ளிவாசல் தூபிகளில் மட்டுமே சூரியன் தன் பிரசன்னத்தை அறிவித்த நேரம் ஒரு பெருந்திரளான மக்கள் கூட்டம், ஆற்றின் கரையோரம் இரு யானைகளின் சண்டையைப் பார்ப்பதற்காகக் கூடி நின்றது. சுதாகர் என்ற யானை, ஈட்டிபோன்ற தந்தம் கொண்டது. சுரத் சுந்தரின் தந்தம் நீக்கப்பட்டிருந்த போதிலும், அது எதிரியினைப் போலவே மிகப் பெரியது. அந்த மிருகங்கள் இரண்டுக்கும் போதை வஸ்து ஊட்டப்பட்டிருந்தது. சிலநேரம் பொருதிய பின் சுதாகர், பாகன் கோலால் துன்புறுத்தப்பட்டும் பார்வையாளர்களின் கூச்சல்களால் கோபாவேசம் கொண்டும், சடுதியாகத் திரும்பி, கூட்டத்தைத் தாக்க வெளிக்கிட்

டது. தன் உறுதியான கால்களால் பலரைப் போட்டு மிதித்தது. எம்மைத் தவிர மற்றவர்கள் அனைவரும் திகிலாலும் பீதியாலும் ஓடி விட்டனர். எம்மைத் தனியக் கண்டவுடன் அது எம்மை நோக்கித் தாக்க ஓடி வந்தது. நாம் குதிரையை ஓடாமல் பிடித்திருந் தோம். பைத்தியமாகிய யானை எம்மைத் தாக்கியபோது அதன் முன்தலையில் நாம் ஈட்டியால் மிகப் பலமாகத் தாக்கியதால் அதைத் தாங்க முடியாது பொறிகலங்கி அது அவ்விடத்திலேயே நிற்க வேண்டி வந்தது. இருப்பினும் அது தன் உடம்பால் எம் குதிரையை அடித்து எம்மைக் கீழே தள்ளியது. நாம் எழுந்து, வாளை எடுத்து அதன் உடம்பை வெட்டினோம். அந்தவேளை ஷுஜாவும் மற்றவர்களும் குதிரையில் ஓடி வந்து யானையைத் தாக்கினர். அடுத்த யானையும் இந்த அமளியில் கலந்தது. சுதாகரை அவ்விடத்தை விட்டு கலைத்தது. மேன்மை தங்கிய பேரரசர் எம்முடைய மடத்துணிச்சலைக் கண்டித்தார். நாம் பதிலளித்தோம்: "மரணம் பேரரசர்களையும் தாக்குகிறது. அது ஓர் இழிவல்ல. ஆனால் எம் சகோதரன் செய்தது வெட்கக்கேடானது." சுஜா தன்னால் இயன்றளவு செய்தபடியால் டாரா ஷிக்கோவை நோக்கித் தான் அவ்வார்த்தைகள் வீசப்பட்டன என்பது வெளிப்படை. ஏனெனில் அவன் மிகவும் கோழைத்தனமாக நடந்திருந்தான். மேன்மை தங்கிய பேரரசர் நாம் சொல்லியது கேட்காத மாதிரி இருந்தார். எமது எடைக்குச் சமமான தங்கத்தை நிறுத்து எமக்கு வழங்கினார். அத்துடன் பஹதூர் (துணிந்தவன்) என்ற பட்டத்தை யும் அளித்தார். சில மாதங்களின் பின்னர் டெக்கானின் ஆளுநராக வும் நியமித்தார். டாரா ஷிக்கோஹ்மின் மனம் பொறாமையால் கனத்தது.

பதினேழு வயதில் எமக்கும் டில்றாஸ் ப்பானோ ப்பேகமுக்கும் திருமணமானது. அடுத்த வருடம், அப்பொழுது அவனுக்குப் பதினான்கு வயதுதான், முறாடு என் மனைவியின் இளைய சகோதரியைத் திருமணம் செய்தான். எம் சகோதரனாக இருப்ப தோடு மட்டுமல்லாமல் அவன் எம் மனைவிக்கு மைத்துனனுமாகி விட்டான். நாம் இளமையின் உதயத்தில் இருந்தபோதும், இளமைக்குப் பல நிர்ப்பந்தங்கள் இருந்தபோதும், நாம் திருமணப் படுக்கையில் அதிக நேரத்தைச் செலவிடவில்லை. அந்தப்புரப் பெண்களுடன் இன்பக் கேளிக்கையில் ஈடுபடுவதிலும் பார்க்க, படைத் தோழர்கள் நடுவே இராணுவ முகாம்களில் வாழ்வதே, எமக்குப் பிடித்த செயலாயிற்று. எமது ஆசிரியர், ஆளுபவர் சதா நகர்ந்துகொண்டே இருக்கவேண்டுமென்று எங்கள் மனதில் பதிய வைத்திருந்தார். ஓரிடத்தில் இருப்பது ஓய்வாக இருக்கிற மனதைக் கெடுத்துவிடும். அது ஓராயிரம் இடுக்கண்களைக் கொண்டு வந்து விடும். ஓரிடத்தில் தேங்கி நிற்கும் தண்ணீர் கெட்டுவிடுவது போல அரசர்களும் ஓரிடத்தில் இருப்பது கூடாது என்பதை நாம் ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டோம். தேங்கி நிற்கும்

அரசனின் அதிகாரங்களும் அவன் கைகளை விட்டு நழுவிவிடும். ஹிந்துஸ்தானின் மற்ற அரசர்களைப் போலவும், அக்காலத்தைய பிரபுக்களைப் போலவும் அல்லாது, ஐந்து பெண்களுக்கு மேல் எம் சுகத்தை அனுபவிக்கவில்லை. எம் விதையிலிருந்து பத்துப் பிள்ளைகளை இவர்கள் பெற்றார்கள். இவர்களில் ஒரு பெண்ணைத் தான் நாம் உண்மையாக மனதார நேசித்தோம். ஆனால் அவள் இவ்வுலகில் வாழ்ந்தது சிறிது காலம்தான். அவள் எந்தக் கனிகளை யும் பெறவும் இல்லை.

அப்போது எமக்கு வயது முப்பத்தைந்து. கோடை காலத்துத் தகிக்கும் உஷ்ணம், கரும் முகில்கள், இதமான இளங்காற்று, மழையுள்ள பருவம் ஆகியவற்றிற்கு இடம் விட்டு விலகி விட்டது. ப்புர்ஷன்பூரில் உள்ள எங்கள் சித்தியிடம் சென்றோம். அங்கு தப்தி ஆற்றின் கரையோரம் உள்ள அவளின் மான் பூங்காவில் உலவி னோம். அப்போது ஊஞ்சலிலிருந்து இளம் பெண்கள் சிரிப்பது கேட்டது. அவர்கள் தலையில் முக்காடு போட்டிருக்காததால் அவர் களைக் கூச்சப்படுத்தாதிருப்பதற்காக நாம் நின்ற இடத்திலேயே நின்றோம். இளம் பெண்கள் குழுவாக இணைந்து பாடினார்கள். அவர்கள் பாடலின் சில வார்த்தைகள் எமக்குப் புரிந்தன. ஒரு இளம் மனைவி தன் கணவனை நினைத்து ஏங்கிப் பாடிய பாடல் அது. அவர்கள் ராக மேக மல்ஹாரில் பாடினார்கள். அது அக்காலத்துக்கும் பருவத்துக்கும் பொருத்தமானது. ஒரு குரல் மற்றக் குரல்களிலும் பார்க்க உயர்ந்து ஒலித்தது. செவிக்கு இன்பந்த ரும் அது, காலைச் சூரியனினால் பளபளக்கும் பனித்துளிகள் போல, பசுமையான செடிகொடிகள் மேலாகத் தெளிவாகப் பரவுவது போன்றிருந்தது. எங்கள் கால்கள் அக்குரலை நாடிச் சென்றன. அப்பெண்கள் எம் முன்னிலையில் நிற்காமல் ஓடிவிட்ட னர். ஆனால் ஒரு குரல் தங்கி நின்றது. அதுவரை எம் காதுகள் மட்டுந்தான் மயங்கி இருந்தன. நாம் பார்த்தது எமது கண்களையும் மயக்கின. ஓர் இளம் பெண் மென்மையான பட்டில் வெண்மை யான ஆடை உடுத்திருந்தாள். பளபளப்பான கருத்த தலைமுடி இடுப்புவரை தொங்கியது. அவளுடைய கைகள் மாங்கனிகள் நிறைந்த கொப்பைப் பிடித்திருந்தது. அதனால் உள்ளாடை வெளியே தள்ளிக்கொண்டு இருந்தது. அவள் ஆடியபடி தொடர்ந்து பாடி னாள். தன் பெரிய மான்விழிக் கண்களால் எம்மை உற்றுப் பார்த்துக்கொண்டு தன்னிகரற்ற மாயத்தோற்றமாகி ஒரு சில அடி தூரத்தில் நின்றாள். நாம் நிலத்தில் வேருன்றி நின்றோம். அப்பெண் மேலே பாய்ந்து மாங்கனியொன்றைப் பிடுங்கி எம் பக்கம் எறிந்தாள். அது எம் இருதயத்தில் விழுந்தது. நாம் மின்ன லால் தாக்கப்பட்டதுபோல் உணர்ந்தோம். அதன் பின் திரும்பி அரண்மனைக்குள் ஓடிவிட்டாள். “அல்லாவைப் போற்றுவோம்.” நாம் வியந்தோம். “அது மானிடப் பிறவியா அல்லது சொர்க்க அணங்கா!” எங்களுடன் வந்துசேர்ந்த ஒருவன் பதிலளித்தான்:

“பிரபுவே! நான் பிழையாக இருந்தால் அல்லா மன்னிப்பாராக. அவள் உங்கள் சித்தியின் அடிமையான ஹீராபாய் தவிர வேறெவரு மில்லை. அவள் பெண்களில் மிக்க அழகுள்ளவள் என்பதும் பாடகர்களிலே வானம்பாடி என்பதும் டெக்கானில் புகழ் பெற்ற ஒரு விசயம்.” நாம் பழைய நிலைக்கு வருவதற்கு தாமதிக்க வேண்டி இருந்தது. ஆனால் நாங்கள் எங்கள் சித்திக்கு மரியாதை செலுத்தியபோது, எம் துர்ப்பாக்கியத்தை எம் முகத்திலும், அவளு டன் பேசியபோது எமது வார்த்தைகள் தடுமாறியதிலிருந்தும், கண்டு கொண்டாள். எம் மனது விரும்பியதைத் தருவதற்கு உதவும்படி அவளிடம் இரந்தோம். “எம் அந்தப்புரத்திலிருக்கும் அத்தனை பெண்களையும் எடுத்துக் கொண்டு ஹீராபாயை எமக்குத் தாருங் கள்” நாம் அவளைக் கெஞ்சினோம். அவள் எங்களுக்காக தன்னு டைய உயிரைக்கூட அர்ப்பணிப்பாள். ஆனால் அவளுடைய கணவன் என்ன செய்வான் என்பதற்குத் தான் பயமாக இருக்கிறது என்றாள். எமது நண்பன் அவளுடைய கணவனைக் கொல்வதற்கு முன்வந்தான். ஆனால், ஷாரியத் சட்டத்திற்கு மாறாக அப்படிச் செய்யக் கூடாது என்பதற்காக அவனை நாம் தடுத்துவிட்டோம். இறுதியில் எமது வேண்டுகோளுக்கு இணங்கி, எம் அடிமையாகிய சற்றர்ப்பாய்க்குப் பதிலாக ஹீராபாயைத் தருவதற்கு இணங்கினான்.

இப்படித்தான் ஹீராபாய் பல்லக்கில் வைத்து என் அந்தப்புரத் துக்குத் தூக்கி வரப்பட்டாள். பல மாதங்களுக்கு அவளைத் தவிர வேறெவரையும் நாம் சிந்திக்கவில்லை. அத்துடன் அவளைத் தவிர எவரையும் தோழியாக வைத்திருக்கவும் விரும்பவில்லை. அவளுடைய கையிலிருந்து நாம் ஒரு கோப்பை மதுக் குடித்தோம். இதுவரை மதுக் குடிப்பது ஒரு அருவருப்பான செயல் என்று ஒதுக்கி இருந்தோம். அந்த மது கொல்லும் விஷமாக இருந்தாலும், அவள் தந்திருந்தால் சந்தோசமாக அருந்தி இருப்போம். அதை அவளே எம்மைக் குடிக்கவிடாமல் தடுத்திருந்தாள். எம் மோகம் பற்றிய கதைகள் டாராவுக்கு கதைகாவிகளால் சொல்லப்பட்டன. அவன் எம் தந்தையின் காதுகளை எங்களுக்கெதிராக நச்சுப்படுத்தி இருந்தான். அவன் இப்படித்தான் சொல்லியிருப்பதாக கேள்வி: “பாருங்கள் அந்தப் போலிப் போக்கிரியை. அவனுடைய கடவுட் பற்றையும் மதுவிலக்கையும்! சித்தியின் வீட்டு வேசிக்காக, அவன் நாயாகப் போய்விட்டான்.”

நாம் கடமையிலிருந்து தவறிப் போகிறோம் என்று அளவில்லா ஞானத்தால் அறிந்த அல்லா, அவளை எம்மிடமிருந்து பறித்துக் கொண்டார். அவளை ஔரங்கபாத்தில் கண்ணீர் நிறைந்த குளத்தரு கில் அடக்கம் செய்தோம்.

எம் தந்தை வதந்திகளையும், நிமித்திகர் சொல்வதையும் நம்பி னார். ஒருமுறை மோசக்காரன் ஒருவன் சாமியாரைப் போல நடித்து மேன்மை தங்கியவருக்கு இரண்டு அப்பிள் பழங்களைக்

கொடுத்து, அவற்றின் மணம் அவர் கையில் இருக்கும்வரை, அவரைத் தாக்கும் எந்த நோயும், மரணத்தைக் கொண்டு வராது என்றான். எந்த மகன் அவரின் வம்சத்தை அழிப்பான் என்று கேட்டபோது ஔரங்கஷீப் என்று அந்தப் போக்கிரி சொன்னா னாம். பலமுறை எம் தந்தையின் கைகளை நாம் முத்தமிட்டிருக் கிறோம். அப்போது நாம் அம்மணத்தை கண்டுபிடிக்கவில்லை. அரசதானியை நாம் அழிக்கவில்லை. மாறாக, அதன் எல்லைகளை எங்கள் மூதாதையருக்குத் தெரியாத இடங்களுக்கெல்லாம் விஸ்தரித் தரிக்கிறோம். இருந்தும் எம் தந்தையின் மனத்தை எமக்கெதிராக நஞ்சூட்டி விட்டனர். எங்கள் மேனி நிறத்தையும், குணத்தையும் கிண்டலடிக்க, எம்மை "ஒரு வெள்ளைப் பாம்பு" என்று அவர் விவரித்ததாகவும் எமக்குச் சொல்லப் பட்டது.

எம் சந்தேகத்தை ஒரு விசயம் ஊர்ஜிதப்படுத்தியது. ஒரு மாலை எம் அக்கா ஜகனாரா ஒரு மெழுகுவர்த்தியைத் தன்னறைக்குக் கொண்டு போகும்போது, தடுக்குப்பட்டு அவளின் மஸ்லின் புடவையில் தீப்பிடித்தது. அவள் கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளானாள். அவளுடைய இரண்டு தாதிகள் நெருப்பை அணைப் பதற்காக அவளைக் கட்டிப்பிடித்தபோது அவர்கள் இருவரும் தீயில் கருகி இறந்தனர். இந்தச் செய்தியை எங்களுக்கு அனுப்ப டாரா ஷிக்கோ பிந்திவிட்டான். அதன் விளைவாக ஒரு மாதத்தின் பின்னரே நாம் ஆக்ராவை அடைய முடிந்தது. எம் மேன்மை தங்கியவர் எம்முடன் மனம் புண்பட்டு எம்மை ஆளுநர் பதவியி லிருந்து நீக்கிவிட்டார். எம் விளக்கங்கள் அனைத்தும் அலட்சியப் படுத்தப் பட்டன. இறுதியாக, மனவேதனையில் நாம் எழுதினோம்: *"எங்கள் மேன்மை தங்கியவரின் சேவகர்களில் நான் மட்டும் என் வாழ்வை அவமானத்துடன் கழிக்க வேண்டுமென்றும் இறுதியில் தகுதியற்ற முறையில் இறக்க வேண்டும் என்றும் விரும்பினால், அதற்குப் பணிவது அல்லாமல் எனக்கு வேறு வழியில்லை. பத்து வருடங்களுக்கு முன் இந்த உண்மையை உணர்ந்துகொண்டேன். என் வாழ்க்கை குறிவைக்கப்பட்டதொன்று என எனக்குத் தெரியும்."*

அந்த வருடப் பின்பகுதியில் டாரா ஷிக்கோ, ஜமுனா ஆற்றுப் பக்கமுள்ள தன் அரண்மனைக்கு எம்மை அழைத்தான். பலமுறை அவனால் நாம் அவமானப்படுத்தப்பட்டதால் அவனிடமிருந்து நாம் தூர விலகி வாசலில் நிற்கவே விரும்பினோம். அதனால் எம் உயர்ந்த அந்தஸ்தை வைத்திருக்கத் தவறிவிட்டோம் என்று பேரரசிடம் கூறி எம்மைக் கண்டிக்கச் செய்தான். இப்படி ஏழு மாதத்திற்கு அரசவைக்குப் போவதிலிருந்து தடுக்கப்பட்டோம்.

இது அப்படிப்பட்ட பல நிகழ்வுகளில் ஒன்று. நாம் பேரரசனின் விதையிலிருந்து வந்தவர்கள் அல்ல என்பதைப்போன்று ஒதுக்கப் பட்டோம். எம் சகோதரர்களுக்கும், அவர்களின் மகன்களுக்கும், அவர்களின் பிறந்தநாள்களில் அவர் தங்கமும் நகைகளும் அனுப்பி

னார். எமக்கோ எம்முடைய பிள்ளைகளுக்கோ அவர் அனுப்பிய தில்லை. எம் விசுவாசமான சேவகர்களின் பதவி உயர்வுகளுக்கு நாம் பரிந்துரை செய்தால் அவை நிராகரிக்கப்பட்டன. எமக்குக் கிடைக்கும் கொல்கண்டாவின் செல்வத்தை நாம் அபகரிக்கிறோம் என்றும், பேரரசனின் மேசைக்குப் போகவேண்டிய மாம்பழங்களை நாம் உண்கிறோம் என்றும்கூட எம்மில் குற்றம்சாட்டப்பட்டது. டாராவைத் தான் ஹிந்துஸ்தானின் எதிர்கால அரசனாகப் பேரரச னாக இனங்கண்டுள்ளார் என்று, நாம் ஒருமுறை டெல்லிக்குப் போனபோது எமக்கு அறிவிக்கப்பட்டது. பேரரசனால் அளிக்கப் பட்ட சிறப்பு அங்கி அணிந்து மயில் சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் போடப்பட்ட தங்கக் கதிரையில் *தர்பாரில்* வீற்றிருந்தான். டாரா உண்மையைப் பேசுகிறான் என்றால் – அப்படிச் செய்வது அருமை – மேன்மை தங்கியவர் அவனிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார் போன்று இருந்தது: “என் மகனே, முதலில் உனக்குத் தெரியாமல் அல்லது உன்னை ஆலோசியாமல் நான் இனிமேல் முக்கியமான விச யங்கள் ஒன்றும் செய்ய மாட்டேன் அல்லது எந்தப் பெரிய விசயங் களையும் முடிவு செய்யமாட்டேன் என்று தீர்மானித்துவிட்டேன் … உன்னைப்போல் ஒரு மகனைப் பெற்றிருப்பதற்கு அல்லாவுக்கு நான் முழுமையாக நன்றி செலுத்த இயலாதவனாக இருக்கிறேன்.”

நாம் முதலில் சொன்ன மாதிரி – இன்னும் நூறுதரம் அப்படிச் சொல்வேன் – எங்களுக்கு அதிகாரத்திலோ அரசிலோ விருப்ப மில்லை. ஆனால் எம் ஆசிரியர் அடிக்கடி சொல்வது போல அல்லா தன் ஞானத்தால், அரச வம்சத்தில் எம்மை பிறக்கச் செய்திருப்ப தால் நாம் மனிதகுலத்துக்கு சேவை செய்வது எம் கடமை. அத்துடன் உண்மையான கடவுட்பற்றுக்கு மனிதம் சாட்சியமாக இருக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாத்தைப் பரப்புவதும் எம் கடமை. கிளானி சாகிப் சொல்வார், ஹிந்துஸ்தான் ஒரு றொட்டித் துண்டு மாதிரி. கொடைகளை அருளுபவர், எங்கள் மூதாதையரான தைமூர், பாபர், ஹுமாயன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோருக்குக் கொடுத்திருக்கிறார். அவர் எங்கள் மனத்தில் பதித்திருப்பதுபோல, தாராளகுணமுள்ளவராக அல்லா இருந்தபோதும், அவரின் தயவைப் பெற்றுக்கொள்பவர்களின் கடமை இஸ்லாத்தின் ஆட்சி எல்லைகளை விஸ்தரிப்பதே. “வாழ்க் கையை முழுநிறைவாக ஆக்குங்கள். ஆனால் வாழ்க்கை நிலையற்றது என்பதையும், அல்லாவின் பெயர் மட்டும் தான் நிலையானது என்பதையும் நினைவில் வைத்திருங்கள்."

> தோட்டத்தில் இருக்கும்போது ஒவ்வொரு கணத்தையும் அனுபவியுங்கள்.
>
> ஒவ்வொரு தினத்தின் ஒவ்வொரு கணத்தையும். இளவேனில் கோடையாகவும், கோடை இலையுதிர் காலமாகவும் மாறும்.
>
> ஹென்னாவின் மலர்களும் வாடி உதிர்ந்துவிடும்.

டாரா ஷிக்கோ டெல்லியிலும் ஆக்ராவிலும் அவன் தந்தையின் முன்னாடையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கையில், நாம் டெக்கானைப் பரிபாலித்துக்கொண்டும், ப்பாக், ப்பாடாக்ஷான், கந்தஹார், முல்தான் ஆகிய இடங்களில் அமைதியையும் ஒழுங்கை யும் நிலைநாட்டிக் கொண்டும் இருந்தோம். தவறான வழியில் சென்ற பாரசீகர்களுடன் சண்டையிட்டோம். ஒரு யுத்தகளத்தி லிருந்து இன்னொரு யுத்தக்களத்திற்குத் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தோம். எம் வாழ்வொழுங்கின் மாறாத ஒரேயொரு பகுதி எமது இறைபக்தி. நாங்கள் எங்கிருந்தாலும், எவ்வளவுதான் முக்கியமானதாக யுத்தம் இருந்தாலும், தொழுகை நேரம் வந்தவுடன் எம் ஆயுதங்களைப் போட்டுவிட்டு முகங்களை மெக்காவை நோக்கித் திருப்பி இறை வணக்கம் செய்வோம்.

எம் தந்தை பேரரசர் ஷாஜஹான் உயிருடன் இருக்கும்போதே நாம் எப்படி ஹிந்துஸ்தானின் இறைமையை அடைந்தோம் என் பதைத் தவறாக வழிசென்ற வரலாற்றாசிரியர்கள் பலவற்றைப் பிழையாக எழுதியுள்ளார்கள். நாம் சுயலாபம் கருதிச் சூழ்ச்சிசெய் தவர்கள், சதிகாரர்கள் என்று எம்மைப் பழிச்சொல்லுக்கு ஆளாக்கி இருக்கிறார்கள். "இறைவன் தான் மிகப்பெரிய சதிகாரன்" என்று பரிசுத்த நூல் சொல்லியிருப்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அவருடைய திட்டங்களில் நாம் கருவி அன்றி வேறில்லை.

நட்சத்திரங்களும் புனிதர்களும் இனிவரப்போகிறதைச் சொல்லி இருக்கிறார்கள்.

எதிர்காலத்தைச் சொல்லுக்கூடிய ஒரு புனிதரிடம் ஒருமுறை எம் தந்தை, தன் மகன்கள் நால்வரில் யார் மயிலாசனத்தில் இருக்கப் போகிறார்கள் என்று கேட்டதை எம் தந்தையின் அரசவை யிலுள்ள எம் ஒற்றர் எமக்குச் சொன்னார். அதற்கு அந்தப் புனிதர் மகன்களின் பெயர்களைக் கேட்டாராம்.

"டாரா ஷிகோஹ் என் மூத்தவன்" என்றார் பேரரசன்.

"அவன் தலைவிதியும் அவனுடைய பெயரைப் போன்றவனான டாரியஸ் அலெக்சான்டரிடம் வீழ்ச்சியடைந்ததைப் போன்றதே."

"ஷுஜா என் இரண்டாவது."

"அவன் பெயரின் பொருள் 'பயமற்றவன்' என்றிருந்தாலும் அவன் பயமற்றவன் அல்லன்."

"முறாட் என் இளையவன்." (மேன்மை தங்கியவர், தன் வழக்கப் படி, அடிக்கடி எங்கள் இருப்பை மறந்துபோய் விடுவார்.)

"அவன் பெயரின் பொருள் பேரவா என்றிருந்தாலும், அவன் அதை அடையமாட்டான்."

"பிறகு ஔரங்கஷீப் இருக்கிறான்."

“அவன் பெயர்தான் சரியாக இருக்கிறது. அவன் மட்டுந்தான் சிம்மாசனத்துக்குப் பொருத்தமானவன். ஞானமும் செல்வமும் ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய உறவுள்ளவை. ஞானமற்றவன் செல்வத் தையும் பெறமாட்டான்.”

1657 செப்ரெம்பர் 6 ந்திகதி எங்கள் மேன்மை தங்கியவர் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்ற செய்தி எமக்குக் கிடைத்தபோது நாம் ப்புர்ஹான்பூரில் இருந்தோம். ஷஹ்ஜஹானபாத்திலுள்ள எம் ஒற்றன் சங்கேத மொழியில் இந்தச் செய்தியை எமக்கு அறிவித் தான். மேன்மை தங்கியவர் பலநாட்களாக மலமோ சலமோ கழிக்க முடியாதுள்ளார். அவரைக் கவனிக்கும் வைத்தியர்கள் இந்துஸ்தானை அவரால் நெடுநாள் ஆளுவது இயலாது என்று கவலைப்பட்டுள்ளனர் என்று செய்தி சொல்லியது.

மேன்மை தங்கியவரின் நலத்தை எமக்கு அறிவிக்கச் சொல்லி எம் ஒற்றனிடம் அறிவித்திருந்தோம். அத்துடன் எம் சகோதரர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அரசவைகளிலிருந்த எம் ஒற்றர் களிடமும், எமக்கு அறிவிக்கும்படியும் உத்தரவிட்டோம். மேன்மை தங்கியவருக்கு நாம் எழுதிய கடிதத்தில் அவர் விரைவில் குண மடைய நாம் பிரார்த்திக்கின்றோம் என்றும் அவரை வந்து பார்ப்பதற்கு அவரிடம் உத்தரவு கேட்டும் எழுதியிருந்தோம்.

மேன்மை தங்கியவர் எமக்கனுப்பிய சுருக்கமான குறிப்பில் வதந்தி பரப்புவோர் தன் சின்ன வயிற்றுக் கோளாறைப் பெரிதாக்கி விட்டார்கள் என்றும் அவர் பூரண சுகத்துடன் இருப்பதாகவும், ஆக்ராவுக்குப் போவதாகவும் எழுதியிருந்தார். அதேவேளை, அரச *ஹக்கீமு*க்கு ஒரு கைநிறைந்த *மொஹுர்*களைக் கொடுத்த போது, அல்லா ஏதாவது அற்புதம் செய்யாவிட்டால் மேன்மை தங்கியவர் இந்த வேதனைநிறைந்த உலகில் நடமாடுவது விரைவில் முடிந்துவிடும் என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்ததாக டெல்லி யிலிருந்த எம் ஒற்றர் எமக்கு அறிவித்தார். எங்கள் தந்தையைக் கவனித்துக் கொண்டிருந்த எம் அன்புக்குரிய சகோதரி ரோஷா னாரா எம் சகோதரர்களின் சதிகார வேலைகளைப் பற்றி அவள் அனுப்பிய மறைவான செய்தியில் சாடைக்குறிப்பால் அறிவித்திருந் தாள். அத்துடன் எங்கள் முயற்சியில் வெற்றிகிடைக்கட்டும் என்றும் வாழ்த்தி இருந்தாள்.

தைமூர், பாபர் ஆகியவர்களின் வழித்தோன்றல்களுக்குப் பொருத்தமான முறையில் எம் சகோதரர்கள் ஷுஜாவும், முராட்டும் நடக்கவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தினோம். எம் அறிவுரையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. வங்காளத்தில் இருந்த ஷுஜா முதலில் தன்னை அப்துல் ஃபோஷ் நசுருத்தீன் மொகமட் மூன்றாவது தைமூர், இரண்டாவது அலெக்சாந்தர், ஷா ஷுஜா ப்பகதூர் காஷி என்ற பட்டத்துடன் பேரரசனாகத் தன்னைப் பிரகடனம் செய்தான். சில வாரங்களின் பின்னர்

குஜராத்தில் இருந்த முராட், மறுவ்ஜுடீன் என்ற பட்டத்துடன் ஹிந்துஸ்தானின் அரசன் என்று தன்னைப் பிரகடனம் செய்தான். அத்துடன் தன்னுடன் எம்மையும் இணைந்து ஆக்ராவுக்கு அணி வகுக்க அழைத்தான். தன் கோபத்தை அடக்க முடியாத முராட், தன் மந்திரி அலி நக்வி, டாரா ஷிக்கோவுடன் சேர்ந்து சதிசெய் கிறான் என்ற சந்தேகத்தில் அவனைக் கொன்று தன் கைகளை மாசுபடுத்திக்கொண்டான். ஆக்ராவிலிருந்த எம் ஒற்றன் டாரா ஷிக்கோ தன்னை ஏற்கெனவே செங்கோட்டையின் அதிபனாக்கிக் கொண்டதாகவும் – அங்குதான் மேன்மை தங்கியவர் குணப்பட்டு வருகிறார் – ஹிந்துஸ்தானின் பேரரசனாகத் தான் வருவதற்கு புறச்சமய ராஜபுத்திரர்களுடன் பேரம்பேசுகிறான் என்றும், ஆக்ராவி லிருந்த ஒற்றன் எங்களுக்குச் செய்தி அனுப்பியிருந்தான்.

நாங்கள் இந்த விசயத்தைப் பற்றிப் பல நாட்கள் சிந்தித்தோம். எங்கள் சகோதரர்கள் இப்படிப் பண்பில்லாத மாதிரி நடந்து கொள்வார்கள் என்று எங்களால் நம்ப முடியவில்லை. டாரா ஷிக்கோவின் உரிமைத்தகுதி எங்களை அதிகம் துன்புறுத்தியது. அவன் அரசனாக வந்தால் ஹிந்துஸ்தான் பேரரசு இஸ்லாம் அரசாக இருப்பது நின்றுவிடும். எங்கள் முகல்லாய முன்னோர்கள், ஆப்ஃகானியர்கள், அதற்கு முன்பிருந்த துருக்கிய அரசர்கள் அனைவரின் பணிகளும் பூச்சியமாகிவிடும்.

இன்னொரு விசயம் எம் மனதை அதிகம் தொந்தரவு செய்தது: ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளின் பகைமையால் விளையும் கொடுங் குற்றம். அரசுக்குத் சொந்த பந்தங்கள் இல்லை என்பது எமக்குத் தெரியும். பாசம் என்ற பாலம் அரசனையும் அவன் பிள்ளைகளையும் பிரிக்கும் படுபாதாளத்தை இணைக்க முடியாது. பாசத்தின் பந்தங்கள் அரசனின் பிள்ளைகளிடையே இருப்ப தில்லை. ஒரே தந்தைக்குப் பிறந்திருக்கலாம், ஒரே கருப்பையில் அடுத்தடுத்து கிடந்திருக்கலாம், ஒரே முலையில் பால் குடித்திருக் கலாம், உலகத்தை அவர்கள் அறியும் வயது வந்தவுடன் தங்கள் சகோதரர்களை அழித்துவிட வேண்டும் அல்லது தாங்கள் அழிக்கப் பட்டுவிடுவோம் என்பது அவர்களுக்குப் புரிந்துவிடும்.

முகல்லாயர்கள் உலகில் எந்தவொரு வம்சமும் ஆளாத நிலப் பரப்பை ஆண்டிருக்கிறார்கள் என்பதால் முகல்லாயர்களே உலகில் எந்த அரசர்களைப் பார்க்கிலும் அதிக அரச இரத்தத்தைச் சிந்தியவர்கள். எம் பெரும் மூதாதையரான ஷல்ஹிருத்தீன் ப்பாபர் 1526 இல் ஹிந்துஸ்தான் பேரரசின் அடிக்கல்லை நாட்டினார். அவருடைய இரு மகன்களான, ஹுமாயனும் கம்றானும் ஒருவருக் கெதிராக மற்றவர் வாளெடுத்துச் சண்டை செய்தார்கள். அல்லா ஹுமாயனுக்கு அரசைக் கொடுத்தார். அவன் தன் சகோதரனின் கண்ணைத் தோண்டி, மெக்காவுக்குச் சாவதற்கு அனுப்பினான். ஹுமாயனுக்குப் பின் அக்பர் அரசனாக வந்தபோது ஹுமாயனின்

ஒரே மகனை இல்லாமல் செய்துவிட்டான். அதேபோல பேரரசன் அக்பரின் ஆட்சியையும் அவன் அன்புக்குரிய மகனான சலீம் ஜஹங்கீர் கலகங்கள் செய்து தொந்தரவு செய்துகொண்டே இருந் தான். அவனும் பொறுமையற்ற தன் மகனான குஸ்ராவை மறியலில் வைத்தான். அதேபோன்ற தலைவிதியே எங்கள் தந்தைக்கும் ஏற்பட்டது. அவரும் தன் மக்களை, டாரா ஷிகோஹ்வையும் மற்றவர்களையும் கைது செய்தார். அல்லா எம் தந்தையிடம் ஹிந்துஸ்தான் பேரரசை ஒப்படைத்தபோது, தன் சகோதரர்களான டாவார் ப்பாக்ஷ்சையும் ஷாஹிரியரையும் அவர்களுடைய ஆண் சந்ததியினரையும் இல்லாமலாக்கிவிட வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது. தீர்க்கதரிசி ஜெரெமையா சொல்லியது உண்மையே: "தந்தையர் புளித்த முந்திரிகளை உண்டார்கள். பிள்ளைகளின் பற்கள் பரபரக்கின்றன."

எம் நாலு சகோதரர்களில் ஒருத்தன் மாத்திரம் மயிலாசனத்தில் இருக்கலாம். மற்ற மூன்று பேருக்கும் தூக்குமேடைதான். ஹிந்துக்கள் இதை ஒரு சூத்திரமொன்றில் சுருக்கமாகக் கூறி இருக்கிறார்கள்: தாஜ் யா தக்தா (மணிமுடி அல்லது கொலைக்கம்பம்). அரசு ஒரு வாளுறை போன்றது. அதில் ஒருநேரத்தில் ஒரு வாள் மட்டுந்தான் இருக்கலாம்.

ஹிந்துஸ்தானின் பேரரசனாக வரும் பேரவா டாரா ஷிக்கோவை ஜன்னிபோல் பிடித்துக்கொண்டது. அவனுடைய பேரவாவுக்கு நம்பிக்கை அளித்தவன் பைத்தியக்கார போலி அறிஞன், சர்மட் என்பவன். அவன் டெல்லி வீதிகளில் தன் நிர்வாணத்தை மறைக்க கச்சைகூட இல்லாமல் திரிந்தவன். இந்த சர்மட், இந்தியாவின் அரசனாக டாரா வருவான் என்று பிரகடனம் செய்தான்.

முராட் ஆக்ராவுக்கு அணிவகுத்துப் போவதற்கு எம்மை அழைத்த வேளை நாங்கள் அவனின் வேண்டுகோளுக்கு இசைந்த போதும் எமக்கு அரசுரிமையில் எண்ணமில்லை என்பது எம் மனங்களின் உள்ளார்ந்த இரகசியங்கள் தெரிந்த அல்லாவுக்குத் தெரியும். எம் ஒரே ஒரு நோக்கம் இஸ்லாத்தின் எதிரியான டாரா ஷிக்கோ போன்றவர்களின் கைகளில் பேரரசு விழாமல் காப்பாற்றுவதே.

விரைவில் எமது மோசமான பயங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. புறச்சமயிகளான ராஜ்புத்திரர்கள் டாரா ஷிக்கோவின் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். டாராவின் மகனான சுலைமான் ஷிக்கோ வும், ராஜ்புத்திரான ஜஸ்வந் சிங்கும், பெனாரிஸ் அருகில் ஷுஜா வைத் தோற்கடித்தார்கள். இன்னுமொரு ராஜபுத்திரரான ஜோத்பூர் ஜஸ்வந் சிங்கை, எங்களுக்கும் முராட்டுக்கும் எதிராக அனுப்பி னான். அவனுடைய படையை நாங்கள் ஓட்டிக் கலைத்துவிட்டு எங்கள் இலக்கை நோக்கி விரைவாகச் சென்றோம். டாரா எம்மை ஆக்ராவிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள சமுக்கார் என்ற இடத்தில் சந்தித்தான். இன்னுமொருமுறை எங்கள் வாட்கள்

வெற்றியீட்டின. வெற்றிகளைத் தருபவருக்கு நாம் நன்றியைத் தெரிவித்தோம். முராட் தன் வழக்கப்படி, மந்திரியின் மகளை அரவணைத்துக் கொண்டு வெறியில் பல நாட்கள் கிடந்தான்.

வெற்றியின் வேகத்திலும் எங்கள் பேரரசரான எம் தந்தைக்கு மதிப்புக்குரிய வார்த்தைகளிலே கடிதங்கள் எழுதினோம்: "அதிகாரம் உங்கள் வணக்கத்துக்குரிய கைகளில் இருக்கும்வரை கீழ்ப்படிவே என் உணர்ச்சி. இருந்தும் எல்லைகளை ஒருபோதும் நான் மீற வில்லை. அதற்கு எல்லாம் அறிந்த அல்லாவே சாட்சி. ஆனால் மேன்மை தங்கியவரின் உடல்நலக்குறைவால் இளவரசன் டாரா எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றி, இந்துக்களினதும், உருவ வழிபாடு செய்பவர்களினதும் சமயத்தைப் பரப்ப தலைகீழாக நின்றபோது, இறைதூதுவரின் சமயப்பற்றை அடக்க முற்பட்டபோது, பாழாட்சியும் குழப்பமும் பேரரசு முழுவதும் ஏற்பட்டன. அதன் விளைவாக, நான் ப்புர்ஹன்பூரிலிருந்து வெளிக்கிட்டேன். அப்படி யில்லாவிட்டால் நான் அடுத்த உலகத்தில் இந்த ஒழுக்கவீனங் களுக்கு மாற்றுக் காணாததற்காகப் பொறுப்பாக்கப் படுவேன்."

வெற்றியீட்டிய எம் படைகள் ஆக்ராவை அடைந்தன. டாரா ஓடிவிட்டான். பின்னர் ஜகனாராவும் எம்மைக் கண்டித்து ஒரு குறிப்பு அனுப்பியிருந்தாள்: "உங்கள் படை முன்னேற்றம் உங்கள் தந்தைக்கு எதிரான யுத்த செயல். டாராவுக்கு எதிராக அது இருந்தாலும் அது எந்தப் பாவத்துக்கும் குறைந்ததல்ல. ஏனெனில் அவன்தான் மூத்த சகோதரன். பொதுச் சட்டப்படியும் பொது வழக்கப்படியும் அவன் தந்தையின் இடத்தில் உள்ளவன்." பாம் பாகிய பொய்யை உண்மையாகிய தடியால் அடித்துக் கொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது என்று நாம் உணர்ந்தோம். "டாரா அவனின் இளைய சகோதரர்களை அழிப்பதற்கு அனைத்தையும் செய்கிறான். ஷுஜாவை ஏற்கெனவே எப்படிக் கொன்றான் என்பது சான்று." நாம் பதிலாக எழுதினோம். "அவன் பேரரசனின் காதை எங்களுக்கெதிராக நச்சுப்படுத்திவிட்டான்."

மேன்மை தங்கியவர் வயதாகி நோய்வாய்ப்பட்ட போதிலும், எங்களுக்கெதிராகக் கபடச் செயல்கள் புனைவதைத் தொடர்ந்து கொண்டிருந்தார். அவர் எமக்குப் பரிசுப்பொருட்கள் அனுப்பினார். அதில் புகழ்பெற்ற *அலம்கீர்* வாளும் ஒன்று. அத்துடன் கோட் டையை வந்து பார்க்கவும் எம்மை அழைத்தார். எம் சமயப்பற்றைப் புகழ்ந்தார். அத்துடன் எம்மைப் "புனிதமானவரே" என்றும் அழைத் தார். நாம் அரண்மனைக்குள் காலடி எடுத்து வைத்ததும் அந்தப் புரத்திலுள்ள பெண்களைக் கொண்டு எங்களைக் கொல்ல தயாரிப் புக்கள் நடந்துவருவதாக எம் ஒற்றர்கள் எம்மை எச்சரித்தார்கள். எமக்கெதிராக வைத்த பொறியில் விழ நாம் மறுத்தோம். அத்துடன் கோட்டைக்குப் போகும் தண்ணீர் வாய்க்காலைத் துண்டித்துவிட் டோம். அவருடைய அடுத்த கடிதத்தில் மேன்மை தங்கியவர்

*எம் பரிவிரக்கத்தை வேண்டினார்: "அல்லாவின் விருப்பமில்லாமல் மரத்திலிருந்து ஓர் இலைகூட விழாது என்பதைக் கண்ட நான் ஏன் துரதிஸ்ரத்தைப் பற்றிக் குறைசொல்ல வேண்டும்? நேற்றுத்தான் நான் 900,000 படைக்கு அதிபதியாக இருந்தேன். இன்று ஒரு குடம் தண்ணீர் தேவையாக இருக்கிறேன்! ஹிந்துக்களை நாம் போற்றுவோமாக. அவர்கள் இறந்தவர்களுக்கும் நீர் வார்க்கிறார்கள். ஆனால் என் இறைபற்றுள்ள என் முஸ்லீம் மகன் உயிருடன் இருப்ப வருக்கே தண்ணீர் தருவதை மறுக்கிறான்!" மேன்மை தங்கிய வருக்குத் தண்ணீர் கொடுக்கச் சொல்லி கட்டளை கொடுத்தோம். ஆனால் எம் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும்வரை அவரைப் பார்க்கப் போவதற்கு மறுத்துவிட்டோம். யூன் மாதம் 8ஆந் திகதி 1658 ஆம் ஆண்டு செங்கோட்டைக் கதவுகள் எங்களுக்காகத் திறக்கப்பட்டன. பேரரசனையும் ஜகனாராவையும் அவர்களுடைய பரிவாரங்களுடன் எம் அரண்மனைக்கு வந்து இருக்கும்படி மன்றாடினோம். அத்துடன் எங்கள் நம்பிக்கைக்குரிய அலியாகிய எற்றாபார் கானுக்கு, றோஷானாராவை மட்டும் அவள் நினைத்த நேரம் வந்து போவதற்கு அனுமதிக்கும்படி உத்தரவிட்டிருந்தேன்.*

*பின்னர் டெல்லியை விட்டு ஓடிப்போன டாரா ஷிக்கோவைப் பின்தொடர்ந்துபோய் பிடிப்பதற்குத் தீர்மானித்தோம். ஆனால் முதலில் முராட்டை ஒருகை பார்க்க வேண்டியிருந்தது. அல்லா எங்களுக்கு அளித்த வெற்றிகளின் பின் அவன் தன் மனத்தின் சமநிலையை இழந்துவிட்டான். அவனுடைய கூடாரத்தில் சங்கீதம், நடனம், மது அருந்தல், களியாட்டம் தவிர வேறொன்றும் நடக்க வில்லை. பேரரசின் கடிவாளத்தை முராட்டின் கையில் கொடுத் தால் பேரரசின் தேர் விரைவில் நொறுங்கிவிடும் என்பது எமக்குப் பகல்போலத் தெளிவாயிற்று. முகலாயப் பேரரசுக்கு ஊறு வராமல் மனம் நிறைந்த அளவு குடித்து, வெறியாடும் இடத்துக்கு முராட்டை அனுப்ப நாம் தீர்மானித்தோம்.*

*முராட் குடித்துக்கொண்டிருக்கையில் அல்லா எமக்களித்த வெற்றிகளைத் தாம் வென்றதாக மடத்தனமாகப் பீற்றியது மட்டு மல்லாமல் அவனுடைய குடிகாரத் தோழர்களுக்கு டாராவையும் ஷூஜாவையும் முடித்த பின்னர் எம்மில் தன் கவனத்தைத் திருப்பப் போவதாகச் சொல்லியதாகவும் எமக்கு அறிக்கைகள் கிடைத்தன. அப்படியான இறைப் பற்றில்லாத எண்ணங்கள் எம் காதுகளை, மனங்களை நச்சுப்படுத்துவதை நாம் அனுமதிப்பதில்லை. ஆனால் முராட் வெளிப்படையாகத் தெரிவிக்கின்ற பாசத்தை இனிமேல் நம்பப்போவதில்லை என்றும் நாம் திடமாக முடிவெடுத்தோம். அதன்படி அவன் செயல்களைக் கண்காணித்தோம்.*

*ஹிந்துக்கள் புனிதமானது என்று கருதுகின்ற மதுராவில் நாம் அவனுக்காகக் காத்திருந்தோம். அவன் வந்தபோது அவனை எங்கள் கூடாரத்துக்கு வரவேற்று, எங்கள் கையால் அவனுக்கு*

ஒரு கோப்பை மது கொடுத்தோம். மதுவை இறைப்பற்றுள்ள முஸ்லீம்களாகிய நாம் மனதார வெறுத்தோம். முராட் பல கோப்பைகள் குடித்தான். எம்மிடம் வேலைசெய்யும் அடிமைப் பெண்கள் அவனுடைய மயங்கிக்கிடந்த கைகால்களை உருவிவிட்டு, அவன் ஆயுதங்களைக் களைந்து எடுத்தனர். நாம் சைகை காட்டிய வுடன் அப்பெண்கள் அவன் கைகளிலும் கால்களிலும் தங்க விலங்குகள் மாட்டினர். அவன் உயிருடன் இருக்கும்வரை அவனுக்குத் தாராளமாக அபினும், மதுவும் கொடுக்கச் சொல்லிக் கட்டளையிட்டோம். அதன் பிறகு நாங்கள் அணிவகுத்துச் சென் றோம். டெல்லியை அடைந்து, நகரத்தின் பரிபாலனத்தை நாம் எம் கையில் எடுத்துக் கொண்டோம். முழுத் தேசத்தையுமே வெற்றிகொண்ட படை டாராவை எம் காலடியில் சேர்க்குமுன்பே அவன் ஓடிவிட்டான். எம் தந்தை மிகவும் வயது முதிர்ந்து, நோய் வாய்ப்பட்டுப் போனதாலும், எம் சகோதரர்கள் பொருத்தமற்றவர் கள் என்று தங்களை நிரூபித்ததாலும் பேரரசின் சுமையை, துறவு கொள்வதற்கு எம் மனம் விளைந்தபோதும், அதைக் கட்டாயப் படுத்தி, அரசர்களின் தலை அணியும் முள்முடியைக் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளும்படி நேர்ந்தது. இது நடந்தது (சோதிடர்களை கலந்தாலோசித்த பின்னர்) 1658 யூலை மாதம் 21 ந் திகதி. ஈரான், ப்போகாரா, மெக்கா, எதியோப்பியா போன்ற தேசத்து அரசர் களிடமிருந்து எமக்குப் பாராட்டுக்கள் வந்தன.

டாரா என்ற முள்ளை எடுப்பதற்கு எமக்கு இன்னுமொரு வருடம் சென்றது. எம் படைகள் அவனை பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், போன்றவற்றூடாகப் பின் தொடர்ந்தது. சியாறோய் என்ற இடத்தில் ஏற்பட்ட சிறுசண்டையில் அவனுடன் சென்றவர்கள் சிதறினார்கள். கூதிர்ப் பருவ மென்காற்றில் சருகுகள் பறந்து சிதறிவிடுவன போல. இறுதியில் டாரா ஆஃப்கானிஸ்தானுக்கு ஓடி விடுவதற்கு முயன்றபொழுது கைப்பற்றப்பட்டான். நாம் ஹிந்துஸ்தானின் அரசனாகி ஓராண்டு கொண்டாட்டம் முடிந்து ஒரு சில கிழமைகளின் பின்னர், எமக்கு விசுவாசமுள்ள சேவக னான மாலிக் ஷீவன், டாராவையும், அவன் மகன்களையும், பரிவாரங்களையும் சங்கிலியில் கட்டி டெல்லிக்குக் கொண்டுவந் தான். உலேமாவை நாம் கலந்தாலோசித்தோம். இஸ்லாம் சமயக் கருத்துக்கெதிரானவனுக்குத் தண்டனை, மரணம் என்று புனித சட்டங்கள் சொல்வதாக அவர்கள் ஒரே குரலில் பதிலளித்தார்கள். எம் அன்புக்குரிய சகோதரி, றொஷனாரா, எமக்கு எப்படிச் சகோதரியோ அதேபோல அவனுக்கும் சகோதரி, அதே அபிப்பிரா யத்தையே சொன்னாள். டாரா ஷிக்கோ தன்னை மன்னிக்கும்படி எம்மைக் கெஞ்சினான்.

"என் சகோதரனும் அரசனுமாகிய உமக்கு, என் மரண தண் டனை உம் உயர்ந்த மனதுக்குத் தேவையற்ற வேலை. எனக்கு

ஒரு வீடும், என் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பழைய பரிவாரங் களிலுள்ள ஒரு சேவகப் பெண்ணும் தந்தால், என் மீதி வாழ்க் கையை தனியிடத்தில் இருந்து, உமது நன்மைக்காக பிரார்த் தித்துக்கொண்டு காலம் கழிப்பேன்" என்று எமக்கு எழுதியிருந்தான்.

டாரா ஷிக்கோவுடன் வாத – எதிர்வாதங்களில் நாம் ஈடுபட விரும்பவில்லை. அவனுடைய மன்னிப்பு மனுவின் அடியில் "அதி காரத்தை நீ தகாத வழியில் கைப்பற்றப் பார்த்தாய். அத்துடன் அரச துரோகம்" என்று அரபு மொழியில் எழுதிப் பின்னிணைத்தேன்.

டாரா ஷிக்கோவின் தலைவிதி டெல்லியிலிருந்த தவறாக வழிநடத்தப்பட்ட குடிமக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. அவனுக்கு இரக்கப்பட்டு அவர்கள் அழுதார்கள். டாராவை நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்த எம் விசுவாசியாகிய மாலிக் ஷீவனில் மலம், சலம் கொண்ட பானைகளை எறிந்தார்கள். எம் இதயம் துக்கத்தால் கனத்தபோதும், அரசுக்கு சொந்தபந்தங்கள் இல்லை என்று எம்மைத் திரும்பவும் நினைவுறுத்திக்கொண்டு, மரண ஆணைப் பத்திரத்தில் கையெழுத்திட்டோம். அவனுடைய மகனான சிப்பிர் ஷிக்கோவிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஓகஸ்ற் மாதம் 30ஆந் திகதி 1659 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டான். அவனு டைய துண்டிக்கப்பட்ட தலை எம் பார்வைக்கு செங்கோட்டைக்கு கொண்டுவரப்பட்டது. அடுத்த நாட்காலை அவனுடைய தலையற்ற உடல், எம் கொள்ளுப் பாட்டனாகிய பேரரசன் ஹுமாயனின் கல்லறையின் நிலவறையில் அடக்கஞ்செய்யப்படுமுன் டெல்லி வீதிகளில் பகட்டாரவாரத்துடன் கொண்டு செல்லப்பட்டது. டாராவின் மகனான, சுலைமான் ஷிக்கோவும் அவனைப்போலவே கைது செய்யப்பட்டு, சங்கிலியால் பிணைக்கப்பட்டு டெல்லிக்குக் கொண்டுவரப்பட்டான். 1661, ஜனவரி மாதம், 5 ந்திகதி டிவான் – இ – கவாஸில் அவன் எம் முன்னிலைக்கு அழைத்து வரப்பட்டான். நாம் அவனைப் பல வருடங்கள் பார்க்கவில்லை. அவனுடைய அழகான ஆண் கோலம் எம்மைப் பிரமிக்கச் செய்தது. சர்ப்பத்தின் செட்டை அழகானதாக இருந்தாலும் அதனுள்ளே கொல்லக்கூடிய விஷம் இருக்கின்றது என்பதை நாம் எமக்கு நினைவூட்ட வேண்டி வந்தது. அவனும் அவன் தந்தையும் செய்த மாபெருங் குற்றங்களை அவனுக்கு விளக்கிவிட்டு அவனை குவாலியர் சிறைக்கு அனுப்பும் படி கட்டளையிட்டோம். அங்கு அவன் கொல்லப்பட்டான்.

டாரா ஷிக்கோவுக்கு மணிமுடி கிடைக்கும் என்று தவறாக ஆரூடம் கூறிய பொய்யறிஞன் சர்மட்டை நாம் இன்னும் கவனிக்க வேண்டிய பாக்கி இருந்தது. நிர்வாணமாக ஆண்கள், பெண்கள் மத்தியிலே திரிவது மட்டுமல்லாமல் ஓர் இந்துச் சிறுவனுடன் தொடர்பு வைத்திருந்ததும் பெரும் அவதூறாகியிருந்தது. இஸ்லாம் சமயத்தை அவன் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனின் வெளிப் பாடுகள் இறைதூதரின் மேன்மையைக் குறைப்பதாகவே இருந்தன.

அவனை எம் முன்னிலைக்கு அழைத்து, அவனுடைய ஆரூடங் களைப் பற்றிக் கேள்வி கேட்டோம். "டாராவுக்கு நிரந்தர இறை மையை ஆண்டவன் கொடுத்திருக்கிறார்!" என்று சொல்வதற்கு அந்த வில்லனுக்குத் துணிச்சல் இருந்தது. "அல்லாவைத் தவிர வேறு ஆண்டவன் இல்லை" – என்ற *கலீமாவில்* "முகம்மது நபிகள் மட்டும்தான் அவரின் தூதர்" என்பதை விடுத்து, அரைவாசியை மட்டும் நீ சொல்கிறாயா என்று அவனைக் கேட்டபோது அவன் சொன்னான்:

*முகம்மது நபிகள் ஆகாயத்திற்கு எழுந்தார், என்று*
*முல்லாக்கள் சொன்னார்கள் ஆனால் நான் சொல்கிறேன்,*
*ஆண்டவன் அவரிடம் வந்தார் – மற்றவை பொய்கள்!*

சர்மட் வார்த்தைகளால் வித்தை காட்டினான்: "நான் எதிர்மறை யில் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். அதனால் உடன்பாட்டிற்கு இன்னும் நான் வந்து சேரவில்லை." அவனுடைய நிர்வாணத்தைப் பற்றிக் கேட்டபொழுது, தூதர் ஈசையாவும் நிர்வாணமாகத்தான் சென்றார் என்று பதிலளித்தான். பொதுமக்களின் முழுப் பார்வைக்கும்படும் படி அரச பள்ளிவாசல் படிகளின் முன் அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டோம். அவனுடைய துண்டாடப்பட்ட தலை, உண்மையை ஒப்புக்கொண்டு, முழுக் *கலீமாவையும்* ஒப்பித்ததாக எமக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

எம் தந்தை இருக்கும்வரை ஆக்ராவிலிருந்து தூர இருக்கவே நாம் தீர்மானித்தோம். அரசர்களுக்கென்று தடுப்புச் செய்த இடத்திலிருந்து தொழுது, மற்ற முசல்மான்கள் தொழுவதை குழப்பாமல் டிவான் – இ – கவாஸிற்குப் பக்கத்தில் ஒரு சிறிய பள்ளிவாசலை எமக்காகக் கட்டினோம். அதைக் கட்டி முடிக்க ஐந்து ஆண்டுகள் எடுத்தன. அது மாசுமறுவற்ற முத்துப் போலவே இருந்ததால் அதற்கு மோதி மஸ்ஜிட் என்று பெயர் சூட்டினோம். இந்தப் பள்ளிவாசலில் தொழுகையிலும், செபமாலைக் காய்கள் உருட்டுவதிலும் பல மணிநேரத்தைக் கழித்தோம்.

எம் தந்தையைப் பார்ப்பதை எம் விதித் தகட்டில் எழுதப்பட வில்லை. நாம் மகன் என்ற முறையில் நடக்கத்தகாத முறையிலும், சகோதரன் என்ற முறையில் கொடூரமாக நடந்திருப்பதாகவும் எம்மைக் குற்றஞ்சாட்டி பல மாதங்கள் எமக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். கசப்பான உண்மையை சொல்லுவதற்கு நேரம் வந்துவிட்டது என்று நாம் நினைத்தோம். எம் தந்தை இக்கட்டான நிலையில் இருந்தபோதும், தாடி நரைத்தபோதும், மதுவிலும் மதுபான விருந்துகளிலும், ஈடுபட்டிருப்பதாக எமக்கு அறிக்கைகள் வந்தன. "அரசின் அர்த்தம் ஆட்சியைக் காப்பதும், மக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும் ஆகும். உடல் ஆறு தலையோ, தசை இச்சைகளையோ அனுபவிப்பதல்ல" என்று நாம் அவருக்குப் பதிலளித்தோம். அத்துடன் அவர் சிம்மாசனம்

ஏறியபோது தன் கிளைவழி உரிமையாளர்களை முடித்த விதம் பற்றியும் அவருக்கு நினைவூட்டினோம். அத்துடன் அவர் எம்மைக் குற்றவாளியாக்கிச் சுட்டு விரலை நீட்டுவதும், அல்லாவின் சீற்றத்தைக் காட்டி எம்மை அச்சுறுத்துவதும் அவருக்குத் தகுந்ததல்ல என்றும் நினைவூட்டினோம். இந்தப் பொருளற்ற உரையாடலை முடிப்பதற்காக நாம் எழுதினோம்: "என் இடர் நிறைந்த முயற்சி களை ஆண்டவன் அங்கீகரிக்காவிட்டால், அவன் ஒருத்தனின் கொடையேயான வெற்றிகளை என்னால் எப்படி அடைய முடிந்தது?"

1666 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எம் தகப்பனார் நோய்வாய்ப் பட்டார். அவரின் விருப்பப்படியே அவருடைய படுக்கையிலிருந்து, தாஜ்மஹாலைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடியதாக, எண்கோண வடிவ மல்லிகைக் கோபுரத்தில் அவரை வைத்தோம். 1666 ஆம் ஆண்டு ஜனவரி 22ஆந் திகதி அல்லாவின் பெயர் அவர் இதழ்களில் இருக்க, இவ்வுலகை நீத்துச் சொர்க்கத்திற்குச் சென்றார்.

அரசின் அவசர அலுவல்கள், டெல்லியில் இரண்டு கிழமைகள் எம்மை நிறுத்திவிட்டன. பின்னர், எம்மால் முடிந்தவரை விரைவாக, நாம் ஆக்ராவை நாடிச் சென்று எம் பெற்றோரைக் கிடத்திய புனித பூமியை எம் கண்ணீரால் கழுவினோம்.

எம் தந்தை சொர்க்கத்திற்கு அழைக்கப்பட்டு இரண்டு ஆண்டு களுக்குப் பிறகே நாம் மயிலாசனத்தில் முதன்முதல் ஏறினோம். அல்லாவால் எமக்களிக்கப்பட்ட இறைபணியை முடிக்க வேண்டும் என்று நாம் உணர்ந்தோம். எம் படைத் தலைவர்களான மீர் ஜூம்லா, ஷையிஸ்ராகானையும் மற்றவர்களையும் ஹிந்துஸ்தானின் மூலைமுடுக்கெல்லாம் இஸ்லாத்தின் ஆட்சியைக் கொண்டு செல்லுங்கள் என்று கட்டளை இட்டோம். எம் வெற்றியீட்டிய படைகள் கிழக்கே சாத்காஓன், வடக்கே திபெத் மலைகளுக்கு மேலாகவும், மேற்கே காபூலுக்கு அப்பாலும் தெற்கே கர்நாடகத்துக்கு அப்பாலும், அணிவகுத்துச் சென்றன. எமக்கெதிராகத் தலையை நீட்டிய ஜாத்களையும், ராஜபுத்திரர்களையும், சத்னாமிய, நானக், சமய உட்பிரிவினரில் தொந்தரவு கொடுப்பவர்களான சத்னாமிய, நானக் பிறஸ்தாஸ் உட்பிரிவுகளையும், ஒவ்வொருவராக, நாம் தகர்த்தோம். சூழ்ச்சிக்காரர்களான மராத்தியர்களின் நிலங்களைச் சூறையாடினோம். அத்துடன் அவர்களின் தலைவனான ஷிவாவை எமக்குக் கப்பம் கட்டச் செய்தோம். விக்கிரகங்கள் உள்ள கோவில் களைத் தரைமட்டமாக்கி அவற்றின் இடிபாடுகளில் எம் பள்ளி வாசல்களை எழுப்பினோம். நம்பிக்கையற்றவர்கள் உண்மையான வழியைப் பின்பற்றுவதற்காக *ஜாஹியா* வரிமுறையை அவர்களின் மேல் விதித்தோம். நாம் செய்த அனைத்திலும் எங்களை வழிநடத்தியது புனித *ஷரியாத்* சட்டமே. மதுபானம் வடிப்பதைத் தடுத்தோம். அதை அருந்துபவர்கள் என்று சந்தேகித்தவர்களைக்

கடுமையாகத் தண்டித்தோம். நாம் சிம்மாசனம் ஏறியபோது ஹிந்துஸ்தான் முழுவதுமே இரண்டே இரண்டு பேர்தான் மதுபானம் அருந்தாதவர்கள் என்றும் அவர்கள் யாரென்றால் நாமும் *குவாசித்* தலைவரும்தான் என்றும் பொதுவாகச் சொல்வார்கள். சில ஆண்டுகளுக்குள் மதுபானம் கிடைத்தற்கரிய பொருளாகியது. அடிக்கடி மதுவருந்துதலைத் தொடர்ந்து ஆட்டமும் பாட்டும் நிகழுவதால் அவற்றையும் தடைசெய்தோம். விலைமாதரையும், நாட்டியப் பெண்களையும் திருமணம் முடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினோம். அல்லது எம் பேரரசை விட்டுப் போகச் சொன்னோம். வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் போகும்போது இசை, நடனம் ஆகியவற்றுடன் போலிப் பாடைகளை சுமந்து சென்று எம்மைத் தொந்தரவு செய்வதால், சவங்கள் திரும்பவும் எழாமல் அவற்றை மிக ஆழத்தில் புதைத்துவிடும்படி சொன்னோம். எங்கள் முசல்மான் மக்கள் எம் சட்டங்களால் மகிழ்ச்சி அடைந்து எம்மை ஷிந்தா பீர் (வாழும் புனிதர்) என்று பாராட்டினார்கள்.

புறச்சமயிகளுக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடினோம். எங்காவது அவர்கள் தங்கள் பாம்பின் படத்தை விரித்தால் அதைக் காலடியில் போட்டு மிதித்து விடுவோம். ஷிவா வளர்த்த மலை எலிகளுடன் சண்டை பிடிப்பதில் எம் இறுதி ஆண்டுகள் டெக்கானில் கழிந்தன. அவனுடைய மகனான சம்பாவைப் பிடித்து நிரந்தரமான நரகத்திற்கு அனுப்பினோம். இருப்பினும், எம் வாழ்நாளில் இந்தத் தேசத்திலிருந்து விக்கிரகங்களை நீக்க முடியாது என்பதை உணர்ந்தோம். இந்த அறப்போரைத் தொடர்ந்து செய்யும்படி எம் மகன்களை வற்புறுத்தினோம்.

மற்ற அரசர்கள் என்றால் அரச திறைசேரியைத் தங்கள் சொந்த உடைமை மாதிரிப் பாவித்து, ஆடம்பர வாழ்விலும், பெண்களிலும், மதுவிலும், ஆபரணங்களிலும், நினைவு மண்டபங்களிலும் வீணாக்கியிருப்பார்கள். மக்களின் நன்மைக்கு உபயோகிப்பதற்காக, ஆண்டவனால் தெரிவுசெய்யப்பட்ட பொறுப்பாளர்போல நாம் எம்மை நினைத்துக்கொண்டோம். எம் ஏழைக் குடிகள் தங்களுக்குச் செலவழிப்பதற்கு மேலாக நாம் எம்மில் செலவழிக்கவில்லை. தொழுகைத் தொப்பிகளை நெய்தோம். புனித குர்ரான் நூலின் பிரதிகளை எடுத்தோம். அவற்றைச் சந்தையில் விற்று வந்த பணத்தை உணவிலும் சொந்த உடுப்பிலும் செலவழித்தோம். மிக விசாலமான பேரரசை ஆண்ட அரசர்களில் எத்தனை பேர் எம்மைப் போல *டேர்விஷஸ்* துறவிகள் போல வாழ்ந்திருப்பார்கள்? எம்மில் மூன்று சகோதரிகள் மாத்திரம் இவ்வுலகில் விடப்பட்டிருந்தார்கள். எமக்கு நெருக்கமான றொஷனாரா சிறிது காலமாக எமது விருப்பங்களில் அக்கறை காட்டாமல் இருந்தாள். அத்துடன், அந்நியருடன் அவள் நடத்தை முன்விழிப்பில்லாமல் இருந்தது. அவளை நாம் கண்டிக்கு முன்பே அவளை அல்லா தன் அரசவைக்கு அழைத்துக்கொண்

டார். அவள் தான் வாழும்போதே தான் உறங்கப்போகும் இடத்தைத் தானே வடிவமைத்துக் கொண்டாள். அந்தத் தோட்டத்தில் பல மாலைகளைச் செலவிடுவாள். அங்கு பலவகையான வேற்று நாட்டு, மணம் கமழும் செடிகொடிகளை, தண்ணீர்க் கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள் நீளம் நட்டாள். அவளுடைய கல்லறைக்கு ஆகாயமே கவிகை விமானமாக இருக்க வேண்டும் என்று விரும்பினாள். அது அல்லா அனுப்பும் பனி, மழை ஆகியவை அவளின் உயிரற்ற உடலுக்குப் புத்துயிர்ப்பூட்டும். அவளுடைய விருப்பங்கள் செயல்படுத்தப்பட்டன.

நாம் ஜஹனாராவிடம் சென்று, எங்கள் இருவருக்கிடையே இருந்தவர்கள் போய்விட்டார்கள், இனிமேல் மூத்த அக்காவுக்கும் ஒரு சகோதரனுக்கும் இடையே இருக்க வேண்டிய பாசத்தை எமக்குக் காட்டுங்கள் என்று இருந்தோம். எம் முடிசூட்டு விழாவில் அவளுக்கு 100,000 தங்கக் காசுகள், 1,700,000 ரூபா நிலையான இளைப்பூதியம் ஆகியவை கொடுத்தோம். அத்துடன் *பத்ஷாஹ்* என்ற பட்டமும் அவளுக்கு அளித்தோம். அவள் எம்முடைய தனிமையைப் பங்கிடவும், எம்மைத் தன் அறிவுரைகளால் வழி நடத்தவும் ஒத்துக்கொண்டாள். அவளை அல்லா அழைத்தபோது, வரலாற்று ஆவணங்கள் அத்தனையிலும் அவளை *சாஹிபற் – உஷ் – ஷாமனி* என்றழைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டோம். ஏனெனில் அவள் அந்த யுகத்தின் குடும்பத்தலைவி ஆவாள். அவளுடைய விருப்பப்படியே, அவள் ஹஷ்றற் நிஷாமுடீன் ஔலியாவின் கல்லறைக்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டாள். அவள் கல்லறையின் கல்லில் அவள் யாத்த பாரசீக ஈரடிச் செய்யுள் ஒன்றைப் பொறித்தோம்:

*என் புதைகுழியை பசும்புற்கள் மட்டும் மறைக்கட்டும்:*
*பணிவானவர்களின் கல்லறையை மூடும் தகுதி புற்களுக்கே உண்டு.*

1706 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் எம் சகோதர, சகோதரிகளில் கடைசியாக இருந்த கொஹார் ஆராவை அல்லா தன் முன்னிலைக்கு அழைத்தபோது, தொழுகைப் பாயை மடித்து வைக்கும் முறை அடுத்தது எம்முடையது என்று எமக்குத் தெரியும். எம் ஆரோக்கியம் குன்றத் துவங்கியபோது நாம் அஹமெட்நகரில் இருந்தோம். அஹமெட்நகர்தான் எம் பயணங்களின் இறுதி என்று நாம் உணர்ந்தோம். எம் அன்புக்குரிய மகள், ஷீனத் – உன் – நிஸ்ஸாவுக்கு அல்லா தொழுகை என்ற கொடையைக் கொடுத்தார். அவள் அதை டெல்லியில் ஒரு பெரும் பள்ளிவாசலாக மாற்றி யிருந்தாள். அத்துடன், என் வயதாகிய மனைவி, உதயபுரி ப்பேகமும் எங்கள் தேவைகளைக் கவனித்தாள். ஒரு நூறு *ஹக்கீம்கள்* எங்கள் நாடித்துடிப்பை ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டார்கள். ஆனால் மாண்டுபோகிறவர்களாலும் மருந்துகளாலும் அல்லாவின்

கட்டளைகளுக்கு எதிராக எதுவும் செய்ய முடியுமா? நாம் இவ்வுலகில் தொண்ணூறு சந்திர ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறோம். அக்காலத்தில் நாம் செய்த செயல்களைத் தகடுகளில் எழுதி வைத்திருந்தோம். அவற்றைத் திரும்ப வாசிப்பதிலும், எமக்கு நீதி நாள் அன்று கிடைக்கப்போகும் வெகுமதிகளையும் தண்டனை களையும் நினைத்துக் கொள்வதிலும் எம் நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தோம்.

எம்மை அதிகம் துயரப்படுத்தியது என்னவென்றால் எமக்குப் பிறந்த சந்ததியினர் எடுத்த துரோகப் பாதைகள் தான். மொகமட் சுல்தான் முன்னரே எமக்கெதிராகத் தன் சித்தப்பன், ஷீஜாவுடன் சேர்ந்து தன் முகத்தில் கரி பூசிக் கொண்டான். இப்பொழுது அக்பர் புறச்சமயிகளுடன் சேர்ந்து கொண்டான். டாராவின் மகளை அஷாமுக்கு மணம் முடித்துக் கொடுத்தோம். அவன் பயனற்ற தற்பெருமைக்காரனாக மாறினான். மதுவை மறக்கச் செய்வதற்காகவும், கோபத்தை அடக்கச் செய்வதற்காகவும், நாம் அவனை ஓராண்டு மறியலில் வைக்க வேண்டி இருந்தது. எம் கடைசி மகனான காம் ப்பக்ஷுக்கு பேரவாவோ திறமையோ இருக்கவில்லை. இவர்கள் எல்லாரும் எமக்குச் செய்த அவமதிப்புக் களையும் விட அருந்திறன் படைத்த எம் புத்திரி ஷேபு – உன் – நிஸ்ஸாதான் எம்மை அதிகம் காயப்படுத்தியவள். அவளுக்கு அல்லா கவிதை படைக்கும் திறனைக் கொடுத்திருந்தார். அவள் “மாக்ஃபி” என்ற புனைபெயரில் செய்யுள்கள் எழுதினாள். அவள் தன் சகோதரனான அக்பரை எங்களுக்கெதிராகத் துரோக நடத்தை களைச் செய்ய ஊக்குவித்தாள். பெரும் மனப்பாரத்துடன் அவளை சலிம்கார் கோட்டையில் தடுத்து வைப்பதற்கு நாம் தள்ளப்பட் டோம். அவள் தன் கடைசி ஈட்டிமுனையை எம்மில் இலக்கு வைத்தாள்:

> *இந்த ஹிந்துதேசத்தின் கொடுமைகளையும் கடுமை களையும் அனுபவித்தேன்,*
>
> *நான் வேறொரு தேசத்திற்குச் சென்று எனக்கொரு வீடமைப்பேன்.*

அதைச் சொல்லிக் கொண்டு இறந்தவர்களின் தேசத்திற்குச் சென்று விட்டாள்.

எம் நம்பிக்கையை எம் மூத்த மகனான முஆஷாமில் வைத்தோம். அவன் கூட எமது வெற்றிகரமான ப்பிஜாபூர், கொல்கொண்டா படையெடுப்பில் எதிரிகளுடன் ஒப்பந்தம் பேசினான். எமது பாசம் எம் நீதியில் குறுக்கிடவில்லை. அவனை மறியலில் வைத்து, அவன் தலைமயிரையோ, நகங்களையோ வெட்டுவதையும் தண்ணீரைத் தவிர வேறெதுவும் குடிப்பதையும் தடை செய்தோம். ஏழு ஆண்டுகள் அவனைச் சிறைப்படுத்தி வைத்திருந்தோம்.

*1705 ஆம் ஆண்டு கோடை வந்தது. கிருஷ்ணா நதியோரத்தில் தேவ்பூர் கிராமத்தில் கூடாரம் அடித்திருந்தோம். அந்நேரம் எங்களைக் கடுமையான சன்னிக் காய்ச்சல் பிடித்துக் கொண்டது. அதனால் பிதற்றியபோது ஷேக் கஞ்சாவின் நாலடிப் பாடல் ஒன்றைப் பாடினேன்:*

*எண்பதாண்டும் அதற்கு மேலும் வாழ்ந்து விட்டால்*
*காலமும் விதியும் உன் கதவைத் தகர்க்கும்*
*நூறு ஆண்டுகள் வரை வாழ்ந்து விட்டால்*
*உன் வாழ்வு சாவின் மையப்பகுதியாகி விடும்.*

*எம் மரணப் படுக்கையைக் கவனித்த ஒரு பிரபு கடைசி வரிகளை அதில் சேர்த்தார்:*

*அந்த வேளையில் உன் இதயத்தை உயர்த்து:*
*நினைவில் வை*
*ஆண்டவனின் எண்ணம் இறக்கும் தணலை எரிக்கச் செய்யும்.*

*இவ்வுலகில் இன்னும் தரிப்பதற்கு விருப்பம் இல்லை. எம்மை அழிக்கும் அடுத்தடுத்து வந்த சன்னிக் காய்ச்சல்கள் அல்லா எங்களை மிக விரைவில் அழைத்துவிடுவார் என்பதை உறுதிப் படுத்தின. இப்படியான சன்னியின் பிடியில் ஒருநாள் ஒரு ஈரடிப் பாடலை யாத்தோம்:*

*ஒரு கணம், ஒரு நிமிடம், ஒரு சிறுமூச்சு உருக்குலைக்கும்*
*இவ்வுலகத்தின் வடிவம் புத்துருவம் பெறலாம்.*

*எம் நெறிதிறம்பிய மகன்களுக்குச் சில புத்திமதி வார்த்தைகள் சொல்லலாம் என்று எண்ணினோம். அஷாமுக்கு இப்படி எழுதி னோம் : "நான் தனியே வந்தேன். நான் அந்நியன் போலப் போகிறேன். நான் யாரெனவோ, என்ன செய்துகொண்டிருந்தேன் என்பதுவோ எனக்குத் தெரியாது. அதிகாரத்தைத் தந்தவை எனக்குத் துக்கத்தைத் தந்துள்ளன. நான் பேரரசின் பாதுகாவலனாகவோ, பாதுகாப்பாளனாகவோ இருக்கவில்லை. மதிப்பிற்கரிய வாழ்வு வீணாக விரயமாக்கப்பட்டுவிட்டது. ஆண்டவன் என் இதயத்தில் இருந்தார். ஆனால் அவரை நான் காணவில்லை. வாழ்வு நிலை யற்றது. கடந்த காலம் போய்விட்டது. வருங்காலத்தில் நம்பிக்கை இல்லை . . . என் விமோசனத்தைப் பற்றி விசனப்படுகிறேன். என் தண்டனைக்குப் பயப்படுகிறேன். ஆண்டவனின் தாராண்மையை யும் கருணையையும் நம்புகிறேன். ஆனால் நான் செய்தவற்றை நினைத்து பயப்படுகிறேன் . . ."*

*காம் பக்ஷுக்கு எழுதினேன்: "என் ஆன்மாவின் ஆன்மாவே . . . நான் தனியாகப் போகிறேன். உன் இயலாமைக்கு வருந்துகிறேன். ஆனால் பயனென்ன? நான் விளைவித்த ஒவ்வொரு துன்பத்துக்கும், நான் செய்த ஒவ்வொரு பாவத்துக்கும், நான் செய்த ஒவ்வொரு*

பிழைக்கும் அவற்றுக்கான விளைவுகளை என்னுடன் கொண்டு செல்கிறேன். இவ்வுலகத்திற்கு நான் கொண்டு வந்தது ஒன்றுமில்லை. ஆனால் நான் பிரமாண்டமாக வண்டி வண்டியாகப் பாவங்களு டன் போகிறேன். அது விசித்திரம்! எங்கு பார்த்தாலும் நான் ஆண்டவனையே பார்க்கிறேன்... நான் பயங்கரமாகப் பாவங் களைச் செய்துவிட்டேன். என்ன தண்டனை எனக்காகக் காத்திருக் கிறது என்று எனக்குத் தெரியாது..."

மரணம் நெருங்கிவிட்டது என்று தெரிந்த கிழவன் ஒருவன் சாவதற்குப் பயந்து, எழுதப்பட்ட வார்த்தகள் அல்ல இவை. ஆனால் அவன் தன் நோக்கம் நிறைவேறாமல் இவ்வாழ்க்கையை முடிக்கப்போகிறான் என்பதற்குப் பயந்து எழுதப்பட்டவையே இவை. புறச்சமயிகளான மராட்டியர்கள், ராஜபுத்திரர்கள், ஜாதவர் கள், சீக்கியர்கள் படைகளுடன் இந்துஸ்தான் முழுவதும் எழுந்து கொண்டிருக்கின்றனர் என்பது எமக்குத் தெரியும். நாம் விட்டுச் செல்லும் எம் புத்திரர்கள் எப்படியான பலவீனமான மனமும், நோக்கமும் கொண்டவர்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். நாம் போன பிறகு, பாபரால் கட்டப்பட்ட மொகலாயப் பேரரசு ஆடி விழ ஆரம்பிக்கப்போவதும், கொந்தளிப்பு மட்டும் தான் எஞ்சும் என்பதும் எமக்குத் தெரியும்: *அஷட ஹாமா ஃபஸாட் ப்பாக்கி.*

நாம் எம் தங்குமிடத்தை ஏற்கெனவே தெரிவு செய்து விட்டோம். டௌலதபாத் கோட்டையின் அடியிலமைந்த புனித ஷெயிக் ஷயினுடீன் கல்லறையின் முற்றத்தில் ஒரு எளிமையான, ஜோடனை செய்யாத கல்லறை.

எம் காலம் நெருங்கி விட்டது என்று எமக்குத் தெரியும். எம்முடன் இருந்தவர்களுக்கும் வழியனுப்பும் நேரம் வந்துவிட்டது என்று தெரியும். எம் இறுதி நேரத்தைத் தள்ளி வைப்பதற்காக எம் யானைகளையும், வைரங்களையும் தர்மம் செய்வதா என்று எம்மைக் கேட்டார்கள். எம் நா பேச்சை இழந்து விட்டது. ஆனால் அப்படிப்பட்ட செயல்கள் முஸ்லீம்களுக்குத் தகாது என்று கடதாசித் துண்டில் எழுதிக் காட்டினேன். "திறைசேரியில் உள்ள அத்தனையையும் நீங்கள் விரும்பிய அளவு ஏழைகளுக்குக் கொடுங்கள். எம் உடம்புக்கு மேலே உயர்ந்த கல்லறை மாடங்கள் எதுவும் கட்ட வேண்டாம்" என்று எழுதினோம். இந்தப் புழுதி உடம்பை விரைவாக முதல் புதைகுழிக்குக் கொண்டு சென்று தேவையற்ற சவப்பெட்டி இல்லாமல் புதைத்துவிடுங்கள்."

'Aurangzeb Alamgiri Emperor of Hindustan' - Khuzwant Singh

# திருமதி சென்னுடைய

ஜும்பா லாஹிரி

செப்ரெம்பரில் பாடசாலை ஆரம்பித்தது தொடக்கம் ஒரு மாதமாக சிறுவன் எலியற் திருமதி சென்னிடம் செல்கிறான். அதற்கு முதல் வருடம் அபி என்ற ஒரு பல்கலைக்கழக மாணவி அவனைக் கவனித்தாள். அபிக்கு ஒல்லியான உடம்பு. தோலில் இலேசான பழுப்பு நிறப் புள்ளிகள். அட்டையில் படங்கள் இல்லாத புத்தகங்களை வாசிப்பாள். அத்துடன், எலியற்றுக்கு இறைச்சியுள்ள எந்த உணவுமே தயாரிக்க மறுத்துவிட்டாள். அவளுக்கு முன்பு வயதான திருமதி லின்டென் எலியற்றைக் கவனித்தாள். ஒவ்வொரு பின்மதியமும் எலியற் வீட்டிற்கு வரும்போதே, தேமோஸிலிருந்து கோப்பியை ஊற்றி உறிஞ்சிக்கொண்டே வணக்கம் தெரிவிப்பாள். எலியற் தனியாக விளையாடும்போது குறுக்கெழுத்துப் புதிர்கள் செய்துகொண்டிருப்பாள். அபி பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் எடுத்தபின் வேறொரு பல்கலைக் கழகத்துக்குப் போய்விட்டாள். எலியற்றின் தாய் திருமதி லின்டெனின் தேமொசில் கோப்பியிலும் பார்க்க விஸ்கி இருப்பதைக் கண்டுபிடித்தாள். இறுதியில், அவளையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டாள். சுப்பர் மார்க்கெற் என்ற பெருங்கடைக்கு வெளியேயுள்ள விளம்பரப் பலகையில் ஒரு ப்போல்பொயின்ற் பேனையால் தெளிவான எழுத்தில் இப்படிப் போடப்பட்டிருந்தது : "பேராசிரியரின் மனைவி பொறுப்பானவர். அன்பானவர். என் வீட்டில் உங்கள் பிள்ளையை கவனிப்பேன்." முன்பிருந்த குழந்தைப் பராமரிப்பாளர்கள் எங்கள் வீட்டுக்கு வந்துதான் பிள்ளையைக் கவனிப்பார்கள் என்று தொலைபேசியில் எலியற்றின் தாய் திருமதி சென்னுக்குச் சொன்னாள். "எலியற்றுக்குப் பதினொரு வயது. தானே சாப்பிடுவான்.

விளையாடுவான். இவ்வீட்டில் அவசரத்துக்கு ஒரு பெரியவர் இருக்க வேண்டும்." ஆனால் திருமதி சென்னுக்கு கார் ஓட்டத் தெரியாது.

"எங்கள் வீடு சுத்தமானது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அதேபோல அது ஒரு குழந்தைக்குப் பாதுகாப்பானது" என்று திருமதி சென் முதல் சந்திப்பில் அவளுக்குச் சொன்னாள். அது ஒரு பல்கலைக்கழகத் தொடர்மாடிக் கட்டிடம். வளாகத்தின் விளிம்பில் இருந்தது. கட்டிடத்தின் புகுமுகக் கூடத்தில் வெண்கல நிறத்தில் கவர்ச்சியற்ற சதுர வடிவத் தரையோடுகள் போடப் பட்டிருந்தன. அத்துடன் வரிசையாகத் தபாற்பெட்டிகள் மறைக்கும் ரேப்புகளால் அல்லது வெள்ளை லேபள்களால் அடையாளம் காட்டப்பட்டிருந்தன. உள்ளே, தூசி உறிஞ்சிகள் அழுத்தப்பட்ட இடங்களில் ஒன்றை ஒன்று வெட்டும் நிழல்கள், மெத்தென்ற மென்பச்சை நிறக் கம்பளத்தின் மேற்பரப்பில் உறைந்து போயிருந் தன. ஒன்றுக்கு ஒன்று பொருத்தமில்லாத கம்பளத் துண்டுகள், சோஃபா, கதிரைகள் ஆகியவற்றுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருந் தன. ஒருவரின் கால்கள் நிலத்தில் எங்கெங்கே படும் என்பதை எதிர்பார்த்து முன்னேற்பாட்டுடன் அவை விரிக்கப்பட்டிருந்தன. சோஃபாக்களின் இரண்டு பக்கங்களிலும் இருந்த சிறு விளக்குகளின் வெள்ளை நிற மேள அமைப்பு, ஒளித்தடை மூடிகள் – ஷேட் – உற்பத்தியாளர்களின் பிளாஸ்ரிக்கால் இன்னும் மூடப்பட்டிருந்தன. ரிவியும், தொலைபேசியும் கரையோரத்தில் வரிபோட்ட மஞ்சள் நிறத் துணிகளால் மூடப்பட்டிருந்தன. ஒரு தட்டில் உயர்ந்த சாம்பல் நிறக் குடுவையில் தேநீரும், நீளத்திற்குக் குவளைகளும், பட்டர் பிஸ்கற்றுக்களும் இருந்தன. உயரம் குறைந்த, பருத்த, ஓரளவு முனைப்பாகத் தெரிகிற கண்களுடைய, நீள்சதுரச் சட்டகம் போட்ட கண்ணாடி அணிந்த, திரு சென்னும் அங்கிருந்தார். அவர் தன் கால்களைச் சிறிது முயற்சியுடன் மடக்கிக்கொண்டு, தேநீர் குடிக்காத நேரத்திலும் இரண்டு கைகளாலும் தேநீர்க் குவளையை வாய்க்குக் கிட்ட பிடித்துக்கொண்டிருந்தார். திரு சென்னோ, திருமதி சென்னோ சப்பாத்து அணிந்திருக்கவில்லை. முன் கத வுக்குப் பக்கத்திலுள்ள சிறியதொரு புத்தகத் தட்டில் பல சோடிச் சப்பாத்துக்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்ததை எலியற் கண் டான். அவர்கள் வீட்டுச் செருப்புத்தான் அணிந்தார்கள். "திரு சென் பல்கலைக்கழகத்தில் கணிதவியல் கற்பிக்கிறார்" ஓரளவு தெரிந்தவர்கள், அறிமுகம் செய்வதுபோலச் சொன்னாள் திருமதி சென். அவளுக்கு ஒரு முப்பது வயதிருக்கலாம். அவள் பற்களினி டையில் சிறிய நீக்கல் இருந்தது. அவள் கன்னத்தில் மழுங்கிப் போன அம்மைத் தழும்புகள் இருந்தன. இருந்தும் அவள் கண்கள் அழகானவை. தடித்த, ஒளிரும் புருவங்கள். இயற்கையாக அகன்ற கண்ணிமைகளை திரவ மைப்பூச்சு மேலும் பெருப்பித்துக் காட்டின. மினுமினுக்கும் வெண்ணிறச் சேலை உடுத்திருந்தாள். அதில்

தோடம்பழ வர்ண கத்தரிக்காய் உருவ அமைப்புக்கள் போடப்பட்டிருந்தன. அச்சேலை அமைதியான, சாதாரணத் தூற்றலுள்ள அந்த ஓகஸ்ற் பின்மதியத்திலும் பார்க்க மாலை நேரத்துக்கு இன்னும் உகந்ததாக இருக்கும். அவள் இதழ்களில் பூசப்பட்டிருந்த பவளநிற மினுக்கும் இதழ்களை முழுமையாக்கின. அந்நிறத்தில் ஒரு சிறிய துளி எல்லைகளைத் தாண்டி இருந்தது.

இருந்தும் அவன் தாய்தான் அவள் போட்டிருந்த, பழுப்பு நிறமுள்ள, மடித்த அரைக்காற்சட்டையிலும், லேஸால் கட்டிய சப்பாத்துக்களிலும் விசித்திரமாகத் தெரிந்தாள் என்று எலியற் எண்ணினான். அவளுடைய வெட்டிய தலைமயிரும் அவள் அணிந்திருந்த சப்பாத்தின் நிறம் போன்றது. அது கம்பி போன்று நேரானதும் உணர்திறனுள்ளதுமாக இருந்தது. மிகக் கவனமாக அனைத்துப் பொருட்களும் மூடப்பட்டிருந்த அந்த அறையில் மழிக்கப்பட்ட அவள் முழங்கால்களும் தொடைகளும் அதிகம் மூடப்படாதாக இருந்தன. ஒவ்வொரு முறை திருமதி சென் பிஸ்கற்றை நீட்டும் போதும் அவள் வாங்க மறுத்துவிட்டுப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தாள். அவற்றிற்குரிய பதில்களை அவள் ஒரு பதிவுக் கொப்பியில் பதித்துக் கொண்டிருந்தாள். வேறு பிள்ளைகளும் இந்த மாடி அறையில் இருப்பார்களா? திருமதி சென் வேறு பிள்ளைகளை முந்திப் பார்த்திருக்கிறாளா? எவ்வளவு காலம் இந்த நாட்டில் அவள் வாழுகின்றாள்? எல்லாவற்றிலும் பார்க்க திருமதி சென்னுக்குக் காரோட்டத் தெரியாதது அவளுக்குக் கவலையைக் கொடுத்தது. எலியற்றின் தாய் ஐம்பது மைலுக்கு வடக்கேயுள்ள ஓரிடத்தில் ஓர் அலுவலகத்தில் வேலை செய்தாள். அவன் தந்தை கடைசியாகக் கேள்விப்பட்டபடி இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் ஓரிடத்தில் வசித்தார்.

“உண்மையில், நான் அவளுக்குக் காரோட்டும் பாடங்கள் சில சொல்லிக் கொடுக்கிறேன்” திரு சென் தான் குடித்துக் கொண்டிருந்த கோப்பிக் குவளையை மேசையில் வைத்துவிட்டுச் சொன்னார். இதுதான் முதன் முறையாக அவர் பேசியது. “என்னுடைய கணிப்பின்படி அவளுக்கு இந்த டிசம்பருக்குள் காரோட்டும் உரிமம் கிடைத்துவிடும்.” “அப்படியா?” எலியற்றின் தாய் அதையும் தன் பதிவுக் கொப்பியில் குறித்துக்கொண்டாள். “ஓம், நான் பழகிறேன்.” திருமதி சென் சொன்னாள். “ஆனால், நான் அவசரமில்லாத மாணவி. எங்கள் வீட்டில் எங்களிடம் காரோட்டி இருக்கிறான்.”

“அதாவது, உங்கள் காரை ஓட்டுபவனா?”

திருமதி சென் திரு சென்னைப் பார்த்தாள். அவர் தலையை ஆட்டினார்.

அறையை நோட்டம் விட்டுக்கொண்டு எலியற்றின் தாயும் தலையை ஆட்டினாள்.

“அவ்வளவுந்தான் . . . இந்தியாவிலா?”

“ஓம்” திருமதி சென் பதிலளித்தாள். அந்த வார்த்தையைச் சொன்னதே அவளிடம் இருந்து எதையோ விடுவித்தது போல இருந்தது. நெஞ்சின் மேலே தோளில் குறுக்காகப் போட்ட சேலையின் கரையைச் சரிப்படுத்தினாள். மற்றவர்கள் பார்க்காத ஒரு பொருளை அவள் விளக்கு ஷேட்ஸ்களுக்கு மேல், தேநீர் குடுவையின் மேல், நிலக் கம்பளத்தில் விழுந்து உறைந்த நிழல்களின் மேல் எல்லாம், பார்த்தது போல அவள் அறையைப் பார்த்தாள். “எல்லாம் அங்கிருக்கிறது.”

திருமதி சென்னிடம் பள்ளிக்கூடம் விட்ட பின் போவதைப் பற்றி எலியற் பொருட்படுத்தவில்லை. செப்ரெம்பர் மட்டில் அவனும் அவன் தாயும் வருடம் முழுக்க வாழ்ந்த கடற்கரையோரமிருந்த அச்சிறிய வீடு ஏற்கெனவே குளிர ஆரம்பித்து விட்டது. எலியற்றும் தாயும் ஓர் அறையிலிருந்து இன்னொரு அறைக்குப் போகும்போது கணப்படுப்பையும் தூக்கிக் கொண்டுபோக வேண்டியிருந்தது. அத்துடன் யன்னல்களை பிளாஸ்ரிக் துண்டை வைத்து தலைமயிர் உலர்த்தியால் ஒட்டினார்கள். கடற்கரை, விளையாடுவதற்கு வெறுமையாகவும் சோம்பியும் இருந்தது. தொழிலாளர் தினத்தின் பின் அங்கிருந்த அயலவர்கள் திருமணம் முடித்த, பிள்ளைகளற்ற, ஓர் இளம் சோடி மட்டுமே.

உடைந்த சிப்பிகளை வாளியில் பொறுக்கி வைப்பதோ, மரகத நிறக்கடல் புற்களைத் தடவிக் கொடுப்பதோ அவனுக்கு இப்போது ஆர்வத்தைக் கொடுக்கவில்லை. திருமதி சென்னின் மாடித் தொடர் வெதுவெதுப்பாக இருந்தது. சிலவேளை அதிகம் வெப்பமாகக்கூட இருந்தது. றேடியேற்றர், அமுக்கக் குக்கர்போல தொடர்ந்து இரைந்து கொண்டே இருந்தது. திருமதி சென்னுடைய வீட்டுக்குப் போனவுடன், எலியற் தன் சப்பாத்துக்களைக் களற்றி, புத்தகப் பலகையில் திருமதி சென்னின் சிலிப்பர்கள் வரிசையில் சரியாக வைத்துவிடுவான். அச்சிலிப்பர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். அதன் அடிப்பாகம் கடதாசி மட்டை போலத் தட்டையாக இருக்கும். அதன் ஒரு பகுதியில் பெருவிரலைப் பிடிப்பதற்கு தோலில் ஒரு வளையமும் போட்டிருந்தது.

இருக்கும் அறையின் தரையில் புதினத் தாள்களைப் போட்டு, அதில் இருந்துகொண்டு, திருமதி சென் காய்கறி வெட்டுபதைப் பார்ப்பது எலியற்றுக்கு விசேசமான சந்தோசத்தைக் கொடுக்கும். கத்திக்குப் பதிலாக ஒரு கத்தி அலகைப் பாவித்தாள். அது தூரவுள்ள கடல்களில் யுத்தம் செய்யப்போகும் வைக்கிங் கப்பலின் முன்பகுதி போன்று வளைந்தது. அந்த அரிமணை ஓர் ஒடுங்கிய பலகைக் குத்தியின் ஒரு முனையில் செருகியிருந்தது. அந்த எஃகு வெள்ளியிலும் பார்க்க கறுப்பாகவும் ஒரே மாதிரி பளபளப்பாகவும் இருக்கவில்லை. உச்சியில் பற்கள் இருந்தன. அது துருவுவதற்கு

என்றாள் திருமதி சென். ஒவ்வொரு பின்மதியமும் கத்தியலகைப் பலகைக் குத்தியில் வளைத்துவிடுவாள். அது குத்தியின் அடியில் ஒரு கோணத்தில் பொருந்திவிடும். அரிமணை அவளை நோக்கியிருக்க, அவள் அதைத் தொடாமலே, தன் கைகளில் முழு மரக்கறியையும் தன் இரண்டு கைகளிலும் எடுத்துப் பிளப்பாள்: பூக்கோசு, முட்டைக்கோசு, சுரைக்கொடிகள், அனைத்தையும். அவற்றை இரண்டாகப் பிளப்பாள். பின் நாலாக, பூப்பூவாய், முக்கோணமாய், வெட்டுக்களாய், தும்பாய். ஓர் உருளைக்கிழங்கை சில விநாடிகளில் உரித்துவிடுவாள். சிலவேளை சம்மணம் கொட்டி இருப்பாள். சிலவேளை கால்களைச் சாய்த்திருப்பாள். அவளைச் சுற்றி அரி தட்டுக்கள், வெட்டிய மரக்கறிகளைத் தண்ணீரில் போட்டுள்ள தட்டையான பாத்திரங்கள் ஆகியவை வரிசையாக இருக்கும்.

அவள் வேலை செய்யும்போது ஒரு கண் ரிவியில் இருக்கும். மறுகண் எலியற்றில் இருக்கும். ஆனால் ஒருபோதுமே கத்தியலகில் கண் வைத்திருப்பதைப் போல இல்லை. இருந்தாலும் அவள் வெட்டும்போது எலியற்றை நடக்க விடமாட்டாள். "சும்மா இரு. தயவுசெய்து இரு. இது இன்னும் இரண்டு நிமிஷத்தில் முடிந்துவிடும்." என்று சோபாவைக் காட்டிச் சொல்வாள். அது வரிசையாக யானைகள் தங்கள் முதுகுகளில் பல்லக்குகளைத் தூக்கிக்கொண்டு போகும் கறுப்பும் பச்சையும் உள்ள நிறப் படுக்கை விரிப்பால் எந்த நேரமும் மூடப்பட்டிருக்கும். எலியற் ஏதாவது செய்துகொண்டிருப்பதற்காக அவனுக்கு புதினப் பத்திரிகையில் வரும் நகைச்சுவைப் பகுதியைக் கொடுப்பாள். கச்சான் கடலைப் பட்டர் பூசிய கிறக்கர் பிஸ்கற்றுக்கள் கொடுப்பாள்.

சிலவேளை ஐஸ்கிரீம் தடி. அரிமணையால் செதுக்கிய கறற் துண்டுகள். அவளால் முடிந்தால் தன் வேலையிடத்தைக் கயிறு கட்டி இருந்திருப்பாள். இருந்தாலும். ஒருமுறை தான் வைத்த சட்டத்தை அவளே மீறினாள். இன்னும் சில பொருட்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டது. இருந்தும் அவளைச் சுற்றி அலங்கோலமாகப் பரவிக் கிடந்த இலைகளையும் தண்டுகளையும் தள்ளிக்கொண்டு எழ விரும்பாமல் குசினியில் இருந்த ஒரு பொருளை எடுத்துத் தரச் சொல்லி எலியற்றைக் கேட்டாள். "உனக்குத் தொந்தரவில்லாவிட்டால், அங்கே இந்தக் கீரையைப் போடுவதற்குப் போதுமான பிளாஸ்ரிக் சட்டி இருக்கிறது. கபினெற்றில், குளிர் பெட்டிக்குப் பக்கத்தில். கவனம், பிள்ளை, கவனம்." அவன் அவ்விடத்திற்குப் போனபோது எச்சரித்தாள். "இங்கே வை. நன்றி. கோப்பி மேசையில். அது எனக்கு மட்டும்."

அந்த அரிமணையை இந்தியாவிலிருந்து கொண்டு வந்திருப்பாள். அங்கே ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொன்று இருக்க வேண்டும் போலும். "எப்பவாவது எங்கள் குடும்பத்தில் ஒரு திருமணம் நடந்தால்", ஒருநாள் அவள் எலியற்றுக்குச் சொன்னாள், "அல்லது

பெரிய விசேசம் நடந்தால், என் அம்மா அயலிலுள்ளவர்களுக்கு. இதைப் போன்ற அரிமணையைக் கொண்டுவரச் சொல்லி அனுப்பு வாள். அவர்கள் வந்து எங்கள் வீட்டு மொட்டை மாடியில் பெரிய வட்டமாக இருந்து, வம்பு பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் ஐம்பது கிலோ மரக்கறிகளை இரவு முழுவதும் இருந்து நறுக்கிவிடுவார்கள்." அவள் வெட்டி வைத்த தித்திப்பான வெள்ளரிக்காய், கத்தரிக்காய், வெங்காயத் தோல்கள் குவியலாக அவளைச் சுற்றி இருக்கும். அப்போது அவளின் பக்கவாட்டு வடிவம் அவற்றின் மேல் பாதுகாப்பாக ஊசலாடியது. "அந்த இரவுகளில், அவர்களின் அரட்டைகளைக் கேட்டுக்கொண்டு நித்திரைகொள்வது சாத்தியமே இல்லை." இருக்கும் அறை யன்னலூ டாக பைன் மரத்தைப் பார்ப்பதற்கு, அவள் தன் பேச்சை நிறுத்தினாள். "இங்கே திரு சென் என்னைக் கொண்டு வந்திருக் கிறார். இத்தனை அமைதியான இவ்விடத்தில், சிலவேளை என்னால் நித்திரைகொள்ளவே முடிவதில்லை."

இன்னொரு நாள், கோழிச் சந்தையிலிருந்து, பருக்களையுடைய மஞ்சள் கொழுப்பை இணுங்கிக்கொண்டிருந்தாள். பின் அதை தொடையாகவும் காலாகவும் பிரித்தாள். எலும்புகள் அரிமணையில் முறிபடும்போது அவளின் தங்க வளையல்கள் குலுங்கின. முன்கை கள் மினுமினுத்தன. மூக்கூடாக, கேட்கக் கூடியதாக மூச்சு விட்டாள். இரண்டு கைகளாலும் இறைச்சியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, ஓரிடத்தில் நிறுத்தி யன்னலுக்கு வெளியால் உறுத்துப் பார்த்தாள். கொழுப்பும் நார்களும் அவள் விரல்களில் தூங்கின.

"எலியற், நான் இப்போது பலத்துச் சத்தம் போட்டால் யாராவது ஓடி வருவார்களா?"

"திருமதி சென், என்ன பிரச்சினை?"

"ஒன்றுமில்லை. யாராவது வருவார்களா என்று கேட்கிறேன்?"

எலியற் தோளைக் குலுக்கினான். "சிலவேளை"

"எங்கள் வீட்டில், அதைச் செய்தால் போதும். எல்லாரிடமும் தொலைபேசி இல்லை. குரலைக் கொஞ்சம் உயர்த்தினால், கவ லையை அல்லது சந்தோசத்தை வெளிப்படுத்தினால், அயலவர் களும் அதற்கு அடுத்த அயலிலிருந்த அரைவாசிப் பேரும், செய்தி யைப் பகிரவும் உதவி செய்யவும் வந்து விடுவார்கள்."

திருமதி சென் வீடு என்று சொல்வது, அவள் மரக்கறி வெட்டிக் கொண்டிருக்கும் அவர்கள் வாழும் தொடர்மாடி வீடல்ல, இந்தியா வைத்தான் சொல்கிறாள் என்று எலியற் புரிந்து கொண்டான். சரியாக ஐந்து மைல் தூரமுள்ள தன் வீட்டையும், தனக்கு இடைக் கிடை கை காட்டிக்கொண்டு, மாலையில் கடற்கரை நீளம் துள்ளி ஓடிக்கொண்டிருக்கும் இளம் தம்பதிகளையும் நினைத்துக்கொண் டான். தொழிலாளர் தினத்தில் அந்தத் தம்பதியினர் ஒரு விருந்து

வைத்தார்கள். அப்போது அவர்கள் வீட்டுத் தளத்தில் சாப்பிட்டுக் கொண்டும், குடித்துக்கொண்டும் பலர் நின்றார்கள். அவர்களின் சிரிப்பு சோர்வுற்ற பெருமூச்சுப் போல கடலலைகளின் மேலாகக் கேட்டது. எலியற்றையும், அவன் தாயையும் அவர்கள் அழைக்க வில்லை. தாய் விடுமுறையில் நின்ற நாள் அது. அப்படி அவள் நிற்பது அருமை. ஆனால், அன்று அவர்கள் எங்குமே போகவில்லை. அவள் தன் துணிகளைத் தோய்த்தாள். காசோலைப் புத்தகக் கணக்குகளைச் சமன்படுத்தினாள். எலியற்றின் உதவியுடன் காரின் உள்பகுதிகளைச் சுத்தம் செய்தாள். ஒரு சில மைல்களுக்கப்பால் உள்ள, இடைக்கிடை கார் கழுவும் இடத்தில் காரைக் கழுவுவோமா என்று எலியற் தாயைக் கேட்டான். அப்படிக் கழுவினால் காருக் குள் அவர்கள் பாதுகாப்பாகவும், நனையாமலும் இருக்க, சவர்க்கார மும், தண்ணீரும் காரில் வந்து விழ, வட்டமான பென்னம்பெரிய கன்வஸ் றிபன்கள் முன்கண்ணாடியில் மோதிக் கழுவும். ஆனால் அவன் தாயார் தான் நன்றாகக் களைத்துவிட்டதாகச் சொன்னாள். அதனால் காரைத் தண்ணீர் குழாயால் தெளித்துக் கழுவினார். மாலையாகியவுடன் அடுத்த வீட்டுத் தளத்தில் நடனமாட ஆரம்பித் தனர். தொலைபேசிப் புத்தகத்தில் இலக்கத்தைப் பார்த்துச் சத்தத் தைக் குறைக்கச் சொன்னாள் அவள்.

"அவர்கள் உங்களைக் கூப்பிடலாம்." எலியற் திருமதி சென் னுக்குப் பிறகு சொன்னான்

"ஆனால் நீங்கள் பெருத்த சத்தம் செய்கிறதாக அவர்கள் முறை யிடலாம்." சோபாவில் எலியற் இருந்த இடத்திலிருந்து ஒருவிதமான பூச்சி உருண்டை மணமும், சீரகச் செடி மணமும் வருவதை உணரக்கூடியதாக இருந்தது. அத்துடன் அவளின் நேர் உச்சி வகிட்டில் குங்குமம் தூள் வைக்கப்பட்டிருப்பதையும் கண்டான். அது நாணுவதுபோல இருந்தது. அவள் மண்டையோட்டில் காயம் பட்டுள்ளது அல்லது ஏதோ கடித்துவிட்டது என்று எலியற் முதலில் சந்தேகப்பட்டான். ஆனால் ஒருநாள் அவன் குளியலறைக் கண் ணாடி முன் நின்று குண்டுத்தலை ஊசித் தலையால் குங்குமத்தைப் புதிசாக ஈடுபாட்டுடன் வைப்பதைக் கண்டான். அதைச் சிறிய ஜாம் போத்தலில் வைத்திருந்தாள். குங்குமத்தை புருவங்களுக்கிடை யில் கொஞ்சம் மேலாக நெற்றியில் ஊசித்தலையால் வைக்கும் போது, கொஞ்சக் குங்குமத் தூள்கள் மூக்குத் தண்டில் விழுந்தன. "குங்குமத்தை ஒவ்வொரு நாளும் நான் வைக்க வேணும்." அதை எதற்காக வைப்பது என்று எலியற் அவள் கேட்டபோது அவள் விளக்கினாள். "நான் திருமணம் முடித்திருக்கும் நாள்வரை"

"அதாவது, திருமண மோதிரம்போல?"

"சரியாகச் சொன்னாய், எலியற். திருமண மோதிரத்தைப் போலத்தான். பாத்திரம் கழுவும் தண்ணீருடன் அது போய்த் தொலைந்துவிடும் என்ற பயம் மட்டும் இருக்காது."

*எலியற்றின் தாய் ஆறு இருபதுக்கு வரும்போது திருமதி சென் தான் செய்த மரக்கறி வெட்டிய சாட்சியங்கள் அனைத்தையும் இல்லாமலாக்கிவிடுவதில் எப்பொழுதும் கருத்தாக இருந்தாள். அரிமணைக் கத்தியலகைத் துப்புரவாக்கி, கழுவி, துடைத்து, மடித்து, படி ஏணியில் ஏறி கபோட்டில் வைத்து விடுவாள். எலியற்றின் உதவியுடன், தோல்கள், பட்டைகள், கொட்டைகள், ஆகியவற்றுடன் புதினத் தாள்களைக் கசக்கி எறிந்து விடுவாள். குசினி மேசையில் சமைக்கிற சட்டிகள், அரிதட்டுகள், ஆகியவற்றை அடுக்கி வைப்பாள். சரக்குச் சாமான்கள், பிசைந்த பசைகள் ஆகிய வற்றை அளந்து, கலப்பாள். பின்னர் அடுப்பின் நீலமலர் போன்ற தீக்கொழுந்தில் சில கறிகள் மென்மையாகக் கொதிக்கும். அது விசேடமான தினமல்ல. அல்லது விருந்தினரையோ அவள் எதிர் பார்க்கவில்லை. அது அவனிளனதும் திரு சென்னின் இரவுணவு மட்டுந்தான். இருக்கும் அறையின் மூலையிலுள்ள சதுரமான ஃபோமிக்கா மேசையில், கைதுடைக்கும் நப்கின்ஸ்ஸோ. வெள்ளிப் பாத்திரங்களோ இல்லாமல் வைத்திருந்த இரண்டு கோப்பைகள். இரண்டு கிளாசுகள் ஆகியவற்றை வைத்திருந்ததலிருந்து அது தெரிந்தது.*

*குப்பை வாளியில் புதினத் தாள்களை உள்ளே புதைக்கும் பொழுது, தானும் திருமதி சென்னும் பேசாத சட்டங்கள் சிலவற்றை மீறுவதுபோல எலியற் உணர்ந்தான். சிலவேளை, திருமதி சென் அவசரம் அவசரமாக எல்லாவற்றையும் செய்து முடித்ததால் அந்த உணர்வு ஏற்பட்டாக இருக்கலாம்: உப்பையும் சீனியையும் தன் விரல்களுக்கிடையில் கிள்ளிப் போட்டாள். பருப்பை ஓடும் தண்ணீ ரில் கழுவினாள். அசுத்தமாக இருக்கக்கூடிய மேற்பரப்புக்களை ஒற்றித் துடைத்தாள். கபோட்டின் கதவுகளை கிளிக் கிளிக் எனத் தொடர்ச்சியாக சத்தம் கேட்க மூடினாள். திருமதி சென்னின் தொடர்மாடி வீட்டின் மூலைகளை உறுத்துப் பார்த்துக்கொண்டு, எளிதிற் புலப்படும் வெள்ளைக் காலுறையிலும், தோளில் பஞ்சு திணிக்கப்பட்ட மேற்சட்டை, காற்சட்டை அணிந்து சடுதியாக தாய் வந்து நிற்பதைக் கண்டபோது எலியற்றுக்குச் சிறிது அதிர்ச்சி யாக இருந்தது. வெளிக்கதவுக்கு அப்பால் நின்றுகொண்டு எலியற் றைச் சப்பாத்தைப் போட்டுக்கொண்டும் சாமான்களை எடுத்துக் கொண்டும் வரும்படி அழைத்தாள். திருமதி சென் அதை விட வில்லை. ஒவ்வொரு மாலையும் அவளை சோபாவில் இருக்கச் செய்யக் கட்டாயப்படுத்துவாள். அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்பாள்: ஒரு கிளாஸ் பிரகாசமான செந்நிற சர்பத், காய்ந்த முந்திரி போட்ட இளகிய வெல்லப்பாகு, ஒரு கோப்பை நொய்மை யான அல்வா.*

*“உண்மையாக, திருமதி சென். நான் இன்று மதிய உணவைப் பிந்தித்தான் சாப்பிட்டேன். நீங்கள் இந்தளவு சிரமப்பட்டிருக்க வேண்டாம்.”*

“இது சிரமமில்லை. எலியற்றைப் போலத்தான். சிரமமே இல்லை.”

அவன் தாயார் கண்களை மேலே எங்கோ வைத்துக்கொண்டு திருமதி சென் தயாரித்த உணவைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க வார்த்தைகளைத் தேடிக்கொண்டு உணவைக் கொறிப்பாள். முழங் கால்களை ஒன்றாகக் கூட்டி வைத்திருந்தாள். வீட்டுக்குள் கழற்றாத குதியுயர்ந்த சப்பாத்துக்கள் பச்சை நிற தரைக் கம்பளங்களை அழுத்திக்கொண்டிருந்தன. “மிக ருசியாக இருக்கிறது” – கடைசியாகச் சொல்லுவாள். ஒரு கடி அல்லது இரண்டு கடி கடித்த உணவுக் கோப்பையை மேசையில் வைத்துக் கொண்டு சொல்லுவாள். அவளுக்கு அந்த ருசி பிடிக்கவில்லை என்பது எலியற்றுக்குத் தெரியும். காரில் அப்படி ஒருமுறை அவள் சொல்லி இருக்கிறாள். அவள் வேலையிடத்தில் மதிய உணவு சாப்பிடவில்லை என்பதும் அவனுக்குத் தெரியும். ஏனெனில் கடற்கரை ஓரத்திலுள்ள வீட் டிற்குப் போனவுடன் அவள் செய்யும் முதல் வேலை ஒரு கிளாஸ் வைன் ஊற்றிக்கொண்டு ஒரு பாணும் ச்சீசும் சாப்பிடுவது. சிலவேளை இரவுணவுக்காக அவர்கள் வரவழைக்கும் பிற்சாவைக் கூடச் சாப்பிடப் பசிக்காத அளவு சாப்பிட்டிருப்பாள். அவன் சாப்பிடும்போது அவள் அவனுக்குப் பக்கத்தில் இருந்து, மேலும் வைன் குடித்துக் கொண்டு, அன்று எப்படி என்று கேட்டுக்கொண்டு குந்தி இருப்பாள். கடைசியாக, எஞ்சியுள்ளதை முடிக்கச் சொல்லி விட்டு, சிகறெற் புகைப்பதற்காக பின் கட்டுக்குப் போய் விடுவாள்.

ஒவ்வொரு பின்மதியமும் திருமதி சென், பக்கத்தில் வாழும் இரண்டு மூன்று பிள்ளைகளுடன் எலியற் வந்திறங்கும் பள்ளிக்கூட பஸ்ஸிற்காக பிரதான தெருவுக்கு அருகிலுள்ள பைன் மரத் தோட்டத்தில் நிற்பாள். பல வருடங்கள் காணாத ஒருவரைக் காண்பதற்காக ஆவலுடன் காத்திருக்கும் ஒருவரைப் போல திருமதி சென் நேரத்துடன் வந்து காத்திருப்பதை எலியற் எப்பொழு தும் உணர்ந்தான். காதுகளுக்கருகிலுள்ள மயிர் மென்காற்றில் கலைந்து அலைந்துகொண்டிருக்கும். உச்சியில் குங்குமம் புதிதாக அப்பியிருக்கும். அவள் முகத்திற்குக் கொஞ்சம் பெரிதான நேவி நீல நிறமுள்ள கறுப்புக் கண்ணாடி அணிந்திருப்பாள். ஒவ்வொரு நாளும் வித்தியாசமாக உருவரையில் இருக்கும் சேலை, மாறுபட்ட நிறக் கட்டம் போட்ட சகல பருவ மேலங்கிக் கீழ் படபடக்கும். கருவலாலிக் கொட்டைகளும் கம்பளிப் புழுக்களும் கறுத்த சல்லிக் கற்களில் செய்யப்பட்ட, ஒரே மாதிரியான கற்கட்டிடங்களைச் சுற்றிவரப் போட்ட தெருவில் புள்ளிகளாகக் கிடந்தன. அக்கட்டிடத் தொகுதி ஒரு நகராட்சியைச் சேர்ந்தது. பஸ் நிறுத்துமிடத்திலிருந்து திரும்பிப் போகும் வழியில் அவள் தன் அங்கிப் பையிலிருந்து ஒரு “சான்ட்விச்” பையை எடுப்பாள். எலியற்றுக்கு உரித்த தோடம்பழச் சுளை ஒன்றைக் கொடுத்தாள். அல்லது ஏற்கெனவே அவள் கோது நீக்கி, சிறிது உப்புப் போட்ட கச்சான் கடலைகள் கொடுத்தாள்.

*அவர்கள் நேராகக் காருக்குச் சென்றனர். இருபது நிமிடங்கள் திருமதி சென் கார் ஓட்டப் பழகினாள். அது ரொஃப்பி நிற, நாற்கதவுள்ள, இருக்கைகளுக்கு 'வினைல்' துணி போடப்பட்ட கார். அதில் 'க்றோம்' பொத்தான்களுள்ள ஏஎம் வானொலி இருந்தது. காரின் பின் இருக்கையின் பின்னுள்ள தட்டில் 'கிளீநெக்ஸ்' ரிஸ்ஸுப் பெட்டியும் ஐஸ் வழிக்கும் தடியும் இருந்தது. மாடித்தொடர் வீட்டில் எலியற்றைத் தனியாக இருக்கவிடுவது சரியில்லை என்று அவனுக்கு திருமதி சென் சொன்னாள். ஆனால் அவளுக்குத் தனியாகக் காரோட்டப் பயம். அதனால் அவளுக்குப் பக்கத்தில் அவன் இருப்பது அவசியம் என்பது அவனுக்குத் தெரியும். கார் இயங்கும் கர்ச்சனையையே அவள் வெறுத்தாள். எஞ்ஜினை விரையச் செய்யும்போது, தன் சிலிப்பர் காலால் 'காஸை' அமத்தி வரும் சத்தத்தை கேட்காதிருக்க, தன் கைகளால் காதுகளைப் பொத்தினாள். "நான் காரோட்டும் உரிமம் எடுத்த பிறகு எல்லாம் முன்னேறிவிடும் என்று திரு சென் சொல்கிறார். நீ என்ன நினைக்கிறாய்? எல்லாம் முன்னேறிவிடுமா, எலியற்?"*

*"நீங்கள் பல இடங்களுக்கும் போகலாம். நீங்கள் எந்த இடத்துக்கும் போகலாம்." எலியற் ஆலோசனை சொன்னான்.*

*கல்கத்தாவரை போகலாமா? எவ்வளவு காலம் அது எடுக்கும், எலியற்? பத்தாயிரம் மைல்கள். ஒரு மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில்?*

*எலியற்றால் அந்தக் கணக்கை மனதால் போட முடியவில்லை. திருமதி சென் காரோட்டியின் இருக்கையை, பின்னால் பார்க்கும் கண்ணாடியை, கறுப்புக் கண்ணாடியைத் தலைமேல் வைத்துவிட்டு, சரிப்படுத்துவதை எலியிற் பார்த்தான். சிம்பனிகள் பாடும் நிலையத்துக்கு வானொலியைத் திருப்பினாள். இது ப்பீத்தோவனா? என்று கேட்டாள். ப்பே என்று உச்சரிக்காமல் ப்பீ என்று உச்சரித்தாள். குளவிக்கு ஆங்கிலச் சொல் ப்பீ போல. தன் பக்கயன்னலைக் கீழே பதித்தாள். எலியற்றையும் அப்படிச் செய்யச் சொன்னாள். பின்னர் பிறேக் தண்டைப் பாதத்தால் அமத்தினாள். மை ஒழுகும் பெரிய பேனையைப் போலத் தானியங்கி கியரைக் கையாண்டாள். கார் நிறுத்துமிடத்திலிருந்து அங்குலம் அங்குலமாகக் காரைப் பின்னெடுத்தாள். தொடர் மாடிக் கட்டிடத் தொகுதியை ஒருமுறை வட்டமிட்டாள். திரும்பவும் ஒருமுறை.*

*"எப்படி நான் ஓட்டுகிறேன், எலியற்? நான் சித்தியடைந்து விடுவேனா?"*

*அவள் கவனம் தொடந்து திசை திருப்பப்பட்டது. வானொலியில் போகும் நிகழ்ச்சியைக் கேட்பதற்காகவோ, தெருவில் போகும் எதையோ உற்றுப் பார்ப்பதற்காகவோ, காரை எச்சரிக்கை எதுவுமின்றி நிறுத்தினாள். எவரையாவது கடந்து சென்றால் அவர்*

களுக்குக் கையசைத்தாள். அவளுக்கு இருபது அடிக்கு முன்னால் ஒரு பறவை குந்தியிருப்பதைக் கண்டால் அது பறந்து போவதற்காக சுட்டுவிரலால் கோர்ணை அமத்தி அது பறந்து போகும்வரை காரை நிறுத்துவாள். இந்தியாவில் காரோட்டி இடது பக்கமல்ல, வலது பக்கத்தில் குந்தி இருப்பான் என்று சொன்னாள். மெதுவாக, ஊஞ்சலுக்கு அப்பால், சலவை செய்யும் கட்டிடத்துக்கு அப்பால், கரும்பச்சை நிற குப்பை வாளிகளுக்கப்பால், வரிசையாக நிற்பாட்டி யிருந்த காருகளுக்கப்பால், ஊர்ந்து சென்றார்கள். பிரதான வீதியைச் சல்லிக் கற்தெரு சந்திக்கிற பைன் மரத் தோட்டத்தினை அண்மித்த ஒவ்வொரு முறையும், தன் உடம்பை முன்னகர்த்தி அதன் பாரம் முழுவதையும் சேர்த்து பிறேக்கை அமத்துவாள். மற்றக் கார்கள் சடசடவென ஓடிக் கொண்டிருக்கும். அது ஓர் ஒடுங்கிய தெரு. நடுவில் நேராகக் கீறிய மஞ்சள் கோடுள்ளது. ஒரு திசை போக. மறு திசை வர.

"அது சாத்தியமில்லை. எலியிற். எப்படி நான் அங்கே போவது?"

"ஒருவரும் வராதவரை நீங்க காத்திருக்க வேணும்."

"ஏன் ஒருவராவது வேகத்தைக் குறைக்கிறார்களில்லை."

"இப்போ ஒருவரும் வரவில்லை."

"வலது பக்கமிருந்து ஒன்று வருகிறதே. பார்த்தாயா? பார் ஒரு ற்றக் வருகிறது. எப்படியோ திரு சென் இல்லாமல் பிரதான வீதியில் ஓட்டுவதற்கு எனக்கு அனுமதியில்லை."

"காரைத் திருப்பி, வேகமாக ஓட்ட வேணும்."எலியிற் சொன்னான். எதையும் யோசியாமல். அப்படித்தான் அவன் தாய் செய்தாள். கடற்கரை வீட்டுக்கு மாலையில் திரும்பிப் போகையில், அவன் தாய்க்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கையில் கார் நழுவிச் செல்வதுபோல் அத்தனை எளிதாகப் போகும். அப்போது தெரு சாதாரண ஒரு தெருதான். காட்சியில் ஒரு பகுதிதான் அது. ஆனால், இலையுதிர்காலச் சூரியன் மரங்களூடாகப் பிரகாசிக்க, அவன் திருமதி சென்னின் காரில் இருக்கையில், அதே கார்கள் அவளுடைய கைமொளிகளை வெளிறச் செய்கின்றன. அவளின் மணிக்கட்டுக்கள் நடுங்குகின்னறன. அவளின் ஆங்கிலம் தடுமாறு கின்றது.

"எல்லோரும். இந்த ஆட்கள், அவர்களின் உலகத்தில் அதிகம்."

இரண்டு விசயங்கள் திருமதி சென்னை மகிழ்ச்சியூட்டும் என்று எலியிற் கண்டு பிடித்திருந்தான். ஒன்று, அவள் குடும்பத்திலிருந்து கடிதம் வருவது. காரோடப் பழகிவிட்டு வந்து தபால் பெட்டியைத் திறந்து பார்ப்பது அவளின் வழக்கம். பெட்டியை அவள் திறப்பாள். ஆனால், எலியிற்றைக் கையை உள்ளே விட்டுக் கடிதங்களை எடுக்கச் சொல்வாள். பின் எதைப் பார்க்க வேணுமென்று எலியற் றுக்குச் சொல்வாள். திரு சென்னின் பெயரில் வரும் பற்றுச் சீட்டுக்

களையும், சஞ்சிகைகளையும் பார்க்கச் சொல்லிவிட்டு தன் கண்களைக் கைகளால் மூடிக்கொள்வாள். முதலில் எலியற்றுக்குத் திருமதி சென்னின் இந்தப் பதற்றம் புரியவில்லை. அவனுடைய தாயாருக்கும் நகரத்தில் ஒரு தபாற் பெட்டி இருந்தது. ஆனால், அடிக்கடி அங்கு போய்க் கடிதங்களை எடுப்பதில்லை. அதனால் ஒருமுறை அவளின் மின்சாரங்கூட மூன்று நாள் வெட்டப்பட்டது. திருமதி சென்னுக்கு ஒரு நீல விமானத்தபால் கிடைக்கப் பல கிழமைகள் சென்றன. அத்தபால் உறை தொடுவதற்கு சொரசொரப்பானது. வழுக்கல் தலையுடைய மனிதர் ஒருத்தர் இராட்டை சுற்றிக் கொண்டிருக்கும் படம் போட்ட முத்திரைகள் உறை முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன. முத்திரைகள் திகதி குத்தியதால் கருப்பாகி இருந்தன. "இதுதானா, திருமதி சென்?"

சேலையால் அவன் முகத்தைப் பிடித்துக் கொண்டு முதல் முறையாக அவனை அணைத்தாள். பூச்சி உருண்டையின் மணமும் சீரகச் செடியின் மணமும் அவனைச் சூழ்ந்தன. அவன் கைகளிலிருந்த கடிதத்தை அவள் பறித்தாள்.

வீட்டுக்குள் போனவுடன் தன் சிலிப்பர்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக உதைத்து விட்டு, தலையிலிருந்து ஒரு கொண்டை ஊசியைப் பிடுங்கி மூன்று கிழியலில் விமானத் தபாலை இரு பக்கவாட்டிலும் மேலேயும் கிழித்தாள். அவள் வாசிக்கும்போது கண்கள் அங்குமிங்குமாக ஓடின. வாசித்து முடிந்தவுடன் தொலைபேசியை மூடியிருந்த வேலைப்பாடுகள் செய்த துணியை எடுத்து விட்டு தொலைபேசியைச் சுழற்றி, "திரு சென் இருக்கிறாரா? தயவுசெய்து. இது திருமதி சென். மிக முக்கியமான அலுவல்." என்று கேட்டாள்.

பின்னர் தன் மொழியில் பேசினாள். அது எலியற்றின் காதுகளுக்கு விரைவாகவும் இரைச்சலாகவும் இருந்தது. ஒவ்வொரு சொல்லாக கடிதத்திலுள்ள விசயத்தை வாசித்துக் காட்டுகிறாள் என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. அவள் வாசிக்கும்போது அவளது குரல் உரத்தும், உயர்ந்தும் தாழ்ந்தும் சென்றது. அவள் அவன் முன்னிலையில் நிற்பது தெளிவாகத் தெரிந்தபோதிலும் திருமதி சென் பச்சை நிறத் தரைவிரிப்புப் போட்ட வீட்டில் இல்லை என்ற உணர்ச்சி அவனுக்கு இருந்தது.

அதன் பிறகு, அந்தத் தொடர்மாடிக் கட்டிட வீடு அவளை அடக்குவதற்கு சடுதியாக மிகச் சிறிதாகியது. பிரதான வீதியைக் கடந்து சிறிது நடந்து பல்கலைக் கழகத்தின் நாற்கோணத்தை அடைந்தார்கள். அந்த நாற்கோணக் கற்கோபுரத்தில் தான் மணிகள் ஒவ்வொரு மணித்தியாலமும் அடிக்கும். மாணவர் மன்றம் ஊடாக அலைந்தார்கள். உணவகத்தின் மேசையில் உணவுத்தட்டை ஒன்றாகவே இழுத்தார்கள். வட்டமேசையில் மாணவர்கள் அரட்டை அடிப்பதற்கு நடுவில் இருந்து மட்டைக் கடதாசியில் செய்த

தோணியில் குவித்திருந்த பொரித்த உருளைக் கிழங்குத் துண்டு களைச் சாப்பிட்டார்கள். எலியற் கடதாசிக் கப்பில் சோடாக் குடித்தான். திருமதி சென் சீனியும் கட்டிப் பாலும் விட்டு தேயிலைப் பையை தோய்த்துத் தேநீர் குடித்தாள். சாப்பிட்ட பிறகு கலைக் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். சிற்பங்களை, பட்டு மறைப்புக் களைப் பார்த்தார்கள். ஈரச் சாயம், களிமண் ஆகியவற்றின் மணம் குளிர்ச்சியான நடைகூடங்களில் இருந்தது. கணிதக் கட்டிடத்தைத் தாண்டி நடந்தார்கள். அங்குதான் திரு சென் கணித வகுப்புக் களுக்குப் பாடங் கற்பித்தார்.

கடைசியாக சத்தமான, குளோறீன் மணம் வரும் உடற்பயிற்சிக் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே, நாலாம் மாடியிலுள்ள அகலமான யன்னலூடாக, நீச்சல்காரர்கள் ஒளிவிடும் பசுநீலக் குளத்தில் ஒரு எல்லையிலிருந்து மறு எல்லைவரை நீந்துவதைப் பார்த்தார்கள். திருமதி சென் இந்தியாவிலிருந்து வந்த விமானத் தபாலைத் தன் கைப்பையிலிருந்து எடுத்து முன் பின் பக்கங்களை நன்றாகக் கவனித்தாள். கடிதத்தை விரித்து மனதுக்குள் திரும்பவும் வாசித்தாள். அடிக்கடி பெருமூச்சு விட்டாள். வாசித்து முடித்த பின் நீச்சல்காரரைக் கருத்தூன்றிக் கவனித்தாள்.

“என்னுடைய அக்காவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. நான் அவளைப் பார்க்கும்போது அவளுக்கு மூன்று வயதாகி விடும். அது கூட திரு சென்னுக்குக் கற்பிக்கும் உரிமை ஒப்பந்தம் கிடைத் தால்தான். அவளுடைய சொந்தச் சித்தியே அந்நியளாகப் போய் விடுவாள். புகையிரத்தில் பக்கத்தில் இருந்தால்கூட எனது முகத்தை அவளுக்குத் தெரியாது.” கடிதத்தை வைத்துவிட்டு எலியற்றின் தலையில் கையை வைத்தாள். “எலியற், இந்தப் பின்மதியங்களில் என்னுடன் இருக்கும்போது உன் அம்மாவுடன் நீ இல்லாத குறையை உணர்கிறாயா?”

அந்த எண்ணமே அவனுக்கு ஒருபோதும் வந்ததில்லை.

“நீ கட்டாயம் அதை உணர்வாய். நீ ஒரு சின்னப் பையன். ஒரு நாளில் பல மணிநேரம் அம்மாவிடமிருந்து பிரிந்து என்னுடன் இருக்கிறாய். உன்னை நினைக்கும்போது எனக்கு வேட்கமாய் இருக்கிறது.”

“நான் இரவில் அவளைப் பார்ப்பேன்.”

“எனக்கு உன் வயதாக இருக்கையில் மிகத் தூரத்தில் போய் இருப் பேன் என்று எனக்குத் தெரியாது. எலியற், நீ என்னிலும் பார்க்கப் புத்திசாலி. விசயங்கள் எப்படி இருக்குமென்று உனக்குத் தெரியும்.”

திருமதி சென்னை மகிழ்ச்சியூட்டிய அடுத்த விசயம் கடல் மீன். முழு மீனைத்தான் அவள் விரும்பினாள். மட்டி, நண்டு, இறால்கள் அல்ல. துண்டு மீனுமல்ல. துண்டு மீன் ஒன்றைத் தான் எலியற்றின் தாய் ஓர் இரவு நெருப்பில் வாட்டினாள்.

அன்றிரவு ஓர் ஆணை அலுவலகத்திலிருந்து அழைத்திருந்தாள். அந்த ஆண் அன்றிரவு அவன் தாயின் படுக்கையறையில்தான் கழித்தான். அதன் பிறகு அவனை எலியற் காணவே இல்லை. ஒரு மாலை தாய் எலியற்றை அழைத்துப் போக வந்தபோது, திருமதி சென்ரியூனா மீன் கலந்த பலகாரமொன்றைப் பரிமாறினாள். அப்பலகாரத்தை பேத்கி என்ற மீனைக் கலந்து உண்மையில் செய்திருக்க வேணும் என்று விளங்கப்படுத்தினாள் திருமதி சென். "இது எனக்கு விரக்தியைக் கொடுக்கிறது" என்று அவளிடம் மன்னிப்புக் கோரினாள். விரக்தி என்ற வார்த்தையிலுள்ள இரண் டாவது அசையை அழுத்தி உச்சரித்தாள். "சமுத்திரத்திற்கு மிக அருகிலிருந்து கொண்டு மீன் அதிகம் கிடைக்காமலிருப்பது" கோடைக் காலத்தில் கடற்கரைக்கு அருகிலுள்ள மீன் சந்தைக்குப் போக வேண்டும் என்று சொன்னாள். இந்தியாவிலுள்ள மீனைப் போல ருசியாக இராது என்று சேர்த்துச் சொன்னாள். குறைந்தது அது புதிசு. இப்போது ஆரம்பித்து விட்டது. ஒழுங்காக வள்ளங்கள் போவதில்லை. சிலவேளை பல கிழமைகளுக்குத் தொடர்ந்து முழுமீன் கிடைப்பதில்லை.

"சுப்பர் மார்க்கற்றில் இருக்கும். முயற்சித்துப் பார்." அவன் தாய் ஆலோசனை கூறினாள்.

திருமதி சென் தலையை ஆட்டினாள். "பெருங்கடைகளில் முப்பத்திரண்டு பூனைகளுக்கு முப்பத்திரண்டில் ஒரு ரின்னிலிருந்து உணவு கொடுக்கலாம். ஆனால் நான் விரும்பும் ஒரு மீனையாவது அங்கே பெற முடியாது. ஒரு மீனைக்கூட." ஒரு நாளைக்கு இரண்டு தரம் மீன் சாப்பிட்டு வளர்ந்தவர்கள் நாங்கள் என்று திருமதி சென் சொன்னாள். கல்கத்தாவில் காலையில் மீன் சாப்பிட்டார்கள். படுக்கப் போக முன்னர் மீன் சாப்பிட்டார்கள். அதிஸ்ரக்காரராக இருந்தால் பள்ளிக்கூடம் விட்ட பிறகு உண்ணும் சிற்றுணவுக்குக் கூட அது கிடைக்கும். "நீங்க செய்ய வேண்டியது வீட்டைவிட்டு வெளிக்கிட வேண்டியதுதான். ஒரு கொஞ்சத் தூரம் நடக்க. அங்கே நிற்பீர்கள்."

சில நாட்களுக்கு ஒருதரம் திருமதி சென் தொலைபேசி நூலின் மஞ்சள் பக்கங்களைப் புரட்டி, பக்க ஓரத்தில் பொட்டிட்ட இலக்கங்களைச் சுழற்றி முழு மீன் இருக்கிறதா என்று கேட்டாள். இருந்தால் தனக்காக வைத்திருக்கும்படி சொல்வாள். "சென் என்ற பெயரில். அவர் வந்து எடுப்பார்." பிறகு திரு சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொலைபேசியில் அழைப்பாள். ஒரு சில நிமிடங்களில் திரு சென் வருவார். எலியற்றின் தலையில் தடவுவார். திருமதி சென்னை முத்தமிடமாட்டார். வெளியே போகுமுன் ஃபோமிக்கா மேசையிலிருந்து தேநீர் குடிப்பார். தனக்கு வந்த கடிதங்களை வாசிப்பார். சிங்க இறால் சிரிக்கும் படம் போட்ட கடதாசிப் பையுடன் அரைமணி நேரத்துக்குப் பின் திரும்பி வந்து திருமதி

சென்னுக்கு அதைக் கொடுத்துவிட்டு, மாலை நேர வகுப்பெடுக்கத் திரும்பவும் பல்கலைக்கழகம் போய் விடுவார். ஒருநாள் கடதாசிப் பையைத் திருமதி சென்னுக்குக் கொடுக்கும்போது சொன்னார். “கொஞ்சக் காலத்துக்கு மீனில்லை. உறைகுளிர்ப் பெட்டியிலுள்ள கோழி இறைச்சியை எடுத்து சமை. அலுவலக நேரத்தில் அங்கே இருக்க வேணும்.”

அடுத்த சில நாட்களுக்கு மீன் கடைகளை அழைக்காமல் குசினித் தொட்டியில் கோழி இறைச்சிக் கால்களை உருகப் போட்டு, பின் அரிமணையால் வெட்டினாள். ஒருநாள் பச்சை அவரையையும் சாடின் ரின் மீனையும் போட்டுச் சாம்பாறு வைத்தாள். அடுத்த கிழமை மீன் கடைக்காரன் திருமதி சென்னை அழைத்தான். அவருக்கு மீன் தேவை என்று நினைத்து, மீனை அன்று மாலைவரை அவள் பெயரெழுதி வைத்திருப்பதாகவும் சொன்னாள். திருமதி சென் மகிழ்ந்து போனாள். “அவன் நல்லவனில்லையா? எலியற், என்னுடைய பெயரைத் தொலைபேசி நூலில் பார்த்ததாகச் சொன்னான். ஒரு சென் தான் அதிலுள்ளதாகச் சொன்னான். கல்கத்தா தொலைபேசி நூலில் எத்தனை சென்கள் இருக்கின்றன தெரியுமா?

எலியற்றைச் சப்பாத்தையும் ஜக்கெற்றையும் போடச் சொன்னாள். பிறகு பல்கலைக் கழகத்திலுள்ள திரு சென்னை தொலைபேசியில் அழைத்தாள். எலியற் சப்பாத்தைப் புத்தகத் தட்டின் அருகிலிருந்து கட்டி விட்டு வரிசையாக இருந்த சிலிப்பர்களிலிருந்து தெரிவு செய்வதற்காக அவள் வருவாள் என்று காத்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவளைக் கூப்பிட்டான். திருமதி சென் பதிலளிக்காமல் போகவே, சப்பாத்தைக் கழற்றிவிட்டு இருக்குமறைக்குப் போனான். அங்கே அழுது கொண்டு சோபாவில் அவள் இருப்பதைக் கண்டான். முகத்தைக் கைகளில் ஏந்தி இருந்தாள். விரல்கள் ஊடாக கண்ணீர் சொட்டியது. அவற்றிடையே திரு சென் எதுவோ ஒரு கூட்டத்துக்கு சமூகமளிக்க வேண்டுமென்பதை முணுமுணுத்தாள். மெதுவாக எழுந்து தொலைபேசித் துணியை ஒழுங்கு செய்தாள். முதன்முதல் தன் சப்பாத்துக்களுடன் பச்சைத் தரைக் கம்பளியில் நடந்து அவளைப் பின்தொடர்ந்தான் எலியற். அவள் அவனை உற்றுப் பார்த்தாள். அவளுடைய கீழ்க் கண்ணிமைகள் மெல்லிய செந்நிறத் திட்டியாக வீங்கி இருந்தன. “சொல் எலியற், இதைக் கேட்டது அதிகமா?”

அவன் பதில் கூற முன்பே, அவன் கையைப் பிடித்து, எப்போதுமே கதவு சாத்தி இருக்கிற படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள். முகப்புப் பலகையற்ற கட்டிலைத் தவிர அந்த அறையில் இருந்தவை தொலைபேசி வைத்திருந்த பக்கமேசை, துணிமினுக்கும் பலகை, ஒரு அலுமாரி ஆகியவையே. அலுமாரியின் தட்டுக்களையும், கதவுகளையும் திடீரெனத் திறந்தாள். அவற்றுள் கற்பனை செய்யக்கூடிய அத்தனை நூலிழையிலும், நிறத்திலும் தங்க, வெள்ளி

நூல்களால் சித்திரவேலைப்பாடுகள் செய்த சேலைகள் நிரம்பி இருந்தன. சில கண்ணாடி போன்றவை. சில மெல்லிய இழையுள்ளவை. மற்றவை திரைச்சேலை போன்றவை. கரைப்பக்கங்கள் தொங்கற் குஞ்சங்கள் இழைத்தவை. தட்டுக்களில் தட்டையாக இறுக்கமாக மடித்து வைக்கப்பட்டும் அலுமாரியில் தொங்கவும் விடப்பட்டிருந்தன. லாச்சிகளிலுள்ள சேலைகளைத் துளாவினாள். சில சேலைகள் விளிம்புகளால் வெளித்தள்ளப்பட்டன. "இதை எப்போது உடுத்தேன்? இதை? இதை?" லாச்சிகளிலிருந்து சேலைகளை ஒவ்வொன்றாக வீசினாள். தொங்கிக் கொண்டிருந்த பலவற்றையும் இழுத்தாள். அவை கட்டிலில் குவியலாக கொழுவப்பட்ட துணிகள் மாதிரி விழுந்தன. பூச்சி உருண்டைகளின் செறிவான மணத்தால் அறை நிரம்பி விட்டது.

"உன் படங்களை அனுப்பு. உன் புதிய வாழ்க்கையின் படங்களை அனுப்பு" என்று அவர்கள் எழுதுகிறார்கள். "எந்தப் படத்தை நான் அனுப்புவது?" கட்டிலின் ஓரத்தில் களைத்துப் போய் இருந்தாள். கட்டிலில் அவள் இருக்கவே இடம் போதாமல் இருந்தது. "நான் ஓர் இராணியைப் போல வாழுகின்றேன் என்று அவர்கள் நினைக்கிறார்கள், எலியற்." வெற்றுச் சுவரைச் சுற்றிவரப் பார்த்தாள். "ஒரு பொத்தானை அழுத்தியவுடன் வீடு சுத்தமாக வருகிறது என்று நினைக்கிறார்கள். நான் ஓர் அரண்மனையில் வாழுவதாக அவர்கள் நினைக்கிறார்கள்."

தொலைபேசி மணி அடித்தது. கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தொலைபேசியை எடுப்பதற்கு முன் பலமுறை மணியை அடிப்பதற்கு விட்டாள். சேலை ஒன்றின் கரையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு உரையாடிய போது பதில் மட்டும் சொல்வது போலத் தான் இருந்தது. தொலைபேசியில் கதைத்து முடிந்தபின் சேலைகளை மடிக்காமல் லாச்சிக்குள் அடைசிவிட்டு எலியற்றும் அவளும் பாதணிகளை அணிந்துகொண்டு காரடிக்குப் போனார்கள். அங்கே திரு சென்னைச் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டு நின்றனர்.

"இன்றைக்கு ஏன் காரோட்டவில்லை?" திரு சென் வந்தவுடன், மொளிகளால் கார் எந்திரத்தின் கூரையைத் தட்டிக்கொண்டு கேட்டார். எலியற் முன்னிலையில் அவர்கள் இருவரும் எப்போதுமே ஆங்கிலத்தில் தான் பேசுவார்கள்.

"இன்றைக்கல்ல. இன்னுமொரு நாளைக்கு."

"தெருவில் மற்றக் கார்கள் ஓடும்போது நீர் காரை ஓட்ட மறுத்தால் எப்படிச் சித்தியடையலாம் என்று எதிர்பார்ப்பது?"

"எலியற் இன்று இருக்கிறான்."

"அவன் ஒவ்வொரு நாளும் இங்கிருப்பான். இது உன்னுடைய நன்மைக்காகத் தான். திருமதி சென்னின் நன்மைக்காகத் தான் என்று சொல், எலியற்." அவள் மறுத்துவிட்டாள்.

ஒவ்வொரு மாலையும் எலியற்றும் தாயும் கடற்கரை வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் அதே தெருக்கள் நீளம் அமைதியாக அவர்கள் காரில் சென்றனர். திரு சென் திருமதி சென்னின் பின்னுள்ள ஆச னத்தில் இருந்து செல்லும் பயணம் பழக்கமற்றதாகவும், வழக்கத் தைவிட நேரமெடுப்பதுபோலவும் இருந்தது. ஒவ்வொரு நாட்காலை யிலும் தன்னைத் துயிலெழுப்பும் கடற்புறாக்களின் அழுகுரல்கள் சலிப்பூட்டும். இப்போது அப்புறாக்கள் வானத்தில் தாழ்ந்தும், சிறகடித்துப் பறப்பதும் அவனைக் குதூகலப்படுத்தின. அவர்கள் ஒவ்வொரு கடற்கரையாகப் போய்க்கொண்டிருந்தனர். கோடைக் காலத்தில் உறைய வைத்த எலுமிச்சப் பழங்களை, சிப்பிகளை, விற்கும் கொட்டில்கள் இப்போது மூடிக் கிடந்தன. ஒரேயொரு கொட்டில் மட்டும் திறந்திருந்தது. அதுதான் மீன் சந்தை.

திருமதி சென் கதவைத் திறந்து, திரும்பி நின்று, இன்னும் ஆசன வாரைக் களற்றாத திரு சென்னைக் கேட்டார்.

"நீங்களும் வருகிறீர்களா?"

திரு சென் மடிசஞ்சிலிருந்து சில காசுத் தாள்களை எடுத்து அவளிடம் கொடுத்தார். "இருபது நிமிடத்தில் எனக்கொரு கூட்டம் இருக்கிறது." சொல்லும்போதே காரின் கருவிப் பலகையை உற்றுப் பார்த்துக் கொண்டு சொன்னார்: "தயவுசெய்து நேரத்தை வீணாக்க வேண்டாம்."

அந்த ஈரக்கசிவான சின்னக் கடைக்கு எலியற்றும் அவளுடன் சென்றான். கடையின் சுவர்களில் வலைகள், நட்சத்திரச் சிப்பிகள், மிதவைகள் ஆகியவை பிறைபோன்ற வடிவத்தில் தூக்கப்பட்டிருந் தன. சுற்றுலாப் பயணிகளின் கழுத்துக்களில் கமெரா தூங்க மேசை ஒன்றுக்குப் பக்கத்தில் கூட்டமாக நின்றார்கள். சிலர் பஞ்சு திணிக்கப்பட்ட சிப்பிகளின் பண்புகளை ஆய்ந்து கொண்டிருந்தார் கள். இன்னும் சிலர் வட அமெரிக்காவிலிருந்த ஐம்பது வெவ்வேறு வகையான மீன்கள் வரையப்பட்டு, அவற்றைப் படத்துடன் விளங்கப்படுத்தியுள்ள பெரிய ஆவணத்தைச் சுட்டிக்காட்டிக்கொண் டிருந்தனர். மேசையில் இருந்த எந்திரத்திலிருந்து ஒரு ரிக்கற்றை எடுத்துக் கொண்டு வரிசையில் காத்திருந்தார் திருமதி சென். எலியற் பெரிய சிங்க இறால்களுக்குப் பக்கத்தில் நின்றான். சிங்க இறால்கள் கலங்கல் தண்ணீர் தொட்டிக்குள் ஒன்றுக்கு மேல் ஒன்று ஏறின. அவற்றின் கால்கள் மஞ்சள் நபர் தளையால் கட்டப் பட்டிருந்தன. திருமதி சென் தன் முறை வந்தபோது பிரகாசமான சிவந்த முகத்தையும் மஞ்சள் பற்களையும் உடைய கருத்த றபர் ஏப்றனை அணிந்திருந்த ஒருவனுடன் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருப்பதைக் கண்டான். இரண்டு கைகளாலும் மக்கெரல் மீனை வாலில் தூக்கிப் பிடித்திருந்தான் அவன்.

"நீங்க எனக்கு விற்பது புதிய மீனென்று நிச்சயமாகத் தெரியுமா?"

“இதிலும் பார்க்க புதிசாக இருந்தால் அதுவே தங்களுக்குப் பதில் சொல்லும்.” திராசின் முன் நடுங்கிக்கொண்டு தன் தீர்ப்பைக் காட்டியது.

“திருமதி சென், இந்த மீனைச் சுத்தம் செய்து தரவேண்டுமா?”

அவள் தலையை ஆட்டினாள்.

“தயவுசெய்து தலையை எடுக்க வேணாம்.”

“வீட்டில் பூனைகள் வைத்திருக்கிறீர்களா?”

“பூனைகள் இல்லை. கணவர் மட்டுந்தான்.”

பிறகு, மாடித் தொடர்வீட்டில், கபோட்டில் இருந்து அரிமணையை எடுத்து, புதினத்தாள்களைப் பரப்பி, தன் எரிய செல்வங்களைச் சோதித்தாள். கடதாசிப் பொட்டலத்திலிருந்து அவற்றை ஒவ்வொன்றாக எடுத்தாள். கடதாசி சுருங்கியும் இரத்தத்தால் உறைந்தும் இருந்தது. வால்களை நீவினாள். வயிற்றில் அடித்தாள். குடற்சதையை வெட்டிக் கிழித்தாள். கத்தரிக்கோலால் இறகுகளைக் கத்தரித்தாள். காதுச் செவுளுக்குள் விரல் ஒன்றை விட்டால். அது அவள் வைக்கும் குங்குமத்தைக்கூட நிறத்தில் தோற்கடித்து விடும். மீனுடலை இறுக்கிப் பிடித்தாள். அது மைக்கோடுகள் இடப்பட்டவை போலிருந்தது. அதை இரு நுனியிலும் பிடித்து அரிமணையால் சமதூரத்தில் அளந்தாள்.

“ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?” எலியற் கேட்டான்.

“அதில் எத்தனை துண்டுகள் விழும்? என்று பார்ப்பதற்கு அந்த மீனைச் சரியாக வெட்டினால் மூன்று நேரச் சாப்பாட்டுக்குப் போதும்.” தலையை வெட்டிக் கோப்பையில் வைத்தாள்.

நவம்பர் மாதத்தில் பல நாட்கள் திருமதி சென் காரோட்டிப் பழக மறுத்துவிட்டாள். அரிமணி கபோட்டில் இருந்து வெளியே வரவில்லை. நிலத்தில் புதினத்தாள்களை விரிக்கவுமில்லை. மீன் கடையை அழைக்கவுமில்லை. உறைந்த கோழியை உருக விடவுமில்லை. மௌனமாக இருந்து எலியற்றுக்கு கிறக்கர் பிஸ்கற்றில் கச்சான் பட்டரைப் போட்டுக் கொடுத்துவிட்டு, சப்பாத்துப் பெட்டிக்குள் இருந்த பழைய விமானத் தபால்களை எடுத்து வாசித்துக்கொண்டிருந்தாள். எலியற் வீட்டிற்குப் போக வேண்டிய நேரம் வந்தவுடன் அவனுடைய பொருட்களைச் சேர்த்துக் கொடுத்தாள். அவனுடைய தாயை உள்ளே அழைத்து, சோபாவில் இருக்கச் சொல்லவும் இல்லை. முதலில் ஏதாவது சாப்பிடச் சொல்லவுமில்லை. முடிவாக, காரில் போய்க் கொண்டிருக்கும் போது திருமதி சென்னின் நடத்தையில் ஒரு மாற்றத்தைக் கவனித்தாயா என்று எலியற்றைத் தாய் கேட்டபோது அவன் இல்லை என்றான். திருமதி சென் வீட்டில் மேலும் கீழும் நடக்கையில் விளக்கு ஷேட்டை முதல் முதல் பார்ப்பது போல் உற்றுப்

பார்ப்பதை அவன் சொல்லவில்லை. ரிவியைப் போட்டுவிட்டு அவள் பார்க்காமல் இருந்ததையோ அவன் சொல்லவில்லை. ஒருநாள் ராகம் என்று சொல்வதைப் பதிவு நாடாவைப் போட்டுக் கேட்டாள். அது முதலில் வயலினில் எதையோ மெதுவாக இழுப் பதைப் போலவும் பின்னர் விரைவாக இழுப்பதைப் போலவும் இருந்தது. மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் போது தான் அதைக் கேட்க வேண்டும் என்று திருமதி சென் சொன்னார். அது ஒரு மணி நேரம்வரை இசைக்கும்போது அவள் தன் கண்களை மூடிக் கொண்டு சோபாவில் இருப்பாள். "இது உங்கள் பீதோவனிலும் பார்க்கச் சோகமானது. இல்லையா?" என்று பின்பு கேட்பாள். இன்னொரு நாள் அவளுடைய மொழியில் பலர் பேசும் ஒரு கசெற்றைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்காக அவள் குடும்பத்தினர் தயாரித்த பிரியாவிடைப் பரிசு அது என்று எலியற் றுக்கு அவள் சொன்னாள். பலரின் குரல்கள் சிரித்தும் பேசின. பிறகு திருமதி சென் அவர்கள் யார் என்பதைச் சொன்னாள். "என் மூன்றாவது மாமா, என் மச்சான், என் அப்பா, என் தாத்தா." ஒரு குரல் ஒரு பாட்டு பாடியது. இன்னொன்று ஒரு கவிதை சொல்லி யது. கடைசிக் குரல் திருமதி சென்னின் தாயினுடையது. அது அமைதியானதும் மற்றவற்றிலும் பார்க்கக் காரியார்த்தமாகவும் இருந்தது. ஒவ்வொரு வசன முடிவிலும் நிறுத்தியது. நிறுத்தும் நேரத்தில் திருமதி சென் எலியற்றுக்கு அதை மொழி பெயர்த்தாள். "ஆட்டின் விலை இரண்டு ரூபாய் கூடிவிட்டது. சந்தையிலுள்ள மாங்காய் நல்ல ருசியாயில்லை. கல்லூரி வீதியில் வெள்ளம்." நாடாவை நிற்பாட்டினாள். "நான் இந்தியாவை விட்டு வெளிக் கிட்ட அன்று நடந்த விசயங்கள் இவை." அடுத்த நாளும் இதே கசெற்றைத் திரும்பவும் போட்டாள். இந்த முறை அவளுடைய தாத்தா பேசும்போது நிறுத்தினாள். வார இறுதியில் ஒரு கடிதம் வந்ததாகச் சொன்னாள். அவளின் தாத்தா இறந்து விட்டார்.

ஒரு கிழமைக்குப் பிறகு திரும்பவும் திருமதி சென் சமைக்க வெளிக்கிட்டார். ஒருநாள் இருக்கும் அறையிலிருந்து முட்டைக் கோசு அரிந்துகொண்டிருக்கையில் திரு சென் அழைத்தார். திருமதி சென்னையும் எலியற்றையும் கடலோரம் அழைத்துப் போகப்போவ தாகச் சொன்னார். அதற்காக திருமதி சென் சிகப்புச் சேலை உடுத்தாள். சிகப்பு இதழ்ச் சாயம் பூசினாள். குங்குமத்தைப் புதிசாக உச்சியில் வைத்தாள். தலைமயிரைத் திரும்பவும் பின்னி னாள். முகவாயில் கழுத்துத் துண்டு கட்டினாள். தலையில் தன் கருப்புக் கண்ணாடியை ஒழுங்குபடுத்தினாள். சிறிய கமெராவை கைப்பையுள் வைத்தாள். திரு சென் காரை நிறுத்துமிடத்திலிருந்து பின்னுக்கு எடுக்கும்போது தன் கையை பக்கத்து ஆசனத்தின் பின்புறத்தில் வைத்தார். அது திருமதி சென்னின் தோள்களைச் சுற்றி அணைப்பது போல இருந்தது. "நீ போட்டிருக்கும் மேலங்கி இப்போதுள்ள குளிருக்குத் தாங்காது" என்று ஓரிடத்தில் திருமதி

சென்னுக்கு அவர் சொன்னார். “குளிரைத் தாங்கக் கூடியதொன் றாக நாங்க வாங்க வேணும்.” மீன் கடையில் மக்கெரலும் பட்டர்மீன், ப்பாஸ் மீனும் வாங்கினார்கள். இந்த முறை திரு சென்னும் அவர்களுடன் கடைக்குள் வந்தார். இம்முறை திரு சென்தான் மீன் புதிசா என்று கேட்டார். அப்படி இப்படி வெட்டச் சொன்னார். அவர்கள் அதிக மீன் வாங்கினார்கள். அதனால் எலியற் கூட ஒரு பையை வைத்திருக்க வேண்டிவந்தது. காரின் ற்றங்குங்குள் அவற்றை வைத்த பிறகு திரு சென் தனக்குப் பசிக்கிறது என்று அறிவித்தார். திருமதி சென்னும் ஒத்துக்கொண் டார். வெளியே உணவு எடுத்துச் செல்லும் யன்னல் இன்னும் திறந்திருந்த ஓர் உணவகத்திற்குச் சென்றார்கள். உல்லாசப் பயணி கள் இருக்கும் மேசையில் இருந்து மட்டிச் சதை போட்ட இரண்டு கேக் சாப்பிட்டார்கள். திருமதி சென் தன் உணவில் அதிக ரபாஸ்கோ சோசும் மிளகும் போட்டார். “பகோரா போலுள்ளது. இல்லையா?” அவளுடைய முகம் சிவந்தது. இதழ்ச் சாயம் மங்கியது. திரு சென் சொன்ன அனைத்துக்கும் அவள் சிரித்தாள்.

உணவகத்துக்குப் பின்னால் ஒரு சிறிய கடற்கரை இருந்தது. சாப்பிட்டு முடிந்த பின் கடற்கரையோரம் கொஞ்ச நேரம் நடந்தார் கள். காற்று மிகப் பலமாக வீசியதால் அவர்கள் பின்னோக்கி நடக்க வேண்டியிருந்தது. திருமதி சென் கடலைக் காட்டினார். ஒரு சில கணங்களில் ஒவ்வொரு அலையும் கொடியில் காயும் சேலையைப் போலிருந்தது என்று சொன்னார். “முடியவே முடி யாது!” முடிவில் சத்தம் போட்டார். சிரித்தார். கண்கள் கண்ணீர் வர திரும்பி வரும்போது சிரித்தார். “என்னால் அசையவே முடியாது.” பதிலாக மணலில் எலியற்றும் திரு சென்னும் நிற்கையில் படம் பிடித்தார். “இப்போது எங்களில் ஓராள்.” அவர் சொன்னார். எலியற்றைத் தன் கட்டம் போட்ட மேலங்கியுடன் பிடித்துக் கொண்டு கமெராவைத் திரு சென்னிடம் கொடுத்தார். இறுதியாக எலியற்றிடம் கமெராவைக் கொடுத்தார்கள். “அசையாமல் பிடித் திரு” திரு சென் சொன்னார். எலியற் கமெராவின் சிறிய யன்னலூ டாக பார்த்தான். திரு திருமதி சென் இருவரும் நெருங்கி வரும்வரை காத்துக்கொண்டு நின்றான். ஆனால் அவர்கள் அப்படி நெருங்கி நிற்கவில்லை. கைகளைப் பிடிக்கவோ இடையில் கைகளால் பிடிக்கவோ இல்லை. வாயை மூடிக் கொண்டு முறுவலித்தனர். காற்றுக்கு கண்களைக் கூசிக்கொண்டனர். திருமதி சென்னின் சிகப்புச் சேலை அவருடைய மேலங்கியின் கீழ் தீச்சுவாலை போல பாய்ந்துகொண்டிருந்தது.

கடைசியில் காரில் கதுகதுப்பாக இருந்தது. காற்றாலும் மட்டிச் சதைக் கேக் சாப்பிட்டதாலும் களைத்துப்போயிருந்தார்கள். அதிலி ருந்து மணல்மேடுகளையும், தூரத்தே தெரிந்த கப்பல்களையும், வெளிச்ச வீட்டுக் காட்சியையும், செந்நிறமாகவும் கத்திரிப்பூ நிறமாகவும் ஆகாயம் இருந்ததையும் பார்த்தார்கள். கொஞ்ச

நேரத்திற்குப் பிறகு திரு சென் காரை மெதுவாக்கி, தெருவின் ஓரத்தில் நிறுத்தினார்.

“என்ன நடந்தது?” திருமதி சென் கேட்டார்.

“இன்றைக்கு வீட்டிற்கு இங்கிருந்து காரோட்டப்போகிறாய்.”

“இன்றைக்கில்லை.”

“இல்லை. இன்றைக்குத்தான்.” திரு சென் காரிலிருந்து வெளியே வந்து திருமதி சென்னிருந்த பக்கத்துக் கதவைத் திறந்தார். கரையில் அலைகள் மோதும் சத்தத்துடன் சேர்ந்து, மிகப் பயங்கரமாக் காற்று காருக்குள் வீசியது. இறுதியாக, காரோட்டியின் ஆசனத்துக்கு நழுவிப் போனார். ஆனால் தன் சேலையையும், கறுப்புக் கண்ணாடியைச் சரிப்படுத்தவும் கன நேரம் எடுத்தாள். எலியற் திரும்பிப் பின்னலால் பார்த்தான். தெரு வெறுமையாக இருந்தது. திருமதி சென் வானொலியைப் போட்டு வயலின் இசையைக் காருக்குள் நிரப்பினாள்.

“அது தேவையில்லை.” திரு சென் கிளிக்கென்று மூடிவிட்டார்.

“அது எனக்கு கவனஈர்ப்புக்கொள்வதற்கு உதவும்.” திருமதி சென் சொல்லி திரும்பவும் வானொலியைப் போட்டாள்.

“உன் சமிக்ஞைகளைப் போடு.” திரு சென் வழிநடத்தினார்.

“என்ன செய்வதென்று எனக்குத் தெரியும்.”

ஒரு மைல் வரை அவள் நன்றாகவே ஓட்டினாள். ஆனால் மிக மெதுவாகவே ஓட்டினாள். அதனால் பல கார்கள் இவளைத் தாண்டிச் சென்றன. நகரம் நெருங்கியவுடன் வாகனங்களின் விளக்குகள் தூரத்தில் பெரிதாக எரிந்தன. அவள் இன்னும் மெதுவாகப் போனாள்.

“ஒழுங்கையை மாற்றி ஓட்டு.” திரு சென் சொன்னார். “சக்கரம் சுழல்கிற இடத்தில் இடது பக்கம் எடு.”

திருமதி சென் அப்படிச் செய்யவில்லை.

“ஒழுங்கையை மாற்று. நான் சொல்கிறேன்.” திரு சென் வானொலியை மூடினார். “நான் சொல்வதைக் கேட்கிறாயா?”

ஒரு கார் ஹோணை அடித்தது. பிறகு இன்னொன்றும் அடித்தது. அதற்குப் பதிலாக இவளும் சவாலுக்கு ஹோணை அடித்தாள். பின் காரை நிறுத்தினாள். பிறகு சமிக்ஞை போடாமல் தெருவில் இடது கரைக்குப் போனாள். “போதும்” அவள் சொன்னாள். திருப்பும் வளையத்தின் மேலே நெற்றியை வைத்துப் படுத்தாள். “இதை நான் வெறுக்கிறேன். காரோடுவதை வெறுக்கிறேன். இனி மேல் ஓட்ட மாட்டேன்.”

அதன் பிறகு அவள் காரோடுவதை நிறுத்திவிட்டாள். அடுத்த முறை மீன் கடைக்காரன் கூப்பிட்டபோது அவள் திரு சென்னை

அவரின் அலுவலகத்தில் அழைக்கவில்லை. அவள் புதியதொன்றைச் செய்ய முயற்சித்தாள். அங்கு ஒரு நகரசபை பேருந்து இருந்தது. அது ஒரு மணிக்கு ஒரு தரம் பல்கலைக்கழகத்திற்கும் கடற் பக்கத்திற்கும் ஓடியது. பல்கலைக் கழகத்திற்குப் பிறகு இரண்டு நிறுத்தங்களில் அது நின்றது. முதலாவது முதியோர் இல்லம். பிறகு பெயரில்லாத கடைத் தெருப் பக்கம். அந்தக் கடைத் தெருவில் ஒரு புத்தகக் கடையும், சப்பாத்துக் கடையும், வளர்ப்புப் பிராணிக் கடையும், பதிவுத் தட்டுக் கடையும் இருந்தன. போட்டிக்கோவுக்குக் கீழேயுள்ள வாங்குகளில் முதியோர் இல்லத்து முதிய பெண்கள் இருவர் இருவராக இருப்பர். அளவுக்குப் பெரிய பொத்தான்கள் போட்ட, முழங்கால்வரை போகும் மேலங்கி அணிந்துகொண்டு, லொசிஞ்சர் இனிப்புச் சாப்பிட்டுக் கொண்டு இருப்பார்கள்.

"எலியற்," அவர்கள் இருவரும் பேருந்தில் போய்க் கொண்டிருக் கும்போது திருமதி சென் கேட்டாள். "உன் தாய் முதியவளாய்ப் போனபின் அவளை முதியோர் இல்லத்தில் விடுவாயா?"

"விடலாம்" அவன் சொன்னான். "ஆனால் ஒவ்வொரு நாளும் அவளைப் போய்ப் பார்ப்பேன்."

"இப்போ அப்படிச் சொல்கிறாய். பிறகு பார்ப்போம். பெரிய ஆளாய் வந்து, இப்போது தெரியாத வெவ்வேறு இடங்களில் நீ வாழும்போது என்ன செய்வாய்." அவள் தன் கைவிரல்களில் எண்ணினாள். "உனக்கு ஒரு மனைவி இருப்பாள். பிள்ளைகளும் இருப்பார்கள். ஒரே நேரத்தில் வேறு பல இடங்களுக்கும் அவர் களைக் கொண்டுசெல்லச் சொல்வார்கள். எப்படித்தான் அவர்கள் அன்புள்ளவர்களாக இருந்தாலும் ஒருநாள் நீ உன் அம்மாவைப் போய்ப் பார்ப்பதைப் பற்றி முறையிடுவார்கள். நீயும் களைத்துவிடு வாய், எலியற். ஒரு நாள் போக மாட்டாய். இரண்டு நாள் போக மாட்டாய். பிறகு அவள் ஒரு பை லொசிஞ்சர் வாங்குவதற்கு பேருந்தில் போக வேண்டி வரும்."

மீன் கடையில் ஐஸ் படுக்கைகள் ஏறக்குறைய வெறுமையாகவே இருந்தன. அதேபோல சிங்க இறால் தொட்டியும். அதில் கறள் நிற அழுக்குகள் தண்ணீரூடாகத் தெரிந்தன. அந்த மாதக் கடைசி யில் மாரியில் கடை பூட்டப்படும் என்று ஓர் அறிவித்தல் சொல்லி யது. மேசைக்குப் பின் ஒருவன் மட்டும்தான் வேலை செய்தான். அவன் இளம் சிறுவன். திருமதி சென்னுக்கு அவளின் பெயரில் பாதுகாத்து வைத்திருந்த பையைக் கொடுத்தபோது அவனுக்குத் திருமதி சென்னை அடையாளம் தெரியவில்லை. "இவற்றைச் சுத்தம் செய்து செதிள்களை எடுத்தாச்சா?" திருமதி சென் கேட் டாள். சிறுவன் தோளைக் குலுக்கினான். "என் முதலாளி நேரத்து டன் போய் விட்டார். இந்தப் பையை உங்களுக்குக் கொடுக்கச் சொல்லிச் சொன்னார். அவ்வளவுதான்." கார் நிறுத்தும் இடத்தில் திருமதி சென் பேருந்து அட்டவணையில் பேருந்து வரும் நேரத்தைப்

*பார்த்தாள். அடுத்த பேருந்துக்கு இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்கள் நிற்க வேணும். அதனால் அவர்கள் தெருவைக் கடந்துபோய், முன்பு வாங்கின, எடுத்துச் செல்லும் யன்னலில் மட்டிக் கேக் வாங்கினார் கள். இருப்பதற்கு ஓர் இடமும் கிடைக்கவில்லை. உல்லாசப் பயணி வாங்கில்கள் இப்போது பாவனையில் இல்லை. அவை தலைகீழாகப் போட்டு ஒன்றுடன் ஒன்று சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கிடந்தன.*

*வீட்டுக்கு வரும் வழியில் பேருந்திலிருந்த ஒரு முதிய பெண் இவர்களைப் பார்த்துக் கொண்டே வந்தாள். அவளின் கண்கள் எலியற்றிலிருந்து திருமதி சென்னுக்கும் அவர்கள் காலடியில் இருந்த இரத்தம் வரியாக ஓடிய பையிலும் சென்றன. அவள் கருத்த மேலங்கி அணிந்திருந்தாள். மருந்துக் கடையில் வாங்கிய மொறுமொறுப்பான வெள்ளைப் பையை, திருகி முறுகிய, நிறமற்ற கைகளால் பிடித் திருந்தாள். வேறு அங்கிருந்தவர்கள் இரண்டு கல்லூரி மாணவர்கள். இருவரும் ஆண், பெண் சிநேகிதர்கள். ஒரே நிற ஸ்வெற் சேர்ட்டுக் கள் போட்டிருந்தனர். விரல்கள் பிணைந்திருந்தன. பின் ஆசனங் களில் குனிந்து வளைந்திருந்தனர். மௌனமாக எலியற்றும் திருமதி சென்னும் பைக்குள்ளிருந்த சில கடைசி மட்டிக் கேக்கைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். திருமதி சென் துடைக்கும் கட தாசித் தாள்களை எடுக்க மறந்து விட்டாள். அவளுடைய வாயின் மூலையில் பொரித்த மாத் துண்டுகள் சில ஒட்டியிருந்தன. முதி யோர் இல்லத்தை அடைந்ததும் மேலங்கியிலிருந்த முதியவள் எழுந்து, பேருந்து ஓட்டிக்கு ஏதோ சொல்லிவிட்டு இறங்கினாள். பேருந்தோட்டி தலையைத் திருப்பி திருமதி சென்னைப் பார்த்தான்.*

*"பைக்குள் என்ன?"*

*திருமதி சென் திடுக்கிட்டுவிட்டாள்.*

*"ஆங்கிலம் கதைப்பாயா?" பேருந்து திரும்பவும் அசைந்தது. பேருந்தோட்டி பின்னால் பார்க்கும் பெருங் கண்ணாடியில் திருமதி சென்னையும் எலியற்றையும் பார்த்தான்.*

*"ஓம். நான் கதைப்பேன்."*

*"அப்படியென்றால் அந்தப் பைக்குள் என்ன இருக்கிறது?"*

*"ஒரு மீன்" திருமதி சென் பதிலளித்தாள்.*

*"சக பயணிகளை அதன் நாற்றம் தொந்தரவு செய்கிறதுபோல இருக்கிறது. பையனே, நீ அவளுடைய யன்னலை அல்லது வேறெதையாவது திறந்து விட வேண்டும்."*

*சில நாட்களின் பின் ஒரு பின்மதியத்தில் தொலைபேசி மணி அடித்தது. வள்ளத்தில் நல்ல ருசியான ஹலிபற் மீன் வந்திருக்கிறது. திருமதி சென்னுக்கு வைத்திருக்கிறதா? திரு சென்னை அழைத்தாள். அவர் தன் மேசையில் அப்போது இருக்கவில்லை. இரண்டாவது*

தடவை அவள் அவரை அழைக்க முயற்சித்தாள். மூன்றாந் தரமும். இறுதியாக, அவள் குசினிக்குப் போய் அரிமணையுடனும், கத்தரிக் காயுடனும், கொஞ்ச புதினத் தாள்களுடனும் இருக்கும் அறைக்கு வந்தாள். கத்தரிக்காயை நீளமாக, மெல்லியதாக அரிந்து பின் சிறிய சிறிய சதுரங்களாக, சதுரச் சீனிக் கட்டிகள் போல வெட்டினாள்.

"இதை மீனும் பச்சை வாழைக்காயும் போட்டு ருசியாகச் செய்யப் போகிறேன்." அவள் அறிவித்தாள். "பச்சை வாழைக்காய் இல்லாமல் தான் செய்ய வேண்டி இருக்கிறது."

"நாங்கள் மீனை எடுக்கப் போகிறோமா?"

"நாங்கள் மீனை எடுக்கப் போகிறோம்."

"திரு சென் எங்களைக் கூட்டிக் கொண்டு போகப் போகிறாரா?"

"உன் சப்பாத்துக்களைப் போடு."

அவர்கள் வீட்டைச் சுத்தம் செய்யாமல் சென்றார்கள். வெளியே கடுங்குளிராக இருந்தது. எலியற் தன் பல்லில் கூட அதை உணர்ந் தான். காரில் ஏறினார்கள். திருமதி சென் பலமுறை சல்லிக்கல் வளைவில் சுற்றிச் சுற்றி ஓட்டினாள். ஒவ்வொரு முறையும் பிரதான வீதியில் வரும் வாகனங்களை பைன் மரச் சோலையில் தன் காரை நிறுத்திப் பார்த்தாள். திரு சென் வரும்வரை அவள் காரோட்டிப் பழகிறாள் என்று எலியற் நினைத்தான். பிறகு சமிக்ஞையைக் கொடுத்து பிரதான வீதியில் திருப்பினாள்.

விபத்து திடீரென நடந்தது. ஒரு மைலுக்குப் பிற்பாடு திருமதி சென் இடது பக்கம் திருப்பினாள். அது திருப்ப வேண்டிய இட மல்ல. முன்னுக்கு வந்த கார் ஒன்று அவளை வெட்டி விலத்திப் போனது. ஹோரணை அடித்ததால் மிரண்டு அவள் நிலைகுலைந்து காரை அடுத்த பக்கத்தில் இருந்த தொலைபேசிக் கம்பத்தில் மோதினாள். ஒரு பொலிஸ்காரன் வந்து அவளின் காரோட்டும் உரிமத்தைக் கேட்டான். காட்டுவதற்கு அது அவளிடம் இருக்க வில்லை. "திரு சென் பல்கலைக் கழகத்தில் கணிதவியல் கற்பிக் கிறார்." அதை மட்டும்தான் சொன்னாள்.

காருக்கு காயம் கொஞ்சம்தான். திருமதி சென்னின் சொண்டு வெட்டப்பட்டிருந்தது. எலியற், விலா எலும்பில் சிலநேரம் வலி இருந்தது என்று முறையிட்டான். காரின் முன் பக்க தண்டு நெளிந் துள்ளது. அதை நிமிர்த்த வேண்டும். திருமதி சென்னின் தலையில் வெட்டுக்காயம் உள்ளதாக பொலிஸ்காரன் நினைத்தான். ஆனால் அது குங்குமம் மட்டுந்தான். திரு சென்னை அவரின் சகபாடி ஒருவர் கூட்டி வந்தார். பொலிஸ்காரன் தன் படிவங்களை நிரப்பும் போது திரு சென் அதிக நேரம் கதைத்தார். ஆனால் திரும்ப வீட்டுக்குப் போகும்போது திருமதி சென்னுடன் கதைக்கவில்லை. காரிலிருந்து இறங்கும்போது, திரு சென் எலியற்றின் தலையில் தடவி, "நீங்கள் அதிஸ்ரக்காரர் என்று பொலிஸ்காரன் சொன்னான்.

எந்தவிதக் கீறலுமின்றி தப்பியது உங்கள் அதிஸ்ரம்." சிலிப்பர்களைக் களற்றி புத்தகத் தட்டில் வைத்துவிட்டு, இருக்கும் அறை நிலத்தில் இன்னும் இருந்த அரிமணையை திருமதி சென் எடுத்து வைத்தாள். குப்பை வாளிக்குள் கத்தரிக்காய்த் துண்டுகளையும் புதினத்தாள் களையும் எறிந்தாள். எலியற்றுக்காக கிறக்கர் பிஸ்கற்றில் கச்சான் பட்டரைப் பூசி ஒரு கோப்பையில் வைத்து கோப்பி மேசையில் வைத்தாள். ரிவியைப் போட்டாள். "அவனுக்குப் பசியாக இருந்தால் உறைகுளிர்ப் பெட்டியிலிருந்து ஒரு பொப்சிக்கிள் ஐஸ்கிறீம் கொடுங் கள்" என்று திரு சென்னுக்குச் சொன்னாள். திரு சென் ஃபோர் மிக்கா மேசையில் இருந்து தன் கடிதங்களைத் தெரிந்து கொண்டிருந் தார். அவள் தன் படுக்கையறைக்குப் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள். எலியற்றின் தாய் ஆறு மணிக்குக் கால் மணிநேரம் இருக்க வந்தபோது திரு சென் விபத்தைப் பற்றி விபரமாகச் சொன் னார். நவம்பர் மாத மீதிக் காசுக்குக் காசோலை கொடுக்கும்போது திருமதி சென்னிற்காக மன்னிப்புக் கேட்டார். அவள் இளைப்பாறு கிறாள் என்று சொன்னார். ஆனால் எலியற் கழிவறைக்குப் போகும் போது திருமதி சென் அழுவது கேட்டது. அவன் தாய் அந்த ஒழுங்கு ஒருவகையில் திருப்தியாகவே அமைந்துள்ளது என்றும் அது தனக்கு ஆறுதலான விசயம்தான் என்றும் திரும்பி வீட்டுக்குக் காரில் போகும்போது ஒத்துக் கொண்டாள். அதுதான் திருமதி சென் னுடன் கடைசியாக எலியற் கழித்த பின்மதியம். அதுமட்டுமல்ல அவள்தான் கடைசியான குழந்தைகள் பராமரிப்புக்காரி. அதன் பிறகு அவன் தாய் அவனுக்கொரு திறப்புச் செய்து கொடுத்தாள். அதை அவன் தன் கழுத்தில், கயிற்றில் கட்டித் தொங்கப் போட்டி ருந்தான். அவசர நேரத்தில் அவன் அயலவர்களைக் கூப்பிட வேண்டும். அத்துடன் கடற்கரை வீட்டுக்குள் போக அத்திறப்பு உதவும். முதல் நாள், தன் மேலங்கியை கழற்றப் போகும்போது தொலைபேசி மணி அடித்தது. அது அவனின் தாய் அலுவலகத்தில் இருந்து கூப்பிட்ட அழைப்பு. "நீ இப்போ பெரிய பையன். எலியற்." அவள் சொன்னாள். "நீ நல்லாய் இருக்கிறாயா?" எலியற் குசினி யன்னலூடாகப் பார்த்தான். மண்ணிற அலைகள் கரையிலிருந்து பின் சென்றன. நல்லாகத்தான் இருக்கிறேன் என்று அவன் சொன்னான்.

'Mrs Sen's' - Jhumpa Lahiri

# குரங்குடன் ஒரு பெண்

லெனட் மைக்கெல்ஸ்

அவனுடைய விவாகரத்து முடிந்து அடுத்த ஆண்டு. இளவேனிற் காலம். ப்பியெட் தனியாக ஜேர்மனியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் ஓர் இளம் விலைமாதிடன் காதல் வசப்பட்டான். அவள் பெயர் இங்கர். மேலும் பயணம் செய்யும் திட்டத்தை அவன் கைவிட்டான். அவர்கள் இருவரும் இரண்டு நாட்கள் கழித்தனர். முக்கியமாக ப்பியெட்டின் அறையில்தான். பகலுணவுக்கும் இரவுணவுக்கும் அவளை உணவகங் களுக்கு அழைத்துச் சென்றான். தனக்கு விடுதலை வேண்டும் என்று மூன்றாம் நாள் இங்கர் சொன்னாள். ப்பியெட் வருவதற்கு முந்தி அவளுக்கு ஒரு வாழ்க்கை இருந்தது. இப்போது அவளுக்கு ப்பியெட் மட்டுந்தான் இருந்தான். மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோயி லுக்கும் மிருகக்காட்சிசாலைக்கும் அம்மாநகரம் பெயர் பெற்றது என்று அவனுக்கு நினைவூட்டினாள். “நீ போய்ப் பார். இங்கர் என்ற பெண்ணிலும் பார்க்க இங்கு அதிகம் இருக்கிறது.” அவற்றை விட, செய்ய வேண்டிய சில்லறை வேலைகளைக் கூட அவள் கவனியாமல் விட்டு விட்டாள். பல் வைத்தியரைப் பார்க்க வைத்த நியமநேரத்தையும், உள்ளூர் அருங் காட்சியகத்தில் கற்கும் கடதாசி புனருத்தாரண வகுப் புக்கள் சிலவற்றையும் தவற விட்டுவிட்டாள். அவள் வகுப்புக்கள் பற்றிச் சொன்னதும் ப்பியெட் அதில் ஆர்வத்தை வெளிப்படுத்தவும், கடதாசி புனருத்தா ரணம் பற்றிக் கேள்விகள் கேட்கவும் நினைத்தான். ஆனால் அதில் அவனுக்கு ஆர்வமிருக்கவில்லை. “நீ இன்னும் சில வகுப்புக்களைத் தவறவிடலாம்” என்று அவன் சொன்னான். அவன் தொனி சோர்வாயிருந்தது. அதற்கு அவன் வருந்தினான். ஆனால் அவள் அவனைப் புண்படுத்தியது சரியெனவே சமாதான

மடைந்தான். அவன் இங்கருக்காக அதிகம் செலவழித்திருந்தான். அவன் இன்னும் நன்றாகவே கவனிக்கப்பட்டிருக்க வேண்டும். அவன் அவளுடைய வாழ்க்கை அல்ல. ஆனால் அவன் தன் பயணத் திட்டங்களை நிறுத்தியிருந்தான். அவன் அங்கு ஒரேயடியாக இருந்து விடப்போவதுமில்லை. மாவட்டத் தலைமைக் கிறிஸ்தவக் கோயிலையும் மிருகக் காட்சிசாலையையும் அவள் நினைவூட்டி இருக்கத் தேவையில்லை. அப்படியான விசயங்கள் அவனுடைய பயணக் குறிப்பேட்டில் சான் பிரான்சிஸ்கோவிலுள்ள முகவரால் ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவனிடம் ஒரு பயண வழிகாட்டியும் உள்ளது.

உண்மையில் ப்பியேட் தன் பயணத்தில் பலவற்றைப் பார்ப்பதற்குத் திட்டமிட்டிருந்தான். ஆனால் தன் ஹோட்டலறைக்கு வந்த ஒரு சில கணங்களிலே அவன் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பணிப்பையன் அல்லது அறையைச் சுத்தம் செய்பவள் என்று நினைத்தான். அப்போது அவன் கண்டது அவளை. அவள் பெரிதாக மன்னிப்புத் தெரிவித்தாள். அத்துடன் வெளிப்படையாகவே துயருற்றதாகவும் தெரிந்தாள். அவள் பிழையான அறைக்கு வந்துவிட்டாள். ப்பியெட் மயக்கப்பட்டான். வஞ்சிக்கப்படவில்லை. அவளை உள்ளே வரும்படி அழைத்தான்.

இப்போது மூன்றாம் நாள் மாலை. ப்பியெட் சொன்னான்: “உன் வகுப்புக்களையும் உன் சில்லறை வேலைகளையும் பற்றி நான் கேட்க விரும்பவில்லை.” அவளின் கூலியை இரண்டு மடங்காக்குவான்.

ப்பியெட் பணக்காரனல்ல. ஆனால் அவனுக்குக் கொஞ்சம் பூர்வீகப் பணம் கிடைத்தது. அவனுடைய விவாரத்துத் தீர்வில் நீதிமன்றத்தால் அப்பணம் விலக்கப்பட்டிருந்தது. அதனால் அது அவனுக்குத் தாராளமாகச் செலவழிக்கக் கூடிய பணம்.

ஊதாரித்தனமாகவல்ல. சான் பிரான்சிஸ்கோவில் தொலைக்காட்சி உற்பத்தியில் தான் செய்த வேலையை விட்டுவிட்டுப் பயண முகவரிடம் சென்றான். பயணத்திற்கு அவனுக்கு அதிக செலவாகியது. ஆனால் இங்கரைக் கண்டு அவளின் மேல் காதல் வசப்பட்டான். அதனால் அப்பணத்துக்குரிய மதிப்பை நிச்சயமாகப் பெறுவதாகவே அவள் இப்படிச் சொல்லும்வரை நினைத்தான்: “தயவுசெய்து நான் என்ன செய்ய வேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்று சொல்லக்கூடாது. இது பணத்துடன் சம்பந்தப்பட்ட விஷயமல்ல.”

இங்கர் இன்னும் இளமையாக இருக்கின்றாள் என்ற போதிலும், அவள் முழுவதாகத் தன் தொழில் சார்ந்தவளல்ல என்றபோதிலும் அவளுடைய அந்தக் குறிப்புரை அவள் செய்யும் தொழிலுடன் முரண்படும் ஒன்று. அவள் “செய்ய வேண்டும்” என்று சொன்ன

விதம் அவன் சொன்னமாதிரியாகவே இருந்தது. அது அவனைத் தொந்தரவு செய்தது. அவளின் அந்தப் போலிப் பாவனையில் ஓர் எதிப்புணர்வைக் கண்டான். இங்கரைத் தான் குறைத்து மதிப்பிட்டோமோ, மீட்க முடியாத தன் குணத்தில் அவளுக்கு ஒரு வெறுப்பை ஏற்படுத்திவிட்டோமோ என்று பயந்தான்.

அவன் தன் உணர்ச்சிகளை சாதாரணமாக வெளிப்படுத்தினான். சாதாரணமாக நேர்மையாக இருந்தான். இருந்தும் அவளை எப்படியோ புண்படுத்திவிட்டான். அவளுடைய எதிர்வினை நியாயமற்றது. அவன் சொன்னதில் எது அவளைப் புண்படுத்தியது என்பது அவனுக்கே தெரியாது. அதைவிட மோசம் தன் மாஜி மனைவியுடன் உள்ள அதேபோன்ற உறவைத் தான் இங்கருடன் ஏற்படுத்திவிட்டோமா என்று பயந்தான். இருபத்தைந்து வருட திருமண வாழ்வில் தன் மிக எளிய குறிப்புரைகளுக்குக் கூடப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதிர்ப்புணர்வைக் காட்டிக்கொண்டிருந் தாள் அவள். அவளைக் கோபப்படுத்துமளவுக்கு என்ன சொல் கிறோம் என்றே அவனால் ஊகிக்கக் கூட முடியாது. இப்போது இன்னொரு நாட்டில் இன்னொரு பெண்ணுடன் காதலாக இருக் கையில் – விலைமாதுவாக இருந்த போதிலும் – விவாகரத்துச் செய்த அதே துயரங்களில் சிக்கிக்கொண்டான் ப்பியெட்.

பல விஷயங்கள் மாறுகின்றன என்று யோசித்திருந்தான். உண்மையில் அவை அப்படியல்ல.

ப்பியெட்டின் திருமணம் பற்றி இங்கருக்கு எதுவுமே தெரியாது. ஆனால் ஒரு வாடிக்கையாளன் ஒருத்தியை விரும்பிவிட்டால் அவனைக் கழற்றுவது சிரமம் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். ப்பியெட் அவளின் ஐந்தாவது வாடிக்கையாளன் மட்டுந்தான். அவளே எதிர்பார்க்காத அளவு அவனை அவள் குழப்பிப்போட் டாள். அது தான் அவளைக் குறிப்பாகத் துன்பப்படுத்தியது. அவன் மூளை குழம்பியவன் மாதிரிப் பேசினான். கூட்டம் நிறைந்த உணவகத்தில் சத்தம் போட்டான். “நான் இரண்டு மடங்கு தருவேன்” என்று சொல்லி மேசையில் தட்டினான். அது எப்படி யான அவமானம். பரிசாரகன் என்ன நினைத்திருப்பான்? ஓரளவு அவள் பயந்தாள். “நீ ஒரு இனிமையான மனிதன்” என்றாள். “மிகத் தாராளமானவன். ஜேர்மனியில் உள்ள பல பெண்கள் சும்மா உன்னை அடைய விரும்புவார்கள்.”

“உனக்குப் பணம் கொடுக்கவே நான் விரும்புகிறேன். அது உனக்குப் புரியவில்லையா?”

அது அவளுக்குப் புரிந்தது. ஆனால் அதேநேரம் திகைத்துப்போய், கடிந்துகொண்டு, இல்லையென்று தலையாட்டினாள். “நீ வீண் விரயம் செய்பவன் என்று எனக்குத் தெரியும். உன்னைப் போல் நானிருந்தால் விரைவில் ஒழுக்கங்கெட்டவளாகிவிடுவேன். என்

*வாழ்வு ஒழுங்கற்றதாகிவிடும். என் குரங்குக்கு அதன் உணவு கொடுக்காமல் மேசையிலிருந்து விழுந்து கிடக்கும் உணவைக் கொடுக்க வேண்டி வந்துவிடும். ஏனென்றால் அது எனக்கு சந்தோசத்தைக் கொடுக்கும். அதன் பிறகு நான் ஒவ்வொரு முறையும் மேசையில் சாப்பிடப் போகும்போதும் அது உணவுக்குக் கெஞ்சும். அது எனக்கோ அதற்கோ நல்லதல்ல.”*

*“நான் உன் குரங்கல்லவே.”*

*“நீ அதிலும் பார்க்கச் சிக்கலானவன் என்று நினைக்கிறாயா?”*

*ப்பியெட் சிரிப்பான் போலிருந்தது. ஆனால் இங்கர் பகிடி விடவில்லை என்பது புரிந்ததும் அதைச் செய்யவில்லை. அவளு டைய வாசகம் தட்டையாகவும் மிக எளிமையாகவும் இருந்தது. அவள் என்ன எண்ணினாள் என்பது ப்பியெட்டுக்கு நிச்சயமாக வில்லை. அவள் கேட்டதாக இருக்கலாம். ஆனால் குரங்கிடம் இருப்பவை தான் ப்பியெட்டிடமும் உள்ளதுபோல அவளுக்குப் பட்டிருக்கலாம். அதாவது, ஐம்புல அறிவுள்ளவை அனைத்தும் சமமானவை என்பது போல. அசிசியின் ஃபிரான்சிஸ்ஸின் மனதுள் அவனை அவள் விட்டிருந்தாள்.*

*இங்கரைத் தெரிந்த அக்காலத்தில் நடந்த பல நிகழ்வுகள் போல, அவன் அவளில் ஒருவித அருவருப்புச் சுவைதட்டுகிற வழிபாட்டு ணர்வால் மேலோங்கப்பட்டிருந்தான். அவன் கண்கள் மினுமினுத் தன. ஒரு பெண்ணைப் பற்றி இப்படி எக்காலமுமே உணர்ந்த தில்லை. ஆன்மீகக் காதல். அதேவேளை அவளைத் தன்வசமிழக்கச் செய்ய வேண்டுமென்ற சக்திமிக்க இச்சையும் அவனுக்கு இருந்தது. உண்மையில் அவன் அவளைத் தன் ஹோட்டலறையில், படுக்கை யில், நிலத்தில், திரும்பத் திரும்ப அதைத்தான் செய்தான். ஆனால் ஒவ்வொரு முறை அவனுடைய இச்சை திருப்திப்பட்டபோதும் அது குறையாமலும், திருப்திப்படாமலும் இருந்தது.*

*“நல்லது. அப்படியென்றால் நீ என்ன?” அவள் மென்மையாகக் கேட்டாள்.*

*ப்பியெட் தானே ஆச்சரியம்படும்படி, “நான் ஒரு யூதன்” என்றான். பலமான, முக்கியமான உணர்ச்சி பீறிட்டு வர உண்மை யில் அவன் ஒரு யூதன் என்பது அவளைத் தாக்கியது. இங்கர் தோளைக் குலுக்கினாள். “என்னிலும் யூத இரத்தம் ஓடலாம். அப்படிப்பட்ட விஷயங்கள் யாருக்குத் தெரியும்?”*

*மேலும் அர்த்தமுள்ள, மேலும் உணர்ச்சியுள்ள பதில் கிடைக்கும் என்று ப்பியெட் எதிர்பார்த்தான். மாறாக, திரும்பவும் அதே சாராம்சமான இங்கர்தான் அவனுக்குத் தெரிந்தாள். அவளுடைய தன்னியல்பான ரீதியில் அவளும் குரங்கைப் போலவே வஞ்சக மற்றவள். அவளிடம் விசேடமாக வளர்த்துக்கொண்ட உணர்திறன் இருக்கவில்லை. வரலாறு பற்றிய எண்ணம் இருக்கவில்லை.*

அவள் அவளேதான். நேற்று இவ்வுலகத்தில் விழுந்தவள்போல. தூய்மையான, மெய்யான தேவதை.

அவளுடைய இலக்கம் அவனுக்குத் தெரியும் என்று எண்ணினான். அவளுடைய இலக்கம் அவனுக்குத் தெரிந்தது அவளிலிருந்து அவனை விடுவிக்கவில்லை. அவனுடைய உணர்ச்சிகள் செறிவு குறைந்தவையுமல்ல. வியப்புக் குறைந்தவையுமல்ல. அத்துடன் – அதற்கு வேறு வார்த்தை இல்லை – திருப்தியற்றவை. ஒருவித இசையைப் போல அவள் அவனில் பற்றிக்கொண்டாள். பிறருடன் தொடராத செல்லோ இசைக்கருவி குழாமை அவன் எண்ணினான்.

“இங்கர், என்னில் இரக்கம் காட்டு. நான் உன்னைக் காதலிக்கிறேன்” என்று குசுகுசுத்தான்.

“அபத்தம். நான் மிக அழகானவள் அல்ல.”

“ஓம். நீ மிக அழகானவள்.”

“நீ அப்படி உணர்ந்தால் . . .”

“அப்படித்தான்.”

“இப்போ அப்படித்தான் உணர்வாய். பிறகு, யாருக்குத் தெரியும்?”

“என்னில் நீ ஏதாவது உணர்கிறாயா?”

“நான் விருப்பு வெறுப்பற்றவளல்ல.”

“அவ்வளவுதானா?”

“நீ என்னைக் காதலிக்கலாம்.”

“நன்றி.”

“சரி. நான் நினைக்கிறேன் . . .”

“நான் வீண் விரயக்காரன்.”

“அது எனக்குப் பாரமான விஷயம்.”

“நான் நல்லவனாக இருக்க முயற்சிப்பேன்.”

“அந்தத் தீர்மானத்தை நான் பாராட்டுகிறேன்.”

“நான் உன்னைத் திரும்பவும் எப்போ சந்திக்கலாம்?”

“நீ வாக்குறுதியளித்தது போல எனக்குப் பணம் தருவாய் அல்லவா?”

“நிச்சயமாக.”

புதிய புரிதலை அறிந்துகொள்வதற்குப் போல அவனுடைய முகத்தை அவள் நன்றாகக் கவனித்தாள். பிறகு, அவள் குரலில் எந்தவித தயக்கமுமின்றி சொன்னாள்: “இன்றிரவு நான் வீட்டுக்குப் போகிறேன். எனக்காக நாளை இரவு வா. என் வீட்டு மாடிக்கு வந்து என் அறைத் தோழியைச் சந்தி.”

“வீட்டுக்குக் கட்டாயம் போகத்தான் வேணுமா?”

“குளியலறைத் தொட்டியில் என் உள்ளாடைகளைக் கழுவுவதை நான் வெறுக்கிறேன்.”

“உள்ளாடைகளை நான் கழுவுவேன்.”

“வீட்டில் செய்ய வேண்டிய சில்லறை வேலைகள் இருக்கின்றன. நீ என்னைப் பயப்படுத்துகிறாய்.”

“நான் ஒரு வாடகைக் காரை அழைக்கிறேன்.”

“இல்லை. என் பைசிக்கிள் இன்னும் ஹோட்டலில் தான் நிற்கிறது.”

அடுத்த நாட்காலை ப்பியெட் தலைமுடி வெட்டும் இடத்திற்குச் சென்றான். பிறகு தனக்குப் புதிய மேல்கோட் ஒன்று வாங்குவதற் காகக் கடைகளுக்குச் சென்றான். இங்கரைப் பார்ப்பதற்கு இன்னும் அதிக நேரம் இருந்தது. பின்மதியத்தில் மாவட்டக் கிறித்தவக் கோயிலுக்குச் செல்லத் தீர்மானித்தான். அது கரும் கற்களால் கட்டப்பட்டது. இடைக்காலச் சிற்பப் பாணியில் அமைந்தது. வளைந்து செல்லும், ஒடுங்கிய மானிய கால வீதியில், சுற்றிவர உள்ள வீடுகளிலும் உயரமாக, சடுதியாக அது துருத்திக்கொண்டு நின்றது. கல்லுள் குடைந்திருந்த புனித உருவங்களைப் பார்த்துக் கொண்டு ப்பியெட் கோயிலைச் சுற்றி நடந்தான். அதற்குள்ளிருந்த ஒரு குரங்கின் உருவம் அவனை ஆச்சரியப்படுத்தியது. அதன் கல்லாலான வெறுப்பூட்டுகிற சிறிய முகம் கோணலாகி, வீறிட்டுக் கத்திக்கொண்டிருந்தது. அது அங்கே என்ன செய்கிறதென்று அவனால் கற்பனைபண்ண முடியவில்லை. ஆனால் அந்தக் கோயில் முழுவதுமே அந்த வீதியிலுள்ள சாதாரணமான வீடுகளுக்கிடையில் விசித்திரமானதாகவும், மதிப்பார்வத்தை ஊட்டுகிறதாகவும் அந்நியமானதாகவும் இருந்தது.

உத்தியோகத்திற்குப் போடும் உடுப்பில் ஆண்கள், சீருடையில் செல்லும் பாடசாலை மாணவர்கள், பைகள் நிறைய உணவுப் பொருட்கள் சகிதம் வீட்டுப் பெண்கள் அந்தக் கோவில் அருகால் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எவருமே அதைக் கவனிக்க வில்லை. எவருக்குமே அதனுடன் உறவு இருந்ததைப் போல இல்லை. நிச்சயம் அவர்கள் மற்ற விதமாகத் தான் உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் இந்த மாநகரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார் கள். கோவில் அந்த இயற்கை நிலக்காட்சியில் நிலையான சிறப்புக் கூறு. உறுதியான, ஆடம்பரமற்ற சிற்பவேலைகள். ப்பியெட் உள்ளே சென்றான். நடுக்கூடத்தை அடைந்தபோது, அதன் விசாலத்தால் வியப்படைந்து, அளவில் சிறியவனாகத் தன்னை உணர்ந்தான். அனைத்திலும் பார்க்கத் தனிமையை அதிகம் உணர்ந்தான். கிறிஸ்தவ சமய அர்த்தத்தின் சக்தியை அவனால் எக்காலமுமே புரிய முடியாது என்ற உண்மை அவனைத் தாக்கியது. பொறாமையும்

கோபமும் கொண்ட கடவுளுடன், யூதர்களுக்கு அத்துணை பெரிய விசாலமான இடம் தேவையில்லை. ஒரு வெறுமனான இடமே போதும். ஒரு மாவட்டக் கிறித்தவக் கோயிலிலும் பார்க்க அது விரும்பத்தக்கது. தங்கள் தெய்வத்துடன் நெருக்கமாக இருப்பதற்கும் வீட்டுத் தொடர்புகளுக்கும் அது பொருத்தமானது. வேதனைகளிலும், புனிதமான சன்னிகளால் ஏற்பட்ட மகிழ்ச்சிகளிலும் சொந்த உள்மன நிலைக்கு ஆளாகும்வரை ஜோனாவைப் போல் எதிர்க்கும், அல்லது சண்டையிடும் தெய்வம் விரும்பத்தக்கதே.

ஹோட்டலுக்கு திரும்பி நடந்து போய்க்கொண்டிருக்கையில் இங்கர் குரங்கைப் பற்றிக் கதைத்தது அவனுக்கு நினைவு வந்தது. உணவகத்தில் கிளறியது போல இந்த நினைவும் பால் இச்சையைக் கிளறியது. அதைவிட வேறெதுவும் தெளிவாகவும் உண்மையாகவும் இருக்க முடியாது. அது அவனுடைய காற்சட்டையின் முன்பக்கத்தைத் துருத்த வைத்தது. ஒரு கோப்பிக் கடைக்குள் போய் கொஞ்ச நேரம் உட்கார்ந்து பத்திரிகை வாசிப்பதுபோல நடித்தான்.

அன்று மாலை ஹோட்டலறையில் தன் புதிய தலைமுடி வெட்டுடனும், புதிய ஜக்கெற்றுடனும் குளியலறைக் கண்ணாடியின் முன்னால் தன்னை நிறுத்திப் பார்த்தான். முன்பு ஒருமுறை அவன் அழகானவாக இருந்தான். சிங்கத்தின் தலைபோன்ற வலுவான அவன் தலையில் அழகின் அம்சங்கள் இன்னும் இருந்தன. ஆனால் அவனுடைய கண்களின் அடியில் கரும் பைகள் தொங்கின. அவை பல்லாண்டு வேதனைகளையும் தத்துவங்களையும் வைத்திருந்தன போன்றிருந்தன. கண்ணீர் வடிக்கிறது போன்ற தன்மையை அவன் கண்களுக்கு அவை கொடுத்தன. "வேட்டை நாயின் முகத்தைப் போன்று உன் முகம் ஆகிக்கொண்டிருக்கிறது" என்று அவன் தன் பிம்பத்திற்குச் சொன்னான். ஆனால் அவன் துணிந்தவன். அதிலிருந்து தன் பார்வையை விலக்கவில்லை. அவன் இழப்புக்களுக்கு ஈடுசெய்யத் தீர்மானித்தான். இங்கருக்கு ஒரு பரிசு வாங்க வேண்டும். புதியதாக, அழகானதாக, தன் இதயத்தை வெளிப்படுத்துவதுபோல.

ஹோட்டலின் பிரதான தளத்தில் ஒரு ஆபரணக் கடையின் ஜன்னலில் இரத்தத் துளிகள் போன்ற இரு மாணிக்கக் கற்கள் பதித்த ஒரு சோடி தங்கத் தோடுகளைக் கண்டான். ஐயத்துக்கிடமின்றி உயர்ந்த விலையுள்ளவை தான். அவனுடைய பிரயாண வரவு செலவுத் திட்டத்தில் அது மிக அதிக விலைதான். இருந்தும் அக்கடைக்குள் நுழைந்து அவற்றின் விலை என்ன என்று கேட்டான். அப்படிக் கேட்பது பிழை என்று தெரிந்தும் கேட்டான். அவன் நினைத்தது சரி. அவன் எண்ணியதிலும் பார்க்க அதன் விலை அதிகமாகத்தான் இருந்தது. அது அவனுக்குக் கிடைத்த பூர்வீகப் பணத்தில் அரைவாசி. அந்தத் தோடுகளின் விலையும் பயணத்தின் செலவும் சேர்ந்தால் அதன் பிறகு மிஞ்சும் பணம்

சன் ஃபிறான்சிஸ்கோவில் வாடகை கட்டவே அரும்பொட்டாகத் தான் காணும். அத்துடன் அவன் அங்கு திரும்பிப் போகும்போது அவனுக்கு எந்தத் தொழிலும் காத்துக்கொண்டும் இல்லை.

அவன் அந்தக் கடையை விட்டு வெளியேறி தெருவிலுள்ள மற்றக் கடைகளின் யன்னல்களைப் பார்த்துக்கொண்டு சென்றான். அவனுடைய கவனத்தைப் பெற்ற மற்றப் பொருட்கள் அனைத்தும் நீர்ச்சுழற்சி போன்ற அந்தத் தங்கத்தையும் அதனுள்ளே இருந்த உணர்ச்சியூட்டுகிற சிகப்புக் கோளமும் நினைவில் வந்தவுடன் குறைந்துவிட்டன.

அந்தத் தோடுகள் மிகவும் விலையுயர்ந்தன. சினமூட்டுகிற விலை. சந்தைப்படுத்தும் பிசாசொன்றினால் அதன் விலை தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அப்படி ப்பியெட் எண்ணினான். ஏனென்றால் அந்தத் தோடுகள் இப்போது இவனை பிடித்தாட்டுகின்றன. நிமிடங்கள் செல்லச் செல்ல அவனின் பதற்றம் அதிகரித்துக் கொண்டே சென்றது. வீதிகளில் தொடர்ந்து நடந்துகொண்டிருந் தான். எந்தவித முனைப்புமின்றி கடைகளின் யன்னல்களைப் பார்த்துக்கொண்டு. தோடுகளை மறக்க முடியாமல். ஆபரணக் கடைக்குத் திரும்பவும் போகக்கூடாது என்ற தீர்மானத்துடன் இருந்தான். ஆனால் பிறகு இப்படி எண்ணினான்: அந்தத் தோடு களை வாங்குவதற்காகவல்ல பார்ப்பதற்காக மட்டும் அந்தக் கடைக்குத் திரும்பிப் போனால் அவை விலைப்பட்டிருக்கும். அப்படியானால் அவற்றை வாங்குவதற்குப் பிந்திவிட்டது என்று எண்ணிக்கொண்டு அந்தக் கடைக்கு அவசரமாகச் சென்றான். அவனுடைய ஆறுதலுக்கு அவை இன்னும் அங்கேயே இருந்தன. அவன் நினைவிலிருந்ததிலும் பார்க்க அதிக அழகுடன் இருந்தன.

விற்பனைக்காரி ஐம்பது வயதுகளைச் சேர்ந்தவள். மிக அதிகமாக தன்னை அலங்கரித்திருந்தாள். மடிப்புக்கள் கொண்ட கறுத்த பட்டாடைகள் அணிந்திருந்தாள். கண்களில் தங்க வளையக் கண்ணாடிகள் போட்டிருந்தாள். ப்பியெட்டிற்கு முன்னிலையில் ஆபரணங்கள் வைத்துள்ள கண்ணாடி மேசையடியில் அவள் நின்றாள். கொஞ்ச நேரத்துக்கு முன்பு தோடுகளின் விலையைக் கேட்டவன் இப்போது அவற்றைப் பார்க்காமல், அட்டியலையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனால் அவளை ஏமாற்ற முடிய வில்லை. அவனுக்கு என்ன வேண்டும் என்று அவளுக்குத் தெரியும். அவனைக் கேட்காமலே தோடுகளை அதன் பெட்டியில் இருந்து எடுத்து மேசையில் வைத்தாள். அது மிகவும் முறைகேடான செயல் என்று அவன் நினைத்தபோதும் ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ சாதாரண ஒரு கருத்தைச் சொல்வது மாதிரி அவள் சொன்னாள்: "இதைப் போன்ற தோடுகளை நான் முன்னெப்போதுமே பார்க்க வில்லை. இதைப் போன்றதை இனிமேலும் பார்க்கமாட்டேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

“அவற்றின் விலை மிக அதிகம்.”

“அப்படி நினைக்கிறாயா?" அவன் சொல்லும் அபிப்பிராயத்தில் வெளிப்படையாக ஆர்வம் காட்டாதது போல அவள் அவனைத் தவிர்த்து வீதியை நோக்கினாள். அது ஒரு பின் மதியம். கடை சாத்தும் நேரம். அவனின் கருத்துரைக்கு அவள் காட்டிய ஏனோ தானோ மனோபாவம் அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

“விலை அதிகம்" அவனுடன் பேரம் பேச அவளை அழைப்பது போல அவன் சொன்னான்.

“திருப்பி வைக்கவா?” அவள் கேட்டாள்.

ப்பியெட் மறுமொழி சொல்லவில்லை.

“அவற்றின் விலை அதிகம் என்று நினைக்கிறேன். விலை ஏறி இறங்கும். நீங்கள் விரும்பினால் உங்கள் பெயரட்டையைத் தாருங் கள். சில கிழமைகளில் இந்தத் தோடுகள் விற்காதுபோனால் உங்களைத் தொலைபேசியில் கூப்பிடுகிறேன்” என்றாள்.

அவளுடைய குரலில் ஏளனத்தை உணர்ந்தான். ஆபரணங்கள் என்றால் விலையுயர்ந்தவை. இன்னும் விலையுயர்ந்தவையாகத்தான் இருக்க வேண்டும் என்பது போல. அவன் தன் சஞ்சியை ஜக்கெற் பையிலிருந்து மெதுவாக எடுத்து, தற்கொலை செய்வதில் மகிழ்ச்சி யால் திளைப்பதுபோல தன் பெயரட்டையை அல்ல; பணவட் டையை கண்ணாடி மேசையில், தோடுகளுக்குப் பக்கத்தில் அடித்து வைத்தான். அதைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு, தள்ளிப்போய் மெசினிக்குள்ளால் இழுத்தாள். தன் கை நடுங்குவதை மறைப்பதற் காக அவள் கொடுத்த பற்றுச்சீட்டில் விரைவாகக் கையெழுத் திட்டுத் திருப்பிக் கொடுத்தான். இங்கரின் தொடர் மாடி வீட்டுக்கு வந்தபோது அவனுடைய இதயம் வலுவுடன் வேகமாக அடித்தது. அவன் விடுதலையடைந்தது மாதிரி, எல்லை கடந்த மகிழ்ச்சியடைந் தது போல, ஓரளவு சுகக்குறைவாக உணர்ந்தான். இங்கரை நல்ல உணவகத்திற்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டான். முன்பும் இப்படிச் செய்திருக்கிறான். முன்பு மிகக் குறைவாகவே அவள் மனதிற்கு அது பிடித்திருந்தது. ஆனால் இன்று இரவுணவுக்குப் பின் தோடுகளை அவளுக்கு அவன் கொடுப்பான். உணவகத்தின் வெளிச்சம், சுவையான உணவு, வைன், பரிசாரகர்களின் உபசரிப்பு ஆகியவை விசேஷமாக இருக்கும். தோடுகள் அந்த வேளையைச் செறிவாக்கும். தன்னைச் சரியான வேசியாக நினைக்காதபோதிலும் அவள் மனதில் நல்லெண்ணம் பதிந்துவிடும். அதைவிட, ப்பியெட்டுக்கு அது தேவை.

கட்டைப் பாவாடை அணிந்த ஒரு பெண் கதவைத் திறந்தாள். இங்கரிலும் பார்க்க வயதானவள். அவள் கண்கள் குளிர்ந்த ஊதா நிறம் உடையவை. அவளுடைய கறுத்த தலைமுடி காதுகளுடன் சமமாக நிற்கக்கூடியதாக நறுக்கப்பட்டிருந்தன. அத்துடன் அது

நேராகவும் குறுக்காகவும் முன் பக்கமுடி வெட்டப்பட்டிருந்தது. அது அவளுடைய மெல்லிய உதடுகளின் கடுமையான உணர்ச்சி பாவத்தை வலுப்படுத்தியது. அவளின் அழகால் அவள் எப்படியோ சிதைந்து, உறைந்துப் போனவள் போலக் காணப்பட்டாள். ப்பியெட் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். கிறெற்றா மாற்றி என்று அவள் தன்னைச் சொன்னாள். இங்கருடைய அறைத் தோழி. பிறகு சொன்னாள்: "இங்கர் போய்விட்டாள்."

"அப்படி இருக்க முடியாது."

"அது முடியும்" கிறெற்றா சொன்னாள். அவளுடைய உதடுகள் சிறிது நேரம், இனிமையின்றி சுருண்டன. தன்னுடன் முரண்படு பவர்களை கிறெற்றாவுக்குப் பிடிக்காது என்பது அவனுக்குப் புரிந்தது. இருந்தும் அவன் அவளை நம்பவில்லை. அப்பெண் காழ்ப்புள்ளவள்.

"அவள் தன் குரங்கையும் கொண்டுபோய்விட்டாள். திரு. ப்பி யெட்டே, நீங்களே போய்ப் பாருங்கள். அவளுடைய குளோசெற்றில் உடுப்புக்கள் இல்லை. பெட்டிகள் இல்லை. பைசிக்கிள் இல்லை" என்று சொன்னாள்.

கிறெற்றா வீட்டுக்குள் திரும்பிப் போனாள். அவளுக்குப் பின் னால் ப்பியெட் சென்றான். அவள் காட்டிய அறைக்குள் பார்த் தான். அதற்குள் பின் தொடர்ந்தான். குளோசெற்றும் லாச்சிகளும் வெறுமனே கிடந்தன. அதற்குள் ஒன்றுமில்லை. யாராவது அங்கிருப்பதற்கு அடையாளமே இல்லை. வெறுமையால் தாக்குண்டு தானும் வெறுமையாகப் போய் விட்டது போல உணர்ந்தான்.

"எவரையுமே புரிந்துகொள்ள முடியாது. அவள் மிகவும் கூச்சமுள்ளவள் போலவும் கல்வியில் ஆர்வமுள்ளவள் போலவும் காணப்பட்டாள். ஆனால் ஏதோ குற்றம் செய்திருக்க வேணும். அவளைக் குரங்குடன் என்னுடைய அறைக்கு எடுத்தேனே. நான் ஒரு மடச்சி. அந்த மிருகத்தை நான் தான் அரைவாசி நேரம் கவனித் தேன். தொலைபேசி தொடர்ந்து அடிக்காத நேரமே இல்லை."

"அவள் எங்கே போய்விட்டாள்?" அவன் கேட்டான். அதற்கு அவளிடமிருந்து சரியான, பயனுள்ள பதிலை அவன் எதிர்பார்க்க வில்லை. யார் அப்படிப் போகும்போது தன் முகவரியையும் விட்டுச் செல்வார்கள்? ஆனால் வேறெதை அவனால் சொல்ல முடியும்?

"இதைக் கேட்பது நீங்கள்தான் முதலாவது ஆள் என்றில்லை. அவள் எங்கிருந்து வந்தாளென்றோ அவள் எங்கே போனா ளென்றோ எனக்குத் தெரியாது. உங்களுக்கு ஒரு தேநீர் தரவா?"

கிறெற்றா மேசையடியில் இருந்து ப்பியெட் பக்கம் சாடையாகத் திரும்பினாள். தன் கால்களைக் குறுக்கே தூக்கிப் போட்டாள்.

அவள் திரும்பி எழும்பி இன்னொரு கோப்பையை எடுக்கும் நோக்கம் அவளுக்கு இருக்கவில்லை என்று தெளிவாகப் புரிந்தது. ப்பியெட் இருப்பான் என்று அவள் கருதினாள் போலும். அவளுடைய நீளமான, உடுப்பற்ற, மிகக் கவர்ச்சியான, குதியுயர்ந்த சப்பாத்துக்கள் போட்ட கால்களைப் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. உள் தொடைகளின் வெள் ளைத் தசையில் அவன் கண்கள் மேய்ந்தன. அவன் செருக்கழிந்தும் அசௌகரியப் பட்டும்போனான்.

அவனுடைய பதிலை எதிர்பார்க்காமல் கிறெற்றா தனக்கு ஒரு தேநீர் ஊற்றி, ஒரு வாய் குடித்தாள். அவளுடைய கால்கள் அவனுக்குத் தேவையானதைக் கொடுத்துவிட்டது என்று நினைத்தாளா? இங்கரைப் பற்றி சிலவற்றை அறிவதற்காகச் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று அவன் நினைத்தான். அவளைப் பற்றி அவனுக்கு எதுவுமே அதிகம் தெரியாது.

"மன்னிக்க வேணும். அவளுடைய மறைவு எனக்கு மிகுந்த அசௌகரியத்தைக் கொடுத்திருக்கிறது. ஒருவேளை அது உங்களுக்கு இன்னும் அதிகமாக இருக்கலாம்" என்று தன்னைக் கொஞ்சம் மென்மையாக்கிக்கொண்டு சொன்னாள்.

ப்பியெட் தலையை ஆட்டினான். "இங்கர் உனக்குப் பணம் தர வேணுமா?"

"நுட்பமாகப் பார்த்தால் அவளுக்குத்தான் நான் கொடுக்க வேணும். அவள் ஒரு மாத வாடகையை முன்பணமாகத் தந்திருக்கிறாள். இன்னொரு கோப்பை தேநீர் போட முடியும்." ப்பியெட் ஆம் என்று சொல்ல விரும்பினான். அவனுக்குத் துணை தேவை. ஆனால் அவளுடைய கால்களின் வெண்மை அவனால் பொறுக்க முடியாத, தோற்கடித்து விடக்கூடிய வேட்கையாய்ப்போய்விட்டது. அவற்றை அவனால் பார்க்க முடியவில்லை. "நன்றி. நான் போக வேண்டும்" என்று சொன்னான்.

ஒரு மதுச்சாலையில் ஒரு தொலைபேசி பெயர் விபரப் புத்தகத்தை எடுத்து அருங்காட்சியகத்தின் முகவரியைப் பார்த்து ஒரு வாடகைக் காரைக் கூப்பிட்டான். கடதாசிப் புனருத்தாரணம் பற்றிய வகுப்புக்கள் அவனுக்கு ஞாபகம் வந்திருந்தன. மாலை நேரத்தில் அவ்வகுப்புக்கள் நடந்தன. இங்கர் வகுப்புக்களை விட்டுவிட்டாள் என்று அருங்காட்சியத்தில் ஒரு பரிபாலகர் சொன்னார். அடுத்து அவர்கள் இருவரும் ஒன்றாகச் சென்ற உணவகங்களுக்குச் சென்றான். அவ்விடங்களில் அவள் இருக்க மாட்டாள் என்பது அவன் எதிர்பார்த்ததே. நோவு தருகிற ஏமாற்றம். அவளை எங்குமே காணவில்லை. திரும்பவும் ஹோட்டலுக்கு வந்தான். இரண்டு நாட்கள் சுவரில் சாத்தியிருந்த இங்கருடைய பைசிக்கிள் ஹோட்டல் முன்றலில் இல்லை. பளிங்குத் தரையின்

மங்கல்நிறமும், மேசைக்குப் பக்கத்தில் சட்டிகளில் வைத்திருந்த தாவரங்களின் மலட்டுத்தன்மையும், ஹோட்டல் முன்றலின் தனிமையும், அதன் இன்மையை அவனுக்கு உணர்த்தின.

அவனுடைய அறையில் தோட்டுப் பெட்டியைத் திறந்து இரவு மேசையின் விளக்கினடியில் வைத்தான். அத்தோடுகளின் பெறு மதிக்கான புதிரை, மாயக்கவர்ச்சியை, ஊடறுத்துப் பார்ப்பது போலக் கிளர்ச்சியற்ற ஈர்ப்புடன் உற்றுக் கவனித்தான். பிரபஞ் சத்தைக் கடவுள் படைத்தபின் அது நல்லதாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். “அப்படியானால் அதில் எது நல்லது?” ப்பியெட் தன்னையே கேட்டான். சிகரெட்டு சிகரெட்டாகப் பற்றினான். களைத்தும் மகிழ்ச்சியற்றும்போனான். அது சிந்தனையுடன் நீண்ட காலத் தொடர்புடையது.

இரவு மேசையில் தோடுகள் பளபளத்தன. அவை அவனுக்கு எதையுமே சொல்லவில்லை. அவை பெறுமதியற்றவைபோலக் கிடந்தன. ஆனால் அவை பெறுமதியானவை. வாழ்க்கையைத் தவிர்த்த எதுவுமே ஏதாவது ஒன்றால் பெறுமதியானது. ப்பியெட் அப்படித்தான் சிந்தித்தான். வாழ்க்கையைப் பொறுத்தளவில் அதன் பெறுமதி கேள்விக்கிடமற்றது என்று அவன் கருதினான். ஏனெனில் அவன் என்றுமே தற்கொலை செய்ய நினைத்ததில்லை. மிக மோசமான இந்த நிமிடம்கூட. நித்திரைக்குப் போகுமுன் இரயிலின் நேர அட்டவணையைப் பார்த்துவிட்டு பயண மணிக் கூட்டில் அலாரத்தை வைத்தான்.

மதிய நேரம் ஹோட்டல் பணத்தைக் கட்டிவிட்டு வெளிக்கிட் டான். புதிய ஜக்கெற்றைப் போட்டுக்கொண்டு உணவகத்துக்குச் சென்று சிறப்பானதொரு மதிய உணவுக்குக் கட்டளை இட்டான். துயரப்பட அவன் மறுத்தான். விருப்பில்லாவிட்டாலும் சுறுசுறுப் பாகச் சாப்பிட்டான். பிறகு புகையிரத நிலையத்துக்கு ஒரு ரக்ஸி பிடித்தான். முதலாம் வகுப்பு அனுமதிச் சீட்டு வாங்கினான். அது இன்னொரு பெரும் செலவு. அது அவனுக்குத் தேவைப்பட் டது. தன்னையே கோபத்துடன் திருப்திப்படுத்த விரும்பினான். இங்கர் சொல்வதுபோல “சுய இன்பம்” அனுபவிப்பது.

நிலையத்திலிருந்து புகையிரதம் வெளிக்கிட்டவுடன் புகையிரதப் பெட்டியை இழுத்து மூடிவிட்டு ஜன்னலுக்கருகே நிலையத்தில் வாங்கிய பல வர்ண, விலையுயர்ந்த சஞ்சிகைக்கட்டுடன் சாவதான மாக இருந்துகொண்டான். சஞ்சிகைகள் விலையுயர்ந்த பொருட் களுக்கான விளம்பரங்களால் நிறைந்திருந்தன. ஒவ்வொரு பக்கமும் பிரகாசமான நிறத்துடன் ஒளிர்ந்தது. தசையின்பத்தை ஊட்டுவது போல அது சடசடத்தது. நறுமணம் தவழ்ந்தது. ஏறக்குறைய நிர்வாணமாக நின்ற நங்கையரின் படங்களை உற்றுப் பார்த்து இச்சையை உணர முயற்சித்தான். எதற்காக என்று நிச்சயமாக

அவனால் சொல்ல முடியவில்லை. அவர்களின் உடல்களல்ல. சிலவேளை அது எதிர்காலத்துக்காக, அதிக அனுபவத்துக்காக, அதிக வாழ்வுக்காக இருக்கலாம். பிறகு சிகரெற், தோடுகள் ஆகியவற்றை எடுப்பதற்காக ஜக்கெற் பைக்குள் கையை விட்டான். ஆழ்ந்த சிந்தனையுடன் திரும்பவும் தோடுகளைப் பார்ப்பதற்காக கையை விட்டான். சிகரெற் தட்டுப்பட்டது. ஆனால் தோடுகளைக் காணவில்லை. எந்தப் பைகளுக்குள்ளும் காணவில்லை.

தன் பைகளைத் தேடுவதில் பயனில்லை என்று ப்பியெட்டுக்கு உடனே தெரிந்துவிட்டது (இருந்தும் திரும்பத் திரும்பத் தேடினான்). இரவு மேசையில் வைத்தது ஞாபகம் இருக்கிறது. ஆனால் திரும்ப எடுத்ததாக ஞாபகம் இல்லை. ஏனெனில் அவன் எடுக்கவில்லை. அவனுக்குத் தெரியும். அவனுக்கு அது தெரியும்.

புகையிரதம் மாநகரத்தை விட்டு வெளிக்கிட்டு வேகத்தை அதிகரித்தவுடன் தன் பைகளில் தேடுவதை விட்டுவிட்டான். ஓ கடவுளே. ஏன் தான் தோடுகளை வாங்கினானோ? எப்படி அவன் இத்தனை மடையனாக இருக்க முடியும்? ஒரு கண உணர்ச்சிப் பைத்தியத்தில் நகைக் கடையில் பணவட்டையை அடித்து தன்னைச் செயலிழக்கச் செய்துவிட்டான். தோடுகள் ஒரு சாபம். ஒருவகையில் இங்கரின் மறைவுக்கும் அதுதான் பொறுப்பு. தன்னை மீட்டுவிட வேண்டும். யதார்த்தமாக, செயன்முறையாகச் சிந்திக்க வேண்டும். தோடுகளைத் திரும்ப மீட்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஹோட்டலுடன் தொடர்புகொள்வது அவசியம். புகையிரத்திலிருந்து அல்லது அடுத்த நிலையத்திலிருந்து ஒரு தந்தி கொடுக்க முடியும். ஒரு நடத்துனனைப் பிடிக்க வேண்டும். உண்மையில் அதைப் பற்றி மேலும் சிந்திக்கையில் ஹோட்டலுடன் தொடர்பு கொள்ள வேண்டியதுக்கு அவசரமில்லை என்று தீர்மானித்தான். அது ஒரு நல்ல ஹோட்டல். இது ஜேர்மனி. அமெரிக்காவல்ல. எவரும் தனது தோடுகளைக் களவெடுக்க மாட்டார்கள். அவன் போகும் அடுத்த நல்ல ஹோட்டலுக்கு அது வந்து சேரும். அது ஒரேயடியாகத் தொலைந்து போய்விடவில்லை. அதைப் பற்றி அவன் கவலைப்படவே தேவையில்லை. இப்படித் தன்னைத் தானே தேற்றிக்கொள்ளும்போது அவனுக்கு ஏறக்குறைய கண்ணீரே வந்துவிட்டது. எப்படியாவது அந்தத் தோடுகளை மீட்டுவிட வேண்டும் என்று அவன் விரும்பினான். எழும்பி நின்று கதவடிக்குப் போனான். கதவை நெகிழ்த்தி நடத்துனனைப் பார்க்க வெளிக்கிடுகையில் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. மயக்கமானதொரு எதிர்பார்ப்புடன் கதவை வழுக்கித் திறந்தான். நடத்துனன் திறந்த கையில் தோடுகளை நீட்டிச் சிரித்துக் கொண்டு நிற்பான் என்று எதிர்பார்த்தான். ஆனால், மாறாக இங்கரின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"மன்னிக்க வேணும். நான் தவறான பெட்டிக்கு வந்துவிட்டேன் ..." பிறகு அவள் தன் கைப்பெட்டியை வைத்து விட்டுச் சொன்னாள்: "கொற் பிஹுற்" கைப்பெட்டி நிலத்தில் தடாரென விழுந்து அவளின் காலில் மோதியது.

ப்பியெட் சொன்னான்: "இங்கர்". ஒருவகைத் திருப்தி உணர்வுடன் அவள் அத்தனை அழகாக இல்லை என்பதை உணர்ந்தானே அன்றி வேறொன்றையும் அவன் நினைக்கவில்லை. முடிவற்ற அமைதியான அக்கணத்தில் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய உணர்ச்சிகளும் தெளிவாயின. அது இங்கரைச் சரியாக உள்ளவாறே பார்ப்பதற்கு அவனுக்கு நேரத்தைக் கொடுத்தது. அவள் மெலிந்த, வெளிறிய பெண். வாடிய, நரைநிறக் கண்கள். அவளுடைய உடலமைப்பு வழக்கத்துக்கு மாறாக நேரானது. அப்பழுக்கற்ற, நுட்பமான, இளமையான மனப்பதிவை அவள் கொடுத்தாள். தெளிவான அந்த யதார்த்தத்தை அவள் கொடுத்ததால் அவன் கோபப்பட்டதாகவோ தோடுகளுக்காக கவலைப்பட்டதாகவோ உணரவில்லை. நிறமற்ற இங்கரில் அவை அபத்தமாகப்படும்போல அவனுக்கு இப்போது தெரிந்தது. அவனுடைய இதயம் உடைந்ததுபோல மட்டும்தான் உணர்ந்தான். அதைப்பற்றி அவனால் ஒன்றும் செய்ய முடியாது.

மெதுவான நிச்சயமற்ற புன்சிரிப்புடன் இங்கர் சொன்னாள்: "எப்படிச் சுகம்?"

ப்பியெட் அவளுடைய கைப்பையைத் தூக்கினான். "நீ எப்போதும் முதலாம் வகுப்பிலா பிரயாணம் செய்வாய்?"

"எப்போதும் அல்ல."

"அது எந்தப் பிரபு கதவைத் திறக்கிறாரோ அதைப் பொறுத்தது."

"நான் மிக அழகானவள்." அவள் சொன்னாள். அவளுடைய தொனி இனிமையாகவும் தற்காலிகமானதாகவும், ஓரளவுக்குத் தன்னையே நையாண்டி செய்கிற மாதிரியாகவும் இருந்தது.

"அத்துடன் அதிஸ்ரக்காரியும்."

"அப்படி நான் நினைக்கவில்லை."

"எனக்கு அது நிச்சயமாகத் தெரியும்."

அவளின் கைப்பெட்டியை சஞ்சிகைகள் பரவிக் கிடந்த இருக்கையில் வைத்தான். பிறகு அவளுடைய கையைப் பிடித்து அவளைத் தன்னிடம் இழுத்தான். அவள் பின்னால் கதவை இழுத்துச் சாத்தினான். "தயவுசெய்து எனக்கொரு நிமிடம் தாருங்கள்" என்றாள். ஆனால் அவளை நிலத்தில் அமத்தி அவளின் தொடைகளுக்கு இடையே தன் முழங்கால்களை வைத்தபோது அவள் அதை எதிர்க்கவில்லை. அவளுடைய நரைநிறக் கண்கள் சமச்சீராகவும் உலகளாவியதாகவும் இருந்தன. ப்பியெட் தன் முழங்காலில்

*நின்று தன் காற்சட்டையைக் கழற்றினான். பிறகு இங்கரின் காலணியைக் கழற்றினான். அவள் பாதங்களை நக்கிவிட்டு தொடைகளை நக்க ஆரம்பித்தான். அவனுடைய சுட்டு விரலால் உள்ளாடையை இழுத்து பக்கத்தில் வைத்தான். அவள் அவனின் தலைமயிரைப் பிடித்துத் தன் கைகளால் மேலிழுத்து விடும்வரை நக்கினான். அவளுக்கும் அவனைப் போலவே உள்ளே செலுத்த வேண்டிய தேவையிருந்தது. "உன்னை நான் காதலிக்கிறேன்" அவன் குசுகுசுத்தான். அவனுடைய வாய் அவளுடைய கழுத்தில் இருந்தது. அவன் இன்ப மயக்கத்தில் தன் கண்களை மூடி உள்ளே செலுத்தினான். அவளுடைய உடுப்புக்கள் களையப்படாமலே இருந்தன. அமைதியான, இருண்டுகொண்டிருந்த கிராமப்புறங்களூ டாகப் புகையிரதம் சீராகச் சென்றுகொண்டிருந்தது.*

'A Girl with a Monkey' - Leonard Michaels

# குட்டித் தம்பி

ஐசக் அசிமோவ்

*இரண்டாவது குழந்தைக்கு விண்ணப்பித்து விண்ணப்பத்தை நிராகரித்தபோது நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். அனுமதிப் பத்திரம் கிடைத்துவிடுமென்றுதான் உண்மையில் நாம் எதிர்பார்த்தோம்.*

*நானொரு கௌரவமான பிரசை, சமூகத்தின் தூண். நான் கொஞ்சம் வயதில் கூடியவனாக இருக்கலாம். என் மனைவி, ஜோஸி குழந்தை பெறும் சிறந்த வயதைத் தாண்டியவளாக இருக்கலாம். அதற்கென்ன? எங்களிலும் பார்க்க மோசமான நிலையிலுள்ளவர்களை எங்களுக்குத் தெரியும் – வயது போன, நற்குணமற்றவர்கள். யாரவர்? பரவாயில்லை. எங்களுக்குச் சாளி என்ற மகன் இருந்தான். இருந்தும் உண்மையில் இன்னொரு குழந்தை எங்களுக்குத் தேவை. ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம்.*

*எதுவானாலும் பரவாயில்லை. உண்மையில், சாளியில் எதுவும் பிழையாக இருந்திருந்தால், அவனுக்கு ஏதாவது நோய் வந்திருந்தால், நாங்கள் இரண்டாவது குழந்தைக்கு விண்ணப்பிக்கலாம். சிலவேளை முடியாதும் போகலாம். எங்களுக்கு அனுமதிப் பத்திரம் கிடைத்தால், சாளியை அவர்கள் பழுதானவன் என்று கவனித்துக்கொள்வார்கள். நான் என்ன சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அதை உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.*

*நாங்கள் ஆரம்பிக்கும்போது பிந்திவிட்டோம். அதுதான் பிரச்சினை. அது ஜோஸியின் பிழை. அவளுக்கு மாதவிடாய் ஒழுங்கில்லாமல்தான் வந்தது. அவளுடன் எப்போது சேருவது என்று எனக்குத் தெரியாது. நான் என்ன நினைக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்தால் சரி. அதற்கு மருத்துவ உதவி*

*யும் பெற முடியவில்லை. அது எப்படி எங்களால் முடியும்? எங்களுக்குக் குழந்தைகள் கிடைக்காவிட்டால் உலகத்திற்கு பெரிய நன்மை என்று மருத்துவ நிலையங்கள் சொல்லிற்று. குழந்தைகளற்று இருப்பது நாட்டபிமானமோ, என்னவோ.*

*ஆனால் அவர்களை ஏமாற்றிவிட்டு ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டோம். அவன் தான் சாளி.*

*சாளிக்கு எட்டு மாதமாக இருக்கையில், இரண்டாவது குழந்தைக்கு விண்ணப்பித்தோம். இரண்டு பிள்ளைகளுக்குமுள்ள வயது இடைவெளி குறைவாக இருக்க விரும்பினோம். அப்படிக் கேட்பது அதிகமா? நாங்கள் கொஞ்சம் வயதானவர்களாகி விட்டாலும்? அப்படி எப்படியான உலகத்தில் நாம் வாழுகிறோம்? என்னதான் மக்கள்தொகை குறைந்தாலும், வாழ்க்கை வசதியாக வந்தாலும், மக்கள் நெடுங்காலம் வாழ்ந்தாலும் அது போதாது மக்கள் தொகை இன்னும் குறைய வேணும் என்று சொல்கிறார்கள்.*

*மக்களை முழுக்க இல்லாதொழிக்கும்வரை அவர்கள் திருப்தியடைய மாட்டார்கள். – சரி. பாருங்கள்! இதை நான் விரும்பியது போலத்தான் சொல்லுவேன். அதிகாரியே, என்னுடைய கதையை உங்களுக்குக் கேட்க விருப்பமிருக்குமினால் நான் சொல்வது மாதிரித்தான் நீங்கள் கேட்கவேணும். எனக்கு நீங்கள் என்ன செய்ய முடியும்? நான் செத்தாலும் சரி இருந்தாலும் சரி அதைப் பற்றி நான் அதிகம் கவலைப்படப்போவதில்லை. என் நிலையில் இருப்பீர்களா?*

*– பாருங்கள். விவாதிப்பதில் பலன் எதுவுமில்லை. நான் விரும்பியதுபோலத்தான் நான் சொல்வேன் அல்லது நான் பேசாமல் இருப்பேன். நீங்கள் எதையும் செய்யலாம். விளங்கிச்சா?*

*– அப்படியென்றாச் சரி.*

*பின் நடந்த மாதிரி அவன் நோய்க்காரனா? இல்லையா? என்று நாம் சாளியைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமிருக்கவில்லை? முன்னொரு காலத்தில் காட்டில் நடமாடிய மிருகம்போல அல்லது ஒரு கரடி மாதிரி அவன் வளர்ந்தான். அவன் நல்ல இனமூலத்திலிருந்து வந்தவன். அதை உன்னால் காண முடியும். அப்படியென்றால் ஏன் எங்களால் இன்னொரு குழந்தையைப் பெற்றிருக்க முடியாது? அதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.*

*விவேகம்? அதுதான். பலம். அவனுக்கு என்ன தேவை என்று உனக்குத் தெரியும். இலட்சியப் பையன். அதைப் பற்றி நினைத்த போது என்னால் இயலும் – என்னால் இயலும் – ஓ, நல்லது.*

*மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து அவன் வளர்ந்து கொண்டிருக்கையில் அவனை நீங்கள் பார்க்க வேணும். இயல்பான தலைவன். நினைத்ததைச் செய்து முடிப்பவன். அவன் விரும்பியதை அயலி*

லுள்ள மற்றக் குழந்தைகளைச் செய்ய வைப்பவன். தனக்கு என்ன தேவை என்று அவனுக்குத் தெரியும். அவனுக்குத் தேவையானது தான் எப்பொழுதும் சரியானதும் ஆகும். அதுதான் விசயம்.

இருந்தும் ஜோஸிக்கு அது பிடிக்கவில்லை. அவன் செல்லங் கொடுத்துக் கெட்டுப்போனான் என்று அவள் சொன்னாள். உண்மையில், அவனைக் கெடுத்தது நான் தான் என்றாள். அவன் என்ன சொல்கிறாள் என்று எனக்குப் புரியவில்லை. அவனை உருவாக்கியது நான்தான்.

பலத்திலும் மூளையிலும் அவன் இரண்டு வயது முன்னால் உள்ளவன். அதை என்னால் பார்க்க முடிகிறது. சிலவேளை மற்றக் குழந்தைகள் அவனை மீறிப் போனால் யார் தலைவன் என்பதை அவன் காட்ட வேண்டி இருந்தது.

அவன் அடாவடிக்காரனாக வளர்கிறான் என்று ஜோஸி சொல்கிறாள். அவனுக்கு நண்பர்கள் ஒருவருமில்லை என்றும் அவனுக்கு எல்லாப் பிள்ளைகளும் பயம் என்றும் சொன்னாள்.

அதற்கென்ன! தலைவனுக்கு நண்பர்கள் தேவையில்லை. மக்கள் அவனை கௌரவிப்பதுதான் அவனுக்குத் தேவை. அவனை மீறிப் போனால் அவனுக்கு அவர்கள் பயப்பட வேண்டும். சாளி நல்லாக வந்துகொண்டிருக்கிறான். மற்றப் பிள்ளைகள் அவனிடமிருந்து விலகி இருக்கிறார்கள். அது உண்மை. அது அவர்களுடைய பெற்றோரின் பிழை. அவர்கள் ஊக்கமற்ற ஒரு கூட்டம். அவர் களுக்கு ஒரு குழந்தை கிடைத்ததும், இனிமேல் வேறொன்றும் கிடைக்காதென்று தெரிந்ததும் அவர்கள் அக்குழந்தை ஒரு மாணிக்கம் அதுவும் கிடைத்தற்கரிய மாணிக்கம் என்று அவனைச் சுற்றி வரத் தொடங்கி விடுவார்கள். அப்படிச் செய்தால் அக்குழந் தைகளை அவர்கள் திக்குமுக்காடச் செய்துவிடுவர். அக்குழந்தை களும் பயனற்றவர்களாக, மதிப்பற்றவர்களாக மாறிவிடுவர். ஸ்ரீவன் சன் என்ற நபர் ஒருவர் இந்தப் பகுதியில் இருந்தார். அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள். இருவரும் பரிதாபத்துக்குரியவர்கள். இளித்துக்கொண்டிருப்பர். தலையில் ஒன்றுமில்லாதவர்கள். அவ ருக்கு எப்படி இரு பெண் பிள்ளைகள் கிடைத்தனர்? உங்களிடம் தான் கேட்கிறேன். சிலவேளை அவருக்கு யாரையாவது தெரியும் போல. கொஞ்சக் காசு கைமாறி இருக்கிறது. அப்படி ஏன் இல்லை. அவர் ஏற்றுக்கொள்வதிலும் பார்க்க அவரிடம் காசு இருக்கிறது. இயல்பாக அது அதைத்தான் காட்டுகிறது. அவரிடம் இரண்டு இருப்பதால் ஒன்றை இழக்கலாம் என்று நீங்கள் நினைக்க லாம். ஆனால் அப்படி இல்லை.

– அதெல்லாம் சரி. விசயத்துக்கு வருகிற நேரம். நான் விசயத் துக்கு வருகிறன். நீங்கள் கட்டாயப்படுத்தினால் என்னிடம் இருந்து ஒன்றையும் பெறமாட்டீர்கள். நாங்கள் நேராக நீதிமன்றத்திற்குத்தான்

போகவேண்டியிருக்கும். அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை.

இந்த மற்ற பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தைகள் காயப்பட விரும்பவில்லை. ஜனவிற்ஸ் சிறுவர்களுடன் விளையாட வேண்டாம் என்று அவர்கள் சொல்வார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதை நான் கேட்கவில்லை. அவர்கள் அப்படித்தான் சொன்னார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நல்லது, யாருக்கு அவர் களைத் தேவை? பின்னர், சாளியை நான் கல்லூரிக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறேன். அங்கு நுண்மின்னியல் அல்லது அண்ட வெளி இயக்கவியல் போன்ற விசயத்தை அவனுக்குக் கற்பிக்க விரும்புகிறேன். அத்துடன் பொருளியலையும் வணிகத்தையும் கற்பிக்க விரும்புகிறேன். ஏனென்றால் அப்போது தான் அந்த நிபுணத்துவத்தை வைத்து பணத்தையும் அதிகாரத்தையும் எப்படிப் பெறுவது என்பது அவனுக்குத் தெரியவரும். அப்படித்தான் நான் கண்டேன். அந்தக் கும்பலின் மேல் அவன் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்.

ஆனால் சாளிக்கு நண்பர்கள் ஒருவரும் இல்லை, அவன் தனியனாகவே வளர்கிறான் என்றெல்லாம் ஜோஸி சொல்லிக் கொண்டிருந்தாள். எந்த நேரமும் சொல்லிக்கொண்டிருந்தாள். எதிரொலிக்கும் அறையில் வாழ்வதுபோல அது இருந்தது. பிறகு ஒருநாள் ஜோஸி வந்து என்னிடம் சொன்னாள்: “சாளிக்காக சின்னத் தம்பி ஒன்று பெற்றால் என்ன?”

“ஓ, நிச்சயமாக” நான் சொன்னேன். “உனக்கு மாதவிடாய் நின்றுவிட்ட காலம். அப்படியென்றால் என்ன செய்வது? நாரையை அழைப்பதா? முட்டைக்கோசுக்குக் கீழே பார்ப்பதா?”

அவளை நான் விவாகரத்துச் செய்திருக்கலாம். அது உங்களுக்குத் தெரியும். சின்னக் குட்டியைத் திருமணம் செய்திருக்கலாம். நான் என் வீரியத்தைக் கடக்கவில்லை தானே.

ஆனால் – நான் அவளுக்கு விசுவாசமானவன். அவள் எனக்குப் பல நன்மைகள் செய்திருக்கிறாள். அதைவிட, அவளை நான் விவாகரத்துச் செய்திருந்தால் அவள்தான் சாளியை அதிகமாக வைத்திருந்திருப்பாள். அப்படியென்றால் அது எனக்கு எவ்வளவு தூரம் நன்மை அளித்திருக்கும்?

அதுதான் நான் அந்த நாரை பற்றிய குறிப்பைக் கூறினேன்.

அவள் சொன்னாள், “நாங்கள் பெறும் பிள்ளையைக் கூறவில்லை. சாளிக்கு ஒரு தம்பியாக றொபொற் ஒன்றை எடுக்கலாம் என்று.”

அப்படியானதொன்றைக் கேட்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை. நிச்சயமாக. நான் றொபொற் மாதிரியான ஆளில்லை. என் பெற்றோர் அப்படியானதொன்றை வைத்திருக்கவில்லை.

அப்படியானதொன்று என்னிடம் இருக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை ஒரு றொபொற் இருந்தால் ஒரு மனிதன் குறை கிறான். உலகத்தை அவற்றிடம் கையளிக்கிறோம். என்னிடம் கேட்டால் அது மானிடத்தை அழிக்கிற வழிகளில் ஒன்று என்று தான் சொல்வேன்.

"முட்டாள்தனமாகக் கதைக்காதே" என்று ஜோஸியிடம் சொன் னேன்.

"உண்மையாகவா?" என்று ஜோஸி மிக மெய்யான ஆர்வத்துடன் கேட்டாள். "இது ஒரு புதிய மாதிரி வடிவம். இந்த வடிவம் குழந்தைகளுடன் சிநேகித பாவமானதும் நட்பானதுமாக இருக்க உருவாக்கப்பட்டது. போலிப் புனைவுகளற்றது. அதனால் விலை கூடியதுமில்லை. அது தேவையையும் பூர்த்தி செய்கின்றது. பல பேர் ஒவ்வொரு குழந்தையுடன் மட்டும் இருக்கும்போது அக்குழந் தைக்கு இன்னொரு சகோதரத்தைக் கொடுப்பதால் இது அக்குழந் தைக்கு உண்மையான மதிப்பைக் கொடுக்கின்றது.

"மற்றக் குழந்தைகளுக்கு அது உண்மையாக இருக்கலாம். சாளிக்கல்ல." நான் சொன்னேன்.

"ஆம். விசேடமாகச் சாளிக்கு. மற்றவர்களுடன் எப்படிப் பழகுவது என்பதை இந்த வழியால் அறிந்து கொள்ளப் போவ தில்லை. அவன் தனியாக வளர்கிறான். உண்மையில் தனியாக. வாழ்க்கையில் கொடுத்து வாங்குவதைப் பற்றி அவன் புரிந்துக் கொள்ளப்போவதில்லை."

"அவன் கொடுக்கப்போவதில்லை. அவன் வாங்குபவன் மட்டுமே. அதிகாரத்தை எடுப்பான். பதவியை எடுப்பான். மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வான். அவன் குழந்தைகளைப் பெறுவான். சிலவேளை மூன்று கூட."

அதிகாரியே, இதை உணர்வதற்கு இன்னும் நீங்கள் மிக இளையவராக இருக்கக்கூடும். ஆனால் உங்களுக்கு ஒரே ஒரு குழந்தை இருந்தால் உங்கள் குழந்தைக்குக் குழந்தை கிடைக்கும் போது இன்னொரு குழந்தைக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பீர்கள். சாளியைப் பொறுத்தவரை பெருத்த நம்பிக்கை இருந்தது. நான் இறப்பதற்கு முன் இன்னொரு குழந்தையைப் பார்ப்பேன். ஒன்றல்ல, இரண்டு மூன்று கூட. அவை சாளியினு டையதாகக் கூட இருக்கலாம். ஆனால் எங்கள் இருவரது வாழ்வும் பிணைந்திருக்குமாதலால் அவை எனதுமாக இருக்கும்.

ஆனால் ஜோஸியால் சிந்திக்க முடிந்ததெல்லாம் றொபொற்றைப் பற்றித்தான். வாழ்க்கை இன்னொரு எதிரொலி அறையாகிவிட்டது. அதன் விலையை அவள் மதிப்பிட்டுவிட்டாள். முற்பணம் எவ்வளவு என்பதையும் கணக்கிட்டுவிட்டாள். ஓராண்டு வாடகைக்கு – ஒருவகையான அனுமதி பெற்று – அதை எடுத்தால் எவ்வளவாகும்

என்ற சாத்தியத்தையும் அவள் கணக்கிட்டுவிட்டாள். அவளுக்கு அவள் பெற்றோரிடமிருந்து இதற்காகக் கிடைத்த பணத்திலே அதை வாங்கவும் விருப்பமாக இருக்கிறாள். அப்படிப் பல விசயங் கள். இறுதியில் குடும்பத்தில் எப்படிச் சமாதானத்தைக் காக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்.

நான் விட்டுக் கொடுத்தேன். நான் சொன்னேன், “சரி, நீ போய் ஒன்றைத் தெரிவுசெய். ஆனால் வாடகைக்கு எடுப்பது நல்லது. அதற்குப் பணத்தைக் கட்டு.”

றொபொற் துன்பத்தை எமக்குத் தரலாம். திருப்பிக் கொடுக்க வேண்டியும் வரலாம். யாருக்குத் தெரியும் என்று நான் எண்ணி னேன்.

அவனை வீட்டுக்கு நடப்பித்துக்கொண்டு வந்தார்கள். பெட்டிக் குள் அடைத்துக்கூடக் கொண்டு வரவில்லை. “அது” என்று நான் அழைத்தேன். ஜோஸி “அவன்”, “அவனுக்கு” என்று தான் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தினாள். அப்படியென்றால்தான் அவன் சாளிக்குக் குட்டித் தம்பிபோல இருப்பான். அப்படி நானும் சொல்லப் பழகிக்கொண்டேன்.

அவன் ஒரு “சகோதர றொபொற்.” அப்படித்தான் அவனை அழைத்தார்கள். அவனுக்கு ஒரு பதிவிலக்கமும் இருந்தது. அதை ஒருக்காலுமே நினைவில் வைத்திருக்கவில்லை. எதற்காக? அவனை நாம் “குட்டி” என்று தான் அழைத்தோம். அது போதும்.

– ஆம். இப்படியான றொபொற் பிரபல்யமாக வருகிறது என்று எனக்குத் தெரியும். மனிதர்களுக்குப் பதிலியாக இயங்கும்போது அம்மனிதர்களுக்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

நாங்களும் அதற்காகத்தான் இருக்கிறோம். குறைந்தது நான் இருக்கிறேன். ஜோஸி அதனால் கவரப்பட்டாள். எங்களுக்குக் கிடைத்தது மிக அழகானது. அதை நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அது ஏறக்குறைய மனிதனைப் போலவே இருந்தது. அதிகமாக முறுவலித்தது. அதற்கு நல்ல குரல். அது பதினைந்து அளவுள்ளதுபோல இருந்தது. சிறியளவு பதினைந்து. அது பரவா யில்லை. ஏனென்றால் சாளி பெரியளவு பத்து.

குட்டி சாளியிலும் பார்க்கக் கொஞ்சம் உயரம் கூட. அத்துடன் உண்மையில் பாரமும். அதற்குள் ரைற்றேனியம் எலும்போ என் னவோ இருந்தது. அத்துடன் நியூகிளியர் அலகும். அதற்குப் பத்து வருட உத்தரவாதமும் இருந்தது, கொடுத்து மாற்றுவதற்கு முந்தி.

அவனிடம் நல்ல சொல்லாட்சி இருந்தது. அத்துடன் அவன் மிக விநயமாக நடப்பான். ஜோஸிக்கு நல்ல சந்தோசம். “அவனை நான் வீட்டுவேலைக்கு உபயோகிக்கலாம். எனக்கு உதவி செய்வான்.” என்றாள்.

“இல்லை. நீ செய்யக்கூடாது. சாளிக்காகத் தான் அவனை எடுத்தாய். அதனால் அவன் சாளியினுடையவன். அவனை நீ எடுத்துக்கொண்டு விடாதே” என்றேன்.

ஜோஸி அவனை எடுத்துக் கொண்டு அவன் அவளின் அடிமை யாகி விட்டால் அவனைத் திரும்ப விடமாட்டாள் என்று நான் எண்ணினேன். மறு பக்கத்தில் சாளி அவனை விரும்பாவிட்டால் அல்லது கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவன் அலுத்துவிட்டால் அதன் பிறகு அவனை நாம் விட்டுவிடலாம்.

இருந்தும் சாளி என்னை ஏமாற்றினான். அவன் குட்டியை விரும்பினான்.

கொஞ்சக் காலத்தின் அது சரியென்று விளங்கியது. குட்டியை உருவாக்கியது குட்டித் தம்பியாக இருப்பதற்காகத்தான். அப்படி யென்றால் சாளிக்குத்தான் அவன் சரி.

பெரியண்ணனுக்கு விட்டுக்கொடுப்பதுபோல சாளி தலைமை தாங்குவதற்கு அவன் விட்டுக் கொடுத்தான். அந்த மூன்று கட்டளை கள் அவனிடம் இருந்தன. அவற்றை என்னால் மேற்கோள் காட்ட முடியாது. ஆனால் அவை உங்களுக்குத் தெரியும். அவனால் எப்படி யும் சாளியைக் காயப்படுத்த முடியாது. சாளி சொல்வதைத்தான் அவன் செய்ய வேண்டும். அதனால் அது நல்லதொரு ஒப்பந்த மென்று நான் கொஞ்ச காலத்திற்குப் பின் நினைக்க ஆரம்பித்தேன்.

நான் என்ன சொல்கிறேன் என்றால் அவர்கள் இருவரும் விளையாடும்போது சாளி எப்பொழுதும் வென்றான். அவன்தான் வெல்ல வேண்டும். குட்டி ஒருபோதுமே கோபப்படவில்லை. அவனால் அது முடியவில்லை. தோற்பதற்கென்றே அவன் உருவாக் கப்பட்டிருக்கிறான். சிலவேளை குட்டியை அவன் தொந்தரவு செய்வான். குழந்தைகள் செய்வதுபோல. ஒரு குழந்தைக்குக் கோபம் வந்துவிட்டதென்றால் இன்னொரு குழந்தையில் அதைக் காட்டிக் கொள்கிறதுபோல. குழந்தைகள் எப்பொழுதும் அப்படிச் செய்வர். இயல்பாகவே மற்றக் குழந்தைகளின் பெற்றோர் அதற்குக் கோபப்படுவர். அப்படிச் செய்யக் கூடாது என்று சாளிக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அது அவனை முடக்கிவிடுகிறது. கசக்கிவிடுகிறது. அவனால் தான் நினைப்பதை வெளிப்படுத்த முடியாமல் போய்விடுகிறது.

ஆனால் குட்டியுடன் அவனால் எதுவும் செய்ய முடியும். ஏன் முடியாது? குட்டியைக் காயப்படுத்த முடியாது. அவன் பிளாஸ்ரிக்காலும் உலோகத்தாலும் வேறு ஏதோதோவற்றாலும் செய்யப்பட்டவன். ஆனால் அவன் ஏறக்குறைய மனிதனைப் போலப் பார்வைக்குக் காணப்படுகிறான். ஆனால் உயிரற்றவன். அவனால் வலியை உணர முடியாது. உண்மையில், குட்டி செய்த மிகச் சிறந்த விசயம் என்னவென்று நான் உணர்ந்தேன் என்றால்

அது சாளியிடம் அதிகமிருந்த சக்தியை வெளிப்படுத்தச் செய்தது தான். அப்படிச் செய்ததால் சாளி அதைச் சேகரித்து வைத்து புரைத்துப் போகாமல் செய்ததுதான். குட்டி அதைப் பொருட் படுத்தவில்லை. அவர்கள் ஜூடோ விளையாடுவார்கள். குட்டியைத் தூக்கி வீசிச் சிலவேளை சாளி மிதிப்பான். ஆனால் குட்டி எழும்பி, "அது நல்லது, சாளி. திரும்பவும் அதைச் செய்வோம்." என்பான். பாருங்கள். கட்டிட மேல் தளத்திலிருந்து அவனை வீசினாலும் அவனைக் காயப்படுத்த முடியாது.

அவன் எப்பொழுதும் எங்களுடன் விநயமாகத்தான் நடப்பான். என்னை அவன் அப்பா என்றுதான் அழைப்பான். ஜோஸியை அம்மா என்றுதான் அழைப்பான். எங்கள் நலத்தை விசாரிப்பான். ஜோஸி கதிரையிலிருந்து எழும்புவதற்குத் தூக்கிவிடுவான். அப்படி யான எல்லாவற்றையும் செய்வான்.

அப்படித்தான் அவன் உருவாக்கப்பட்டான். அவன் அன்புடன் நடக்க வேண்டும். அவை அனைத்தும் தானாகவே நடக்கும். அப்படி அதற்கு அவன் நிரல்படுத்தப்பட்டிருக்கிறான். அதற்கு அர்த்தமே இல்லை. ஆனால் ஜோஸி அதை விரும்பினாள். நான் எந்நேரமும் அலுவலாக, கடுமையாக உழைத்துக் கொண்டுதான் இருப்பேன். இந்த யந்திரத்தை நான் ஓட்ட வைக்க வேண்டும். ஒன்றுடன் ஒன்று கொழுவிக்கொள்ளும் யந்திரத்தை மேற்பார்வை செய்ய வேண்டும். ஒன்று பிழையாகிவிட்டால் பண்டகசாலை முழுவதுமே அப்படியே தடையாகி நின்றுவிடும். அவளுக்கு மலர் வாங்கிக் கொண்டு வரவோ அவளுடைய கதிரையை இழுப்பதற்கோ வேறெதெற்கோ எனக்கு நேரமில்லை. நாங்கள் திருமணம் முடித்து ஏறக்குறைய இருபது ஆண்டுகள். அப்படியான விசயங்களை எவ்வளவு காலம் செய்ய முடியும்?

சாளி எந்த ஒரு நல்ல பிள்ளையும் செய்வதுபோலவே தன் தாயை எதிர்த்து நின்றான். குட்டி அவனுக்கு உதவினான் என்று நான் நினைக்கிறேன். ஒரு நிமிடம் குட்டிக்குச் சாளி தொல்லை கொடுப்பவனாக இருந்துவிட்டு அடுத்த நிமிடம் அம்மா, அம்மா என்று சொல்லிக்கொண்டு தாயிடம் ஓடப்போவதில்லை. அவன் அம்மா பிள்ளை இல்லை. ஜோஸி அவனை ஆட்டிப்படைக்க அவன் விடவுமில்லை. அதற்காக நான் அவனில் பெருமைப்படு கிறேன். அவன் ஓர் ஆண்பிள்ளையாக வளருவான். உண்மையில் நான் சொல்வதைத்தான் அவன் கேட்கிறான். ஒரு பையன் தகப்பன் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்.

ஆகவே குட்டியை அம்மா ஒருவகையான பிள்ளையாக உருவாக் கியது நல்லதாகப் போயிற்று. வீட்டில் ஒரு செல்லப்பிள்ளை இருப்பதாக ஜோஸிக்கு ஓர் உணர்வை அது ஏற்படுத்தியது. சாளி எப்பொழுதும் தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப் பதைப் பற்றி அவள் அதிகம் கவலைப்படவில்லை.

அதைக் கெடுக்க ஜோஸி மிகவும் பிரயாசைப்பட்டாள் என்பது தெரிந்திருக்கும். தன்னுடைய செல்லப்பிள்ளை காயப்பட்டு விடு வானோ என்று தான் அவள் எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண் டிருப்பாள். “இப்போது சாளி உன் குட்டித்தம்பியுடன் நல்லாக நடந்துகொண்டாலென்ன?” என்றுதான் எப்பொழுதும் சொல்வாள்.

அது முட்டாள்த்தனமானது. குட்டியைக் காயப்படுத்த முடியாது, அவன் தோல்வியடையவே உருவாக்கப்பட்டவன், எல்லாம் சாளிக்கு நன்மையானதே என்று அவளுக்குச் சொல்லி அவளைப் புரிய வைக்க முடியாது.

உண்மையில் சாளி அவள் சொல்வதைக் கேட்பதில்லை. சாளி குட்டியுடன் தான் விரும்பிய மாதிரிதான் விளையாடினான்.

– நான் கொஞ்ச நேரம் இளைப்பாற விடுவீர்களா? உண்மையில் இவற்றைப் பற்றிக் கதைக்க எனக்கு விருப்பமில்லை. கொஞ்ச நேரம் இளைப்பாற விடுங்கள். ஆண்டு முடிவில் அது போதும் என்று நினைத்தேன். குட்டியை ஐக்கிய அமெரிக்க றோபொற்றுக் களிடம் கொடுக்க நினைத்தோம். எப்படியென்றாலும் அவனுக்குரிய கடமையை அவன் செய்து முடித்துவிட்டான்.

ஆனால் ஜோஸி அதை எதிர்த்தாள். அதைக் கடுமையாக எதிர்த்தாள்.

“இப்போது அவனை ஒரேயடியாக நாம் வாங்க வேண்டும்.” நான் சொன்னேன். முன்பணத்தை அவள் கட்டுவதாகச் சொன் னாள். அதனால் அவளுடன் நான் ஒத்துப்போனேன்.

சாளியின் சகோதரனை நாம் எடுத்துக் போகக் கூடாது என்பது அவள் சொன்ன பலவற்றில் ஒன்று. எடுத்தால் சாளி தனித்துவிடுவான்.

அவள் சரியாக இருக்கலாம் என்று நானும் நினைத்தேன். உன் மனைவி சரியென்று நினைக்க ஆரம்பித்தால் உனக்கு அது ஆபத்து. அது உனக்குப் பிரச்சினைகளைத் தான் கொண்டு வரும்.

சாளி வளர்ந்த பிறகு குட்டியைத் தொந்தரவு செய்வதைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டான். ஏறக்குறைய குட்டியளவு உயரத்துக்கு அவனும் வளர்ந்துவிட்டான். அதனால் அவன் குட்டியை அத்தனை தூரம் தொந்தரவு செய்ய எண்ணவில்லையாக இருக்கலாம்.

அத்துடன் அவன் அடிபாடுகளிலும் பார்க்க வேறு விசயங்களில் அவனுக்கு ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக, கூடைப்பந் தாட்டத்தில். அவன் குட்டியுடன் நேருக்கு நேர் விளையாடினான். அதில் சாளி திறமையாக விளையாடினான். எப்பொழுதும் அவன் குட்டியைத் தந்திரமாக விளையாடி வென்றான். அத்துடன் கூடைக்குள் பந்தைப் போடத் தவற மாட்டான். சிலவேளை

தன்னைத் தந்திரமாக விளையாடி வெல்வதற்கு குட்டியே விட்டிருக் கலாம். சிலவேளை அவன் கூடைப்பந்தைத் திறமையாக விளை யாடித் தடுக்காமல் விட்டிருக்கலாம். ஆனால் எப்படிச் சாளியால் கூடைக்குள் பந்தைப் போட முடிகிறது. அதற்கு என்ன சொல்வது? குட்டி அதையும் பாவனை செய்தான் என்று சொல்ல முடியுமா?

இரண்டாவது ஆண்டில் குட்டி எங்கள் குடும்பத்தின் ஒருவித அங்கத்தவனாகி விட்டான். அவன் எங்களுடன் சேர்ந்து சாப்பிடு வதில்லை. ஏனென்றால் அவன் உண்பதில்லை. அவன் நித்திரை கொள்வதுமில்லை. அதனால் அவன் சாளியின் படுக்கையறையில் ஒரு மூலையில் சும்மா நின்றுகொண்டிருப்பான்.

அவன் எங்களுடன் சேர்ந்து ஹோலோவியூ பார்ப்பான். அவனுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்பதற்காக, அவன் இன்னும் மனிதனாக வரவேண்டுமென்பதற்காக ஜோஸி அவனுக்கு அனைத்தையும் விளங்கப்படுத்துவாள். சாளிக்கு அவனைத் தேவை யில்லாத நேரம் அவள் போகிற இடமெல்லாம், கடைகளுக்கெல் லாம் அவனைக் கூட்டிச் செல்வாள். குட்டி அவளுக்கு எப்பொ ழுதும் உதவி செய்கிறான் என்று நினைக்கிறேன். அவளுக்காகப் பொருட்களைத் தூக்குவான். எப்பொழுதும் அவன் விநயமாகவும், குறிப்பறிந்தும் நடக்கிறான்.

குட்டி பக்கத்தில் இருக்கும்போது ஜோஸி எதையும் சாதாரண மாகவே எடுத்துக்கொள்கிறாள் என்றே நான் சொல்லுவேன். இன்முகத்துடன், இயல்பாக, குறைபட்டுக்கொள்ளாமல் இருப்பாள். சந்தோசமான இல்வாழ்க்கைக்கு அது உதவியது. சாளி மேலும் மேலும் ஆதிக்கம் செலுத்துவதற்கு குட்டி கற்பிக்கிறான், ஜோஸியை முறுவலிக்கச் செய்கிறான். ஆகவே அவன் இங்கிருப்பது நல்லது.

பிறகு அது நடந்தது.

– கேளுங்கள். உங்களுக்கு ஏதாவது குளிராகத் தரவா?

– ஆம். மதுவுடன். கொஞ்சம் மதுவுடன். ஏன் இந்தச் சட்டங் களைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்? எப்படியாவது இதை நான் பெற வேண்டும்.

பிறகு இது நடந்தது. மில்லியனில் ஒன்று. அல்லது பில்லியனில் ஒன்று. நுண்கலப்பு அலகுகள் பிரச்சினைகள் கொடுக்க முடியா தவை. நீங்கள் இது பற்றி எங்கும் வாசிக்கலாம். எது எப்படியிருந் தாலும் அவை தோல்வியிலிருந்து பாதுகாப்பானவை. ஆரம்பத்தில் அது நுண்கலப்பு அலகு என்று ஒருவருக்கும் தெரியாது. அதுதான் என்று பின் எனக்குச் சொன்னார்கள். என் வீடு, தளவாடங்கள் எல்லாம் எனக்குக் கிடைக்கும் தகுதி உண்டு என்று சொன்னார்கள்.

அது எனக்கு மிகுந்த நன்மையளிக்கும்.

– பாருங்கள். என்னை கொலைகாரப் பைத்தியக்காரனைப் போல நடத்துகிறீர்கள். ஏன் என்னை? கொலைக்குக் காரணமான

நுண்கலப்பு ஆட்களைப் பிடியுங்கள். யார் அந்த அலகைச் செய்தது என்று அறியுங்கள். அதைப் பொருத்தியதில் யார் பிழை விட்டது என்பதை அறியுங்கள்.

யார் உண்மையான குற்றங்களைச் செய்தவர்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? இந்த நுண்கலப்பு அலகு இருக்கிறதே – அது வெடிக்காது, சத்தம் போடாது. அது சூடாகிச் சூடாகி கொஞ்சக் காலத்தில் வீடு தீப்பற்றி விடுகிறது. எப்படி அதைத் தயாரித்தவர்கள் தப்பி விடுகிறார்கள் –

– ஆம், அதைப் பற்றிக் கதைப்பேன். அதைப் பற்றிக் கதைப்பேன்.

அந்த நாள் நான் வெளியே போயிருந்தேன். அந்த ஆண்டு அன்று ஒரு நாள்தான் நான் வெளியே போயிருந்தேன். நான் வீட்டிலிருந்து அல்லது என் குடும்பத்துடன் எங்கிருக்கிறேனோ அங்கிருந்து என் வேலைகளைச் செய்வேன். நான் எங்கேயும் போக வேண்டியதில்லை. கொம்யூற்றர்களே அவற்றைச் செய்யும். இது உங்கள் வேலையைப் போன்றதல்ல, அதிகாரியே.

ஆனால் பெரிய அதிகாரி என்னை நேரில் காண விரும்பினார். அதில் எந்தப் பொருளுமில்லை. அனைத்தையுமே மூடிய சுற்றுக்குள் செய்திருக்கலாம். இருந்தும், ஒவ்வொரு திணைக்களத் தலைவரையும் சிலமுறை நேரில் சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்கிறது. முப்பரிமாணங்களில் ஒருவனைப் பார்த்து, மணந்து, உணர்ந்து பார்க்காவிட்டால் அவனை மதிப்பிட முடியாது என்று அவன் எண்ணுவதுபோல உள்ளது. கொம்யூற்றர்களும், றொபொற்றுக்களும் வரமுன்பு, நீங்கள் விரும்பியளவு குழந்தைகளைப் பெறக்கூடியதாக இருந்த இருண்ட காலத்திலிருந்து எஞ்சியிருந்த மூட நம்பிக்கைபோல இது இருக்கிறது – அவை திரும்பவும் வர வேணும் என்று விரும்புகிறேன்.

அந்த நாளில் தான் நுண்கலப்பு உடைந்தது.

உடனடியாக அது எனக்குத் தெரிந்து விட்டது. எப்பொழுதும் அப்படியானவை தெரிந்துவிடும். சந்திரனிலோ, அண்டவெளி குடியேற்றத்திலோ, எங்கிருந்தாலும் கூடாத செய்தி நிமிடங்களில் தெரிந்துவிடும். நல்ல செய்தியைத் தவறவிட்டு விடலாம். ஆனால் கூடாத செய்தியைத் தவறவிடவே முடியாது.

வீடு இன்னும் எரிந்துகொண்டிருக்கும் போது நான் ஓடி வந்து கொண்டிருந்தேன். நான் வந்து சேர்ந்தபோது, வீடு முற்று முழுதாக அழிந்து கிடந்தது. ஜோஸி குலைந்துபோய், ஆனால் உயிருடன் புற்தரையில் நின்றாள். அது நடந்தபோது அவள் புற்தரையில் நின்றதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

வீடு முழுவதும் தீபற்றி எரியும்போது, சாளி உள்ளே இருந்ததைக் கண்ட அவள் உடனே உள்ளே ஓடிப்போய் சாளியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஏனெனில் சாளி ஒரு பக்கத்தில் கிடந்தான்.

*அவனை மொய்த்துக் கொண்டு பலர் நின்றனர். நிலை மோசமாகத் தான் தெரிந்தது. அவனை நான் பார்க்கவில்லை. அவனைப் போய்ப் பார்க்க எனக்குத் துணிவில்லை. முதலில் ஜோஸியிடம் கேட்டறிய நினைத்தேன்.*

*என்னால் பேச முடியவில்லை. "அவன் எவ்வளவு மோசமாக இருக்கிறான்?" ஜோஸியிடம் கேட்டேன். எனது குரலையே என் னால் கண்டுபிடிக்க முடியவில்லை. என் அறிவு என்னை விட்டுச் செல்ல ஆரம்பித்திருந்தது என்று நினைத்தேன்.*

*"என்னால் இரண்டு பேரையும் காப்பாற்ற முடியவில்லை. என்னால் இரண்டு பேரையும் காப்பாற்ற முடியவில்லை." என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.*

*அவள் ஏன் இருவரையும் காப்பாற்ற வேணும்? என்று நான் நினைத்தேன். "குட்டியைப் பற்றிக் கவலைப்படுவதை விடு. அவன் சும்மா ஒரு* கருவி *மாத்திரந்தானே. அதற்காகக் காப்புறுதிப் பணமும் கருணைப் பணமும் கிடைக்கும். நாங்கள் இன்னொரு குட்டியை வாங்கலாம்" என்றேன். அவற்றைச் சொல்ல நான் முயற்சித்தேன். ஆனால் எவ்வளவு தூரம் என்னால் சொல்ல முடிந்தது என்பது எனக்குத் தெரியாது. என்னிடமிருந்து கரகரப்பான, திணறல் சத்தங்கள் தான் வந்தனவோ என்று எனக்குத் தெரியாது.*

*அவளுக்கு நான் சொன்னவை கேட்டதா அல்லது அங்கு நான் நிற்பது அவளுக்குத் தெரியுமா என்று கூட எனக்குத் தெரியாது. "நான் ஒரு தெரிவைச் செய்ய வேண்டியிருந்தது." என்று திரும்பத் திரும்ப அவள் முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்.*

*அதனால் நான் சாளி கிடந்த இடத்துக்குப் போக வேண்டியிருந் தது. எனது குரலை சரிப்படுத்திக் கொண்டு நான் சொன்னேன். "என் பையன் எப்படி இருக்கிறான்? எவ்வளவு மோசமாகக் காயப்பட்டிருக்கிறான்?"*

*"அவனைத் திருத்தி விடலாம்." அங்கிருந்த ஒருவன் சொல்லி விட்டு என்னை அண்ணாந்து பார்த்து, "உன் பையனா?" என்றான்.*

*ஒரு கையைத் திருப்பிக் கொண்டு, செயல்படாமல் குட்டி அங்கே கிடப்பதைப் பார்த்தேன். ஒன்றும் நடக்காதது மாதிரி முறுவலித்துக் கொண்டிருந்தான். "ஹல்லோ அப்பா, அம்மா என்னைத் தீயிலிருந்து இழுத்து எடுத்தார். சாளி எங்கே?" என்று கேட்டான்.*

*ஜோஸி தன் தெரிவைச் செய்திருக்கிறாள். குட்டியைக் காப்பாற்றி இருக்கிறாள்.*

*அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. எனக்கு எதுவும் ஞாபகமில்லை. நீங்கள் சொல்கிறீர்கள் நான் அவளைக் கொன்றேன் என்று. அவளின் கழுத்தைத் திருக முந்தி என்னை இழுக்க முடியவில்லை என்று.*

இருக்கலாம். எனக்குத் தெரியாது. எனக்கு ஞாபகம் இல்லை. எனக்குத் தெரிந்தது – அவள் தான் கொலைகாரி என்று.

*அவள் கொன்றாள். அவள்தான் சாளியைக் கொன்றவள்.*

*அவள் என் பையனைக் கொன்றுவிட்டாள் –*

*கொன்றுவிட்டாள் –*

*என் பையனைக் கொன்று ஒரு துண்டு –*

*ஒரு துண்டு ரைற்றேனியம் –*

*ஒரு துண்டு ரைற்றேனியத்தைக் காப்பாற்றி இருக்கிறாள்.*

'Kid Brother' - Isaac Asimov

# ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள்

## ஐசக் டினேசன் (1885–1962)

ஐசக் டினேசன் என்ற புனைபெயரில் எழுதியவர். கரேன் ப்ளிக்சன் என்ற கோமகள். இவர் டானிஷ் எழுத்தாளர். பல ஐரோப்பிய நகரங்களில் ஓவியம் படித்தவர். 1914இல் அவர் பிரிட்டிஷ் கிழக்கு ஆபிரிக்காவுக்குப் (இப்போது கென்யா) பயணம் செய்து, அங்கு பதினேழு ஆண்டுகள் வாழ்ந்த பின், மீண்டும் டென்மார்க்குக்குத் திரும்பினார். அவருடைய முதல் நூலான Seven Gothic Tales நுட்பமான உரைநடையைக் காட்டுகிறது. அவற்றில் அதிஇயற்கை விசயங்கள் கையாளப்பட்டுள்ளன.

அவருடைய சிறுகதை நூல்கள்: Seven Gothic Tales, Winter’s Tales, Last Tales.

## குஷ்வந் சிங் (1915)

பஞ்சாப் மாகாணத்தில் பிறந்தவர். லாகூரிலும், லண்டனிலும் படித்தவர். வக்கீலாகவும், சிவில் சேவையிலும் வேலை பார்த்தவர். கனடா, லண்டன் ஆகிய இடங்களில் உயர் ஸ்தானிகராக இருந்தவர். 1951இல் பத்திரிகை யாளராகிறார். இலஸ்றற்றேறட் வீக்லி ஆசிரியராக வேலை பார்த்தார் 1979-1989. பின்னர் பல பத்திரிகைகளில் ஆசிரியர். இந்தியாவின் பிரபல்யமான பத்தி எழுத்தாளர், பத்திரிகையாளர். அவர் எழுதிய சீக்கியர் வரலாறு செவ்வியல் நூலாகக் கணிக்கப்படுகிறது. பல நாவல்களையும் எழுதியுள்ளார். அவருடைய Train to Pakistan நாவல் பிரபல்யமானது. அது சினிமாப் படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது.

இவர் கருத்துக்கள் பகிரங்கமானவை. ஒளிவுமறைவின்றி எதையும் துணிந்து சொல்பவர். இந்தியப் பாராளுமன்ற அங்கத்தவராகவும் இருந்திருக்கின்றார்.

## லூயிசா வலென்சுவெலா (1938)

ஆர்ஜென்ரீனா ப்புவனொஸ் அயர்சில் பிறந்த இவர், இன்று நியுயோர்க் நகரத்தில் வாழ்கிறார். பல நூல்களின் ஆசிரியை. அவற்றுள் Clara, Strange Things Happen Here, Other Weapons என்ற சிறுகதைத் தொகுப்புக்களும் அடங்கும்.

## சினுவா ஆச்செபி (1930)

நைஜீரியா. கிழக்கு நைஜீரியாவில் பிறந்த இவர், இபடான் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். பின் பல கௌரவப் பட்டங்களையும் பெற்றுள்ளார். Things Fall Apart என்ற நாவலுடன் பிரபலமான இவர் இன்று கறுப்பு ஆபிரிக்காவின் இலக்கிய முன்னோடியாகக் கருதப்படுகிறார். ஐந்து நாவல்களையும் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களையும் - Girls at War, Sacrificial Egg- பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்துடன் பியஃப்ரா விடுதலை யுத்த காலத்தில் பியஃப்ரா பிரிவினைக்காக அரசியல் பிரச்சாரங்களில் முழு மூச்சாக ஈடுபட்டவர். 1950களில் ஆரம்பித்த புதிய இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர் இவர். நைஜீரிய நாவலாசிரியர்களில் நுட்பமான படைப்பாளி என்று பல விமர்சகர்களால் இவர் கருதப்படுகிறார்.

‘கலைகள் எப்பொழுதுமே மனிதனுக்குச் சேவை செய்கிறது. எங்கள் மூதாதையர் ஐதீகங்களை சிருஷ்டித்ததும், தங்கள் கதைகளை எங்களுக்குக் கூறியதும், மனித நோக்கத்துக்காகத்தான். அந்தக் காரணத்துக்காக, எந்த நல்ல கதையும், எந்த நாவலும் ஒரு செய்தியைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார். ஆச்செபி தன்னுடைய கட்டுரைத் தொகுதியான Morning Yet on Creation Dayஇல்.

‘ஐரோப்பிய நாவல் வடிவத்தை ஆபிரிக்க இலக்கியத்துக்கு வெற்றிகரமாகப் பண்பு மாற்றம் செய்த முதலாவது நாவலாசிரியர் ஆச்செபிதான்’, என்கிறார் ப்றூஸ் கிங்.

## அன்ரன் செக்கோவ் (1860–1904)

ரஷிய நாடாகசிரியர், சிறுகதையாசிரியர். வைத்தியக் கல்லூரி மாணவனாக இருக்கையில் புனைபெயரில், கைச்செலவுக்காகவும் படிப்புச் செலவுக்காகவும் அங்கதக் கதைகள் எழுதிப் புகழ் பெற்றார். பின்னர், வைத்தியராகத் தொழில் பார்க்கையில் சிறுகதைகளும், நாடகங்களும் எழுதிப் புகழ் பெற்றார். அவர் கோகோல், லெமொன்ரோவ், ரோல்ஸ்ரோய், ரேஜினோவ் ஆகியவர்களின் எழுத்துச் செல்வாக்குக்குட்பட்டவர். அவர் கதைகளில் இரண்டு உத்திகளைக் கையாண்டார். ஒன்று, ஆச்சரியம் மற்றது, சைபர். ‘முரண், நாடகிய முடிவுக்குக் கொண்டு செல்லும். உண்மையில், கதை, கொந்தளிப்புகள் அடங்கி சமூக கிண்டல், அதுவும் மேல்தட்டு வர்க்கத்தினரின் போலி வாழ்வு, திருமணம் ஆகியவை அவருடைய நாடகங்களிலும் கதைகளிலும் சிறப்பாகத் தெரியும் பண்பு.

## ஜேம்ஸ் ஜோய்ஸ் (1882–1941)

ஐரிஷ் எழுத்தாளர். டப்ளினில் பிறந்தவர். ஜேசுற் பாடசாலைகளிலும், டப்ளின் பல்கலைக் கழகத்திலும் படித்தவர். மொழிவல்லுனர். பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்தவர். வறுமையாலும் கண் வருத்தத்தாலும் வாழ்க்கை முழுவதுமே கஷ்டப்பட்டவர். நனவோடை உத்தியினால் ஆங்கில நாவலில் புரட்சி செய்தவர். Dubliners, Potrait of the Artist as a Young Man. Ulysses, Finnegans Wake அவருடைய முக்கிய படைப்புக்கள்.

அவருடைய முதல் படைப்பான A Potrait of the Artist as a Young man இல் சுயசரிதைக் கூறுகள் அதிகம் உள்ளன. வாழ்க்கையின் யதார்த்தங் களை விவரிப்பவை அவர் படைப்புகள்.

யுலிஸஸ் நாவலில், டப்ளினில் ஒரு நாளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்வதற்கு பாத்திரங்களின் மௌனம், பிரக்ஞையற்ற எதிர்வினைகள், மொழி, நேரடிக் கதைசொல்லல் ஆகியவற்றைக் கலந்து எழுதியுள்ளார். அந்நாவல் அதன் ஆபாசத்திற்காக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தடைசெய்யப்பட்டது.

ஃப்னேகன்ஸ் வேக் என்ற நாவலை எழுத அவருக்குப் பதினேழு ஆண்டுகள் பிடித்துள்ளன. ஓரிரவில் இயர்விக்கர் என்ற உணவுக் கடைக்காரன் கண்ட கனவுகளின் அனுபவம்தான் அந்தக் கதை. 'மில்டனுக்குப் பிறகு ஆங்கில மொழியை மிகத் திறமையாகக் கையாண்டவர் இவர்' என்று ரி.எஸ். எலியற் கூறுகிறார்.

## டோஸ்ரோவெஸ்கி (1821–1881)

ரஷிய நாவலாசிரியர். ரஷிய வைதீகக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் தந்தை இராணுவத்தில் அறுவைச் சிகிச்சை வைத்தியர். குடிகாரர், தன்னகங்கராம் உடையவர். இறுதியில், அவருடைய கூலி விவசாயிகளா லேயே கொடூரமாகக் கொல்லப்பட்டவர். இந்தச் சம்பவம் டோஸ்ரோ வெஸ்கியை வாழ்க்கை முழுவதும் துரத்தியது. கொலை மற்றும் குற்றம் பற்றிய அவருடைய எழுத்துக்கள் இதனால்கூட ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்கிறார்கள். இவர் சென்ற் பீட்டர்ஸ்பேர்க் இராணுவ எந்திரியப் பிரிவில் படித்தவர். ஆனால் அத்தொழிலைப் பின்னர் விட்டு, எழுத்திலும் புரட்சி வேலைகளிலும் ஈடுபட்டார்.

புரட்சி வேலைகளுக்காகக் கைதாகி நாலாண்டு சைபீரியாவில் கடுழியத் தண்டனை அனுபவித்தார். சைபீரியாவில் பல்லாண்டுகள் கட்டாய இராணு வத்தில் கடமையாற்றிய பின் பீட்டர்ஸ்பர்க்குக்கு வர அனுமதிக்கப்பட்டார்.

ஆழமான உளவியலாளர், தத்துவஞானி, ஆன்மீகவாதி. பாவம், விமோசனம், மனச்சாட்சி, குற்றம் போன்றவற்றை மிக ஆழமாகத் தன் நாவல்களின் பாத்திரங்கள் மூலம் பார்த்தவர். அவருடைய முக்கியமான படைப்புக்கள் Notes from the Underground, Crime and Punishment, The Idiot, The Possessed, Brothers Karamazov. உலக இலக்கியத்தில் மிக உயர்ந்த இடத்தில் வைத்து இவர் கணிக்கப்படுகிறார்.

## வி.எஸ். நைபோல் (1932)

இந்தியப் பெற்றோருக்கு றினிடாட்டில் பிறந்தார். 1950 இலிருந்து இங்கிலாந்தில் வாழுகிறார். ஆங்கில உரைநடையை நன்றாகக் கையளாளுவதில் சமர்த்தர். அந்நியத் தன்மையை ஆழமாக அலசுபவர். முரண்கள், இருண்மையான எதிர்காலம் ஆகியவை இவரின் எழுத்துக்களில் தூக்கலாகத் தெரியும். காத்திரமான பல பயண இலக்கியங்களும் எழுதியுள்ளார். அவற்றுள் The Middle Passage, An Area of Darkness,

India : A Wounded Civilization, India : A Million Mutinies Now. அவர் பல நாவல்களும், சிறுகதைகளும், அரசியல் கட்டுரைகளும் எழுதியுள்ளார். A House for Biswas, Guerillas, A Bend in the River ஆகியவை அவருடைய படைப்புக்கள். அவற்றைவிட, இஸ்லாம் பற்றிய அலசல்கள் இரண்டு உள்ளன: Among the Believers, Beyond Belief.

2001 இல் இவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது.

## ஃபாளி மொவாற் (1921)

கனடாவின் ஒன்ரேறியோ மாகாணத்தில் பிறந்தவர். மிக இளம் வயதிலேயே கவிதை எழுத ஆரம்பித்தவர். பின் சஸ்கச்சுவன் மாகாணத் திற்குப் போனபின் இவருக்குப் பறவைகளைப் பார்ப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. இனுவிற் இந்தியர்களில் இவருக்கு அனுதாபம் ஏற்பட்டது. அவர்களது அவல நிலை, இயற்கை அழிவுகள் அனைத்துக்கும் வெள்ளையர்களின் புரிதலின்மையும், சுரண்டலும் காரணம் என்ற முடிவுக்கு இவர் வந்தார். அவருடைய முதலாவது நூலான People of the Deer என்பது எடுத்த எடுப்பிலேயே பிரபல்யமானது. அதைத் தொடர்ந்து இருபத்தாறு நூல்கள் வெளியிட்டுள்ளார். இவருடைய நிலைப்பாட்டினால் இவர் பலரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளார். பலரால் புகழப்பட்டும் உள்ளார். அமெரிக்காவிற்குள் நுழைய அனுமதியும் இவருக்கு மறுக்கப்பட்டுள்ளது.

மொவாற் இயல்பாக நன்றாகவே கதை சொல்லக்கூடியவர். மிகத் திறமையான நடையுடையவர். இவருடைய சிருஷ்டி இலக்கியத்திலும் பார்க்க சுயசரிதையும் கட்டுரைகளும் பிரபல்யமானவை.

இவருடைய படைப்புக்களில் சில: The Dog who wouldn’t be, Owls in the Family, The Regiment, And No Birds Sang, The CryWolf

## வேர்ஜினியா வுல்ஃப் (1882–1941)

பிரிட்டிஷ் நாவாலாசிரியை, கட்டுரையாளர். சேர் லெஸ்லி ஸ்ரீபனின் மகள். இருபதாம் நூற்றாண்டு படைப்பிலக்கியத்தில் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகிறார். அவருடைய தந்தையின் பெரும் நூலகத்தில் வீட்டில் கல்வி கற்றவர். அவர் லெனட் வுல்ஃபை 1912இல் திருமணம் முடித்தார். (லெனட் வுல்ஃப் இலங்கையில் அம்பாந்தோட்டையில், இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில், அரசாங்க அதிபராக வேலை பார்த்த ஆங்கிலேயர். A Village in the Jungle என்ற நல்ல நாவலை அம்பாந்தோட்டைப் பகுதியை மையமாக வைத்து எழுதியுள்ளார்) அவர்கள் இருவரும் ஹொகாத் பிறெஸ் ஆரம்பித்தார்கள். இவர்களுடைய வீடு கலைஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகியோர் சந்திக்கும் இடமாக, ப்ளூம்ஸ்பெரி குழு என்று பெயர் பெற்றது. அவர் நாவல்களில் அடிக்கருத்தோ, பாத்திர வார்ப்போ முக்கியமல்ல. ஆனால் பாத்திரங்களின் பிரக்ஞையும், சிந்தனையும், உணர்ச்சிகளும் முக்கியமானவை. அவற்றை அவர் நனவோடை உத்தியால் மிகத் திறமையாக வெளிக்கொணர்வார். ஒரு மனத்திலிருந்து மற்ற மனங்களுக்கு நழுவுவதில் அவர் மிகவும் திறமையாக பிரக்ஞையை வளர்ப்பார். அப்படிப்பட்ட பரிசோதனை நாவல்களில் The Waves ஐ

முக்கியமாகச் சொல்லுவார்கள். அவருடைய உரைநடை கவித்துவமானது. குறியீடுகளையும் காட்சிப் படிமங்களையும் கொண்டது. அவரின் ஆரம்ப நாவல்களான The Voyage, Night and Day போன்றவை மரபுரீதியானவை. அதன் பின்னர் அவர் எழுதிய நாவல்களான Mrs Dalloway, To the Lighthouse போன்றவற்றில் பரிசோதனைகளையும் பல உத்திகளையும் கையாளுகிறார். அவர் நல்லதொரு விமர்சகருங்கூட. A Room of Ones' Own. Three Guines என்பவை பெண்ணியக் கருத்துக்களைக் கொண்டவை. அவர் மனநோயால் பாதிக்கப்பட்டவர். இறுதியில் 1941இல் தண்ணீரில் தாண்டு இறந்தார்.

## ஜும்பா லாஹிரி (1967)

லண்டன், இங்கிலாந்தில் பிறந்து றோட் ஐலன்ட்டில் வளர்ந்தார். இந்தியாவிற்குப் பலமுறை போய் வந்திருக்கிறார். இவர் பெற்றோர் வங்காளிகள். அவர் இளம் வயதிலேயே எழுத ஆரம்பித்தார். இறுதியில் நியு யோர்க்கர் பத்திரிகையில் இவர் கதைகள் ஆரம்பித்த பின் இவருடைய முதலாவது சிறுகதை நூலான Interpreter of Maladies பிரபல்யமானதொன்றா கியது. அந்நூலின் தலைப்புக் கதையே ஓ ஹென்றி விருதும் த பெஸ்ற் அமெரிக்கன் சிறுகதைப் பரிசும் பெற்றது.

அமெரிக்க இளம் புனைகதை எழுத்தாளர்கள் இருபது பேரில் ஒருவராக நியுயோர்க்கர் கோடைகாலப் புனைகதை இவரையும் தெரிவு செய்தது. அதே சிறுகதைத் தொகுப்பு 2000ஆம் ஆண்டுக்கான புலிற்சர் பரிசையும் பெற்றுள்ளது.

## றிக் ப்பாஸ் (1958)

அமெரிக்காவிலுள்ள ரெக்ஸாஸ் மாகாணத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு மண்ணியலாளர். இவருக்கும் இயற்கை கவர்ச்சியைக் கொடுத்தது. இவரும் எண்ணெய், எரிபொருள் மண்ணியலாளர் ஆகினார். இயற்கையில் உள்ள ஆர்வத்தால் மொன்ரானா மாகாணத்துக்கு இடம்பெயர்ந்தார். அங்குதான் அவருடைய Where the Sea Used To Be என்ற நாவலை எழுதிப் பரிசும் பெற்றார். அவர் தரிசு நிலங்களைப் பாதுகாப்பதில் முன்னிற்கிறார்.

## சித்ரா திவகாருணி (1957)

கல்கத்தாவில் 1976வரை வாழ்ந்த இவர் இப்போது அமெரிக்காவில் வாழ்கிறார். பார்க்ளியில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர், அமெரிக்காவில் பல சாமானிய தொழில்களையும் பார்த்திருக்கிறார். இப்பொழுது மைத்ரி என்ற தென்னாசியப் பெண்கள் அமைப்பில் வேலை செய்கிறார். கணவன் மார்களால் தொல்லைக்குள்ளான, பாதிக்கப்பட்ட பெண்களைப் பாதுகாக்கும் அமைப்பு அது.

அவருடைய எழுத்துக்கள் அதிகமாக சுய அனுபவம், குடிபெயர்ந்தோர் அனுபவம் சம்பந்தப்பட்டதே. அவருடைய Arranged Marriage என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள அத்தனை கதைகளுமே இந்தியாவிலிருந்து அமெரிக்கா விற்குக் குடிபெயர்ந்த பெண்கள் இரண்டு உலகங்களுக்குமிடையே சங்கடப் படும் கதைகளே. சமையல், விட்டு வந்த வீட்டைப் பற்றிய நினைவால்

எழும் துன்பங்கள், அந்நியப்படுதல் ஆகியவை பற்றியே அவர் எழுதுகிறார். குடிபெயர்ந்தவர்கள் பற்றிய ஐதீகங்கள், வார்ப்பெண்ணங்கள் (stereotypes) போன்றவற்றை இல்லாமலாக்க முயற்சிக்கிறார் இவர்.

இவருடைய நாவல்கள்: The Mistress of Spices, Sister of My Heart. இவர் ஒரு கவிஞருங்கூட. இவருடைய கவிதைத் தொகுதியின் பெயர் Black Candle.

## லெனட் மைக்கெல்ஸ்

இவர் 60களிலிருந்து எழுதிக்கொண்டு வருகிறவராக இருந்த போதும் அதிகம் பிரபல்யம் இல்லாதவர். இவருடைய நாட்குறிப்பான Time Out of Mind சிறுகதைகளைப் போன்று வாசகர்களின் கற்பனையைத் தூண்டவல்லது.

## ஐசக் அசிமோவ் (1920–1992)

ரஷியாவில் பிறந்தவர். அமெரிக்காவில் வாழ்ந்தவர். ஆங்கிலத்தில் எழுதியவர். உயிரியல் - இரசாயனவியலாளர். சாதாரண வாசகர்களுக்கான விஞ்ஞானக் கதைகளும் நூல்களும் எழுதிப் பிரபல்யமானவர். 300 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

## ஐசக் ப்பாசெவிஸ் சிங்கர் (1904–1991)

போலந்தில் பிறந்தவர். அமெரிக்காவிற்கு 1935இல் வந்து வாழ்ந்தவர். அவருடைய முதலாவது நாவல் Satan and Goray (1935). அது யிட்டிஷ் மொழியில் எழுதப்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் போலந்திலுள்ள யூதர்கள் கொசாக்குகளால் இனப்படுகொலை செய்யப்பட்டதை எடுத்துச் சொல்கின்றது அது. அவர் பல நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள், சிறுவர்களுக்கான கதைகள் எழுதியுள்ளார். அவருடைய The Family Basket, The Manor, The Estate ஆகியவை பிரபலமான நாவல்கள். A Day of Pleasure: Stories of a Boy Growing Up in Warshaw என்ற நூலுக்கு தேசிய நூல் விருது கிடைத்தது. 1978இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசும் கிடைத்தது. போலிஷ்-யூதக் கலாச்சாரத்தின் வேரூன்றிய ‘உணர்ச்சிகரமான கதை சொல்லும் கலை’க்காகப் பரிசு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

## ப்றான்சிஸ்கோ ஹிமனேஸ்

மெக்சிக்கோவிலிருந்து கலிஃபோணியாவிற்குக் குழந்தையாக இருந்தபோதே குடிபெயர்ந்த இவர், வயல்களில் வேலை செய்தார். கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றார். இப்பொழுது சன்ரா கிளாறா பல்கலைக்கழகத்தில் நவீன மொழிகள் தலைவராகத் தொழில் பார்க்கிறார்.

The Circuit and La Mariposa என்ற நூல்களுக்கு விருதுகளும் பரிசுகளும் பெற்றவர். விமர்சகர்கள் அவருடைய எழுத்தை ‘நேர்மையானது; மகிழ்ச்சியை அளிப்பது’ என்றும் கூறுகிறார்.